தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 7, பவ, திருவள்ளுவர் ஆண்டு, 2025
1994, ஏப்ரல் 20, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்களின் தலைமையில் முற்பகல் 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்."

தீயவைகள் தீமையையே விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீயவைகள் தீயை விடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்பட வேண்டிய தன்மையவை ஆகும்.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண். 301, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதியமைச்சர்.

301–

வருமான வரி, கலால் வரி, சுங்க வரி மூலம் வரும் வருவாயில் மாநில அரசுக்குப் பங்கு வழங்குதல்

***20592** திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருமான வரி, கலால் வரி, சுங்க வரி போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட பகுதியை மாநில அரசுகளுக்குத் தரவேண்டும் என்ற கோரிக்கை, மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

[1994 ஏப்ரல் 20

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். மத்திய ஆயத்தீர்வைகளின் கீழ் மாநிலங்களின் பங்கை அதிகரிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசு சுங்கத் தீர்வைகள் மூலமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்து மாநிலங்களுக்குப் பங்கு அளிப்பதில்லை.

(ஆ) பொதுவாக மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய ஆயத்தீர்வைகளின் பங்கை அதிகரிக்குமாறு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்கள், மாநிலச் சட்டப்பேரவை முதலிய பல்வேறு மன்றங்களின் வாயிலாக மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த வருமான வரி, கலால் வரி, சுங்க வரி போன்றவற்றின் மூலம் மாநிலத்திலிருந்து பெறும் நிதியிலிருந்து மத்திய அரசு நிதி வழங்குவது இல்லை எனக் குறிப்பிட்டார்கள். மிகவும் வேதனைக்குரிய ஒன்று. இன்றைக்கு மாநில அரசினுடைய பொறுப்புகளும், கடமைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வரக்கூடிய கால கட்டத்தில், நிதி ஆதாரங்கள் வற்றி வரக்கூடிய ஒரு காலகட்டம். எனவே, இந்த நிலையில் மத்திய அரசு இந்த வரியிலிருந்து மாநில அரசுக்குக் கொடுப்பதற்கு மிகப் பெரிய கடப்பாடு உடையதாக இருக்கிறது. இங்கே நான் கேட்க விரும்புவது, மாநில அரசிடமிருந்து மத்திய அரசு வரியின் வாயிலாக பெறும் நிதியிலிருந்து எந்தெந்த வரிகளில் இருந்து மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி வழங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஆயத் தீர்வைகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட வாய்ப்பாட்டை அமைத்துக்கொண்டு, அதனுடைய அடிப்படையிலே மாநிலங்களுக்குப் பங்கு அளித்து வருகிறது. ஆனால், நான் சொன்னது, சுங்கத் தீர்வைகள் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் மாநிலத்திற்குப் பங்கு இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால், எந்தெந்த மாநிலத்திற்கு, எவ்வளவு அளிப்பது என்கின்ற வகையில் மாநிலங்களுக்கு அளிக்கின்ற வாய்ப்பாடு எப்படி இருக்க வேண்டும் என்பதை நிதிக் குழுக்கள் முடிவு செய்கின்றன. நிதிக்

1994 ஏப்ரல் 20]

குழு முடிவு செய்ததனுடைய அடிப்படையில், அடுத்த நிதிக் குழு அமைக்கின்ற வரையில் அந்த வாய்ப்பாடுகள் பின்பற்றப்படும். அந்த வகையிலேதான் வருமான வரி பங்கிடத்தக்க வருவாயில் அதிக அளவு நபர்வாரி வருமானம் உள்ள மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்தின் நபர்வாரி வருமானம் எவ்வளவு குறைவோ அந்தத் தொகை 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கால் பெருக்குவதன் அடிப்படையில் 45 சதவிகிதம் முக்கியத்துவம் ஆகும். மாநிலத்தின் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கு 22.5 சதவிகிதம் முக்கியத்துவமும் ஒட்டுமொத்த பின்தங்கிய நிலை குறித்த அளவு குறியீட்டுக்கு 11.25 சதவிகிதம் முக்கியத்துவமும், மாநில நபர்வாரி வருமானத்தின் தலைப்பின் கீழ் விகிதத்தை 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கால் பெருகி வரும் தொகைக்கு 11.25 சதவிகிதமும் முக்கியத்துவம் அளித்துப் பிரிக்க வேண்டும். 10 சதவிகிதம் வருமான வரி மாநிலங்களிலிருந்து மட்டும் வரிப் பங்கின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற முறையில் சில வாய்ப்பாட்டு முறைகளை வைத்துக்கொண்டு, அதனுடைய அடிப்படையிலே மத்திய அரசு வருமான வரியைப் பொறுத்தும் நிதியை அளிக்கின்றது. அதைப்போன்று, மத்திய ஆயத் தீர்வைகளைப் பொறுத்தும் சில வாய்ப்பாட்டு முறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதைப்போன்று, தொகுப்பு நிதியைப் பொறுத்த வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக, 9-வது நிதிக் குழுவினுடைய பரிந்துரைகள் தமிழக அரசைப் பொறுத்தவரையில் மன நிறைவு அளிப்பதாக இல்லை. ஆகவேதான், அதிலே மாற்றம் வேண்டும் என்று கூறுகின்ற அத்தகைய அடிப்படையில் நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகின்றோம். ஆகவே, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்ற—ஏற்கனவே அதிலே 7-வது நிதிக் குழுவிலே கொடுத்த அளவுக்குக் கூட 9-வது நிதிக் குழுவினுடைய பரிந்துரை நமக்குச் சாதகமாக அமையவில்லை. ஆகவேதான் அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று வர இருக்கின்ற பத்தாவது நிதிக் குழு முடிவு செய்கின்றபோது, செய்ய வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். அதைத் தவிர 1991 டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய ஆயத் தீர்வையைப் பிரித்து அளிக்கக்கூடிய தொகுப்பைக் கூடுதலாக, அதாவது 50% ஆகக் கிடைக்கும் வகையில் உயர்த்த வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள். இப்போது 40% என்றும், மேற்கொண்டு 5% என்றும் வைத்திருக்கிறார்கள். அதை 50% ஆக ஆக்க வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர்

[1994 ஏப்ரல் 20

அவர்கள் வற்புறுத்தி வந்தது. அதன் பின்னர் 1992 மே 22, 23 ஆகிய நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் மேற்கண்ட வேண்டுகோள் மீண்டும் வற்புறுத்தப்பட்டது. இதே தன்மையில்தான் இப்போது வர இருக்கிற 10-வது நிதிக் குழுவிற்கும் நாம் கோரிக்கைகளை அனுப்பி வைத்திருக்கிறோம். அந்த நிதிக் குழு ஒவ்வொரு மாநிலத்திற்கும் வந்து, மாநிலங்களுடைய யோசனைகளைக் கேட்டு, விரைவிலே அறிக்கை வைக்கும். அந்த அறிக்கையின் அடிப்படையிலே, பிறகு பங்கீட்டு முறைகள் வகுக்கப்படும்.

முற்பகல் 10.05

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான வருவாய் ஆதாரங்களைப் பகிர்ந்திடவே பைனான்ஸ் கமிஷன் எனப்படுகிற நிதிக் குழு அமைக்கப்படுகிறது. தற்சமயம் அமைக்கப்பட்டிருக்கிற 10-வது நிதிக் குழுவின் தலைவராக இருக்கக்கூடிய திரு. கே.சி. பந்த் அவர்கள், நிதிக் குழுவானது மாநிலம் வாரியாக சுற்றுப்பயணம் செய்து, மாநில அரசுகளை இது சம்பந்தமாக கருத்து கேட்கும் என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். அந்த நிதிக் குழு நம் மாநிலம் வந்துவிட்டதா? அப்படி வரும்போது more equitable distribution of financial resources to the States என்ற கருத்தை நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வெகுவாக வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-வது நிதிக் குழு ஆய்வு செய்து, முடிவு எடுக்க வேண்டுமென்ற முறையில் மாநில அரசு அதனுடைய நிலைமைகள், நிதி ஆதாரங்கள், நியாயங்கள் ஆகியவற்றை எல்லாம் தெரிவித்து, கோரிக்கை வாயிலாக ஏற்கனவே நிதிக் குழுவிற்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அவற்றை எல்லாம் அந்த நிதிக் குழு ஆராய்ந்து பார்த்து, விரைவில் நிதிக் குழுவின் தலைவராக இருக்கிற திரு. கே.சி. பந்த் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் நம் மாநிலத்திற்கு வருவார்கள். இன்னும் ஓரிரு திங்களுக்குள் இங்கே வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி வரும்போது 2 நாட்கள் இங்கே தங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடும், அதிகாரிகளோடும் கலந்து ஆலோசித்ததற்குப் பிறகு, இப்படி எல்லா மாநிலங்களுடைய தன்மைகள் முடிந்ததற்குப் பிறகு, அறிக்கையை சமர்ப்பிப்பார்கள். ஆகவே அவர்கள் வரும்போது நம்முடைய கோரிக்கைகள் அத்தனையையும் நியாயத்தின்

1994 ஏப்ரல் 20]

அடிப்படையிலேயும், தேவையினுடைய அடிப்படையிலேயும் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்லுவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து வருமான வரி, கலால் வரி, சுங்க வரியாக மத்திய அரசுக்குக் கிடைக்கின்ற தொகை எவ்வளவு என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகை பற்றிய விவரங்கள் இப்போது என்னுடைய கையிலே இல்லை. நான் வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலுரை அளித்தபோது, அந்தத் தொகை எவ்வளவு என்று நான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இப்போது மொத்தமாக இந்தியா முழுவதும் கிடைக்கின்ற ஆயத் தீர்வை, வருமான வரி போன்றவைகள் எல்லாவற்றையும் சேர்த்து, 55 சதவிகிதத்தை மத்திய அரசு வைத்துக்கொள்கிறது, 45 சதவிகிதத்தை பல்வேறு மாநிலங்களுக்கு நான் முதலிலே சொன்ன வாய்ப்பாடுகளின் அடிப்படையிலே பிரித்து அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 302, திரு. கா. பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை. வினா எண் 303, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

303–

பச்சைமலையில் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்

***11560*—திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் மாவட்டம், பச்சைமலையில் அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 ஏப்ரல் 20]

அடிப்படையிலேயும், தேவையினுடைய அடிப்படையிலேயும் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்லுவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து வருமான வரி, கலால் வரி, சுங்க வரியாக மத்திய அரசுக்குக் கிடைக்கின்ற தொகை எவ்வளவு என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகை பற்றிய விவரங்கள் இப்போது என்னுடைய கையிலே இல்லை. நான் வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலுரை அளித்தபோது, அந்தத் தொகை எவ்வளவு என்று நான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இப்போது மொத்தமாக இந்தியா முழுவதும் கிடைக்கின்ற ஆயத் தீர்வை, வருமான வரி போன்றவைகள் எல்லாவற்றையும் சேர்த்து, 55 சதவிகிதத்தை மத்திய அரசு வைத்துக்கொள்கிறது, 45 சதவிகிதத்தை பல்வேறு மாநிலங்களுக்கு நான் முதலிலே சொன்ன வாய்ப்பாடுகளின் அடிப்படையிலே பிரித்து அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 302, திரு. கா. பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை. வினா எண் 303, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

303–

பச்சைமலையில் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்

***11560**—திரு. கே. கந்தசாமி:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பச்சைமலையில் அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மலைப் பிரதேசங்களில் விவசாயத்திற்காக நில ஒப்படை செய்வது தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. மலைப்பிரதேசங்களில் உள்ள ஆக்கிரமனங்களை முறைப்படுத்துவது போன்றவற்றை ஆராய்ந்து அறிக்கை கொடுக்க நில நிர்வாக ஆணையர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. இதில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் பச்சைமலை போன்ற மலைப் பிரதேசங்களில் பட்டா வழங்குதல் குறித்து பரிசீலிக்கப்படும்.

முற்பகல் *10-10*

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலையில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் எல்லாம் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் நீண்டகாலமாக புறம்போக்கு நிலங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். அவர்கள் நீண்டகாலமாக அந்த நிலங்களுக்குப் பட்டா வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர்கள் புறம்போக்கு நிலத்தை அனுபவித்து வருவதால் வங்கிகளில் கடன் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மலைவாழ் மக்கள் நலன்களைக் கருதி உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்க அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதி, இயற்கை வளம், இயற்கை சமன்பாடு, மண் வளம், மண் வளத்தைச் செவ்வனே பாதுகாத்தல், பெருகிவரும் நிலச்சரிவு, நிலச்சீரழிவைத் தடுப்பதற்காகவும் மலைப்பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பாதுகாப்பு வனப்பகுதிகளில் உள்ள ஆட்சேபகரமான பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கவும் வழிவகை செய்து ஆய்வு செய்தல், தற்போதுள்ள ஆக்கிரமிப்புகளை ஆட்சேபகரமானவை அல்லது ஆட்சேபகரமற்றவை என்று வகைப்படுத்தி, வரையறுத்து, நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களில் பழங்குடியினருக்குச் சலுகை செய்யவேண்டுமென்ற தேவை குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. அதேபோல, தனியார் எஸ்டேட்டுகள் அரசு நிலங்களை மிகுந்த அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அவைகளையும் உடனடியாக அகற்றுவதற்காகவும், மீண்டும் தனியார் எஸ்டேட்டுகளின் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான உயர்மட்டக் குழுவின் அறிக்கை அரசுக்கு

1994 ஏப்ரல் 20]

வந்துள்ளது. அவைகளைப் பார்த்து, அதைப்போல சேலம் மாவட்டம் பச்சைமலையில் உள்ளது மட்டுமல்லாது மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குவது பற்றி முறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.*304*, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை, (குறுக்கீடு) திரு. கே. சிங்காரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

304 –

ஓசூர் வட்டத்தில், இனாம் கிராமங்களில் அரசு நில உடமை ஏற்படுத்தல்.

***14524* திரு. கே.ஏ. மனோகரன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் வட்டத்தில் உள்ள சென்னசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றும் வைரசந்திரம் போன்ற கிராமங்கள் இன்னும் அரசு நில உடமை ஏற்படுத்தப்படாமல், இனாம் கிராமங்களாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை சீர்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஓசூர் வட்டத்தில் உள்ள செல்வசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றுமுள்ள இடங்கள், கிராமங்கள் அரசுடமை ஏற்படுத்தப்படாமல் இனாம் கிராமங்களாக உள்ளன. அதை அரசு எடுக்கிறபோது, நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு பெற்றிருக்கிறார்கள். புதுடில்லியில் உள்ள உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்தவுடன் மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட நான்கு கிராமங்கள் மட்டும் தமிழ்நாட்டிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத கிராமங்களாக இருக்கின்றன. இவை இனாம் கிராமங்களாக உள்ள காரணத்தினாலே அந்தக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் வளர்ச்சிப் பணிகளுக்கு வங்கிக்

1994 ஏப்ரல் 20]

வந்துள்ளது. அவைகளைப் பார்த்து, அதைப்போல சேலம் மாவட்டம் பச்சைமலையில் உள்ளது மட்டுமல்லாது மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குவது பற்றி முறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.*304*, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை, (குறுக்கீடு) திரு. கே. சிங்காரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

304 –

ஓசூர் வட்டத்தில், இனாம் கிராமங்களில் அரசு நில உடமை ஏற்படுத்தல்.

***14524** திரு. கே.ஏ. மனோகரன்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் வட்டத்தில் உள்ள சென்னசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றும் வைரசந்திரம் போன்ற கிராமங்கள் இன்னும் அரசு நில உடமை ஏற்படுத்தப்படாமல், இனாம் கிராமங்களாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை சீர்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஓசூர் வட்டத்தில் உள்ள செல்வசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றுமுள்ள இடங்கள், கிராமங்கள் அரசுடமை ஏற்படுத்தப்படாமல் இனாம் கிராமங்களாக உள்ளன. அதை அரசு எடுக்கிறபோது, நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு பெற்றிருக்கிறார்கள். புதுடில்லியில் உள்ள உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்தவுடன் மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட நான்கு கிராமங்கள் மட்டும் தமிழ்நாட்டிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத கிராமங்களாக இருக்கின்றன. இவை இனாம் கிராமங்களாக உள்ள காரணத்தினாலே அந்தக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் வளர்ச்சிப் பணிகளுக்கு வங்கிக்

கடன் பெறுவதற்கோ மின் இணைப்புப் பெறுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத காரணத்தினால் அந்த மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கானது 20 ஆண்டுகளாக வழக்கு மன்றத்திலே உள்ள காரணத்தால் இந்த வழக்கைத் துரிதப்படுத்தி முடிப்பதோடு மட்டுமல்லாமல், முடிந்தால் இதற்காக ஒரு தனிச்சட்டம் பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு அவசரச் சட்டம் நிறைவேற்றத் தேவையில்லை. டெல்லியில் இருக்கிற தமிழ்நாடு அட்வகேட் ஆன் ரிக்கார்டு அவர்களிடத்திலே சொல்லி இதைத் துரிதப்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணப்படி அங்கேயிருக்கிற ஏழை எளிய பொதுமக்களுக்கு வருகிற நன்மை காலதாமதப்படுத்தப்படுகிறது, தடையேற்படுகிறது என்று சொன்ன காரணத்தால் இதை விரைவுபடுத்துவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *305* மற்றும் *306* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் *307*, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

307–

பெரணமல்லூர் ஒன்றியம், தாடி–நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***21979* திரு. ஆ.கு. சீனிவாசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பெரணமல்லூர் ஒன்றியம், *2000* மக்கள் தொகையுள்ள தாடி-நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

கடன் பெறுவதற்கோ மின் இணைப்புப் பெறுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத காரணத்தினால் அந்த மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கானது *20* ஆண்டுகளாக வழக்கு மன்றத்திலே உள்ள காரணத்தால் இந்த வழக்கைத் துரிதப்படுத்தி முடிப்பதோடு மட்டுமல்லாமல், முடிந்தால் இதற்காக ஒரு தனிச்சட்டம் பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு அவசரச் சட்டம் நிறைவேற்றத் தேவையில்லை. டெல்லியில் இருக்கிற தமிழ்நாடு அட்வகேட் ஆன் ரிக்கார்டு அவர்களிடத்திலே சொல்லி இதைத் துரிதப்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணப்படி அங்கேயிருக்கிற ஏழை எளிய பொதுமக்களுக்கு வருகிற நன்மை காலதாமதப்படுத்தப்படுகிறது, தடையேற்படுகிறது என்று சொன்ன காரணத்தால் இதை விரைவுபடுத்துவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *305* மற்றும் *306* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் *307*, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

307–

பெரணமல்லூர் ஒன்றியம், தாடி–நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***21979* திரு. ஆ.கு. சீனிவாசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பெரணமல்லூர் ஒன்றியம், *2000* மக்கள் தொகையுள்ள தாடி-நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தாடி–நொளம்பை கிராமத்திற்குச் செல்லும் சாலை மிகக்குறுகிய சாலையாக இருப்பதால், பேருந்து இயக்க முடியாமல் உள்ளது.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலையை விரிவுபடுத்தியும் அகலப்படுத்தியும் பஸ் விட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று பதில் கூறி இருக்கிறார்கள். அதே சமயத்தில், 'தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலம் ஆள்பவர்க்கு,' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, இந்த மூன்று தன்மைகள் படைத்த அம்மா அவர்களின் நல்லாட்சியில் துரித நடவடிக்கை மேற்கொண்டு சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு சாலையை அகலப்படுத்தி பஸ் விட வேண்டுமென்று அரசு பரிசீலனையில் உள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அம்மா அவர்களுக்கு மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: சாலையை விரிவுபடுத்திய பிறகு பஸ் விடப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறி உள்ளதை, (குறுக்கீடு) பஸ் விட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், நீங்கள் திருக்குறள் சொல்லும்போது, அதற்கும் உங்கள் கேள்விக்கும் ஏதாவது தொடர்பு வைத்துக்கொண்டு திருக்குறள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்காமை, துணிவுடைமை என்று சொன்னார்கள். தூங்காமை, துணிவுடைமை இருக்கிற காரணத்தினாலேதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எந்த சக்தியாலும் அசைத்துவிட முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற இடம் 1.4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற குக்கிராமம். அந்த குக்கிராமத்திலே ஜல்லிகள் பரப்பி இருக்கிற காரணத்தாலும், பாதையை அகலப்படுத்தாத காரணத்தாலும் பேருந்துகளை இயக்க முடியவில்லை.

[1994 ஏப்ரல் 20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு ஒரு கேள்வியைக் கொண்டுவந்து, அந்தப் பாதைகளை சரி செய்த உடனேயே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைத் தொடர்ந்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்பதை நான் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *308*, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் 309, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309–

மதுராந்தகம் ஏரியை நவீனப்படுத்துதல்

***9282** திரு. பி. சொக்கலிங்கம்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோயில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இருப்பதால், அந்த ஏரியை நவீனப்படுத்த " குளம் அமைத்தல்" திட்டத்தின்கீழ் மதுராந்தகம் ஏரியை அரசு தேர்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோவில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரியினை நவீனப்படுத்திட பொதுப்பணித்துறை சிறுபாசனப் பிரிவில் திட்டம் ஏதும் இல்லை.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். மறைந்த பாரதப்

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு ஒரு கேள்வியைக் கொண்டுவந்து, அந்தப் பாதைகளை சரி செய்த உடனேயே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைத் தொடர்ந்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்பதை நான் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *308*, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் 309, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309–

மதுராந்தகம் ஏரியை நவீனப்படுத்துதல்

***9282** *திரு. பி. சொக்கலிங்கம்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோயில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இருப்பதால், அந்த ஏரியை நவீனப்படுத்த "குளம் அமைத்தல்" திட்டத்தின்கீழ் மதுராந்தகம் ஏரியை அரசு தேர்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோவில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரியினை நவீனப்படுத்திட பொதுப்பணித்துறை சிறுபாசனப் பிரிவில் திட்டம் ஏதும் இல்லை.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். மறைந்த பாரதப்

1994 ஏப்ரல் 20]

பிரதமர் 35 ஆண்டுகளுக்கு முன்னால் மதுராந்தகத்திற்கு வருகை புரிந்தபோது அந்த ஏரி தூர்வாரப்பட்டது. அதன் பிறகு கடந்த 35 ஆண்டுகளாக ஏரி தூர் வாரப்படாமல் சுமார் 14 அடி ஆழம் தூர் நிரம்பி உள்ளது. ஆனால், முப்போகம் பயிரான 10 ஆயிரம் ஏக்கர், இப்போது ஒரு போகம்தான் பயிராகின்றது. எனவே, தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதி ஆண்டிலேயாவது தூர் வார ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளை ஆழப்படுத்துகின்றபோது—மிகப் பெரிய ஏரிகளை, 250 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரை, ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் கீழே நாம் தூர் வாருகின்ற பணியை செய்கின்றோம். ஆனால், இந்த மதுராந்தகம் ஏரி 1137 ஏக்கர் இருப்பதால், இதை இந்தத் திட்டத்திலே எடுத்துச் செய்ய முடியாது. ஆனால், 99 லட்சம் செலவிலே ஏற்கனவே மதுராந்தகம் ஏரியினுடைய கலிங்குகளை எல்லாம் பராமரிப்பதற்கு பணிகள் நடைபெற்று முடிந்து இருக்கின்றன. ஆகவே, ஏரியை ஆழப்படுத்துவதற்குப் பெருவாரியான தொகையை அரசு செலவழிக்க வேண்டி இருக்கும். இது சம்பந்தமாக திட்டம் தற்போது அரசிடத்திலே இல்லை. இருந்தாலும், வேறு உலக வங்கியிலே, பல்வேறு நிலைகளிலே நான் ஏற்கனவே மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு திட்டங்களை மைய அரசுக்கு நாம் அனுப்பி இருக்கிறோம். அதன்மூலம் அந்தத் திட்டங்கள் ஏதாவது செயல்படுத்துவதற்கு வாய்ப்புகள் வருகிறபோது இதுபோன்ற பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 310, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை. திரு. தேனி பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

310–

நிலக்கோட்டைத் தொகுதியில் பாசன வசதியை மேம்படுத்துதல்

***20356** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்–அண்ணா மாவட்டம், நிலக்கோட்டைத் தொகுதியில் மஞ்சளாறு, மருதா நதி ஆகிய இரு நதிகளால் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறுகின்றது?

(ஆ) மழைக்காலங்களில் இவ்வாறுகளின் தண்ணீர் வீணாக வைகையில் கலப்பதால், நிலக்கோட்டையை நோக்கி ஒரு கால்வாய் வெட்டி பாசன வசதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் மஞ்சளாறு பாயுமிடத்தில் பாசன வசதிபெறும் பரப்பு 2,097.43 ஏக்கர், மற்றும் மருதாநதி பாயுமிடத்தில் பாசன வசதி பெறும் பரப்பு 1,302.40 ஏக்கர் ஆகும்.

(ஆ) வைகை பாசனப்பகுதிக்கு நீரின் தேவை பற்றாக்குறை நிலையில் உள்ளதால், புதிய பாசனப்பகுதிக்குக் கால்வாய் வெட்டி திருப்ப இயலாது.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு நதிகள் மூலமாக 2400 ஏக்கர் மற்றும் 1300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, அந்த சுற்றுப் பகுதிகள் மலை அடிவாரத்திலிருந்து மிக அண்மையில் இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியில் மழை பெய்தவுடன் மழை நீர் வடிகாலாக வடிந்து கீழ்நோக்கி ஓடிவந்து விடுகிறது. எனவே, அந்தத் தண்ணீரை எல்லாம் வீணாக்காமல் தடுப்பதற்கு, அந்தப் பகுதி நிலங்கள் வளம் பெறுவதற்கு செயல் திட்டமாக இந்தக் கால்வாயை வெட்டித் தர வேண்டுமென்று ஏற்கனவே பலமுறை இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப்

1994 ஏப்ரல் 20]

பின்தங்கிய பகுதியினுடைய நிலையை கருத்திற்கொண்டு அப்படிப்பட்ட ஒரு கால்வாய் வெட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதா நதி, மஞ்சளாறு என்பது வைகை நதியினுடைய துணை நதிகளாகும். ஏற்கனவே வைகை நதியினுடைய நீரை மதுரை மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்குப் பகிர்ந்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கான ஆயக்கட்டுகளும் நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்தத் துணை நதிகளிலிருந்து வருகிற தண்ணீரை வைகை ஆற்றோடு சேர்ந்து கணக்கிட்டுதான் ஏற்கனவே இருக்கிற பாசனப் பரப்பை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆகவே அதில் வருகிற வரத்தை எல்லாம் கணக்கில் எடுத்துதான் அந்த மூன்று மாவட்டங்களுக்கும் ஆயக்கட்டுகள் நிர்ணயம் செய்து தண்ணீர் பாய்ச்சப்படுகிற சூழ்நிலையில் புதியதாக கால்வாய் வெட்டினால், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அந்தப் பாசன விஸ்தீரணம் உள்ள நிலங்களுக்கு, பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் தர இயலாது. ஆகவேதான் புதிய கால்வாய் நிலக்கோட்டைக்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தேன். ஏற்கனவே அந்த 'இரிகேஷன் ரைட்ஸ்' என்று சொல்லப்படுகிற பாசன உரிமை பெற்றிருக்கிற நிலங்களுக்கு நாம் தண்ணீர் கொடுப்பதற்கு, இந்தத் துணை நதிகளைச் சேர்த்துத் தான் வைகை ஆற்றுத் தண்ணீரை கணக்கிட்டு இருக்கிறோம். எனவே, புதியதாக கால்வாய் வெட்டுவதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிலக்கோட்டை தொகுதியில் இந்தக் கால்வாய் வெட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னார்கள். மிகவும் பொருத்தமான பதிலைத் தான் சொல்லி இருக்கிறார்கள். காரணம் இன்றைக்கு இந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் இந்த அவையில் பேசி, இந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டத்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அந்தத் தொகுதிக்கு வழங்கி இருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இதெல்லாம் கூடாது. உங்கள் வீட்டில் இதுபோன்ற சண்டை சச்சரவு எல்லாம் வைத்துக் கொள்ளலாம். ஒரு உறுப்பினர் மீது கேள்வி நேரத்தின்போது இப்படிச் சொல்லக் கூடாது. அதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: இந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நம்முடைய அரசு அனுமதி வழங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் என்பதை நீண்ட நாட்களாய் காங்கிரஸ் காலத்திலும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், பழைய ஆட்சிக் காலத்திலும் கேட்டார்கள். அனால் நம்முடைய ஒப்பற்ற தலைவி, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை என்று கூடப் பார்க்காமல் கோடிக்கணக்கான ரூபாயை உள்ளடக்கிய திட்டம் என்றுகூட நினைக்காமல், அவர் கேட்ட மாத்திரத்திலேயே அனுமதி வழங்கி, மாற்றாரை மதிக்கிற மனப்பான்மை படைத்தவர் என்று நிருபித்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவி காலத்திலே இந்தத் திட்டம் வந்ததை, வேறு காலத்திலே வந்ததாக அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பேசியதாகச் சொன்னார்கள். அவர்கள் அங்கொன்று பேசுகிறார்கள், இங்கொன்று பேசுகிறார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் திட்டம் என்பது, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி காலத்திலேதான், அவர்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே நேரடியாகக் கொடுத்து, அந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று எனக்கு உத்தரவினை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்ததன் காரணமாக, துறையின் மூலம் ஆய்வு செய்து, அதற்கான பணிகளிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அனுமதி

1994 ஏப்ரல் 20]

வழங்கியிருக்கிறோம். அதற்கான திட்ட ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்து அதற்குள்ள பெனிபிட்-காஸ்ட்-ரேஷியோ எல்லாம் பார்த்து, எவ்வளவு ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்க முடியும், அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அதற்கான முழு முடிவை இந்த அரசு எடுக்கும். அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311, திரு. ம. தனபால். இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

311–

திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரையுள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

****19095—திரு. ம. தனபால்:***

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கிழக்கு கடற்கரை சாலையில், திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரை உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரைச் சாலைகளிலே மிகச் சிறப்பான முறையிலே பல கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஒரு சிலர் அனுமதி இல்லாமலேயே சில கட்டிடங்களை அங்கே

1994 ஏப்ரல் 20]

வழங்கியிருக்கிறோம். அதற்கான திட்ட ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்து அதற்குள்ள பெனிபிட்-காஸ்ட்-ரேஷியோ எல்லாம் பார்த்து, எவ்வளவு ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்க முடியும், அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அதற்கான முழு முடிவை இந்த அரசு எடுக்கும். அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311, திரு. ம. தனபால். இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

311–

திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரையுள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

***19095*—திரு. ம. தனபால்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கிழக்கு கடற்கரை சாலையில், திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரை உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரைச் சாலைகளிலே மிகச் சிறப்பான முறையிலே பல கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஒரு சிலர் அனுமதி இல்லாமலேயே சில கட்டிடங்களை அங்கே

கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவும் இல்லை. ஆகவே, அனுமதி பெற்று, அங்கே கட்டிடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும் என்றும், அதுவும் சுற்றுலாப் பயணிகள் அதிகமான பேர்கள் அங்கே வருகை தருகின்ற காரணத்தால், அங்கே சுற்றுலா ஓட்டல்கள் கட்டுவதற்கும், சிறந்த கட்டிடங்களைக் கட்டுவதற்கும், கடற்கரைச் சாலைகள் ஓரம் அழகாக அமைப்பதற்கும் சாத்தியக்கூறாக இருக்கும். ஆகவே, இதனை ரத்து செய்து, இதுபோன்ற நல்ல கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதியின்றி எந்தக் கட்டிடங்கள் கட்டவும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி மீறிக் கட்டப்பட்டு இருக்கிற கட்டிடங்களை இடிப்பதற்காக உரிய துறைகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். திருவான்மியூர் முதல் மகாபலிபுரம் வரை உள்ள பகுதியில் நிலத்தடி நீர்நிலையைக் காக்கும் பொருட்டு கட்டிடம் கட்டவும், மனைப்பிரிவு அங்கீகரிக்கவும், அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உள்ள பகுதியில் சென்னைப் பெருநகர் முழுமைத் திட்டத்திலும் உத்தண்டி முதல் மகாபலிபுரம் வரை உள்ள பகுதிகள் மகாபலிபுரம் முழுமைத் திட்டம் மற்றும் மகாபலிபுரம் புதுநகர் அபிவிருத்தித் திட்டத்திலும் அமைகின்றன. இந்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்தால் கடலோர அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்விதிகளை அந்தந்த உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்கள் ஏதேனும் தேவைப்பட்டால் அதைச் செய்து நடைமுறைப்படுத்த இவ்வரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, கடலோர கட்டுப்பாடு விதிகள் பற்றி முடிவெடுத்தபின், மனைப்பிரிவுகளை அங்கீகரிக்கவும், அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவதை ஊக்குவிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக இந்த முடிவுகள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *312,* திருமதி இலதா பிரியகுமார், இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

1994 ஏப்ரல் 20]

312–

உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க விதிமுறைகள்.

26055*—*திருமதி இலதா பிரியகுமார்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க அரசு விதிமுறைகள் ஏதேனும் உள்ளதா?

(ஆ) அப்படி இருப்பின், கட்டுப்பாடு தளர்த்தப்படுமா?

(இ) மூன்று சக்கர வண்டி செலுத்த முடியாத அளவு உடல் ஊனமுற்றோர்க்கு மோட்டார் பொருத்திய வண்டி கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏற்கெனவே இருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

(இ) மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் கொடுக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் இல்லை என்று கூறியுள்ளார்கள். உடல் ஊனமுற்றவர்களில் படித்த பட்டதாரிகள், வேலைக்குச் செல்பவர்கள் நிறைய பேர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளியவர்களுடைய, தாழ்த்தப்பட்டவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இன்றைக்கு உழைத்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளை வழங்குவதோடு, இப்போது வழங்கியுள்ள வண்டிகளைக் கையால் பெடல் செய்து அவர்கள் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள், அந்த வண்டிகளுக்கும் மோட்டார் பொருத்திக் கொடுப்பதற்கு இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.30*

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் இல்லை என்று சொல்லவில்லை. திட்டம் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அந்த மூன்று சக்கர வண்டியில் மோட்டார் பொருத்தக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட்டேன். கடந்த ஆட்சிக்காலத்தில் எல்லாம் ரூ. *31.3* இலட்சம்தான் இதற்காக செலவழிக்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ரூ. *56.12* இலட்சம் இதற்காக செலவழிக்கப்படுகின்றது. அதிகமாக செலவழிக்கப்படுகின்றது. இப்போதே ஒரு சைக்கிளுடைய விலை ரூ. *2,250* ஆகிறது. மோட்டார் பொருத்தினால் இதை விட இன்னும் கூடுதலாகச் செலவாகும். இப்போது இருக்கின்ற நிதிநிலையில் மோட்டார் பொருத்துகின்ற திட்டம் மட்டும் அரசின் பரிசீலனையில் இல்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் *1,000* ஊனமுற்றோர் சைக்கிள்கள்தான் கொடுக்கப்பட்டன. ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசில்தான் ஒரு மனுகூட தேங்கி நிற்காமல் முழுவதுமாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒரு கேள்விதான். குறுக்கே வந்தவர்தான் நீங்கள். டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாபெரும் சபைதனில் நீங்கள் நடந்தால் உங்களுக்கு மாலைகள் விழவேண்டும், உங்களைப் போற்றிப் புகழவேண்டும்' என்ற அளவில் மிக மிகச் சிறப்பாக செயல்படும் டாக்டர் புரட்சித் தலைவி அரசில் உடல் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டியைப் பயன்படுத்தி அல்லது தவணை முறையில் நீண்டகால கடனில் வண்டியை வழங்கி நடமாடும் சிறுகடை போல் பள்ளிக்கூடம் அருகில், பிஸ்கட், நோட்டுப்புத்தகம், பேனா விற்கவோ அல்லது கோவில் அருகில் தேங்காய், கற்பூரம் விற்கவோ வழி செய்து வாழ்க்கை நடத்தவும், உடல் ஊனமுற்றவர் என்பதால் வியாபாரம் நூறுசதம் வெற்றி அடையும் என்பதாலும், உடல் ஊனமுற்றோர் ஒரு சிலர் பிச்சை எடுப்பதைத் தடுக்கலாம் என்பதாலும், மனு செய்துள்ள தகுதியான உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் மூன்று சக்கர வண்டிகளை வழங்க, ஆதரவற்றவர் களுடைய ஒப்பற்ற முதல் முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே தகுதியான ஊனமுற்றோர் அனைவருக்கும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன. எந்த மனுக்களும் சமூகநலத் துறையில் நிலுவையில் இல்லை என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வியாபரம் செய்வதற்குக் கோவில் அருகிலே, பஸ் ஸ்டான்ட் அருகிலே இவற்றுக்கு எல்லாம் சமூக நலத் துறையிலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறது. சமூக நலத் துறை மூலம் வங்கிகளுக்கும் சிபாரிசு செய்து மானியம் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் யாராவது இருந்தால் சட்டமன்ற உறுப்பினர் சமூக நலத் துறையில் சிபாரிசு செய்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளில் உடல் ஊனமுற்றோரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் எத்தனை? எத்தனை பேர்களுக்கு இந்த மூன்று சக்கர வாகனங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன? இதற்கு விதிமுறை ஏதேனும் உண்டா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் சைக்கிள்தான் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1993-94 ஆம் ஆண்டில் கூடுதலாக 500 பேர் விண்ணப்பித்திருந்ததால் மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த ஊனமுற்ற நபர்களைக் கோட்டையிலே அழைத்து, அந்த பெட்டிஷன்கள் நிலுவையில் இல்லாமல் கோட்டையிலே அவர்களுக்கு முழுவதுமாக வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் பெறுவதற்குரிய தகுதிகள்—நோயினால் அல்லது விபத்தினால், அல்லது போரினால் இரு கால்களும் ஊனமுற்றவர்களாக இருக்கவேண்டும். குணமடைய இயலாமல் பக்கவாதத்தால் இரு கால்களுடைய செயல்பாட்டை இழந்தவராய் இருத்தல் வேண்டும். நோயினால் அல்லது குறைபாடுகளினால் இரு கால்களுடைய செயல்பாட்டை இழந்தவராக இருத்தல் வேண்டும். மூன்று சக்கர வண்டியை ஒரு

கையினாலோ அல்லது இருகைகளினாலோ இயக்குவதற்கு ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும். 12 வயதுக்கு மேற்பட்டு, 65 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது பாதுகாவலரின் மாத வருமானம் ரூ. 2,500-க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்றபோது எல்லா ஊனமுற்றோருக்கும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். புரட்சித் தலைவியினுடைய அரசு அதைக் கொடுப்பதை எல்லா மக்களும் பாராட்டுகிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வண்டிகளில் நிறைய வண்டிகள் ரிப்பேராகி இருக்கின்றன. ரிப்பேர் செய்ய அந்த வசதி அல்லது வாய்ப்பு இல்லாத குடும்பங்களுக்கு ரிப்பேர் செலவு செய்வதற்காவது ஏதாவது உதவியளிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஊனமுற்றோருக்கும் அல்ல, நான் இப்போது படித்ததைப்போல தகுதி உள்ள ஊனமுற்றோருக்கு இந்த இலவச வண்டிகள் வழங்கப்படுகின்றன. ரிப்பேராகி, அந்த சைக்கிளில் பழுது ஏற்பட்டால், அதைத் திரும்பக் கொடுத்து, சமூக நலத் துறையில் அவர்கள் புதிய வண்டிகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. ரவிக்குமார்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்குவதில், 'டிஸ்எபிளிட்டி சர்டிபிகேட்' வழங்குவதற்கு உடல் ஊனமுற்றோர் மாவட்ட சமுக நலத் துறை அதிகாரிகளைச் சந்தித்த பிறகுதான், அந்த டிஸ்எபிளிட்டி சர்டிபிகேட்டை அவர்களுக்கு வழங்குகிறார்கள். இதனைத் தவிர்த்து, அந்தந்த கிராமத்திற்கே அதிகாரிகள் வருகை தந்து, அங்கேயே அவர்களைப் பரிசோதனை செய்து, அந்தக் கிராமத்திலேயே அந்தச் சான்றிதழை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே சி.என்.எஸ்., சி.என்.ஐ., சி.என்.எம்.டபிள்யூ. என்றெல்லாம் இருக்கிறார்கள். அவர்களே பரிசோதித்தால்கூட அந்த பெட்டிஷன்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று சக்கர வாகனங்கள் வேண்டும் என்று மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக 3 சக்கர வாகனங்கள் கொடுக்கப்படுகின்றனவா? நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்று இந்த 3 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு மூன்று சக்கர வாகனங்கள் கொடுக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஏறக்குறைய 3,500 சைக்கிள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிலுவையிலிருந்த 450 சைக்கிள்களும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவியின் ஆட்சியில் வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த.க. இராதாகிருஷ்ணன்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனம் உற்றவர்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் வழங்குவதில் மிகுந்த தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த 3 சக்கர வண்டிகள் என்பது சமூக நலத் துறை கொடுப்பது. வங்கிகளில் கடன் கொடுப்பது, வேறு தனிப்பட்டவர்கள் கொடுப்பது. (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டதைப்போல உடல் ஊனம் உற்றவர்களுக்கு வண்டிகள் என்பது சமூக நலத் துறையே வழங்கக் கூடியது. மானியத்தை மட்டும்தான் சமூக நலத் துறை தர முடியும்.

[1994 ஏப்ரல் 20

மானியத்திற்கு மேல் தரக்கூடிய கடன்களை வங்கிகள்தான் தர முடியும். வங்கிகளை அரசு வற்புறுத்த முடியாது, பரிந்துரை செய்ய முடியும். அந்தப் பரிந்துரைகளை இப்போதும் செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. எம். கலைச்செல்வி.

திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் ஒவ்வொரு ஆண்டும் உடல் ஊனம் உற்றவர்களுக்கு 3 சக்கர வண்டிகள் எத்தனை பேருக்கு வழங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்த மாவட்டத்திலே வருகின்ற மனுக்களை பரிசீலனை செய்து அதற்கு ஏற்ப வழங்கப்படுகிறது. 100 என்றால் 100, 200 என்றால் 200, ஆக கேட்கின்ற அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனம் உற்றோருக்கு 3 சக்கர வாகனங்கள் வழங்கும் அருமையான திட்டத்தில் உள்நாட்டு தொண்டு நிறுவனங்கள், அதுபோல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவர் களிடமிருந்து உதவி கோரப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து அரசு எந்த உதவியும் கோரவில்லை. ஆனால் அந்தத் தொண்டு நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து உதவிகள் பெற்று அவர்களாகவேகூட பல இடங்களில் வாகனங்களை வழங்கியிருக்கிறார்கள். பஞ்சாப் அசோசியேஷன் போன்ற தொண்டு நிறுவனங்கள் நிறைய சைக்கிள்களை அவர்களாகவே வெளிநாட்டிலிருந்து பெற்று ஊனமுற்றோருக்கு வழங்கி வருகிறார்கள். ஆனால் அரசு எந்த உதவியும், யாரிடத்திலேயும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

1994 ஏப்ரல் 20]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலத் துறை மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடல் ஊனம் உற்றோர்களுக்கு 3 சக்கர வண்டிகள் வழங்குவதாக சொன்னார்கள். அதேபோல 2 கண்கள் போய் இரண்டு சிஸ்டர்கள் இருக்கிறார்கள் என் தொகுதியில். அதுவும் ஊனம் உற்றதாக கருதப்பட வேண்டிய விஷயம்தானே. அந்த மாதிரி நபர்களுக்கு அரசு எந்த வகையிலேயும் உதவி செய்கிறதா? அவர்களுக்கு இதுவரையில் எந்த உதவியும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு எப்போது அரசு உதவி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்பார்வை அற்றவர்களுக்கு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அரசு செய்திருக்கிற சலுகைகள் இதுவரையில் வரலாற்றிலேயே இல்லாத சலுகைகள் ஆகும். எந்த ஆட்சியிலும் செய்யாத சலுகைகள் ஆகும். அப்படிப்பட்ட இரண்டு சகோதரிகள் இருந்தால் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்றால், கண்பார்வை அற்ற அவர்கள்—சக்கர நாற்காலிகள் சமூக நலத்துறை மூலமாக வழங்கப்படுகிறது, அதை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: உடல் ஊனம் உற்றோர்களுக்கு 3 சக்கர வாகனங்கள் வேண்டும் என்ற கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு வேண்டிய பாரங்கள் தாசில்தார் அலுவலகத்திலும், யூனியன் அலுவலகத்திலும் கிடையாது. இதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அத்தோடு சான்றிதழ் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலதை கொடுத்தால் தான் கொடுக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற சத்துணவு கூடங்களில் சி.என். எஸ்., சி.என்.ஐ. போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே கொடுத்தாலே போதும். ஆனால் இப்படி சம்திங் கேட்கிற அதிகாரிகள் யாராவது இருந்தால் அவர்களை எங்களுடைய பார்வைக்குக்

கொண்டு வந்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உத்திரவாதத்தைப் பேரவைத் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினா எண்கள் *305, 306* ஆகியவை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வினா எண் *305*, திருமதி இரா. பண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

305–

உசிலம்பட்டி அரசுப் பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" வழங்குதல்.

***19343**—திருமதி இரா. பாண்டியம்மாள்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் செயல்பட்டுவரும் அரசு பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" (Ambulance) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி *1991* ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

முற்பகல் *10-40*

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி பின்தங்கிய தொகுதி. பிற்பட்டோர் சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதி. மேலும் உசிலம்பட்டி வளர்கின்ற நகரம். ஏற்கனவே கூறியதுபோல அது தாலுக்கா மருத்துவமனை. சட்டப் பேரவைத் தலைவர் தொகுதியிலிருந்து அங்கு மக்கள்

கொண்டு வந்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உத்திரவாதத்தைப் பேரவைத் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினா எண்கள் 305, 306 ஆகியவை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வினா எண் 305, திருமதி இரா. பண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

305–

உசிலம்பட்டி அரசுப் பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" வழங்குதல்.

***19343*—திருமதி இரா. பாண்டியம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் செயல்பட்டுவரும் அரசு பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" (Ambulance) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

முற்பகல் 10-40

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி பின்தங்கிய தொகுதி. பிற்பட்டோர் சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதி. மேலும் உசிலம்பட்டி வளர்கின்ற நகரம். ஏற்கனவே கூறியதுபோல அது தாலுக்கா மருத்துவமனை. சட்டப் பேரவைத் தலைவர் தொகுதியிலிருந்து அங்கு மக்கள்

1994 ஏப்ரல் 20]

வருகிறார்கள். எனவே இங்கு அவசரமாக சீரியஸ் பேஷண்டுகளை எடுத்துச் செல்ல வேண்டுமானால் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி போதாததால் மற்றொரு வேன் கொடுத்திட அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய தொகுதி மக்கள் வராமல் இருக்க வேண்டும் என்றுதான் தனித் தாலுக்காவே பிரித்துக்கொண்டு போய்விட்டேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னபடி அநேகமாக அதற்கு தேவையிராது என்று கருதுகிறேன். தாலுக்கா பிரிக்கப் பட்டிருக்கிற காரணத்தினால் அவசியம் இருக்காது. இருந்தாலும் 50 படுக்கைகளுக்கு மேலே இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு 2 ஆம்புலன்ஸ் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே அந்த இலக்கீட்டிலே உங்களுக்கு நிச்சயமாக இன்னொரு ஆம்புலன்ஸ் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிதிநிலைமையை பொறுத்துதான் கொடுக்க முடியும். இந்த ஆண்டிலே கிடைக்குமா என்று சொல்ல முடியாது. எதிர்காலத்திலே அது கிடைக்கும்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த நிதி ஆண்டிலே எங்களுக்குக் கிடைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே சிரமமாக இருக்கும். நிதிநிலைமை வாய்ப்பு கொடுக்குமேயானால் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இல்லையென்றால் அடுத்த ஆண்டு அதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 306, திரு. தா. செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

306–

பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஹோமியோபதி பிரிவு ஏற்படுத்துதல்.

***19948*—திரு. தா. செழியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஹோமியோபதி பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12 ஓமியோபதி பிரிவுகள் துவக்கப்படுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டம் என்பது பெரிய வட்டமாக இருக்கிறது. திருச்சியிலிருந்து சென்னை நெடுஞ்சாலையை ஒட்டி இருக்கின்ற காரணத்தினால் அங்கே இந்த ஹோமியோபதி பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 150 கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஹோமியோபதி பிரிவு என்பது ஒவ்வொரு மாவட்டத்தினுடைய அரசு மருத்துவமனையிலே இருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு வட்டத்திலும் இந்த ஹோமியோபதி அரசு மருத்துமனைகள் இருக்கின்றன. குறிப்பாக எடுத்துக் கொள்வோமேயானால் சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலே இருக்கின்ற அரசு மருத்துவமனையிலே இந்த ஹோமியோபதி பிரிவு இருக்கிறது. அதுமட்டுமல்லாது கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை அரசு மருத்துவமனையில் இந்த ஹோமியோபதி பிரிவு இருக்கிறது. எனவே விரைவிலேயே பெரம்பலூர் அரசு மருத்துவனைக்கு முன்னுரிமை கொடுத்து இந்த ஹோமியோபதி பிரிவு அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 30 இடங்களிலே இப்படிப்பட்ட பிரிவு அமைக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 12 பிரிவுகள் அமைக்கலாம்

என்ற ஆய்வு இருக்கிறது. எனவேதான் அதற்கு முன்னுரிமை அடிப்படையிலே அவர் கூறுகின்ற அந்தப் பகுதியிலே அமைக்கலாம் என்று கருதப்பட்டிருக்கிறது. எனவே, உரிய நேரத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலின் வரலாற்று பெட்டகம், தமிழ்த் திருநாட்டின் திருகோண சங்கமம், கோடானுகோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களிலே கொலுவிருக்கும் குலவிளக்கு, பொற்கால வரலாறு படைக்கும் தெய்வ அவதாரம், திராவிடத்தின் ஆதாரம் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள். சர்வதேச அரசியல் அரங்கில் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அங்கம். நேரு விளையாட்டு அரங்கை நிர்மாணித்து சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டியினை நடத்தி தமிழகத்தை சர்வதேச அளவில் உயர்த்திய ஒப்பற்ற தலைவி எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள். மகான்களே போற்றிப் புகழும் புனிதம் எங்களுடைய ஒப்பற்ற தலைவி அவர்கள். சுதந்திரக் காற்று தமிழகத்தில் தென்றலாய் தவழச் செய்தவர் எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அவர்கள். மெய்ஞானத்தின் ஞான....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செழியன், இது ஒரு சாதாரண சிறிய பிரச்சினை. உங்களுடைய பெரம்பலூரில் ஹோமியோபதி பிரிவு அமைக்க வேண்டியது பற்றியது. இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கின்ற சரித்திர சாதனைகளையெல்லாம் நீங்கள் கொண்டு போய் இணைத்து, ஏன் இதைச் செய்தால் என்ன என்று கேட்டால் அது சரியாக வராது. நீங்கள் உங்களுடைய பிரச்சினை பற்றிக் கேளுங்கள்.

திரு. தா. செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஞானப் பழத்தை கொடுத்தமாதிரி பெரம்பலூர் மருத்துவமனையில் ஒரு ஹோமியோபதி பிரிவை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *313*, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

பொதுவாக உறுப்பினர்களுக்குக்கூட என்னுடைய வேண்டுகோள் தான். உங்களுடைய தொகுதியிலே ஒரு சிறிய பிரச்சினை

அமைச்சரிடத்திலே சாதாரணமாகக் கேட்டு வாங்கக்கூடிய சில பிரச்சினைகளுக்கு பெரிய பிரச்சினைகளோடு எடுத்துக்காட்டாக நீங்கள் தெரிவிப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

313–

சங்ககிரி தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ரத்த வங்கி அமைத்தல்

***20484**—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி கழுகுமேட்டில் கட்டப்பட இருக்கும் தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவும், ரத்த வங்கியும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) சங்ககிரி கழுகு மேட்டில் மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழிலாளர்கள் நலனுக்காக ஒரு பொது புது சுகாதாரத் திட்டத்தைத் துவங்க உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் சங்ககிரியில் சங்கர் சிமென்ட் பேக்டரி, கெம்பிளாஸ்ட் மற்றும் குமாரபாளையம், பள்ளிபாளையம் ஆகிய சுற்றுப்புறங்களில் தொழிலாளர்களை உள்ளடக்கிய கிராமங்கள் நிறைய இருப்பதால் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி சங்ககிரியில் தொழிலாளர் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.*

அமைச்சரிடத்திலே சாதாரணமாகக் கேட்டு வாங்கக்கூடிய சில பிரச்சினைகளுக்கு பெரிய பிரச்சினைகளோடு எடுத்துக்காட்டாக நீங்கள் தெரிவிப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

313–

சங்ககிரி தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ரத்த வங்கி அமைத்தல்

***20484**—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி கழுகுமேட்டில் கட்டப்பட இருக்கும் தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவும், ரத்த வங்கியும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி கழுகு மேட்டில் மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழிலாளர்கள் நலனுக்காக ஒரு பொது புது சுகாதாரத் திட்டத்தைத் துவங்க உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் சங்ககிரியில் சங்கர் சிமெண்ட் பேக்டரி, கெம்பிளாஸ்ட் மற்றும் குமாரபாளையம், பள்ளிபாளையம் ஆகிய சுற்றுப்புறங்களில் தொழிலாளர்களை உள்ளடக்கிய கிராமங்கள் நிறைய இருப்பதால் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி சங்ககிரியில் தொழிலாளர் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் சங்ககிரியில் 2 மருத்துவர்களைக் கொண்ட டிஸ்பென்சரி தனியார் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. இதில் 2185 காப்பீட்டாளர்கள் இணைக்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள். இ.எஸ்.ஐ. நிறுவனம் இதற்குத் தனியாகக் கட்டிடம் கட்டுவதற்காக 1.62 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறது. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை ஆர்ஜிதம் செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனையை நடப்பு ஆண்டிலேயே கட்டி செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

314–

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலைப் பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

***24238*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் சங்ககிரியில் 2 மருத்துவர்களைக் கொண்ட டிஸ்பென்சரி தனியார் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. இதில் 2185 காப்பீட்டாளர்கள் இணைக்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள். இ.எஸ்.ஐ. நிறுவனம் இதற்குத் தனியாகக் கட்டிடம் கட்டுவதற்காக 1.62 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறது. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை ஆர்ஜிதம் செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனையை நடப்பு ஆண்டிலேயே கட்டி செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

314—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலைப் பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

***24238**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலை, ஏலகிரி மலை மிகவும் பின்தங்கிய பகுதிகள். இங்கே சுமார் 25 ஆயிரம் பழங்குடியின மக்கள் வசிக்கிறார்கள். மலைவாழ் மக்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிதான். ஜவ்வாது மலையில் சரியான ரோடு வசதி மற்றும் அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அல்லல்படுகிறார்கள். ஜவ்வாது மலையில் விளையும் சந்தனத்தால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எனவே, ஜவ்வாது மலையில் வாழும் மக்கள் வளம்பெற, இவர்களுடைய பிள்ளைகள் முன்னேற்றம் அடைய ஜவ்வாது மலையில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியை அவசியம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அரசினரால் 2 தொழிற் பயிற்சி நிலையங்களும், தனியாரால் 26 தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரில் மட்டும் 4 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே இவர்களுக்கென்று தனியாக தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை. திரு. இராம இராமநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

315-

மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகருக்குக் குடிநீர் வசதி அளித்தல்

***21974**—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதிக்குக் குடிநீர் வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

[1994 ஏப்ரல் 20

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலை, ஏலகிரி மலை மிகவும் பின்தங்கிய பகுதிகள். இங்கே சுமார் 25 ஆயிரம் பழங்குடியின மக்கள் வசிக்கிறார்கள். மலைவாழ் மக்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிதான். ஜவ்வாது மலையில் சரியான ரோடு வசதி மற்றும் அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அல்லல்படுகிறார்கள். ஜவ்வாது மலையில் விளையும் சந்தனத்தால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எனவே, ஜவ்வாது மலையில் வாழும் மக்கள் வளம்பெற, இவர்களுடைய பிள்ளைகள் முன்னேற்றம் அடைய ஜவ்வாது மலையில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியை அவசியம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அரசினரால் 2 தொழிற் பயிற்சி நிலையங்களும், தனியாரால் 26 தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரில் மட்டும் 4 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே இவர்களுக்கென்று தனியாக தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை. திரு. இராம இராமநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

315-

மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகருக்குக் குடிநீர் வசதி அளித்தல்

***21974*—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதிக்குக் குடிநீர் வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

1994 ஏப்ரல் 20]

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நகராட்சியினரால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இராம இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தன், ஏசு, காந்தி பூமியில் பிறந்தது எதற்காக; தோழன் ஏழைகள் நமக்காக; அண்ணா, எம்.ஜி.ஆர்., எங்கள் தலைவி இந்த பூமியில் பிறந்தது எதற்காக; இங்கே இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் நலனுக்காக என்கின்ற அந்த இனிய தொடர்களோடு கங்கை, யமுனை, காவிரி, வைகை ஓடுவது எதற்காக; நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக என்று காவிரிக் கரையில் அமைந்துள்ள அந்த மயிலாடுதுறை பகுதியில் வாழ்கின்ற மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகின்ற விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். மக்கள் பிரச்சினைகளை, மக்களுடைய உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிற குடிதண்ணீர் பிரச்சினையைக் கூட இங்கே வந்து கேட்காமல், கேள்விக் கணைகளைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதில்பெறக்கூட இங்கே இல்லாமல் இருக்கின்ற அந்தத் தொகுதியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய எதிர்கால, வருங்கால, நிகழ்கால கோட்டை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி, அதற்குத் துரித நடவடிக்கை எடுத்து, குடிதண்ணீர் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியை எழுப்பிவிட்டு, பதில் கூறும்போது, இங்கே வந்து கேட்காமல் இருந்தாலும்கூட, அவர்களுக்கு அந்த அக்கறை இல்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, செய்ய வேண்டிய காரியத்தை, செய்ய வேண்டிய காலகட்டத்திலே செய்து முடிக்கின்ற வல்லமை படைத்த அரசாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

அடிப்படையிலே, நான் இந்த வினாவிற்குப் பதில் அளிக்கின்றபொழுது, இதற்குண்டான அத்துணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று சொன்னேன். மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரை, மயிலாடுதுறை காந்தி நகர் பகுதியில் ஏற்கெனவே ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலேயிருந்து சுமார் 200 மீட்டர் தூரமுள்ள அண்ணா நகர் பகுதிக்குக் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்குவதற்காக நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் மயிலாடுதுறை நகராட்சி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இந்தியா மார்க்-2 கைப்பம்பு அமைக்கப்பட்டு நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது சில குறைபாடுகள் காரணமாக நல்லமுறையிலே இயங்கவில்லை. எனவே, பக்கத்திலே இருக்கின்ற காந்தி நகர் பகுதியிலேயிருந்து 200 மீட்டர் தூரத்திற்குக் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 316, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

316—

உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

****22334—டாக்டர் அ. ஸ்ரீதரன் :***

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1989 முதல் 1993 வரை நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்க நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உதகை நகராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில் பகிர்மானக் குழாய் பதித்தல் மற்றும் எஞ்சிய சிறு பணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய, சுமார் ரூ. 5 கோடிக்கு நீலகிரி மாவட்டம் ஊட்டிக்குக் குடிநீர் தருவதற்காக

அடிப்படையிலே, நான் இந்த வினாவிற்குப் பதில் அளிக்கின்றபொழுது, இதற்குண்டான அத்துணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று சொன்னேன். மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரை, மயிலாடுதுறை காந்தி நகர் பகுதியில் ஏற்கெனவே ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலேயிருந்து சுமார் 200 மீட்டர் தூரமுள்ள அண்ணா நகர் பகுதிக்குக் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்குவதற்காக நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் மயிலாடுதுறை நகராட்சி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இந்தியா மார்க்-2 கைப்பம்பு அமைக்கப்பட்டு நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது சில குறைபாடுகள் காரணமாக நல்லமுறையிலே இயங்கவில்லை. எனவே, பக்கத்திலே இருக்கின்ற காந்தி நகர் பகுதியிலேயிருந்து 200 மீட்டர் தூரத்திற்குக் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 316, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

316—

உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

***22334**—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1989 முதல் 1993 வரை நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்க நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உதகை நகராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில் பகிர்மானக் குழாய் பதித்தல் மற்றும் எஞ்சிய சிறு பணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய, சுமார் ரூ. 5 கோடிக்கு நீலகிரி மாவட்டம் ஊட்டிக்குக் குடிநீர் தருவதற்காக

1994 ஏப்ரல் 20]

திட்டங்களைத் தீட்டி அதில் முறைகேடு நடந்துள்ளது என்பதை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அரசுக்குத் தெரியபடுத்தி இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகள்மீதும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மக்களுடைய பணத்தை துஷ்ப்பிரயோகம் செய்தவர்கள் மீதும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி பொதுவான கேள்வியாகும். இந்தக் குடிநீர் வழங்க, நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்ட விவரத்தைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். பொதுவான விவரம் என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் முறைகேடுகள் நடந்தது சம்பந்தமாக, ஊட்டி நகரிலே எடுக்கப்பட்ட அந்தக் குடிநீர் திட்டத்திலே, *1989* முதல் *1993* வரை குடிநீர் திட்டம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், இந்த நகரத்திற்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் *1986*-ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்டு, தற்போது திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முறைகேடுகள் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக, ஏற்கெனவே வாரியத்தினுடைய கவனத்திற்கு, இந்த முறைகேடுகள் எடுத்துச் செல்லப்பட்டு, அதிலே ஈடுபட்டிருந்த, அதிலே சம்பந்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. சில உயரதிகாரிகளைக்கூட, மாவட்ட அளவிலே இருக்கிற கண்காணிப்புப் பொறியாளர் அளவிலேகூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அதுசம்பந்தமாக தீவிர விசாரணையையும் வாரியம் மேற்கொண்டு, இன்னும் பல்வேறு உண்மைகளும் வெளிக் கொணரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1989* ஆம் ஆண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய போர்டு மீட்டிங்கிலே, அங்கே பதிக்கப்படுகின்ற குழாய்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற குழாய்களைப் பதிக்கவேண்டுமென்ற நிர்பந்தம் இருந்தாலும்கூட, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அந்த இடத்தைப் பார்வையிட்டபோது, ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட பைப்புகள் இல்லாமல்,

மேலும் பல்வேறு இடங்களில் பைப்புகளே இல்லாமல் இருந்திருக்கிறது. மேலும், அந்த ஒப்பந்ததாரருடைய வேர்அபௌட்ஸ் எங்கிருக்கிறது என்பது தெரியவில்லை என்பதை அரசு அறியுமா? அந்தக் காண்ட்ராக்டரை நம்முடைய அரசு கண்டு பிடித்து விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அந்தப் பகுதியிலே பார்வையிடுவதற்கு முன்பாகவே வாரியம் இதிலே தன்னுடைய நடவடிக்கையை முடுக்கி விட்டு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். மேலும் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் முழுமையான விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை என்ற நிலையில், நிச்சயமாக அந்த விசாரணையின் முடிவு அரசுப் பணத்தை வீணடிக்கின்றவர்கள், அரசுப் பணத்தைத் துஷ்பிரயோகம் செய்ய விரும்புபவர்கள்மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். ராஜு.

திரு. கே. ஆர். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு போடப்பட்ட பைப்புகள் யாவும் நீலகிரி மாவட்டத்தில் எனது கிராமம் உள்பட செயலற்றுக் கிடக்கின்றன. அவற்றைப் புதுப்பித்து மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊட்டி நகருக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1986-ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கப்பட்டு தற்பொழுது அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதகமண்டலம் நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அரசாணை நிலை எண். 1746, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 25-11-1983-ல் ரூ. 457 இலட்சத்து 44 ஆயிரம் செலவினத்தில் முன்னோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசாணை எண். 1218, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 3-11-1986-ல் ரூபாய் 500 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. 1983 இல் இத்திட்டத்திற்கு முன்னோடி

1994 ஏப்ரல் 20]

ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பினும், நீர் கொண்டு செல்லும் குழாய் பதித்தல், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் வெவ்வேறு கொள்ளளவு உள்ள மூன்று தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு வனத்துறையின் அனுமதி பெற்ற பின்னரே இத்திட்டம் 1986-இல் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்போதுள்ள விலையேற்றத்தின் காரணமாகவும், இப்பொழுதுள்ள விலைப் பட்டியலின்படியும் திருத்திய மதிப்பீடு ரூ. 7 கோடியே 48 இலட்சங்களுக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நகராட்சி நிதிநிலைமைச் சான்றிதழ் மற்றும் திருத்திய மதிப்பீட்டின் கூடுதல் விவரங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் தற்காலிக நீர் கொணர் அமைப்பு, சுத்திகரிப்பு நீர் சேகரிப்புத் தொட்டி, பம்பு ரூம் மற்றும் பம்பு செட்டுகள் பொருத்தும் பணி, சுத்திகரிக்கப்பட்ட நீர் கொண்டு செல்லும் குழாய் பதித்தல், 9.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள இரண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் ஆகிய பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்படாத நீர் கொண்டு செல்லும் குழாய் பதித்தல், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் வெவ்வேறு கொள்ளளவு உள்ள தரைமட்ட மூன்று நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் யாவும் முடிவுறும் நிலையில் இருக்கின்றன. உதகை நகராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில் பகிர்மாணக் குழாய் பதித்தல் மற்றும் எஞ்சிய சிறுபணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும். உதகமண்டலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னோடித் திட்டம் முடிக்கப்பட்டு குடிநீர் 1988 ஏப்ரல் முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பகிர்மானக் குழாய்களிலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை குறித்து அரசு நிச்சயமாக கவனம் செலுத்தி அதிலே மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தின் மூலம் உதகை நகருக்கு எந்த அளவிற்கு நீர் கிடைக்கும்? மேலும் உதகை நகரம் என்பது மிகச்சிறந்த கோடைவாசஸ்தலமாக விளங்குவதால் உல்லாசப் பயணிகள் இலட்சக்கணக்கில் உதகை மாநகருக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே, பைக்காராவினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதியிலோ அல்லது பைக்காரா அணையிலிருந்தோ உதகை நகருக்குத் தண்ணீர் கொண்டு வரக்கூடிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

அல்லது எதிர்காலத்திலாவது அதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊட்டி நகருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, இதுவரையிலே நான் விவரித்திருக்கின்ற இந்தத் திட்டமே அந்த நகராட்சிக்குப் போதுமானதாகக் கருதப்பட்டு, வருங்காலத்திலும் அதே அளவு கொள் அளவு கொண்டிருக்கின்ற அந்த நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, ஆகியவை அனைத்துமே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய - அந்த மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே எதிர்காலத்திற்கென்று மாற்றுத் திட்டம் தேவை இருக்காது என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 317, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை. திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

317-

குடவாசல் தாலுக்காவில், வெள்ளை அதம்பார் கிராமத்தில் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குதல்.

***21867*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு மேற்படி கிராம புல எண் 43, 44-ல் பட்டா வழங்க நன்னிலம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11.00

அல்லது எதிர்காலத்திலாவது அதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊட்டி நகருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, இதுவரையிலே நான் விவரித்திருக்கின்ற இந்தத் திட்டமே அந்த நகராட்சிக்குப் போதுமானதாகக் கருதப்பட்டு, வருங்காலத்திலும் அதே அளவு கொள் அளவு கொண்டிருக்கின்ற அந்த நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, ஆகியவை அனைத்துமே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய - அந்த மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே எதிர்காலத்திற்கென்று மாற்றுத் திட்டம் தேவை இருக்காது என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 317, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை. திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

317-

குடவாசல் தாலுக்காவில், வெள்ளை அதம்பார் கிராமத்தில் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குதல்.

***21867*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு மேற்படி கிராம புல எண் 43, 44-ல் பட்டா வழங்க நன்னிலம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11.00

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் குடிமக்கள், கிட்டத்தட்ட 60 ஆண்டுக் காலமாகக் குடியிருந்தும், பல்லாண்டுக் காலமாக குடியிருப்பு மனைப் பட்டா வழங்கக் கோரிக்கை வைத்தும், அது நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தினால்—அமைச்சர் அவர்கள் அது ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இந்த ஆண்டிலேயே அது பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கிராமத்தில் திரு. சடையன் மற்றும் 24 நபர்கள் கூரை வீடுகள் கட்டி, சுமார் 15 ஆண்டுகளாக குடும்பத்தாருடன் வசித்து வருவதாகவும், ஆற்றங்கரை புறம்போக்கு என்பது, ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு என்பதால், பட்டா வழங்க இயலாது என்றும், மேலும் மேற்படி கிராமப் புல எண் 43 மற்றும் 44-இல், அந்த நபர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மிக விரைவில் அந்த மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் இதுவரையில், ஆதிதிராவிடர்களுக்கு எவ்வளவு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன? எவ்வளவு மனுக்கள் வரப்பெற்றுள்ளன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி, மூலக் கேள்வி ஒரு கிராமத்தைப் பற்றியது. நீங்கள் கேட்பது பற்றிய குறிப்பு அமைச்சரிடம் இருக்காது. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 318, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

318—

சீர்காழித் தொகுதியில் சில கோவில்களில் பராமரிப்பை அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வருதல்.

**12507—திரு. து. மூர்த்தி :*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கற்கோவில் கிராமம் கண்ணன் கோவில் மற்றும் விநாயகர் கோவில் பராமரிப்பை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து–சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி வட்டம் கற்கோயில் கிராமம் அருள்மிகு கண்ணன் கோயில் என்கிற பாண்டுரங்க பஜனை மடமானது இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டு, 14-9-1993 அன்று சிறு ஆலயங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அருள்மிகு விநாயகர் என்கிற வெள்ளந்தாங்கி விநாயகர் திருக்கோயிலானது, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) அமலுக்கு வந்த நாளான 1-1-1960-க்கு முன்பிருந்தே அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழித் தொகுதியில் உள்ள கற்கோயில் என்ற கிராமத்திலுள்ள கண்ணன் கோவில் மற்றும் விநாயகர் கோவில் ஆகியவை பழம்பெறும் பெறுமை பெற்றவை. இவை பராமரிப்புச் செய்யப்படாமல், இடிந்து பாழடைந்த நிலையில் உள்ளன. இதனால், அந்தப் பகுதியிலுள்ள பெருமக்கள், பக்தர்கள் வழிபட முடியாத நிலை இருக்கிறது. என்னிடம் நேரில் வந்து, அந்தக் கோவில்களை அரசின் மூலம் புதுப்பித்துத் தந்தால், அந்தப் பகுதியிலுள்ள பெருமக்கள், பக்தர்கள் வழிபடுவதற்கு வசதியாக இருக்குமென்று தொகுதி மக்கள் கூறினார்கள். மேலும், அந்தப் பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி. எல்லோரும் கிராமத்து மக்கள். எனவே, தென்னகத்தின் காவல் தெய்வம், எங்களுடைய இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே இந்து–சமய அறநிலையத் துறையின்கீழ், அந்த

இரண்டு கோவில்களையும் கொண்டுவந்து, பராமரிப்பு செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தெய்வீகத்தைக் காக்க வேண்டும், தெய்வீகத்தைப் பேண வேண்டும் என்பதிலே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மிக உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை, இந்த அரசு கனிவோடு ஏற்று, அதைச் செய்யும் என்பதை உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *319*, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

319—

பரமத்தி வேலூர் தாலுக்காவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

***10099**—திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுக்கா, வேலூரில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தியும் இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிலம் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரமத்தி வேலூர் வட்டம், வேலூரில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் முயற்சி நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் இறுதிக் கட்டத்தில் உள்ளது. நிலம் கையகப்படுத்தியதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் *11-05*

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இரண்டு கோவில்களையும் கொண்டுவந்து, பராமரிப்பு செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தெய்வீகத்தைக் காக்க வேண்டும், தெய்வீகத்தைப் பேண வேண்டும் என்பதிலே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மிக உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை, இந்த அரசு கனிவோடு ஏற்று, அதைச் செய்யும் என்பதை உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 319, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

319—

பரமத்தி வேலூர் தாலுக்காவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

***10099**—திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுக்கா, வேலூரில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தியும் இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிலம் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரமத்தி வேலூர் வட்டம், வேலூரில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் முயற்சி நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் இறுதிக் கட்டத்தில் உள்ளது. நிலம் கையகப்படுத்தியதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11-05

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1984-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்குவதற்காக ஏழு ஏக்கர் நிலம் அரசு எடுத்தது. ஏழு வருடமாக வழக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மலை போல் வரும் சோதனைகள் யாவும், எங்களுடைய புரட்சித் தலைவி அரசில் பனி போல் நீங்கிவிடும் என்பதற்கு உதாரணமாக ஏழு வருடமாக வழக்கு நடத்துபவர்களை சமாதானப்படுத்தி தற்போது அந்த நிலத்தை மக்களுக்கே திருப்பி வழங்கியிருக்கிறார்கள். அது பட்டா வழங்குகிற சூழ்நிலையிலிருக்கிறது. அமைச்சர் அவர்கள் எப்பொழுது பட்டா ஏற்பாடு செய்வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நான்கு ஏக்கர் நிலத்திற்கு *26-5-1992*-ல் விசாரணை நடத்தி, பிரிவு *6*-ன் கீழ் *24-11-1993* அன்று விளம்பர அறிக்கை வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து இழப்பீட்டுத் தொகை வழங்கி நிலம் எடுத்துக்கொண்டபின், பயனீட்டாளர்களுக்கு விரைவில் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களைவிட, மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையில் அன்றாட வாழ்க்கைக்குத் துன்பப்பட்டும், கூலி வேலை செய்தும் வாழும் பிற்பட்ட மக்கள் எங்கள் தொகுதியில் அதிகமாக இருக்கின்றனர். காவிரி பாய்கின்ற காரணத்தினால் ஒரு சென்ட் நிலம் கூட வாங்க வகையற்ற நிலையிலே இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த 4 ஏக்கர் நிலம் போதாத நிலையில் இருக்கிற காரணத்தால், மீண்டும் வேறு ஏதாவது ஒரு புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி, இப்படிப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு நிலப் பட்டா வழங்க அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி, அவற்றை நிலம் இல்லாத மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதல் அமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருடந்தோறும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்து

1994 ஏப்ரல் 20]

உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இதுவரையில் 11,722 மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இந்த நிலத்தைக் கையகப்படுத்தும்போது, நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்குப் பயன் எளிதில் போய்ச் சேரமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. உடனடியாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்பதற்கு, தனியார் கூட முன்வந்து அவர்கள் நிலத்தைத் தருகிறோம் என்று சொன்னால், அவற்றை விலைக்கு வாங்கி 'பிரைவேட் நெகோசியேஷன் மெத்தெட்' என்று சொல்லக்கூடிய பேசித் தீர்த்தல் முறைப்படி, இன்றைக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு ஒரு குழு ஏற்படுத்தலாம் என்றுகூட நம்முடைய. முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் யோசனை செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியிலேயே தனியார் நிலம் கொடுக்க முன்வந்தால் கூட, அதனை விலை கொடுத்து வாங்கி அந்தப் பயனீட்டாளர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு யோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *320*, திரு. வே. பெரியசாமி, பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

320—

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் மிகவும் பின்தங்கிய மாணவ, மாணவியருக்கு இல்லங்கள் அமைத்தல்

***21099*—திரு. வே. பெரியசாமி:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் மிகப் பின் தங்கியோர் நல மாணவர், மாணவியர் இல்லங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 ஏப்ரல் 20]

உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இதுவரையில் *11,722* மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இந்த நிலத்தைக் கையகப்படுத்தும்போது, நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்குப் பயன் எளிதில் போய்ச் சேரமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. உடனடியாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்பதற்கு, தனியார் கூட முன்வந்து அவர்கள் நிலத்தைத் தருகிறோம் என்று சொன்னால், அவற்றை விலைக்கு வாங்கி 'பிரைவேட் நெகோசியேஷன் மெத்தெட்' என்று சொல்லக்கூடிய பேசித் தீர்த்தல் முறைப்படி, இன்றைக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு ஒரு குழு ஏற்படுத்தலாம் என்றுகூட நம்முடைய. முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் யோசனை செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியிலேயே தனியார் நிலம் கொடுக்க முன்வந்தால் கூட, அதனை விலை கொடுத்து வாங்கி அந்தப் பயனீட்டாளர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு யோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *320*, திரு. வே. பெரியசாமி, பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

320—

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் மிகவும் பின்தங்கிய மாணவ, மாணவியருக்கு இல்லங்கள் அமைத்தல்

***21099*—திரு. வே. பெரியசாமி:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் மிகப் பின் தங்கியோர் நல மாணவர், மாணவியர் இல்லங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1994 ஏப்ரல் 20

(ஆ) ஆம் எனில், எத்தனை மாணவர், மாணவிகள் சேர்க்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் 1993-94-ம் ஆண்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதி திறக்க செயற்குறிப்பு ஏதும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர், நெருஞ்சிப்பேட்டை பகுதியிலே மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த வன்னியர், போயர், வளையர் போன்றவர்கள், மீனவர்கள் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் கல்வியில் மேம்பாடு அடைவதற்காக விடுதி ஒன்று திறக்க வேண்டுமென்று நான் மூன்று ஆண்டுகாலமாக கேட்டுக்கொண்டே உள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். அருள்கூர்ந்து, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி நல்லாட்சியில் விடுதியை இவ்வாண்டு திறப்பதற்கு பரிசீலனை செய்வாரா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொருத்தமட்டிலே மொத்தம் 34 விடுதிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கடந்த வருடம் தன்னுடைய தொகுதிக்கு ஒரு விடுதி வேண்டுமென்று கேட்டார். அதனைத் தாய் உள்ளத்தோடு நம்முடைய தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கடந்த ஆண்டு அவருடைய தொகுதிக்கு ஒரு மாணவியர் விடுதியை அளித்தார்கள். ஒவ்வொரு வருடமும் அவருடைய தொகுதிக்கு மட்டுமே விடுதிகள் கொடுத்தால் மற்ற தொகுதிகளுக்கு விடுதிகள் கொடுக்க முடியாத சூழ்நிலையிருக்கும். எனவே, விடுதிகள் அமைக்கத் தேவையான கருத்துரு. அந்த வாய்ப்புகள் இருந்தால் மட்டுமே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 20]

முற்பகல் 11.10

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது". என்பதை நான் அறிவேன். எங்களுடைய தானைத் தலைவி, தமிழகத்தின் முதல்வர், முக்கோணத் தமிழகத்தின் மீனாட்சியாகவும், பெண்ணுரிமை பேண வந்த பெண்ணரசியாகவும், இந்த மண்ணுரிமை காக்க வந்த மாதரசியாகவும், என்னுரிமை போனாலும் பரவாயில்லை, இந்த மண்ணுரிமையைக் காத்தே தீருவேன் என்று இரவென்றும் பகலென்றும் பாராமல் கண்துஞ்சாமல் உழைத்துக்கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) உத்தம அம்மா அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் அளித்தீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. இரண்டு விடுதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். இவ்வாண்டும், பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தால் பணிவோடு உங்களுடைய பாதத்தைத் தொட்டு வணங்கி நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு விடுதி அந்தப் பிற்பட்ட பகுதியில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியது போல் அங்கே இந்த மாணவர்கள் அதிகமான அளவுக்கு இருந்தால் அதைக் கருத்தில் கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

302—

காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

***25056-** திரு. கா.பூ. முனுசாமி:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் அமைத்திட அரசு முன்வருமா ?

1994 ஏப்ரல் 20]

முற்பகல் 11.10

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது''. என்பதை நான் அறிவேன். எங்களுடைய தானைத் தலைவி, தமிழகத்தின் முதல்வர், முக்கோணத் தமிழகத்தின் மீனாட்சியாகவும், பெண்ணுரிமை பேண வந்த பெண்ணரசியாகவும், இந்த மண்ணுரிமை காக்க வந்த மாதரசியாகவும், என்னுரிமை போனாலும் பரவாயில்லை, இந்த மண்ணுரிமையைக் காத்தே தீருவேன் என்று இரவென்றும் பகலென்றும் பாராமல் கண்துஞ்சாமல் உழைத்துக்கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) உத்தம அம்மா அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் அளித்தீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. இரண்டு விடுதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். இவ்வாண்டும், பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தால் பணிவோடு உங்களுடைய பாதத்தைத் தொட்டு வணங்கி நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு விடுதி அந்தப் பிற்பட்ட பகுதியில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியது போல் அங்கே இந்த மாணவர்கள் அதிகமான அளவுக்கு இருந்தால் அதைக் கருத்தில் கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

302—

காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

***25056-** திரு. கா.பூ. முனுசாமி:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் அமைத்திட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிகளின்படி ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத்திலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டும். அதன்படி புதிய வட்டம் ஒன்றை ஏற்படுத்தும்போது வட்டத் தலைமையிடங்களில் துணைக் கருவூலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் அரசு ஆராய்ந்ததில் காவிரிப்பட்டினம், கிருஷ்ணகிரி தாலுக்காவுக்குட்பட்ட ஒரு பேரூராட்சியாகும். எனவே அவ்விடத்தில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

308–

இராமநாதபுரம் தொகுதி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***25691**—திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிறுவாகனங்கள் கூட இயக்க இயலாதபடி சாலை அமைந்துள்ளதால் கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி () இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிகளின்படி ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத்திலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டும். அதன்படி புதிய வட்டம் ஒன்றை ஏற்படுத்தும்போது வட்டத் தலைமையிடங்களில் துணைக் கருவூலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் அரசு ஆராய்ந்ததில் காவிரிப்பட்டினம், கிருஷ்ணகிரி தாலுக்காவுக்குட்பட்ட ஒரு பேரூராட்சியாகும். எனவே அவ்விடத்தில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

308–

இராமநாதபுரம் தொகுதி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***25691**—திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிறுவாகனங்கள் கூட இயக்க இயலாதபடி சாலை அமைந்துள்ளதால் கொத்தன்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1994 ஏப்ரல் 20]

2. சிறப்பு கவன ஈர்ப்பு

*(அ) நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம் முத்துப் பேட்டையில் **18-4-1994** அன்று இரு சாராருக்கு இடையே ஏற்பட்ட கலவரம் குறித்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்பு கவன ஈர்ப்பாக இரண்டு பிரச்சினைகளை இன்று எடுத்துக்கொள்கிறேன். முதலிலே நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டையில் 18-4-1994 அன்று நடந்த ஒரு பிரச்சினை குறித்து பேரவையில் எழுப்பிட திரு. பழனிசாமி அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்தப் பிரச்சினை பற்றிச் சுருக்கமாகப் பேரவையில் எடுத்து வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான திருத்துறைப்பூண்டியினுடைய முத்துப்பேட்டையில் 18-4-1994 அன்று ஆர். எஸ்.எஸ். இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இரவு 9 மணி வரை பொதுக்கூட்டம் நடத்தி, அன்றிரவு பொதுக்கூட்டம் முடிந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆசாத் நகர் என்கிற நகருக்குச் சென்று, அங்கே முஸ்லீம் மக்கள் நிறைந்திருக்கிற, அவர்கள் கடை வைத்திருக்கிற, வசிக்கக்கூடிய அந்தப் பகுதியில் உள்ள கடைகளில் எல்லாம் புகுந்து அடித்து, நகைக் கடையை உடைத்து, கடையில் இருக்கக் கூடிய நகைகள் பொருட்கள் எல்லாம் அள்ளிச் சென்று, அங்கே அருகில் இருக்கக்கூடிய கடைகளை எல்லாம் தீ வைத்துக் கொளுத்தி அதன்மூலம் அருகிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களின் குடிசைகள், வீடுகள், கடைகள் எல்லாம் அதாவது 18 கடைகள், வீடுகள் எல்லாம் சேர்ந்து எரிந்து அதன்மூலம் சுமார் 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் சேதாரங்கள் எற்பட்டிருக்கின்றன. கட்டுக்கு அடங்காமல் காட்டுமிராண்டித்தனமாக நடந்திருக்கிற ஆர்.எஸ்.எஸ். கும்பலைக் கலைக்க காவல் துறையினர் கூட துப்பாக்கிச்சூடு நடத்தும்போது அருகில் இருந்த முஸ்லீம் பெண்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டிருக்கிறது. இதேபோன்று தொடர்ந்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ். கும்பல், அதாவது கடலோரப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் ஒவ்வொரு கூட்டம் நடத்துகிற நேரத்தில் எல்லாம் அந்தக் கடைகளை தீ வைத்துக் கொளுத்துவது, சூறையாடுவது, பஸ்களை வழிமறித்துக் கொள்ளையடிப்பது என்று

முகமூடிக் கொள்ளையர்கள் போன்று செயல்படுகிற கும்பலாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

சமீபத்தில் திராவிடர் கழகத்தினுடைய கூட்டம் அங்கே நடைபெற இருந்தது. அந்தத் திராவிடர் கழகக் கூட்டம் நடைபெறக்கூடாது என்பதற்காக, அங்கே போடப்பட்ட பந்தலைக்கூட கொளுத்தினார்கள். அதன்மூலமாக ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது. சமீபத்திலே டெலிஃபோன் ஊழியர் ஒருவரைக் கூட, அவர் பஸ்ஸைவிட்டு இறங்கிய நேரத்தில் பட்டப்பகலில் கடைத் தெருவில் வைத்து அவருடைய கையை வெட்டி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தமாதிரி விஷயங்களில் நீங்கள் எந்தச் சம்பவம் பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொடுத்திருக்கிறீர்களோ அதைத் தான் சொல்லவேண்டும். எனவே பஸ்ஸில் இருந்து இறங்கியதை எல்லாம் பற்றி நீங்கள் என்னிடம் கொடுத்திருந்தால் அனுமதிப்பேன். என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் கிளப்ப வேண்டும் என்கிறீர்களோ அவற்றை என்னிடம் கொடுத்திருந்தால் நான் அரசுக்குத் தெரிவித்து அவர்களுடைய பதிலைப் பெற்று தெரிவிக்க முடியும். அவர்கள் முழுமையாகத் தெரிவிக்க முடியாத சூழ்நிலையில் நீங்கள் கொண்டு வந்து நிறுத்தக்கூடாது. துப்பாக்கிச் சூடு நடந்தது பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சம்பவங்கள் காரணமாக பதட்டமான சூழ்நிலை என்பது மட்டுமல்ல, இந்து-முஸ்லிம் கலவரத்தைத் தூண்டுகிற வகையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தொடர்ந்து அங்கே இருக்கக்கூடிய சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்ல, ஏழை எளிய கிராம மக்கள் கூட அந்த நகருக்கு வந்து போவதற்கு மிகப்பெரிய அச்சங்கள் ஏற்படுகின்றன. காவல் துறைக்கு தொடர்ந்து இதுசம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டும் கூட ஒரு சரியான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இது போன்ற ஒரு அத்துமீறல் செயலை, அராஜகச் செயலை இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11.15

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே காவல் துறைக்கு உத்தரவிட்டு எந்தத் தரப்பினராக இருந்தாலும் அது முஸ்லிம்களாக இருந்தாலும் சரி அல்லது இந்த ஆர்.எஸ்.எஸ். கும்பலாக இருந்தாலும்

1994 ஏப்ரல் 20] [திரு. ஜி. பழனிசாமி]

இதுபோன்று சமூக விரோத செயலிலே, தான்தோன்றித்தனமாக, மிருகத்தனமாக தாக்கக் கூடிய எந்த ஒரு நபராக இருந்தாலும் நீங்கள் கறாராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-4-1994 அன்று இரவு 7.00 மணி அளவில் நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை நகரில், தபால் நிலையத்திற்கு அருகே இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளனர். இந்தப் பொதுக் கூட்டம் இரவு 7.00 மணிக்குத் தொடங்கி இரவு 9.40 மணி வரை நடைபெற்றதாகத் தெரிகின்றது. இந்தப் பொதுக் கூட்டத்தில் இந்து முன்னணியின் பேச்சாளர்கள் 7 பேர் பேசியபிறகு இந்து முன்னணியின் மாநிலப் செயலாளராக புதுக்கோட்டையைச் சேர்ந்த திரு. முத்துவேல் என்பவர் பேசியபோது இஸ்லாமிய சமுதாயத்தை மிகவும் இழிவுபடுத்தும் வண்ணம் பேசியுள்ளார். இதே நேரத்தில் முத்துப்பேட்டையை அடுத்துள்ள ஜாம்பவானோடை என்ற ஊரைச் சேர்ந்த திரு. கீர்த்திவாசன் என்பவர் முத்துப்பேட்டையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்து முன்னணி பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்து கொண்டிருக்கும் சமயம் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த அடையாளம் தெரியாத 4 நபர்களால் தாக்கப்பட்டதாக தெரிகிறது. திரு. கீர்த்திவாசன் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களால் தாக்கப்பட்டார் என்ற செய்தியை பொதுக் கூட்டம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்தவர்கள் கேள்விப்பட்டு கோபம் அடைந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை அடுத்து இந்துக்கள் முத்துப்பேட்டையில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களின் கடைகளின் மீது கற்களை வீசி எறிந்ததாகத் தெரிகிறது. அவர்கள் இவ்வாறு கல்லெறித்தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது முத்துப்பேட்டையிலுள்ள ஆசாத் நகர் என்ற பகுதியிலுள்ள இந்து ஒருவரின் கடையை முஸ்லிம்கள் தீக்கிரையாக்கிய ஒரு செய்தி தரப்பட்டதாகத் தெரிகின்றது. இதனால் கோபமுற்ற இந்துக்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளுக்குத் தீ வைக்கத் தொடங்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள் அதே பகுதியில் இந்துக்களுக்குச் சொந்தமான கடைகளுக்கு தீ வைத்துள்ளனர். இவ்வாறு தொடங்கிய இந்தச் சம்பவத்தில்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

முத்துப்பேட்டையில் இந்துக்களுக்குச் சொந்தமான 15 கடைகளும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான 10 கடைகளும், கிருத்துவர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு கடையும் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த தீ வைப்பு மற்றும் வன்முறைச் சம்பவத்தில் சேதம் அடைந்த கடைகளின் மதிப்பு சுமார் 18 லட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி தகவல் அறிந்த காவல் துறையினர் அங்கு விரைந்து வந்தபோது சம்பவ இடத்தில் குழுமி இருந்த கூட்டத்தினர், குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் காவல் துறையினர் மீது கற்களையும் தேங்காய்களையும் வீசித் தாக்கியுள்ளனர். தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டவர்களை அந்த இடத்திலிருந்து கலைப்பதற்காகவும் தற்காப்பிற்காகவும் முத்துப்பேட்டை காவல் நிலைய சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வர் ரகுநாதன் தன் கையில் இருந்த 410 மஸ்கெட் என்ற துப்பாக்கியால் வானத்தை நோக்கி 4 முறை சுட்டுள்ளார். வானத்தை நோக்கிச் சுட்டதால் யாருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை. இருப்பினும் இந்தச் சம்பவத்தின்போது கூட்டத்தின் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி ஒரு முஸ்லிம் இன பெண்மணியும் 2 இந்துக்களும் காயமுற்றதாகத் தெரிகிறது. இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட பதட்டத்தைத் தணிக்கவும் மேலும் அசம்பாவிதம் ஏதும் நிகழாமல் தடுக்கவும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்ட காவல் துறை கண்காணிப்பளர் தலைமையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பவ இடத்திற்குச் சென்ற இருதரப் பினரிடையேயும் சுமூக நிலைமையை ஏற்படுத்தும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து இதுவரை முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜாம்பவானோடை திரு. கீர்த்திவாசன் கொடுத்த புகாரின் பேரில் முத்துப்பேட்டை காவல் நிலைய குற்றப் பிரிவு எண். 216/94-ல்—4 அடையாளம் தெரியாத நபர்களின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. கீர்த்திவாசன், முத்துப்பேட்டை, அரசு மருத்துவமனையில் புற நோயாளியாக சிகிச்சை பெற்றார். விஜயா டிரான்ஸ்போர்ட் பேருந்து ஓட்டுனர் திரு. நாகராஜன், பேருந்தினுடைய பின்பக்கக் கண்ணாடிகளை உடைத்ததற்காக நவாஸ்கான் மற்றும் மூன்று பேர் மீது கொடுத்த புகாரின் பேரில் முத்துப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.217/94 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 341 மற்றும் 437-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11.20

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

திரு. மொகிதீன் ஷேக் என்பவர் தனது பெட்டிக் கடைக்குத் தீ வைத்ததாக கொடுத்த புகாரின் பேரில் ஜாம்பவானோடை பன்னீர் மற்றும் 14 பேர் மீது குற்ற எண் 218/94-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 379 மற்றும் 436 ஆகியவற்றின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. முத்துப்பேட்டை திரு. ஏ. என். ஜபரூல்லா என்பவர் தனது கடைகளுக்குத் தீ வைத்து நாசப்படுத்தியதாக கொடுத்த புகாரின் பேரில் 11 இந்துக்கள் மீது முத்துப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 219/94ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148,379,427 மற்றும் 436 ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த 4 வழக்குகளின் மீதும் காவல் துறையினர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் நடந்த இடங்களில் பாதுகாப்புப் பணிக்கு காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது முத்துப்பேட்டையில் அமைதி நிலவுகின்றது. நாட்டின் பிற பகுதிகள் மதக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் கூட தமிழ்நாட்டில் அமைதி காத்த பெருமை உடையவர்கள் நாம். (மேசையைத் தட்டும் ஒலி)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் விளைவாக இந்திய நாடு முழுவதிலும் இனக் கலவரங்கள் ஏற்பட்டபோது தமிழ்நாடு மட்டும் விதி விலக்காக பொது அமைதி காத்த வரலாற்று உண்மையை எவரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வதந்திகளாகக் கெட்ட எண்ணத்துடன் சிலர் பரப்பி மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, வன்முறைக்கு வித்திட்டு பொதுமக்களின் உடைமைக்கும் உயிருக்கும் ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதையும் நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு சாதாரண சம்பவங்களை பெரிய இனக் கலவரங்களாக மாற்ற முயற்சி செய்பவர்கள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை இராயபுரம் பகுதியில் இரா. ஏழுமலை 18-4-1994 அன்று கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை, சென்னை மாநகரத்தின் இராயபுரம் பகுதியில் 18.4.1994 அன்று இரா. ஏழுமலை என்பவர் கொலை செய்யப்பட்டது குறித்து பேரவை

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

திரு. மொகிதீன் ஷேக் என்பவர் தனது பெட்டிக் கடைக்குத் தீ வைத்ததாக கொடுத்த புகாரின் பேரில் ஜாம்பவானோடை பன்னீர் மற்றும் 14 பேர் மீது குற்ற எண் 218/94-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 379 மற்றும் 436 ஆகியவற்றின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. முத்துப்பேட்டை திரு. ஏ. என். ஜபரூல்லா என்பவர் தனது கடைகளுக்குத் தீ வைத்து நாசப்படுத்தியதாக கொடுத்த புகாரின் பேரில் 11 இந்துக்கள் மீது முத்துப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 219/94ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148,379,427 மற்றும் 436 ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த 4 வழக்குகளின் மீதும் காவல் துறையினர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் நடந்த இடங்களில் பாதுகாப்புப் பணிக்கு காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது முத்துப்பேட்டையில் அமைதி நிலவுகின்றது. நாட்டின் பிற பகுதிகள் மதக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் கூட தமிழ்நாட்டில் அமைதி காத்த பெருமை உடையவர்கள் நாம். (மேசையைத் தட்டும் ஒலி)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் விளைவாக இந்திய நாடு முழுவதிலும் இனக் கலவரங்கள் ஏற்பட்டபோது தமிழ்நாடு மட்டும் விதி விலக்காக பொது அமைதி காத்த வரலாற்று உண்மையை எவரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வதந்திகளாகக் கெட்ட எண்ணத்துடன் சிலர் பரப்பி மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, வன்முறைக்கு வித்திட்டு பொதுமக்களின் உடமைக்கும் உயிருக்கும் ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதையும் நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு சாதாரண சம்பவங்களை பெரிய இனக் கலவரங்களாக மாற்ற முயற்சி செய்பவர்கள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை இராயபுரம் பகுதியில் இரா. ஏழுமலை ***18-4-1994*** *அன்று கொலை செய்யப்பட்டது குறித்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை, சென்னை மாநகரத்தின் இராயபுரம் பகுதியில் 18.4.1994 அன்று இரா. ஏழுமலை என்பவர் கொலை செய்யப்பட்டது குறித்து பேரவை

விதி.56-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம்வழுதி, திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் ஒரு அறிவிப்பை எனக்குக் கொடுத்திருந்தார்கள். பேரவை விதி 56-ன் கீழ் இப்பிரச்சினையை எழுப்ப நான் அனுமதி மறுத்திருந்தாலும், இந்த பிரச்சினையின் தன்மை குறித்து அவையின் கவனத்திற்குக் கொண்டு வர, சிறப்பு கவன ஈர்ப்பாகக் கொண்டு வர அனுமதி அளித்து இருக்கிறேன். அந்த வகையில் இதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். சுருக்கமாக அந்தப் பிரச்சினையை மட்டும் சொன்னால் போதும். அதற்குள்ளே சென்று பல்வேறு விவரங்களை உறுப்பினர்கள் தெரிவிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன். அந்த வகையில் இந்தப் பிரச்சினையை மட்டும் சுருக்கமாகப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர கேட்டுக்கொள்கிறேன். திரு. அ. செல்வராசன்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-4-1994 அன்று இரவு சுமார் 11 மணிக்கு இராயபுரம் கப்பல் முதலி தெருவில் உள்ள சைக்கிள் ஷாப்பில் உட்கார்ந்துகொண்டு இருந்த எங்கள் இயக்கத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக வை.கோ. அணியின் சென்னை மாவட்ட பொறுப்புக்குழு தலைவர் இரா. ஏழுமலை அவர்களை சுமார் 20 பேர் வீச்சரிவாளால் வெட்டிக் கொலை செய்திருக்கின்றார்கள். இந்தக் கொலை திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கொலைக்குக் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சி. எங்கள் அணியின் சார்பாக மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி 16-ஆம் தேதி சென்னையில் நடத்தினோம். அதை நடத்தவிடாமல் தடுக்க, எங்களை எதிர்க்கும் அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலர், 16-ஆம் தேதிக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே எங்கள் பேரணியில் நாங்கள் கொடி பிடித்து வந்தால், எங்கள் கைகளை வெட்டுவோம் என்றும், கருப்பு சிவப்பு கொடி கொண்டு வந்தால் அதைத் தடுத்து நிறுத்துவோம் என்றும், மேலும் பச்சை இரத்தம் பரிமாறிக்கொள்வோம் என்றும் பத்திரிகையில் அறிக்கை விட்டுக் கூட்டத்தின் வாயிலாகவும் பேசி இருக்கிறார்கள். தவிர எங்கள் பேரணிக்கு வந்த லாரிகள், வேன்கள், கார்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதனால் தான் சொன்னேன். இந்தப் பிரச்சினையை மட்டும் பேசவேண்டும் என்று. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் உங்கள் பேரணிக்கு வந்த லாரிகள், பஸ்கள், தாக்கப்பட்டன என்று எல்லாம் எடுத்துச்

சொல்வது என்றால், அதை நீங்கள் தனியாக ஒரு பிரச்சினையாகக் கொண்டுவந்து கொடுத்திருந்தால், அதற்கு நான் அனுமதி அளித்திருக்கக்கூடும். (குறுக்கீடு) உங்களுடைய பேரணிக்கு வந்த வண்டி என்பது ஏதோ ஒரு இடத்திலே தாக்கப்பட்டு இருக்கக்கூடும். இது நடந்தது இராயபுரத்தில். எனவே இராயபுரத்தில் நடந்த சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

முற்பகல் 11-25

திரு. அ. செல்வராசன்: அங்கு எப்படி நடந்தது என்று இந்த அவைக்கு நான் தெரிவித்தாக வேண்டும், தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராயபுரத்தில் நடந்தது பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. அ. செல்வராசன்: இராயபுரத்தில் நடந்ததைத்தான் நான் சொல்லுகிறேன். அந்த நிகழ்ச்சிகள் மிகவும் அமைதியாக நடந்து முடிந்த பிறகு ஏழுமலையின் கொலைக்கு இந்தப் பேரணியும், எங்கள் கழகத்தின் வளர்ச்சியும்தான் காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனவே, இந்தக் கொலையை திட்டமிட்டு நடத்தியவர்கள், எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும், தமிழகத்தின் திறமை மிக்க காவல் துறையினர் உண்மைக் கொலையாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்ற அதேநேரத்தில், இந்த அரசியல் வன்முறைகளை நிச்சயம் நமது முதல்வர் அவர்கள் ஒடுக்குவார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பேரவைத் தலைவர் அவர்களே. நான் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறேன். இந்தக் கொலைக்குப் பின்னாலே, என்னையேகூட தொலைபேசியிலும், செல்கின்ற நேரத்தில் எல்லாம் மிரட்டுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நமது அரசும், காவல் துறையும் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-ஆம் தேதி இரவு வடசென்னை இராயபுரத்தைச் சேர்ந்த ஏழுமலை அவர்களுடைய படுகொலை குறித்து அந்த இயக்கத்தைச் சார்ந்திருக்கிற

மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் செல்வராசன் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக, அரசியலில் எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய கட்சியை நிலைநாட்டுகின்ற வகையில், ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் செயல்படுகிற நேரத்தில் இதுபோன்ற ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சி மூலமாக, அதிலும் ஜனநெருக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதியில் ஒரு கும்பலாக வந்து, ஏழுமலை என்பவர் கோரமான முறையிலே இன்றைக்கு படு கொலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அந்த நிகழ்ச்சிகளை படிக்கிறபோதுகூட ரொம்ப வேதனையாக இருக்கிறது. வெட்டி கொலை மட்டும் பண்ணவில்லை. அவருடைய கண்கள் தோண்டப்பட்டிருக்கின்றன. கால்கள் கண்டம் கண்டமாக வெட்டப்பட்டிருக்கிறது. கைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. வயிறு கீறி கீறி போடப்பட்டிருக்கிறது. அப்படி கோரமான நிகழ்ச்சிகள், ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு, அநேகமாக மனிதர்கள் நடமாட்டமே இல்லாத இடத்திலே நடக்கிற சம்பவங்கள் போன்று நடந்திருக்கிற வேதனையான நிகழ்ச்சிகள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடக்கத் தொடங்கினால் உண்மையிலே அரசியல் தலைவர்கள் நடமாட முடியாத சூழ்நிலைகள் ஏற்படும். ஆகையினால், இதுபோன்று வன்முறை சக்திளின் மீது உரிய நடவடிக்கை எடுத்து, யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் இரவு சுமார் 10½ மணி அளவில் இராயபுரம் செமிட்ரி சாலையில் திரு. ஏழுமலை அவர்களை 30 பேர் கொண்ட கும்பல் ஒன்று வழி மறித்து அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களால் சொல்வதற்கே நெஞ்சம் நடுங்கும் வகையிலே படுகோரமான முறையிலே கொலை செய்திருக்கிறார்கள். அதாவது இந்தக் கொலையைப் பார்க்கின்றபோது, கொலையையே தொழிலாக கொண்டவர்கள் செய்திருப்பது போல் தெரிகிறது. எனக்கு முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், அவருடைய கண்களை தோண்டியும், கால்களை முறித்தும், சொல்லவே நெஞ்சம் நடுங்குகின்ற வகையிலே அந்தக் கோரமான கொலையை செய்திருக்கிறார்கள். அதாவது அவர் வருகின்ற வழியிலே ஒரு வேன் வந்ததாகவும், அதிலே ஒருவர் இறங்கி நீங்கள் அந்தப் பேரணியை சிறப்பாக நடத்தி காட்டி

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 20] [திரு. இளம்வழுதி]

விட்டீர்கள் என்று மகிழ்ச்சியாக அவருக்குத் துண்டுகளை அணிவித்த தாகவும், அதிலே ஒருவன் துண்டு போட்டு இறுக்கியதாகவும், அதன் பிறகு சம்பவம் நடந்ததாகவும், பத்திரிக்கைகளிலே செய்தி வெளியாகி இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, அவருக்குத் துண்டு அணிவிக்கின்றபோது, அவர் துண்டை ஏற்றுக்கொள்கிறார் என்றால் அவர்கள் அவருக்குத் தெரிந்தவர்களாகத் தான் இருக்க முடியும். அவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களாகத் தான் இருக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அவர் அவருடைய கருத்தைச் சொல்லுகிறார். உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிகழ்ச்சி இப்படி இருக்க, காவல் துறையினர் சில * * கைது செய்து இன்று சிறையிலே அடைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) வெளியிலே இருக்கின்ற சில திடீர் தலைவர்கள் எங்கள் கட்சிக்காரர்களைச் சம்பந்தப்படுத்தி அறிக்கைகள் வெளியிட்டிருக்கி றார்கள். உச்சி வெய்யில் சூரியனை சில நேரங்களில் மேகங்கள் மறைப்பது உண்டு. அதைப்போல சிலரது உள்ளங்களையும், கண்களையும் இப்போது துரோகம் மறைத்திருக்கிறது. அதைத் தவிர நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, செல்வராஜ் அவர்கள் இது என்ன பின்னணியிலே நடைபெற்று இருக்கும் என்று சில சம்பவங்களைச் சொல்ல வந்ததைக்கூட நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் இதற்குச் சம்பந்தமே இல்லாத பிரச்சினைகளுக்குப் போவது சரியில்லை. இந்தக் கொலை பற்றி நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது, இந்தக் கொலையை நியாயப்படுத்துகிற மாதிரி ஆகிவிடும். (குறுக்கீடு) இது முறையல்ல. இதிலே வேண்டாம். (குறுக்கீடு) * * எல்லாம் இதிலே சம்பந்தம் இல்லாதது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. * * (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏழுமலை கொலை செய்யப்பட்டதை நியாயப்படுத்துவதுபோல நீங்கள் பேசுவது அமையக் கூடாது. நீங்கள் அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இப்போது திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்ததுபோல நீங்களும் தெரிவிக்கலாம் (குறுக்கீடு) உட்காருங்கள் ** பற்றிச் சொன்னது அவைக்குறிப்பிலே இருக்காது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலை செய்யப்பட்ட ஏழுமலை அவர்கள் இன்றைக்குக் கருத்து மாறுபாடு காரணமாக வேறு அணிக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவர் எங்களோடு இருந்தபோது, அவர் பணியாற்றிய விதத்தை நாங்கள் மறந்துவிடுவதற்கில்லை.. * * (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். ஏழுமலை கொலை செய்யப்பட்டது சம்பந்தப்பட்டதை மட்டும் சொல்லலாம். தவிர உங்களுடைய கட்சிப் பிரச்சினைகள், மற்றபடி ** மக்களைப் பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லுவது கொலையை நியாயப்படுத்துவது மாதிரி அமைந்துவிடும். அது எல்லாம் வேண்டாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது விசாரணைக்குள் இருக்கிற சில பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் காவல் துறை இந்த நிகழ்ச்சி நடந்த உடனேயே உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கிறபோது இவர் பேசுகிறபோது, அவருக்கு வேண்டிய நண்பர்கள் கழுத்திலே துண்டைப்போட்டு இருக்கியதாகவும், அவருக்கு வேண்டியவர்களாக இருப்பவர்கள் என்றும் தவறான தகவல்களை, என்ன நடை பெற்றுக்கொண்டிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், பத்திரிக்கை செய்தியை வைத்துக்கொண்டு சட்ட மன்றத்திலே பேசக்கூடாது. பத்திரிக்கையில் எது வேண்டுமானாலும் வரலாம். விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது கற்பனையான, தேவையற்ற முறையில் திசை திருப்பும் வகையிலே இப்படித் தவறான தகவல்களைப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் பேசி முடியுங்கள்.

திரு. இளம்வழுதி: விசாரணை நல்லமுறையில் நடைபெற்று, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சொல்லிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். திரு. திருநாவுக்கரசு. (குறுக்கீடு) போதும், விசாரணை நல்ல முறையில் நடந்து, உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் . இது தான் உங்களுடைய கோரிக்கை. அது இருக்கலாம். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது ** கைது செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ** என்பது வழக்கு விசாரணை முடியும்போதுதான் தெரியும். அதுவரையில் தெரியாது. வழக்கு விசாரணையில் இருப்பதால், அது அவைக் குறிப்பிலே இடம் பெறாமல், எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது..

முற்பகல் 11.35

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லவந்தது, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு வேண்டுமானால் அரசியல் கண்ணோட்டம் இருக்கலாம். ஆனால் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் பாரபட்சமற்ற முறையிலே, பொதுவான முறையிலே இந்த வழக்கிலே.. (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையைப் பற்றி நான் இறுதியில் - மற்ற உறுப்பினர்களும் பேசி முடித்தபிறகு என்னுடைய பதிலை அளிக்க இருக்கிறேன். ஆனால் இப்பொழுது பேசிய சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி காவல்துறையினர் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறார். காவல்துறையினர் பாரபட்சத்தோடு செயல்பட்டதாக இவர் கூறுகிறார். இதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை நான் அனைவருக்கும் இந்த அவையின் மூலமாக - பொது மக்களுக்கே கூட தெரிவிக்க விரும்புகிறேன். தெளிவுபடுத்த விரும்புகிறேன். வை.கோபால்சாமி அவர்களின்

தலைமையில் உள்ள ஒரு கட்சி, ஒரு பேரணியை சென்னையில் நடத்தவேண்டுமென்று திட்டமிட்டு, அதற்குக் காவல்துறையினரிடம் அனுமதி கோரினார்கள். அந்த அனுமதி வழங்கப்பட்டது. இந்தப் பேரணி நடத்துவதற்கே வேறு சிலர் அரசியல் காரணங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அது மட்டுமல்ல. அவர்களுடைய கட்சி அலுவலகமே கூட அன்றையதினம் முற்றுகையிடப்படலாம். அதற்காகக்கூட திட்டமிடுகிறார்களோ என்றெல்லாம் அடுத்த தரப்பில் உள்ளவர்கள் அஞ்சினார்கள். அவர்களும், அவர்களுடைய தலைவர் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களும் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதி, தங்களுடைய அண்ணா அறிவாலையம் என்ற கட்சி அலுவலகத்திற்குப் பலத்த பாதுகாப்பு போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது, டி.ஜி.பி. அவர்களிடம் நானே நேரில் பேசி, சென்னை கமிஷனர் ஆப் போலிஸ் அவர்களிடமும் நானே நேரில் பேசி, இந்த விஷயத்தில் காவல்துறையினர் எந்தவிதமான பாரபட்சமுமின்றி நடந்து கொள்ள வேண்டுமென்று தெளிவாக அவர்களுக்கு உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நான் சொன்னது இதைத்தான். அண்ணா அறிவாலயத்திற்கும் பலத்த பாதுகாப்புப் போடப்பட வேண்டும். ஒரு சின்ன துரும்பு கூட அந்தக் கட்சி அலுவலகம் மீது விழுந்துவிடக்கூடாது. அதை அனுமதிக்கக்கூடாது, அதே சமயம் இந்தப் பேரணியை அமைதியாக நடத்த விடாமல் டி.எம்.கே.1 தரப்பிலிருந்து இந்தப் பேரணியில் வன்முறைச் சம்பவங்களைத் தூண்டிவிடவும், அங்கே ரத்தக்களறியை ஏற்படுத்தவும் அவர்கள் முயற்சி செய்தார்களானால் அதையும் அனுமதிக்கக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் பலத்த பாதுகாப்பை, மிகவும் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகளை அந்தப் பேரணிக்கும் அளிக்க வேண்டும். அந்தப் பேரணியில் ஒரு சின்ன சம்பவம் கூட நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் கட்டளையிட்டதன் பேரில், மிகவும் பெரிய காவல் படை, 15,000 காவலர்கள் இங்கே வெளிமாவட்டங்களில் இருந்து கூட இறக்குமதி செய்யப்பட்டு, இங்கே வரவழைக்கப்பட்டு, அந்த அளவுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை சென்னை நகரமே கண்டிராத அளவில் நாங்கள் செய்தோம்.

ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசின் நோக்கம், தி.மு.க.-1 என்றால் அவர்களுக்கும் எந்தப் பாதகமும் ஏற்படக்கூடாது. தி.மு.க.-2 என்றால் அவர்களும் அமைதியாகப் பேரணியை நடத்திச் செல்லவேண்டும், இரண்டிலும் எந்தவிதமான அசம்பாவிதமும்

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏற்படாமல் காப்பதுதான் இந்த அரசின் கடமை என்று கருதி, நாங்கள் இதைச் செய்திருக்கிறோம். இன்று மாண்புமிகு உறுப்பினர் செல்வராசன் அவர்கள் பேசிகின்றபோது, மிகப் பெரிய பேரணி அமைதியான முறையில் நடைபெற்றது என்று சொன்னார். அது அமைதியாக நடைபெற்றது என்று சொன்னால், அந்த முழுப் பெருமையும் இந்த அரசைத்தான் சாரும். எங்களுடைய காவல்துறையைத்தான் சாரும் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவே, உறுப்பினர் பரிதி இளம்வழுதி போன்றவர்கள் காவல்துறையினர் பாரபட்சத்தோடு நடந்து கொண்டார்கள் என்பன போன்ற பொறுப்பு இல்லாத கூற்றுக்களை இந்த அவையில் சொல்லக்கூடாது, பேசக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் *11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி பேசியது போதும். நீங்கள் இதிலே நியாயமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டீர்கள். அதோடு போதும். (குறுக்கீடு) இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) மேற்கொண்டு விவாதம் வளரும். அது சரியல்ல. முதலிலேயே நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி: போலீசை நான் குறை சொல்லிப் பேசவில்லை. அவர்களுடைய நோக்கிலே பொதுவான கண்ணோட்டம் இருக்க வேண்டும் என்று சொன்னேன். இந்தக் கொலை நடந்த உடனே போலீசாருக்கு தகவல் கிடைத்து இருக்கிறது. போலீஸ் அந்த காவல் நிலையத்திலிருந்து சுற்றி, மாவட்டம் முழுவதும் உள்ள மற்ற காவல் நிலையங்களையும் உஷார்படுத்தி இருந்தால்—இது சென்னை மாநகரத்திலே நடைபெற்று இருக்கிறது. அவர்கள் முயற்சித்து இருந்தால் அந்த உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இருக்கலாம்.** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே அதைத்தான் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கினேன். நீங்கள், வேண்டுமானால் அரசாங்கத்தைச் சொல்லலாம். அந்த 20 பேர் கொண்ட வேனை பிடித்து இருக்கலாம் என்று கேட்பது வேண்டுமானால் இருக்கலாம். ** என்பது எல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) போதும். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. அந்த ** என்பது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) பரிதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவர்] [1994 ஏப்ரல் 20

வேண்டாம், வேண்டாம்; இது வளரும், திரு. திருநாவுக்கரசு. *(குறுக்கீடுகள்)*

திரு. இளம்வழுதி: ஒரே ஒரு லைன் நேர்மையான முறையிலே நடவடிக்கை எடுத்தோம் என்று குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். ** *(குறுக்கீடுகள்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அல்ல, அல்ல பரிதி இது வேறு பிரச்சினை. *(குறுக்கீடுகள்)* இதெல்லாம் அவைக்குறிப்பிலே இருக்காது. திரு. திருநாவுக்கரசு பேசட்டும். அவரை அழைத்து விட்டேன். திரு. திருநாவுக்கரசு. *(குறுக்கீடுகள்)* இது அவைக் குறிப்பிலே இருக்காது. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரபட்சத்தை பற்றிப் பேசுவதற்கு பரிதி இளம்வழுதிக்கு முக்கியமாக உரிமை இல்லை என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால், அவர் சார்ந்து இருக்கின்ற கட்சி, ஆட்சியில் இருந்தபோது அவருடைய தலைவர் அன்றைய முதல்வர் எங்களுக்கு அரசியல் ரீதியாக எதிர்ப்புத் தெரிவித்தவர்களை எல்லாம் ஏவி விட்டு எங்கள் கட்சி அலுவலகத்தில் அன்றைக்கு உள்ளே இருந்த நிர்வாகிகளை எல்லாம் அடித்து உதைத்து வெளியே தள்ளி சிறையில் அடைத்து கட்சி அலுவலகத்திற்கே சீல் வைத்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி).* மீண்டும் நாங்கள் பல நாட்கள் கழித்து நீதிமன்றத்திற்குச் சென்று, பிறகுதான் எங்கள் கட்சி அலுவலகத்துக்குள்ளேயே நாங்கள் செல்ல முடிந்தது. அப்படி எல்லாம் சின்ன புத்தியோடு நான் நடந்துகொள்ள விரும்பினால், *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* இன்றையதினம் அண்ணா அறிவாலயமே நிற்காது; *(மேசையைத் தட்டும் ஒலி)* இருக்காது *(மேசையைத் தட்டும் ஒலி)* வை. கோபால்சாமி தலைமையில் நடைபெற்ற பேரணியை ஒரு காரணமாகப் பயன்படுத்தி நாங்களும் அன்றைக்கு அண்ணா அறிவாலயத்தைத் தவிடுபொடி ஆக்கி இருக்க முடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், அப்படி எல்லாம் நாங்கள் செய்யவில்லை. அவர்களுக்கு அரசியல் ரீதியாக எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், அவர்களை எதிர்ப்பவர்கள்கூட அப்படிச் செய்துவிடக்கூடாது என்று, நாங்கள் அவர்களுக்கு எவ்வளவு பலத்த பாதுகாப்பைப் போட்டு, அவர்களுடைய அறிவாலயத்தை அவர்களுக்குக் காப்பாற்றிக் கொடுத்து இருக்கிறோம் என்று அவர்கள் நன்றியோடு இருக்க வேண்டும்.

திரு. இளம்வழுதி: தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே, வேண்டாம். நீங்கள் கொடுத்தது ஏழுமலைப் பிரச்சினைதான். *(குறுக்கீடுகள்)* ஏழுமலைப் பிரச்சினைதான். திரு. பரிதி உட்கார வேண்டும். *(குறுக்கீடுகள்)* இது ஏழுமலை பிரச்சினைதான். ஏழுமலை பிரச்சினையை விட்டு விட்டு நீங்கள் போவதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் ஏழுமலை பிரச்சினையை விட்டு விட்டு வேறு எங்கெங்கோ போவதினால்தான் இதெல்லாம் வருகிறது. இதை அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசிவிட்டீர்கள்.*(குறுக்கீடுகள்)* பதிலுரைதான் இனி பார்க்க வேண்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. பரிதி உட்காரவேண்டும். இல்லை என்றால், நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். *(குறுக்கீடுகள்)* நான் சொல்லிவிட்டேன். உட்காரவேண்டும். இல்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். *(குறுக்கீடுகள்)* திரு. திருநாவுக்கரசு. *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். வி. சண்முகம்.: பாயின்ட் ஆஃப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவர் பேசிவிடட்டும்.. *(குறுக்கீடு)* உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் பொதுவாழ்வில் ஈடுபட்டு இருந்த திரு. ஏழுமலை என்பவர் மிகக் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு இருப்பது வருந்துவதற்கும், கண்டனத்திற்கும் உரியதாகும். இதில் சம்பந்தப்பட்டு இருக்கிற உண்மையான குற்றவாளிகள் அனைவரையும் கண்டு ஆராய்ந்து, இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறாவண்ணம் தக்க நடவடிக்கைகளைக் கடுமையாக எடுக்க வேண்டும் எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வை. கோபால்சாமி தலைமையில் அமைந்த தி.மு.க. இரண்டாவது பிரிவின் சென்னை மாவட்ட பொறுப்பாளர் திரு. ஏழுமலை என்பவர் இராயபுரம் ஆதம் சாகிப் தெருவில் வசித்து வந்துள்ளார். 1975 ஆம் ஆண்டு இவர் மீது இராயபுரம் காவல் நிலையம் ஒரு போக்கிரி ஏட்டை தயாரித்து கண்காணித்து வந்துள்ளது. அதாவது அவர் ஒரு History sheeted

rowdy ஆவார். ஒரு கொலை வழக்கிலும், இரத்தக் காயங்கள் ஏற்படுத்திய நான்கு வழக்குகளிலும், இரண்டு மது வழக்குகளிலும் திரு. ஏழுமலை சம்பந்தப்பட்டு இருந்தார். 16.4.1994 அன்று தி.மு.க. இரண்டாவது பிரிவு சென்னையில் பேரணியை நடத்தியபோது முக்கியப் பொறுப்பாளராக திரு. ஏழுமலை இருந்து உள்ளதாகத் தெரிகிறது.

முற்பகல் 11.45

17-4-1994 அன்று இரவு தி.மு.க.-1 பிரிவை சேர்ந்த முன்னாள் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மதிவாணன் என்பவர் தலைமையில் சிலர் இராயபுரம் பகுதியில் சுவர்களிலும் தட்டி பேனர்களிலும் திரு. ஏழுமலை எழுதி வைத்திருந்த விளம்பரங்களை தார் மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி அழித்துள்ளனர். இது குறித்து திரு. ஏழுமலை 18-4-1994 காலை தி.மு.க.-1. இளைஞர் அணிச் செயலாளர் திரு. மு.க. ஸ்டாலினையும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதிவாணனையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடுமையாகப் பேசியுள்ளதாகத் தெரிகிறது. அன்று இரவு 11.00 மணியளவில் திரு. ஏழுமலை சிமெட்ரி ரோடிலுள்ள கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் கடை முன்பு சில நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். அப்போது தி.மு.க.1 பிரிவின் இராயபுரம் பகுதிச் செயலாளர் திரு. கி. கோ. இராதாகிருஷ்ணன், இளைஞர் அணிச் செயலாளர் திரு. சேகர், 16-வது வட்டச் செயலாளர் திரு. மா. தாஸ் மற்றும் வேறு சிலர் பயங்கர ஆயுதங்களுடன் திரு. ஏழுமலையைத் தாக்க வந்துள்ளார்கள். தன்னைத் தாக்க அவர்கள் வருவதைக் கண்டதும், திரு. ஏழுமலை ஓட முயற்சித்துள்ளார். ஆனால் அந்த வன்முறைக் கும்பல், திரு. ஏழுமலையைப் பார்த்து, 'நீ மதிவாணனை மிரட்டினாயா' என்று கூறிக் கொண்டே, தங்கள் கையில் வைத்திருந்த பயங்கர ஆயுதங்களால் அவரை வெட்டியுள்ளது. ஏழுமலையின் டிரைவர் கென்னடியும், அவருடன் இருந்த கந்தசாமி, சுகநேசன் ஆகியோர், 'வெட்டாதீர்கள் அவரை வெட்டாதீர்கள்' என்று குரல் கொடுத்துள்ளார்கள். அனைவரும் சேர்ந்து பயங்கர ஆயுதங்களால் வெட்டியதால் திரு. ஏழுமலை அதே இடத்தில் மரணமடைந்துள்ளார். சம்பவ இடத்திலிருந்து, குற்றவாளிகள், ஒரு பச்சை நிற 'மகேந்திரா' வேனில் தப்பியோடி விட்டதாகத் தெரிகிறது. தப்பியோடும்போது ஏழுமலையின் டிரைவர் கென்னடி, அவர்களைப் பிடிப்பதற்கு விரட்டிச் சென்றுள்ளார். அதில் ஒரு ஆள் கால் தடுக்கி விழ, அவன் கையில்

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இருந்த வெட்டரிவாளும் கீழே விழுந்துள்ளது. திரு. கென்னடி அந்த அரிவாளை எடுத்து, துரைசாமி என்பவர்மீது வீச தப்பிச் சென்ற ஒரு நபரின் முதுகில் விழுந்துள்ளது. கீழே விழுந்த நபரை வேனில் ஏறிய நபர்கள், சட்டையைப் பிடித்து வேனில் ஏற்றிக்கொண்டு தப்பியோடியுள்ளார்கள்.

திரு. ஏழுமலையின் கார் டிரைவர், திரு. கென்னடி என்பவர் கொடுத்த புகாரின் பேரில், காவல் துறையினர் இராயபுரம் காவல் நிலைய குற்ற எண் *745/94*-ல் இந்திய தண்டனைச் சட்டம், *147, 148,149,341,302* மற்றும் *109* ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

சம்பவம் பற்றிய விவரம் அறிந்தவுடன், வட சென்னை சட்டம்-ஒழுங்கு காவல்துறை துணை ஆணையர், தேவையான காவலர்களுடன், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுள்ளார். இந்தப் படுகொலையில் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள, முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. மதிவாணன், தி.மு.க.-*1* இராயபுரம் பகுதிச் செயலாளர் திரு. சி.கோ. இராதாகிருஷ்ணன், அதே பிரிவைச் சேர்ந்த இளைஞர் அணிச் செயலாளர் திரு. சேகர், *16*-வது வட்டச் செயலாளர் திரு. மா. தாஸ் ஆகியோரை, காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள். இந்த வழக்கு மேல் விசாரணைக்காக, சென்னை மாநகர மத்திய குற்றத் துறை பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகாத சம்பவத்தில் ஈடுபட்ட மற்றவர்களைக் கண்டுபிடிப்பதற்காகவும், தீவிர விசாரணை மேற்கொள்வதற்காகவும், ஒரு தனி காவல் குழு (Special Police Team) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

19-4-1994 அன்று ஏழுமலையின் உடல், பிரேத பரிசோதனைக்குப் பின்பு, அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது உடல் மூலகொத்தளம் சுடுகாட்டிற்கு ஊர்வலமாக எடுத்துக் கொண்டு செல்லப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது. இந்த இறுதி ஊர்வலத்தில் எந்த அசம்பாவிதமும் ஏற்படாமல் தடுக்க, தகுந்த போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது.

இராயபுரம் பகுதியில் பதட்ட நிலை ஏற்படாமல் தடுப்பதற்காக, காவல் துறையினர். தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை யெடுத்து, பொது மக்களின் பாதுகாப்புக்காக, நிறைய காவலர்களை நிறுத்தி வைத்துள்ளனர். அந்தப் பகுதியில், தற்போது எந்தப் பதட்டமும்

இல்லை என்பதையும், இந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டுள்ள முக்கியமானவர்களை, காவல் துறையினர் ஏற்கனவே கைது செய்து, தகுந்த மேல் நடவடிக்கையெடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு: திரு. டி. வேலையா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. வேலையா. (குறுக்கீடு) இல்லை. பரிதி நான் சொல்லிவிட்டேன். இந்தப் பிரச்சினைகளில் எப்போதும் பதிலுரைக்குப் பிறகு கேட்க அனுமதிப்பது இல்லை. நீங்கள் ஒவ்வொரு முறையும் இதுமாதிரி பிரச்சினையை எடுத்துக் கொள்கிறபோது, பதில், உரைக்குப் பின்னர், விளக்கம் கேட்க முற்படுவது தவறு. (குறுக்கீடு)

முற்பகல் 11.50

திரு. இளம்வழுதி: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை - பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராகிய உங்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் ஒரு வேண்டுகோள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். பிரதான எதிர் கட்சித் தலைவர் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து, பணியாற்றும் விதத்திலே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குக் கொடுத்த தண்டனையை ரத்து செய்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையிலேயே சொன்னீர்கள். நான் உங்களுக்கு அங்கேயே சொன்னேன். நேற்றையதினம் இதே பிரச்சினையை திரு. அப்பு நடேசன் அவர்கள்

இல்லை என்பதையும், இந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டுள்ள முக்கியமானவர்களை, காவல் துறையினர் ஏற்கனவே கைது செய்து,, தகுந்த மேல் நடவடிக்கையெடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு: திரு. டி. வேலையா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. வேலையா. (குறுக்கீடு) இல்லை. பரிதி நான் சொல்லிவிட்டேன். இந்தப் பிரச்சினைகளில் எப்போதும் பதிலுரைக்குப் பிறகு கேட்க அனுமதிப்பது இல்லை. நீங்கள் ஒவ்வொரு முறையும் இதுமாதிரி பிரச்சினையை எடுத்துக் கொள்கிறபோது, பதில், உரைக்குப் பின்னர், விளக்கம் கேட்க முற்படுவது தவறு. (குறுக்கீடு)

முற்பகல் *11.50*

திரு. இளம்வழுதி: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை - பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராகிய உங்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் ஒரு வேண்டுகோள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். பிரதான எதிர் கட்சித் தலைவர் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து, பணியாற்றும் விதத்திலே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குக் கொடுத்த தண்டனையை ரத்து செய்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையிலேயே சொன்னீர்கள். நான் உங்களுக்கு அங்கேயே சொன்னேன். நேற்றையதினம் இதே பிரச்சினையை திரு. அப்பு நடேசன் அவர்கள்

இங்கே எழுப்பியபோது, நான் பதில் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரோ, அவரைச் சார்ந்த மற்ற உறுப்பினர்களோ, இங்கே வந்து பணியாற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லை. இப்போது கூட அவர்கள் வரலாம். எனவே, அதிலே எந்தத் தடையும் இல்லை. இங்கே வந்து அவர்கள் என்ன பிரச்சினை இருக்கிறதோ, அந்த பிரச்சினையைக் கிளப்பலாம். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டியதெல்லாம் அவசியம் இல்லை என்று நேற்றே நான் சொல்லியிருக்கிறேன். அதை உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு). இல்லை. நான் நேற்றே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் முறை தவறி நடந்து கொண்ட காரணத்தால், அந்தத் தண்டனைக்கு உரியவர்தான். அந்தத் தண்டனை இருந்தால்தான், மற்ற உறுப்பினர்களும் இதைப்போன்ற தவறு செய்வதைத் தவிர்ப்பார்கள். ஒன்றுக்கு இரண்டு முறை, முறைகேடாக நடந்து கொண்டால், இப்படிப் பேரவைத் தொடக்கக் கூட்டம் முழுவதும், நாம் கூட்ட நிகழ்ச்சிகளிலே இருந்து தள்ளிவைக்கப் படுவோம் என்கிற எச்சரிக்கை மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தத் தண்டனை இருக்க வேண்டும் (குறுக்கீடு) திரு. டி. வேலையா.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி தொகுதி ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை வரையிலும், ஹைகிரவுண்ட் முதல் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதை மீண்டும் (குறுக்கீடு) இயக்குவது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் (குறுக்கீடு) கொண்டு வருகிறேன்.

***3.* எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை— பேரவை தலைவரின் தீர்ப்பு.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு நீங்கள் கேட்டீர்கள். நான் அதற்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு). இன்னொரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார்.(குறுக்கீடு) இதிலே வேண்டாம். திருநாவுக்கரசு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன்.(குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) திருநெல்வேலி தொகுதியில் ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்றுவந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

அறிக்கை

(அ) தடம் எண் 46 நகர பேருந்து வாயிலாக நாரயண அம்மாள் புரத்திற்கு தினசரி 6 சுற்றுக்கள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்-நாரயண அம்மாள்புரம் என இயக்கப்பட்டு வந்தது. இந்தச் சுற்றுகள் அனைத்திலுமே பயணிகள் விகிதாச்சாரம் போதிய அளவு இல்லாமல் இருந்ததால் வருமானம் இத்தடத்தில் மிகவும் குறைந்து காணப்பட்டதாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இப்பேருந்து 1991-ஆம் வருடம் நிறுத்தப்பட்டது.

இருப்பினும் மாற்று ஏற்பாடாக தடம் எண் 29 ஏ நகரப் பேருந்து வாயிலாக நாரணம்மாள்புரத்திற்கு திருநெல்வேலி ஜங்ஷன்-நாரணம்மாள்புரம் எனக் கூடுதலாக 4 சுற்றுகள் இயக்கப்பட்டு

இங்கே எழுப்பியபோது, நான் பதில் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரோ, அவரைச் சார்ந்த மற்ற உறுப்பினர்களோ, இங்கே வந்து பணியாற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லை. இப்போது கூட அவர்கள் வரலாம். எனவே, அதிலே எந்தத் தடையும் இல்லை. இங்கே வந்து அவர்கள் என்ன பிரச்சினை இருக்கிறதோ, அந்த பிரச்சினையைக் கிளப்பலாம். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டியதெல்லாம் அவசியம் இல்லை என்று நேற்றே நான் சொல்லியிருக்கிறேன். அதை உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு). இல்லை. நான் நேற்றே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் முறை தவறி நடந்து கொண்ட காரணத்தால், அந்தத் தண்டனைக்கு உரியவர்தான். அந்தத் தண்டனை இருந்தால்தான், மற்ற உறுப்பினர்களும் இதைப்போன்ற தவறு செய்வதைத் தவிர்ப்பார்கள். ஒன்றுக்கு இரண்டு முறை, முறைகேடாக நடந்து கொண்டால், இப்படிப் பேரவைத் தொடக்கக் கூட்டம் முழுவதும், நாம் கூட்ட நிகழ்ச்சிகளிலே இருந்து தள்ளிவைக்கப் படுவோம் என்கிற எச்சரிக்கை மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தத் தண்டனை இருக்க வேண்டும் (குறுக்கீடு) திரு. டி. வேலையா.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி தொகுதி ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை வரையிலும், ஹைகிரவுண்ட் முதல் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதை மீண்டும் (குறுக்கீடு) இயக்குவது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் (குறுக்கீடு) கொண்டு வருகிறேன்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை- பேரவை தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு நீங்கள் கேட்டீர்கள். நான் அதற்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு). இன்னொரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார்.(குறுக்கீடு) இதிலே வேண்டாம். திருநாவுக்கரசு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன்.(குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

4. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(அ) திருநெல்வேலி தொகுதியில் ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்றுவந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

அறிக்கை

(அ) தடம் எண் 46 நகர பேருந்து வாயிலாக நாரயண அம்மாள் புரத்திற்கு தினசரி 6 சுற்றுக்கள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்-நாரயண அம்மாள்புரம் என இயக்கப்பட்டு வந்தது. இந்தச் சுற்றுகள் அனைத்திலுமே பயணிகள் விகிதாச்சாரம் போதிய அளவு இல்லாமல் இருந்ததால் வருமானம் இத்தடத்தில் மிகவும் குறைந்து காணப்பட்டதாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இப்பேருந்து 1991-ஆம் வருடம் நிறுத்தப்பட்டது.

இருப்பினும் மாற்று ஏற்பாடாக தடம் எண் 29 ஏ நகரப் பேருந்து வாயிலாக நாரணம்மாள்புரத்திற்கு திருநெல்வேலி ஜங்ஷன்- நாரணம்மாள்புரம் எனக் கூடுதலாக 4 சுற்றுகள் இயக்கப்பட்டு

வருகின்றன. தற்போது, கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக நகரப்பேருந்து மூலம் 16 சுற்றுகளும், தனியார் பேருந்து மூலம் 16 சுற்றுகளும் ஆக 32 சுற்றுகள் இவ்வூருக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) வல்லவன் கோட்டை கிராமம் வழியாக தடம் எண் 46 மூலமாக தினசரி 4 சுற்றுகள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்- ஜங்ஷன் - துலுக்கர்பட்டி என இயக்கப்பட்டு வந்தது. எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவும் குறைந்த வருவாய் ஈட்டியதின் காரணமாகவும் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. பின்பு, மேற்படி இழப்பு சுற்றுகளை ஈடுசெய்யும்பொருட்டு தடம் எண் 23 ஏ மற்றும் 3 எப் ஆகியவற்றில் தலா இரண்டு சுற்றுகள் ஜங்ஷன் - சுப்பிரமணியபுரம், ஜங்ஷன் - வல்லவன் கோட்டை என கூடுதலாக தற்போது இயக்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்வூருக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மூலம் 16 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஜங்ஷனிலிருந்து ஹைகிரவுண்ட் செல்ல ஏராளமான பேருந்து வசதி உள்ளது.

எனவே தடம் எண் 46 நகரப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய ஆட்சியில் டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தியிருந்த அனைத்துப் பேருந்துகளையும் நாம் மீண்டும் இயக்கி இருக்கிறோம். நான் இங்கே குறிப்பிட்டிருக்கிற அந்தக் குறிப்பிட்ட தடம் எண் 46 என்ற பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தியதை மீண்டும் இயக்கவில்லை. அதற்காக பல்வேறு மாற்று ஏற்பாடுகள் செய்து இருப்பதாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருந்தாலும், எத்தனை முறை சென்று வந்ததோ, அத்தனை முறை இப்போது சென்று வரவில்லை. மேலும் எல்லா வண்டிகளையும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. டி. வேலையா: இயக்கிய பிறகு, இந்தப் பேருந்தை மட்டும் இயக்காமல் இருப்பதால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள், தங்களுடைய உரிமை பறிக்கப்பட்டதாகக் கருதுகிறார்கள். ஆகவே, அந்தத் தடத்தை மீண்டும் இயக்கவும், அல்லது குறைந்தபட்சம் வல்லபன்கோட்டை வரை, மாலையில் கூடுதலாக ஒரு சுற்று இயக்குவதற்கும், ஏற்பாடு செய்ய முடியுமா என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான வாகனங்கள்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1994 ஏப்ரல் 20

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தன. அதிலே இதுவும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இயக்கப்பட்ட பேருந்துக்குப் பதிலாக தடம். எண் 29-ஏ, போன்ற பேருந்துகள் 16 சுற்றுகள் இன்று இயக்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகள் 16 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே 32 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிற காரணத்தாலே, இந்தப் பேருந்தை இயக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடாக செய்திருப்பதில் 4 சுற்றுகள் குறைகின்றன. ஆகவே, மாலையில் மட்டும் ஒரு சுற்று வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, இந்தப் பேருந்தைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சிகளும், பொதுச் சங்கங்கள் என்ற பெயரிலே உள்ள பல்வேறு சங்கங்களும், இதைப் பெரிய பிரச்சினையாக ஆக்குகிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இந்தப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், ரன்னிங் ஷெட்யூல் கொடுத்து, அதிலே ஏதாவது மாற்றம் செய்கிறபோது, எங்களைக் கலந்து ஆலோசித்தால் பொது மக்கள் மத்தியிலே விளக்கம் கொடுப்பதற்கு எங்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சுற்று மாலையில் கூடுதலாக பேருந்தை விடவும், ரன்னிங் ஷெட்யூலை எங்களுக்குக் கொடுத்து, அந்தந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து மாற்றம் செய்யவும், ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிறுத்தப்பட்டது நம்முடைய ஆட்சியிலே அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று எந்த மாற்றங்கள் ஏற்படுவதாக இருந்தாலும், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுடைய ஒப்புதலோடு இதை நடத்தவேண்டும் என்று அறிவுரைகளை இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வழங்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு முறை மாலை நேரத்தில் அந்தப் பேருந்தைக் கூடுதலாக இயக்கவேண்டும் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிக விரைவாக அந்தப் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

முற்பகல் 11-55

1994 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

(ஆ) கோயம்புத்தூர், கெம்பட்டி காலனி, செல்வபுரம் பகுதி வீட்டுவசதி வாரிய மாடி வீடுகள் இடிந்துவிழும் ஆபத்தைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர், கெம்பட்டி காலனி செல்வபுரம் பகுதி வீட்டுவசதி வாரிய மாடி வீடுகள் பல பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது குறித்து" விவாதிக்க மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

வின்சென்ட் ரோடு கெம்பட்டி திட்டத்தில் 352 அடுக்குமாடி குடியிருப்புகள், 1973-75 ஆம் வருடம் குடிசை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன. குறைபாடுகள் அவ்வப்போழுது சரி செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான செலவு வருட பராமரிப்பு இனத்தில் உள்ள ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்படுகிறது. 1992-93ம் ஆண்டில் மாடிப்படிகளில் உள்ள கைப்பிடிச் சுவர்கள், படிகள், மற்றும் தரையில் மேல் பூச்சு வேலை, உடைந்த ஏ.சி.குழாய்கள் மாற்றல் உட்பட சில பழுது சரிபார்க்கும் வேலைகள் செய்யப்பட்டுள்ளன. 1993-94-ல் 28 குடியிருப்புகளில் மாடிப்படி கைப்பிடிச் சுவர், மற்றும் 'பால்கனி' கைப்பிடிச் சுவர், உடைந்த குழாய்களை மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கழிவுநீர் குழாய்களைச் சுத்தம் செய்யும் பணியும் இடைவிடாது செய்யப்பட்டு வருகிறது. மற்றும் கெம்பட்டி காலனி, செல்வபுரம் ஆகிய இடங்களில் உள்ள குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளிலும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

[திரு. சே. ரகுபதி] [1994 ஏப்ரல் 20

மேலும், கோவை செல்வபுரத்தில் 1967-ம் ஆண்டு 2113 குடியிருப்புகள் குடிசை பகுதியினருக்காகக் கட்டப்பட்டன. 1969-70ல் கெம்பட்டி காலனியில் 286 குடியிருப்புகள் குடிசைப் பகுதியினருக்காகக் கட்டப்பட்டன. அவற்றில் ஏற்படும் குறைபாடுகளும், பழுதுகளும் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு, அவ்வப்போது நீக்கப்படுகின்றன. மேலும், பேரூர் வடக்கே கட்டப்பட்ட 58 தனி குறைந்த விலை வீடுகளும் ஒதுக்கீட்டுக்குப்பின் பராமரிப்புக்காக ஒதுக்கீட்டுதாரர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பேரூர் சாலைக்கு வடக்கே கட்டப்பட்ட 288 குறைந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்ககங்கள் பராமரிப்பிற்காக கோவை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. மேலும் பேரூர் சாலைக்கு தெற்கே கட்டப்பட்ட 132 அடுக்ககங்களும், ஒதுக்கீட்டுதாரர்களின் சங்கத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டு விட்டன. இவற்றின் பராமரிப்பு அந்தந்த சங்கங்களைச் சார்ந்ததாகும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரப் பகுதியில் என்னுடைய தொகுதியிலுள்ள கெம்பட்டி காலனி, செல்வபுரம், வின்சென்ட் ரோடு பகுதியிலுள்ள வீட்டுவசதி வாரிய மாடி வீடுகள் உள்ள பகுதிகளில் 1975-ல் கட்டிய அந்த வீடுகள் அதிலிருந்து இது வரை எந்த ஒரு பராமரிப்பும் இல்லாமல் கழிவுநீர் வாய்க்கால் வசதி, ரோடு வசதி, தெரு விளக்குகள் வசதி போன்ற எந்தப் பணியும் நடைபெறாமல் இருந்து வந்துள்ளது. அந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வீட்டுவசதி வாரிய அதிகாரிகளை அணுகி கேட்கின்றபோது இந்தப் பகுதி கோவை மாநகராட்சியினுடைய எல்லைக்கு உட்பட்டுள்ளது. அவர்களிடத்திலே இந்தப் பகுதியை ஒப்படைத்து விட்டோம். அவர்கள்தான் இந்தப் பணிகளைச் செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள். மாநகராட்சி அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்கின்றபோது அவர்கள், வீட்டு வசதி வாரியம் இன்னும் எங்களிடம் ஒப்படைக்கவில்லை. இந்த இடம் இன்னும் வீட்டு வசதி வாரியத்திடம் உள்ளதால், அது தனியாரிடம் உள்ளதாகக் கருதி, நாங்கள் எந்தப் பணியும் செய்யமுடியாது. வீட்டுவசதி வாரியத்திடம் எங்களிடத்தில் ஒப்படைக்கச் சொல்லுங்கள். உடனடியாக நாங்கள் அந்தப் பணிகளை அந்த மக்களுக்குச் செய்துகொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு

1994 ஏப்ரல் 20] [திரு. கே. செல்வராஜ்]

உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்தில் சொல்லி, அந்த வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகளை உள்ளாட்சித் துறையிடம் கொடுத்து, அந்த மாநகராட்சியினுடைய தனி அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தால், மாநகராட்சி அந்த வசதிகளைச் செய்து கொடுக்க உறுதி கூறுகிறது, நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973-75 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட அந்த அடுக்குமாடி வீடுகளில், முதன்முதலாக 1992-93 ஆம் ஆண்டு, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலேதான் முதல் படியாக சில பழுதுபார்க்கும் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் 1993-94-ஆம் ஆண்டுகளில் அங்கே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்பதையும் இவை அனைத்தும் அரசின் கவனத்தில் இருக்கிற காரணத்தாலே நிதி நிலைமையை அனுசரித்து, அந்தப் பராமரிப்புப் பணிகள் செய்யப்படும் என்பதையும் அதில் ஒரு பகுதி மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மற்ற பகுதிகள் எல்லாம் ஆங்காங்கே பராமரிப்பிற்காக ஒதுக்கீடுதாரர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இனிமேல் இதுபோன்ற பிரச்சினைகள் எழாதவாறு பராமரிப்புப் பணிகள் செய்ய, அரசு முழு முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-ல் கட்டிய வீடுகளில் புதுப்பிக்கின்ற பணிகளை இந்த அரசு செய்வதால் அங்கே வாழ்கின்ற அத்தனை மக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். அதே வேளையில் அந்தப் பகுதியிலே தெரு விளக்குகள், கழிவுநீர் வாய்க்கால்கள், ரோடு வசதிகள் செய்து கொடுப்பதற்கு, அந்தப் பகுதிகள் முழுவதையும் கோவை மாநகராட்சியினிடத்திலே ஒப்படைத்து விட்டால், அவர்கள் அந்தப் பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

5. தம்மை பேரவை வளாகத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் அவதூறாகப் பேசி அடிக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீனும் தம்மை வெளியிலிருக்கிற ஒரு தலைவர் சில ஆட்கள் மூலம் மிரட்டுவதாக உறுப்பினர் திருமதி லோகாம்பாளும் கொடுத்துள்ள புகார்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11-ஆம் தேதி அன்று, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் வெளிநடப்பு செய்துவிட்டு, லாபிலிருந்து கன்னா பின்னா என்று பேசிக்கொண்டிருந்தார்கள், முதலமைச்சரையும், அரசையும் பற்றி, அப்போது நான் அந்தப் பக்கமாக வெளியே போவதற்காக சென்று கொண்டிருந்தேன். உடனே பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் திண்டிவனம் பன்னீர்செல்வமும், பாலகிருஷ்ணன் அவர்களும் நேராக என்னிடம் வந்து, மூவருமாக அடிக்க வந்து ஒருவிதமான கெட்ட வார்த்தையால் என்னையும் முதலமைச்சர் அவர்களையும் பேசினார்கள். நான் அதைத் தங்களிடம் எனக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்டு, உங்களுக்கு எழுதியிருக்கிறேன். எனக்கு நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த வார்த்தையை நான் என் ஜென்மத்தில் கேட்டதே இல்லை. யாரும் அப்படி என்னைச் சொன்னதும் இல்லை. இதுதான் முதல் தட்வை. ஆகையினால் கண்டிப்பாக உங்களை நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் என்னிடத்தில் வந்து அந்தப் புகாரைச் சொன்னவுடன் பண்பாடு மிக்க யாரும் செய்யமுடியாத அல்லது பேசக் கூடாத சில காரியங்களை அந்த 2, 3 உறுப்பினர்கள் செய்தார்கள் என்றே நான் கருதி, அதன்மீது உரிய வகையிலே சில நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கருதி, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் என்கிற வகையில், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புணர்வோடு, அதிலே ஏதாவது நடவடிக்கை எடுப்பார் தன்னுடைய கட்சி உறுப்பினர்கள் மீது என்று, எதிர்கட்சி தலைவருக்கே அந்தப் புகார் மனுவை அப்படியே அனுப்பினேன். இது வரையிலேயும் அவரிடத்திலே இருந்து நான் நடவடிக்கை எடுக்கிறேன். எங்களுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துகிறேன். இப்படிப் பேசியிருந்தால் தவறு, அவர்கள் மன்னிப்பு கேட்பார்கள் என்பது போல தெரிவித்து எந்தப் பதிலும் வரவில்லை. ஆனால் அப்படி முறைகேடாக திருமதி

ஜீனத் சர்புதீன் அவர்களிடத்திலே நடந்துகொண்ட உறுப்பினர்களுக்காக வக்காலத்து வாங்கி இன்றைக்கு வெளியே போய் உண்ணாவிரதம் இருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே இதிலே உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று சொன்னால் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் தான், இவர்கள் நடந்து கொண்ட முறையைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி தலைவரையே நான் கேட்டு இப்போது ஒரு வாரம் ஆகிறது. அன்றைகே நான் அவருக்குக் கடிதம் அனுப்பினேன். இதுவரையிலேயும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே தொடர்ந்து இதை ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினை என்று கொடுக்காமல் நேரிடையாக என்னை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட காரணத்தால் இவ்வாறு செய்திருக்கிறேன். இதை ஒரு உறுப்பினருடைய உரிமையை, தன்மானத்தைப் பாதிக்கிற வகையில் அவர்கள் நடந்துகொண்ட செயலாகக் கருதி அதற்கு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. செல்வராஜ்.

நண்பகல் *12.00*

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வளாகத்திற்கு உட்பட்ட எல்லா இடமும் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள இடமாகும். இங்கே எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை எழுகிறபோது அதிலே நீதி வழங்க வேண்டியது உங்களுடைய கடமை என்ற காரணத்தால், இன்றைக்கு ஒரு பெண் உறுப்பினர் என்றும் பாராமல் தகாத வார்த்தையைப் பேசியதோடு மீண்டும் அவருக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுக்கிற விதத்தில் அவர்கள் பேசி வருகிறார்கள். நீங்கள் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி இந்தப் பிரச்சினையில் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை உரிய வகையில் உரிமைப் பிரச்சினையாக அவர்கள் என்னிடத்திலே கொடுப்பார்களேயானால் அதை நான் உரிமைப் பிரச்சினையாக எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்ததைப்போல மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் புகார்

மனுவாக இல்லாமல் உரிமைப்பிரச்சினையாக இந்த அவையிலே கொண்டு வந்தால், அதை இந்த அவை கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மட்டும் அல்ல. இன்னொரு பெண் உறுப்பினர் திருமதி லோகாம்பாள் அவர்களும் எனக்கு ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். வெளியிலே இருக்கிற ஒரு தலைவர் சில ஆட்கள் மூலம் தன்னை மிரட்டுவதாக அவரும் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அவரே கூட அவைக்கு வர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது, இந்த மிரட்டலும் அதற்குப் பின்னணியாக இருக்குமோ என்றும் கருத வேண்டியிருக்கிறது. அந்த உறுப்பினருடைய புகார் மனுவையும் உரிமைப் பிரச்சினையாகவே கூட எடுக்கத் தக்க வகையிலேதான் இருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினையோடு கூட திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் தெரிவித்து இருப்பதைப் போல உரிமைப் பிரச்சினையாகவே எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த இரண்டையும் உரிய வகையில் எனக்கு உரிமைப் பிரச்சினையாக அவர்கள் கொடுக்கிறபோது விதிமுறைகளின்படி உரிமைப் பிரச்சினையாக எடுத்து இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம்

'தமிழீழ விடுதலைப்புலி இயக்கம்' "ஒரு சட்டபுறம்பான அமைப்பு" என்ற தடையாணையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித்தீர்மானம். தமிழீழ விடுதலைப் புலி இயக்கம் ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என மேலும் 2 ஆண்டுகளுக்கு தடையாணை விதிக்க மத்திய சட்டமான, சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்தும் அரசினர் தனித்தீர்மானம். மாண்புமிகு முதல் அமைச்சர்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தீவில் செயல்பட்டு வந்த, விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள், அந்நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினை, மற்றும் படுகொலைகளைத் தொடர்ந்து, இந்திய நாட்டிற்குள் குறிப்பாக தமிழகத்திற்குள், ஊடுருவ ஆரம்பித்தனர்.

மனுவாக இல்லாமல் உரிமைப்பிரச்சினையாக இந்த அவையிலே கொண்டு வந்தால், அதை இந்த அவை கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மட்டும் அல்ல. இன்னொரு பெண் உறுப்பினர் திருமதி லோகாம்பாள் அவர்களும் எனக்கு ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். வெளியிலே இருக்கிற ஒரு தலைவர் சில ஆட்கள் மூலம் தன்னை மிரட்டுவதாக அவரும் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அவரே கூட அவைக்கு வர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது, இந்த மிரட்டலும் அதற்குப் பின்னணியாக இருக்குமோ என்றும் கருத வேண்டியிருக்கிறது. அந்த உறுப்பினருடைய புகார் மனுவையும் உரிமைப் பிரச்சினையாகவே கூட எடுக்கத் தக்க வகையிலேதான் இருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினையோடு கூட திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் தெரிவித்து இருப்பதைப் போல உரிமைப் பிரச்சினையாகவே எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த இரண்டையும் உரிய வகையில் எனக்கு உரிமைப் பிரச்சினையாக அவர்கள் கொடுக்கிறபோது விதிமுறைகளின்படி உரிமைப் பிரச்சினையாக எடுத்து இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம்

'தமிழீழ விடுதலைப்புலி இயக்கம்' "ஒரு சட்டபுறம்பான அமைப்பு" என்ற தடையாணையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித்தீர்மானம். தமிழ்ழ விடுதலைப் புலி இயக்கம் ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என மேலும் 2 ஆண்டுகளுக்கு தடையாணை விதிக்க மத்திய சட்டமான, சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்தும் அரசினர் தனித்தீர்மானம். மாண்புமிகு முதல் அமைச்சர்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தீவில் செயல்பட்டு வந்த, விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள், அந்நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினை, மற்றும் படுகொலைகளைத் தொடர்ந்து, இந்திய நாட்டிற்குள் குறிப்பாக தமிழகத்திற்குள், ஊடுருவ ஆரம்பித்தனர்.

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அக்காலக் கட்டத்தில் தமிழர்கள் என்ற இன உணர்வு காரணமாக தமிழக மக்கள் அவர்களுக்கு ஆதரவு காட்டி, ஆங்காங்கே தங்கிடவும்; தங்கள் மீது இன உணர்வு காரணமாக, ஆதரவு காட்டியவர்களிடம், பல்வேறு வகைகளில் உதவிகள் பெறவும், அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு தமிழகத்திற்குள்ளும், இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் ஊடுருவிய அவர்களுக்கு, இலங்கையில் ஏற்பட்ட இனப் பிரச்சினை தொடர்பான, கொந்தளிப்புகள் அடங்கும் வரை, ஒத்துழைப்பு நல்கிட, அன்றைய மத்திய அரசும், மாநில அரசும், கூட்டாக பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

ஆனால் இலங்கையின் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், அங்குள்ள இந்திய வம்சா வழித் தமிழர்கள், மற்றும் இலங்கைத் தமிழர்கள், ஆகிய ஒட்டு மொத்தத் தமிழ் இனத்தினரின் பாதுகாப்புக்காகவும், அன்றைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் அனுப்பப்பட்ட, இந்திய அமைதிப் படைக்கே எதிராக, விடுதலைப் புலிகள் செயல்பட ஆரம்பித்தபோது, அதுவரை ஆதரவு காட்டி வந்த இந்திய மக்கள், குறிப்பாக தமிழக மக்கள், விடுதலைப் புலிகளின் செயல்பாடுகளில், அதிருப்தி அடையத் தொடங்கினர்.

ஆதரவு காட்டிய மக்களில் பெரும் பகுதியினர், தங்களின் ஆதரவைப் பின் வாங்கத் தொடங்கினர். அத்தருணத்தில், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும், எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கக் கூடியதாகவே அமைய ஆரம்பித்தன. அமைதிக்குப் பெயர் பெற்ற தமிழகத்தில், ஆயுதக் கலாச்சாரம் என்னும் அபாயகரமான, ஆபத்தான ஒரு கலாச்சாரத்தை, தாராளமாகப் பரவச் செய்தார்கள். அந்தக் காலக் கட்டத்தில், தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் அமைந்திட்ட அரசின் ஆட்சியாளர்களும், ஏதோ உள்நோக்கத்தோடு, பெருகிய வண்ணம் இருந்த ஆயுதக் கலாச்சாரத்திற்கு, பச்சைக் கொடி காட்ட ஆரம்பித்தனர்.

அதன் விளைவு, தமிழகம் அமைதி இழந்து, அமளி பெருகி, இந்தியத் துணைக் கண்டத்தின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்குமே கூட, உலை வைக்கும் பல சம்பவங்களைச் சந்திக்க வேண்டியதிருந்தது.

மீண்டும் இந்த நாட்டின் பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தியையே, நாம் இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாக வேண்டி இருந்தது. அந்தக் காலக் கட்டத்தில் தான், அமளிக் காடாக காட்சி அளித்த தமிழகத்தில், ஆட்சிப் பொறுப்பேற்கும் வாய்ப்பைத் தமிழக மக்கள்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

நமக்கு அளித்தார்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதற் பணியாக, ஆயுதக் கலாச்சாரத்தைப் பரப்பி வந்த, அந்நிய நாட்டுப் போராளி அமைப்பினரான, விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை, உறுதியோடு ஒடுக்கிட பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டோம் தமிழக காவல் துறையினரின், கிடுக்கிப் பிடியான நடவடிக்கைகளும், தமிழகக் அரசின் இதய சுத்தியான பல உத்தரவுகளும், அவர்களின் நடமாட்டத்தை, தமிழகத்தில் உறுதியோடு கட்டுப்படுத்தின. இனி தமிழகத்தில் நடமாட முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட விடுதலைப் புலிகள், அண்டை மாநிலங்களுக்கும், தொலைவில் இருக்கும் மாநிலங்களுக்கும் ஓட்டம் பிடித்தனர்.

கடந்த ஆட்சியின்போது அமளிக் காடாககப்பட்ட தமிழகத்தை, மீண்டும் அமைதிப் பூங்காவாக்கிய, மன நிறைவைப் பெற்றோம். ஆனால் அண்டை மாநிலங்களுக்குச் சென்று, அடைக்கலம் தேடிக்கொண்ட அப்போராளிகள், அங்கிருந்து தங்கள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தாலும் கூட, ஏற்கெனவே அஞ்சியபடி தமிழகத்திற்கு மட்டுமல்லாது, இந்திய நாடு முழுவதிற்கும் எதிராக, நம் இறையாண்மைக்கே சவாலாக இருக்கக் கூடும் எனக் கருதி அந்த அமைப்பையே, இந்திய நாடு முழுவதும், தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கச் கோரி, தமிழக அரசின சார்பில், வேண்டுகோள் விடப்பட்டது. அன்றைய தினம் நமது கோரிக்கை, கடிதம் வாயிலாகத்தான் மத்திய அரசுக்கு விடப்பட்டது. நம் கோரிக்கையினை ஏற்று, 14-5-1992 முதல், இரண்டாண்டு காலத்திற்கு, விடுதலைப் புலிகள் அமைப்பை, இந்திய நாட்டில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அறிவிப்புச் செய்தனர். அது வரும் மே மாதம், 14-ஆம் தேதியோடு முடிவடைவதால், மேலும் இரண்டாண்டுகளுக்கு, அத்தடையை நீட்டிக்க வேண்டும் என, மத்திய அரசை கேட்டுக் கொள்வதற்காகவே, பேரவைத் தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தைப் பேரவையில் முன்மொழிய, அனுமதி கேட்டுள்ளோம்.

இத்தீர்மானத்தை, இப்பேரவைக்கு கொண்டு வருவதற்கு முன்னரேயே இப்பிரச்சினையில், மத்திய அரசு பிறப்பித்த தடை. உத்தரவு, வரும் 14-5-1994-உடன் முடிவடைவதால், கடந்த ஜனவரி மாதமே, அதாவது, 28-1-1994 அன்றே, தமிழக அரசின் சார்பில், மத்திய அரசுக்கு தடையை மேலும் இரண்டாண்டுகளுக்கு அறிவிக்குமாறு கோரி, கடிதம் வாயிலாக கோரிக்கை விடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் உள்துறை செயலகம் அனுப்பிய 24-2-1994 தேதியிட்ட கடிதத்தில், கேட்டிருந்த விவரங்களை,

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழக அரசு, 19-3-1994 அன்று அனுப்பி வைத்துள்ளது. அதே போல், 24-3-1994 தேதியிட்ட கடிதத்தில், மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டிருந்த விவரங்களை, 3-4-1994 அன்றும், 30-3-1994 தேதியிட்ட கடிதத்தில், கேட்கப்பட்டிருந்த விவரங்களை, 5-4-1994 அன்றும், தமிழக அரசு அனுப்பி வைத்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் அழைப்பின்பேரில், தமிழ்நாடு காவல் துறை சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் (Inspector General of Police - Tamil Nadu Special Investigation Team) திரு. பி.சி. பந்த் அவர்கள், 7-4-1994 மற்றும் 8-4-1994 ஆகிய இரு நாட்களில், உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன், ஆலோசனை நடத்தி, மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், விவாதிக்கப்படுவதற்கான குறிப்பை, Cabinet Note-ஐத் தயாரிக்கும் அளவுக்கு, தேவையான எல்லா விவரங்களையும், மத்திய அதிகாரிகளிடம், நேரில் வழங்கி விட்டு வந்துள்ளார். இருந்தும், இதுவரை மத்திய அரசு, விடுதலைப் புலிகள் அமைப்பை மேலும் இரண்டாண்டுகளுக்குத் தடை செய்யும் ஆணையை பிறப்பிக்க, எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துள்ளதாகத் தெரியவில்லை.

பிற்பகல் 12.10

விடுதலைப் புலிகள் விஷயத்தில், மத்திய அரசு, ஊசலாட்டமான ஒரு போக்கில் உள்ளதோ என்றே ஐயப்பட வேண்டிய நிலை, கடந்த சில மாதங்களாகவே உருவாகி வருகிறது. காரணம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கே, சவால் விடும் போக்கைப் பின்பற்றி வரும் விடுதலைப் புலிகள் பற்றி, ஆயுதக் கலாச்சாரத்தைப் பரப்பி, இந்திய. மக்கள் அனைவரின் அன்புக்குரிய தலைவரான, ராஜீவ் காந்தியையே, படுபாதகமாகக் கொலை செய்த, விடுதலைப் புலிகள் பற்றி - அவர்களைக் கடுமையாக ஒடுக்க வேண்டிய அவசியம் பற்றி - இது வரை நாட்டின் பிரதமரான, மாண்புமிகு நரசிம்மராவ் அவர்கள், வாயே திறக்க மாட்டேன் என்கிறாரே: (மேசையைத் தட்டும் ஒலி)– எந்தக் கருத்தையும் வெளிப்படையாக பேச மாட்டேன் என்கிறாரே-ஏன்? என்ற ஐயப்பாடு, அனைவருக்கும் இயற்கையாகவே எழுந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களைப் பொறுத்த மட்டில், ஏதோ விடுதலைப் புலிகள் எனப்படுவோருக்கும் எங்களுக்கும், ஏதோ சொந்தப் பகை காரணமாகவா அவர்களை ஒடுக்க இவ்வளவு தீவிரம் காட்டி வருகிறோம்? எங்களுக்கும் அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில், எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால், என்று அவர்கள் அமரர் ராஜீவ் காந்தியைக் கொன்றார்களோ, என்று அவர்கள் இந்திய நாட்டின இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிரான

செயல்களில் ஈடுபட்டார்களோ, அன்றிலிருந்து தானே அவர்களை எவ்வகையிலும், தமிழகத்தில் நடமாட விடக் கூடாது, என முடிவெடுத்து துரத்தி அடித்தோம்? (மேசையைத் தட்டும் ஒலி)

அதே வேகம், அதே வைராக்கியம், அப்பெருமான் ராஜீவ் காந்தி மறைந்ததால் பதவிக்கு வந்தவர்களுக்கு ஏன் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான், பெரிதும் வியப்பாக உள்ளது.

பிரதமர் தான் பேசவில்லை என்றாலும், அடிக்கடி சற்று அதிகமாகவே பேசுகிற, மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையில் சென்னைக்கு வந்து பேசிச் சென்ற செய்திகள், என்ன முடிவில் இருக்கிறார்கள் என ஊர்ஜிதம் செய்ய முடியாத நிலையில் உள்ளன.

சட்டமன்றப் பேரவையில், இதுபோன்ற தீர்மானம் வருவதைப்பற்றி அறிந்த போது மத்திய உள்துறை அமைச்சர் அவர்களே, அப்படிப்பட்ட தீர்மானமே தேவை இல்லை, கடிதம் எழுதினால் போதும் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் கடிதம் எழுதி, 4 மாதம் ஆகப் போகிறது; அதன் பின்னர் ஒன்றுக்கு இரண்டு முறை, கேட்ட விளக்கங்களுக்கெல்லாம் பதில் சொல்லியும் ஆகிவிட்டது. நம் அதிகாரிகளும் நேரில் சென்று விவாதித்து, விவரம் தெரிவித்தும் வந்தாகி விட்டது. ஆனால் கடிதம் எழுதிய விவரமே தெரியாதவர் போல், தமிழக அரசிடமிருந்து எவ்வித அறிக்கையும் வரவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் பேசும் மர்மம், புரியாத புதிராகவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதோடு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் விட்டிருந்தால் பரவாயில்லை. அடுத்த உபதேசம் ஒன்றும் செய்துள்ளார். ஏன் மத்திய அரசு தடை செய்ய வேண்டும் எனக் கோருகிறார்கள்? மாநில அரசே தடை செய்து கொள்ளலாமே எனக் கேட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

"தெரியாமல் பேசுகிறாரோ மத்திய அமைச்சர்?" எனக் கேட்டால், கோபித்துக் கொள்வார்கள் (மேசையைத்தட்டும் ஒலி) எனவே இப்பிரச்சினையில் உள்ள நிலைமைகளை, இப்பேரவையில் விளக்கிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12.15

இதில் முதலாவதாக நான் தெளிவுபடுத்த விரும்புவது; ஏற்கனவே இரண்டாண்டுகள் தடை செய்தது, Unlawful Activities (Prevention)

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

Act, 1967 என்ற சட்டத்தின்படியாகும். இது ஒரு Central Act; மத்திய சட்டம், மாநில அரசின் சட்டம் அன்று,

இப்படி மத்திய அரசின் சட்டமொன்றின்படி, ஒரு அமைப்பைத் தடை செய்து விட்டு, அத்தடையை மேலும் இரண்டாண்டுகள் நீட்டிக்க வேண்டும் என்னும்போது; மாநில அரசின் ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ், தடை செய்து கொள்ளுங்கள் என ஒரு மத்திய உள் துறை அமைச்சர் சொல்வதைக் கேட்கும்போது, வியப்பாகவே உள்ளது. ஏன் இந்த ஊசலாட்டம் எனவும் கேட்கத் தோன்றுகிறது.

இவ்வாறு மத்திய அமைச்சரே, மாநிலச் சட்டங்கள் ஏதாவது ஒன்றின் கீழ் தடை செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்த காரணத்தால் துருவித் துருவி, பல சட்டங்களையும் ஆராய்ந்து பார்த்தோம். The Criminal Law (Amendment) Act, 1908 என்ற ஒரு சட்டம் உள்ளது. 1950-ஆம் ஆண்டின், அச்சட்டத்தில் 15 (2) பி பிரிவின்படி, "Unlawful Assembly" என்பது define செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் இப்பிரிவின்படி, நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆனால் அந்த 1950-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட செக்ஷன் 15 (2) பி என்ற பிரிவு, அந்தக் காலக் கட்டத்திலேயே, சென்னை உயர் நீதி மன்றத்தால், இது அடிப்படை உரிமைகளைப் பற்றிய, அரசியல் சட்டத்தின் 19-வது Article-க்கு முரணானது எனக் கூறி, செல்லத்தக்கது அல்ல எனத் திர்ப்பளிக்கப்பட்டு விட்டது. அதே தீர்ப்பு, பின்னர் உச்ச நீதி மன்றத்தாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. ஆக, இன்றைய தினத்தில், தமிழகத்தில், Unlawful Association என, ஒரு அமைப்பைத் தடை செய்யும் எந்தச் சட்டமும் இல்லை. இப்படி இருக்க, எந்தச் சட்டத்தின் கீழ், மாநில அரசே விடுதலைப் புலிகளைத் தடை செய்து கொள்ளலாம் என மத்திய உள்துறை அமைச்சர் உபதேசம் செய்துள்ளார் எனத் தெரியவில்லை.

ஒரு வேளை, தமிழக அரசு இனிமேல், புதிதாக இத்தகைய அமைப்புக்களைத் தடைசெய்ய, தனிச் சட்டம் ஒன்றினை, Criminal Act ஒன்றினை இயற்றி, நிறைவேற்றிக் கொண்டாலும்; அச்சட்டத்தின் மூலம், தமிழகத்திலே மட்டும்தான், நம் மாநிலத்திற்குள்ளே மட்டும் தான், தடை செய்ய முடியும்.

இன்றைக்கு விடுதலைப் புலிகள் எனப்படுவோர், உலகம் முழுவதும் பரவி உள்ளனர். லண்டனில், பாரிஸில், பான்னில் ஜெனீவாவில், டோரோண்ட்டோ-வில், அமெரிக்காவின் பல பகுதிகளில் எல்லாம் கூட அவர்கள் அமைப்பு ரீதியாக இயங்கி வருவதை, நாம்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

அறிந்திருக்கிறோமோ இல்லையோ, டெல்லியிலே உள்ள உள் துறை சம்பந்தமான பல நிறுவனங்கள் அறியாமல் இருக்க மாட்டார்கள். நான் ஏற்கனவே, அயல் நாட்டுத் தொழில் முதலீடுகளை, தமிழகத்திற்குக் கொண்டு வர, மேலே குறிப்பிட்ட வெளி நாடுகளில், சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டபோது; அங்கெல்லாம் விடுதலைப் புலிகளின் அமைப்பு, பலமாக உள்ளதால், என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும்; அதன் காரணமாகச் சுற்றுப் பயணத் திட்டத்தை, கைவிடுவதுதான் நல்லது என்றும் மத்திய அரசின் ஒற்றாய்வு நிறுவனங்கள் என்னைக் கேட்டுக் கொள்ளவில்லையா?

இங்கே இந்திய நாடு முழுவதும், பல்வேறு மாநிலங்களிலே உள்ள, தீவிரவாத அமைப்புக்களோடு, விடுதலைப் புலிகள் தொடர்பு வைத்துள்ளார்கள், பயிற்சி அளிக்கிறார்கள் என்பதை மத்திய அரசே பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளது. பயங்கரவாத அமைப்புக்களான, ஆந்திராவில் உள்ள நக்சலைட்டுகளுடனும் அஸ்ஸாமில் உள்ள உல்பாவினருடனும் பஞ்சாபில் அகாலி தீவிரவாதிகளுடனும் காஷ்மீர் பிரிவினைவாதிகளான ஜே.கே.எல்.எப். உடனும் ஒரு பெரிய network ஏற்படுத்திக்கொண்டு அங்கெல்லாம் ஊடுருவி உள்ளனர் என்பதை வெளிப்படையாக மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில், தமிழகத்தில் மட்டும் தடை செய்து கொள்ளுங்கள் என்றால் என்ன நோக்கத்தில் சொல்லுகிறார்கள் எனத் தெரியவில்லை.

தமிழகத்தில் இவர்களைத் தடை செய்துதான், ஒடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. கடந்த இரண்டே முக்கால் ஆண்டுக் காலத்தில் நாங்கள் எடுத்த கடும் நடவடிக்கைகள் காரணமாக என் உயிருக்கே கூட அச்சுறுத்தல் இருந்தாலும் அதனையும் துச்சமாக மதித்து இந்திய இறையாண்மையும், நம் மரியாதையும் காக்கப்பட வேண்டும் என்ற வைராக்கியத்தோடு செயல்பட்ட காரணத்தினால், இன்று அவர்களைக் கூண்டோடு துரத்தி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், இன்றையதினம் இந்திய நாடு முழுமைக்குமாக மத்திய அரசின் சட்டம் ஒன்றின் மூலம், தடை செய்யப்பட்ட ஓர் அமைப்புக்கான தடையை, மேலும் நீட்டிக்காவிட்டால்; நாளை பாண்டிச்சேரியில் இருந்து, காரைக்காலில் இருந்து, கர்நாடகத்தில் இருந்து, கேரளாவில் இருந்து, ஆந்திரக் கடலோரப் பகுதிகளில் இருந்து, இன்னும் எஞ்சியுள்ள மாநிலங்களில் இருந்தெல்லாம்,

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இயங்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அப்படி தங்கு தடையின்றி, அவர்கள் இயங்குவார்களேயானால், அதன் காரணமாக இந்தியாவில் உள்ள எல்லா மாநில தீவிரவாத, பயங்கரவாத அமைப்பினரோடும் சேர்ந்து செயல்பட்டால், இந்தியாவின் எதிர்காலம் சின்னாபின்னமாகி விடாதா? இந்திய இறையாண்மைக்குப் பங்கம் நேர்ந்து விடாதா?

பிற்பகல் 12.20

இத்தகைய அச்சத்தின் காரணமாகத்தான், மீண்டும் சில காலம், இத்தடையை நீட்டித்திடுங்கள் எனக் கோரிக்கை விடுத்திருந்தோமே ஒழிய எங்களைக் காப்பாற்றிக் கொள்ள அல்ல. எங்களைக் காப்பாற்றிக் கொள்ள எங்களால் முடியும்; இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய வலுவும், சக்தியும் எங்களிடத்திலேயே உண்டு (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவைக் காத்திடவே, இந்திய இறையாண்மையை, ஒருமைப்பாட்டை, ஒற்றுமையை, அமைதியைப் பேணிக் காக்கவே, இத்தீர்மானத்தை இப்பேரவையில் முன்மொழிந்து, மத்திய அரசை வற்புறுத்திட முன் வந்துள்ளேன்.

இத்தகைய உன்னத நோக்கத்தை, உள்ளடக்கியுள்ள இத்தீர்மானத்தை, பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம்

"இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தின் மூலம் இந்திய நாட்டில் வன்முறை மற்றும் ஆயுதக் கலாச்சாரம் போன்றவை, தலைதூக்காவண்ணம் செய்திட, 1967-ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் (37/67), இவ்வியக்கத்தினை ஒரு "சட்டப்புறம்பான ஓர் அமைப்பு" என்று, 1992-ஆம் ஆண்டு மே திங்கள் பதினான்காம் நாளன்று வெளியிட்ட எஸ்.ஓ. 330 (ஈ) எண்ணுள்ள தனது அறிக்கையில் அறிவித்துள்ளது.

இவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, இத்தடை ஆணை 1992-ஆம் ஆண்டு, மே மாதம் பதினான்காம் தேதி முதல், 1994-ஆம் ஆண்டு,

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

மே மாதம் பதினான்கு தேதி வரை இரண்டு ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும்.

இந்திய அரசின் *14-5-1992* நாளிட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தின் நோக்கங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளில், இத்தடையாணைக்குப் பிறகும், எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தினரின் நோக்கங்களும், செயல்பாடுகளும் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் தொடர்ந்து ஊறு விளைவிப்பதாகவே உள்ளது.

தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தினை ஓர் சட்டப் புறம்பான அமைப்பு என்று அறிவித்ததற்கான காரணங்கள் எவ்விதத்திலும் வலுவிழக்கவில்லை. தமிழக அரசு எடுத்த பல்வேறு தீவிர நடவடிக்கைகளின் பயனாக இவ்வியக்கம் தனது செயல்பாட்டிற்கான ஆதாரங்களைத் தமிழகத்தில் முற்றிலுமாக இழந்து நிற்பினும், அது தன் இழந்து போன செயல் திறனை மீண்டும் நிலைநாட்டிடவும், தொலை தொடர்பு சாதன வசதி உள்ளிட்ட ஏனைய பிற வசதிகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டும், தமிழகத்தில் உள்ள ஆதரவாளர்கள் மூலம் தனது கொடிய குறிக்கோள்களை அடைய இடையறா முயற்சி செய்கிறது.

நாட்டின் இறையாண்மை, உள் நாட்டுப் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டினைக் கட்டிக் காத்திடவும், வன்முறை மற்றும் ஆயுதக் கலாச்சாரம் பரவாமல் தடுத்திடவும் தமிழக அரசு, இந்திய அரசின் உள்துறைச் செயலகத்தை, *1967*-ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தினை ஓர் சட்டப்புறம்பான அமைப்பு என *1994*-ஆம் ஆண்டு மே திங்கள் *14*-ஆம் நாள் முதல் தொடர்ந்து இரு ஆண்டுகள் தடையாணை பிறப்பிக்கக் கூறி, தகுந்த ஆதாரங்களுடன் *28-1-1994* அன்று கோரியுள்ளது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கூடுதல் ஆவணங்களை மாநில அரசு அனுப்பியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், இந்தியாவின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், ஊறு விளைவிப்பது தெளிவாகத் தெரிகிறது. இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், பொது அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில், நாட்டின் பல மாநிலங்களில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்புக்களோடு,

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் உள்ள பீப்பிள்ஸ் வார் குரூப் நக்சலைட்டுக்களுடனும், அசாம் மாநிலத்தில் உள்ள உல்ஃபா அமைப்பினரோடும், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பயங்கரவாதிகளோடும், காஷ்மீரத்திலுள்ள பிரிவினைவாதிகளான ஜே.கே.எல்.எஃப்.-உடனும் தொடர்பு வைத்து, அவர்களுக்கெல்லாம் ஆயுத விநியோகம் செய்து வருவதை, மத்திய அரசே ஏற்கெனவே பல்வேறு சமயங்களில் அறிவித்து வந்துள்ளதிலிருந்து, இந்திய நாட்டிற்கு எந்த அளவு எதிரான அமைப்பு இது என்பது புலனாகும்.

பிற்பகல் 12.25

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தை ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என்று, 1967-ஆம் ஆண்டு சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அறிவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது இந்திய அரசின் முழுப் பொறுப்பாகும். மாநில அரசின் சட்ட வரம்பிற்குள் வரையறுக்கப்பட்ட எந்தவொரு சட்டமும், அந்த மாநிலத்தின் எல்லைக்குள் மட்டுமே பயன்படுத்தத்தக்கது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்லோ தேசிய அளவில் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

இன்றைய நிலையில் தமிழக அரசின் எந்த சட்டப்பிரிவின் கீழும் இத்தகைய அமைப்புக்களை சட்டப்புறம்பான அமைப்பு என அறிவிக்க முடியாத நிலைமை உள்ளதாலும், இந்திய அரசு தான் இதில் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை வற்புறுத்த வேண்டி உள்ளது.

தமிழக மக்கள், இந்திய நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டினைக் காக்க வேண்டி தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் பன்முறை வெளிப்படுத்தியுள்ளனர். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும், அவர்கள் தங்கள் கடுமையான எதிர்ப்புக்களை வெளிப்டுத்தியுள்ளனர். இவ்வுணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில், 14-5-1994 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு தமிழீழ விடுதலைப்புலி இயக்கம் ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என தடையாணை விதிக்க, 1967-ஆம் ஆண்டு சட்டப்பறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் எல்லாவித சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழக சட்டப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தின் மீது தங்களது சீரிய கருத்துக்களை எடுத்துரைத்து, இந்தத் தீர்மானத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஆதரவை அளித்து, ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ள இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூர்ணமாக உண்டு. அமைதிப் பூங்காவான தமிழகத்தில் வன்முறைக் கலாசாரத்திற்கு இடம் கொடுப்பதற்கு நாம் என்றும் தயாராக இல்லையென்றும், அத்தகைய ஒரு சூழ்நிலை எத்தகையதொரு நடவடிக்கை எடுத்தாவது தடுக்கப்படும் என்றும் தமிழக மக்கள் அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கின்ற வகையில் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவை நிறைவேற்றும்போது அமையும் என்ற எனது உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *14-5-1994* முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டபூர்வமற்ற இயக்கம் என்ற தடையை நீட்டிக்க, சட்டபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை தமிழக முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இத்தீர்மானத்தின் மீது எங்கள் கட்சியின் நிலையை தெளிவுபடுத்த விரும்புகிறேன். இலங்கை தமிழ் மக்களின் அனைத்து ஜனநாயக உரிமைகளும், சுயாட்சி உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறோம். ஸ்ரீலங்கா கூட்டமைப்பில் தமிழர்களின் சுயாட்சி உரிமைகள், தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்குதல் ஆகியவைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம். ஆனால், எல்.டி.டி.ஈ. ஸ்ரீலங்கா பிரிவினைப் போக்கை வைத்திருப்பதால் அவர்களது கோரிக்கை எங்களுக்கு உடன்பாடல்ல. இது அரசியல் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகும். ராஜீவ் காந்தி கொலை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப்

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பிறகு இந்த நாட்டிலே எல்.டி.டி.ஈ. சட்டவிரோத அமைப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பிரகடன காலம் முடிவதற்கு வருவதால் மீண்டும் புதுப்பிப்பது என்ற பிரச்சினை எழுந்துள்ளது. மத்திய அரசும், மாநில அரசும், இந்தப் பிரச்சினையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு, பாதுகாப்பதற்கு, பேசி ஒரு இறுதியான முடிவு எடுத்து உறுதி செய்யப்பட வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-30*

எல்.டி.டி.ஈ. பற்றிய சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் மத்திய அரசும் மாநில அரசும் கலந்தாலோசனை செய்து தமிழகத்திலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு முடிவெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டிய பிரச்சினையாகும் இது. ஆனால் இரு அரசுகளும் அதாவது மத்தியில் இருக்கிற அரசும், தமிழகத்தில் இருக்கிற அரசும் இதில் வெறும் அரசியல் தத்துவார்த்தத்தை மட்டும் பேசிக்கொள்வது எதிர்காலத்தில் தமிழக மக்களுக்குப் பயன் அளிக்காது, ஆகவே தங்களுக்குள் இருக்கிற கருத்துவேறுபாடுகளை எல்லாம் மறந்து இந்தப் பிரச்சினையை முதன்மைப்படுத்தி அரசியல் தர்க்கத்திற்கு உட்படாமல், இதை வெறும் அரசியல் பிரச்சினையாக மட்டும் மாற்றக்கூடாது என்று கேட்டுக்கொண்டு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறார் என்பது எங்களுக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொல்வதை அவரே புரிந்துதான் பேசுகிறாரா என்பது எனக்கு சந்தேகமாக உள்ளது. இந்த எல்.டி.டி.ஈ-ஐத் தடை செய்யும் பிரச்சினையை அரசியல் ஆக்கக்கூடாது என்று சொல்கிறார். நிச்சயமாக மாநில அரசு இதனை அரசியல் ஆக்கவில்லை. நாங்கள், என்றைக்கு ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டாரோ அன்றிலிருந்து இன்று

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

வரை ஒரே நிலையில் உறுதியாக உள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அரசியலாக்க முயற்சிப்பது முக்கியமாக காங்கிரஸ் கட்சியும், மத்திய அரசும், வேறு சில கட்சிகளும்தானே ஒழிய எங்கள் கட்சியும் அல்ல, எங்கள் அரசும் அல்ல. உதாரணமாக இத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரப்போகிறோம் என்று அறிந்தவுடன் மத்திய உள்துறை அமைச்சர் இங்கே சென்னைக்கு வந்து பத்திரிகையாளர்களிடம் பேசியபோது இதைப்பற்றிக் கேள்வி கேட்கப்பட்டபோது இத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரத் தேவையில்லை என்று அவர் பேசி இருக்கிறார். அதைத்தான் நான் என்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டேன். ஆனால் நேற்றையதினம் பாராளுமன்றத்தில் ராஜ்யசபாவில் சில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வேண்டுமென்றே இந்தப் பிரச்சினையை எழுப்பி இதைப்பற்றிப் பேசி மாநில அரசின் மீது பழிபோட்டிருக்கிறார்கள். ஒரு தீர்மானம் கொண்டுவர இருந்தார்கள், இப்போது பின்வாங்கிவிட்டார்கள், ஏன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதைக் கைவிட்டார்கள் என்றெல்லாம் நேற்று அவர்கள் ராஜ்யசபாவில் பேசி அந்தச் செய்திகள் எல்லாம் கூட பத்திரிகையிலே வெளி வந்திருக்கின்றன. ஆக ஊசலாட்டமான நிலை, இரட்டை நிலை கொண்டுள்ளது காங்கிரஸ் கட்சிதானே ஒழிய, மத்திய அரசுதானே ஒழிய, நாங்கள் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரப் போகிறோம் என்று நாங்கள் சொல்கிறோம். மத்திய உள்துறை அமைச்சர் வந்து இத்தகைய தீர்மானம் தேவையில்லை என்று சொல்கிறார், அடுத்த தினமே ராஜ்யசபாவிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், ஏன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை என்று கேட்கிறார்கள். இதை அரசியல் ஆக்கப் பார்ப்பது காங்கிரஸ் கட்சிதான். நாங்கள் அல்ல என்று மீண்டும் நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். இப்படி அரசியல் ஆக்காத ஒரு பிரச்சினையை நாங்கள் அரசியல் ஆக்குகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி சொல்கிறார் என்றால் யாரோ அவருக்கு இப்படி எல்லாம் பேசுங்கள் என்று எழுதிக் கொடுத்ததை, அவரே புரியாமல் வாசித்துக் கொண்டிருக்கிறாரோ என்றுதான் ஐயப்படத் தோன்றுகிறது.

1994 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி, இதிலே நானும் கூட ஒரு விளக்கம் சொல்லவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சட்டமன்றத்தில் வருவதாக இருந்த இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவராமல் பின்வாங்கிக் கொண்டார்கள் என்று நேற்றையதினம் ராஜ்யசபாவில் பேசிய செய்தியை நானும் பார்த்தேன். இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லவே இல்லை. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவை அவர் கேட்டுக்கொண்டது, திங்கட்கிழமை எடுப்பதாக இருந்தது; திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டம் வைத்திருக்கிறோம்; அமைச்சரவைக் கூட்டம் வைத்திருக்கிற காரணத்தாலும் இதே பிரச்சினையை இன்னும் தீர்க்கமாக நாங்கள் விவாதித்துப் பேரவைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டி இருக்கிற காரணத்தாலும் திங்கட்கிழமை இந்தத் தீர்மானம் வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொண்டார்கள். எனவே அலுவல் ஆய்வுக் குழுவை உடனடியாக அவசரமாகக்கூட்டி, அதனுடைய அனுமதியை, ஒப்புதலைப் பெற்று திங்கட்கிழமை இந்தத் தீர்மானம் இல்லை என்றுதான் முடிவெடுத்திருந்தோம். இதுபற்றி உடனே வெளியில் எத்தகைய செய்தி அவர்களுக்குப் பரப்பப்பட்டதோ தெரியவில்லை, திரும்பப் பெற்றுக்கொண்டார்கள் என்பதைப்போல தவறான ஒரு எண்ணத்தில் ராஜ்யசபா வரையிலே இதைப் பேசுகிறார்கள் என்றால் அது எந்த அளவுக்கு நியாயம் என்பதையும் நீங்கள்தான் முடிவெடுக்கவேண்டும்.

பிற்பகல் *12-35*

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்யசபையிலே மட்டும் பேசவில்லை. இந்தியா முழுவதும் உள்ள எல்லா பத்திரிகைகளிலும், நாளேடுகளிலும், up-country papers எல்லாவற்றிலும் இந்தத் தீர்மானம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது, என்ன காரணத்தினாலோ தமிழக அரசு இதைக் கொண்டுவர விரும்பி இப்போது கைவிட்டுவிட்டார்கள் என்று அவசரப்பட்டு அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்கள்தான் இதனை அரசியல் ஆக்கப் பார்க்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் திங்கட்கிழமை அன்று இந்தத் தீர்மானத்தை கொண்டுவர இருந்தோம். அதற்கிடையில் உள்துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து என்னவெல்லாமோ குழப்பமான நிலையில் பேசியிருக்கிறார்கள்.

ஆகவே, இதையும் கருத்தில் எடுத்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தில் மேலும் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான் திங்கள் அன்று நாங்கள் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி இதைப்பற்றி நாங்கள் முடிவு செய்தோம். ஆனால் இங்கே நான் இரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். ஒன்று மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் எல்.டி.டி.ஈ.-ஐ தடைசெய்ய வேண்டுமென்கிறாரா, தடை செய்ய வேண்டாமென்கிறாரா, இந்தத் தீர்மானத்தை அவர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது ஏற்றுக் கொள்ளவில்லையா? இரண்டாவது, நேற்றையதினம் ராஜ்ய சபையிலே காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை, தமிழக அரசு ஏன் இந்தத் தீர்மானத்தைக் கைவிட்டது என்றெல்லாம் கேட்டார்கள். அந்தக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று ஏன் இந்த அவைக்கு வரவில்லை, இந்தத் தீர்மானத்தைப் பற்றி எல்.டி.டி.ஈ.-ஐ தடை செய்வது பற்றி அவர்களுடைய நிலை என்ன, அவர்களுடைய கருத்துக்கள் என்ன என்பதைத் தெரிவிக்க ஏன் வரவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இதிலிருந்து எல்.டி.டி.ஈ.. என்கின்ற மிகப் பெரிய பிரச்சினையை இந்த நாட்டையே பாதிக்கக்கூடிய, நாட்டின் இறையாண்மையை பாதிக்கக்கூடிய மிகப்பெரிய பிரச்சினையை மற்றவர்கள்தான் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளும் இதனை அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்பதுதான் உண்மை. எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் நிலையில் எந்தக் குழப்பமும் இல்லை. அன்றிலிருந்து—*1991*-லிருந்து இன்றுவரை எங்கள் நிலையில் உறுதியாக இருக்கிறோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரியாமல் நான் பேசவில்லை. தெரிந்துதான் பேசுகிறேன். ஏன் இதைப் பேசக்கூடிய சூழ்நிலை மீண்டும் வருகிறது என்று சொன்னால் மத்தியில் இருக்கிற சவான் அவர்கள் தமிழக அரசு இதுவரை தேவையான ஆவணங்களை அனுப்பவில்லை என்று.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் தெரிந்துதான், புரிந்துதான் பேசுகிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்போதுதான் என்னுடைய முன்னுரையில் மிகவும் விரிவாக என்னென்ன தேதியில் கடிதம் அனுப்பி இருக்கிறோம், என்னென்ன தஸ்தாவேஜுகள், ஆவணங்கள்

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அனுப்பி இருக்கிறோம் என்பதை எல்லாம் நான் தெளிவுபடுத்தி புள்ளிவிவரங்களுடன் கூறியிருக்கிறேன். ஆகவே இப்போது நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது சுருக்கமாக இதை முடித்து விடலாம். உறுப்பினரின் நிலை என்ன, மாண்புமிகு உறுப்பினர் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறாரா, எதிர்க்கிறாரா, அதைச் சொல்லவும்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மத்தியிலுள்ள சவான் அனுப்பவில்லை என்று கூறுகிறார். *(குறுக்கீடுகள்)* சொல்லியதற்குப் பின்னால் சொல்லுங்கள். பொறுங்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆவணங்களை அனுப்பியிருக்கிறதாக அவையிலே அறிவித்திருக் கிறார்கள். அப்படியென்றால் இதில் யார் அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது. அதைத்தான் நான் கூறுகிறேன். அதைத்தான் கூறுகிறேன். எனவே இது தமிழ்நாட்டு மக்களுடைய ஒரு அடிப்படையான பிரச்சினை, மக்களுடைய அரசியல் பிரச்சினை, ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. இதில் சட்டம் ஒழுங்கில் பாதிப்பு வருமென்றால் எதிர்காலத்தில் தமிழக மக்களுக்கு கண்டிப்பாக அந்த பாதிப்பு ஏற்படும். அந்த வகையிலேதான் இதைப் பரிசீலித்து சட்டம் ஒழுங்கை தமிழ்நாட்டில் நிலைநாட்டுவதற்கு கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தை என் சார்பிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் ஆதரித்து அமர்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி. பழனிசாமி பேச்சில் குழப்பம் இருக்காது என்று நம்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற அரசினர் தனித் தீர்மானத்தில் அதிலே இருக்கக்கூடிய சில விளக்கங்களைச் சொல்லி நான் பின்னாடி தீர்மானத்தின் மீது கருத்து கூறலாம் என்று இருக்கின்றேன்.

பிற்பகல் *12-40*

குறிப்பாக தமிழகத்தை இலங்கை இன மக்களை பாதுகாக்க வேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழ் உணர்வுப் படைத்தவர்களும் கடந்த காலத்திலே விடுதலைப் புலி இயக்கத்தை நாம் ஆதரித்து

[திரு. ஜி. பழனிசாமி] [1994 ஏப்ரல் 20

வந்தது என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே அமைதியைச் சீர்குலைக்கின்ற வகையில், தமிழ் நாட்டினுடைய தலைவர்களின் உயிருக்கு அபாயம் விளைவிக்கின்ற விதத்திலேயும், குறிப்பாக முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலைக்கு காரணமாக இருந்தார்கள் என்பதன் காரணமாகவும் மத்திய அரசும் மாநில அரசும் உறுதியாக நின்று விடுதலைப் புலிகளுக்கு இரண்டு ஆண்டுக்காலம் தடைச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில், விடுதலைப் புலி என்கின்ற பேரால், இந்திய எல்லையிலும் தமிழ்நாட்டினுடைய கடல் ஓரப் பகுதிகளிலும், விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துக் கொண்டிருக்கின்றது என்று இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய பேரியக்கத்தைச் சேர்ந்திருக்கக்கூடியவர்கள் தொடர்ந்து இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் கடமையிலிருந்து தவறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல தடவை இதே மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மட்டுமல்ல இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சியாக இருக்கின்ற நாங்களும் அவர்களிடத்திலே வினாவாகக் கேட்டிருக்கிறோம். இன்றைக்கு கடல் பகுதியிலே இருக்கக்கூடிய, இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய, இந்திய கடல் படை ராணுவத்தின் கட்டுப்பாட்டில் அதனுடைய எல்லை ஓரமாக இருக்கக்கூடிய, தமிழக கடல் ஓரத்தில் உள்ள பாண்டிச்சேரியில், கர்நாடகாவில் இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளைத் தடை செய்வதிலே மத்திய அரசு தவறு செய்திருக்கிறது என்பதை நான் கூட குற்றச்சாட்டாகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் விடுதலைப் புலிகள் என்ற ஒரே கோரிக்கையை வைத்துக்கொண்டு காங்கிரஸ் கட்சி தமிழகத்திலே அரசியல் ஆதாயம் தேடுவது என்பதை கைவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய ஒருமைப்பாட்டை, தமிழ் நாட்டினுடைய கலாச்சாரத்தை தமிழ்நாட்டினுடைய பண்பாட்டை அவர்கள் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு ஒரு அமைதியான நாடாக இந்தியா இருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்திலே தடைச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போன்றுதான் மாநில அரசுக்கும் இதிலே கடமை இருக்கிறது. தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களிலே மத்திய

அரசுக்கு அனுப்பியிருக்கின்ற கடிதங்களைப் பற்றி சுட்டிக்காட்டியது போன்று, இங்கே இருக்கின்ற அரசு மத்திய அரசு மீது குற்றங்களை சொல்லி தங்கள் கடமையிலிருந்து ஒருபோதும் தவறிவிடக்கூடாது என்பதனை இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுடைய கருத்துக்களை நான் ஆமோதிக்கிறேன். மாநில அரசு தன்னுடைய கடமையிலிருந்து ஒரு போதும், ஒரு நாளும் தவறவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு அதனுடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறது என்பது மிகமிக உண்மை.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஏற்கெனவே நாங்கள் எல்.டி.டி.ஈ-யைச் சமாளிக்க வேண்டுமென்பதற்காக காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு எண்பது கோடியே நாற்பத்து ஐந்து லட்சம் ரூபாய்க்கான ஒரு போலீஸ் மாடர்னைசேஷன் திட்டத்தை மத்திய அரசுக்கு கொடுத்து அவர்களுடைய நிதி உதவியை நாடினோம்.

1991-92 ஆம் ஆண்டு நிதியாண்டில் அவர்கள் 10 கோடி ரூபாயைக் கொடுத்தார்கள். பின்னர் 1992-93 நிதியாண்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்களே மேலும் இந்த காவல் துறை மாடர்னைசேஷன் திட்டத்திற்காக 30 கோடி ரூபாய் தருவதாக அறிவித்தார்கள். ஆனால் அது வெறும் அறிவிப்போடு நின்றுவிட்டது. மீண்டும் நாங்கள் எத்தனையோ முறைகள் அதைபற்றி நினைவுப்படுத்தினோம். மீண்டும் மீண்டும் கோரினோம். அந்தப் பணம் தமிழக அரசுக்கு ஒதுக்கித் தரப்படவில்லை. மாறாக இன்றையதினம் எல்.டி.டி.ஈ-ஐச் சமாளிப்பது என்பது ஏதோ மாநில அரசின் பொறுப்பு என்பது போல் மத்திய உள்துறை அமைச்சர் சவான் அவர்களே, இவ்வளவு பெரிய பொறுப்பில் உள்ள ஒரு மத்திய உள்துறை அமைச்சர் சென்னைக்கு வந்தபோது இந்த நிதி உதவியைப் பற்றி கேட்டபோது அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் தமிழ்நாடு மிகப் பணக்கார மாநிலம், எனவே அவர்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி தேவையில்லை என்றெல்லாம் அவர்கள் பேசிவிட்டுச் சென்று இருக்கிறார்கள் என்றால் இதிலிருந்து மத்திய அரசு இந்த விஷயத்தை எவ்வளவு அலட்சியமாக எடுத்துக்

கொண்டிருக்கின்றது என்பது மட்டுமல்ல, மத்திய அரசு எந்த விதத்திலும் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்ற மனம் இல்லாமல் ஊசலாட்டத்தில் இருந்து கொண்டு அவர்களுடைய பொறுப்பை தட்டிக்கழித்து எல்லாப் பொறுப்பையும் மாநில அரசுமீது சுமத்தப் பார்க்கிறார்கள் என்பதைத்தான் இந்த நேரத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் *12-45*

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று உறுதியாக இருந்து விடுதலைப் புலிகளுடைய அந்த தடைச் சட்டத்தை நான் வரவேற்பதோடு, இன்றையதினம் இலங்கையிலே இடர்படுகிற தமிழ் இன மக்கள் தமிழ்நாட்டிலே இன்றைய தினத்திலே தங்கியுள்ளனர். அவர்களும் கூட மீண்டும் சென்று, தங்களுடைய இலங்கையிலே, திரிகோணமலையிலே தாங்கள் மீண்டும் நிம்மதியாக வாழ முடியுமா என்ற அச்சத்தில் தமிழகத்தில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு செய்தி எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அதுபோன்று வந்து தங்கி இருக்கக்கூடிய இலங்கை இன மக்கள், அகதிகளாக வந்து தங்கி இருக்கிற அந்த மக்களை நாம் கட்டாயப்படுத்தி அனுப்பி விடக் கூடாது. அப்படி அனுப்பப்படுகிறதாக அவர்கள் செய்திகள் சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கட்டாயப்படுத்தி எங்களிடத்தில் கையெழுத்து வாங்குகிறார்கள். நீங்கள் திரும்ப இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்று குறிப்பிடுவதாக அந்த மக்கள் இன்றையதினம் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, கட்டாயப்படுத்தி அந்த இலங்கை இன மக்களை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பிவிட வேண்டாம். விரும்பினால் நீங்கள் அனுப்புவதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இலங்கைத் தமிழர்களை கட்டாயப்படுத்தி திரும்ப இலங்கைக்கு அனுப்புகிறது என்பது உண்மையான தகவல் அல்ல. ஒவ்வொருவரையும் நீங்கள் திரும்பி

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இலங்கைக்குச் செல்ல விரும்புகிறீர்களா என்று கேட்டு, அவர்களுடைய ஒப்புதலை எழுத்தில் பெற்றுக்கொண்டு பிறகுதான் அவர்கள் திரும்ப இலங்கைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, ஏதோ தமிழகத்திற்கு மட்டும் விடுதலைப் புலிகளை தடை விதிப்பதோடு விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்திவிட முடியாது. அருகாமையிலே இருக்கிற பாண்டிச்சேரி, அருகாமையிலே இருக்கிற கர்நாடகா, அருகாமையிலே இருக்கிற கேரளா போன்ற மாநிலங்கள் தொடர்பாக, முழுமையாக, தமிழகத்திலும், இந்தியாவிலும் அவர்கள் ஊடுருவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்திய அரசு இந்தச் சட்டத்தை இந்தியா முழுமையும் விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இன்னொன்றையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். பல தடவை மத்திய அரசுக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கடிதம் மூலமாக, பல்வேறு சம்பவங்களை தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்திய கடலோரங்களில் இருக்கக்கூடிய தமிழ்நாட்டு மீனவர்கள் அச்சமின்றி மீன் பிடிக்க முடியாத அந்த சூழ்நிலைமை தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர்கள்-மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு பேசிய பின்னாலும்கூட அங்கு இருக்கிற இலங்கை கடற்படையினர்-இலங்கை அரசும் மத்திய அரசுக்கு இனிமேல் இப்படி மீனவர்களை அச்சுறுத்த மாட்டோம், துப்பாக்கிச் சூடு நடத்த மாட்டோம் என்று சொல்லிய பின்னாலும்கூட மீண்டும் மீண்டும் மீனவர்களுடைய படகுகள் இன்றையதினம் சுடப்படுகிறது, மீனவர்கள் சுடப்படுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட-தொடர்ந்து அச்சமின்றி மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும்கூட, அதற்குரிய தனித் தீர்மானத்தையும் இந்த மாமன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, விடுதலைப் புலிகளின் தடைத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லிபரேஷன் டைகர்ஸ் ஆப் தமிழ் ஈழம் என்கின்ற அமைப்பின்மீது ஏற்கெனவே இருக்கின்ற தடையை நீட்டிக்க வேண்டுமென்று

[திரு. இளம்வழுதி] [1994 ஏப்ரல் 20

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமே இல்லை என்றும், இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து அந்த நடமாட்டத்தையே தடுத்துவிட்டது என்றும் அரசின் சார்பிலே சொல்லப்படுகிறது. பிறகு எதற்காக அந்த இயக்கத்திற்கு தடையை நீட்டிக்க வேண்டுமென்று மத்திய அரசை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் இயக்கம் என்று இந்திய நாட்டில் எதுவும் இல்லை. அதற்கு எதற்காக...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12—50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ஒரு வினோதமான, விசித்திரமான கேள்வியை இங்கே எழுப்பி இருக்கிறார்கள். தமிழகத்தில்தான் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, அப்படியானால் எதற்கு இந்தத் தடை என்று கேட்கிறார். இதை ஒரு குழந்தை கேட்டிருந்தால் என்னால் புரிந்து கொள்ள முடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால் ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது எனக்கு சிரிப்பதா, வெறுப்பதா, வேதனைப்படுவதா அல்லது பரிதாபப்படுவதா என்று எனக்குப் புரியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போது என்னுடைய முன்னுரையிலேயே நான் தெளிவாக எல்லாவற்றையும் விளக்கினேன். தமிழகத்தில் இன்றைக்கு விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் ஒடுக்கப்பட்டுள்ளது, அவர்கள் தமிழகத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டுள்ளார்கள். இது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவர்கள் ஆந்திரத்தில் இருக்கிறார்கள், கர்நாடகத்தில் இருக்கிறார்கள். பக்கத்திலே பாண்டிச்சேரியில் இருக்கிறார்கள், காரைக்காலில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் இந்த உலகம் முழுவதும் பல்வேறு முக்கிய நாடுகளில் ஆதரவாளர்களைப் பெற்று, அங்கே அவர்கள் வலுவான இயக்கமாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கே, இந்தியாவில் உள்ள தீவிரவாத கும்பல்களுடன் அவர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள். இப்போதுதான் எல்லா

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

விவரங்களையும் நான் சொன்னேன். ஆந்திராவில் உள்ள `People's War Group Naxalites' அஸ்ஸாமில் உள்ள U.L.F.A. பஞ்சாபில் உள்ள அகாலி தீவிரவாதிகள், ஜம்மு காஷ்மீரில் உள்ள பிரிவினை வாதக் கும்பல் – J.K.L.F. இவர்களோடு அவர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே நாங்கள் சற்று அயர்ந்தாலும் அவர்கள் இந்தத் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலே எல்லா இடங்களிலும் ஊடுருவி, இந்த நாட்டையே சின்னாபின்னப்படுத்தக் கூடிய அபாயம் உள்ளது *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதைத்தான் நான் பரிதி இளம்வழுதி போன்றவர்களுக்குப் புரிய வைக்க முயன்று கொண்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் என்னைக் குழந்தை என்று சொன்னார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. அவருடைய வயதுக்கு நான் குழந்தைதான். நான் சொல்ல வந்தது என்னவென்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னது பூராவையும் நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் இங்கே சொல்கிறபோது, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். இப்படிப்பட்ட முக்கியமான தீர்மானத்தைப் பற்றி உங்களுடைய தலைவர் கலைஞர் கருணாநிதியிடம் ஆலோசனை கேட்டு, எழுதி, படித்துக் காண்பித்துவிட்டுத்தான் வந்து இருக்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களைக் குழந்தையாக நினைக்கிறார்கள் என்பதல்ல. பலமுறை முதலமைச்சராக இருந்த அவர் இப்படிப்பட்ட செய்தியை உங்களுக்குச் சொல்லி அனுப்பி இருக்கிறாரே என்பது ஒன்று.

அடுத்தபடியாக விடுதலைப் புலிகள் இங்கே இல்லை என்று சொல்லி, விடுதலைப் புலிகளுக்கு தடை இல்லை என்று சொல்லி விட்டால், பிறகு அவர்கள் வருவதைத் தடுக்க முடியாது. இன்றைக்கு விடுதலைப் புலிகள் இங்கே இல்லை. விடுதலைப் புலிகளுக்குத் தடை இல்லை என்று ஆக்கிவிட்டால் அவர்களும், வேறு நாட்டுக்காரர்களும் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு இங்கே வர முடியும், பாஸ்போர்ட் இல்லாமலும் வர முடியும். ஆகையால் இப்போது இங்கே இல்லாவிட்டாலும், இனிமேல் வராமல் இருப்பதற்காகத் தடை வேண்டுமென்பதற்காகத்தான் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

[திரு. இளம்வழுதி] [1994 ஏப்ரல் 20

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஸ்ஸாமில் உல்பா அமைப்பு, காஷ்மீர் தீவிரவாதிகள் அமைப்பு, ஆந்திராவில் நக்சலைட் அமைப்பு பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்த அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்று சொன்னால், விடுதலைப் புலிகள் இங்கே இல்லை என்று சொல்லுகிறது. அதைத்தான் நான் சொல்லுகிறேன். இல்லாத ஓர் அமைப்புக்கு ஏன் இந்தத் தடையைக் கொண்டுவர வேண்டும், ஏன் இந்தத் தடையை நீட்டிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

பிற்பகல் *12-55*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிலே சொன்னதை நீங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள், திரும்பத் திரும்ப. இப்போது இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். இல்லையே என்று நீங்களும் ஒப்புக்கொண்டீர்கள். எதற்காக இந்தத் தடைச் சட்டம்? இந்தத் தடைச் சட்டம் இல்லை என்றால் என்னவாகும்? பக்கத்தில் என்ன நிலைமை இருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். அதேபோன்று, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஏற்கெனவே இல்லை. மீண்டும் அந்த ஆபத்து இங்கே வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடக்கூடாது. அதைத் தடுப்பதற்கு இது ஒரு ஆயுதமாகும். இது மட்டுமே ஆயுதம் இல்லை. தமிழகத்தில் இருக்கிற காவல்துறையும், முதலமைச்சர் அவர்களும் இந்த அரசாங்கமும் எடுத்துக்கொள்கிற ஒரு முக்கியமான ஆயுதம். எனவே அவர்கள் முறையாக முழுமையாக செயல்படுவதற்கு இந்தத் தடைதான் ஆயுதமாகப் பயன்படும் என்ற காரணத்தால்தான் அது இப்போது செய்யப்படுகிறது. ஒரு ஊரில் குற்றமே இல்லாமல் எல்லாமே திருந்தி விட்டது என்றாலும்கூட போலீஸ் ஸ்டேஷனை எடுத்துவிட முடியாது. அதைப்போலத்தான் அந்தப் பாதுகாப்புக்காக இந்தத் தடைச் சட்டம் வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தடைச் சட்டம் தேவையில்லை என்று ஏன் இவ்வளவு வாதாடுகிறீர்கள் என்றுதான் எங்களுக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) அல்லது

1994 ஏப்ரல் 20] [திரு. சு. முத்துசாமி]

அப்படியாவது வெளிப்படையாகச் சொல்லிவிட வேண்டும். இந்தத் தடைச் சட்டம் தேவையில்லை என்று காங்கிரஸ் என்ன சொல்கிறதோ அதை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்று நீங்கள் சொன்னால் அது கொஞ்சம் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே, தயவுசெய்து இங்கே ஒரு பெரிய பிரச்சினை உருவாக இருப்பதைத் தடுப்பதற்கு முதலமைச்சர் அவர்களும் இந்த அரசும் எடுத்துக் கொள்கிற இந்த முயற்சிகளுக்கு நீங்கள் உறுதுணையாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, இடையூறாக இருந்துவிடக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற அரசும், முதலமைச்சர் அவர்களும், காவல்துறையும் எந்த அளவுக்கு வேகத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தை அணுகுகிறதோ அந்த அளவுக்கு, பக்கத்திலே இருக்கிற மாநிலங்களிலே அணுகமுடியும், அணுகுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எனவேதான் தடை வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி கொலை நடந்தபோது அந்தப் பரபரப்பில்தான் தடை விதிக்கப்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, வேறு எந்த போராளிகளாலும் அல்லது யாராலும் நமது நாட்டிற்குள் வன்முறைச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, இந்தத் தடையை நீட்டிக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்றுதான் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கேட்டார்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : இந்தத் தீர்மானத்தை அவர் ஆதரிக்கிறாரா எதிர்க்கிறாரா என்பதைத் தெளிவாகச் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : அது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள், இதைக் கொண்டுவரலாமா, வேண்டாமா என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானம். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றி வளைத்துப் போகாமல் மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் கூறுவதிலிருந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1994 ஏப்ரல் 20

இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும் எதிர்க்கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் இந்த அவை வரவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய விவரங்களைச் சொல்வதாக தவறாகக் கருதக்கூடாது. நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும் என்றால் அருமைச் சகோதரர் செல்வராசன் பண்ணியதைப்போல, போய் இருக்கவேண்டும். அதுதான் நியாயம் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) மாற்றிக் கொள்கிறேன், சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரச்சினை இல்லை.

திரு. இளம்வழுதி : அதை நான் ஆட்சேபிக்கிறேன். அவர் போய்விட்டால் நானும் போகவேண்டுமா? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபோல நீங்கள் போயிருக்கவில்லை. (குறுக்கீடு) அந்த உறுப்பினர் போயிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக அவர் ஒரு யோசனையைச் சொன்னார். அந்த யோசனை வேண்டாம் என்றால் இங்கேயே இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நல்ல யோசனையோடுதான் வந்திருக்கிறார் என்பதைத்தான் முதலிலேயே நான் சொல்கிறபோது சொன்னேன். பல ஆண்டுகளாக இங்கே முதலமைச்சராக இருந்த, சட்டமன்ற உறுப்பினராக இருந்த, இரண்டாவது சுற்றிலும் முதலமைச்சராக இருந்த கருணாநிதியுடன் இதைப் பேசி, எழுதிக்கொண்டுதான் வந்திருக்கவேண்டும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ** (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 ஏப்ரல் 20] [திரு இளம்வழுதி]

திரு. இளம்வழுதி : எங்களுடைய தலைவர் ** மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார். **

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : ** இப்போதுள்ள பிரச்சினை எல்லாம், இன்று எல்.டி.டி.ஈ.-ஐ, மேலும் 2 ஆண்டுகளுக்குத் தடை செய்வதற்கு மத்திய அரசு ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். அதற்கான ஒரு தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இத்தகைய ஒரு தீர்மானம் கொண்டுவரப்படும்போது, அதன் மீது பேசுகின்ற எந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினரானாலும், அந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம் அல்லது எதிர்க்கிறோம் என்று சொல்ல வேண்டும். இல்லை என்றால், இதன் மீது எங்களுக்குக் கருத்துச் சொல்ல விருப்பம் இல்லை; கருத்துச் சொல்ல துணிவும் இல்லை என்பதையாவது அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். (மேசையை தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக, தீர்மானங்களின் மீது பேசுகிறபோது இதுதான் முறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எதிர்க்கிறோம் அல்லது ஆதரிக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : ** (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று சொல்லவில்லை என்று நானே சொல்லி இருக்கிறேனே. ** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதியைப் பார்த்து 'குழந்தை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. நான் சொன்னது, இப்படி ஒரு குழந்தை பேசி இருந்தால் என்னால் அதைப் புரிந்து கொண்டிருக்க முடியும் என்றுதான் சொன்னேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கேட்ட கேள்விக்கு பதில் இல்லையா?

திரு. இளம்வழுதி : நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லி விட்டேன். இந்தத் தீர்மானம் தேவையா, இல்லையா என்று தீர்மானிப்பது, இது அவர்களுடைய தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் பேசியது அர்த்தமற்ற ஒரு கூற்று. இந்தத் தீர்மானம் தேவையா, இல்லையா என்று இந்த அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டிய எந்த ஒரு சூழ்நிலையும் இல்லை. இந்தத் தீர்மானம் தேவை என்று உறுதியாக நாங்கள் நம்புவதால்தான், (மேசையை தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை இன்றைக்கு நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே, மீண்டும் கேட்கிறேன் தங்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி ஒன்று, இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன்; இரண்டு, அல்லது, இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என்றோ, அல்லது மூன்றாவதாக, இந்தத் தீர்மானத்தைப் பற்றி எந்தக் கருத்தும் சொல்லும் துணிவு எங்கள் இயக்கத்திடம் இல்லை என்பதையாவது சொல்லி அவர் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் துணிவோடு சொல்கிறேன். இல்லாத ஒரு அமைப்பின் மீது தடை விதிக்கிற இந்தத் தீர்மானம் தேவை இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : **

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : ** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தவறான தகவலைச் சொல்லக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : ** ஒவ்வொரு தமிழனும், தமிழீழம் அமைவதை வரவேற்கிறான். அதேநேரத்தில் அதற்காகப் போராடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு இங்கே தாயகமான தமிழகத்தை வன்முறைக் காடாக மாற்றுவதற்கு யார் முயற்சித்தாலும் அதை வன்மையாகக் கண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள பிரச்சினை என்பது, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பது. (குறுக்கீடு) எதிர்க்கிறேன் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதோடு விட்டு விடலாம்.

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

பிற்பகல் 1.10

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடு) **

திரு. இளம்வழுதி : இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** எனவே அது தொடர்பாக தொடர்ந்து அதற்கு முன்னும் பின்னும், பரிதி இளம்வழுதி பேசியதும், அதற்கு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாத ஒன்றை உறுப்பினர் பரிதி இளம்வழுதி சொன்னதால், அவர்கள் சொன்னதையும், அதற்கு நான் பதில் அளித்ததையும் சேர்த்து தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து, அந்த முழுப் பகுதியையும் நீக்கிவிடலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிதி இளம்வழுதி பேசியது, அதற்கு பதில் அளித்து முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது, அதற்கு முன்னர் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், உணவுத்துறை அமைச்சர் அவர்களும், அதே பொருள் பற்றிப் பேசியதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இரண்டொரு முறை நான் குறுக்கே சொன்னதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்று சொல்லப்படுகிற எல்.டி.டி.ஈ. அமைப்பைத் தடை செய்யக் கோரி, மத்திய அரசை வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் நான் முழுமையாக வரவேற்கிறேன். உண்மையிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்களின் அமைதியான வாழ்க்கையைக் கருதியும், இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டைக் கருதியும் இந்த நாட்டின் எதிர்கால வாழ்வைக் கருதியும், மத்திய அரசே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்கள் கொண்டு வரத் தவறியதனால், அவர்களுக்கு நினைவூட்ட அதை வலியுறுத்தி, நாட்டின் ஒருமைப்பாட்டின்மீதும், நாட்டு மக்களின் வருங்கால நல்வாழ்க்கையின் மீதும் தீராத அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் துணிவோடு இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே முன்வைத்திருக்கிறார்கள் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம் முன்னால் இருக்கிற ஒரு கேள்வி, நம் முன்னால் இருக்கிற பிரச்சினை, தினம் தினம் துப்பாக்கித் தோட்டாக்களின் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிற காஷ்மீரைப் போல, மக்கள் குருதி சிந்திக் கொண்டிருக்கிற அஸ்ஸாமைப் போல, ஒவ்வொரு குடிமகனும் வெளியே போய் வருவதற்கு அஞ்சி வாழ்ந்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 ஏப்ரல் 20] [திரு. செ. கு. தமிழரசன்]

கொண்டிருக்கிற பஞ்சாப்பை போல, தமிழகமும் தீவிரவாதிகளின், தேசவிரோதிகளின், சமூகவிரோதிகளின், வன்முறையாளர்களின், கொடூரங்களுக்கு ஆளாகி, சிக்கித் தவிக்க வேண்டுமா; இதை நாம் அனுமதிக்க வேண்டுமா என்பதே நம் முன்னால் எழுந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை; ஒரு கேள்வி. எனவே, வருங்கால தமிழகத்தினுடைய நலன் கருதி, இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருதி, நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

பிற்பகல் 1-15

ஒரு காலத்திலே நம்முடைய தமிழ்நாடு வேட்டைக்காடாய், விடுதலைப் புலிகளுடைய புகலிடமாய், அவர்களுடைய பயிற்சிக் களமாய் மலிந்து கிடந்ததை நாம் பார்த்தோம். இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வருடைய வலிமையான, சீரிய தலைமையின்கீழ் விடுதலைப் புலிகள் முழுக்க முழுக்க தமிழ்நாட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள். ஒரு அமைதிப் பூங்காவாக நம்முடைய தமிழகம் இன்றைக்கு இந்தியாவிலேயே விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அமைதியைக் காப்பாற்ற, இந்த அமைதியைப் போற்றிப் பாதுகாப்பதற்கு விடுதலைப் புலிகளுடைய தடைச் சட்டம் அவசியம் தேவை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பாரம்பரியம் மிக்க நேருவின் குடும்பத்திலே பிறந்த பெருமை மிகுந்த அமரர் ராஜீவ் அவர்களுடைய இன்னுயிரையே இந்த நாட்டிலே நாம் பலிகொடுத்தோம். அதனால் தமிழ்நாட்டிற்கே ஒரு மிகப் பெரிய களங்கம், கறை இந்திய வரலாற்றிலே ஏற்படுத்தப்பட்டு விட்டது. அவருடைய சமாதியில் அவர் சிந்திய ரத்தத்தின் ஈரம் கூட இன்னமும் மாறவில்லை. அதற்கு முன்னாலே சிலர் அந்தத் துரோகக் கும்பலோடு கைகோர்த்துக்கொண்டு அவர்களுக்கு ஆதரவு அளிப்பதைப் போல, அவர்களுக்கு உடன்பாடு வருவதைப்போல ஒரு மாய்மாலத்தை நாட்டிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அஸ்ஸாமிலே, முளையிலேயே பிரச்சினைகள் கிள்ளியெறியப் பட்டிருந்தால், அது அமளி மாநிலமாக மாறியிருக்காது. பஞ்சாபிலே கூட அரசியல் லாபங்கள் இவைகளை எல்லாம் கருதாமல் முளையிலே அந்தத் தீவிரவாதத்தைக் கிள்ளி எறிந்திருந்தால், இன்றைக்கு பஞ்சாபும் ஒரு படுகொலை மாநிலமாக மாறியிருக்காது. காஷ்மீரிலேகூட அப்படித்தான். ஒவ்வொரு மாநிலத்திலேயும் பிரச்சினைகள் முளையிலே தோன்றியபோது அவைகளைக் கிள்ளி எறியாமல், தேசத்தின் அக்கறையோடு அவைகளை அகற்றாமல் தங்களுடைய

அரசியல் சுயலாபங்களுக்காக அவைகளை வளர்க்கவிட்டு, வேடிக்கை பார்த்ததினால்தான் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே பல மாநிலங்களில் இந்த சமஷ்டி அமைப்புகள் இப்போது இருக்கிறதா, இல்லையா என்கின்ற அளவிற்கு பல்வேறு படுகொலைகளும், இனப் படுகொலைகளும் அங்கே நிகழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. நம்முடைய சொந்த நாட்டிலே, காஷ்மீரிலே நம்முடைய சொந்த சுதந்திரக் கொடியை ஏற்றிவைப்பதற்குக்கூட நம்மால் முடியாத ஒரு அவலத்தை நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது. அதற்கெல்லாம் காரணம் ஆரம்பத்திலே மத்தியிலே இருக்கிற ஆளும் காங்கிரசார் அதைக் கிள்ளி எறிந்திருப்பார் களேயானால், தடை விதித்திருப்பார்களேயானால், அவைகளை முளையிலே கிள்ளியெறிந்திருப்பார்களேயானால், இதெல்லாம் வந்திருக்காது. அதே நிலைமை தமிழகத்திற்கும் வந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட ஆபத்து தென் பகுதிக்கு வரக் கூடாது என்பதற்காக இந்த எச்சரிக்கை மிகுந்த உணர்வோடு மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் மிகத்துணிவோடு இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத் தலைமுறை கருதி, தேசிய எதிர்காலம் கருதி, ஒருமைப்பாட்டைக் கருதி, மிக உண்மையான தேசியவாதியாக அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லாத ஒன்றுக்கு எதற்குத் தடை என்று சொல்வார்களேயானால், இந்த நாட்டிலே ஒரு சட்டமும் தேவையே இல்லை. எந்தச் சட்டங்களும் எழுதப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. இல்லாத ஒன்றுக்கு எதற்குத் தடைச் சட்டம் என்று நினைத்தால், அப்படி ஒரு கேள்வி எழுப்பினால், இந்த நாட்டுக்கு எந்தச் சட்டமும் தேவையில்லை. மனித சமுதாயத்திற்கு எந்த மருந்துமே தேவையில்லை. இல்லாத நோய்க்கு எதற்கு மருந்து என்று கண்டுபிடிக்காமல் விட்டிருப்பார்களேயானால் எந்த மருந்துமே தேவையில்லை. ஆக மனிதகுலத்திற்கு மருந்து எப்படித் தேவையோ, சமுதாய அமைப்புகளுக்கு சட்டம் எப்படித் தேவையோ, அப்படியே இன்றைக்கு ஒரு மிகப் பெரிய பிரச்சினைக்காக வலியுறுத்தப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தைக் கொச்சைப்படுத்தாமல் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கடுமையானச் சட்டத்தைப் போட்டு, அதைச் செயல்படுத்துகிற துணிவோடு நம்முடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்தியதனாலேதான் இங்கே விடுதலைப் புலிகளே

1994 ஏப்ரல் 20] [திரு. செ. கு. தமிழரசன்]

இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே சட்டம் இருந்து, செயல்படுத்தியதனாலேதான் இங்கே விடுதலைப் புலிகளை அறவே ஒழிக்க முடிந்தது. எனவே, இதைக் கொச்சைப்படுத்திட வேண்டிய அவசியமில்லை என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நான் இறுதியாக, நேரத்தின் அருமை கருதி, ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல; தீவிரவாத கும்பல்களினால் புரட்சித் தலைவியின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிற நிலைமை இருந்தால்கூட, இந்தத் தேசத்தின் அக்கறை கருதி, ஒரு மனித நேயத்தோடு, மனித சமுதாயத்தின் ஒற்றுமை கருதி, இந்தத் தீர்மானத்தை மிகத் துணிவோடு அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலே வேறு யாருக்கும் இல்லாத அளவுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த தலைவருக்கும், இன்றைக்கு எப்படி அந்தக் கணக்கெடுப்பு எடுத்தாலும் இல்லாத அளவிற்கு சமுதாயத்திலே மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய மாநில முதல்வர், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவிக்கு மட்டும்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மக்கள் செல்வாக்குள்ள ஒரு தலைவர் எதனையும் பொருட்படுத்தாமல் எந்த அரசியல் லாபத்திற்கும் தன்னை உட்படுத்திக்கொள்ளாமல் இந்த நாட்டின் எதிர்காலம், இந்த நாட்டின் ஒருமைப்பாடு, வருங்காலத் தலைமுறையினுடைய அந்த நல்ல அமைதியான வாழ்க்கை, இதை மனதிலே கொண்டு, தன்னுடைய இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் அவ்வளவு கோடி மக்களுடைய செல்வாக்கைப் பெற்றிருக்கிற அவர்கள், தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல், இந்தத் தீர்மாத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஜனநாயகவாதிகள், தேசியத்திலே அக்கறை உள்ளவர்கள், நாட்டு மக்களுடைய அமைதியிலே அக்கறை உள்ளவர்கள் நிச்சயம் வரவேற்க வேண்டுமென்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அவருடைய உயிருக்கு ஒரு சின்ன களங்கம் ஏற்பட்டாலும் 6 கோடி தமிழ் மக்களும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அப்படிப்பட்ட நிலையிலே இந்தத் தீர்மானத்தை நான் இந்தியக் குடியரசு கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை களுக்கு அரசியல் ரீதியான தீர்வு மட்டும்தான் வழியாக இருக்க முடியுமே தவிர, ஆயுதக் கலாச்சாரம் அங்கே ஒரு தீர்வை ஏற்படுத்தி

[திரு. செ. கு. தமிழரசன்] [1994 ஏப்ரல் 20

விட முடியாது. இலங்கைத் தமிழர்களுடைய நல் வாழ்க்கைக்கு அரசியல் தீர்வுதான் ஒரு இறுதி முடிவை ஏற்படுத்த முடியுமே தவிர, அங்கே ஆயுதம் தாங்கியோ, அணுகுண்டு போட்டோ, துப்பாக்கி ஏந்தியோ ஒரு காலத்திலும் ஒரு தீர்வை கொண்டு வர முடியாது. ஆகவே எந்த முகாந்திரத்திலும் இலங்கைத் தமிழர்களுடைய நல்வாழ்க்கைக்கானாலும், இந்திய நாட்டு மக்களுடைய நல்வாழ்க்கைக்கானாலும் இந்தத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையும் அதனுடைய போக்கும் நிச்சயம் பயன்படாது என்கிற வகையிலே இந்தத் தீர்மானத்தை நான் இந்தியக் குடியரசு கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கின்றேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.வி. சண்முகம்.

* திரு. *எஸ்.வி. சண்முகம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விடுதலைப் புலிகளுடைய இயக்கத்தை ஏற்கெனவே தடை செய்ய வைத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அந்தத் தடையை மீண்டும் நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இன்றைக்கு ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். விவாதத்தின் நடுவிலே முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை தெளிவாகச் சொல்லுங்கள்: திட்டவட்டமாகச் சொல்லுங்கள் என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள். சிலராலே அப்படி தெளிவாக சொல்ல முடியாது. ஏனென்றால், இது ஒரு ஆசா பாசம் சம்பந்தப்பட்ட விஷயம் ஆகும். இதிலே ஆசைகள் அடங்கி இருக்கிறது. LTTE-யை எதிர்க்கின்றோம் என்று சொன்னால் அவன் லேசிலே விட மாட்டான். அள்ளிக் கொடுப்பதையும் நிறுத்தி விடுவான். அரசியலிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போன்று எதற்கும் துணிந்தவர்கள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள் என்று கருதி விடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமானால் முதலில் தேச பக்தி வேண்டும். தேச பக்தியைத் தெய்வ பக்தியாக கருதுபவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வர முடியும். ஆட்சியா? அதிகாரமா? உயிரா? எதைப் பற்றியும் கவலை இல்லை என்பவர்கள்தான் இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வர முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கும் துணிந்த ஒரு உள்ளம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருப்பதனாலேதான் இந்தத்

1994 ஏப்ரல் 20] [திரு. எஸ்.வி. சண்முகம்]

தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிலருக்கு அது இல்லை; அதனாலே அவர்களாலே தெளிவாகச் சொல்ல முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டாலும் வராது. நம்முடைய மூத்த அமைச்சர்கள் எப்படித்தான் கேட்டாலும் வராது. அது ஆசாபாசம் சம்பந்தப்பட்ட விஷயம். விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்கு முதலில் துணிச்சல் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரு பாரம்பரியம் வேண்டும், அது சாதாரண விஷயம் அல்ல. போகிற போக்கிலே எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிற விஷயம் அல்ல. தன்னிடம் முரண்பாடு உள்ளவர்களை விடுதலைப் புலிகள் எப்படி எல்லாம் சின்னாபின்னப்படுத்தினார்கள் என்பது உலகத்திற்குத் தெரியும். விடுதலைப் புலிகளுடைய இயக்கத்திலே இருந்து அவர்களோடு இரண்டறக் கலந்திருந்தவர் முன்பிருந்த சிறிசபாரத்தினம். தங்களை எதிர்க்கிறார் என்பதற்காக சிறிசபாரத்தினத்தை அவருடைய கை கால்களையெல்லாம் கயிற்றிலே கட்டி ஜீப்பிலே தெருத்தெருவாக இழுத்து, சின்னாபின்னப்படுத்திக் கொன்றவர்கள், விடுதலைப் புலிகள். அது போல பிளாட்டுடைய தலைவர் உமாமகேஸ்வரன்; அது போல ஈ.பி.ஆர்.எல்.எப்.—உடைய தலைவர் பத்மநாபா; இலங்கை காந்தி என்று சொல்லப்பட்ட அமிர்தலிங்கம்; இன்னும் சொல்லப்போனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள்; இப்படி தலைவர்களையெல்லாம் கொன்று குவித்தவர்கள் விடுதலைப் புலிகள். இவை எல்லாம் நம்முடைய முதலமைச்சருக்குத் தெரியாதா? அந்த விடுதலைப் புலிகளோடு மோதினால் தன்னுடைய உயிருக்கும் பாதுகாப்பு இல்லை; நிச்சயமற்ற நிலை இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், விடுதலைப் புலிகளோடு மோதுவது என்ற நிலையை அவர் எடுத்திருப்பதற்குக் காரணம், அவருக்கு இருக்கிற தேச பக்தி. (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலேதான் அவர்களை, நம்முடைய முதலமைச்சர் அவர்களை, புரட்சித் தலைவி அவர்களை வீராங்கனை என்கிறோம். வீரத்தின் விளைநிலம் என்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சரைப்போன்ற வீரத்திலகம் இந்தியாவில் எங்காவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இன்றைக்கு விடுதலைப் புலிகளை எதிர்த்து வெஞ்சமர் புரிகின்றார் என்றால் அது அவருக்குள்ள பாரம்பரியம். பாரதி சொன்னானே "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே; அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்ததும் இந்நாடே; அதை சிந்தையில் வைத்து நெஞ்சினில் நிறுத்தி'' என்று தேச பக்தியோடு பாடினானே பாரதி, அந்த

[திரு. எஸ்.வி. சண்முகம்] [1994 ஏப்ரல் 20

பாரதியினுடைய பரம்பரை என்பதனாலே அவர்கள் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த தேச பக்திதான் தீவிரவாதிகளுடைய பெருவிரல் ரேகையைக்கூட இந்த மண்ணிலே பதிய விட மாட்டேன் என்று சொல்ல வைத்தது. இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கின்ற நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர் சொன்னாரே எல்லா மாநில நிலைமைகளையும், அஸ்ஸாமிலே உல்பா, வெறும் தீவிரவாத நடவடிக்கைகளை மாத்திரமா அவன் செய்து கொண்டிருக்கிறான்? அஸ்ஸாமிலே இருக்கக்கூடிய எண்ணெய் வளம். அந்த கச்சா எண்ணெயை வெளி மாநிலத்திற்குக் கொண்டு போக முடியவில்லை. நாள் ஒன்றுக்கு 4 கோடி நஷ்டம் என்று நாடாளுமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-25

பஞ்சாபிலே பதட்டநிலை தணியவில்லை? நமக்கு 10 கோடி தருகின்ற மத்திய அரசு, பஞ்சாபுக்கு 200 கோடி தந்துக்கொண்டு இருக்கிறது. பெரும்பகுதி பணம் பஞ்சாபிலே செலவழிக்கப்பட்டு இருக்கிறது. மஹாராஷ்டிராவில், பம்பாயில் 500 பேர்கள் கொல்லப்பட்டார்கள். அது இப்போது பம்பாய் இல்லை. பாம்பாய். அந்த நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு பத்திரிகைச் செய்தியிலே இருக்கிறது. நீதிமன்றத்திலே இரண்டு கோஷ்டிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கு வாழ்கிறது. ** நிறைய சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசுகிறார்களே, மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட், காஷ்மீருக்கு போக முடிந்ததா? போன இடத்திலே தீவிரவாதிகள் சுற்றி வளைத்துச் சுட்டார்கள். தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடி வந்தார். கோவாவிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ஒட்டுமொத்த இந்திய நலனுக்குச் சரியாக இருக்காது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ்.வி. சண்முகம் : தலைவர் அவர்களே, கோவா மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருக்கிறது. அது ரொம்ப அதிசயமான மாநிலம். 3 நாளில் இரண்டு முதலமைச்சர்கள். அந்த மாநிலத்திலே ஒரு அமைச்சர். பருலேக்கர். அவர், பம்பாயிலே வெடி குண்டு வைத்துக் கொன்றானே மம்மூன் பிரதர்ஸ், அவர்களோடு உறவு என்று, அவர் மீது அந்த முதலமைச்சரே நடவடிக்கை எடுத்திருக்கிறார். சுருக்கமாகச் சொல்லப் போகிறேன். இந்தியாவின் பல மாநிலங்களில் இன்றைக்கும் ஊரடங்கு சட்டம் இருக்கிறது. ஊரடங்கு சட்டம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 ஏப்ரல் 20] [திரு. எஸ்.வி. சண்முகம்]

இல்லாத ஒரு மாநிலம் இந்தியாவில் இருக்கிறதென்றால் அதுதான் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி வருவதற்கு முன்பு எத்தகைய நிலை இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் தெளிவாகச் சொல்ல முடியாது. ஊசல் ஆடுகிறார்கள் என்றால், அவருடைய கட்சியின் நிலையே அப்படித்தான். அவர்கள் கட்சி கொள்கை நிலை அது. விடுதலைப்புலிகளோடு கைகோர்த்து இருந்ததாலேதான் அன்றைக்கு அவர்களுடைய ஆட்சியே நீக்கப்பட்டது. அந்த கைகோர்த்ததை இன்னும் அவர்களால் விட முடியவில்லை. காங்கிரஸ் கட்சி கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களை எவ்வளவு புகழ்ந்தார்கள்? இந்தியாவிலேயே சமாதானம் தவழுகின்ற மாநிலத்தைத் தந்தவர்கள் என்று இங்கே புகழ்ந்தார்கள். இங்கு இருந்தவர்களும் புகழ்ந்தார்கள். அங்கிருந்து வந்தவர்களும் புகழ்ந்தார்கள். விடுதலைப் புலி நடமாட்டம் பற்றி எப்போது சொல்லத் தொடங்கினார்கள்? என்றைக்கு காமராஜர் ஆட்சியை தமிழ்நாட்டிலே கொண்டு வருவோம் என்று அவர்கள் சொன்னார்களோ அன்று முதல்தான் விடுதலை புலி நடமாட்டம் இருக்கிறது என்று சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் இந்தத் தடைச் சட்டத்தை நீடிப்பதிலே இருக்கக்கூடிய குழப்பம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, எப்படியெல்லாம் மத்திய அரசினர் தட்டிக் கழிக்கிறார்கள் என்று. இங்கு தீர்மானம் கொண்டு வருவேன் என்றவுடன் இல்லை இல்லை அது தேவையில்லை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்பது; சரி, 2 நாள் காலஅவகாசம் எடுத்துக்கொண்டவுடனே தீர்மானத்தை அவர்கள் கைவிட்டு விட்டார்கள் என்பது; இந்தியா முழுவதும் பிரச்சாரம் செய்ய முயற்சிக்கிறார்கள். விடுதலைப் புலிகளோடு இந்த அரசுக்கு உறவு இருக்கிறது; நெருக்கமாக இருக்கிறது; அதனாலேதான் தீர்மானத்தைக் கொண்டுவர மறுத்து விட்டார்கள் என்றெல்லாம் ஒரு தவறான தோற்றத்தை உண்டாக்க நினைக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் மத்திய இணை அமைச்சர் சவான் அவர்கள் சொன்னது. இங்கே இருக்கக்கூடிய ஒரு பெரிய தலைவர் அடிக்கடி போகிற போக்கிலே சொல்லுவார். அவருக்கு வாழைப்பழம் சாப்பிடுவது என்றால் ரொம்பப் பிரியம். ஏதோ அங்கே விடுதலைப் புலி நடமாட்டம். அங்கு தெரிகிறார்கள் என்பார். அது மாத்திரமல்ல. தமிழ்நாட்டிலே விடுதலைப் புலி நடமாட்டம் இருக்கிறது என்று சொல்கின்ற அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் தகாத உறவுகளுக்கு எல்லாம் இன்றைக்கு முயன்று கொண்டிருக்கிறார்கள்.

[திரு. எஸ்.வி. சண்முகம்] [1994 ஏப்ரல் 20

இந்த சபையிலே ஒரு நாள் பிரபாகரன் படத்தை எடுத்துப் போனார்கள் ; தாணு படத்தை எடுத்துப் போனார்கள்; சிவராஜன் படத்தை எடுத்துப் போனார்கள்; என்று காங்கிரஸ் கட்சியினரே பேசினார்கள். அந்தப் படங்களை எல்லாம் தூக்கிக் கொண்டு போனவர்கள் வீட்டில்தான் இன்றைக்கு விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் *1-30*

அதேபோல், தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட போது இனிப்புக் கொடுத்து மகிழ்ந்தார்கள் அல்லவா; வன்முறையைப் பற்றி என்று ரொம்ப அழகாகப் பேசக் கூடியவர்கள், கொடி பிடித்தால் கையை வெட்டுவோம்; பச்சை ரத்தம் பரிமாறப்படும் என்று எல்லாம் பேசுகின்ற சாத்வீகவாதிகள், காந்தியவாதிகள்; அவர்களோடு எல்லாம் காங்கிரஸ்கட்சியினர் இன்றைக்கு தகாத உறவு கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற ஒரு தவறான ஆசை வந்திருப்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு, இந்த அரசு விடுதலைப் புலிகள் பற்றி எத்தகைய கொள்கையைக் கடைபிடிக்கிறது என்பதிலே தடுமாற்றம் வந்திருக்கிறது. தடுமாற்றம்; தள்ளாட்டம்; நிச்சயமின்மை. இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இங்கு வருவதற்குத் தயாராக இல்லை. உறுப்பினர் ஒருவர் தாறுமாறாக நடந்து கொண்டார், பேரவைத் தலைவர் 2 நாள் வெளியே இரு என்று சொன்னதற்கு, அதற்கு உண்ணாவிரதம். ராஜீவ் காந்தியைக் கொன்ற ஒரு கொலைக் கூட்டத்தை இந்த மண்ணிலிருந்து வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்துவதற்கான முயற்சிகளை எடுக்கின்ற இந்தத் தீர்மானத்தை வாழ்த்த வரமாட்டார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்காக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுவெல்லாம் அவர்களுடைய ஊசலாட்டம். இதற்கு மேல் ஒரு முதலமைச்சர் என்ன செய்ய முடியும்? விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டுமென்று எழுதினார்கள். நேரடியாகச் சொன்னார்கள். ராஜீவ் காந்தியைக் கொன்ற ஒரு கொலைக் கூட்டத்தைப் பற்றி கூடுதல் ஆவணங்களைக் கேட்டார்கள். இன்னும் என்ன இருக்கிறது? ரெக்கார்ட்ஸ் இருக்கிறது. விடுதலைப் புலிகள் யார் என்று தெளிவாகத் தெரியவேண்டும். முதலமைச்சர் அவர்கள் கூடுதல் ஆவணங்களை எல்லாம் அனுப்பினார்கள். அப்புறம் குழப்புகிறார்கள். அது நம்முடைய திரு. தம்புசாமி அவர்கள் சொன்னது போல் அவர் சொல்ல வந்தது வேறு; மத்திய அரசு அரசியல் செய்கிறது என்று சொல்ல வந்தார். அதை அவர் ஒரு

1994 ஏப்ரல் 20] [திரு. எஸ்.வி. சண்முகம்]

பஞ்சாயத்து மாதிரி பொதுவாக சொல்லுகிறார்; சில நேரத்தில் தெளிவாகச் சொல்ல வேண்டும். இது இப்படிதான் ; அது அப்படிதான்; அது கொஞ்சம் மார்க்சீய சிந்தனையாளர்களுக்கு அப்படி கொஞ்சம் இருக்கும். ஆனால் இப்போது மார்க்சீயமே புரிந்துகொள்வது கொஞ்சம் சிரமமான விஷயம் இல்லையா; அதை புரிந்துகொள்ள கொஞ்சம்... அவர் சொல்ல வந்தது மத்திய அரசை எதிர்த்து. மத்திய அரசை எதிர்ப்பதிலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி ரொம்பத் தெளிவாக என்றும் இருக்கிறார்கள். என்றைக்கும் அவர்கள் காங்கிரசுடன் ஒத்துப் போக மாட்டார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்களுக்கு அவர் தெளிவாகச் சொல்ல முடியவில்லை; பட்டென்று சொல்ல முடியவில்லை. மத்திய அரசு இந்த அரசியல் நிலையில் ஊசலாட்டம் என்று; குழப்பம் என்று; *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சண்முகம் அவர்கள் சம்பவங்கள் பலவற்றைச் சொன்னார்கள். மார்க்சிய கம்யூனிஸ்டு என்று இவர்களைச் சொல்லுங்கள். மார்க்சியம், மார்க்சியம் என்று சொல்லக்கூடாது. மார்க்சியம் என்பதை அவர்கள் தெளிவாகத்தான் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, மார்க்சியம் தவறாக எழுதிவிட்டார்கள் என்று அப்படிப்பட்ட சொல் சொல்லாதீர்கள். இங்குள்ள மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு என்று சொல்லுங்கள். மார்க்சியம் என்று சொல்லுவது அது ஒரு பெரிய சிந்தனையாளர்களையே தவறாகச் சொல்லுவது போல் தெரிகிறது.

திரு. எஸ்.வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மார்க்சியத்தைச் சொல்லவில்லை. அந்த மார்க்சியத்தைப் புரிந்துகொள்வதிலே ரொம்ப சிரமம் என்று சொன்னேன். அதில் உலகத்தில் உள்ளவர்களுக்கும் சிரமம் இருக்கிறது, இந்தியாவில் உள்ளவர்களுக்கும் சிரமம் இருக்கிறது. அதைச் சொல்ல வைப்பதிலே கஷ்டம் இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி இந்த மத்திய அரசு கொள்கையைச் சாடுவதில் மிகத் தெளிவாக இருக்கிறது. அதில் அவருக்கு குழப்பம் இல்லை. சொல்கிற முறையில் கொஞ்சம் முன்னே, பின்னே இருக்கிறது. இதற்கு மேல் ஒரு அரசு கேட்க முடியாது. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருக்கிறது

[திரு. எஸ்.வி. சண்முகம்] [1994 ஏப்ரல் 20

என்று சொல்லுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அல்லவா, ஆந்திராவில் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று. ஆந்திர தீவிரவாத இயக்கத்தோடு தொடர்பு என்றால் ஆந்திராவில் யார் இருக்கிறார்கள்? காங்கிரஸ் ஆட்சி. காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளோடு இவர்கள் தொடர்புகொள்கிறார்கள் என்றால் யார்? காங்கிரஸ் ஆட்சி. அசாமில் காங்கிரஸ் ஆட்சி; இந்தியா முழுவதிலும் இருக்கிற காங்கிரஸ் ஆட்சியோடு இந்த விடுதலைப் புலிகள் உறவோடு இருப்பார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கங்களிலிருந்து எல்லாம் நான் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. சன்டே பத்திரிக்கைச் சொல்லுகிறது சரியாகத் தான் இருக்கும் என்று கூட நினைக்கிறேன். காங்கிரஸ்-LTTE காம்ப்ரமைஸ் ஆகிவிட்டதோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் ஏமாற்ற முடியாது. இந்த மாதிரி, double tongue, double thinking, double action, double dialogue, double role எல்லாம் தமிழ்நாட்டில் எடுக்காது. இங்கே ஒன்று சொல்லுவது; அங்கே போய் ஒன்றைச் சொல்லுவது; இவர்களுக்கு இப்போது ஒரு காரணம் வேண்டும்; நம்முடைய ஆட்சியை 356—வது சட்டத்தை வைத்து நீக்குவதற்கு ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கு வேண்டும். இப்படியொரு தீர்மானம் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் மத்திய உள்துறை அமைச்சர் சாக்குப்போக்கெல்லாம் சொன்னது. இங்கே வேண்டாமே; நாங்கள் அங்கே போட்டுக் கொள்கிறோம். அப்புறம் இங்கே இரண்டு நாள் தள்ளி வைத்தவுடனே, இராஜ்யசபாவிலே கிளப்புவது. நம்முடைய முதலமைச்சரவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) விடுதலைப் புலிகளெல்லாம் வெளியிலேயிருந்து வருகிறார்கள். முதலமைச்சரவர்கள் நேரடியாகவே கேட்டார்களே, கப்பல் படை கேட்டார்களே, நேவல் ஃபோர்ஸ் கேட்டார்களே, இந்த டெலிபோனிலே சுற்றிக்கொண்டு பேசுவது மாதிரி பேசி ஒரு டிராமாவைப் போட்டுவிட்டு படை கொடுக்கவில்லையே? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

தேச விரோதிகளைச் சிறையில் அடைக்கின்ற அதிகாரம் வேண்டுமென்று கேட்டார்களே, கொடுக்கவில்லையே. தமிழ் மண்ணிலே ஒருகாலத்திலே விடுதலைப் புலிகளைப் போட்டிபோட்டு ஆதரித்த காலம் இருந்தது. விடுதலைப் புலியோடு போட்டோ எடுத்துக் கொள்வது என்றால் பெருமையாக இருந்தது.

1994 ஏப்ரல் 20] [திரு. எஸ்.வி. சண்முகம்]

அது பழைய கதை. அன்றைக்குத் தமிழர் என்ற முறையில் அவர்கள் அகதிகளாக வந்தவர்கள் என்ற முறையில், எல்லோரும் சேர்ந்து ஆதரித்தோம். இராஜீவ் காந்தி அவர்கள்கூட போயிங் விமானத்திலே அரிசி அனுப்பினார், பருப்பு அனுப்பினார். அதெல்லாம் பழைய கதை.

தமிழ் ஈழம் வேண்டுமா, இல்லையா என்பது அல்ல பிரச்சினை. இன்றைக்கு இந்தியாவுக்கு, இந்திய விரோத நடவடிக்கைகளைச் செய்யக்கூடிய ஒரு இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்குத் தேசப்பற்று இருக்குமானால், நாட்டு நலனில் நாட்டம் இருக்குமேயானால் காலந்தாழ்த்தாமல் இந்த மாநில அரசினுடைய தீர்மானத்தை ஏற்க வேண்டும்.

பேசாமல் எல்லாம் ரொம்ப நாளைக்கு இருக்க முடியாது; எப்படியாவது பேசித்தான் ஆக வேண்டும் ; எப்படியாவது சிரித்துத்தான் ஆக வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் ரொம்ப நாளைக்கு இருக்க முடியாது எனக் கூறி, தேச பக்தி மிக்க நம்முடைய முதலமைச்சருக்கு தமிழ்நாட்டு மக்கள் துணை நிற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேச நலனில் நாட்டமுள்ள நம்முடைய முதலமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நெஞ்ச நிறைவோடு ஏற்று அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் எப்பொழுதும், எந்நாளும் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்கின்ற காங்கிரஸ் பேரியக்கம் தீவிரவாதிகளை எங்கும் நடமாட விடாது என்கின்ற உறுதியில் எப்பொழுதும் உள்ளது. இந்த அடிப்படையில் நிச்சயம் மத்திய அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தீர்மானத்தை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை-அசாத்திய நம்பிக்கை—எங்களுக்கு இருக்கிறது.

காரணம், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இதுவரை பிரதமராக இருந்து வந்தவர்கள் மறைந்த அன்னை இந்திராகாந்தி அவர்கள் எந்த நாளும் தீவிரவாதத்திற்குத் துணை போனது கிடையாது. பஞ்சாப் மாநிலத்தில் பொற்கோயிலிலே- அங்கு தீவிரவாதிகள்

[திரு. கே. செல்வராஜ்] [1994 ஏப்ரல் 20

உட்புகுந்தார்கள் என்பதற்காக—அன்றைக்கு இராணுவத்தையே அனுப்பி அவர்களை அடக்கச் செய்தும், தன்னுடைய உயிரையே இந்தத் தேச மண்ணுக்காக நீத்த அன்னை இந்திராகாந்தியும் தேசீய ஒருமைப்பாட்டைக் காத்தவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

மறைந்த தலைவர் இராஜீவ்காந்தியும், தமிழர் தமிழர் என்று தமிழனுக்காகத் துணை நிற்பதாகப் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்த திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைப் போலல்லாமல் தமிழனுக்காக உயிர் கொடுத்த அந்தத் தலைவர் இலங்கை சென்று ஒப்பந்தத்தை ஏற்படுத்த சென்றபொழுது அங்கு இலங்கையிலே இருக்கின்ற இராணுவ வீரன் துப்பாக்கியால் அடித்தபொழுது, அந்த அடியையும் வாங்கிக்கொண்டு, இந்தத் தமிழனுக்காக அன்று உழைத்த எங்களது மறைந்த தலைவர் இராஜீவ்காந்தியை இந்த நேரத்தில் நினைவுபடுத்த நான் ஆசைப்படுகிறேன்.

அன்றையதினம் தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ் நாட்டுக்காக என்றென்றும் உறுதியாக இருந்து செயல்பட்டதன் காரணமாக அன்றைக்கு ஆட்சியிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் விடுதலைப் புலிகள் இங்கு ஊடுருவுவதற்கு உறுதுணையாக இருந்ததன் காரணமாகப் பட்டிதொட்டியெங்கும் தமிழகத்தில் அவர்கள் பரந்து விரிந்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற நிலையங்களும் இங்கே அமைக்கப்பட்டு தமிழகத்தில் ஊடுருவியதன் காரணமாக மிகவும் பரந்து விரிந்து எங்கு பார்த்தாலும் விடுதலைப் புலிகளினுடைய அட்டகாசமும், தமிழகத்தில் கொலையும், கொள்ளையும் இன்றைக்கு நடந்து வருகின்ற இந்தச் சூழ்நிலைக்குக்கூட காரணம் அன்றையதினம் இருந்த தி.மு.க. அரசு என்பதனை இங்கே நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காரணம், அன்றைய விடுதலைப் புலிகளுடைய ஊடுருவல் இன்றும் அடக்கப்பட முடியாமல் இருக்கின்றது என்று யார் கூறினாலும் இந்த ஆட்சி வந்த பிறகு மறைந்த தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் மறைவுக்குக் காரணமான விடுதலைப் புலிகளுக்குத் துணை போனவர்கள் அன்றைய விடுதலைப் புலிகளை அடக்கியே தீருவோம் என்று இன்றைய அரசு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆட்சிக்கு வந்த முதல் நாள்பொழுது கட்டளையாகக் கூறியதோடு மட்டுமல்லாமல் மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்தை முன்பே ஒருமுறை விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு மத்திய அரசும்

1994 ஏப்ரல் 20] [திரு. கே. செல்வராஜ்]

ஏற்றுக்கொண்டது. எங்கள் காங்கிரஸ் கட்சியும் இந்த அவையிலேயே வரவேற்றது.

இப்பொழுது எந்தவொரு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும் மறைந்த தலைவர் இராஜீவ்காந்திக்குத் துரோகம் செய்து இதை வரவேற்காவிட்டாலும்கூட, மனச்சாட்சியுள்ள நாங்கள் நிச்சயம் எந்த நேரத்திலும் உங்கள் பின்னால் உறுதியாக நிற்போம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டத்தை கொண்டு வருவதை வரவேற்கிறோம் என்பதனை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தவொரு நேரத்திலும், எந்த வேளையிலும் தீவிரவாதிகளுக்கும் தீவிரவாத சக்திகளுக்கும் துணை போகாமல் அஞ்சா நெஞ்சம் படைத்த அன்னை இந்திராகாந்தியைப் போல நீங்கள் செயல்படுவதை ஏற்றுக் கொள்கின்றோம். உங்கள் பின்னால் நிற்போம் ; என்றைக்கும் தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும், தமிழ் நாட்டுக்கும் உறுதுணையாக நீங்கள் செயல்படுத்துகின்ற எந்தச் சட்டமானாலும், எந்தத் திட்டமானாலும் உறுதியாக ஏற்போம் என்று கூறி, பாரதப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் இன்றைக்குப் பேசவில்லையே என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்; பேசாவிட்டாலும், இந்தச் சட்டத்தை நிச்சயம் ஏற்றுக் கொள்வார். காரணம், தமிழகத்தில் மட்டும் நாம் விடுதலைப் புலிகளை அடக்குவோம் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், ஆந்திரா, கர்நாடகம், பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் விடுதலைப் புலிகள் ஊடுறுவல் இருந்தால், அந்த இடங்களுக்கும் தமிழகத்தினுடைய காவல் துறை சென்று, நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த அடிப்படையில், இந்திய நாடு முழுவதும் விடுதலைப் புலிகளைத் தடை செய்கின்ற சட்டத்தை, நிச்சயம் பார்லிமெண்டில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ழ விடுதலைப்புலி இயக்கத்தினை, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு தடை செய்யப்பட்ட இயக்கமாக, இந்திய அரசு அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை, இம்மாமன்றத்தின்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோது, கேட்டுக் கொண்டேன்.

இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய சூழ்நிலையை, நாம் என்றைக்கும், எப்போதும் அனுமதிக்கக் கூடாது என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருந்தாலும், சில மாண்புமிகு உறுப்பினர்கள், தேவையற்ற அரசியல் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்தார்கள். வேறு சிலர், இந்தத் தீர்மானத்தை நேரடியாக எதிர்க்க இயலாவிட்டாலும், மறைமுகமாக தங்கள் அரசியல் மன மாச்சரியங்களை வெளிப்படுத்தினார்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் சுட்டிக்காட்டியது போல, மாநில அரசு, தமிழக அரசு, இந்த விஷயத்தில் இதற்கு மேல் என்ன செய்ய முடியும்? இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்ததற்குக் காரணமே, மத்திய அரசு, தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது; மத்திய அரசு தனது கடமையைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே தான், இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே, நான் பலமுறை இந்த அவையில் தெரிவித்ததுபோல, இந்த எல்.டி.டி.ஈ. யைக் கட்டுப்படுத்துவதில், நாங்கள் மத்திய அரசிடம் உதவிகள் கேட்டபோது, மத்திய அரசு, தமிழக அரசுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் சரியான முறையில் செய்யவில்லை. ஏற்கனவே, காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக நிதியுதவிக் கேட்டோம். ஆனால், அந்த நிதியுதவியை மத்திய அரசு தரவில்லை. கடலோரப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக, இந்தியக் கடற்படை Naval Detachments ஏழு உள்ளன. அவை போதாது; மேலும் இரண்டு Naval Detachments வேம்பாறிலும், பூம்புகாரிலும் வேண்டுமென்று கேட்டோம். இதுவரை மத்திய அரசு, பலமுறை நாம் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தியுங்கூட, நிறைவேற்ற முன்வரவில்லை. ஏற்கனவே, இந்த அவையில் வேறொரு விஷயத்தை நான் தெளிவுபடுத்தினேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த போராளிகளைப் பாதுகாப்பில் வைக்கவில்லையே; இப்படி சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அயல் நாட்டவரை நீங்கள் தப்பிக்க அனுமதித்து விடுகிறீர்களே என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களை, காங்கிரஸ் கட்சியினரும், வேறு எதிர்க்கட்சியினரும் எங்கள் மீது பழி சுமத்துகிறார்கள். அப்போது

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நான் குறிப்பிட்டேன். அதற்கான போதிய அதிகாரங்கள் தமிழக அரசிடம் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தினேன். இப்போதுள்ள Foreigners Act *3 (2)* (E)—இன்படி எங்களுக்குள்ள அதிகாரம் போதாது; இந்தச் சட்டப் பிரிவின்கீழ், நாங்கள் சந்தேகப்படுகிற அயல் நாட்டவரைக் கைது செய்ய முடியாது; சிறையில் அடைக்க முடியாது; ஆகவே, அந்த அதிகாரத்தை, மாநில அரசுக்கு வழங்குங்கள்; Foreigners Act *3 (2)* (G)—இன்கீழ் அந்த அதிகாரத்தை வழங்குங்கள் என்று மீண்டும் மீண்டும் மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டோம். அந்த அதிகாரத்தை மாநில அரசுக்குத் தர இயலாது; தர முடியாது என்று அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். இவையெல்லாம் எந்த வகையில் நியாயம் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, எங்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தனிப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவர்கள் இந்த நாட்டின் அன்பிற்குரிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்து விட்டார்கள். இந்த நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அவர்கள் ஊறு விளைவிக்கிறார்கள். ஆகவேதான், இதை ஒரு தேசியக் கடமையாகக் கருதி, நாங்கள் அவர்களை எதிர்க்கிறோம். இதில், மத்திய அரசு தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும்; எங்களுக்குத் துணை நிற்க வேண்டுமென்று கேட்கிறோம்.

பிற்பகல் *1-45*

எந்தவகையில் இது ஒரு தேசிய அளவிலானப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், கருதப்பட வேண்டும் என்று நான் பலமுறை தெளிவுபடுத்தியுள்ளேன். ஆனால், மத்திய அரசு திரும்பத் திரும்ப தனக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போலவும், இது ஏதோ தமிழக அரசு தன்னுடைய அதிகாரவரம்புக்குள்ளே தானே செய்ய வேண்டிய பிரச்சினை என்பது போலவும், இது ஏதோ தமிழகத்தை மட்டும் பாதிக்கிற ஒரு பிரச்சினை என்பது போலவும் நடந்து கொண்டுள்ளது. அண்மையில்தான் மத்திய உள் துறை அமைச்சர் சவான் அவர்கள் பேசிய பேச்சுகளையெல்லாம் என்னுடைய முன்னுரையில் இந்த அவையில் நான் சுட்டிக்காட்டினேன். மத்திய அரசு ஏற்கெனவே, ஒரு சென்டிரல் ஆக்டின் கீழ் இந்த இயக்கத்தை தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்திருக்கிறது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இயக்கத்தை தடை செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டால், அதை மாநில அரசே செய்துகொள்ளலாமே என்று உள் துறை

அமைச்சர் கூறியிருக்கிறார். அதற்குத்தான் என்னுடைய முன்னுரையில் நான் தெளிவுபடுத்தினேன், அத்தகைய அதிகாரம் மாநிலத்திடம் இல்லை. அப்படியே ஒரு அதிகாரத்தை, ஒரு புதியச் சட்டத்தை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டாலும்கூட தமிழகத்திற்குள் மட்டும்தான் அந்தச் சட்டம் இயங்க முடியுமே தவிர, அண்டை மாநிலங்களில் எல்.டி.டி.ஈ.-ன் நடமாட்டங்களை எங்களால் கட்டுப்படுத்த முடியாது. பின்னர் நிதியுதவி கோரினோம். அதற்கு உள் துறை அமைச்சர், ஒரு பொறுப்பற்ற முறையில் தமிழகம் மிகவும் பணக்கார மாநிலம் என்று சொல்லி, மத்திய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார் என்று சொன்னால், இந்த நாட்டு மக்கள் என்ன என்று இதனை எண்ணுவது, எப்படி இதை எடுத்துக்கொள்வது. ஆகவேதான், இது தமிழகத்தை மட்டும் பாதிக்கிற பிரச்சினையல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். எல்.டி.டி.ஈ. நடமாட்டத்தை ஒடுக்குவது, அவர்களைக் கட்டுப்படுத்துவது தமிழக அரசின் பொறுப்பு மட்டுமல்ல என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். நான் ஏற்கெனவே கேட்டதுபோல், இதைப்பற்றி இந்த நாட்டின் பிரதமர் ஏன் பேசமாட்டேன் என்கிறார்? இதில் பட்டுக்கொள்ளாமல் மத்திய உள் துறை அமைச்சர் ஏன் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்? ஏற்கெனவே, மத்திய உள் துறை அமைச்சருக்கு அறிக்கை அனுப்பி, தேவையான ஆவணங்களை நாங்கள் கொடுத்த பிறகு, எவ்விதமான அறிக்கையும் தமிழக அரசிடமிருந்து வரவில்லை என்று மத்திய உள் துறை அமைச்சர் ஏன் பேசுகிறார்? அப்படிப் புள்ளிவிவரங்களோடு நாங்கள் மறுப்பு தெரிவித்தப் பின்னர்கூட, மத்திய உள் துறை அமைச்சர் ஏன் இதற்கெல்லாம் பதில் சொல்லவில்லை? ஆகவே, மற்றவர்கள் மீது பழி போடுவது எங்கள் நோக்கமல்ல. ஆனால், மத்திய அரசின் இரட்டை நிலையை மக்கள் முன்பு நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டையே சின்னாபின்னப்படுத்தக் கூடிய, இவ்வளவு பெரிய செக்குரிட்டிப் பிரச்சினையை, பாதுகாப்புப் பிரச்சினையை, இறையாண்மைப் பிரச்சினையை, அவர்கள் அரசியல் ஆக்கப் பார்க்கிறார்கள் என்பதை நினைக்கும்போதுதான் எனக்கு உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களே நாட்டின் இறையாண்மையைப் பற்றி, இந்த நாட்டை சின்னாபின்னம் ஆக்க ஒரு போராளி கும்பல் முயலுவதைப் பற்றி அக்கறை காட்டவில்லை. அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், இந்த நாட்டின் எதிர்காலம் என்ன ஆவது என்பதைத்தான் நாம் அனைவரும் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஆகவேதான், இந்த விஷயத்தில் எல்.டி.டி.ஈ. பிரச்சினையில் மாநில அரசு தன்னுடைய அதிகாரவரம்பிற்குட்பட்டு, தன்னுடைய சக்தியைக் கொண்டு என்னென்ன நடவடிக்கை முடியுமோ அனைத்தையும் எடுத்தாகிவிட்டது. மீண்டும் சொல்கிறேன், இது தமிழக அரசு மட்டும் கையாளக்கூடிய பிரச்சினையல்ல. ஆனால், நடைமுறையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், கடந்த 2 3/4 ஆண்டுகளாக தமிழக அரசு தனது சொந்த முயற்சியால்தான், தனது சொந்தப் பொறுப்பில்தான் எல்.டி.டி.ஈ.-ஐ ஒடுக்குகின்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். 10 கோடி ரூபாய் கொடுத்தோம், 10 கோடி ரூபாய் கொடுத்தோம் என்று மத்திய அரசு எத்தனை முறைதான் இந்த 10 கோடியைப் பற்றி பேசுவார்கள். நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியது போல, 1991-92 ஆம் நிதியாண்டில் அந்த 10 கோடி கொடுத்தார்கள். ஏற்கெனவே சொன்னோம் இது போதாது என்று. 1992-93 ஆம் நிதியாண்டில், 1993-94 ஆம் நிதியாண்டில், 1994-95 ஆம் நிதியாண்டில் இதுவரை அவர்கள் மேலும் எதுவுமே கொடுக்கவில்லையே. அதனால் என்ன செய்தோம். எங்களுக்கு எவ்வளவோ நிதிப் பற்றாக்குறை, நிதி நெருக்கடி இருந்தபோதிலும், எப்படியும் இந்தக் காவல் துறையை நவீனப்படுத்துகின்றப் பணியை, எல்.டி.டி.ஈ.-ஐ சமாளிப்பதற்காக நாங்கள் செய்தாக வேண்டுமே என்பதற்காக, எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும், மேலும் 10 கோடி ரூபாயை இதற்கு ஒதுக்கியிருக்கிறோம். இப்படி மாநில அரசே செய்து கொண்டு போக வேண்டுமென்று சொன்னால், இது தமிழக அரசின் பொறுப்பு மட்டுமா? மத்திய அரசுக்கு இதில் பொறுப்பில்லையா?

பிற்பகல் 1-50

இது ஒரு தேசிய பிரச்சினை இல்லையா? அப்படியானால் மத்திய அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது? மாநில அரசை மட்டும் எல்.டி.டி.ஈ. யோடு மோதவிட்டு மத்திய அரசு பேசாமல் உட்கார்ந்துகொண்டு, தன்னைக் காப்பாற்றிக் கொண்டு ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது என்றுதான் இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் மத்திய அரசுக்கு உள்ள கடமையை அவர்களுக்கு உணர்த்துவதற்காக இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை ஒவ்வொரு அரசியல் கட்சியும் பொறுப்பான முறையில் தெரிவித்து இருக்கவேண்டும்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 20

அதுதான் சரியான அரசியல் நாகரீகமாகும். ஆனால் இன்று வேண்டுமென்றே காங்கிரஸ்காரர்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் பிரச்சினையை எடுத்துக்கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மையை, நாட்டின் ஒருமைப்பாட்டை, பொது அமைதியைப் பாதிக்கிற ஒரு மாபெரும் பிரச்சினையை விவாதிக்கத் தயாராக இல்லை என்றால் காங்கிரஸ்காரர்கள் எத்தகைய ஒரு மக்கள் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் அனைவரும் கேட்கிறார்கள். நாங்களும் கேட்கிறோம். ஆக காங்கிரஸ்காரர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் குறித்த ஒரு பிரச்சினையைப் பெரிதாகக் கருதுகிறார்கள் என்று எண்ணுவதா? அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதற்கான தீர்மானம் மிக முக்கியம் இல்லாதது என்று அவர்கள் கருதிவிட்டார்களா என்பதும் புரியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். இந்தப் பிரச்சினையில் தங்களை சற்றும் ஈடுபடுத்திக்கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள் என்றுதான் கருதவேண்டியுள்ளது.

அதேபோல் தி.மு.க.(2)-ன் உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட்டபோது தனது நிலை என்ன என்று அறிவிக்காமல் இதை எதிர்த்து அவையை விட்டு வெளியேறி விட்டாரா அல்லது மறைமுகமாக தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதாக மற்றவர்கள் புரிந்துகொள்ளட்டும் என்று கருதி வெளியேறிவிட்டாரா என்பது இன்னும் புரியாத மர்மமாக உள்ளது. இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எது எப்படி இருப்பினும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரும், அவரைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இவ்வளவு மிக முக்கியமானத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில் இந்த அவையைப் புறக்கணித்து தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற அவர்கள் தவறினாலும் அதே கட்சியைச் சார்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அமர்ந்து இருப்பதைப் பார்த்து நான் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மிகப்

1994 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பொறுப்புணர்வோடு தங்களுடைய கட்சியின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களுக்குக் குறிப்பாக எங்களது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் இந்த முக்கியமான தீர்மானம் வருகிறபோது இது எங்களுக்கு முக்கியமல்ல; ஒரே ஒரு உறுப்பினருடைய சொந்தப் பிரச்சினைதான் எங்களுக்கு முக்கியம் என்று கருதி வெளியே போய் இருக்கிற உறுப்பினர்களையும் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதேபோல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டவுடன் ஆதரிக்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று எதுவும் சொல்லாமல் திடீரென்று வெளியேறிய தி.மு.க(2) உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள்; அதேபோல் இந்தத் தீர்மானத்தை எடுக்கப் போகிறோம் என்று நன்றாகத் தெரிந்துகொண்டு, இதில் தனக்குப் பேச வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டு ஏதோ ஒரு சிறிய பிரச்சினையைக் கிளப்பினார், நானும் பதில் சொன்னேன், 'வெளிநடப்புச் செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டு உள்ளே வராமலே வெளியே போய்விட்ட திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள் இந்தப் பிரச்சினையை எவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொண்டார்கள் என்பதை அவையினர் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட ஒரு மனிதனுடைய விருப்பு, வெறுப்பு என்ற வகையில் அவருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தேசியமும், நாடும், தேசப்பற்றும்தான் எங்களுக்கு முக்கியம் என்று மகாத்மா காந்தி சொன்ன அந்த வழியில் என்றைக்கும் உறுதியாக நிற்போம். மாண்புமிகு முதலமைச்சர் கொண்டுவந்த இந்தப் பிரச்சினை தேசப் பிரச்சினை. குறிப்பாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் பூகம்பம் ஏற்பட்டபோது யாரும் செய்யாத ஒரு காரியத்தை, அதாவது பல கோடி ரூபாய் வசூல் செய்து கொடுத்து, தேசியத்தில் அதாவது இந்தியாவில் எந்த ஒரு இடத்திலே யார் பாதிக்கப்பட்டாலும் நான் முன் நிற்பேன் என்று உறுதுணையாக இருந்து செயல்பட்டு அந்த வழியில் இன்றைக்கு மீண்டும் முதலமைச்சர் அவர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று பாராட்டுகிறேன்.

பிற்பகல் *1-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை என்றே சொல்லலாம். ஆனாலும் திடீரென்று பரிதி இளம்வழுதி ஓடிவந்து இல்லையென்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கூட வந்து சொல்லலாம். இப்போதும் அவர்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஓடிவந்து சொல்லிவிட்டால், ஏனென்றால் ஏற்கனவே எதிர்த்திருக்கிறார். ஆகவே ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். ஏற்போரே அதிகம். தனித் தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 20- வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 665,81,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் *1795* திரு. ஜி. பழனிசாமி.

கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று பாராட்டுகிறேன்.

பிற்பகல் *1-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை என்றே சொல்லலாம். ஆனாலும் திடீரென்று பரிதி இளம்வழுதி ஓடிவந்து இல்லையென்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கூட வந்து சொல்லலாம். இப்போதும் அவர்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஓடிவந்து சொல்லிவிட்டால், ஏனென்றால் ஏற்கனவே எதிர்த்திருக்கிறார். ஆகவே ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். ஏற்போரே அதிகம். தனித் தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 20-வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 665,81,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் *1795* திரு. ஜி. பழனிசாமி.

1994 ஏப்ரல் 20]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம் முழுமையும் விவசாயத்தை நம்பி உள்ள மாவட்டமாக இருப்பதால், இங்கு ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 665,81,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண்1809 திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு தாமதமின்றி குறைந்த விலையில் பூச்சி மருந்து. உரங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 665,81,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண்1864, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம் முழுவதும் பயிர் பாதுகாப்பிற்கு இன்சூரன்ஸ் மூலம் கட்டப்பட்ட தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``வேளாண்மை பற்றிய 20-ம் எண் மானியக் கோரிகையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.665,81,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச்செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண்52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மானியக் கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.13,80,74,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1884 திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையில் ஏற்படும் கேரளா வாடல் நோயை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,80,74,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியாக அச்சடிக்கப்பட்டு அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள குறிப்புகளை நான் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பேட்டில் பதிவு[@] செய்து கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். இத்துறையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைக்கும் கருத்துக்களுக்கும் நல்ல ஆலோசனைகளுக்கும் இறுதியில் என் பதில் உரையாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், புதிதாக எடுக்க வேண்டிய முடிவுகள் பற்றி அவையில் விளக்கம் அளிக்கிறேன்.

(இ) கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுக்கப்படுகிற அதே நேரத்தில் அதன் தொடர்புடைய துறைகளாக இருக்கிற காரணத்தால் பால்

@ 743 - 926 ஆம் பக்கங்களில் இணைப்பு—1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது

வழங்கு திட்டம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளும் சேர்ந்தே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற காரணத்தால் அந்த மானியக் கோரிக்கைகளையும் பேரவையின்முன் வைக்கக் கேட்டுக் கொள்கிறேன். மானியக் கோரிக்கை எண் 10 பால் வழங்கு திட்டங்கள். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.6,23,95,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1915 திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் ஆவின் பால் திட்டம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,23,95,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண்1940 திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டார் தொகுதி பேச்சிப்பாறையில் ஒரு மாட்டுப் பண்ணை அமைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,23,95,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

(ஈ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண்22-கால்நடை வளர்ப்பு. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ். ரூ.88,87,01,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு.ஜி.பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம் திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,87,01,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2012. திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி ஆய்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,87,01,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு

வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் தனது முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான பால் வழங்கு திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு என்ற தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கைக் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு@ செய்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனை களையும் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் என் பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்சனைகளுக்கு பதிலையும் அரசு எடுக்கவுள்ள முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 2.01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை பிற்பகல் 4.00 மணிக்குக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் ஆகியோரால் கோரப்பட்ட மானியக்கோரிக்கைகள் மீது விவாதம். பிரதான எதிர்க்கட்சியினர் யாரும் இல்லை. முதலில், திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள்மீதும், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு

@927-997ஆம் பக்கங்களில் இணைப்பு—II மற்றும் IIIஆக அச்சிடப்பெற்றுள்ளன.

வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீதும் பேசுவதற்கான வாய்ப்பினை அளித்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய விவசாயிகளுடைய நன்மையைக் கருதி பல்வேறு அரசின் திட்டப் பணிகளை இங்கே செயல்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். அந்தவகையிலே, ஆற்றல்மிக்க நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே இன்றைக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வேளாண்மைத் துறையிலே, ஏழையெளிய விவசாயிகள் தங்களுடைய நிலத்திலே விளைவிக்கின்ற விளை பொருட்களை, இடைத்தரகர்கள் இல்லாமல், நியாயமான விலைக்கும் கூடுதலான விலைக்கும் விற்பதற்காக நம்முடைய அரசாங்கம் மார்க்கெட்டிங் கமிட்டிகளை நிறுவி இருக்கிறது. ஏழை விவசாயிகள் உருவாக்குகின்ற தானியங்கள், காய்கறி வகைகளை யெல்லாம் நேரடியாக மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு எடுத்துச்செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், ஆலங்குடி தொகுதியிலே, ஆலங்குடியிலே விளைகின்ற, கடலை, மற்றும் நெல் போன்றவைகளை அறுவடை செய்து, நியாயமான விலைக்கு மார்க்கெட்டிங் கமிட்டியிலே விற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. காரணம், அங்கே இருக்கின்ற தனியார் வர்த்தகர்களுடைய, வர்த்தக நிறுவனங்களுடைய மிகச் சிறந்த தொழில் ரீதியால் அவர்கள், விவசாயிகளை கவர்ந்து இழுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மார்க்கெட்டிங் கமிட்டியிலேகூட ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ரெவின்யூ அச்சிவ் செய்கின்ற வகையிலே இன்றைக்கு புதுக்கோட்டையிலே இருக்கின்ற மார்க்கெட்டிங் கமிட்டியுடைய அச்சீவ்மென்ட்டினுடைய டார்கெட்டை அவர்கள் கொடுக்கின்றபோதுகூட, அந்த விவசாயிகள் நேரடியாக அந்தத் தனியாருடைய நிறுவனங்களுக்கு கடலை, மணிலா போன்றவற்றை யெல்லாம் கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் எல்லாம்-ஏற்கனவே இந்த மார்க்கெட்டிற்கு விவசாயிகள் நேரடியாக கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன.

பிற்பகல் 4-05

ஆகவே, இன்றைக்கு மார்க்கெட்டிங் கமிட்டியில் இருக்கின்ற நிறுவனத்தார்கள், மார்க்கெட்டிங் கமிட்டியில் இருக்கின்ற அரசு அலுவலர்கள், தனியார்கள் கொடுப்பதுபோல் முன் பணம் எல்லாம்-தனியார் வர்த்தகத்தில் உள்ளவர்கள் முன்பணம் கொடுத்து, அதற்குப் பின்னாலே விவசாயிகளிடத்திலே இருந்து விளைகின்ற பொருள்களை வாங்குகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே—மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரக்கூடிய வரவு, ரெவின்யூ குறையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே மார்க்கெட்டிங் கமிட்டியில் உள்ளவர்களும் அதேபோன்று தானிய வகைகள் மட்டுமல்லாமல், காய்கறிகளை, ஏழை விவசாயிகள் விளைவிக்கிற பழங்களைக் கூட அவர்கள் இடைத்தரகர்களிடத்திலே விற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே காய்கறி கடைகளை ஏழைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மார்க்கெட்டிங் கமிட்டி நேரடியாக மக்களிடத்திலே சென்று, நன்றாக விளம்பரப்படுத்தவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் மார்க்கெட்டிங் கமிட்டியிலே கூடுதலான விலை கொடுக்கின்ற, நியாயமான விலை கொடுக்கின்ற, இடைத்தரகர்கள் இல்லாமல் நியாயமான விலையைப் பெறலாம் என்ற சூழ்நிலை இருக்கின்றபொழுதும், அந்த மார்க்கெட்டிங் கமிட்டியிலே இருக்கின்ற அலுவலர்கள் நேரடியாக மக்களிடத்திலே சென்று விளம்பரப்படுத்தாத சூழ்நிலையிலே, இன்றைக்கு தனியாருடைய வர்த்தக நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினுடைய நன்மைகள் போய்ச் சேரவில்லை. ஆகவே, அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆலங்குடி தொகுதியிலே மிகச் சிறப்பாக வம்பன் பண்ணை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய பழத் தோட்டக் கழகம், வனத் தோட்டக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வனத்தோட்டக் கழகத்திலே வேளாண்மைத் துறையினுடைய பல்வேறு ஆராய்ச்சித் துறைகள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற செம்மண்ணை பரிசோதனை செய்வதற்கான ஆராய்ச்சி வசதிகள் இல்லையென்று கருதுகிறேன். ஆகவே, அந்த செம்மண்ணை பரிசோதனை செய்வதற்கான ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மிகச் சிறப்பு வாய்ந்த அந்தப் பண்ணையிலே பல்வேறு துறைகளைச் சார்ந்த, வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஆராய்ச்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே அதிகமான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே, வேளாண்மைத்

துறையோடு, கால்நடைத் துறையும் இணைந்து செயலாற்றுகின்ற வகையிலே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற பண்ணையிலே பல்லாயிரக்கணக்கான கூலித் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சட்ட விதிகளின்கீழ் *240* நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய மினிமம் வேஜஸ் ஆக்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற தினக் கூலியை விட குறைந்த அளவிலே கொடுக்கின்ற காரணத்தினாலே, அங்கே செல்கின்ற, அந்தப் பண்ணையிலே பணியாற்றுகின்ற ஏழை விவசாயக் கூலிகள் பயனடைகின்ற வகையிலே *240* நாட்களுக்கு மேலே பணியாற்றியவர்களுடைய பணியை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஏழை விவசாயிகளே நடத்துகின்ற வகையிலே அவர்களுக்காக தனிச் சங்கத்தை அமைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று நான் இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று—அந்தப் பழத்தோட்டம் மிகச்சிறப்பாக தோட்டக் கலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது. கடந்த *4,5* ஆண்டுகளாக நீர்மூழ்கிப் பம்புகள் பொருத்தப்பட்டும், வேளாண்மைப் பொறியியல் துறையால் அவை பராமரிக்கப்படாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அந்தத் தோட்டம் அழிந்து வருகிற சூழ்நிலை இருப்பதால் அதையும் சரிசெய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல, புதுக்கோட்டை மாவட்டத்திலே மிகச் சிறப்பாக வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழும், வேளாண்மைத் துறையின் கீழும் ஆராய்ச்சி மையங்கள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அங்கே *40* மாணவர்களைக் கொண்டிருக்கின்ற டிப்ளமோ வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே வறட்சி நிலங்களையே அதிகமாகக் கொண்டிருக்கின்ற, வேளாண்மைப் பெருமக்களையே அதிகமாகக் கொண்டிருக்கின்ற குடுமியான்மலை மையத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அங்கே படிப்பவர்கள் மேல் படிப்புக்கான ஆராய்ச்சிகளை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே *40* மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே அந்தப் பட்டயப் படிப்புக்குப் பதிலாக வேளாண்மை பட்டப் படிப்புகள் தொடங்குவதற்காக வேளாண்மைக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே வேளாண்மை என்று சொல்லுகின்றபோது நீர் நிலைகளில் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குளத்துப் பாசனம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அப்படி இருக்கின்றபோது, ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற பணியிலே ஈடுபட வேண்டும்–இன்றைக்குப் பெரும்பான்மையான குளங்கள் எல்லாம் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற காரணத்தாலே நீர் வரத்து குறைந்து, ஏழையெளிய விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நீர் நிலைகள் நிரம்ப முடியாமல் இருக்கிற சூழ்நிலை இருப்பதால், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் வேளாண்மைத் துறை அலுவலர்களும், ரெவின்யூ அலுவலர்களும், உள்ளாட்சித் துறை அலுவலர்களும் சேர்ந்து, கலக்டிவ் ரெஸ்பான்சிபிளிடி என்கிற முறையிலே ஆக்கிரமிப்புகளை அகற்றித் தந்தால்தான் ஏழை எளிய விவசாயிகள் பயன்படுகின்ற வகையிலே, நீர் நிலைகளில் எல்லாம் தண்ணீர் நிரம்புகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

இங்கே இன்றைய தினம் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கையை முன்மொழிந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் அதிகமான பால் பண்ணைகள்—கிட்டத்தட்ட 450 சங்கங்கள் அமைக்கப்பட்டு, சிறப்பாக பால் வழங்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், புதுக்கோட்டை மாவட்டத்தில் பல யூனிட்டுகள் சிக் யூனிட்டுகளாக இருக்கின்றன. ஒரு சிறு சங்கத்திற்குக் கூட பணத்தை பட்டுவாடா செய்ய முடியாத நிலைமை இருப்பதால் பல சொசைட்டிகள் நலிவு அடைந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் தீர்த்து வைக்கும் வகையிலே அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தை உடனடியாக வழங்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கீரமங்கலம் பகுதியில் ஒரே ஒரு சங்கத்திற்கு 12 இலட்சம் ரூபாய் பேலன்ஸ் இருக்கிறது. இத்தகைய காரணத்தால் பல யூனிட்டுகளைச் சிறப்பாக நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இவற்றை சிறப்பாகப் பராமரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாள விடுதி பண்ணையிலே தென்னங்கன்றுகள் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப் படுகின்றன. ஆனால் அங்கே அதிகமான திருட்டுகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற கச்சாப் பொருட்களை எல்லாம் எடுத்துச் செல்லும்

சூழ்நிலை இருக்கிறது. அங்கே பணியாற்றும் கடைநிலை ஊழியர்களே அவற்றைத் திருடுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இது போன்ற அரசுப் பண்ணைகளில் எல்லாம் காவலர்களை நியமித்து, கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் போடுகின்ற திட்டங்களை எல்லாம் செயல்படுத்தும் வகையிலே வேளாண் அதிகாரிகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சென்ற முறை மானியக் கோரிக்கையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மட்டும் 2 கோடி ரூபாய் மானியம் தரும் வகையிலே, வேளாண் பொறியியல் துறையிலே ஒரு சப்சிடி ஸ்கீமை அரசாங்கம் அறிவித்தபோது, அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம், அதிகாரிகள் அதை நிறைவேற்றுகிற முயற்சியை எடுக்கின்றபோது, லீட் பேங்குகள் எல்லாம் அதற்குத் துணை நிற்காத காரணத்தாலேதான் அதைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே வேளாண் பொறியியல் துறையிலே, வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அந்த பிசினசை மட்டும் பார்க்கின்ற வகையிலே, லோனைக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலே தனியாக ஒரு சிறப்பு வங்கியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏற்படுத்தித் தந்தால் அரசாங்கம் போடும் திட்டங்களை உடனுக்குடன் வேளாண் துறை அதிகாரிகள் நிறைவேற்றித் தருவார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கத்திற்கு இதன் மூலம் பெரியதொரு செல்வாக்கும், ஆதரவும் கிடைக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்குப் பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாக புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே மழை பெய்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகச் சிறப்பாக மழை பெய்திருந்தபோதிலும், காலம் தாழ்ந்து மழை பெய்த காரணத்தால் அங்கே இருக்கின்ற விளை நிலங்களில் உள்ள பயிர்கள் எல்லாம் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற தஞ்சை மாவட்டத்தைப்போல, காயிதேமில்லத் மாவட்டத்தைப்போல சிறப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தை அறிவித்து, அங்கே உள்ள ஏழை எளிய விவசாயிகள் பயன்படும் அளவுக்கு அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 20] [திரு. எஸ். சண்முகநாதன்]

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தர்பார் காலத்திலிருந்து அங்கே அங்கீகரிக்கப்பட்ட பாசனமாக கிணற்றுப் பாசனம் நடைமுறையில் இருக்கிறது. அதைத் தொடர்ந்து குளத்துப் பாசனம் நடைமுறையில் இருக்கிறது. வேளாண்மைத் துறையில் வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்திக் கொண்டிருக்கிற ஓப்பன் வெல் ஸ்கீம் அங்கே இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் ஆழத்திலே கிடைக்கிற காரணத்தாலே ஓப்பன் வெல் ஸ்கீமை கைவிட்டுவிட்டு, ஆழ் குழாய்க் கிணறுகளைப் போடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆழ்குழாய்க் கிணறுகளைச் செயல்படுத்துகின்றபோது இடையிலே விதிகள் கடுமையாக இருக்கிற காரணத்தால் ஏழை எளிய விவசாயிகள் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

பிற்பகல் 4-15

ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குப் புதுக்கோட்டை மாவட்டத்தில் முழுக்க முழுக்க ஆழ்குழாய்க் கிணற்றுப் பாசனத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு போர்வெல் அமைக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய் அதற்கு ஆகிறது. ஆனால் வேளாண்மைத் துறையின் சிறப்புத் திட்டத்தின் கீழே அதைக் கொண்டுவருகிற வகையில் அதன் பயனாளிகளுக்கு மட்டுமாவது சிறப்புத் திட்டத்தின் கீழ் நீங்கள் மின் இணைப்பு தருவீர்களானால் அது மிகச் சிறந்த முறையில் இருப்பதோடு, அந்தத் திட்டம் சிறப்பாக நிறைவேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால் மின்சாரம் இல்லாத காரணத்தால் மின் இணைப்பு கிடைக்காத சூழ்நிலையில்தான் அதிக அளவில் நம்முடைய ஆழ்குழாய் போன்ற திட்டங்களை எல்லாம் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையின்கீழ் இந்த அரசாங்கம் வேளாண்மைத் துறையிலே ஒரு மிகப்பெரிய சாதனையை எட்டி இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு மின்சாரத்திற்கு அளிக்கும் சப்சிடியை வசூலிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியும் கூட, ஏழை எளிய விவசாயிகளின் நன்மையைப் போற்றுகின்ற வகையிலே அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுகின்ற வகையிலே அதையும் தாங்கிக் கொண்டு இலவச மின்சாரம் அளிக்கிறார்கள். நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய தலைவர் தந்தை பெரியார், அவருக்குப் பின்னால் பேரறிஞர்

அண்ணா அவர்கள், நம்முடைய அமரர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மொத்த உருவமாக இருக்கிற, இன்றைக்கு தமிழகத்தைக் காத்துக்கொண்டு இருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திராவிட இயக்கங்களினாலேயே மிகச் சிறந்த பாராட்டைப் பெறுகின்ற வகையிலே, சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பாராட்டைப் பெறுகின்ற வகையிலே, ஏழை எளிய மக்களின், ஏழை விவசாயிகளின் நீதியைக் காத்து இருக்கின்ற வீராங்கனை என்ற வகையிலே பாராட்டுகின்ற வாய்ப்பை புரட்சித் தலைவி அவர்கள் பெறவேண்டும், அவர்கள் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி, தமிழகத்திற்கும் தமிழக விவசாய மக்களுக்கும் அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு, நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. சொக்கலிங்கம்.

திரு. பி. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் பால்வளம் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்து எனக்கு பேச அனுமதி கொடுத்த என்னுடைய அரசியல் தாய் ஆதிபராசக்தியின் பூப்போன்ற பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

18-4-1994 அன்று இரவு சுமார் 7.30 மணி அளவில் என் உடல்நிலை சரியில்லாத காரணத்தால், என்னுடைய இதயத்துடிப்பே நின்று சாகும் தருவாயில் இருந்த என்னை, சுமார் 4 மணி நேரம், அரசு பொது மருத்துவமனைக்கு தொலைபேசி மூலம் பேசி, என்னுடைய உயிரைக் காத்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய பொற்பாதங்களுக்கும் என்னுடைய குடும்பத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சொக்கலிங்கம், நன்றி இருக்கட்டும், இனிமேல் அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கிய நிலையை எனக்கு வைக்காமல் நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்.

திரு. பி. சொக்கலிங்கம் : சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் பாலாற்றில் ஏன் அணை கட்ட வேண்டுமென்று விரிவாகப் பேசினேன். கோரிக்கையாக விடுத்தேன். அதை பொதுப் பணித்துறை அமைச்சரிடம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதை ஏற்று, நடப்பு நிதியாண்டில் கொள்கை அளவில் பாலாற்றில் உரிய இடத்தில் அணை கட்டும் கோப்பை, உலக வங்கி நிதி ஆதாரத்திற்காக

அனுப்பியமைக்காக என்னுடைய தொகுதியின் சார்பாக மீண்டும் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். சென்ற நிதிநிலை அறிக்கையில், படிக்க வசதியே இல்லாத என்னுடைய சொந்தத் தொகுதியாகிய தாதங்குப்பம் கிராமத்திற்குத் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்க வேண்டு மென்று கோரியபோது, அப்போது மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தார். அவர் யாருடைய கோரிக்கையையும் ஏற்காது, என்னுடைய ஊருக்கு மட்டும் ஐந்தாவது வகுப்பு வரை தொடக்கப் பள்ளி ஆரம்பிக்க அனுமதியளித்து எனக்கு நல்ல பெயரைத் தேடித்தந்த அன்னாருக்கும் என்னுடைய நன்றியை என் தொகுதி மக்கள் சார்பாக வைக்கின்றேன். இருந்தும் 5 ஆம் கிளாஸ் வரையிலும் அங்கே இருப்பதால், பல நூறு பிள்ளைகள் சுமார் 7 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று 6,7,8—வது வகுப்புகள் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால் வருகின்ற கல்வியாண்டில் என்னுடைய ஊருக்கு 6,7,8 வகுப்புகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு தற்போது கல்வி அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமானை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய மதுராந்தகம் தொகுதி வானம் பார்த்த பூமியாகும். அனைத்து விளை பொருள்களும் வானத்திலிருந்து மழை பெய்தால்தான் விளையும். எனவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, அங்கே நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கால்வாய்களை உருவாக்கித் தர நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-20

மாமல்லபுரத்திலிருந்து சென்னை வரும் வழியில் ஒரு நித்திய கல்யாணப் பெருமாள் கோயிலும் அதன் முன்னால் ஒரு குளமும் இருக்கின்றது. குஷ்டரோகிகூட தொடர்ந்து 6 மாதம் அந்த குளத்தில் குளிப்பானேயானால் குஷ்டம் நீங்கி நல்ல நிலையில் வருவான். அந்த அளவிற்கு அங்கே மூலிகை நீர் இருக்கின்றது. அதை, நவீனமயப்படுத்தும் திட்டத்தின்கீழ் ஆழப்படுத்தி, கல்சுவர்களைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகம் நகருக்கு கல்லூரி வசதி இல்லாததால் பெரும் பாலான பிள்ளைகள் படிக்க முன்வருவதில்லை. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலாவது ஒரு கலைக் கல்லூரியை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

மதுராந்தகம் மருத்துவமனை, அச்சரப்பாக்கம் தொகுதி மற்றும் மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்டதாகும். அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி (குறுக்கீடு) நான் பொதுவாகத்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசலாம். வழக்கமாக மானியக் கோரிக்கையில் பேசி முடித்துவிட்டு கடைசியாகத் தொகுதி பற்றிப் பேசுவார்கள். ஆனால், நீங்கள் முதலில் மற்றவற்றையெல்லாம் பேசிவிட்டு, கடைசியிலே மானியக் கோரிக்கையைப்பற்றி பேசுகிறேன் என்று சொல்கிறீர்களே.

திரு. பி. சொக்கலிங்கம் : அப்படிப் பேசினால்தான் அனுமதிப்பீர்கள்; இல்லாவிட்டால் உட்கார வைத்துவிடுவீர்கள். (சிரிப்பு) அதனால் முதலில் டிமான்ட்ஸைக் கேட்டு விடுகிறேன்.

மதுராந்தகம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி மேலும் 50 படுக்கைகள் போட்டு, அங்கே பிளட் பேங்க் ஆரம்பித்து—ஏனென்றால் அங்கே அடிக்கடி விபத்துகள் நடந்து விபத்துக்குள்ளான நபர்கள் பிளட் ஒழுக ஒழுக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுவதைத் தவிர்க்க அங்கே ஒரு பிளட் பேங்க் அமைக்க மாண்புமிகு ஹெல்த் மினிஸ்டர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஆபரேஷன் செய்வதற்கு எம்.எஸ். டாக்டர் இல்லாத குறையை விரைவில் அவர் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை இருந்தும் காலத்தின் கோலத்தால் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து தற்போது அந்த வழக்கு தள்ளுபடி ஆகி, கலெக்டர் அலுவலகத்தில் கோப்பு இருப்பதை விரைவுபடுத்தி கால்நடை மருத்துவமனை இயங்க மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்றும், அதை விரைவில் முடித்துத் தர வேண்டும் என்றும் கோருகிறேன்.

மதுராந்தகம் ஏரியில் வெள்ளக் காலங்களில் மழைநீர் கிளியாறு வழியாகச் சென்று, அனைத்து நீரும் வீணாவதைத் தடுக்க, கிளியாற்றில் ஒரு அணை கட்டி, சுமார் 20 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

படாளம் கூட்டு ரோட்டிலிருந்து செய்யூர் வரை, படாளம் சர்க்கரை ஆலை சாலையை பராமரித்துக்கொண்டு வருகிறது. அந்தச்

சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் படாளம் சர்க்கரை ஆலை தனி அதிகாரிகளுக்கு உரிய ஒரு கடிதத்தை அனுப்பி அந்தச் சாலையை மேம்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கருங்குழியில் இருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் தார்ச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதையும் பழுது பார்த்துத் தர வேண்டுமென்று நான் மிகவும் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மகாபலிபுரத்தையொட்டி இரத்தக்குழி குட்டை என்று ஒரு குட்டை உள்ளது. அந்தக் குட்டையை மாமல்லன்தான் உருவாக்கியதாகவும், அந்தக் குட்டையில் ஒரு காணி கல்லும், மாமல்லபுரத்தில் காளி கோயிலும் அவன் அமைத்தான் என்றும் தெரியவருகிறது. அந்த குட்டை தற்போது தூர்ந்த நிலையில் இருப்பதால், அதை, நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் தூர் எடுத்து, கல் கட்டிடம் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பாக்கம் கிராமத்திலிருந்து வீராணம் சாலை ஏற்கெனவே இருந்தும், தற்போது விவசாயம் செய்பவர்களால் காலங்காலமாக அது வெட்டப்பட்டு, அங்கே வரப்பு ஒன்றுதான் மிச்சம் உள்ளது. எனவே, அந்தச் சாலையை மீண்டும் அளந்துபோட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளின் நன்மைக்காக கேட்கிறேன்.

என்னுடைய சொந்த ஊரான தாதங்குப்பம் வழியாக சுமார் 10 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தினமும் 3 ஆயிரம் பேர் சைக்கிளிலும் நடந்தும் செல்கின்றார்கள். அதைத் தவிர்க்க, அந்தச் சாலையை தார் சாலையாக அமைத்து, வீராணம் சாலையில் ஒரு நகரப் பேருந்து விட என்னுடைய ஊரின் சார்பாகவும், ஊரைச் சுற்றியுள்ள ஊர் மக்களின் சார்பாகவும் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

தென் திருப்பதியாக விளங்கும் மலைவையாவூரில் வெங்கடேச பெருமாள் ஆலயம் இருக்கிறது. இங்கு தினமும் ஆயிரம் பக்தர்கள், உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். சனி, ஞாயிறு போன்ற நாட்களில் 5,000-லிருந்து 10,000 பக்தர்கள், உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். எனவே, அந்த மலைக்கு செல்லும் சாலையை பழுதுபார்த்து, தார்ச் சாலையாக அமைத்து, சோடியம் விளக்குகள் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகம் தொகுதியில் மலைவாழ் மக்களும், வில்லியரும், வேட்டைக்காரர்களும் சுமார் 5,000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் வானமே கூரையாக, கோவணமே ஆடையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த 5,000 பேர்களுக்கும் உடுக்க உடையும், இருக்க வீடும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறைக்கு வாருங்கள்.

திரு. பி. சொக்கலிங்கம் : வந்து விடுகிறேன். மதுராந்தகம் பால் வழங்கும் நிறுவனத்தில் கடந்த 3 ஆண்டுகளாக கறவை மாடு லோன் கொடுக்காமல் நிறுத்தியிருப்பதால், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே உரிய நடவடிக்கையெடுத்து 100 பேர்களுக்காவது கறவை மாடு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய ஆட்சியில்தான் கரும்பு பயிர் செய்யும் கரும்பு விவசாயிகள் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு இத்தருணத்தில் என்னுடைய நன்றியை கரும்பு விவசாயி என்ற முறையிலும், என் தொகுதி கரும்பு பயிரிடுவோர் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகள், சர்க்கரை துறை, விவசாயத் துறை ஆகியவற்றின் சீரிய பணிகளால் இவ்வாட்சியில் கரும்பு உற்பத்தித் திறன் ஒரு ஏக்கருக்கு 42 டன் அல்லது ஒரு எக்டேருக்கு 104 டன்னாக உயர்ந்து இருக்கிறது. இது அகில இந்திய உற்பத்தித் திறனான ஒரு ஏக்கருக்கு 27 டன் அல்லது ஒரு எக்டேருக்கு 67 டன் என்பதை விட கணிசமான அளவுக்கு கூடுதல் ஆகும். மேலும் மற்ற அண்டை மாநிலங்களை விட தமிழகத்தில்தான் ஒரு ஏக்கரில் உற்பத்தியாகும் கரும்பு விளைச்சல் மிகக் கூடுதலாகும். கரும்பு விலையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் கரும்பு விலையை அறிவிக்காத நிலையில், ஓரளவுக்கு இலாபகரமான விலையைக் கொடுக்க வேண்டுமென்ற தொலைநோக்கோடு, கடந்த மாநில அரசு அறிவித்த விலையை விட—அதாவது மைய அரசு விலையை விட மாநில அரசு ரூபாய் 30 கூட்டி 1989-90-ல் அறிவித்ததை விட— புரட்சித் தலைவி அவர்கள் அரசுதான் 1990-91 ஆம் ஆண்டில், நம் மாநில அரசு மைய அரசு விலையை விட ரூபாய் 60 கூட்டி அறிவித்தது. மேலும் நடப்பு 1993-94 ஆம் ஆண்டில் வரலாறு காணாத அளவுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மைய அரசு விலையை விட ஒரு

டன்னுக்கு ரூ.105 கூட்டி அறிவித்து சாதனை படைத்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு, அந்த ஆலைகள் ஈட்டும் இலாபத்தின் அடிப்படையில் கூடுதலான கரும்பு விலையாக ஒரு கணிசமான தொகையை வழங்க கடந்த ஆண்டில் புரட்சித்தலைவி அவர்கள்தான் உத்திரவு இட்டுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நடப்பு 1993-94 ஆம் ஆண்டில், மார்ச் மாதத்தில் இவ்வாறு 7 கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு டன்னுக்கு ரூ.15 முதல் ரூ.80 வரையில் கூடுதல் கரும்பு விலையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதை மிகவும் நன்றியோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இது இந்த அரசு விவசாயிகள்பால் கொண்டுள்ள அக்கரையை தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும் செயலாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்ற மாநிலங்களில் விவசாயிகளுக்கு விலை கொடுப்பதில் மிகவும் தாமதமாகிற நிலை இருக்கும்போது, தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு அறிவித்த விலையை கரும்பு சப்ளை செய்தவர்களுக்கு 15 நாட்களில் அல்ல, 7 நாட்களில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை வழங்குகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 4-30

உதாரணமாக 1992-93 ஆம் ஆண்டில், மற்ற மாநிலங்களில் இன்னும் கரும்பு விலையை முழுவதுமாகக் கொடுக்காத நிலையிலும், நம் மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குச் சேரவேண்டிய மொத்தத் தொகையான ரூ. 449 கோடி அளவிலே கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் கொடுத்ததும் இந்த அரசின் மிகப் பெரிய சாதனையாக நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மேலும் கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், ஒவ்வொரு சர்க்கரை ஆலையும், ஒவ்வொரு ஆண்டும் ரூ. 150 லட்சம் முதல் ரூ. 250 லட்சம் வரை கரும்பு விவசாயிகளுக்கு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கி, விவசாயிகளை ஊக்குவிக்க ஆவன செய்ததும் இந்த அரசின் ஒரு சாதனையாகும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எது எப்படி இருந்தாலும், விவசாயிகள் விவசாயம் முடித்து, கணக்குப்

பார்க்கும்போது, ஒட்டை ஏர்க்காலும், சப்பை மாடும், கோலும்தான் மிஞ்சும் என்பதை அனைவரும் அறிவார்கள். நானும் ஒரு தீவிர விவசாயி. ஆகவே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், என்னைப் போன்ற விவசாயிகளின்பால் மிக்க அக்கறை கொண்டுள்ளார்கள். எனவே, மேலும் கரும்புக்கும், நெல்லுக்கும், பருத்திக்கும் கூடுதல் விலையை அறிவித்து நல்ல பெயரை எடுத்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையில், என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அதோடு மட்டுமல்லாமல் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக சென்னை சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த என்னை, சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, இந்த மாமன்றத்திலே பேசும் அளவிற்கு வாய்ப்பை அளித்த எனது இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை; வாழ்த்துவதற்கு வயதும் இல்லை; நன்றியுடன் வணங்குகிறேன்.

விவசாயக் கோரிக்கை எண் 20 மற்றும் 52-ம் சேர்ந்து கிட்டத்தட்ட 680 கோடி ரூபாயை விவசாயத் துறைக்கு ஒதுக்கி இன்றைக்கு விவசாயிகளின் முன்னேற்றத்திலே விவசாய உற்பத்தியிலே முதல் மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற அடிப்படையில் பல புதிய புரட்சித் திட்டங்களை அறிவித்த, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின்பால் கொண்டுள்ள அன்பும், மதிப்பும், விவசாயத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும் என்ன என்பதை இந்த மாமன்றத்தில் உள்ளவர்களும், நாட்டு மக்களும் நன்றாக அறிவார்கள்.

1994-95 ஆம் ஆண்டில், நமது விவசாய தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னை எட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களின் அரசு எதிலும் புரட்சி செய்கின்ற நேரத்தில், வேளாண் உற்பத்தியிலும் புரட்சி செய்து, சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்திலே சொல்லிக் கொள்வது என் தலையாய கடமை எனக் கருதுகிறேன்.

1994-95 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் 5 ஆண்டுக்கால அளவில், மாநிலத்தில் உள்ள 71.84 லட்சம் உழவர்களுக்கு மண்வளம் குறித்து விவர அட்டை வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டம் படிக்காத விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்றவாறு செய்ய அரசு மேற்கொண்ட முயற்சி வரவேற்கத்தக்கது. ஏன் என்றால், 1994-95 ஆம் ஆண்டில், 10 ஆயிரம் எக்டேர் பரப்பளவைக் கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில், விளை நிலங்கள் எல்லாம் வீடு கட்டும் பட்டாக்களாக மாறும் நிலையில், உண்மையிலேயே இத்திட்டம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் திட்டம் என்பதில் ஐயமில்லை.

வேளாண்மைப் பொறியியல் துறை. இந்த வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மக்களுக்கு தொழில்நுட்பம் அறிந்து உதவி செய்தபோதிலும் முழுமையாக விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ஒன்றிய வேளாண்மை அலுவலர்கள் மூலமாக விளம்பரப்படுத்தி, பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக அமைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த நிதி ஆண்டில், விவசாயிகளின் நலன் கருதி, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் கசிவு நீர்க் குட்டைகள் 7498 ஏற்படுத்தியதைப் போல, இந்த ஆண்டும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அதிகமான கிராமங்களில் இந்தக் கசிவு நீர்க்குட்டைகளைத் தேக்கி, கிராம விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீர் வரத்தினைப் பெருக்கித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

பயிர்ப் பாதுகாப்புத் திட்டம். 1994-95 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களில் 49 லட்சம் எக்டேரிலும், உணவு அல்லாத பயிர்களில் 27.2 லட்சம் எக்டேரிலும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை என்பது வரவேற்கக் கூடிய திட்டமாக இருந்தாலும் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1994-95 ஆம் ஆண்டில் வெற்றிலை சாகுபடி அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 3.72 இலட்சம் செலவிட இருப்பதால், எனது தொகுதி, தொட்டியம் பாலசமுத்திரத்தில் கொடிக்கால் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கொடிக்கால் பயிர் சாகுபடி முறையும் மற்றும் கருத்தரங்குகளும் நடத்த வேண்டுமென்றும், இந்தக் கொடிக்கால் விவசாயிகளுக்கு உதவும் வண்ணம் சிறிய வாய்க்கால்களைப்

[திரு. என். ஆர். சிவபதி] [1994 ஏப்ரல் 20

பராமரித்து, வாய்க்கால் பராமரிப்பு வேலைகளைச் செய்து தரவேண்டுமென்றும் இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது போன்று வேளாண் தொழில்நுட்பம் பட்டம் பெற்ற அனைவரையும் உதவிப் பயிர் மருத்துவர் என்று அறிவிக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக் கலைத் துறையை வேளாண்மைத் துறையுடன் இணைத்து ஒரே தலைமையின்கீழ் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் தண்ணீர்ப் பிரச்சினை என்றால், அரசு அதிகாரிகள் மெத்தனமாக இருக்காமல், உடனடியாகத் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் அல்லது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாவது தலையிட்டு விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். ஏனென்றால் இன்று மக்கள் சக்தியை இழந்தவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களின் வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களும், விவசாயிகள் என்ற போர்வையில் வன்முறையைத் தூண்டிவிட்டு தங்களின் அரசியல் ஆதாயம் தேடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு அதிகாரிகள் உறுதுணையாக இல்லாமல் விவசாயிகளுக்காக உடனடி நடவடிக்கை எடுத்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல் தொட்டியம் விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதி, விவசாயத்திற்குச் சரியான முறையில், சரியான நேரத்தில் சாகுபடி கிடைக்க ஸ்ரீ ராமசமுத்திரத்தில் நிரந்தரக் கொரம்பு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு டெண்டர் விட்டு தற்காலிகமாக கொரம்புகள் அமைப்பதனால் அரசுக்குச் செலவு மட்டுமல்லாமல், விவசாயத்திற்குச் சரியான நேரத்தில் தண்ணீர் கிடைக்க அடைக்கப்படுவதில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப் படுகிறது. ஆகவே நிரந்தரக் கொரம்பு அமைத்துத் தர கேட்டுக் கொள்கிறேன். வருகின்ற கோரிக்கைகள் பொதுப் பணித் துறையிலே இருந்தாலும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில், இந்த நிதிநிலையை அறிந்து, இந்த விவசாயப் பொறியியல் துறையின் மூலம் எங்களுடைய விவசாயிகளின் குறைகளைப் போக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 20] [திரு. என். ஆர். சிவபதி]

எங்கள் பகுதியில் கொடிக்கால் மற்றும் வாழையை விவசாயிகள் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். எங்களுக்கு எல்லாக் காலங்களிலும் பயிர் செய்யும் பொருட்டு தண்ணீர் கிடைக்க ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் 30 நாட்களும் தண்ணீர் அடைத்து வாய்க்கால் பராமரிப்புப் பணி நடக்கும். தற்போது 15 நாட்களுக்குள் பணி முடியும் அளவிற்கு துரிதப்படுத்தி விவசாயிகளின் நலன் கருதி, 30 நாட்கள் அடைப்பு என்று இருந்ததை 15 நாட்கள்தான் தண்ணீர் அடைப்பு என்று அரசாணை பிறப்பித்து விவசாயிகளுக்கு உதவ வேண்டு மென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நாகைநல்லூர் ஏரியைத் தூர் எடுத்து விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கும் வண்ணம் ஆழப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி தண்ணீர் சேமித்து வைக்க ஏதுவாய் நவீனப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் தாத்தையங்கார்பேட்டை ஏரி, மங்கலம் ஏரி ஆகியவற்றில் தூர் எடுத்து, தண்ணீர் தேக்கி, விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கும் வண்ணம் நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு எனது தொகுதியைப் பற்றி நன்கு தெரியும். அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்தபோதெல்லாம் எங்களுடைய விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களிடத்திலே கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அதையும் இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்டநாள் கோரிக்கையான முள்ளிப்பாடி ஏரியைத் தூர் எடுத்து அதன்மூலம் வாய்க்கால்களை ஆழப்படுத்தி, கிட்டத்தட்ட 15 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரைத் தேக்கிவைக்கும் அளவிற்கு ஏரியை நவீனப்படுத்தி விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கள் பகுதிக்கு வருகை தந்தபோது அதற்கான வாக்குறுதியைத் தந்து வந்திருக்கிறார்கள். இது பொதுப் பணித் துறையில் தூர் எடுத்து சீரமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கள் தொகுதிக்கு வருகின்றபோது அங்கேயிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே அதற்கான வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4-40

அவர்கள், வேளாண்மைத் துறையில் இருக்கும் பொறியியல் துறையின் மூலம் புதிய நவீன கருவிகளைப் பயன்படுத்தி அந்த ஏரியை தூர் எடுத்து விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் வகையில் செய்கிறேன் என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகவே அந்த முள்ளிப்பா ஏரியை உடனடியாக சீர் செய்து மக்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல் தும்மளம், அம்மங்குடி, செயல்குடி, அப்பனல்லூர், ஏழூர்பட்டி ஆகிய ஏரிகளை விவசாயத்திற்கு பயன்பெறும் வகையில் தண்ணீரைத் தேக்குவதற்கு ஏற்றவாறு நவீனப்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவ வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையின்போது எங்களுடைய தொட்டியம் தொகுதியில் அதிக வாழை பயிரிட்டு இருந்தாலும், வாழை ஆராய்ச்சி மையம் தருகிறேன் என்று சொல்லி இருந்தாலும், அவர்களுடைய தொகுதிக்கு கொண்டு சென்றுவிட்டாலும், அப்போது எங்கள் தொகுதிக்கு பெண்கள் உழவர் பயிற்சி மையத்தினை கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த நல்ல நேரத்தில் அவருக்கு அதை நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதி ஆண்டிலாவது எங்கள் தொட்டியம் தொகுதியில் பெண்கள் உழவர் பயிற்சி மையத்தினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல் மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவும் வகையில், அந்த இலவச உரத்தினை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். இந்த விவசாய நலத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தந்த ஒன்றியங்களிலேயுள்ள விவசாய அதிகாரிகளை அணுகி அவர்களுக்கு ஒரு உத்தரவினை உடனடியாக வழங்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற காலங்களில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பல திட்டங்களை இந்த நல்ல நேரத்திலே அறிவிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மீதும் கால்நடை, பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதும் ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் துறை என்பது மிக முக்கியமான துறையாகும். மனிதருடைய வாழ்க்கையோடு இணைந்திருக்கக் கூடிய ஒரு துறையாகும். அப்படிப்பட்ட அந்தத் துறைக்கு மிக மிக அவசியம் என்பது, இந்தத் தொழிலை முன்னேற்றுவதிலே புதிய கண்டு பிடிப்புக்கள், கண்டுபிடிப்பதிலே வேகமாக இந்தத் துறை செயல்பட்டாக வேண்டும் என்பது மிக மிக அவசியம் ஆகும். இப்போது கூட பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நன்றி. ஆனால் அப்படி தண்ணீர் திறக்கிறபோது இந்தத் தணணீர் வருவதற்கு முன்னாலேயே கிராமப்புறத்திலே இருக்கிற வடிகால் வாய்க்கால்களை வேகமாக சீரமைப்பதற்கான ஒரு நடவடிக்கையினை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அது கடைமடைப் பகுதியாகும். மேற்கே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களில் இருக்கக் கூடிய வாய்க்கால் வடிகால் தண்ணீர் முழுமையும் எங்கள் மாவட்டத்திலே வந்துதான் கடலிலே கலக்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. அப்படிக் கடலிலே கலக்கின்ற கட்டாயம் இருக்கிறபொழுது எங்கள் மாவட்டம் அதிகமாக வடிகால்களைக் கொண்டிருக்கக் கூடிய மாவட்டமாகும். அந்த வடிகால்களை சீரமைக்கிற பொழுது அங்கங்கே மேற்கேயிருந்து சீரமைத்து வருவதைவிட கடைமடைப் பகுதியிலே இருந்து சீரமைத்துத் தருவது மூலம்தான் மழைக் காலங்களில் வெள்ளக் காலங்களில் ஏற்படக்கூடிய தண்ணீரை வடிய வைப்பதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த முடியும். அந்த வகையிலே இந்த ஆண்டு அதிகமாக மண் ஏற்று இயந்திரங்களை கொஞ்சம் கூடுதலாகவே அனுப்பி எங்கள் மாவட்டத்திலுள்ள வடிகால்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டம் முழுமையும் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படுகின்ற மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைவரும் விவசாயத் தொழிலை மட்டும் நம்பி வாழக்கூடிய ஜனங்களாக இருக்கிறார்கள். அந்தத் தொழில் தொடர்ந்து ஒருபுறத்திலே வறட்சியாலும் மறுபுறத்திலே வெள்ளத்தாலும் கடுமையாக பாதிக்கப்பட்டு அவர்கள் விவசாயம் முழுவதும் சீரழிவது மட்டுமல்ல அவர்களுக்கு வருமானம் கிடைக்காமல் இருப்பது ஒரு பகுதியாக இருந்தாலும் தாங்க முடியாத கடனைக் கூட திருப்பிக் கட்ட

முடியாத ஒரு பொருளாதார நெருக்கடிக்குள்ளே எங்கள் மாவட்டத்து விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து குறைந்த பட்ச விடுதலை பெறுவதற்கும் அந்தத் தொழிலை நம்பி வாழக்கூடிய விவசாயிகள் ஓரளவுக்கு தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கும், அதுமட்டுமல்ல தமிழகம் முழுவதும் உணவு உற்பத்தி செய்து தமிழக மக்களுடைய பசியைப் போக்கக்கூடிய ஒரு அடிப்படை தொழிலாக அமைந்திருக்கின்ற காரணத்தினால் அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் *4-45*

அதுபோன்று, தண்ணீர் என்று சொல்கின்றபோது வெள்ளத்தாலே ஒரு பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டு பயிர்கள் முழுவதும் தொடர்ந்து அழிகின்றன. அதனால் அந்தப் பகுதியிலே சாகுபடி முறையைக் கூட எப்படி மாற்றலாம் என்று அரசு பரிசீலிக்க வேண்டும். மழைக்காலத்தில் ஏற்படக்கூடிய சாகுபடியை மாற்றி, கோடைக்காலத்திலே கோடை சாகுபடியாகச் செய்வதற்கு தண்ணீரை சேமித்து அந்த மாவட்டத்திற்குக் கொடுக்க முடியுமா என்று பரிசீலிப்பது எதிர்காலத்திலே மிக மிக நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். தண்ணீர் என்று கூறுகின்றபோது கூடுமான வரையிலே கடைசிப்பகுதியாக அமைந்திருக்கின்ற காரணத்தினால் முன்னாலே கூட சாகுபடிக்கு கொஞ்சம் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு கிராமங்களிலும் மையமான பகுதிகளிலே அரசு செலவிலே ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டி அதிலே கிடைக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்தி குறுவை சாகுபடிக்கு முன்னால் விதை விடுவதற்குக் கூட அந்த விவசாயிகளுக்கு கொடுக்க முடியுமா என்று கூட அரசு பரிசீலித்து அப்படிப்பட்ட திட்டங்களை எதிர்காலத்திலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் மட்டுமல்ல, ஜனவரி மாதம் வரையில் கூட கிராமங்களில் அந்தத் தண்ணீர் தேங்குவதில்லை. அது கடைமடை பகுதியில் இருக்கிற காரணத்தினால் தண்ணீர் முழுவதும் கடலுக்கு சென்று வீணாகிவிடுகிறது. அப்படி தண்ணீர் வீணாகாமல் கடைமடைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய வடிகாலுடைய கடைசிப் பகுதியில் செக்-டாம்களை கட்டி தண்ணீர் தேக்க முடியுமா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திலே கடைமடைப் பகுதி என்று கூறுகின்றபோது வடிகால் முழுவதும்

ஏறத்தாழ 1500 மீட்டர் அகலத்திற்கு கூட அந்த வடிகால் முழுமையும் இருக்கிறது; அப்படிப்பட்ட வடிகால்களிலே செக்-டாம்களைக் கட்டி தண்ணீரைத் தேக்கினால் ஒருபுறத்திலே கோடை சாகுபடி செய்வதற்கு உதவியாக இருக்கும். மறுபுறத்திலே மீன்கள் உற்பத்தி செய்வதற்கு உதவியாக இருக்கும். கிராமங்களிலே இன்றையதினம் மார்ச் மாதத்திற்குள்ளே கூட குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கீழே நிலத்தடி நீரை அதிகரிப்பதற்காக கழிவு நீர்க் குட்டைகள் ஏற்படுத்தப்படுகிறது என்று கொள்கை அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் கிராமங்களிலே இன்று இருக்கக்கூடிய குளங்களை ஆழப்படுத்துவதே ஒரு கழிவுநீர்க் குட்டையை ஏற்படுத்துவதற்குச் சமமாக அமையும். ஏறத்தாழ கிராமங்களிலே 10 குளங்கள், 15 குளங்கள் என்று இருக்கின்றன. அவைகள் முழுவதும் பஞ்சாயத்துக்குச் சொந்தமான குளங்களாகவே இருக்கின்றன. அந்தக் குளங்கள் நீண்டகாலமாக தூர் எடுக்கப்படாமல் ஆழப்படுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் பெப்ரவரி மாதத்திலே கூட தண்ணீர் தேங்குவதிலே சிரமமாக இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலே இருக்கக்கூடிய அந்த குளங்களை ஆழப்படுத்தி நீர் கட்டுக்கோப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.அதுபோன்று கடலோரப் பகுதிகள், மானாவாரிப் பகுதிகள் இருக்கின்றன. அந்த மானாவாரிப் பகுதிகளிலே கூட பெரிய பெரிய ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரி காலப்போக்கிலே முழுவதும் தூர்ந்து இன்றையதினம் மேடாகி தண்ணீர் தேங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஏரிகள் முழுவதும் கணக்கெடுத்து அந்த ஏரிகளை ஆண்டுதோறும் ஆழப்படுத்தி அந்தந்தப் பகுதிகளுக்கு ஒரு நீர்நிலை கட்டுக்கோப்பை ஏற்படுத்தி மானாவாரிப் பகுதிக்கு ஒரு இறவைப் பாசனத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இன்றையதினம் உற்பத்திக்கு மிக முக்கியமாக அமைந்திருப்பது விதையாகும். விதைப் பண்ணைகள் இருக்கின்றன. இன்னும் விதைப் பண்ணைகளை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.அதோடுகூட ஒரு புதிய விதை வருகிறபோது அந்த விதையை அனைத்து கிராமங்களிலும் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு செலவு பிடிக்காது என்று கருதுகிறேன். ஒரு கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட, தீவிரமாக சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அந்த விதையைக் கொடுத்து அங்கேயே உற்பத்தி செய்யச் சொல்லி, அந்த ஊரில் இருக்கக்கூடிய இன்னும் 10,20 விவசாயிகளுக்கு அந்த விதையைத்

தரமான விதையாக அடுத்த ஆண்டு கூடுதலாக வழங்குவதற்கு வேகமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 4-50

இன்றையதினம் விதைகள் கண்டுபிடிக்கப்படுவதாக பத்திரிகையில் வருகிறது. விவசாயிகள் அந்த விதையை வாங்கிப் பயன்படுத்தவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அந்த விதை கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. சென்ற ஆண்டு கூட கோவையில் ஒரு தனியார் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட விதை அதிகமான மகசூல் தருகிறது என்று கேள்விப்பட்ட விவசாயிகள் ஏறத்தாழ ஒரு கிலோ 100 ரூபாய் கொடுத்து கூட வாங்கி சாகுபடி செய்தார்கள். அப்படி விதை என்று சொல்லுகிறபோது அதை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஒரு ஆர்வத்தோடு அந்த விதையை வாங்கி அதிக உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக முயற்சிக்கிறார்கள். அப்படிப்பட்ட

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு வேளாண் பல்கலைக் கழகம் வெளியிடக்கூடிய விதைகளைத்தான் இன்றைக்கு வேளாண்மைத்துறை பெற்று விதை உற்பத்தியாளர்களுக்குத் தந்து விதையைப் பெருக்கி விவசாயிகளுக்குத் தருகிறது. தனிப்பட்ட ஒருவர், தனியார் ஒருவர் ஒரு புதிய விதையை அறிமுகப்படுத்துகிறார் என்று சொன்னால் எந்த அடிப்படையிலே, என்ன பரிசோதனை செய்யப்பட்டு விவசாயிகளுக்குத் தரமுடியும்? சில தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, தனியார் தயாரிக்கக்கூடிய விதைகளைப் பற்றி அரசாங்கம் ஆய்வு செய்ததற்குப் பின்னால்தான் அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசோதித்து அதை அங்கீகரிப்பதற்கு கொஞ்சம் விரைவாக—அப்படிப்பட்ட விதைகளை தனியார் அறிவிக்கிறபோது அரசு வேகமாக—அதைப் பரிசோதித்து, தரமான விதையா என்று கண்டுபிடித்து அதை விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய வேகமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் தரமான விதையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு விதையினுடைய விலை அதிகரித்திருக்கிறது. மற்ற மானியங்கள் வழங்குவதைவிட விதைக்குக் கூடுதலாக மானியம் கொடுத்து குறைந்த விலையில் விதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக விலை இருக்கின்ற காரணத்தால் அதை வாங்கிப் பயன்படுத்த முடியவில்லை. இந்த ஆண்டு கூட குறுவை மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது, சம்பா மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது, என்னுடைய மாவட்டத்தில். மற்ற மாவட்டத்திலிருந்து தண்ணீர் வருவதற்கு முன்பாகவே விதையை தருவித்து விவசாயிகளுக்கு வேண்டும்போது விதையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதை என்று சொல்லுகிறபோது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெள்ளத்தைத் தாங்கக்கூடிய, நீரைத் தாங்கக்கூடிய விதையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வறட்சியைத் தாங்கக்கூடிய விதையாகவும் கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் எங்கள் மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதால் கடுமையான உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அந்த உற்பத்தி பாதிக்கப்படுவதால் விவசாயிகளுடைய பொருளாதாரம் மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கு உணவு வழங்கக்கூடிய அந்த அளவு என்பது குறைகிறது. இந்த ஆண்டு 100 லட்சம் டன் எட்டவேண்டும் என்று சொல்லுகிறபோது நிச்சயமாக அது வரவேற்கதக்கது ஆகும். ஆனால் 100 லட்சம் டன் எட்டுவதற்கான அடிப்படையாக அமைந்திருக்கிற இந்த விதைகளைக் கண்டுபிடிப்பதற்காக முயற்சிக்கவேண்டும்.

அதேபோல் உரம், பூச்சி மருந்து விவசாயிகள் விரும்புகின்ற பூச்சி மருந்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றைக் கூறலாம். மானியம் வழங்கப்படாத சில பூச்சி மருந்துகளை விவசாயக் கிடங்குகளில் விற்பனை செய்ய முடியவில்லை என்று கூறலாம். அதற்கு மானியம் கூட வழங்கத் தேவையில்லை. அரசு மானியம் வழங்கக்கூடிய அந்த பூச்சி மருந்துகள் இல்லாதபோது மானியம் வழங்க முடியாத பூச்சி மருந்துகள் இருக்குமானால் இந்த பூச்சி மருந்துகள் விற்பது என்பது அவசியம் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் மானியத்தோடு

வழங்கக்கூடிய பூச்சி மருந்துகளைத்தான் விற்க முடியும். தனியார் மருந்துகளை, மானியம் இல்லாத பிற மருந்துகளைப் பயன்படுத்துவது என்று சொன்னால் அது ஒரு வியாபாரிக்கு நிகராகும். எனவே, வியாபார நோக்கத்தில் இந்தத் துறை செயல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சாதாரண, கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயிகள் விரும்புகிற மருந்துகளை வாங்குவதற்கு நகரத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது.அதனுடைய செலவு, போக்குவரத்து நேரம், இதையெல்லாம் கணக்கிடுகிறபோது, விவசாயிகளுக்கு செலவு அதிகமாகிறது. அந்த வகையில்தான் அந்த மருந்துகளைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மானியம் வழங்குகிறபோது மருந்தோ அல்லது பிற பூச்சிக்கொல்லி மருந்துகளோ வாங்குகிறபோது வேறு ஒரு பொருளையும் வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். அது தவிர்க்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொன்னால், மானியத்திலே மருந்து வாங்குகிறபோது, களைக்கொல்லி மருந்தை வாங்கினால்தான் அதைக் கொடுப்பேன் என்று நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. களைக்கொல்லி மருந்து என்பது, விவசாயத்திற்கு முன் இடக்கூடிய மருந்து, ஆனால், ஒரு விவசாயி நடவு முடித்த பிறகு, நடவுக்கு மருந்து, அந்தப் பயிரைப் பாதுகாக்க மருந்து வாங்கச் செல்லுகின்ற போது, களைக்கொல்லியை வாங்கினால்தான், அந்த மருந்து மானியத்திலே வழங்கப்படும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதை தவிர்க்க வேண்டும். ஏனென்றால், எப்போது களைக்கொல்லி போடுவது அல்லது களைக்கொல்லி போடாமல் இருப்பது என்பது அந்த விவசாயிகளுடைய விருப்பத்திற்கு விடுவதுதான் சிறப்பாக இருக்குமே தவிர, நிர்ப்பந்தப்படுத்தி விற்பது என்பது எந்த விதத்திலும் நியாயம் கிடையாது. அது தவிர்க்கப்படவேண்டும்.

பிற்பகல் 4-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வராக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, எந்தவொரு பொருளையும் அது மருந்தாக இருந்தாலும்

அல்லது நாள்பட்ட விதையாக இருந்தாலும், அந்த விதைகள் இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே அந்த மேலாளர்கள் கண்டிப்போடு, வற்புறுத்தி விவசாயிகளுடைய தலையிலே கட்டுகின்ற வழக்கம் அறவே ஒழிக்கப்பட்டு இருக்கிறது. சில நேரங்களிலே புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துகின்ற பொழுது, அந்த நேரத்திலே விவசாயிகளிடத்திலே அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர் சொல்லுவார். மானிய விலையிலே நீங்கள் மருந்து பெற்றுப் போகிறீர்கள்; அதேநேரத்திலே நீங்கள் களைக்காக அதிக ரூபாய் செலவு செய்யவேண்டி இருக்கும்; எனவே இன்றைக்கு *120* ரூபாய் பெறக்கூடிய இந்தக் களைக்கொல்லி மருந்து, இங்கே *60* ரூபாயிலே உங்களுக்குக் கிடைக்கிறது; எனவே இதை நீங்கள் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையை மட்டும்தான் சொல்லுவார்கள். வற்புறுத்தி, யாருடைய தலையிலும் இந்தத் துறை கட்டாது. அப்படி எங்காவது நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களோடு தொடர்பு கொண்டு, அப்படி நீங்கள் நிர்ப்பந்தப்படுத்தக் கூடாது என்றும், விதை வாங்குகின்றபோதோ அல்லது மானியத்திலே உரம் வாங்குகின்ற போதோ அல்லது மானியத்திலே இதர மருந்துகளை வாங்குகிறபோதோ இப்படிக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று அவர்களை அறிவுறுத்தினார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, பாதிப்பான காலங்களிலே அரசுத் தரப்பிலே வழங்கக்கூடிய உரம் அல்லது பூச்சி மருந்து, அல்லது விதை போன்றவைகளை வாங்கச் செல்லுகின்றபோது, விவசாயிகளிடம் இந்த மானியத்தை மையப்படுத்தி, விவசாயிகளிடம் விவசாயக் கருவிகள் கட்டாயமாக வாங்கவேண்டு மென்று கோரப்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டு மென்று சொன்னால், இந்த பரம்புச் சட்டம், ஏர் உழுவதற்கு முன்னாலே மண்ணை சமப்படுத்துவதற்காக இருக்கிற பரம்புச் சட்டம், இதை, இந்த ஆண்டு வெள்ளக் காலத்தில் கொடுத்த மானியத்திலே கட்டாயம் வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டது. ஏனென்றால், இன்றைய தினம் கிட்டத்தட்ட ஏர்மாடு என்பது போய், இன்றைக்கு டிராக்டர்கள் மூலம்தான் வயல்களிலே உழுகின்ற ஒரு கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. இதற்குப் பிறகு அதை வாங்கி

எந்த விவசாயியும் பயன்படுத்தமுடியாத நிலை இருக்கிறது. அப்படிப் பயன்படுத்த முடியாத அந்தக் கருவியை அவர்களிடம் ஒப்படைப்பதற்கு, நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும். இந்த ஆண்டு வெள்ளக் காலத்திலே வழங்கப்பட்ட அரசு மானியத்தில் உரம், பூச்சி மருந்து, விதைகள் போன்றவை கொடுக்கிற நேரத்தில் இது கட்டாயமாக நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். டிராக்டர்கள் என்பது சிறு விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் தரவில்லை. பரம்பு பலகை என்பதுகூட முழு விலையில் அல்ல; 50 சதவீத மானியத்தில்தான் வழங்கப்படுகிறது. பரம்பு பலகை இல்லாமல் எந்த விவசாயியும், அதிலும் குறிப்பாக, தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களிலே நடவு நடுவதற்கு முன்னாலே எந்தத் தொழில் நுணுக்கம் தெரிந்த விவசாயியும் பரம்பு ஓட்டாமல் நடவு நடமாட்டான். எனவே, அவர்களுக்குப் பயன்படக்கூடிய கருவியை மானிய விலையில்தான் அரசாங்கம் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது மானிய விலையில் வழங்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த மானியம் வழங்குகிறபோது, அதை வாங்கினால்தான் மானியம் வழங்கப்படும் என்று வெள்ளக் காலத்திலேயே, அரசு சார்பாக அறிவிக்கப்பட்ட, மருந்து, உரம், விதை போன்றவைகளை வாங்குகிறபோது ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். அப்படியிருந்தால் அது எதிர்காலத்திலே தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் உரவிலை உயர்ந்திருக்கிறது. அந்த உரவிலை உயர்ந்ததன் விளைவாக, விவசாயிகள் முழு உரத்தையும் வாங்கிப் பயன்படுத்த முடியவில்லை. அதனுடைய விளைவாக, இன்றைக்கு கிராமப்புறங்களிலே இந்த பசுந்தாள் உரங்களை ஏற்படுத்துவதற்கு, பசுந்தாள் உரங்களைப் பயிரிடுவதற்கு அரசு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு காலத்திலே, கிளைரிசீடியா மற்றும் பசுந்தாள் உரங்களை வயல்வெளிகளிலே பயிரிடவேண்டுமென்று விவசாயிகள் கட்டாயப்

படுத்தப்பட்டு, அவர்களுக்கு அதற்கான முழுமையான கன்றுகள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த 4, 5 ஆண்டுகாலமாக இந்த முறை என்பது கைவிடப்பட்டிருக்கிறது. மீண்டும் அப்படி அவர்கள் பசுந்தாள் உரங்களைப் பயிரிடுவதற்கு வேண்டிய கன்றுகள் மற்றவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

வயல்களிலே கோடையிலே தெளிக்கப்படுகின்ற பசுந்தாள் உரங்களை அதிகமாக நமது வேளாண்மைக் கூடங்களிலே வைத்து, அந்த விதைகள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை நிலையங்களை அதிகரிக்க வேண்டும். விற்பனை நிலையங்கள் அதிகரிக்கப்படுகின்றபொழுதுதான் நாம் வழங்கக்கூடிய மானியம் விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்த வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி விற்பனை நிலையம் என்கின்றபொழுது வலிவலத்திலே இனாமாகக் கூட இடம் தருகிறோம் என்று கூறுகிறார்கள். வலிவலம் என்பது ஒரு மையமான பகுதி. சிறு விவசாயிகளைக் கொண்டிருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே ஒரு விற்பனைக் கூடத்தை, அரசுக்குச் சொந்தமான, வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான ஒரு விற்பனைக் கூடத்தைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று விவசாயிகள் விரும்புகின்ற உரம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு மண்ணுக்கும் ஒவ்வொரு விதமான உரங்கள் பயன்படுகின்றன. எல்லா உரமும் எல்லா மண்ணுக்கும் ஏற்றவாறு பயன்படுவதில்லை. அந்த வகையிலே விரும்புகிற அளவிற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் மாவட்டம் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே களம் கட்டப்பட வேண்டும். களம் கட்டப்படுகிறது என்று கொள்கை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இதை வரவேற்பதாக இருந்தாலும்கூட எங்கள் மாவட்டத்திலே அனைத்து கிராமங்களிலும் களம் கட்டிக் கொடுப்பதன் மூலம் இன்னும் குறுவை சாகுபடி அதிகரிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இன்றையதினம் போக்குவரத்து பாதிக்கிற அளவிற்குச் சார்லைகளிலே

களம் வைத்து செய்யப்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதோடுகூட தார்ப்பாய் வழங்குகின்ற திட்டம் இப்பொழுது இல்லை என்று - கிட்டத்தட்ட இல்லை என்று கூறலாம். (குறுக்கீடு) தார்ப்பாய், அது அதிக அளவிலே - அந்தத் தார்ப்பாய் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புறத்திலே விவசாயக் கரும்புத் திட்டம் - பல்வேறு திட்டங்களிலே இன்றையதினம் கிராமப்புறச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே அதிகமாக எண்ணெய் தோண்டப்படுகிறது. அப்படி எண்ணெய் தோண்டுகின்றபோது அதிலே கிடைக்கின்ற ராயல்ட்டியை மத்திய அரசிடமிருந்து பெற்று கிராமப்புறங்களிலே களங்கள் இருக்கிற பகுதிகளை இணைக்கக்கூடிய சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இன்றையதினம் அந்த ராயல்ட்டி பெறப்படுகிறதா என்று அமைச்சரவர்கள் பதிலளிக்கிறபொழுது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அடுத்து, பால் பண்ணை. இந்தப் பால்வளத்தைப் பொறுத்த வரையிலே ஏறத்தாழ கடந்த ஓராண்டுக் காலமாகக் கிராமப்புறத்திலே பால்வளத்தை ஏற்படுத்துகின்ற திட்டமே கைவிடப்பட்டதாக நான் கருதுகிறேன். இதற்கு முன்பெல்லாம் கிராமத்திலே குறைந்தபட்சம் 20 மாடுகள் அல்லது 25 மாடுகள் கறவைக்கு ஏற்பாடு செய்து, அரசால் கடன் வழங்கப்பட்டு மாடுகள் வழங்கப்பட்டன. இப்பொழுது கடன் வழங்கப்படுவதும் கிடையாது; அப்படி மாடுகளும் கிடையாது. அப்படிக் கறவை - பால்வளத்தை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலைமையும் இப்பொழுது கிடையாது. ஏதோ இந்தப் பால்வளம் என்கிறபொழுது கிராமப்புறத்திலே மாடு, கறவை என்று வருகின்றபொழுது அந்த விவசாயிகளுடைய குடும்பங்களிலே ஓரளவுக்குப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பு இருந்தது. அது இப்பொழுது முழுமையும் ரத்து செய்யப்பட்டதாகவே கருதுகிறேன். எங்கு பார்த்தாலும் அப்படிப்பட்ட கடன் வழங்கி, அதன் மூலம் மாடு பெற்று, கிராமங்களிலே—பால் கறவை மாடு—அந்தக் கறவைத் திட்டம் ஏற்படுத்துவது என்பது இன்றையதினம் கைவிடப்பட்டதாகக் கருதுகிறேன். அதுமாதிரி இல்லாமல் மீண்டும் அதை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 20] [திரு. வே. தம்புசாமி]

அதேநேரத்தில் மாதவரம் பால் பண்ணையைப் பொறுத்த வரையிலே, 1980-வது ஆண்டில் அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தம் செய்தார்கள். அந்த வேலைநிறுத்தம் செய்த காரணத்திற்காக ஏறத்தாழ 1000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 371 பேருக்கு வேலை வழங்கப்பட்டது. ஆனால் ஏறத்தாழ 699 பேர்களுக்கு இதுவரையிலும் வேலை வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்கள் சிரமப்பட்டு, குடும்ப வாழ்க்கை நடத்த முடியாமல், பொருளாதாரச் சிரமத்திலே இன்றையதினம் கூலி வேலை செய்து பிழைக்கக்கூடிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் விரைவாக அந்த 699 பேர்களுக்கும் பரிசீலித்து வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுதுகூட இதுசம்பந்தமான, வேலை கொடுப்பதற்கு அங்கே இருக்கிற அந்தக் கூட்டம், கூட்டப்படாமலேயே காலம் கடத்தப்படுகிறது. பி.சி. கூட்டம் கூட்டப்படாமலேயே காலங்கடத்தப்படுகிறது. அதை விரைவாக அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்து அந்த ஊழியர்களுக்கு வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் பால் துறைகளிலே வேலை செய்பவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. அதையும் அமைச்சரவர்கள் பரிசீலித்து அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கிராமங்களிலே, இன்றையதினம் விவசாயிகளுக்கு ஒரு முக்கியமாக அமைந்திருப்பது கால்நடையாகும். அப்படிப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பதிலே கால்நடை மருத்துவமனைகள் இன்றையதினம் நீண்ட தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அதைக் கொண்டுசென்று பராமரிக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. உடனடியாக, அந்தக் கிராமங்களிலே கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்தாவிட்டாலுங்கூட, வாரம் ஒருமுறை, கால்நடை மருத்துவர்கள் அங்கே சென்று, வைத்தியம் பார்க்கிற ஒரு திட்டத்தையாவது உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

அதேபோன்று, கிராமங்களில் பணியாற்றக்கூடிய கால்நடை ஆய்வாளர்களுக்கு விபத்து ஈட்டுப்படி என்பது, வழங்கப்படாமல்

இருக்கிறது. ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேல், அப்படிப்பட்ட ஊழியர்கள் கிராமங்களிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ஈட்டுப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கால்நடை மருந்துகள் வாங்குகிறபோது, ஐந்தாயிரம் ரூபாய்க்குத்தான் மருந்துகள் வாங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதனை மாற்றி, கூடுதலாக மருந்துகள் வாங்குவதற்கான அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருந்து, தற்போது டெண்டர் மூலம் பெறப்படுகிறது. முன்பெல்லாம் அவர்களுக்குத் தேவையான மருந்துகள், அரசுத் துறையிலே இருந்து அனுப்பப்பட்டு வந்தன. மத்திய அரசுக் கிடங்குகளிலே இருந்துகூட பெறப்பட்டு வந்தன. ஆனால், இன்றையதினம் டெண்டர் முறை இருக்கிற காரணத்தினால், தரமற்ற மருந்துகள் வாங்கப்படுகின்றன. அதனால், அந்த மருந்துகளை, பாதிக்கப்பட்ட நோய்க்குக் கொடுத்தால், அவை பயன்படுவது கிடையாது. ஆகவே, தரமான மருந்துகள் வாங்குகிற வகையில், முன்னால் கொடுக்கப்பட்டதைப் போல, மத்திய அரசு கிடங்குகளிலிருந்து பெற்று, மருந்துகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது)*

கிட்டத்தட்ட நமது கால்நடைத் துறையில் *250*-க்கு மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் காலி இடங்களை விரைவாகப் பூர்த்தி செய்ய, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை கால்நடை ஆய்வாளர்களுக்கு பயிற்சி நடைபெற்று, கிராமங்களிலே இருக்கிற படித்த, வேலையற்ற இளைஞர்கள் பயிற்சி பெற்று, கால்நடை மருத்துவ மனைகளிலே பணியாற்றி வந்தார்கள். அவ்வாறு இருந்த கால்நடை மருத்துவப் பயிற்சிகூட, இன்றையதினம் மூடிக் கிடக்கிறது. ஒரத்தநாட்டிலே இருக்கிற அந்தப் பயிற்சிப் பள்ளி நடத்தப்படாமல் இன்றையதினம் மூடிக் கிடக்கிறது. அதை, விரைவாகத் திறந்து, பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, டாக்டர்கள், இன்றையதினம் மருத்துவமனைகளுக்கு அருகிலேயே, ஊரிலேயே அவர்கள் குடியிருப்பதற்கான குடியிருப்புகளைக் கட்டுவதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். அவர்கள் வெளியிலே இருந்து வருவதற்கு சிரமப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டும்; அல்லது வாகனம் வாங்க, கடனையாவது அவர்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் கண்கொடுத்தவடிவு என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே, கால்நடை மருத்துவமனை இல்லாமல், ஏறத்தாழ 8 கிலோ மீட்டர் தூரம், விவசாயிகள் அல்லது மற்றவர்கள் மாட்டை ஓட்டிச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, கண்கொடுத்தவடிவினை மையமாகக் கொண்டு, அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், வலிவலத்திலே, அதனை மையமாகக் கொண்டு ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதை விஸ்தரிப்பதற்கான சிறப்பான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. வருடம் முழுவதும் விவசாயிகள் அதனைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு, அந்த மருத்துவமனையை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முடித்து விடலாம்; இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். உங்களுக்குப் பின்னர், இன்னும் 10 பேர்கள் பேச இருக்கிறார்கள்.

திரு. வே. தம்புசாமி: அதேபோன்று, திருவாரூர் நகரத்திலே இருக்கக்கூடிய மருத்துவமனையில் முன்னர் காளைகள் வரவழைக்கப்பட்டு, அவற்றின்மூலம் 'செமன்' எடுக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டது. ஆனால், இப்போது அந்தக் காளைகள் இல்லை; அப்படி எடுப்பதும் கிடையாது. ஆகவே, மீண்டும் அந்த நிலைமை இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதனை நவீன மருத்துவமனையாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அடிப்படையில், கால்நடைத் துறையை விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில், வேகமாக கால்நடைகளைப் பராமரிக்கக்கூடிய வகையில், செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கிராமங்களுக்கு மருத்துவர்கள், வாரம் ஒருமுறையாவது சென்று, அங்கே இருக்கக்கூடிய கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வியாதிகளைப் பரிசோதித்து, அதற்கான நோய்த் தடுப்பு முறைகளைக் கையாள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர்.பி. பரமசிவம்.

பிற்பகல் 5-10

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, மற்றும் பால்

வளத் துறை, மேலும் வேளாண்மைத் துறை போன்ற மூன்று மானியக் கோரிக்கைகளின் மீது, இங்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யார் என்று தெரியாத என்னை, ஊர் நின்று பார்க்க வைத்த, இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை, அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் என்று கூறுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பெரும்பான்மையான கிராம மக்கள், விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகிற நம்முடைய தமிழ்நாட்டில், கால்நடைச் செல்வம் என்பது விவசாயிகளுடைய இன்றியமையாத செல்வம் என்று கூறுவது மிகையாகாது. அதனால் என்னவோ சத்தியம் நீயே தர்மத் தாயே என்று தொடங்கி தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு, சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு, பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு, பூப்போல வைத்துக் காப்பது என் பாடு, என்று நம்மையெல்லாம் வாழ வைத்து, இந்த இயக்கத்தைக் கண்ட, மறைந்தும் மறவா புகழ் பெற்ற நமது மாட்டுக்காரவேலன், கால்நடை செல்வத்தினுடைய அருமை, பெருமையைத் தெரிந்து அந்தக் கால்நடை செல்வத்தைப் புகழ்ந்து பாடியதை மறக்க முடியாது. வளர்ச்சிக்கு முக்கியமானதொரு துறையாக நாம் கால்நடை வளர்ப்புத் துறையை தேர்ந்தெடுத்துள்ளோம். 1995-ஆம் ஆண்டிற்கு ரூ. 6.05 கோடி ஒதுக்கி இதயதெய்வம் இந்தத் துறையினுடைய முக்கியத்துவத்தை நமக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். நாட்டு இனப் பசு, எருமைகளை முறையே அயலின ஜெர்சி, பிரிசியன், பொலிகாளைகளைக் கொண்டு மற்றும் முர்ரா பொலிகாளைகளை கலப்பின பெருக்கத்திற்கு இத்துறையின் மூலம் மிகச் சிறப்பாக அந்தக் கால்நடையைப் பெருக்குவதற்கு திட்டம் தீட்டுயிருப்பதை நாம் பாராட்டியாக வேண்டும். கால்நடை நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதற்காக முக்கியத்துவம் கொடுத்து இதயதெய்வம் ஆட்சியில் நல்லதொரு வாய்ப்பு நல்கியிருக்கிறார்கள். நடப்பாண்டில் 400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தவும், மேலும் புதியதாக 10 கால்நடை மருத்துவமனைகளைத் தொடங்கவும் இங்கே வசதி செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான மருந்துப் பொருட்களையும், மருந்துகளையும் வாங்குவதற்கு கிட்டத்தட்ட ரூ. 5.10 கோடி ஒதுக்கியிருப்பதிலிருந்து இந்தக் கால்நடைச்

செல்வத்திற்கு நம்முடைய இதயதெய்வம் ஆட்சி எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. உணர முடிகிறது. தரமிக்க வம்சா வழிகளைத் தோற்றுவிக்க கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. அந்த 4 இடத்தோடு என்னுடைய தொகுதியில் சின்னசேலத்தில் 5 வது இடமாக சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் இதுபோன்ற உறைவிந்து உற்பத்தி நிலையத்தையும், அதை தயாரிக்கும்போது பாதுகாப்பதற்கான உறைவிந்து குழாய்களை, பாதுகாப்பாக வைப்பதற்குத் தேவையான திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்வதற்கும், கிட்டதட்ட 1886 ஏக்கர் விரிந்து, பரந்து கிடக்கின்ற அந்த ஆட்டுப் பண்ணையில் இந்த நிலையத்தை ஏற்பாடு செய்தால் எங்களுக்கு அருகாமையிலுள்ள வள்ளலார் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் போன்ற மாவட்டங்களுக்கு அந்த உறைவிந்துகளை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு இதயதெய்வம் ஆட்சியில் இந்த நிலையத்தை என்னுடைய சின்னசேலம் ஆட்டுப் பண்ணையின் பெரிய நிலப்பரப்பில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இத்தோடு, எதிர்காலத்தில் கிட்டத்தட்ட 6 ஆஸ்திரேலிய தொழில்நுட்ப வல்லுநர்களை வரவழைத்து அவர்கள் மூலம் கால்நடை இனவிருத்தி, கரு மாற்ற தொழில் நுணுக்கம், தீவன அபிவிருத்தி, தீவன விதை அபிவிருத்தி, நோய் கண்டறிதல், கால்நடை நலப் பணி போன்ற இந்தத் தொழில் நுணுக்கத்தை அவர்கள் மூலம் செயலாக்க இருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது இந்தக் கால்நடைத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கால்நடைச் செல்வங்களுக்கு மிக உன்னதமான எதிர்காலத்தை ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த அரசை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். அதேபோன்று டானிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டம், செம்மறி ஆடுகள் அபிவிருத்தித் திட்டம், ஐரோப்பிய பொருளாதார நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்ற ஆட்டு வளர்ப்புத் திட்டம், வெள்ளாட்டுப் பெருக்கம், கோழி இனப் பெருக்கம் போன்று, இப்படி இந்தத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து நடப்பு நிதியாண்டில் செயலபடுத்தி இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து பால்வளத் துறை. பசுமைப் புரட்சிக்கு எப்படி நம்முடைய இதயதெய்வம் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தி

வருகிறார்களோ, அதேபோன்று வெண்மைப் புரட்சியும் போட்டிப் போட்டுக் கொண்டு, இதயதெய்வம் ஆட்சியில் இயங்கி வருவதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

பிற்பகல் 5.15

உண்மையில் ஒரு விவசாயி பொருளாதாரத்தில் வளர்ந்து வருகிறான் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் வெண்மைப் புரட்சி என்று கூறுகின்ற பால் உற்பத்தியால்தான் முடியும். ஆனால் கடந்த கால கல்நெஞ்சுகாரர்களின் ஆட்சியில் கிட்டத்தட்ட 10 பைசா, 20 பைசா என்று பாலின் கொள்முதல் விலையை உயர்த்தவேண்டும் என்றால் கூட ஒருவாரம், 10 நாட்கள் என்று போராடி, சாலை மறியல் செய்துதான் அந்த விலையை உயர்த்திப் பெற முடிந்தது. அப்படி போராடித்தான் 20 பைசாவைக் கூட பெறக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆனால் நம்முடைய இதயதெய்வம் ஆட்சியில் கோரிக்கை வைக்காமலே இரண்டு முறை, மூன்று முறை ஒரு லிட்டருக்கு 75 பைசா என்றும், ஒரு ரூபாய் என்றும் பால் கொள்முதல் விலையை உயர்த்திக்கொடுத்து விவசாயிகளினுடைய வயிற்றில் பால்வார்த்து, விவசாயிகள் பொருளாதாரத்தில் உயர இதயதெய்வம் ஆட்சியில் வழிவகை செய்ததை விவசாயக் குடிமக்கள் மறந்திருக்க முடியாது. பால் உற்பத்தித் துறையில் சல்லி வேராக இருப்பது கிராம அளவில் இருக்கின்ற கிட்டத்தட்ட 10047 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள். இந்த கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தான் சென்னை போன்ற பெரிய நகர்களில் கூட பால் வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு இன்னும் பல சலுகைகளை வழங்கி எதிர்காலத்தில் கிராமத்தில் பொருளாதாரம் வளரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1993-94 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 560 கூடுதல் சங்கங்கள் நிறுவ வேண்டுமென்று இருந்த இலக்கைப் பொறுத்தவரையில் 31.1.94 முடிய கிட்டத்தட்ட 355 கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி சாதனை படைத்திருக்கிறார்கள்.

இந்த பால் துறைக்கு இன்னும் கூடுதலாக நிதியினை ஒதுக்கி எதிர்காலத்தில் சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் மூலமாகவும் நல்ல முறையில் செயல்பட இருக்கிறார்கள். இப்படியாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நமது தமிழக

1994 ஏப்ரல் 20] [திரு. ஆர். பி. பரமசிவம்]

பால்வளத்துறை ஏழை எளிய விவசாயிகளுடைய கற்பக விருட்சமாகவும், காராம் பசுவாகவும் இருந்து வருகிறது.

நம்முடைய அமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் பார்த்தால் பசு பாய்ந்தால் புலி என்ற பழமொழி நமது பால்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கே பொருந்தும். தனது அமைதியான செயல்பாட்டினால் அந்தத் துறையில் அமைதிப் புரட்சி ஏற்படுத்தி அதன்மூலம் இதய தெய்வம் ஆட்சியில் மணி மகுடத்தில் அவர் துறையின் மூலமாக மேலும் ஒரு வைரக் கல்லைப் பதிப்பதற்கு முயற்சி செய்து வருவதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் சின்னச்சேலம் ஆட்டுப் பண்ணையில் *1866* ஏக்கர் உள்ளது. அதாவது மிகவும் விரிந்து பரந்து இருக்கிற ஒரு ஆட்டுப்பண்ணையாகும் அது. ஆனால் அங்கே இப்போது இருப்பது மொத்தமே *710* மேச்சேரி ஆடுகள்தான். அந்த *710* ஆடுகள் தவிர வேறு எதுவும் இருக்க முடியவில்லை. ஆகவே அந்த ஆட்டுப்பண்ணைக்காக ஒரு மாஸ்டர் ப்ளான் தயார் செய்து அரசு அனுமதிக்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதன்மூலம் இருக்கின்ற இரண்டு கிணறுகளை ஆழப்படுத்தி, மேலும் இரண்டு புதிய கிணறுகளை வெட்டிக் கொடுத்து அதன்மூலம் தண்ணீர் ஆதாரத்தைப் பெருக்கி குறைந்தது *50* ஏக்கர் நிலத்திலாவது தீவன அபிவிருத்தி, தீவன விதை அபிவிருத்தி போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கில் அங்கே ஆடுகளை வளர்க்கின்ற திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே செயல்பட்டுவந்த கோழிப்பண்ணை மூடப்பட்டிருக்கிறது. அதுபோல் வெள்ளைப் பன்றிகளும் அங்கே இருந்தன. அதையும் மூடியிருக்கிறார்கள். இந்த இரண்டு பண்ணைகளையும் மீண்டும் துவங்க அருள்கூர்ந்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே உறுப்பினர்கள் கூறியதுபோன்று கால்நடைத் துறையில் பணிபுரியும், கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படியைக் கொடுப்பதோடு காலியாக இருக்கின்ற இடங்களில் பட்டப்படிப்பு படித்துவிட்டு சும்மா இருக்கின்ற நம்முடைய கால்நடை உதவியாளர்களுக்கு ' கன்சாலிடேட்டட் பே' அதாவது தொகுப்பு ஊதியம் என்ற அடிப்படையில் ஊதியம் கொடுத்து வேலை கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொளகிறேன். அதேநேரத்தில் கால்நடை ஆய்வாளர் பயிற்சியை மூடி இருக்கிறார்கள்.

அவர்களுக்கு படிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால் படித்துவிட்டு வேலைக்கு வரவேண்டிய அவசியம் இல்லாமல் அதாவது வேலை கிடைக்காமல் போனால் கூட அவர்களே தொழில் செய்து பிழைக்கிற அளவுக்கு அவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ள முடியும். எனவே அந்தப் பயிற்சியை மீண்டும் தொடங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *5.20*

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய திருக்கரத்தால் துவக்கி வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து என்னுடைய சின்னசேலம் தொகுதியில் அப்சிரேடட் பி.எச்.சி. ஒன்று நிறுவுவதற்காக 6½ ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதையும் இந்த ஆண்டு துவங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் ஆட்சியில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகவும் முக்கியமான எங்களுடைய சின்னசாமி ஏரிக்கு கோமுகி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு டபிள்யு.ஆர்.சி.பி. திட்டத்தில் உள்ளது. அதையும் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய சின்னசேலம் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். இந்த சின்னசேலம் டவுனுக்கு தீயணைப்பு நிலையம் ஒன்று வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சப்-டிப்போ ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலுள்ள கொமிதிப்பொடி மிக முக்கியமான நகரம். அங்கே புற வழிச்சாலை ஒன்று இருந்தால்தான் அந்தப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த முடியும் அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவுசிங் போர்டு மூலம் இங்கே டிவிசன் ஆபிஸ் ஆர்.டி.ஓ. ஆபிஸ் வந்துவிட்டது. அங்கே அவுசிங் போர்டு மூலம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தரவேண்டுமென்றும் டி..ஓ. ஆபிஸ், டி.எஸ்.பி. ஆபிஸ் போன்ற புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைவிட முக்கியமான மின் துறையைச் சார்ந்த-அங்கே மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் துணை மின் நிலையம் ஒன்று இங்கே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைவிட

அங்கே தற்போது கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் துவங்கப்பட்டு இன்று கிட்டத்தட்ட 100 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அதை துவங்குவதற்கு வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து சின்னசேலம் கால்நடை மருந்தகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதோடு பேசி முடித்துக் கொள்ளவும். நேரம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: கால்நடை மருத்துவமனை ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். புதிதாக இந்தத் தொகுதியில் மேல்நாரியப்பன் என்ற கிராமத்திற்கு கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விழுப்பரத்தில் இருக்கிற எங்களுடைய புதிய மாவட்டத்திற்கு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆக இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து என்னுடைய தொகுதிக்கு நல்ல ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.கே. ஆர். ராஜு.

திரு. கே. ஆர். ராஜு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரும் சிறப்பும் மிக்க ஆட்சியில் 1994-95 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை, பால் வளம் மான்ய கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நமது இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியை வணங்கி எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த சாதாரண தொண்டனாகிய என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி மாவட்டத்தின் செயலாளராக்கி மற்றும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் தலைவராகவும் ஆக்கிய எனது இதய தெய்வம் அஞ்சாநெஞ்சம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியைச் சமர்பித்து எனது உரையை துவக்குகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு, மழை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு குன்னூர் ரோட்டில் உள்ள மரப்பாலம் அடித்துச்

செல்லப்பட்டு, அதோடு மட்டுமல்லாமல் சேரன் போக்குவரத்து பேருந்தும் அதில் அடித்துச் செல்லப்பட்டபோது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உதவி செய்தமைக்கும், பாதிக்கப்பட்ட மரப்பால வேலைகளை சரிசெய்வதற்காக உடனடியாக அரசுடன் தொடர்பு கொண்டு எல்லைப் பாதுகாப்புப் படைகளை வைத்து போர்க்கால அடிப்படையில் மிகக்குறுகிய காலத்திலேயே முடிந்து போக்குவரத்தை ஏற்படுத்தி சாதனைப்படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வத்திற்கு நீலகிரி மாவட்ட மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நீலகிரி மக்கள் என்றென்றும் இந்த உதவிகளை மறக்கமாட்டார்கள் என்றும் கூறிக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட மக்களின் நலன் கருதி சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலத்தை தலைமை இடமாகக் கொண்டு பாரதியார் போக்குவரத்துக் கழகம் என்று உருவாக்கித் தந்தமைக்கு இதய தெய்வத்திற்கு எனது உளங்கனிந்த நன்றியை எனது மக்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் *5-25*

விவசாயம் நாட்டிற்கு மிகவும் தேவையான ஒன்றாகும். விவசாயம் இல்லை என்றால் மக்களுக்கு உண்ண உணவு இல்லை, விவசாயத்தில் நன்கு கவனம் செலுத்தினால்தான் நாட்டுமக்கள் பசி, பட்டினி இன்றி வாழ இயலும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். ஆகவே விவசாயத்திற்கு அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பது மிக, மிக அவசியம். இதை நமது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நன்றாக உணர்ந்துகொண்டு, விவசாயத்திற்கு அதிக முன்னுரிமை வழங்கி, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலம் விவசாயத்தில் முதல் நிலையில் இருக்கவேண்டும் என்ற கொள்கையோடு, எல்லாவகை நல்ல திட்டங்களைத் தீட்டி வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி வசதியும் ஒதுக்கியுள்ளார்கள். ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாவண்ணம் அரிசி, கோதுமை, காய்கறி, பால், பழங்கள், உணவு, உப்பு ஆகிய பொருட்களுக்கு வரிவிதிப்புகளிலிருந்து தளர்த்தி ஏழை, எளிய மக்களின் வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும் நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பனியாலும், புயலாலும் வேளாண்மை அடிக்கடி பாதிக்கப்பட்டு போய்விடுவதால் தற்போது நீலகிரி மாவட்டத்தில் கிழங்கு,

1994 ஏப்ரல் 20] [திரு. கே. ஆர். ராஜு]

காய்கறிகளைவிட அதிகமாக தேயிலையே பயிரிடுகிறார்கள். ஆகவே பச்சை தேயிலைக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்து நீலகிரி மாவட்ட விவசாயிகளின் குறை தீர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகமானது 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், விவசாயத் துறையில் நவீன தொழில் நுட்பத்தையும், இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தி தமிழ்நாட்டில் பசுமைப்புரட்சியை உருவாக்குகின்ற நோக்கத்துடனும், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களை நிறுவி நடத்தவும், தரமான உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தயாரித்து தமிழக விவசாயிகளுக்கு வழங்கவும் நிறுவப்பட்டது.

தற்போதுள்ள உற்பத்தி நடவடிக்கைகள், "சனோலா" என்ற பெயரில் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி ஆகிறது. பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல், மீன்பிடி வலை தயாரித்தல், வேளாண் கருவிகள் விற்பனை, உர விற்பனை செய்கிறது.

இந்த ஆண்டு, 1994-95-ம் வருடத்தில் நல்லபடியாக இந்த நிறுவனத்தினைக் கொண்டு வருவதற்கு கீழ்க்கண்ட இலக்கீடுகள் நிர்ணயம் செய்துள்ளோம்.

1994-95 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் தொகுதியில் இருக்கும் போச்சம்பள்ளி சனோலா எண்ணெய் ஆலையில் சுமார் 10,000 டன்கள் சூரியகாந்தி விதைகளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து பிழிந்து எண்ணெய் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விதைகளை, ஆந்திராவிலும் கர்நாடகாவிலும்தான் அதிகம் உற்பத்தி செய்கின்றார்கள். நமது மாநிலத்திலும் அதிக உற்பத்தி செய்ய நமது விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1994-95 ஆம் ஆண்டு 300 டன்கள் தூள் மருந்துகளையும், 3,50,000 லிட்டர் திரவ மருந்துகளையும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டுக்கு ரூ.98 லட்சம் மதிப்புள்ள 70 டன்கள் மீன் வலைகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டில் 449 டிராக்டர்களையும், 1,810 பவர் டில்லர்களையும், 98 லட்சம் ரூபாய் மதிப்புள்ள உபகரணங்களையும் விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டு ரூபாய் *400* லட்சம் மதிப்புள்ள உதிரிப்பாகங்கள் விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்திற்குக் கீழ்க்கண்ட திட்டங்களை *1993-94* ஆம் ஆண்டு வழங்கியதற்காக இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இக்கழகத்தின் தலைவர் என்ற முறையில் எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

அரசின் மானிய விலையில் உரம் வழங்கும் திட்டத்தை இந்த நிறுவனத்திற்கு வழங்கியது.

அரசின் மானிய விலையில் சிறிய டிராக்டர்கள் சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை வழங்கியது.

பவர் டில்லர்களுக்குத் தேவையான டிரைலர்களை மானிய விலையில் வழங்கும் திட்டத்தை வழங்கியது.

மினிகிட் என்ற திட்டத்தில் விவசாயிகளுக்கு உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கியது.

ஆயிரம் பவர் டில்லர்களை மானிய விலையில் சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கியது.

தொடர்ந்து இதுபோன்ற திட்டங்களை வருகின்ற ஆண்டிலும் இந்தக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தக் கழகத்தை செம்மையாக நடத்திட உதவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்பு தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தில் தயார் செய்யப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளை அரசு ஆணையின்படி வேளாண்மைத் துறையும், இதர துறைகளும் வாங்கி வந்தன.

இதே போன்று டிராக்டர், பவர் டில்லர் மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்குத் தேவையான டயர் டியூப், பாட்டரி மற்றும் இதரப் பொருள்கள் யாவும் அரசு ஆணையின்படி இந்த நிறுவனத்தில்தான் அரசுத் துறைகள் யாவும் வாங்கி வந்தன. மறுபடியும் இதைத் தொடர்ந்து செயல் படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்து இந்த நிறுவனம் செம்மையாகச் செயல்பட உதவிடுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு கோரிக்கைகளையும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மறுபரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்தால் இந்த நிறுவனம் லாபகரமாக இயங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த நிறுவனமும் நல்ல தரமுள்ள பூச்சிக்கொல்லி

மருந்துகளையும், டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும் மற்றும் உதிரிப் பாகங்களையும் தமிழக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 5.30

நிலக்கோட்டையைச் சுற்றியுள்ள கொடைக்கானல் போன்ற பகுதிகளில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும், 35 வகையான தொழில்கள் துவங்குவதற்கு ஆலோசனை செய்து எங்கள் நிறுவனத்திற்கு வந்துள்ளது. இந்தக் கழக ஆளுநர் குழுவும் இதுகுறித்து ஆலோசனை செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. ஆகவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுகுறித்து நல்லதொரு முடிவுசெய்து இந்த 'தாய்' நிறுவனத்திற்கு நல்லதொரு திட்டத்தை ஒதுக்கித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைக் கழகமானது முன்பருவப் பயிர் சாகுபடிக்காகவும், பின்பருவப் பயிர் சாகுபடிக்காகவும் விவசாயிகளுக்கு உதவும்பொருட்டு குறுகிய காலக் கடன் கேட்டு இந்திய அரசிற்கு செயற்குறிப்பினைப் பரிந்துரை செய்யுமாறு தமிழ்நாடு வேளாண்மைத் துறைக்கு எழுதப்பட்டது. தமிழக அரசும் மத்திய அரசிற்கு சிபாரிசு செய்துள்ளது. இந்தக் கடன் உதவியானது இந்த நிறுவனத்திற்கு கிடைக்குமானால் தமிழக விவசாயிகளுக்கு முன் பருவப்பயிருக்கும், பின்பருவப் பயிருக்கும் இந்த நிறுவனம் உதவி செய்ய இயலும். ஆகவே, நமது அரசானது மத்திய அரசுடன் தொடர்புகொண்டு இந்தத் தொகையை வாங்கிக் கொடுத்து இந்த நிறுவனம் தொடர்ந்து விவசாயிகளுக்கு உதவிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிறுவனத்தால் தயார் செய்யப்படும் சனோலா என்கின்ற பெயரில் வரும் சூரியகாந்தி எண்ணையானது மிகக் கவனத்துடன் நல்லமுறையில் தயார் செய்யப்பட்டு, இரண்டு தடவை சுத்தகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன்முதலில் விற்பனைக்கு வந்தது இந்த சூரியகாந்தி எண்ணெய் ஆகும். கொழுப்புச் சத்தினைக் குறைத்திடவும், இருதயநோய் வராமல் தடுப்பதற்கும் இந்த எண்ணெயானது பயன்படுகிறது. சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்து நமது மாநிலத்தில் அதிக நிலப்பரப்பில் பயிரிடுவதற்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு மற்றும்

எல்லா சத்துணவுக் கூடங்களிலும் சனோலா எண்ணெயை உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது மாவட்ட பிரச்சினைகள் சில- நீலகிரி மாவட்டம், தமிழ்நாட்டில் உள்ள 25 மாவட்டங்களைவிட எல்லாவகையிலும் தனியான மாவட்டமாக உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் செஷன்ஸ் மற்றும் மாவட்ட நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், முதன்மை குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் உள்ளது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் சார்பு நீதிமன்றம், மெட்ரோபோலிடன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைக்கப்படவில்லை. இதனால் வழக்குகள் நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கின்றன. ஆகையினால், தனியாக கவனம் செலுத்தி நீதிமன்றம் அமைக்க வேண்டும்.

குன்னூர் தாலுக்காவிலும், கோத்தகிரி தாலுக்காவிலும் ஏற்படக்கூடிய சிவில் வழக்குகளை விசாரிக்க குன்னூரில் மட்டும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் உண்டு. அந்த நீதிமன்றம் நடுவர் குற்றவியல் வழக்குகளையும், சிவில் வழக்குகளையும் நடத்த வேண்டிய நடுவராக உள்ளபடியால் வாரத்திற்கு 2 நாட்கள் மட்டுமே சிவில் வழக்குகளை நடத்த முடிகிறது. மற்ற நாட்களில் குற்றவியல் வழக்கு நடத்தி வருகிறார். இரண்டு தரப்பட்ட வழக்குகளை ஒரே நீதிபதி நடத்தி வருவதால் சிவில் வழக்குகள் பல ஆண்டுக்காலமாக தேங்கி உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே, குன்னூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தனியாக அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அங்கு அதற்கான நீதிபதி அறையும், நீதிமன்றத்திற்கு வேண்டிய ஊழியர்களும் ஏற்கனவே இருப்பதால் அரசுக்கு மேற்கொண்டு செலவினங்கள் ஒன்றுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் காடுகளுக்கு மரம் வெட்டும் அனுமதியை குறைக்க வேண்டும். வனப் பாதுகாப்பு நீலகிரி மாவட்டத்தில் நல்லமுறையில் இயங்கி வருகிறது. தேக்கு, ஈட்டி, சந்தனம் மற்றும் விலை உயர்ந்த காட்டு மரங்கள் இங்கு இருப்பதால் இவற்றைப் பாதுகாக்க வனப் பாதுகாப்புப் படை கட்டாயமாக இந்த மாவட்டத்தில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் சாலைகள் அமைப்பதற்கும், சம வெளியில் சாலைகள் அமைப்பதற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஆகவே, நமது அரசு சமவெளியில் சாலைகள் அமைப்பதற்கு ஒதுக்குகின்ற தொகையைவிட மலைப்பகுதிக்கு அதிகத் தொகையை ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

1994 ஏப்ரல் 20] [திரு. கே. ஆர். ராஜு]

கூடலூர் தொகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் ஜென்மபூமி உள்ளது. பிரிவு 17-ன்படி பிரிக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய ஆக்கிரமிப்புக்காரர்களை விலக்கி, சிறு விவசாயிகள் 1 ஏக்கரா,1/2 ஏக்கரா என்று விவசாயம் செய்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடலூர் பகுதியை இரண்டாகப் பிரித்து பந்தலூர் தாலூகாவாகவும், ஊட்டி பகுதியை குந்தா தாலுகாகவாகவும் நிர்வாக அடிப்படையில் பிரித்துத் தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். கூடலூர் உதகையிலிருந்து சுமார் 60 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதால் இங்கு ஒரு கலைக் கல்லூரி கட்டாயமாய் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில், கிராமங்களில் பட்டா இருப்பவர்களுக்கு வீடு கட்ட பழைய நடைமுறைப்படி அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் துறை மானியக் கோரிக்கைமீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு மீண்டும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

பிற்பகல் 5.35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.ப. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1963 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் டெல்லி மேலவைக்குச் சென்றபோது, அங்கு உள்ளவர்கள் பேரறிஞர் அண்ணாவைப் பார்த்து யாருக்காக நீங்கள் பேசப் போகிறீர்கள் என்று கேட்டபோது, நான் ஏழைகளுக்காகப் பேசப் போகிறேன் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவ்வழியில் வந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டெல்லி மேலவைக்கு 1983-லே அனுப்பப்பட்டபோது புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து யாருக்காகப் பேசப்போகிறீர்கள் என்று கேட்டபோது, என் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்ட பணியை நான் தொடரப் போகிறேன் என்று புரட்சித் தலைவி அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட பொன்மனம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு என் உரையை நான் தொடங்குகிறேன்.

அலுவலர்களால் வரும் உயர்வும், வாணிகத்தால் வரும் உயர்வும் நிரந்தரமானதல்ல. ஆனால் உழவால் வரும் நன்மை நிரந்தரமானது.

தனக்கும், உயிரினத்திற்கும், அரசுக்கும் நன்மை தருவது. அதனால் தான் உழவை வேளாண்மை என்றனர். உழவுத் தொழிலை மங்கலமாகக் கருதினர். ஏர் மங்கலம் பாடினர். பொன்னேர் பூட்டினர். மருத நிலம் செழித்தது. உழவர் ஓதை, மத கோதை, உடைநீர் ஓதை, நன்பங்கொள் விழவர் ஓதை, சிறந்தாற்ப நடந்தாய், மணிப்பூவாடை அது போர்த்தி நடந்தாய் வாழி காவேரி என்றும், பூவார் சோலை மயிலாப் புரிந்து குயில்கள் இசைபாட என்றும் இளங்கோவடிகள் உழவிற்கு உதவும் காவேரி நீரைப் புகழ்ந்து பாடினார்.

ஆறும், ஏரியும், குளமும், கிணறும் உழவிற்கு உதவுகின்றன. நெல்லும், கரும்பும், வாழையும், மஞ்சளும், வரகும், கம்பும், முக்கனிகளும் உண்ணப் பயன்படுகின்றன. பருத்தியும் பட்டும் உடுக்கப் பயன்படுகின்றன. மரமும், மூங்கிலும் கீற்றும் வீடு கட்டப் பயன்படுகின்றன. உழவே முழு வாழ்வாகும். உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற முதலில் மண் பண்பட வேண்டும். நிலத்தை நன்றாக உழுதல் வேண்டும். உழுதபின் நீர்விடவேண்டும். நீர்வீட்டபின் நல்ல விதை தெளித்து, நாற்றுக்களை நட வேண்டும். நீர் பாய்ச்ச வேண்டும். பயிரோடு வளரும் களையை காலத்தில் களைய வேண்டும். இயற்கை உரம், செயற்கை உரம் இட வேண்டும். மணிச் சத்து, சாம்பல் சத்து, தழைச் சத்து சம அளவில் கலந்திருக்க வேண்டும். முற்றிய பயிரை எலிகள் வெட்டும். பயிர் அழியாமல் எலிகளைப் பிடிக்க வேண்டும். பல்வேறு பூச்சிகள் தோன்றி பயிருக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்க பூச்சி மருந்து அடிக்க வேண்டும். நிலம் வேண்டும். நீர் வேண்டும். உழ வேண்டும். விதைக்க வேண்டும். எரு இட வேண்டும். பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் பயன் பெற முடியும். அதனால்தான் உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று உழவுத் தொழிலை முதன்மையாக்கினார் அமரகவி பாரதி.

கவிச் சக்கரவர்த்தி கம்பர்கூட தசரத மன்னன் நாட்டைப் பாதுகாப்பதை, ஏழை உழவன் கவனமாக நிலத்தைக் காப்பதை உவமை கூறியுள்ளார். ஏழை உழவன் தினமும் தன் வயலுக்குச் சென்று நெற்பயிரை அழிவினின்று பாதுகாப்பதைப்போல் ஆட்சி புரிந்தான் என்று.

நம்நாடு ஏழை மக்கள் மிகுந்த நாடு. பொருளாதாரத்தை விட மக்கள் வளர்ச்சி மிகுதி. உழவுத் தொழிலே மூலத் தொழில். அரசு வேலைக்குச் செல்வோரும், வாணிகம் செய்வோரும் மிகச் சிலரே. ஆனால் வேளாண் தொழிலில் ஈடுபடுவோர் கோடிக் கணக்கில்.

1994 ஏப்ரல் 20] [திரு. ப. கலியபெருமாள்]

பிற நாடுகளைவிட நம் நாட்டில் வேளாண் துறையின் மூலம் பயன் பெறுவோர் குறைவே. பலருக்கு உழைக்க மனமிருக்கிறது. நிலம் இல்லை. சிலருக்கு நிறைய நிலம் இருக்கிறது, உழைக்க மனமில்லை. புதிய சிந்தனை இல்லை. இயற்கைப் பருவங்களை அனுசரித்தே உழவேண்டும், விதைக்க வேண்டும். அறுவடை செய்ய வேண்டும்.

பிற்பகல் 5-40

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்'' எனக் கூறினார் திருவள்ளுவர். ஆனால் அந்த உழவன் வாழ்வில் நிம்மதி உண்டா என்றால் இல்லை. வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருமக்கள், மழை பொய்த்து விட்டாலும் அல்லது புயல் வெள்ளம் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டாலும் நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுவது அவர்களுக்குத்தான். மற்றவர்கள் மாதம் முடிந்ததும் மாத ஊதியம் பெறுகிறார்கள். அதற்காகப் போராடுகிறார்கள். அரசும் அவர்களுக்குப் பணிந்து போகிறது. இதனையே வள்ளுவர்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று கூறியுள்ளார்கள். ஏழை உழவன் இட்ட பயிர் வீட்டுக்கு வந்தால்தான் நிம்மதி, மகிழ்ச்சி. கூலி வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் இன்னமும் அரசு வழங்கும் வேட்டி சேலைக்குக் காத்திருக்கும் நிலைதான் இருக்கிறது. உழவுத் தொழில் செழிக்கவில்லை என்றால் வறுமை வருகிறது, அதனால் பகை வருகிறது, நோய் வருகிறது, வாழ்வே சூனியமாகிறது. உழவுத் தொழில் சிறக்கவேண்டுமென்றால், பொதுப்பணித்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத் துறை ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் உழவுத் தொழிலில் ஈடுபடுவோர் அனைவரின் வாழ்வும் ஓரளவாவது உயர்வு பெறும் என்பதனை அறிந்தார்.

நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடி கிளியே, வாய்ச் சொல்லில் வீரரடி, என்று பேசுகிறவர்களைப் பார்த்து, அந்த வஞ்சக மனம் கொண்டவர்களை, வீணர்களைப் பார்த்து வெற்றி வாகை சூடிய எங்களது வெற்றி நாயகி, புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைத் துறையிலும் வெற்றி வாகை சூட வேண்டுமென்று, அரசு அலுவலர்களை அழைத்தார். கலந்து பேசினார். புதிய சிந்தனையை உருவாக்கினார். அதிகாரிப் பெருமக்களை முடுக்கிவிட்டார். உழவர் பெருமக்களுக்கு

ஊக்கம் தந்தார். உழவுத் தொழில் செழித்தோங்கவும், உற்பத்திப் பெருக்கவும், வழிமுறைகளை வகுத்துத் தந்தார். அதனால் புகழ் இல்லை, பொருள் இல்லை, என்போரை பூமித் தாய் கண்டாள். நிலம் பெண் ஆனாள். பிறகு தாயானாள். அவள் இல்லையென்பாரைப் பார்த்துக் கேலியாக சிரித்தாள். கேலிச் சிரிப்பு வெட்கம் தந்தது, வெட்கத்தால் மானம் வந்தது, மானத்தால் முயற்சி வந்தது. முயற்சியே பேருழைப்பாக மாறியது. இதனையே திருவள்ளுவரும்,

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்று குறளில் கூறுகின்றார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.கலியபெருமாள், இந்த மானியக் கோரிக்கையில் நீங்கள் ஏதாவது பேசி சீக்கிரம் முடித்தால் பரவாயில்லை. ஏனென்றால் நேரம் அதிகம் தேவைப் படுகிறது. கொஞ்சம் சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: பார் உடைப்பனர் போல் பழிச்சினர் கைதொழ ஏரோடு நின்றார், ஏர் மங்கலமும் அறிந்து கால் குவித்தார். அரிகடாவுறுத்த பெருஞ்செய் நெல்லின் முகவைப் பாட்டும் தென்கினப் பொருநர் ஒருங்குடன் எடுத்த மண்கிளை முழுவின் மகிழிசை ஓதையும் என்று இளங்கோவடிகள் பாடியது போல் உழவர் உழுதனர், உவகை கொண்டனர். பார் போற்றும் எங்கள் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, இயற்கை அன்னையே வாழ்த்தினாள். வேளாண் தொழில் சிறந்தது. வேளாண் குடி பிறந்த ஒருவரையே இத்துறைக்கு அமைச்சர் ஆக்கினார். அவரும் அன்னையின் ஆசி பெற்று தமிழகத்து வேளாண் பெருமக்களோடு பேசினார், குறைகளை அறிந்தார். அவர்களது துயர் துடைக்க, இன்னல்களைக் களைய செயல்படுகிறார் என்றால் மிகையாகாது.

மேலும் என் தொகுதி சம்பந்தமான சில கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன். என் தொகுதிக்கும், அமைச்சர் தொகுதிக்கும், கல்லணை பாலம் எல்லையாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் விளைகின்ற பொருள்கள் அனைத்தும் திருச்சி மார்க்கெட்டிற்கு பல மைல் சுற்றித்தான் போக வேண்டி இருக்கிறது. ஆகையால் கல்லணை பாலத்தில் நேரடியாக பொருள்களைக் கொண்டு செல்ல வழிவகைதனை அமைச்சர் செய்யக் கேட்டுக் கொள்கிறேன். நியாயமெனப் பட்டதை செய்துமுடிக்கும் அன்புத் தலைவி, அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியுள்ள திட்டத்தை நிறைவேற்றித் தரக்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலங்களில் பெய்யும் மழை நீர் எனது தொகுதியில் உள்ள காட்டுவாரியான சோழகம்பட்டிவாரி, அய்னாபுரம் வாரி, முதலமுத்துவாரி ஆகிய வாரிகளின் மூலம் செல்லும் நீர் மக்கள் வாழும் குடிசைகளையும் பயிர்களையும் அழித்து, ஆறுகளின் மூலமாக காயிதேமில்லத் மாவட்டம் பெருமளவு பாதிக்கப்பட்டு கடலில் கலக்கிறது. அந்தக் காட்டுவாரி மூலம் போகின்ற அந்த நீரைத் தடுத்து நிறுத்தி, அந்த அழிவைப் போக்குவதற்கு நாம் ஏரிகளைக் கட்டி, வறண்ட பூமியான தென்பகுதிக்குத் திருப்புவதன்மூலம், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர் தந்து அப்பகுதி மக்களை வாழவைக்கக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தகட்டூர், கோட்டூர், திருக்கடையூர், திருவையாறு, நீடாமங்கலம், முத்துப்பேட்டை–இந்தப் பகுதிகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மூடிவிட்டார்கள். அவற்றை மீண்டும் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் தங்களின் விளைபொருட்களைக் கொண்டு சென்று நல்ல விலைக்கு விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வெகுதூரத்தில் இருப்பதனால், ஆங்காங்கே அவர்களுக்கு குறுகிய இடத்திலே விற்பனைக் கூடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் பூதலூர், திருவையாறு போன்ற இடங்களில் இருந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை எல்லாம் மூடி விட்டார்கள். அவற்றை மீண்டும் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–45

அங்கே உழவர்கள் வைக்கிற பொருள்களுக்கு தொகை குறைந்தபட்சம் 10 ஆயிரம் என்ற அளவுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதை 25 ஆயிரம் ரூபாய் அளவுக்கு கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் அநேக தொகுதிகளில் வேளாண்மைப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு நல்ல சாலைகள் இல்லாத காரணத்தால், அவர்கள் மிகவும் கஷ்டப்படும் நிலை இருக்கின்றது. விளை பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சாலைகள் அமைக்க வேண்டும். பின்னர் அந்தப் பொருட்களை மார்கெட்டுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கும் நல்ல சாலை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். வாழை, நெல் போன்ற பயிர்கள் எல்லாம் விளைகின்ற பகுதி என்னுடைய தொகுதியிலே தான் அதிகம் உள்ளது. சமீபத்திலே

அடித்த மழையாலும் வெள்ளத்தாலும் சேதம் அடைந்த பகுதி திருவையாறு தொகுதிதான். அங்கே சேதம் அடைந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசு மானியம் வழங்க வேண்டும். அதை சரியாக எல்லோருக்கும் வழங்க வேண்டும். ஏதோ ஒருசில பேருக்குத்தான் இப்போது அது வழங்கப்படுகிறது. அங்கே யார் யார் பாதிக்கப்பட்டார்களோ, அவர்கள் அத்தனைபேருக்கும் அது வழங்கப்பட வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். *(மணி அடிக்கப்பெற்றது)*

இந்தத் துறையை ஏற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு பக்கத்து தொகுதிதான். அவர் வேளாண்குடியிலே பிறந்து இருந்தாலும், இலக்கியச் சுவையை அறிந்தவர். ஆகையினால் என் பேச்சை இலக்கியச் சுவையோடு சொல்ல வேண்டும் என்ற கருத்திலே தான் நான் சொன்னேன் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்; நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.இராம. இராமநாதன். பேசுவதற்கு முன்னால் ஒன்று, நேரம் இல்லை, அதனாலே ஐந்து நிமிடத்திலே பேசி முடித்து விடுங்கள்.

திரு. இராம. இராமநாதன்: சிறப்பு மிக்க, மாட்சிமை மிக்க இந்தப் பேரவையினுடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'முன்னேற்றப் பாதையிலே மனதைவைத்து
முழு மூச்சாய் அதற்காக தினம் உழைத்து,
மண்ணிலே முத்து எடுத்து பிறர் வாழ
உழைக்கும் குணமுடையோர் விவசாயி'

என்ற அந்த விவசாய தத்துவத்தை இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே உணர்த்தி வருகின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வரும், தமிழக மக்களின் காவல் தெய்வமும், தமிழகத்திலிருந்து விடுதலைப் புலிகளையும், காட்டுதர்பார் நடத்திய நயவஞ்சகர்களையும், இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற தனியார் நிறுவனத்தையும் இந்நாட்டை விட்டு ஓட்டிய சிங்க நிகர் தலைவியாம் எங்களை எல்லாம் வாழ வைக்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். இந்த விவசாயம், பால்வளம், கால்நடை மற்றும் அனைத்துத் துறைகளிலும் பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காக அந்தத் தங்கத் தலைவிக்கும் எங்களுடைய மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும், நேரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதையும் வேண்டி, என்னுடைய நன்றிகளை

முதலிலே காணிக்கையாக்குகின்றேன்.

சாதாரண சாமானியனான கழகத் தொண்டர்களை, இன்றைக்கு கொடி கட்டி, போஸ்டர் ஒட்டிக்கொண்டு இருப்பவர்களை எல்லாம் இந்த நாட்டு மக்களினுடைய வளத்தை அவர்கள் பேணிக் காக்க வேண்டும் என்ற அடிப்படையில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக்கி, இங்கே மிகச் சிறப்புமிக்க ஒளிர் மிக்க வளத்தைப் பெருக்கிக்கொண்டு இருக்கக்கூடிய பால் வளத்துறையினுடைய பெரும் தலைவராக நியமித்ததற்கு, தஞ்சை மாவட்டத்தினுடைய பால்வளத் துறையினுடைய பெரும் தலைவராக நியமித்தமைக்கு, என்னை வாழ வைக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய, என்னுடைய தாயினுடைய பொன்னான திருவடிகளிலே என்னுடைய நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

புரட்சி என்ற வார்த்தைக்கு புதிய அர்த்தம் தந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த புரட்சி என்ற வார்த்தைக்கான புதிய அர்த்தத்தோடு இலக்கணமும் இலக்கியமும் சேர்த்து ஊட்டிப் படைத்து- பொதுவாக மக்கள், புரட்சித் தலைவி என்பதற்கு, புரட்சி என்கின்ற வார்த்தையை துவக்குகின்றபோதே, அது புரட்சித் தலைவி அவர்களைத்தான், தமிழகத்தின் முதல்வர் அவர்களைத்தான் சொல்கிறார்கள் என்று தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருப்பவர்கள் மட்டுமல்ல, இன்றைக்கு உலக அரங்கத்திலே இருக்கின்ற அத்துணைபேரும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், புரட்சி என்ற வார்த்தையை சொன்னாலே அது இன்றைக்கு சிங்க நிகர்த் தலைவி அவர்களைத் தான் குறிக்கும். டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை இன்றைக்கு உலகம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வேளாண்மையில் எங்கே நோக்கினும் பசுமைப் புரட்சியைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். கால்நடைத் துறையில் பார்க்கிறபோது மகத்தான புதுமைப் புரட்சியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பால் வளத்துறையில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி இந்த நாட்டில் வாழ்கிற அனைவரும் தரமான பாலைப் பெற வேண்டும். அதன்மூலம் தரம் மிக்க உடல் வாகினைப் பெற வேண்டும். நீண்ட ஆயுளைப் பெற்று நல்லவிதத்தில் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இன்றைக்கு பால் வளத்தைப் பெருக்குகிற வகையில் பால் வளத் துறையில் தமிழகத்தில் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நாட்டு மக்கள் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் *5-50*

எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி, இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்களுடைய புதுமைப் புரட்சியை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே முதலில் என்னுடைய நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு காலத்தில் 2 இலட்சம் என்று சொன்னார்கள். 4 இலட்சம், 6 இலட்சம், 8 இலட்சம் என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 22 இலட்சத்தில் கும்பகோணத்தில் கும்பகோணம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டிடத்தை தொடங்குவதற்கு அனுமதியை – எத்தனையோ ஆட்சிகளில் யார் மெனக்கெட்டு இருந்தாலும் கூட, ஒருவருடைய நேரத்திலும் கிடைக்காமல், இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையேற்று இருக்கிற இந்த நேரத்தில் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, அதனை வாரி வழங்கி அனுமதி கொடுத்திருக்கிற, எங்களை வாழ வைக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான திருவடிகளில், 22 இலட்ச ரூபாய் திட்டத்தில் பால் உற்பத்தியாளர் சங்கத்தினுடைய கட்டட நிர்மாணப் பணிக்கு அனுமதி கொடுத்தமைக்கு தங்கத்தலைவி அவர்களின் பாதம் தொட்டு நன்றியைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போல நேற்றைக்கு எங்களுடைய பகுதியில் உள்ள 'காலேஜ் ஆப் ஆர்ட்ஸ் அண்டு கல்ச்சர்' என்ற ஓவியக் கல்லூரியை தன்னாட்சிமிக்க கல்லூரியாக ஏற்படுத்தியிருக்கிற மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு மீண்டும் என் நன்றியை காணிக்கையாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1989-90-ல் கண்ட மாபெரும் புரட்சியையும் நான் சொல்லித்தான் ஆகவேண்டும். இன்றைக்கு வெண்மைப் புரட்சி, பசுமைப் புரட்சி ஒவ்வொரு துறையிலும் கண்டு கொண்டிருக்கிறார்கள் நம்முடைய ஒப்பற்றத் தலைவி, புரட்சித்தலைவி அவர்கள். ஆனால் இதற்கு முன்னால் ஒரு ஆட்சி இருந்திருக்கிறது. இருண்ட ஆட்சி இருந்திருக்கிறது. வறண்ட ஆட்சி இருந்திருக்கிறது. அந்த இருண்ட, வறண்ட ஆட்சியில் ஒரு சிறப்பான சாதனையைச் செய்தார்கள். அந்தச் சாதனையை நான் சொல்லியாக வேண்டும். என்ன சாதனை என்று சொன்னால், இன்றைக்கு லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்ஸ் என்று சொல்லப் படுகிறார்கள் கால்நடை ஆய்வாளர்கள். அந்த ஆய்வாளர்களுக்கு அங்கே ட்ரெயினிங் கொடுக்க வேண்டும், அந்த ட்ரெயினிங் கொடுத்தால் அவர்கள் நல்ல பயிற்சி பெற்று, இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொரு இடத்திலும், குறிப்பாக தமிழகம் பூராவும்

லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்ஸ் பணி செய்ய முடியும். ஆனால் முன்னாள் ஆட்சியாளர்கள் ஒரு சிறப்பான சாதனையைச் செய்தார்கள். என்னவென்று சொன்னால், அந்த லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கான ட்ரெயினிங் சென்டர்களை முழுமையாக மூடிவிட்டு, இந்த நாட்டில் யாரும் ட்ரெயினிங் பெறக் கூடாது, யாரும் நல்லவிதத்தில் இந்த கால் நடைத் துறையில் பணி செய்யக் கூடாது, இவர்கள் பணி நாட்டிற்கு தேவையில்லை என்ற அளவுக்கு, முன்னாள் முதலமைச்சராக இருந்திருக்கிற ஒருவருடைய ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1990 ஆம் வருடத்தில் அதனை மூடி இருக்கிறார்கள். அந்த ட்ரெயினிங் சென்டர்களை மூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை இன்றைக்கு மக்கள் தங்களுடைய மனத்திலிருந்து நீக்கி, அவர்களுடைய அத்தியாயத்திற்கு மூடு விழா கண்டிருக்கிறார்கள். எனவே, தமிழகத்தின் முதல்வர், இங்கே ஒளிவிளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கிற, ஒளிமயமான திட்டங்களை கொடுத்துக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்படி மூடப்பட்டிருக்கிற ட்ரெயினிங் சென்டர்களை மீண்டும் தொடங்க, லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களை மீண்டும் நல்லவிதத்தில் பணியமர்த்த வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கிட்டத்தட்ட 184 லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் பணியிடத்தை காலியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன்காரணமாக 400 மருத்துவர்கள் பணி இல்லாமல் சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 5 ஊசிகள் என்று வைத்துக்கொள்வோம். கிட்டத்தட்ட 184 ஆய்வாளர்கள் இந்த கால்நடைத் துறையில் ஒரு நாளைக்கு 5 ஊசிகள் போடுகிறபோது கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 3 இலட்சத்து 30 ஆயிரம் ஊசிகளைப் போட முடியும். இதிலே ஒரு இலட்சம் ஊசிகள் பயன்பெற்று, குறைந்தது 50,000 என்ற அளவிலாவது நல்ல மிடுக்கான சிறப்பான கிடேரிக் கன்றுகள் இந்த நாட்டில் உற்பத்தியாகி, கிட்டத்தட்ட இந்த 3 ஆண்டுகளில் சுமார் 1 1/2 இலட்சம் கிடேரிக் கன்றுகள் தமிழகத்தில் வந்திருக்குமானால் பால் வளம் சிறப்பான முறையில் அமைந்திருக்கும். அந்தப் பால் வளத்தைக் கெடுத்திருக்கிற அந்த ஆட்சியினை நான் இங்கே மீண்டும் ஒருமுறை குறிப்பிட்டு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதை நான் வேண்டிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-55

அதேபோல் ராணிப்பேட்டையில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம் இருக்கிறது. இந்த உற்பத்தி நிலையம் அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒரு காரியத்தை உடனடியாகச் செய்யவேண்டும் என்று சொன்னால், அதற்கு முழுமையான கோப்புகள் எல்லாம் வரப்பெறுவதற்கு ஒரு மாதம், இரண்டு மாதங்கள் ஆகிவிடுகின்ற சூழ்நிலைகூட இருக்கிறது. கால்நடை மருத்துவத்துறையிலே உடனடியாக நல்ல மருந்து தேவை என்று சொன்னால், அதற்கு அந்தப் பணியினை துரிதப்படுத்திச் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன், அதனை அட்டானமஸ் பாடியாக ஏற்படுத்திக் கொடுத்து, தன்னாட்சி நிலையிலே அந்த உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்து, தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தை மிக நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும் என்பதை நான் பணிவோடு வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஆட்சியினுடைய சாதனைப் பட்டியலைப் பற்றிச் சொல்லவேண்டும். எங்கள் தஞ்சை மாவட்டத்திலே நெடுந்தேர் என்கிற பகுதி இருக்கிறது. அந்த நெடுந்தேர் பகுதியிலே கால்நடை மருத்துவத் துறையினுடைய நிலையம் இருக்கிறது. அந்த நிலையத்திற்கு உலக வங்கியினுடைய திட்ட அலுவலர், உலக வங்கியினுடைய அதிகாரிகள், மற்றும் தலைவர், ஆர்.டி.எர்னால்டு போன்றோர் அங்கே வருகை தந்து பாராட்டியதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற கால்நடைத்துறை மிகச் சிறப்பாக பணியைத் துவங்கியிருக்கிறது, நன்றாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று உலக வங்கியினுடைய பிரசிடெண்ட் அவர்கள் வந்து பாராட்டுகிறார்கள் என்று சொன்னால், எங்களுடைய தங்கத் தலைவியை நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் வந்து, இவர்களை ஏதோ செய்துவிடுவார்கள், அதற்காகச் சொல்கிறோம் என்று இங்கே எதிர்க்கட்சியிலே அமர்ந்திருப்பவர்கள் கூட சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நாட்டிலே தன்னைப் பற்றி நினைக்காமல், இந்த நாட்டிலே கடைக்கோடியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை எளியவர்கள், அன்றாடம் காய்ச்சிகள், அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிற ஏழை எளியவர்களைக் காக்கவேண்டும், என்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லை, என்னுடைய உயிர் எனக்கு வெல்லம் அல்ல, இந்த நாட்டினுடைய மக்களின் நலன்தான் முக்கியம் என்று

இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைப் பாராட்டுவதற்கு மனம் இல்லாமல் சிலர் இருந்து கொண்டிருக்கலாம். நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் பாராட்டவேண்டாம். உங்களுடைய பாராட்டு எங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் பாராட்டும் மனம் படைத்தவர்கள் அல்ல என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவே நீங்கள் இதை உணர்ந்துகொள்ளுங்கள். இல்லை என்று சொன்னால் மக்கள் உங்களை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். இனிமேல் இந்த வெற்றிடங்கள் எல்லாம் வெற்றிடங்களாக இல்லாமல், இங்கே இருப்பவர்களும் சேர்ந்து, அங்கே வந்துஉட்காருகிற, அளவிற்கு முழுவதும் நாங்களே இருக்கிற அளவிற்கு, புரட்சித் தலைவியினுடைய முழுக் கோட்டையாக இது ஆகிவிடும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தஞ்சைமாவட்டத்திலே கால்நடைத்துறையின் மூலமாக உடையாளூர் கால்நடை மருத்துவமனை அங்கே தேவையாக இருக்கிறது. மருதாநல்லூர் என்கிற பகுதியிலே, டாக்டர்கள் இல்லை என்று சொல்லி, அந்த கால்நடை சென்டரை மூடியிருக்கிறார்கள். அதை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மூப்பக்கோயில் என்கிற மேலக்காவேரியினுடைய பகுதியில் மீண்டும் கால் நடைத்துறையினுடைய மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒரத்தநாட்டினுடைய டிரெயினிங் சென்டர் அங்கே இருக்கிறது. அந்தக் கால்நடை டிரெயினிங் சென்டரை மூடியிருக்கிறார்கள். யார் மூடினார்கள் என்பதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். மூடுவிழா கண்டுகொண்டு இருந்தவர்கள் இன்றைக்கு இங்கே இல்லை. மூடுவிழா கண்டு இருக்கிற அந்தப் பகுதிகளை மீண்டும் திறந்து அந்தப் பகுதியிலே நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அவைகள் எல்லாம் மீண்டும் செயல்படுத்தப் படவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (செல்வி. எல். சுலோசனா): உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிட்டது. ஆகவே சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இராம. இராமநாதன்: புதிதாக இங்கே மாற்றுத் தலைவர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். நல்ல சிறப்புமிக்கவர்கள். எனக்கு நேரத்தையும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (செல்வி எல். சுலோசனா): உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

திரு. இராம. இராமநாதன்: தஞ்சை மாவட்டத்தினுடைய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தினுடைய அந்தப் பகுதியிலே தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பாக மானியத்தைக் கொடுத்து, கிட்டத்தட்ட டி.ஆர். மானியம் என்கிற அளவிலே 2000 மில்ச் அனிமல்ஸ் என்கிற அளவிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. இதனை 750 ஆகக் குறைந்திருக்கிறார்கள். எனவே, 1992-93-லிருந்து அந்த மானியத் தொகையினையும் அதற்கான கறவை மாடுகளின் கடன்களையும் அங்கே உள்ள ஒன்றியத்தின் மூலமாகக் கொடுக்கவேண்டும் என்ற ஆணையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். இந்தச் சிறப்பிமிகு திட்டத்தினை நிறைவேற்றும் விதமாக 750 என்கிற அளவினை மீண்டும் 2 ஆயிரம் என்கிற அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதேபோல் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குகிறார்கள். அந்தக் கடனை வழங்குகிறபோது, கறவை மாடுகளுக்கு கடன்கள் வழங்குகிறபோது, பால் வளத்தினுடைய ஒன்றியத்தின் மூலமாக சிபாரிசைப் பெற்று, வழங்கவேண்டும் என்பதை பெருமையோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் இன்றைக்கு மாவட்டத்தினுடைய ஊரக வளர்ச்சியின் முகமை அதிகாரிகளிடமிருந்து வரவேண்டிய கிட்டத்தட்ட 14.4 லட்சம் தொகையைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பட்டது)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (செல்வி எல். சுலோசனா): நேரம் ஆகிவிட்டது. இந்த பாயின்டோடு முடித்துவிடுங்கள்.

திரு. இராம. இராமநாதன்: நான் முதலிலேயே பேசவேண்டும் என்று கேட்டேன். என்னைக் கடைசியிலே பேசவிட்டுவிட்டார்கள். நான் பாயின்டுக்களைத்தான் சொல்கிறேன். அதைப்போல கிட்டத்தட்ட தமிழக அரசிலிருந்து எங்களுடைய தஞ்சை மாவட்டத்தினுடைய பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு 1963-லேயிருந்து 1985 முடிய கிட்டத்தட்ட 20.59 லட்சம் கடன் பெற்றிருக்கிறோம். அதிலே கிட்டத்தட்ட ஒழுங்காக கடனைத் திருப்பிக் கட்டவேண்டுமென்ற அடிப்படையிலே ரூ.16.7 இலட்சம் கடனைத் திருப்பிக்

கொடுத்திருக்கிறார்கள். மீதம் இருக்கிற ரூ.4.52 இலட்சத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 6-00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (செல்வி எல்.சுலோசனா): நேரமாகிவிட்டது. இன்னும் 4, 5 பேர்கள் பேச இருக்கிறார்கள். இத்தோடு முடித்துக்கொள்கிறேன் என்று சொல்லி முடியுங்கள்.

திரு. இராம. இராமநாதன்: அதிலே வட்டி கிட்டத்தட்ட ரூ.15.46 இலட்சங்கள் இருக்கிறது. எனவே அதனை மீண்டும் நம்முடைய தமிழக அரசின் சார்பாக அந்தக் கடனை நீக்கிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, இங்கே நடைபெற இருக்கின்ற உலகத் தமிழ்மாநாடு மிகவும் சிறப்பான முறையிலே தஞ்சையிலே நடைபெற இருக்கிறது. அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகின்ற அனைவருக்கும் இன்றைக்கு நல்லமுறையில் பால் வழங்கவேண்டும். அங்கே வருகின்ற அனைவருக்கும் நல்ல நீர் வழங்கவேண்டுமென்ற அளவிலே தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையை ஏற்று, இந்தத் துறையின் மூலமாக நம்முடைய தஞ்சை மாவட்டத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் சார்பாக நல்ல விதத்திலே செயல்பட இருக்கிற அந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, அந்த உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, கிட்டத்தட்ட ரூ.21 இலட்சத்தை மாவட்டத்தினுடைய அந்த ஆட்சியாளர் மூலமாக எங்களுடைய ஒன்றியத்தில் நாங்கள் கேட்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான இந்த அரசு அந்தத் தொகையினை எங்களுடைய ஒன்றியத்திற்கு வழங்கவேண்டுமென்று மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு விவசாயத் துறையிலே குழாய்கள் அமைப்பதிலே கிட்டத்தட்ட ரூ.40,000 கடன் வசதியைக் கொடுக்கிறார்கள். 100 அடிக்குத்தான் கொடுக்கிறார்கள். பல இடங்களில் சென்று பார்த்தால் 100 அடி இல்லை. 200 அடி, 300 அடி என்று சென்று கொண்டிருக்கிறது.

எனவே நிலத்தடி நீர் கிட்டுகின்ற வகையிலே முழுமையாக செயலாற்றக்கூடிய அந்தத் திட்டத்தைத் தீட்டித் தருகின்ற வகையிலே அதற்காகும் மொத்த தொகை ரூ. 40.00 என்று பார்க்காமல், ரூ.50,000 ஆக இருந்தாலும், ரூ. 70,000 ஆக இருந்தாலும் அதனைச் சற்று உயர்த்தி, விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் பயன்பெறுகின்ற அளவிலே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவான வேண்டுகோளாக வைத்து, மிகச் சிறப்பான முறையிலே பால் வளத்தைப் பெருக்கி, மக்கள் அனைவரும் நல்ல விதமாக பால் பெறவேண்டும். நல்ல வசதியோடு வாழவேண்டும் என்கின்ற உயர்ந்த எண்ணம் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதம் தொட்டு, இந்தத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் எங்களுடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் - முதலிலே பேரவையினுடைய துணைத் தலைவர் இருந்தார், பிறகு மாற்றுத் தலைவர் இருந்தார்கள், இப்போது எங்களுடைய பேரவையினுடைய தலைவரே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் மூன்று தலைவர்களும் இருக்கின்ற நேரத்திலே பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வப்போது உட்கார்ந்தவர்களுக்குத் தக்கபடி பேசிக் கொண்டிருந்தீர்களா ? டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பெருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தரணிக்கெல்லாம் முன்னோடியாகத் திகழவேண்டுமென்ற தாளா வேட்கையுடன், சத்தான பல திட்டங்கள் தந்து, வீணர்களின் கொட்டம் அடக்க ஆனமட்டும் அருமையான சட்டங்கள் பல செய்து, சாதனை புரியும் சாதனைத் தலைவி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது என் கருத்தினைச் சொல்ல விழைகிறேன்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க, பூமிக்குள்ளே சென்று நிலக்கரியை வெட்டினாலும், ஆழ் கடலுக்குள்ளே சென்று முத்தை எடுத்தாலும், வான எல்லைக்குள்ளே பறந்து கிரகங்களைத் தொட்டாலும், அவன் வாழ வழி செய்வது வேளாண்மை. பெருகிவரும் மக்கட்தொகைக்குப் போதிய உணவு கிடைக்க, நவீன முறை வேளாண்மையைக் கையாண்டு உணவு உற்பத்தியில் இன்று இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு வரலாற்றில் ஒரு சாதனையை எட்டியுள்ளது. இதற்குக் காரணம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புரட்சிகரமான திட்டங்களும், அயராது உழைக்கும் அமைச்சரின் முயற்சியுமே ஆகும்.

கள்ளம் கபடமில்லாத வெள்ளை உள்ளம் படைத்த வீரத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் வேளாண்மை சிறக்க, வானம் பொழிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் ஆட்சிக்கு வந்தால் வானமே பொய்க்கும் என்று மக்களே கூறுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

புயல், வெள்ளம் பாதித்த மக்களுக்கு நிவாரணம், ஏழை விவசாயிகளுக்கு விதை, உரம், பூச்சிமருந்து, கடனுதவி அனைத்தும் தந்து மக்களுக்கு பணியாற்றும் மகத்தான அரசாகத் திகழ்கிறது. மத்திய அரசே! பாசிமணி அரிசி பஞ்சாபில் மட்டும் விளைவது அல்ல. பஞ்சாபில் பாய்ந்தோடும் பஞ்ச நதிகளின் திசைகளைத் திருப்பி தென் திசையிலே விட்டுப்பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாசிமணி அரிசியும் இங்கே பளபளக்கும், பசுமையான பூஞ்சோலை குலுகுலுக்கும். வறுமையெனும் நிலை மாறி, செழுமை படைத்த செந்தமிழ்நாடு சிங்காரமாய் சிறந்துவிளங்கும். மற்றவர்கள் கேட்காவிட்டாலும், மனசாட்சியுள்ள மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜீனத் சர்புதின், செல்வராஜ் போன்றவர்கள் நதிகளை தேசியமயமாக்கி விளையும் பொருளுக்கு டங்கல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட மைய அரசு இந்தியா முழுவதும் உள்ள நதி நீரை தேசியமயமாக்கப் போராட வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகிறேன்.

பிற்பகல் 6-05

ஆங்கில பொருளாதார நிபுணர் ஜான் மேனார்ட் அவர்கள் `The important things of the Government is not to do things which

individuals are doing already and to do a thing little better or little worse, but to do things which are not done at all". அதாவது ஒரு அரசாங்கத்தின் முக்கிய கடமை மற்றவர்கள் ஏற்கனவே செய்து கொண்டிருக்கிற பணிகளை அவர்களே சிறப்பாகவோ அல்லது மோசமாகவோசெய்வது அல்ல. ஆனால் இதுவரையில் யாருமே செய்யாத பணிகளை மேற்கொண்டு செய்வதுதான் என்ற கருத்தின் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களின் அரசு செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. நமது நாட்டிலே முதன் முறையாக எம்.ஜி.ஆர். என்ற கலப்பின அரிசி ரகத்தினை உருவாக்கி சாதனை படைத்த பெருமை நம் புரட்சித் தலைவி அவர்களின் அரசையே சாரும். முன்னாள் பாரதப் பிரதமர் நேரு அவர்கள் 'Agriculture is the most important thing than industry for the simple reason that industry depends upon agriculture' என்று விவசாயத்தின் இம்பார்ட்டன்ஸை எடுத்துக் கூறினார்கள். தமிழ்நாடு தண்ணீர் வளம் குறைந்த நாடாக உள்ளது. கிணற்றிலுள்ள நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலை நீடிக்குமானால் விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டு விடும். அதைத் தவிர்க்கின்ற வகையிலே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க் குட்டைகளை அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு நன்மைகள் தரும் இத்திட்டத்திற்கு 1994-95 ஆம் ஆண்டு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர கோன் உயரும், கோன் உயர குடி உயரும் என்பதற்கு ஏற்ப சொட்டு நீர்ப் பாசனத்தால் 50 சத தண்ணீர் சேமிக்கப்படுகிறது. இந்தச் சொட்டு நீர்ப் பாசனத்திற்கு இந்த ஆண்டு அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பிரசித்தி பெற்ற கோவில்களை கொண்டுள்ளது தமிழ்நாடு. அக்கோயில்களின் குளங்களை இதற்கு முன்பு யாரும் கவனிக்கவில்லை. ஆயிரக்கணக்கில் கோவிலுக்கு வரும் பக்தர்கள் குளங்களின் நிலை கண்டு இந்த நிலை நீடிக்க வேண்டுமா, இதற்கு விடிவே இல்லையா என்று பெருமூச்சு விட்டனர். அதை அறிந்த நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குளங்களை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கச் செய்துள்ளது பாராட்டதக்கது. இதுவரையில் யாரும் செய்யாத இந்த மகத்தான சேவையை தமிழக

மக்கள் பாராட்டுகிறார்கள். இச்சீரிய திட்டம் மேலும் வளர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். காவிரி நீர்ப் பாசனப்பகுதியில் வாய்க்கால்கள் சீர் செய்யப்படாமல் வாய்க்கால்களில் புதர் மண்டி இருந்தன. பாசன நீர் விரைவில் வயல்களுக்கு சென்று அடையாமல் வீணாகியது. நெற்பயிருக்கான தண்ணீரைப் புற்பயிர்களும் எடுத்துக் கொண்ட அவல நிலை காணப்பட்டது. இந்த நிலையைக் களைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையில் 50 புல்டோசர்களை உடனே ஈடுபடுத்தி 507 கிலோ மீட்டர் வரை பாசன வாய்க்கால்களை சீர் செய்து பாசன நீர் சேதம் இல்லாமல் விரைவாக வயல்களை சென்றடையும்படி செய்தது, விவசாயிகளின் மனதில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சீரிய பணி தொடர்ந்து இந்த ஆண்டும் செயல்பட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் தருவார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

அடுத்து எனது தொகுதியில் திருமானூர் ஒன்றியத்தில் உள்ள அனைத்து கரும்பு சாலைகளும் கடந்த ஆண்டு பெய்த கடுமையான மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளன. இதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே என் மீதும் என் தொகுதி மக்கள் மீதும் கருணை கொண்டு இந்தக் கரும்பு சாலையை செப்பனிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். கோவில்களில் நந்தவனம் அமைக்கும் திட்டத்தின் கீழ் எனது தொகுதியிலுள்ள திருமழப்பாடி வைத்திய நாதஸ்வாமி கோவிலையும், லால்குடியில் 7 முனிவர்கள் தவம் செய்து முக்தி அடைந்ததாக ஐதீகம் உள்ள சப்தகிரீஸ்வரர் கோவிலையும் இத்திட்டத்தில் சேர்த்து மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆசியுடன் ஈஸ்வரன் ஆசியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெறவேண்டும் என விரும்புகிறேன். (சிரிப்பு) எனது தொகுதியில் திருமானூர் ஒன்றியத்தில் சுமார் 18 ஆயிரம் ஏக்கர் கரும்பு உற்பத்தி உள்ளது. இங்கிருந்து கரும்பை 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காட்டூர் சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்லவேண்டி உள்ளது. இதனால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அது மட்டும் அல்ல, கரும்பு சாலைகள் மிகவும் பழுதடைந்து இருப்பதனால் அதை ஏற்றிச் செல்ல வாகனங்கள் கிடைப்பது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் காட்டூர் கரும்பு

ஆலைக்கு தேவையான அளவுக்கு கரும்புகள் கிடைப்பதால் என் தொகுதியிலுள்ள மக்களுக்கு கட்டிங் ஆர்டர் தாமதமாகக் கொடுக்கிறார்கள். இதனால் கரும்பு எடை குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தைக் கொடுக்கிறது. அவர்களுடைய இன்னல்களைக் களையும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு கரும்பு ஆலையை அமைத்துத் தரும்படி அன்புடன் வேண்டுகிறேன். கரும்பு ஆலை அமைப்பதற்கான அத்தனை சாத்தியக் கூறுகளும் எனது தொகுதியில் உள்ளன என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியிலுள்ள கண்டிராயத்தம் ஏரி 360 ஏக்கர் பரப்பளவுள்ளது. கிட்டத்தட்ட 18 ஆயிரம் ஏக்கர் பாசனப் பகுதியைக் கொண்டது. இந்த ஏரி சுதந்திரம் கிடைத்த நாள் முதலாய் தூர் எடுக்காமல் செப்பனிடப்படாமல் இருந்தது. நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் ஒரு பகுதி சீர்செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்முறை அந்த ஏரியை முழுமையாக சீர்திருத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால் இந்த ஏரியை வைத்துத்தான் தி.மு.க. வினர் அரசியல் நடத்தி வருகிறார்கள். இந்த ஏரியில் உள்ள காட்டாமணக்கை களை எடுத்தால் அங்குள்ள தி.மு.க. வினரை அடியோடு களை எடுத்துவிட முடியும் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து புள்ளம்பாடி வாய்க்காலிலுள்ள மதகுகளுக்கு பெரும்பகுதி பலகை இல்லாமல் உள்ளது. அதனால் கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் போய்ச் சேரமுடிவதில்லை. ஆகவே இம்மதகுகளுக்கு பலகை பொருத்தி தண்ணீர் கடைமடை பகுதிக்கு போய்ச் சேர ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன். வேட்டக்குடி ஏரியை பறவைகளின் சரணாலயமாக அறிவித்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியை அவர் பாதங்களில் காணிக்கையாக்கி அங்கு ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்தி டெலஸ்கோப் இணைத்தால், சுற்றுலாப் பயணிகள் பறவைகளைப் பார்த்து பரவசம் அடைவார்கள். அதற்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

இறுதியாக தமிழ்நாட்டில் தற்போது காவிரி, கீழ் பவானி, பரம்பிக்குளம் ஆழியாறு, சாத்தனூர் மற்றும் பெரியார் வைகை திட்டம் ஆகிய ஐந்து பாசனப் பகுதிகளில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமீப காலங்களில் பாசன வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் பாசன மேலாண்மைத் திட்டங்களில் விவசாயிகளையும் ஒருங்கிணைத்து அவர்கள் மூலமாகத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் காவிரி, கீழ் பவானி திட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், சாத்தனூர் மற்றும் பெரியார் வைகை பாசனப் பகுதிகளில் பாசனச் சங்கங்கள் அமைக்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது.

அமைக்கப்பட்ட பாசனச் சங்கங்கள் சுயமாகச் செயல்படவும், பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டுமானங்களை நல்ல முறையில் பராமரிக்கும் பொருட்டும் ஆகும் செலவினத்திற்காக மத்திய அரசின் நிதி உதவியுடன் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் முதல் இரண்டு ஆண்டுகட்கும், மூன்றாம் ஆண்டு ரூ.75/- வீதமும் மேலாண்மை மான்யம் ஒவ்வொரு பாசனச் சங்கத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில் டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையிலான தமிழக அரசு 1993-94 ஆம் ஆண்டில் மட்டும் 56 பாசனச் சங்கங்களுக்கு ரூ.85.00 இலட்சம் மேலாண்மை மான்யத் தொகை வழங்கி சாதனை படைத்துள்ளது. இது முன் எப்போதும் இல்லாத சாதனையாகும்.

விவசாயிகளின் நலனில் எப்போதுமே அக்கறை கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 1994-95 ஆம் ஆண்டிலும் பாசனச் சங்க வளர்ச்சிக்காக இன்னும் அதிக அளவில் மான்யத் தொகை வழங்க ஆவன செய்யப்பட வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பெருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்கட்கு நன்றி கூறி அமைகிறேன்.

நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பால்வளத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைக்காக *679,62,45,000* ரூபாயும், கால்நடை பால்வளத் துறைக்காக *95,10,90,000* ரூபாயும் நிதி ஒதுக்கீட்டினைச் செய்து இன்றைக்கு நாட்டிலே அடிப்படையாக விளங்குகின்ற இந்த இணைந்த இரண்டு தொழில்களுக்கும் இன்றைக்கு அரசு கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தை நாம் இங்கே உணர முடிகின்றது. இன்றைக்கு விவசாயத்தினைப் பொறுத்தவரையில் லாபகரமான தொழில் என்ற அடிப்படையிலே நடைபெறுகிறதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு வேளாண்மைத் தொழில் பாரம்பரியமாக கட்டாயமாக செய்து வரவேண்டிய ஒரு தொழில் என்ற அடிப்படையில் விவசாயத் தொழிலை கஷ்ட நஷ்டங்களுக்கிடையே விவசாயப் பெருமக்கள் செய்து வருகிறார்கள். ஆங்கிலக் கவிஞர் அலெக்ஸாண்டர் போப் அவர்கள் இந்த வேளாண்மையைப் பற்றிச் சொல்கின்றபோது, `Happy is the man whose wish and care to a few paternal acres is bound to be content to breathe his native air in his own ground` என்று குறிப்பிட்டிருக்கிறார். தந்தை வழியிலே பூர்வீகமாக வந்த சில ஏக்கர் நிலத்தில் தனது விருப்பத்தையும் கவனத்தையும் செலுத்தி சொந்த ஊரிலே தூய்மையான காற்றை சுவாசிப்பதில் எவர் ஒருவர் திருப்தி அடைகிறாரோ அவர்தான் மகிழ்ச்சியான மனிதர் என்று கவிஞர் குறிப்பிடுகிறார். இன்றைக்கு வேளாண்மை செய்வதிலே இருக்கின்ற ஒரே திருப்தி தன்னுடைய ஊரிலே தன்னுடைய நிலத்திலே நாம் சுதந்திரமாக இந்தச் தொழிலைச் செய்கிறோம் என்ற அடிப்படையிலே இந்தத் தொழிலில் இன்றைக்கு ஒரு மகிழ்ச்சி இருக்கிறது. ஆனால், சந்தைப் பொருளாதாரம், நாட்டின் பொருளாதார மாக ஏற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் எந்தத் தொழிலும் லாபத்தோடு நடந்தால்தான் அந்தத் தொழிலை நடத்த வேண்டும்; நஷ்டம் என்றால் அதை மூடி விடவேண்டும் என்கின்ற அந்த பொருளாதாரச் சூழ்நிலையிலே இந்த வேளாண்மைத் தொழில் லாபத்தோடு நடப்பதற்கு சில புதிய தொழில் நுட்பங்களை, புதிய யுக்திகளை, புதிய கொள்கைகளை அரசு வகுத்துச் செயல்படுத்த வேண்டும். அந்த வகையில் தமிழக அரசு இன்றைக்கு இந்த

கொள்கைக் குறிப்பிலே பல புதிய வழிகளை வேளாண்மைப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக இங்கே சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

பிற்பகல் *6.15*

இன்றைக்கு வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்கள் வேளாண்மைத் துறையின் மூலமாக செய்து வந்த சில பணிகளை அவர்கள் மாற்றியிருக்கின்ற கொள்கைக் குறிப்பைப் பார்க்கிறோம். நிலங்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளில் களப் பணியாளர்கள் மிகுந்த கவனம் செலுத்தும் வகையில் இடுபொருட்கள் வணிக நடவடிக்கைகள் படிப்படியாக விட்டுவிடப்படும் என்ற ஒரு புதிய மாறுதலை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இடுபொருட்களை வழங்குகின்ற பணியை இனி பூச்சி மருந்து வணிகமும், பூச்சிக் கொல்லி மருந்து, உர வினியோகம் போன்றவற்றை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிடமும், கூட்டு முகவர்கள் அமைப்புகளிடமும் விடப்படும் என்ற ஒரு குறிப்பு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை விவசாயப் பெருமக்கள் தங்களுக்கு வேண்டிய வேளாண்மை இடுபொருட்களைப் பெறுவது என்றால் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற வேளாண்மைக் கிடங்குகளில் அந்தப் பொருட்களைப் பெற்று வந்தார்கள். அப்படி அந்தப் பொருட்களைப் பெறுகின்றபோது அங்கே இருக்கின்ற வேளாண்மை அலுவலர்கள் இன்ன பயிருக்கு இந்த மருந்துகளை அடிக்கவேண்டும், இந்த அளவுக்கு உரத்தைப் போடவேண்டும் என்று எல்லாம் அறிவுரை சொல்லி அந்த இடு பொருட்களைக் கொடுத்து வந்தார்கள். இனி கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த இடுபொருட்கள் விற்கப்படுகின்றபோது அப்படிப்பட்ட அறிவுரைகளை வழங்க இந்த பூச்சிக் கொல்லி மருந்து இந்த பயிருக்கு அடிக்கவேண்டும், உரத்தை இந்த அளவில் போடவேண்டும் என்ற அறிவுரை வழங்குவதற்கு யார் இருப்பார்கள் என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது இருக்கின்ற வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் அந்த இடங்களில் இருந்து அவர்கள் அறிவுரை வழங்குவார்களா, அவர்கள் எந்தவகையில் செயல்படுவார்கள் என்பதை இன்றைக்கு விவசாயப் பெருமக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒருவராக இருந்தாலும் அந்த இடுபொருட்களை வழங்குகின்ற துறை இருக்கின்றபோதுதான் வேளாண்மை அலுவலர்கள் வருவார்கள். வெறும் ஆலோசனைக்காக விவசாயப் பெருமக்கள் வருவார்களா என்பதை சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் இருந்த அரசு உலக வங்கியிடம் வேளாண்மைத் துறை சார்பாக கடனைப் பெற்றது. அந்தக் கடனைப் பெறுகின்றபோது ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்திலே வேளாண்மைத் துறை உரம், பூச்சி மருந்து போன்ற விற்பனையைச் செய்யாது; இந்தப் பணிகளை இனி கூட்டுறவு நிறுவனம் செய்யவேண்டுமென்று கையெழுத்திட்டு பணத்தைப் பெற்று இருக்கிறார்கள். எனவே தான் அந்த அடிப்படையில் இனி அரசினுடைய வேளாண்மை விரிவாக்க மையங்களில் உரங்கள் அல்லது பூச்சி மருந்துகள் வைக்கப்பட முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மேலும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு அவ்வப்போது நல்ல அறிவுரைகளை வழங்குவார்கள். அதேநேரத்திலே பல்வேறு குறிப்புப் புத்தகங்களையும், விவசாயிகளிடத்திலே வழங்கியிருக்கிறோம். வானொலி, தொலைக்காட்சி, துண்டுப் பிரசுரங்கள் போன்றவைகள் மூலம் எல்லாம் உழவர்களுக்கு பயிற்சி, ஆலோசனை வழங்கிக்கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் எந்த விவசாயியும் வந்து இந்தத் துறை அலுவலர்களைச் சந்தித்து தங்களுக்கு வேண்டிய குறையைப் போக்குவதற்கு வழியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற வகையில் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *6.20*

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண்மை என்பது வெறும் பயிரை வளர்ப்பது என்று இல்லாமல் வெறும் பயிரை வளர்த்து தானியங்களை மட்டுமே விளைவிப்பது என்று இருந்தால் அந்தத் தொழிலில் முன்னேற முடியாது என்றுதான் இன்றைக்கு பட்டுப் புழு வளர்ப்பு; பால் பண்ணை; கோழிப் பண்ணை; மீன் வளம்; முயல் வளர்ப்பு; ஆடு வளர்ப்பு; பன்றி வளர்ப்பு என்று பல்வேறு துறைகளில் வேளாண்மை சம்பந்தப்பட்ட துறைகளிலே இன்றைக்கு விவசாயப் பெருமக்கள் ஈடுபடுவதற்கு இந்த அரசு பலவற்றை கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வகையான வேளாண்மைத் தொழில்களை இன்றைக்கு செய்ய முனைகின்றபோது, அந்த வேளாண்மை விரிவாக்க அலுவலருடைய பணி என்பது

இதற்கு முன்பு இருந்ததைவிட மிக அதிகமான அளவிலே இருந்தால்தான், சரியான தொழில் நுட்பங்களைப் பெற்று, இந்த உற்பத்திகளிலே ஈடுபடுகின்றவர்கள் அந்த உற்பத்தியைப் பெருக்க முடியும். அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு ரசாயன உரத்தினுடைய விலையானது, அதுவும் பொட்டாஷ் மற்றும் சூப்பர்பாஸ்பேட் போன்ற உரங்களினுடைய விலை உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு அதன்காரணமாக, இந்த உரங்களை விவசாயிகள் இடுவதைக் குறைத்து, தழைச் சத்து கொடுக்கின்ற யூரியா போன்ற உரங்களையே அதிகமாக இடத் துவங்கி இருக்கிறார்கள். இதிலே நம்முடைய ஒரு புள்ளிவிவரக் கணக்குப்படி, ஒரு சமச்சீர் உரமாக விவசாயத்திற்கு இடவேண்டுமென்றால், தழை, மணி, சாம்பல் சத்து என்பது *4:2:1* என்ற சதவீதத்தில் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், இப்போது இந்த சூப்பர் பாஸ்பேட்டும், பொட்டாஷும் டீ-கன்ட்ரோல் செய்யப்பட்ட பிறகு தற்போது *15:1:4:6:1* என்ற விகிதத்தில் இந்த ரசாயன உர உபயோகம் ஏற்பட்டு, தழைச் சத்தை மட்டுமே மிகுதியாக இட்டு, மண்ணினுடைய வளம் கெட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை இன்றைக்கு சில புள்ளிவிவரங்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றன. அந்தவகையிலே இன்றைக்கு மண் வளத்தைப் பாதுகாக்கவேண்டுமென்று இங்கே நம்முடைய கொள்கைக் குறிப்பில், மண் ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு தங்களுடைய மண்ணின் தன்மைகள் எவ்வாறெல்லாம் இருக்கிறது என்று சொல்லவேண்டுமென்று இதிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தஅளவிலே இந்த உரத்தினுடைய உபயோகம் மாறிக்கொண்டு இருப்பதில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதையும் இன்றைக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதற்கு மாற்றாக அரசாங்கம், இயற்கை உரங்கள், உயிரியல் உரங்கள், உயிரியல் பூச்சிக்கொல்லிகள், தாவர பூச்சிக்கொல்லிகள், ஒட்டுண்ணிகள், திசு வளர்ப்பு போன்ற ரசாயனம் அல்லாத இயற்கையான விவசாய வழிகளை மேற்கொள்வதற்காக இன்றைக்கு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையும் இந்த நேரத்திலே பார்க்கின்றோம். இன்றைக்கு விவசாயம் வெறும் விஞ்ஞான அடிப்படையிலே ரசாயனத்தை மட்டுமே பயன்படுத்திச்செய்வது, சுற்றுச்சூழலை பாதிக்கக்கூடியது என்ற வகையிலும் மண் வளத்தை பாதிக்கக்கூடியது என்ற வகையிலும் இயற்கையான வேளாண்மைக்கு நாம் சற்று மாறிக் கொண்டு இருக்கின்றதையும் பார்க்க முடிகிறது. இன்றைக்கு சஸ்டெயினபிள் அக்ரிகல்ச்சர் என்று நம்முடைய விவசாயம் வெறும் உற்பத்தியைப் பெருக்குவதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இருக்காமல், மண்ணினுடைய

வளத்தையும் காக்கக் கூடியதாகவும், மண்ணினுடைய தன்மைகள் கெடாமல் பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தினுடைய அடிப்படையிலே இதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து இந்த ரசாயன உரத்தினுடைய விலை உயர்ந்திருக்கின்ற பொழுது, இயற்கை உரங்கள், தாராளமாக விவசாயிகளுக்குக் கிடைக்கவும், இயற்கை உரங்களை விவசாயிகள் நல்லமுறையிலே பயன்படுத்துவதற்கு வேண்டிய சரியான ஆலோசனைகள், அதற்குவேண்டிய சரியான பொருட்களைக் கொடுப்பதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்தினுடைய மிக முக்கியமான ஒரு பகுதி, விதை இன்றைக்கு புதிய புதிய விதைகளை நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே உற்பத்திச் செய்கின்றோம். நெல்லிலே எடுத்துக்கொண்டால், ஒட்டுரக நெல் எம்.ஜி.ஆர். நெல், வாசனை நெல் என்றும் இன்றைக்கு 'ஜெஜெ' என்ற வாசனை நெல் ரகத்தையும், பாசுமதிக்கு ஈடான, நெல் ரகத்தையும் நாம் இங்கே கண்டுபிடித்திருக்கிறோம். இந்த புதிய புதிய வித்துக்களை நாம் கண்டுபிடிக்கின்றபோது, அந்த வித்துக்களையெல்லாம் நாம் பேட்டன்ட் செய்ய வேண்டும். இந்த டங்கல் திட்டத்திலே, விதைகள், அதாவது விதையை உற்பத்திச் செய்கின்ற, கண்டுபிடிக்கின்ற விஞ்ஞானிகளுக்கு அறிவுச் சொத்து பாதுகாப்பு என்ற ஒரு தன்மையை அங்கே கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினால் நம்முடைய பல்கலைக்கழகத்திலே கண்டுபிடிக்கப் படுகின்ற இப்படிப்பட்ட வித்துக்களையெல்லாம் நாம் அதிலே பேட்டன்ட் செய்து, பதிவு செய்து நம்முடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும். நம்முடைய பல்கலைக்கழகத்திலே கண்டுபிடிக்கப்படுகின்ற... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, பூச்சிகள் தாக்கப்படுகின்றபோது பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு எப்படி, யார் ஆலோசனை வழங்குவார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.நா.சா. பழனிச்சாமி அவர்கள் உழவர்-உழைப்பாளர் கட்சியைச் சார்ந்தவர். உழவருடைய நெருங்கிய நண்பர். பல்வேறு சந்தர்ப்பங்களில் மட்டுமல்ல, நாள்தோறும் உழவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லக் கூடியவர். அவருடைய ஆலோசனைக் கேற்றவாறு இன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஏழு புத்தகங்கள்- இதுவரை எந்த

அரசுமே இப்படிப்பட்ட கையேடு - சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்குக் கூட வழங்கியது கிடையாது. இவ்வளவு பொறுப்புணர்வோடு வழங்கியிருக்கிறோம். நீங்களும் சற்றுக் கவனத்தோடு படித்து உழவர்களுக்குப் பயன்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் *6.25*

அதனைப்போல, உரங்களைப் பயன்படுத்துவதிலே தமிழகம் சற்றுப் பின்தங்கியிருக்கிறது. பொட்டாஷ், பாஸ்பேட் உரங்கள் கிடைக்கவில்லை; எனவே மக்கள் தழைச்சத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். இந்தத் துறை வழங்கியிருக்கக்கூடிய வேளாண் கொள்கைப் புத்தகத்திலே ஒரு வரைபடமே போட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு எவ்வளவு எந்த எந்த உரங்கள் பயன்படுத்தப்பட்டன; இந்த ஆண்டு எந்த எந்த உரங்கள் பயன்படுத்தப் பட்டு இருக்கின்றன என்பதையும் குறித்துக் கொடுத்திருக்கிறோம்.

அதே நேரத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து வெளியிடக்கூடிய புதிய நெல் ரகங்களுக்குப் பேட்டர்ன் செய்ய வேண்டுமென்று. இன்றைக்கு டங்கல் திட்டம் சரியான பாதையிலே இந்தியாவை அழைத்துச் செல்லாது என்ற கருத்து இந்தியாவிலே நிலவிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்திலே வழக்கைத் தொடுத்திருக்கிறார். இன்றைக்கு அந்த டங்கல் திட்டமே ஏற்றுக்கொள்ளக் கூடியது தானா என்பது தான் நம் முன்னால் இருக்கக்கூடிய வினா. இப்படியிருக்கையிலே அவர் டங்கல் திட்டத்தின் வாயிலாக வரக்கூடிய பலனை எதிர் பார்த்து பேட்டர்ன் செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர் டங்கல் திட்டத்தை ஏற்றுக் கொள்கிறாரா என்பதை விளக்க வேண்டும்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது டங்கல் திட்டத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தினால் நமக்குச் சாதகமா பாதகமா என்பதை நாம் பல்வேறு கோணங்களிலே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாலும் நம்முடைய வித்துக்களை நாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே கண்டு பிடிக்கப்பட்ட

ஜி.இ.பி.24 என்ற ரகமும், டி.கே.எம். 6 என்ற நெல் ரகமும் இன்றைக்கு உலக, சர்வதேச நெல் ஆராய்ச்சிப் பண்ணையிலே பல்வேறு ஒட்டு ரகங்களைக் கண்டு பிடிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த விதையை மட்டும் நாம் அதனுடைய உரிமையைப் பாதுகாத்து வந்திருப்போமேயானால் இன்றைக்கு ஒட்டு ரக வீரிய நெல் அத்துணையிலும் இந்த இரண்டு நெல்லினுடைய அந்த ஜீன்ஸ் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. அதனுடைய பலனை நம்முடைய அரசாங்கம் - பல்கலைக் கழகம் பெற முடியும். எனவே, சர்வதேச அளவிலே ஏற்படுகின்ற இந்த ஒப்பந்தத்திலே நாம் அதில் இருக்கின்ற சாதக பாதகங்கள் எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த டங்கல் திட்டம் விவசாயிகளைப் பொறுத்தவரையில் சில பாதகங்களை ஏற்படுத்தக் கூடியது என்கின்ற வகையில் அது சொல்லப்பட்டாலும் கூட, அதனுடைய விளைவு எவ்வாறிருக்கும் என்பதை வருங்காலத்தில் அது செயல்முறைக்கு வருகின்றபொழுதுதான் நாம் அதை உண்மையாகக் கண்டுபிடிக்க முடியும். அதுவரையிலே நம்முடைய அளவிலே, நம்முடைய விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கின்ற அந்தப் புதிய கண்டு பிடிப்புக்கான பாதுகாப்பைச் செய்ய வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை என்கின்ற வகையில் அந்தப் பாதுகாப்பாக அந்தப் பேட்டர்ன் செய்ய வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இங்கே வெளியிட்டேன் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத்தில், சொட்டு நீர்ப் பாசனத்தை நம்முடைய அரசாங்கம் இன்றைக்கு அதிகமாக வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறது. தண்ணீர் அருகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய நாட்டை - தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர் ஆதாரங்கள் மிகக் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும். அதே நேரத்தில் அந்தத் தண்ணீரின் மூலமாக நல்ல பலன்களை விவசாயிகள் பெற வேண்டும் என்பதற்காகவும் தோட்டக் கலைத் துறையிலும் மற்றும் இன்றைக்கு இந்த எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையிலும், கரும்பு போன்றவற்றிற்கும் சொட்டு நீர்ப் பாசனத்தை இன்றைக்கு அரசாங்கம் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த சொட்டு நீருக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த மானியத் தொகை சொட்டு நீருக்கு விவசாயிகள் பலர் விண்ணப்பித்தும் எங்கள் மாவட்டத்தில் இன்னும் அது கொடுக்கப்படாமல் அந்த சொட்டுநீர்ப் பாசனக் கருவிகளைப்

பெற முடியாத ஒரு சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே வறட்சிப் பகுதியாக இருக்கின்ற கோவை போன்ற மாவட்டங்களுக்குப் பிரத்தியேகமாகக் கவனம் செலுத்தி, இந்தச் சொட்டுநீர்க் கருவிகளை வழங்க வேண்டும்.

இங்கே வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற பலரும் தஞ்சை, திருச்சி போன்ற தண்ணீர் வளம் மிக்க பகுதிகளிலேயிருந்து தான் அதைப் பேசியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இந்தச் சொட்டு நீர்ப் பாசனத்தைப் பற்றி, சொட்டு நீர்க் கருவிகளினுடைய தேவைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கோவை போன்ற வறண்ட பகுதிகளிலே இருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கும் சொட்டுநீர்ப் பாசனத்திற்கான கருவிகளை அரசு அதிகமாகக் கொடுத்து உதவ வேண்டும் என்ற வேண்டுகோளை இன்றைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்திலே இன்றைக்கு வேளாண்மையை விட தோட்டக் கலைத் துறைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்கள் கோவை போன்ற தொழில் வளர்ச்சி பெருகுகின்ற மாவட்டங்களில் பயிர்களை ஒவ்வொரு போகமும் அழித்தழித்து உழவு, செய்து விவசாயம் செய்வதற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே, நிரந்தரமாக பழ வகைகளையும், தென்னை போன்ற மர வகைகளையும் பயிரிடுவதிலே இன்றைக்கு ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் *6.30*

தென்னையிலே, இன்றைக்கு நெட்டை-குட்டை ஒட்டு ரகம், குட்டை-நெட்டை ஒட்டு ரகங்களை, அரசுப் பண்ணைகளின் மூலமாக வெளியிட்டிருப்பதைப் பற்றி இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் தென்னை வித்துக்கள் போதுமான அளவிற்கு விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. சென்ற ஆண்டு, நானேகூட, பலமுறை முயற்சி செய்தும், அதைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, இந்த தென்னை வித்துக்களை அரசாங்கம், அதிக அளவிலே உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும்.

நம்முடைய பெரியகுளம், தோட்டக் கலைத் துறையிலே, ஒரு புளியன் ரகம், ஒட்டுப் புளியன் பி.கே.எம்.-1 என்ற ஒட்டுப் புளியன் வெளியிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு, வறண்டப் பகுதிகளிலே தண்ணீர் இல்லாத இடத்திலே, மானாவாரியாக, நிரந்தரமாகப் பயிரிட்டு, விவசாயிகள் பலன் அடைவதற்காக, அந்த ஒட்டுப் புளியன் கன்றுகளுக்காக, ஏராளமான விவசாயிகள் அலைந்து

கொண்டிருக்கிறார்கள். அவை போதுமான அளவிற்கு, வேளாண்மைத் துறையின் சார்பிலே உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே, ஒட்டுப் புளியன் கன்றுகளை அதிகமாக உற்பத்தி செய்து, விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு வினியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, விவசாயத்திலே மிக முக்கியமான ஒரு பகுதி, விற்பனை. விவசாயிகளைப் பொறுத்தவரையில், விற்பனையிலேதான் அவர்கள் அனைத்தையும் இழந்து கொண்டிருக்கிறார்கள். விவசாய விளைபொருள்களை வாங்குவோர் சந்தையாக இருக்கிறதே அல்லாமல், விற்போர் சந்தையாக இல்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், பல பகுதிகளிலே இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும்கூட, இன்னும் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், முழுமையாக எல்லா இடங்களிலும், விவசாயிகளுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது என்று சொல்ல முடியாத ஒரு நிலைதான் இருக்கிறது. ஒருசில ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதேநேரத்தில், பல மாவட்டங்களிலே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 'செஸ்' வசூலித்துக் கொண்டிருக்கிற ஒரு சாதனமாக இருக்கிறதேயல்லாமல், விவசாயிகளின் விளைபொருள்களை நன்றாக விற்று, தரகு இல்லாமல், நல்ல முறையிலே விற்றுக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. எங்களது மாவட்டத்திலே உற்பத்திச் செய்யப்படுகிற பட்டுக் கூடுகளுக்கு, இங்கே நல்ல விலை கிடைக்காமல், கர்னாடக மாநிலத்திற்குக் கொண்டு சென்றுதான், அங்கே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலேகூட, இந்தப் பட்டுக் கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. அதனால், கொள்ளேகாலம், காமராஜ் நகர் போன்ற இடங்களுக்கு, அந்தப் பட்டுக் கூடுகளை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பட்டுக் கூடுகளையெல்லாம்-அங்கே கிடைக்கிற அளவுக்கு-இங்குள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக நன்றாக விற்றுத்தர, நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 1993 ஆம் ஆண்டு இறுதியிலே, வெள்ளம், புயல், தமிழகத்திலே பல மாவட்டங்களிலும் ஏற்பட்டு, பல சேதங்களை உருவாக்கியிருக்கிறது. அதற்கு நஷ்ட ஈடாக, இடுபொருட்களைத் தான் வழங்கி இருக்கிறார்கள். இடுபொருட்களை வழங்குவதிலேகூட, அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதிலே, அதிகமாக, வாழை போன்ற பயிர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பருத்தி போன்ற பாதிக்கப்பட்ட பயிருக்கு, - 6,986 ஹெக்டேர் பருத்தி பாதிக்கப்பட்டிருக்கிறபோது, - 1,900 ஹெக்டேருக்குத்தான், அதுவும் இடுபொருட்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை என்பது இந்த அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை ... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குறு விவசாயிகளுக்கு இலவசமாக, அதுவும் குறிப்பாக, பருத்தி, நெல், வாழை, கம்பு, சோளம் போன்ற வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்கு மட்டும்தான் அரசாங்கம் இலவச இடுபொருட்களை வழங்கியிருக்கிறது. அதிலே விடப்பட்டது, பெரிய விவசாயிகள்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டம் என்பது, பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பார்த்து வருவதில்லை. இயற்கையில் வரக்கூடிய அழிவுகள், இருவரையுமேதான் தாக்கிக் கொண்டிருக்கின்றன. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு சட்டமே இருக்கிறபோது, அவர்களைப் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று குறிப்பிடுவது எந்தவகையில் சரி என்று தெரியவில்லை. இயற்கையின் சீற்றம் என்பது, எல்லா விவசாயிகளுக்கும் வரக்கூடியது தான். சொல்லப்போனால், பெரிய விவசாயிகளுக்கு பெரிய இழப்பீடு ஏற்படும். எனவே, எல்லா விவசாயிகளுக்கும் அப்படிப்பட்ட நஷ்ட ஈட்டைக் கொடுத்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே, வேளாண்மைத் துறை அலுவலர்களின் சில பிரச்சினைகளை நான் அறிந்திருக்கிறேன். இன்றைக்கு, நம்முடைய வேளாண்மைத் துறையின் சார்பிலே, அவர்கள் செய்கிற பணி, எப்படி கால்நடைத் துறை, மருத்துவத் துறை இவற்றில் எந்தெந்த நோய்க்கு, என்னென்ன மருந்துகளை உபயோகிக்க வேண்டும்; என்ன சிகிச்சை என்பதைப் போல, வேளாண்மைத் துறையிலே இருக்கிற அலுவலர்களுக்கும், எந்த அளவுக்கு, என்ன பூச்சி மருந்துகளை அடிக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனையையும், எந்த நோய்க்கு என்ன நிவாரணம் செய்ய வேண்டுமென்றுதான்

சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு பயிர் உதவி மருத்துவர் என்ற பெயரை கொடுக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் இன்றைக்கு-அவர்களுக்கு, பயிர் உதவி மருத்துவர் என்று, -வேளாண்மை அலுவலர்களுக்கு, பயிர் உதவி மருத்துவர் என்றும், வேளாண்மை இயக்குநர் அந்தஸ்திலே இருப்பவர் பயிர் மருத்துவர் என்றும், அவர்களும் டாக்டர் என்றப் பட்டத்தைப் போட்டுக்கொள்ளலாம் என்றும் பஞ்சாப் மாநிலத்திலே அனுமதியிருக்கிறது. ஏனென்றால், இந்தியாவில் உணவு உற்பத்தியில் முன்னிலையில் இருக்கிற பஞ்சாப் மாநிலம் வேளாண்மை அலுவலர்களுக்கு இந்தத் தகுதியினைக் கொடுத்திருக்கின்றபோது, தமிழகத்தையும் பஞ்சாப் அளவிற்கு தொழில் துறையில் மட்டுமல்லாமல், வேளாண்மைத் துறையில் உயர்த்த வேண்டுமென்ற விருப்பத்தோடு இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அரசும், அவர்களுக்கும் அந்தப் பட்டத்தை, தகுதியைக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் *6.35*

அடுத்ததாக கால்நடைத் துறை. கால்நடைகள் குறைவாகத்தான் உள்ளது. கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்தியாவிலே கால்நடை இல்லாவிட்டால் விவசாயம் இல்லை என்பதுதான் இன்றைய உண்மையான நிலை. இன்றைக்கும் நம்முடைய இந்திய நாட்டிலே எத்தனை இயந்திரங்கள் புகுத்தப்பட்டிருந்தாலும்கூட டிராக்டர் போன்ற சாதனங்கள் இன்றைக்கு வந்திருந்தாலும்கூட, பெங்களூரைச் சார்ந்த ஒரு பேராசிரியர் இராமசாமி என்பவர் ஒரு ஆய்வு நடத்தி நம்முடைய இந்திய நாட்டிலே இன்றைக்கும் 66 சதவீத நிலத்தை உழவு மாடுகள் உழுது கொண்டிருக்கின்றன என்ற உண்மையைச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பதிலாக, உழவு மாடுகளுக்குப் பதிலாக எத்தனை டிராக்டர்கள் பயன்படுத்த வேண்டுமென்றால், 1.5 கோடி டிராக்டர்கள் நம்முடைய நாட்டிற்குத் தேவை என்றும், நம்முடைய நாட்டினுடைய மொத்த டிராக்டர் உற்பத்தியே 1.5 இலட்சம்தான் என்றும், இன்றைக்கு 2500 கோடி டன் பொருட்களை இந்தியாவில் 1.5 கோடி மாட்டு வண்டிகள் இழுத்து செல்கின்றன என்றும், அதனால் 4 ஆயிரம் கோடிக்கான பெட்ரோல் மிச்சப்படுகிறது என்றும், கால்நடையினுடைய முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். கால்நடை இந்தியாவினுடைய செல்வங்களில் ஒன்று. கால்நடைகளை வெறும் பால் உற்பத்திக்கு மட்டும் நாம் பயன்படுத்துகின்ற சூழ்நிலையை எண்ணிப் பார்க்காமல், காங்கேயம் போன்ற வண்டி இழுக்கின்ற, வேலை செய்கின்ற

கால்நடைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு, அதனுடைய குணங்கள் கெட்டுவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய மேம்படுத்தப்பட்ட மாட்டு வண்டிகளை வேளாண்மைத் துறையின் சார்பிலே வழங்கினார்கள். அப்படிப்பட்ட மேம்படுத்தப்பட்ட மாட்டு வண்டிகளை இன்னும் அதிகமான எண்ணிக்கையில் கொடுத்து, அந்த வண்டிகளுக்கு நம்முடைய காங்கேயம் போன்ற கால்நடைகளை அபிவிருத்தி செய்து பயன்படுத்தினால், நாம் பெட்ரோல், டீசல் போன்ற அழிந்துவிடக்கூடிய அந்த ஃபாசில் ஃப்யூயல், ஒரு நாளைக்கு அந்தப் பொருட்கள் கிடைக்காமலே போகக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். உலகத்திலே இன்றைக்கு சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற தத்துவம் மேலோங்கி இருக்கின்ற நிலையில், இந்தக் கால்நடையினுடைய முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்து வெறும் ஜெர்சி, பிரிசியன் போன்ற பாலை மட்டும் தருகின்ற மாடுகளை மட்டுமல்லாமல், வேலைக்கு உதவுகின்ற மாடுகளையும் நாம் அபிவிருத்தி செய்தாக வேண்டும். அதோடு இன்றைக்கு நம்முடைய கால்நடையிலே பால் உற்பத்திக்கு நாம் முன்னுரிமை கொடுத்து, பால் உற்பத்தி பெருகி இருக்கிறது என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 101 கிராமாக இருந்த பாலின் உபயோகம், 169 கிராம் அளவிற்கு இன்றைக்குச் சராசரியாக உயர்ந்திருக்கிறது. ஒரு தனி மனிதனுக்கு 250 கிராம் என்ற அளவிற்கு ஒரு நாளைக்கு பால் தேவையிருக்கிறது. அந்த அளவிற்கு பால் உற்பத்தி பெருக வேண்டுமென்றால் பாலுக்கு விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டும். இன்றைக்கும் கால்நடை வளர்ப்பது என்பது சாதாரண ஒன்றல்ல. அதற்கு அதிகமான முதலீடு செய்து, கால்நடை பராமரிப்பது மற்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. இன்றைக்கு எருமைப் பாலுக்கு ஒரு கிலோ கொழுப்பு சத்திற்கு 96 ரூபாயும், பசும் பாலுக்கு ஒரு கிலோ திட சத்திற்கு 42 ரூபாயும் கொடுப்பதாக இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை, எருமைப் பாலுக்கு ஒரு கிலோ கொழுப்பு சத்திற்கு குறைந்தது 100 ரூபாயாகவும், பசும் பாலுக்கு 50 ரூபாயாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகின்றேன். இன்றைக்கு வேளாண்மைத் துறை அலுவலர்களைப் போலவே, கால்நடைத் துறையிலும் 200 கிளைகளில் கால்நடை மருத்துவர்கள் இல்லாமல் காலியாக இருப்பதாக நான் அறிகிறேன். 450 கால்நடைப் பட்டதாரிகள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே கால்நடை மருந்தகங்களை எல்லாம் மருத்துவமனைகளாக தரம் உயர்த்தி, மருத்துவப் பட்டம்

பெற்றவர்களை அவற்றிலே நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் *6.40*

கால்நடை மருத்துவர்களும் மனித மருத்துவர்களைப் போல மருத்துவத்துறையிலே பட்டம் பெற்றிருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற அடிப்படை ஊதியம் மனித மருத்துவர்களை விட *200* ரூபாய் குறைவாகக் கொடுப்பதாக ஒரு குறை இருக்கிறது. மனிதனுக்கு மருத்துவம் செய்வதை விட கால்நடைக்கு மருத்துவம் செய்வது என்பது மிகவும் கடுமையான ஒன்று. அவர்கள் கிராமத்தில் பணியாற்ற வேண்டும். நகர்ப்புறத்திற்கு வருகின்ற வாய்ப்பு குறைவு. இன்றைக்கு சென்னை போன்ற ஒருசில நகர்ப்புறங்களில் கால்நடை மருத்துவம் செய்வதை விட நாய்களுக்கு அதிகமாக மருத்துவம் செய்து நிறைய பேர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே கால்நடைத் துறையில் கால்நடைகளை வளர்ப்பதோடு ஜாதி நாய்களை வளர்ப்பதற்கான நடவடிக்கையையும் கால்நடைத் துறை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நாய் வளர்ப்பது என்பது மக்கள் மத்தியில் முக்கியமான ஒன்று. அது செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகிறது. இன்றைக்கு கிராமங்களில் பல திருட்டு கொலை போன்ற நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதால் நல்ல நாய்களை பாதுகாப்புக்காக வைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த கோம்பை, கண்ணி, ராஜபாளையம் போன்ற நாய்கள் வெளிநாட்டு நாய் இனங்களுக்கு ஒப்பான இனங்களாக கருதப்படுகின்றன. அந்த நாய் இனங்களைக் கால்நடைத் துறையின் மூலமாக உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு தரமான நாய்க்குட்டிகளை வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

கால்நடை மருத்துவர்களின் குறையை நீக்கி ஆவன செய்வதோடு கால்நடை ஆய்வாளர்களுக்கு விபத்துப் பாதுகாப்பு ஊதியம் ஒன்றைக் கொடுத்துக் கொண்டிருந்தது தற்போது நிறுத்தப்பட்டுவிட்டாதாகக் கூறுகிறார்கள். எனவே அந்த ரிஸ்க் அலவன்ஸை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, நானாக இன்றைக்கு உட்கார வைப்பதில்லை என்று ஒரு வைராக்கியத்தோடு

இருந்தேன். எனவே ஆசைதீர பேசிய அளவுக்கு நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.மா.சா.மா. இராமச்சந்திரன்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் கீழ் உரையாற்ற எனக்கு அனுமதி அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்ற வள்ளுவர் மொழிக்கேற்ப இன்றையதினம் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த வேளாண்மைத் துறைக்காக பல கோடி ரூபாயை ஒதுக்கி உழவர் பெருமக்கள் அனைவரும் வளம் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு உரங்களின் விலையை மத்திய அரசு உயர்த்தினாலும் நம்முடைய மாநில அரசு சார்பாக மானியம் எல்லாம் வழங்கி சராசரியான விலையில் அந்த உரம் உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே உழவர் பெருமக்கள் அனைவரும் நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன் பெற்றவர்களாக இருப்பார்கள். இதைத்தவிர நெல்லுக்கான கொள்முதல் விலையையும் புரட்சித் தலைவி அவர்கள் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் *270*-லிருந்து *310* ஆகவும், நடுத்தர ரகத்திற்கு *280*-லிருந்து *330* ஆகவும், நேர்த்தியான ரகத்திற்கு *290*-லிருந்து *350* ஆகவும் உயர்த்தி நம்முடைய உழவர் பெருமக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை அளித்திருக்கிறார்கள்.

இன்றையதினம் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என்பதிலே நம்முடைய புரட்சித் தலைவி மிகுந்த ஆர்வமாக இருக்கிறார்கள்.

பிற்பகல் *6.45*

அந்த வகையிலே டேனிடா உதவியுடன் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்றை இந்த ஆண்டிலே தொடங்க இருக்கிறார்கள் என்ற செய்தியும் ஒரு நல்ல செய்தியாக வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் *7.44* லட்சம் மகளிர் வேளாண்மை பயிற்சி பெற்று பெண்கள் வீட்டு வேலையையே மட்டும் பார்த்துக்கொண்டிருந்த நிலையை மாற்றி இன்றைக்கு புதிய பயிற்சியை அவர்களுக்குத் தருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அந்த வகையிலே நம்முடைய குடும்பத்து, இல்லத்து பெண்கள் அனைவரும் புரட்சித் தலைவிக்கு நன்றி

உடையவர்களாக இருப்பார்கள் என்பதிலே சந்தேகமே இல்லை. நம்முடைய தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் இருக்கின்றன. வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத காவிரி ஆறு அந்தப் பகுதியிலே பாய்ந்து ஒரு செழிப்பான விவசாயத்தை நம்முடைய மக்கள் பெருவதற்கு பெரிதும் உதவுகின்றது அந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே நமக்கு முறையாகக் கொடுக்க வேண்டிய தண்ணீரை நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடக மாநில அரசு நமக்குத் தராவிட்டாலும் நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே மாதம் மும்மாரி மழை பெய்து வளம் பெருக்கிட ஓடி அந்தப் பகுதியில் இருக்கிற உழவர் பெருமக்கள் எல்லாம் பலன் அடையும் வண்ணம் சிறப்பான முறையில் இன்றைக்கு விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நேரத்திலே காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்காக தன்னுடைய இன்னுயிரையும் பணையம் வைத்து உண்ணாவிரதம் இருந்து நம்முடைய உழவர் பெருமக்கள் வாழ்க்கையிலே ஒளியேற்றவேண்டுமென்று கருதிய நம்முடைய புரட்சித் தலைவியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நாள் அல்ல இரண்டு நாட்கள் அல்ல நான்கு நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதம் இருந்தார்கள். மத்திய அரசு என்ன செய்திருக்க வேண்டும் என்பதை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மாநில முதல்வர் மாநில மக்களின் நலனுக்காக சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கி இருந்த அந்த நேரத்திலே உடனடியாக மத்திய அரசுப் பிரதிநிதி இங்கே ஓடோடி வந்திருக்க வேண்டாமா? டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்து சேர்வதற்கு மத்திய அமைச்சர் ஒருவருக்கு 4 நாள் காலம் பிடிக்கிறது என்றால் மத்திய அரசு நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் மீது எத்தகைய அலட்சியப் போக்கினைக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நத்தை வேகத்தில், ஆமை வேகத்தில் மத்திய மந்திரி சென்னைக்கு வந்து இங்கிருந்த புரட்சித் தலைவியைப் பார்த்து 2 செயல்முறை திட்டங்களை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப் பட்டிருக்கின்றதா என்பதையும் மத்திய அரசு மற்றும் உள்ள காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலே தமிழ்நாட்டு மக்களின் நலனைப் பெரிதாக எண்ணிய நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு நம்முடைய மக்கள் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பார்கள் என்று கூறி மாண்புமிகு பேரவைத் தலைவர் எனக்குக் குறைந்தபட்ச

நேரமே ஒதுக்கியிருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியில் இருக்கிற ஓரிரு பிரச்சினைகளைப் பற்றி நான் இங்கே சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதி இளையான்குடி. அங்கே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் எல்லாம் சாலை வசதி இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இங்கே இந்த மன்றத்திலே நம்முடைய பேரவைத் தலைவர் வீற்றிருக்கின்ற இதே ஆசனத்திலே தி.மு.க ஆட்சியின்போது வீற்றிருந்தவர் என்னுடைய தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர் என்பதை இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். அவர் ஒருமுறை எனது தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்த நேரத்திலே அங்கே இருக்கின்ற அந்த கிராம மக்கள் இங்கே நீங்கள் வந்து இந்த சாலையைப் பாருங்கள், இந்த ரோடைப் பாருங்கள் இந்த ரோடு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது, இந்த ரோடை நல்ல முறையில் நீங்கள் எங்களுக்குப் போட்டுத் தரமுடியுமா என்று ஓட்டுப்போட்ட மக்கள் அந்த பழைய சட்டமன்ற உறுப்பினரைக் @ கேட்டதற்கு நீங்கள் எனக்கு ஓட்டும் போடவேண்டாம், நான் உங்களுக்கு ரோடும் போடவேண்டாம் என்று கோபமாகக் கூறியவர் அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் @ என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **மீது குற்றம் சாட்டவேண்டாம், உங்கள் பழைய சட்டமன்ற உறுப்பினர் மீது குறை சொல்லும் போதும் (சிரிப்பு). பழைய சட்டமன்ற உறுப்பினர் என்று வேண்டுமானால் அவைக் குறிப்பில் இருக்கட்டும் **வேண்டாம்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: பேரரைத் தலைவர் அவர்களே, பழைய சட்டமன்ற உறுப்பினர் அவ்வாறு கூறியது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மீது வரக்கூடிய இந்தக் குற்றச்சாட்டை நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ரொம்ப உஷார் தன்மையோடு பின்னாடி நம்மீதும் இவ்வாறு விவாதம் வந்துவிடக்கூடாது என்பதில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, இங்கே ஒரு ** குற்றச்சாட்டு வேண்டாமே தவிர என் மீது இருக்கிற குற்றச்சாட்டுகளை எல்லாம் மீறித்தான் நான்கு ஐந்து தடவையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன்.

@ மாண்புமிகு பேரவைதத்தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.
**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எனவே அதற்கு நான் அஞ்சுகிறவன் அல்ல. ஆனால் ** ஒருவர் மீது, அங்கே இருக்கின்ற அவருடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையில் ** என்ற சொற்கள் இருக்கவேண்டாம். அவைக் குறிப்பிலே இருக்கவேண்டாம் என்று தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

பிற்பகல் *6.50*

திரு. *மா. சா. மா.* இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏன் அவரை ** என்று குறிப்பிட்டுச் சொன்னேன் என்றால், ** வாக்களித்த மக்களிடத்திலே நான் உனக்கு ரோடும் போடவேண்டாம், நீ எனக்கு ஓட்டும் போடவேண்டாம் என்று கூறியவர் அவர்.*

ஆனால் சாதாரண சட்டமன்ற உறுப்பிரனாக இருக்கின்ற நான் வந்தபிறகு, இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே, நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய துணையோடும் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய துணையோடும் இன்றைக்கு அந்த பகுதியிலே பல்வேறு கிராமங்களிலே எல்லாம் புதிதாக சாலைகள் எல்லாம் போடப்பட்டு பேருந்துகள் எல்லாம் நல்லமுறையிலே விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த நேரத்திலே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை என்றாலும் அவர்களிடத்திலே ஒரு கருத்தை நான் இங்கே நம்முடைய இந்த அவையிலே உரையாற்றுவதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இரண்டாவது பெரிய கண்மாய் ஆர்.எஸ். மங்கலம் கண்மாய் ஆகும். அந்த கண்மாய் கூட நாரை பறக்க முடியாத *48* மடைக் கண்மாய் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு அது ஒரு மிகப் பெரிய கடலைப் போன்று விரிந்து பறந்த கண்மாய். அந்த கண்மாய்க்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வரக்கூடிய மேல்நாட்டார் கால்வாய் மற்றும் கீழ் நாட்டார் கால்வாய் என்ற இரு கால்வாய்கள் பல ஆண்டுக் காலமாக தூர் வாராமல் இருக்கின்ற காரணத்தினாலே அந்த கண்மாய் முழுவதுமாக நிரம்புவது மிகவும் சிரமமாக இருக்கின்றது.

உலக வங்கியின் உதவியோடு இந்தக் கால்வாய்களில் தூர் வாரி கண்மாய்க் கரைகளையும் பலப்படுத்தி அந்த பகுதி மக்கள் ஒரு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சிறப்பான சாதனையை விவசாயத்தில் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி புரிவார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த வேண்டுகோளையும் நான் இங்கே விடுக்கிறேன். இது தவிர அந்த பெரிய கண்மாய்க்குள்ளே பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. மழைக் காலங்களிலே முழுவதுமாக நீர்பிடித்துவிடுவதால் ஒரு தீவிலே இருப்பது போன்ற ஒரு நிலைமையிலே அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே அந்த கண்மாய்க்குள் இருக்கின்ற கிராமங்களான செங்குடி, முத்துப்பட்டணம், எத்திடுவல், சேற்றல், கல்லடிதல் போன்ற கிராமங்களை எல்லாம் இணைத்து நம்முடைய கிராமச்சாலைகள் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்பான முறையிலே சாலை அமைத்துத் தரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மின்சாரப் பற்றாக்குறை, அந்த பகுதியிலே ஓரளவுக்கு இருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் சாலைக்கிராமம் என்ற ஊரிலே ஒரு துணை மின் நிலையம் பல கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அமைக்கப்பட்டது என்றாலும், அதிலிருந்து வருகின்ற பவர் சப்ளையானது அந்தப் பகுதி முழுமைக்கும் போதுமானதாக இல்லாத காரணத்தினாலே மற்றும் ஒரு துணை மின் நிலையம் ஆர்.எஸ். மங்கலத்திலே ஏற்படுத்தவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இளையான்குடி தொகுதியிலே இருக்கின்ற நம்முடைய இளையான்குடி பஞ்சாயத்து யூனியனும் சரி, ஆர்.எஸ். மங்கலம் பஞ்சாயத்து யூனியனும் சரி மிகப் பெரிய ஒன்றியங்களாக கிட்டத்தட்ட 50, 60 பஞ்சாயத்துக்களைக் கொண்டு விளங்குகின்ற காரணத்தினாலே இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் பிரித்து இளையான்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சாலைக் கிராமத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய ஒன்றியம் துவக்கப்படவேண்டும் என்றும், ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து ஆலந்தூரை தலைநகரமாகக் கொண்டு மற்றும் ஒரு புதிய ஒன்றியம் துவங்கப்படவேண்டும் என்றும் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது அங்கே புதிய பேருந்துகள் எல்லாம் இன்றைக்கு விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பேருந்து வசதிகளை மேலும் மேலும் அந்த பகுதி மக்களுக்கு நிறைய செய்துகொடுத்து அந்த மக்களுக்கு சேவை ஆற்றிட வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனிதர்களுக்கு வைத்தியம் செய்கின்ற பல்வேறு டாக்டர்கள் இருக்கின்ற நம்முடைய அவையில் மாட்டு வைத்தியம் செய்கின்ற ஒரே ஒரு டாக்டரான வெ. புருஷோத்தமன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு இங்கே சட்டமன்ற உறுப்பினராக என்னை ஆளாக்கி இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய நம்முடைய இதயதெய்வம் நம்முடைய குல தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி அவர் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தை சொல்லி என்னுடைய உரையை ஆரம்பிக்க அனுமதி கொடுத்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்று இன்று தமிழகம் பூராவும் புரட்சி செய்து வரும், நல்லாட்சி நடத்திக்கொண்டு வரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே கால்நடைத் துறையிலே இந்தியாவிலே எந்த மாநிலமும் செய்ய முடியாத ஒரு நல்ல காரியத்தை அதாவது 400 கிளை நிலையங்களை, கால்நடை மருந்தகங்களாக மாற்றி, அந்த கால்நடை மருந்தகங்களிலே வேலையில்லாத பட்டதாரிகளை உடனடியாக நியமனம் செய்த நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு கால்நடை மருத்துவர்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *6.55*

அடுத்ததாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சுமார் *2,770* கிளை நிலையங்களுக்கு – காலை நேரங்களில் மட்டும் தான் கிளை நிலையங்கள் பணி செய்து வந்தன. ஆனால் இன்று தமிழகத்திலே மாலை நேரத்திலும் கிளை நிலையங்கள் பணி செய்து அதன் மூலமாக இந்த கால்நடை உற்பத்தி பெருகியிருக்கிறது. இந்த கால்நடைச் செல்வம் வருடத்திற்கு வருடம் குறைந்துகொண்டே வருகிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நம்முடைய இதய தெய்வம் அவர்களுடைய ஆட்சியிலே தான் கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்கான திட்டத்தை மாலை நேரத்திலும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களுக்கு

நம்முடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கு மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொல்லும்போது பெரிய நகரத்திலே நாய்களை, கோம்பை நாய்களைதான் இன்று இன விருத்தி செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், நம்முடைய ஆட்சியிலே தான் இந்த உயர்ந்த ரக, வெளிநாடுகளில் வாழ்கின்ற நாய்களை உற்பத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல ஒரு திட்டத்தை வழங்கி இருக்கிறது. பொதுமக்களுடைய வேண்டுகோளையும், விவசாயிகளுடைய வேண்டுகோளையும் கருத்தில் கொண்டு இப்படிப்பட்ட திட்டத்தை கொண்டு வந்ததற்காக என்னுடைய பணிவன்பான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கால்நடைத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் அதாவது டாக்டர்கள், டாக்டர்களுக்கு கீழே பணியாற்று கின்றவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அந்த சிரமங்களையெல்லாம் நானும் ஒரு காலத்திலே கால்நடை மருத்துவராக பணியாற்றுகின்ற காலத்திலே பல்வேறு இன்னல்களை எல்லாம் தாங்கிக்கொண்டு பணியாற்றி அது மேலும் தொடர்ந்து கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. ஆண்டுக்காண்டு சுமார் 200 டாக்டர்கள் வெளிவருகின்றார்கள். நான் படிக்கின்ற காலத்திலே இந்தத் துறையிலே தான் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தது. ஆனால் இன்று இதய தெய்வம் அவர்கள் 400 மருத்துவர்களுக்கு உடனடியாக வேலை கொடுத்துள்ளார்கள். இனி தற்சமயம் காலியாக உள்ள இந்த கால்நடை கிளை நிலையங்களிலே ஏதாவது ஒரு தொகுப்பு ஊதியத்தைக் கொடுத்து வேலையில்லாத பட்டதாரிகளை உடனடியாக நியமிக்க நம்முடைய இதய தெய்வம் அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தப் பேரவை வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன்.

அடுத்ததாக, இங்கு பேசிய உறுப்பினர்கள் லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர் கோர்ஸை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே கடுமையான நிதிநிலை நெருக்கடியிலே இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட கோர்ஸை ஆரம்பிப்பதற்குப் பதிலாக விவசாயிகளுக்கு அந்தப் பயிற்சியைக் கொடுக்கக்கூடிய திட்டத்தை, அந்த பயிற்சி நிலையங்களுக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டு, கிளை நிலையங்களில் படிப்படியாக கால்நடை மருத்துவப் பட்ட தாரிகளையே நியமிக்க வேண்டுமென்று

அன்புடன் இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்கின்றேன். அடுத்ததாக, கால்நடை மருத்துவர்களுக்கும், அதாவது மனித வைத்தியர்களுக்கும் *200* ரூபாய் சம்பளம் வித்தியாசம் இருக்கிறது. இதை நான் இருக்கின்ற காலத்திலே அனுபவித்தேன். சாதாரண பி.டி.எஸ். பல் டாக்டர், அவருக்கும் ஒரே சம்பளம், எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கும் ஒரே சம்பளம். ஆனால் கால்நடை டாக்டர்களுக்கு மட்டும் சம்பளம் குறைவு. ஆனால் பணி அதிகம் ஆகும். இப்படிப்பட்ட பே டிஸ்பாரிட்டியை உடனடியாக மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து அனைத்து மருத்துவர்களுக்கும் அதாவது சித்தா வைத்தியம் படித்தவர்களுக்குக் கூட சம்பளம் ஒரே சீரான நிலையில் இருக்க ஆவன செய்ய வேண்டும். கால்நடை மருத்துவர்களுடைய பணியினுடைய தன்மையைக் கருதி அவர்களுக்கு அந்த சமச் சீரான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *7.00*

அடுத்ததாக *2770* கால்நடைக் கிளை நிலையங்களிலே பணியாற்றுகிறவர்களுக்கு — சில பணிகளுக்கு — ரிஸ்க் அலவன்ஸ் விடுபட்டுள்ளது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற பணியாளர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் இருப்பதுபோல கிளை நிலையங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கும்படி மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு கருத்துக்களை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே என்னுடைய தொகுதிதான் மிகவும் பின்தங்கிய தொகுதி. அரசாங்கத்தாலேயே பின் தங்கிய தொகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுதியிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் — *500* கோடி ரூபாய் திட்டம் — இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்டு,அது உலக வங்கிக்கு சென்றுள்ளதாக அறிகிறோம்.அந்தத் திட்டம் அங்கு வந்தால், தர்மபுரி மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த குடிநீர்ப் பிரச்சினை தீரும். ஆகவே அந்தத் திட்டத்தை மிக விரைவில் கொண்டு வர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது பஞ்சப்பள்ளி கால்வாய்த் திட்டம். அந்தக் கால்வாய் என்னுடைய பென்னாகரம் தொகுதியிலே *4* கிலோ மீட்டர்

ஓடுகிறது. அந்த 4 கிலோமீட்டர் கால்வாயை வெட்ட அரசாங்கம் அனுமதி கொடுத்தால் சுமார் 30 ஏரிகளில் தண்ணீர் நிரம்பி, 70 கிராமங்களில் காலம்காலமாக இருக்கும் குடிநீர் பிரச்சினை தீர வழி ஏற்படும். ஆகவே பஞ்சப்பள்ளி கால்வாய்த் திட்டத்தை உடனடியாக மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது என்னுடைய தொகுதியிலே இன்டூர் பகுதி மிகவும் பின் தங்கியப் பகுதி. அந்தப் பகுதியிலே ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று கடந்த 2,3 கூட்டத் தொடரிலே கோரிக்கை விடுத்தும், அந்தக் காவல் நிலையம் கிடைக்கவில்லை. இந்த மாமன்றத்தின் வாயிலாக இன்டூர் பகுதிக்கு காவல் நிலையத்தை உடனடியாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த இன்டூர் பகுதி புறக்கணிக்கப்பட்ட பகுதி. கடந்த 2,3 சட்டமன்றக் கூட்டத் தொடரில் அங்கே இருக்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். சுமார் 20 கிலோமீட்டர், 15 கிலோமீட்டர் நடந்து சென்று படிக்க வேண்டிய துர்பாக்கியம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலிக்கிறேன், 12 பள்ளிக் கூடங்கள் இந்த ஆண்டு உயர்த்தப்பட இருக்கிறது. எப்படியாவது உங்கள் தொகுதிக்குக் கண்டிப்பாக ஆவன செய்கிறேன் என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் கனிவுடன் இதைப் பரிசீலித்து, என்னுடைய தொகுதியில் இன்டூர் பகுதியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கி கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி, தொழிற்சாலைகள் இல்லாத தொகுதி. ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் தொழிலதிபர் யாரையாவது என்னுடைய தொகுதிக்கு அனுப்பி ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயத் துறையிலே ஒரு சிறிய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வைக்க இருக்கிறேன். தோட்டக் கலைத் துறையிலே தோட்டக் கலை படித்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமைக் கொடுக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் பி.எஸ்சி. (அக்ரி) படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக அறிகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தோட்டக்கலை பட்டதாரிகள் அனுபவம் உள்ளவர்களுக்கு ப்ரமோஷன் வரும்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மொரப்பூர் தொகுதியில் கே. பள்ளிப்பட்டு கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. ஜி. பழனிசாமி.

பிற்பகல் *7.05*

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கால்நடை, பால் வளம் ஆகிய கொள்கைக் குறிப்பின்மீது, காலம் கடந்துவிட்டாலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலம் ஒன்றும் கடந்துவிடவில்லை. திரு. பழனிசாமியைப் பொறுத்தவரையில் காலம் கடந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. *(சிரிப்பு)*

திரு. ஜி. பழனிசாமி: அதிலே சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். அரசாங்கத்தின் இந்த வேளாண்மைக் கொள்கைக் குறிப்பில் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டும் என்பதற்காக, நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் நிறைய விவரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். அவைகளைப் புரிந்து கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. சட்டப்பேரவை உறுப்பினர்கள் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு எளிதாக அதிகாரிகள் அதைத் தயார் செய்து கொடுக்கவில்லை. பழைய சம்பவங்கள், பழைய செயற்குறிப்புகள், தொடர்ந்து மீண்டும் மீண்டும் இந்த செயற் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் பழைய வேளாண்மை கொள்கைக் குறிப்புப் புத்தகத்தை எடுத்து இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதேதான் இதிலும் அதிகமாக சொல்லப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) தொடர்ச்சியாக வந்து கொண்டு இருக்கிறது. சென்ற வருடம் வந்ததே இப்போதும் வந்திருக்கிறது.

(மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறையில் உணவு தானிய உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெறவேண்டும் என்பதற்காக, வேளாண்மைத்துறை பல்வேறு வகையான நவீனபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இன்றைக்கு வேளாண்மை என்பது ஒரு தொழிலாக மாறிக் கொண்டிருக்கிறது. உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெறுவதற்காக பழைய முறை சாகுபடியிலிருந்து மாற்றம் அடைந்து நவீன பூர்வமான சாகுபடியில் ஈடுபடுவதற்கான உத்திகள் விவசாயிகளிடத்திலே ஏற்பட்டுள்ளது. பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நம் நாட்டிலும் மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உணவு தானிய உற்பத்தி செய்வதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை நான் மறுக்கவில்லை. அதே நேரத்தில், விவசாயிகளைப் பொறுத்தமட்டில், இந்தத் தொழில் மட்டுமல்ல, வேறு எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளின் வாழ்க்கைதான் நாளுக்குநாள் நலிந்துகொண்டு வந்திருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தமட்டில், சீதோஷ்ண நிலை மற்றும் இயற்கை ஒத்துழைப்பு சரியாக இருந்தால்தான் அவர்கள் போடக்கூடிய முதலில் இருந்து அரசாங்கம் எதிர்பார்க்கிற, அரசாங்கம் நிர்ணயிக்கிற உணவு தானிய உற்பத்தியைச் சரியாகச் செய்யமுடியும். இயற்கை ஒத்துழைக்கவில்லை என்றால், வடகிழக்குப் பருவமழை தென்கிழக்குப் பருவமழை போன்றவை நமக்கு ஒத்துழைக்கவில்லை என்றால், விவசாயிகளிடம் அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடிய உணவு தானிய உற்பத்தியைச் செய்ய முடியாத அளவுக்கு விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

தமிழ்நாடு குறிப்பாக மூன்று விதமான பாசனப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. ஒன்று, காவிரி பாசன வசதி. மேட்டூர் நீரை நம்பியிருக்கிற தஞ்சை, திருச்சி, நாகை காயிதே மில்லத் போன்ற மாவட்டங்கள், இரண்டு ராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் ஏரிகளை நம்பியிருக்கிற பகுதிகள், மூன்று கோவை போன்ற பகுதிகள் கிணறுகளை மட்டுமே நம்பியிருக்கிற பாசனப் பகுதிகள். இப்படி மூன்று விதமான பாசனப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு. ஆகவே, குறிப்பாக தஞ்சை, நாகை மாவட்டம் போன்ற பகுதிகள் ஆண்டுதோறும் இயற்கைச் சீற்றங்களால் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றன. அந்த பாதிப்பு ஏற்படுவதால், விவசாயிகள் செய்யக்கூடிய உணவு தானிய உற்பத்தியை எந்த ஒரு ஆண்டாவது நஷ்டம் இல்லாமல் லாபகரமாக நடத்தியிருக் கிறார்களா, அல்லது அவர்கள் லாபகரமாக வாழ்கிறார்களா என்று

சொன்னால் அவர்கள் அப்படி இருக்க முடியாத அளவுக்கு ஒரு அவலமான நிலை அந்த மாவட்டங்களில் ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படையான நீர்ப்பாசன வடிகால்களை அந்த மாவட்டத்திலே ஒழுங்குபடுத்திக் கொடுக்க அரசு முன்வரவேண்டும். வெள்ளம் வருகிறபோது, வடிகாலில் வருகின்ற வெள்ளம் சீராக வடிய வடிகால்களில் உள்ள தூரை எடுத்து, நல்ல வடிகால் வசதியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

பிற்பகல் 7.10

அதேபோல் பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் காவிரியில் குறைவான தண்ணீர் வந்தாலும் அது கடைமடைப் பகுதிகளுக்கு காலத்தோடு வந்து சேரக்கூடிய அளவுக்கு கால்வாய்களை செப்பனிடுவதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபட வேண்டுமென்று சொன்னால், விவசாயத் துறையில் இருக்கிற வேளாண்மைத்துறையும், பொதுப்பணித்துறையில் இருக்கிற பாசனத் துறையும்—இந்த இரண்டு நிர்வாகங்களையும் ஒன்றாக இணைக்க வேண்டும். இது நீண்ட நாள் கோரிக்கை. எங்கள் மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள்—தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், நாகை மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகள் தொடர்ச்சியாகவே இதை வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத் துறையிலே இருக்கிற வேளாண்மைத் துறையும், பொதுப்பணித் துறையிலே இருக்கிற பாசனத் துறையும் இணைந்தால்தான் ஒரு வித்தியாசம் இல்லாத அளவுக்கு முறையான பாசன வடிகால்களை ஒழுங்குபடுத்த முடியும். சீரான நீர்ப் பாசனங்களை உருவாக்கினால்தான் வேளாண்மைத் துறையிலே உற்பத்தி செய்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு இருக்கிற நிலைமை மோசமான நிலைமையாக இருக்கிறது. கடந்த நவம்பர் டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழை, வெள்ளம், புயலால் முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டு பல கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு விவசாயிகள் நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு அவர்களுக்கு எல்லாம் மானியம் என்ற முறையில் பல்வேறு திட்டங்களை, உரம், விதை, பூச்சி மருந்து இதுபோன்று எல்லாம் அறிவித்தார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, சிறு குறு விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 900 ரூபாய் என்று அறிவித்தார்கள். அநேகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு அவை போய்ச் சேர்ந்து இருக்கின்றன என்பதனை நாம் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டு இருக்கிறோம். அதை உண்மையிலேயே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் சொல்லும் அளவுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் போய்ச் சேரவில்லை. உண்மையாகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அது போய்ச் சேரவில்லை. அரசாங்கம் சொல்லும் அளவுக்காவது எதிர்பார்த்த அளவுக்கு விவசாயிகளுக்கு அது போய்ச் சேரவில்லை. ஒரு ஹெக்டேருக்கு 150 ரூபாய், மேலும் உரம், விதை, பூச்சி மருந்து போன்ற இடுபொருட்கள் கிடைக்காத நிலைமை இன்னும் இருக்கிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், தன்னிடம் இருக்கிற முதலை, ஆயிரக் கணக்கான ரூபாய்களை, அனைத்தையும்கூட செலவு செய்து, அரசாங்கம் நிர்ணயிக்கும் நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய அந்த விவசாயிகள் மிகப்பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். இன்னும் அந்த மாவட்டங்களில் இருக்கிற நிலைமை என்னவென்று சொன்னால், நிலத்தில் விளைந்த கரும்பு முற்றினால் பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் பண்ணுவார்கள். இல்லை என்றால், திருமணமே இல்லை என்று முடிவு பண்ணும் அளவுக்கு வேளாண்மையை நம்பி இருக்ககூடிய ஒரு மாவட்டம். அங்கே வேறு எந்தத் தொழிலும் கிடையாது; மற்ற தொழில்களும் கிடையாது. காவிரியிலே தண்ணீர் திறந்துவிட்டால்தான் அந்த மாவட்டத்திலே செழிப்பு, வாழ்க்கை. ஆகவே, நீங்கள் வேளாண்மைத் துறையிலே ஒரு நல்ல நியூ மாடலான சாகுபடி முயற்சிகளைக் கொண்டு வருவதற்கு நீர்ப்பாசன வடிகால்களை ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். அவை பல ஆண்டுக்காலமாக இருக்கின்றன. இன்றைக்கு பொதுப்பணித் துறையில்கூட பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு கோடியே 20 லட்ச ரூபாயை மராமத்து பணிக்காக ஒதுக்கி, ஆறுகளை அகலப்படுத்துவதற்காக, புல்டோசர் மூலமாக காட்டாமணக்குகளை அப்புறப்படுத்துவதாகச் சொல்லி இருக்கிறார்கள். வரக்கூடிய ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறப்பதாகவும் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் மேட்டூரிலே ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க வேண்டுமென்று சொன்னால், இன்னும் 50 நாட்கள்தான் உள்ளது. அந்த 50 நாட்களுக்குள்ளே, புயலால் வெள்ளத்தால் ஏற்பட்டு இருக்கிற, 150-க்கு மேற்பட்டு இருக்கிற உடைப்புகளை சரிவர அடைக்க முடியாமல் அந்தந்த கட்டத்தோடு அப்படியே நிற்கின்றது; எந்த அளவுக்கு நீங்கள் காவிரியிலே தண்ணீர் திறந்துவிட்டாலும், மீண்டும் விவசாயிகள் தங்களுடைய சாகுபடியிலே உற்சாகத்தோடு ஈடுபடக்கூடிய காலத்தில் மீண்டும் அந்தப் பகுதிகளில், ஆறுகள், வாய்க்கால்களில் உடைப்புகள் ஏற்படக்கூடிய ஒரு அபாய கட்டம் இருக்கின்றது. அவற்றையெல்லாம் உடனடியாக செப்பனிடுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டும். வேளாண்மைத் துறையும்

பொதுப்பணித் துறையும் சேர்ந்து அந்தப் பணியில் ஈடுபட்டால்தான் அதைச் செய்ய முடியும்.

வேளாண்மைத் துறையில் உணவு தானிய உற்பத்திக்கு புதிய திட்டங்களை அறிவித்து புதிய விதைகளைக் கண்டுபிடித்து, விவசாயிகள் இன்னின்ன சாகுபடி செய்ய வேண்டுமெனச் சொல்லி, யுக்திகளை ஏடுகளாகக் கொடுத்தாலும், அச்சடித்துக் கொடுத்தாலும், பொதுப்பணித்துறை முறையாக நிர்வாகத்தில் ஈடுபட்டால்தான் விவசாயத்தை ஒழுங்காகச் செய்ய முடியும். அதற்கான பணியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பல்வேறு புதிய ரக நெல்களை எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இங்கே அறிமுகப்படுத்தினார். ஜே.ஜே. 92 அறிமுகப்படுத்தினார். ஜே.ஜே.92 ஒரு கிலோ 18 ரூபாய்க்கு உங்களுடைய டெப்போவிலே நாங்கள் வாங்கி சாகுபடி செய்தோம். ஆனால், உற்பத்தி செய்த நெல்லை யார் வாங்குவது என்று இன்றையவரையிலும் அறிவிக்கவில்லை. எந்த டெப்பபோவுக்கு கொண்டு போனாலும் அதற்கு விலையே நிர்ணயிக்கப்படவில்லை. என்ன காரணம்? ஒரு அரசாங்கத்தால் வெளியிடக்கூடிய அந்த விதையை உற்பத்தி செய்த பின் அந்த நெல்லை வாங்குவதற்கு என்ன விலை, யார் வாங்குவது என்பது இன்றுவரையிலும்கூட அறிவிக்கப்படவில்லை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

பிற்பகல் 7.15

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தஞ்சையினுடைய கீழ்ப்பகுதி என்று சொல்லக்கூடிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தை சேர்ந்தவர். அவர் அந்தப் பகுதிக்கு சரியாக போய் வரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால் என்னுடைய பதிலில் சொல்ல இருக்கிறேன். 75 கிலோ ஜே.ஜே.92 நெல் இன்றைக்கு 500 ரூபாய்க்கு விற்று இருக்கிறது, வாங்கி இருக்கிறார்கள் என்பதை நான் பின்னால் சொல்ல இருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, நானே வாங்கி சாகுபடி செய்திருக்கிறேன். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு அந்த நெல்லைக் கொண்டு செல்கிறபோது யாரும் வாங்கவில்லை. வியாபாரிகள் வாங்கவில்லை. அதனால்தான்

உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, ஒரு உத்தரவை எல்லா இடங்களுக்கும் தமிழ் நாடு முழுவதும் வாங்க வேண்டும் என்று கொடுக்க வேண்டும். ஏனென்றால் அது பாசுமதி நெல், மிகவும் சன்னரக நெல். அதை அரைப்பதற்குக் கூட மில் கிடையாது. அதை பிளாஸ்டிக் மில்லில் தான் அரைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே அந்த நெல்லை வேறிடங்களில் அரைத்தால் நொறுங்கிவிடும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நீளமான நெல். ஆனால் யாரும் விரும்பி வாங்கவில்லை. அதனால் தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆகவே அந்த நெல்லைப் பற்றியோ, விவசாயத்தைப் பற்றியோ நான் தெரியாதவன் அல்ல என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அரசாங்கம் சொல்லியிருக்கிறது. 100 இலட்சம் மெட்ரிக் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. எங்களுடைய நாகை மாவட்டம் தமிழகத்திலே அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம். அதுவும் அதிகமாக நெல் உற்பத்தி செய்கிற ஒரு தாலுக்கா, ஒன்றியம் என்றால் அது திருத்திறைப்பூண்டி ஒன்றியம்தான் என்று இதுவரை தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. வேறு எந்தவொரு மாவட்டத்திலும் இந்த நிலை இல்லை. அவ்வளவு சிறப்பாக விவசாயத்தில் ஈடுபடக்கூடியவர்கள். அதிகமாக பரிசுகளைப் பெறுகிறார்கள். இதிலேகூட பரிசுத் திட்டங்களை சொல்லியிருக்கிறார் அவர்கள். அமைச்சர் எந்த ஊராட்சி ஒன்றியத்தில் அதிகமாக நெல் சாகுபடி செய்கிறார்களோ அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு பரிசு அளிப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எப்படி விவசாயிகளுக்குக் கிடைக்காமல், ஊராட்சி ஒன்றியத்திற்கு கிடைக்கும் என்பதற்கு பதில் சொல்லும் போது சொல்லுங்கள்.

அதைப்போல இன்றைக்கு டங்கல் திட்டம். இந்த கொள்கைக் குறிப்பிலே கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு விரோதமான நாசகரமான கொள்கை என்பது இன்றைக்கு வந்திருக்கிற டங்கலுடைய திட்டம். காட் ஒப்பந்தத்தில் நம்முடைய இந்திய அரசாங்கம் கையெழுத்து போட்டிருக்கிறது. இன்றைக்கு விவசாய இடுபொருள்கள், பூச்சி மருந்துகள், விதைகள் ஆகியவற்றின் மானியத்தை மத்திய அரசு படிப்படியாக குறைப்பதாக சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயற்கைச் சீற்றங்கள், வறட்சி, வெள்ளம் இதையெல்லாம் தாங்கக்கூடிய ஒரு நெல்லாக இருக்கக்கூடிய ஐ.ஆர். 20 நெல் என்பது 20 ஆண்டுகாலமாக தொடர்ந்து தமிழகத்தில்

எல்லா விவசாயிகளும் விரும்பி சாகுபடி செய்யக்கூடிய நெல்லாகும். இந்த நெல்லுக்கு நீங்கள் மானியத்தைக் குறைத்திருக்கிறீர்கள். அதற்குக் காரணம் இந்த டங்கல் திட்ட ஒப்பந்தமா என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ. ஆர்.20 ரகம் வெளியிட்டு 15 ஆண்டுகள் அகிறது. எனவே, ஐ.ஆர்.20 ரகத்திற்கு மானியம் வழங்கக்கூடாது என்று மத்திய அரசு மாநில அரசை வலியுறுத்தி வருகிறது. அவர்கள் கொடுத்த மானியத்தை நிறுத்தி இருக்கிறார்கள் என்பதை பேரவை வாயிலாக தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்யக்கூடிய நெல். மத்திய அரசு அதற்காக ஒதுக்கக்கூடிய மானியத்தை நிறுத்தி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைப்போல ஐ.ஆர். 36 ரகத்தை வாங்கலாம். அதற்கு மானியம் உண்டு என்று கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது குறுவைக்கு மட்டும் சாகுபடி செய்யலாம். தாளடிக்கு ஐ.ஆர்.36-ஐ சாகுபடி செய்ய முடியாது. ஒரு போக சாகுபடிதான் செய்ய முடியும். தாளடி இரண்டாவது போக சாகுபடி செய்யக்கூடிய நெல்லை நீங்கள் கொடுக்க வேண்டும்.

இன்னொன்றையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சை, நாகை, திருச்சி மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு. நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்திருக்கிற மழையால் வெள்ளம் ஏற்பட்டதால் அனைத்து விதைகளும் எந்த விவசாயிகளிடத்திலும் இன்றையதினம் கிடையாது. முற்றிலுமாக அழிந்திருக்கிறது. அவர்கள் உணவுக்கு கூட நெல் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வரக்கூடிய ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கு முன்னால் மற்ற மாவட்டங்களிலிருந்து அல்லது மற்ற மாநிலங்களிலிருந்து மானிய விலையில் அந்த பூமிக்கு ஏற்ற நெல் விதைகளைக் கொண்டு வந்து கூட்டுறவு வேளாண்மைத் துறை அலுவலகங்களில் கணக்கெடுத்து கொடுக்க வேண்டும். இதுவரையில் வேளாண்மை கூட்டுறவு மையங்களில் விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை தேவைப்படுகிற காலங்களில் வழங்க முடியவில்லை. காலம் கடந்துதான் கிடைக்கிற நிலை இருந்திருக்கிறது. குறுவை விதைகளை கேட்கிறபோது சம்பா விதை இருக்கும். சம்பா விதை கேட்கிறபோது குறுவை விதை வந்தாலும் அதற்கு விலையை அவர்களால் நிர்ணயிக்க முடியாத நிலை. விலை நிர்ணயிக்க

முடியவில்லை என்பதால் நாங்கள் விற்பனை செய்யவில்லை என்று சொன்னார்கள்.

இந்த ஆண்டு நீங்கள், வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளில் உளுந்து விதையைக் கொண்டு வந்து இறக்கினீர்கள். உண்மையிலே விவசாயிகள் ஆர்வத்தோடு இருந்தார்கள். ஆடுதுறை 36 என்கின்ற அந்த உளுந்து விதை வந்தது. அநேகமாக அதைத் தெளிக்கக்கூடிய அந்த மாதங்கள் முடிந்த பிறகு, அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருந்தால், எப்படி விவசாயிகள் வாங்கி அதைத் தெளிக்க முடியும்? எப்படி உற்பத்தி செய்ய முடியும்? பூமி காய்ந்து போன பின்னால் உளுந்தை வாங்கி எப்படி விதைக்க முடியும்? அப்படிப்பட்ட நிர்வாகக் கோளாறுகள் இந்தத் துறையில் இருக்கின்றன. எனவே,விதைகள் டெப்போக்களுக்கு வருகிறபோது, விலைகளை நிர்ணயிக்கவேண்டும். காலத்தோடு அந்தந்த மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 7.20

அடுத்து விவசாயத்திற்குக் கொடுக்கிற, விவசாயிகளுக்குக் கொடுக்கிற இடுபொருட்கள் இலவசமாக மானிய விலையில் கொடுப்பது என்பதில்-நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் -முறைகேடுகள் நடக்கின்றன. எனவே, அதிகாரிகளை உஷார் படுத்துங்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள். சென்ற ஆண்டு 20 கோடி ரூபாய்க்கு தாட்கோ நிறுவனத்தின் மூலமாக உரம் வழங்குவதிலே மோசடி நடந்தது. தனி வியாபாரிகள் அப்படியே லாரிகளிலே கொண்டுபோய் இறக்கி, அந்த ஏஜெண்டுகள் அதிலே பெரிய மோசடிகளை உருவாக்கினார்கள், என்பது உங்களுடைய கவனத்திற்கு வந்தது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், சாதாரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு அந்த நிவாரணம் என்பது முழுமையாகப் போய்ச் சேரவில்லை. காரணம் என்னவென்றால், பல தலையீடுகளின் காரணமாக முழுமையாகப் போய்ச் சேரவில்லை. என்னுடைய முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினுடைய இடையூரிலே இதுபோன்றுதான் லாரிகளிலே கொண்டு வந்து இடுபொருட்கள், உரங்கள், இவைகள் எல்லாம் அங்கேயிருக்கிற விவசாயிகளுக்குத் தானாகவே, அவர்கள் லாரியை நிறுத்தி எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தார்கள். சென்றமுறை இதைப்பற்றி குறிப்பிடும்போது, சிறு மற்றும் குறு விவசாயிகளை

பச்சை அட்டைகள் மூலமாக அடையாளம் கண்டுகொள்ளலாம் என்று சொன்னீர்கள். மற்றும் குறு விவசாயிகள் என்ற அந்த அடிப்படையில், அவர்கள் கொடுக்கின்ற அந்த கார்டுகளைப் பெற்றுக் கொண்டு, அதைப் பதிந்து வினியோகம் செய்ய முடியாமல், இதுபோன்று முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புக்களில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தீர்கள். ஆனால் இன்றைய தினம் வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்றுதான், காவிரி நதிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், தொடர்ந்து நமக்கு *1974* ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் *4* நாட்கள் சென்னையில் காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். இங்கேகூட தமிழகத்தைச் சார்ந்த மத்திய அமைச்சர் உடனடியாக தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தால் காவிரியில் கர்நாடக அரசு தண்ணீரை திறந்துவிடும் என்று சொல்லி, ராஜினாமா செய்து, அரசியல் நாடகம் நடத்தினார்கள். அவர்கள் மந்திரி பதவியை ராஜினாமா செய்தும், தண்ணீர் வரவில்லை. நம்முடைய முதலமைச்சர் நான்கு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தும் தண்ணீரை திறந்துவிடுவதற்கு தயராக இல்லை. இதற்கு கர்நாடக அரசும் ஒப்புதல் அளிக்கவில்லை. மத்திய நீர்ப்பாசனத் துறையினுடைய அமைச்சர் திரு. சுக்லா அவர்கள் வந்து வாக்குறுதி தந்தார்கள். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? அந்த வாக்குறுதி நடைமுறைக்கு வந்திருக்கிறதா? இதுபோன்று ஒவ்வொரு தடவையும் இயக்கங்களை நடத்தி, ஒரு பிரச்சினை வருகிறபோது, நம்முடைய அரசு கவனம் செலுத்தி, மந்திரிகளை ராஜினாமா செய்யச் செய்து, அல்லது உண்ணாவிரதம் இருந்து, அல்லது ஹர்த்தால் நடத்தி, அல்லது பந்த் போன்ற போராட்டங்களை நடத்தி, இப்படியே காலத்தைக் கடத்திவிடப் போகிறோமா, அதற்கான என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்பதை நீங்கள் யோசித்து காலத்தோடு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடைத்துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கிறது. கால்நடைகள் என்பது எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பெரும்பகுதி நாட்டுக் கால்நடைகள் அங்கே கிடையாது. எல்லாம் கேரளாவிற்கு

இறைச்சிக்காக வாங்கிச் சென்றுவிட்டார்கள். இதற்கு குறிப்பாக அரசாங்கம் ஒரு முயற்சியை எடுக்க வேண்டும். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் பிராய்லர் கோழிகள் பெரிய அளவிலே தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்றன, பல மாவட்டங்களில் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுவதைப் போல. எனவே, அதுபோன்று, கால்நடைகளைக்கூட பிராய்லர் உணவாக மாடுகளை வளர்ப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டால், நல்ல லாபகரமான தொழில் கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும். மேலும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை விவசாயிகள், ஒரு போகம் சாகுபடி செய்துவிட்டு, பாக்கி நாட்களில் சும்மா இருக்கக்கூடியவர்களுக்கு, இதுபோன்ற திட்டங்கள் பிரயோசனமாக இருக்கும். எனவே, இதைப்போன்று திட்டங்களை நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று எனக்கு முன்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கால்நடை மருத்துவராக இருக்கிற காரணத்தால், அவர்களுடைய கோரிக்கையை வைத்தார்கள். அதே கோரிக்கையை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எம்.பி.பி.எஸ். படித்திருக்கிற டாக்டர்கள், பல்வேறு துறைகளிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஈடுஇணையாக, கால்நடை மருத்துவம் படித்த டாக்டர்களையும் கருதி, அவர்களுக்கு இருக்கிற சம்பளம் வித்தியாசம், அவர்களுடைய பணியிலே இருக்கிற மாற்றங்கள் போன்றவற்றை எல்லாம் அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று கால்நடைத் துறையிலே குறிப்பாக 200 கால்நடை கிளை நிலையங்கள் டாக்டர்கள் இல்லாமல் காலியாக இருக்கின்றன. யாரும் கிடையாது. தற்போது 400 பட்டதாரி கால்நடை மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக அந்தக் காலியிடங்களுக்கு நீங்கள் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு இன்னும் ஒன்று என்னவென்று சொன்னால் 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று தொடர்ந்து அந்தக் கால்நடை மருத்துவர்கள் தற்காலிகமாகப் பணிபுரிந்தவர்கள் இப்போது அவர்கள் எல்லாம் வேலை நீக்கம் செய்யப்பட்டு, நேர்முகத்தேர்வு மூலமாக தேர்வாணைக் குழு மூலமாக அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதற்காக சமீபத்திலே அவர்கள் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள், 5 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள். அவர்கள் மீண்டும் தேர்வாணையம் மூலமாக போய்ச் செய்யவேண்டும் என்பது அல்ல. அவர்கள்

[திரு. ஜி. பழனிசாமி] [1994 ஏப்ரல் 20

ஏற்கெனவே பிராக்டீஸ் செய்து, அந்தத் தொழிலில், அந்த வேலையில் ஈடுபட்டவர்கள். அவ்வாறு 35 பேர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் அங்கே பணியமர்த்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

பிற்பகல் 7.25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு எல்லா உறுப்பினர்களுக்கும் வேண்டிய நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்கள் இந்தத் துறையினுடைய நலன் கருதி, தமிழ்நாட்டினுடைய, உழவர் பெருமக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். சில வினாக்களுக்கு மட்டும் விடையைச் சொல்லி, என்னுடைய பதிலுரையை நான் ஆரம்பிக்க விழைகிறேன்.

திரு. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது வெள்ள நிவாரண இடுபொருட்கள் வழங்குகிறபோது, பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன, நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன், அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள், இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார். நான் இதே அவையிலே சொல்லியிருக்கிறேன், முத்துப்பேட்டைப் பகுதியிலே அரசு அலுவலர்கள் கொடுத்த அந்தப் பர்மிட்டைப்போல ஒரு சமூகவிரோதி தானே அச்சிட்டு ஒரு பர்மிட்டைக் கொடுத்தார். அந்த பர்மிட் அரசுத் துறையை மோசடி செய்யக் கூடிய வகையில் இருந்து, அதைக் கண்டுபிடித்தவர்கள் வேளாண் துறை அலுவலர்கள்தான். அவனைப் பிடித்து காவல்நிலையத்திலே ஒப்படை செய்து, அவன் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறந்திருக்க மாட்டார் என்று நான் கருதுகிறேன்.

அதனைப்போல சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட ஜே.ஜே.92 ரக நெல் நல்லது, வாசனை மிக்கது, தரமானது என்று மாண்புமிகு உறுப்பினர் பாராட்டினார். அதற்கு நன்றி. ஆனால் அதே நேரத்திலே அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய ஆலோசனைகளை வழங்கியிருக்கிறது. இன்றைக்கு நடைமுறையிலே அது இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக நான் சொல்கின்றபோது சொன்னேன். நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலே இரண்டு

ஆலைகளைச் சேர்ந்தவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்று, திரு. வி.வி. கோவிந்தராஜன், ஸ்ரீஇராஜேஸ்வரி அரிசி ஆலை, வடக்கு வாசல், தஞ்சாவூர். அடுத்து திருவாளர் கிருஷ்ணா அரிசி ஆலை, திருவாரூர், இந்த இரண்டு ஆலை அதிபர்களும் இன்றைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாங்குகின்ற விலை ஒரு கிலோ நெல் ரூ. 6 லிருந்து ரூ. 7 வரை வாங்குகிறார்கள். அரிசியாக இருந்தால் ரூ. 13 லிருந்து ரூ. 14 வரை வாங்குகிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.அதனைப் போல திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். நான் வறட்சி மிகுந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறேன். எனவேதான் சொட்டு நீர்ப் பாசனத்தைப் பற்றி நான் மட்டுமே பேசினேன். மற்றவர்கள் எல்லாம் வளமான காவிரி தீரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள் என்று சொன்னார். இங்கே உறுப்பினர்களுக்குப் பின்னாலே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மணிமேகலை அவர்கள் வளமான திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பேசியது எல்லாம் வேளாண் பொறியியல் துறையைச் சார்ந்த சொட்டு நீர்ப் பாசனத்தைப் பற்றி உங்களைவிட அதிகமாக வலியுறுத்தியிருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனைப்போல கோவை மாவட்டத்தில் அதிக நிதி வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு தமிழகத்திலே கோவை மாவட்டத்திற்கு மட்டும் அதிகப்படியாக இந்த சொட்டு நீர்ப் பாசனத்திற்கு ரூ. 45 இலட்சத்தை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதை ரூ. 90 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனைப்போல பி.கே.எம். புளியங்கன்றுகள் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த நாற்றங்காலை அமைப்பதற்கு அரசு இந்த ஆண்டு அனுமதியளித்திருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 35 இலட்சம் செலவில் 35 லட்சம் புளியங்கன்றுகள் வளர்க்கப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனைப்போல திரு. தம்புசாமி அவர்கள் பேசுகின்றபோது கேட்டார்கள். கசிவுநீர்க் குட்டைகள் எவ்வளவு கட்டப்பட்டிருக்கின்றன என்று. 1991-92 ஆம் ஆண்டும் 1992, 1993 ஆம் ஆண்டும் 1993-94 ஆம் ஆண்டு 1114 கசிவுநீர்க் குட்டைகள் ரூ. 14 கோடி அளவிற்கு கட்டப்படிருக்கின்றன என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனைப்போல வடிவு வாய்க்கால்களைத் தூர் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் சொல்லுகிறபொழுது சென்ற ஆண்டு ஏறக்குறைய *574* கிலோ மீட்டருக்கு தூர் எடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு *600* கிலோ மீட்டர் தூர் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே இந்த அரசு உங்களுடைய எண்ணங்களைப் புரிந்து செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பதிலுரைக்கு வருகிறேன். அதனைப்போல பழனிசாமி அவர்கள் குறிப்புடுகிறபோது டெல்டா பகுதியில் தேவையான குறுவை விதைகள் இல்லை என்று சொன்னார்கள். இன்றைக்குத் தேவையான குறுவை விதை *6500* மெட்ரிக் டன் தற்போது இருப்பில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 7.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி உறுப்பினர்களுக்கெல்லாம் பதில் சொல்லியிருக்கிறீர்கள். எனவே ஒட்டுமொத்தமாக உங்களுடைய பதிலுரையும் கொஞ்சம் சுருக்கமாக இருந்தாலும் கூட எல்லோருக்கும் பதில் கிடைத்து விடும் என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வாழக்கூடிய *80* சதவீத மக்கள் இந்த வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக் கிறார்கள். எனவே விரிவான பதிலை இந்த நாட்டு மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையான பதில்களை விரைவாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: விரைவாக என்னுடைய பதிலை நான் சொல்ல முற்படுகிறேன். சங்கத் தமிழ் மூன்றும் இம்மண்ணில் விளங்கும், இம்மாமன்றம் மாண்பை பெருக்கும் தலைவர் அவர்களே (சிரிப்பு) நலிந்தோறும் நூல் மயமாய் எங்கள் நா மணக்கும் தமிழ் சுவையாய் தமிழர் வாழ்வு பெருக்கும் மதியாய் இம்மாநிலம் காக்கும் இறையாய் பொன்னேர் பூட்டி புவிசெலுத்தி முன்னேறிச் செய்யும் முதன்மையாய், குமரகுருபரன் பிள்ளை, தமிழ் கேட்க அவையில் முந்தி இருந்த அங்கயர்க் கண்ணிபோல்

இங்கே எங்கள் சிந்தை பரப்பெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அருளுருவாய் அன்னையாய் விளங்கும் தமிழக முதலவர் மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வாழுகின்ற திசை நோக்கி வணங்குகிறேன். உலகின் முதல் தொழில் வேளாண்மை. புத்துலகு படைக்கும் பொன் விடியலாய் புறப்பட்டு இருக்கும் அன்னையே உங்கள் ஆட்சியில் வேளாண்மைத் துறையின் நாலாவது மானிய கோரிக்கையினை இந்த மாமன்றத்தின் திருமுன் நின்று வைக்கிறேன். வாய்ப்புக்கு கொடை தந்த வான் மழையே வணங்குகிறேன் நாளும். சரணம் என்றுனது பாதமலர் என்னை காத்தருள் சக்தியே நின்றிங்கே தொடங்குகிறேன் நின்னருளை துணைக்கொண்டு. விழியாலே உயிரூட்டி தன் வழியாலே பகைவிரட்டி தமிழத்தை தன்னாட்சி செய்யும் மீனாட்சியாம் நம் தாய் ஆட்சியில் பயிர் வாடி போகச் செய்யும் உயிர்நாடிப் பிரச்சினையில் காவேரி நடுவர் நீதிமன்றம் நல்கிய இடைக்கால ஆணையை மதிக்காத கடும் மனம் கொண்டவர்கள் அணைக் கதவு திறக்க மறுப்பதும், மத்திய ஆட்சியாளர் அதை வேடிக்கை பார்ப்பதும் வாடிக்கையாகிவிட்ட இந்த நாட்டில் ஆட்சியைக் கலைக்க தினம் டெல்லிக்கு பல்லக்கு தூக்குபவர்களும் சரக்கே இல்லாத அறிக்கையின் மூலம் வெறுங்கை வீசி அலைவோரும் நாணித் தலை கவிழ்ந்து நத்துவார் யாரும் இன்றிபோக, காவேரி வருவதற்கு உயிர் காவு ஒன்று வேண்டுமெனில் இன்னுயிர் தருவேன் என்னுயிர் எனக்கு வெல்லமல்ல என்று வீரமுழக்கமிட்டு ஈரக்கடற்கரையில் மங்கா புகழ் கொண்ட மாமனிதர் அண்ணா வலமிருக்க அவர் தம்பி எங்கள் தங்க எம்.ஜி.ஆர் இடம் இருக்க, தமிழ் மக்கள் யாவரும் துணை இருக்க, தாய் அமர்ந்தார் தவம் மேற்கொண்டார். நோன்பிற்கு மாண்பு தந்த நேர்மையின் பேரொளியை அகிலமே திரண்டு வந்து அன்போடு வாழ்த்தியதே. கண்டவர் விம்மினர் கதறிப்புரண்டனர், அன்னையின் நோன்பிருக்க நேர்ந்தது கண்டனர், நெஞ்சு பதைத்த சிங்க நிகர் இளைஞர்கள் செந்தணல் புகுந்தனர். ஆயினும் கல்மனம் கொண்டவர்கள் காவேரி திறக்கவில்லை. வரண்ட மண் நனைந்திட இருண்டு திரண்டது வானம், வந்து இறங்கியது வான்மழை. மருதமும், குறிஞ்சியும், முல்லையும், நெய்தலும் பாலை என எல்லா பரப்பும் நனைந்திட பொழிந்தது நன்மழை. இது புரட்சித் தலைவிக்கு இயற்கையின் கொடை. (மேசையைத் தட்டும் ஒலி) சப்பாத்தி கள்ளிகளும் சரியாக விளையாத சரளை பூமிகளும் பசுமை அணிந்தன. பரிசம் கொண்ட பாவையின் கதுப்பு போன்ற செந்நிற பூமியில் பொன்னிற மணிகளாய் தமிழ் புவி எங்கும் நல்விளைச்சல். சிறு நண்டு மணல்மீது சிறுகோடு

கீறல், அலைவந்து சில வேளை அது கொண்டு போகும். அதுபோலவே இயற்கையின் சீற்றங்கள் விளைச்சலைக் கெடுக்க இரக்கமின்றி புயலென மழையென புறப்பட்டு வந்தன. வீழ்ந்தன வாலைகள் தாழ்ந்தன குடிகள் முதிர்ந்த முளைத்த நீர்கள் விளைந்த நெற்கதிர் முளைத்தன நீரில் நிமிர்ந்த தென்னைகள் வீழ்ந்து அதிர்ந்தன. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று வாழ வகையறியாது வாடி நின்றனர் மக்கள். துடித்தது தாயுள்ளம். அருளோடு விரைந்தார் அன்னை. பொருள் கொண்டுபோய் அனைவருக்கும் ஈந்தார். வீழ்ந்தவர் எழுந்தனர். விளைச்சலை பெருக்க உழைத்திட முனைந்தனர். எத்தனை இடர்கள் எவ்வகையில் வந்தாலும் எம் இனிய முதல்வர் இருக்கின்றார், எப்போதும் நமைக் காப்பார் என்ற உறுதியிலே மண்ணிலே தினம் உழைத்தார். மகத்தான அளவு உற்பத்தி கண்டார். 103 இலட்சம் மெட்ரிக் டன் இதுவரை இல்லாத அளவு எய்தினர். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வத்தை மகிழச் செய்தனர். நாட்டிற்கு சோறு இட்டு நாளும் உழைத்த உழவர்களுக்கு நாமும் நன்றியைச் செலுத்துவோம் இம்மாமன்றத்தில்.

பிற்பகல் *7.35*

எங்களின் எண்ணக் கே. விலில் இடையறாத ஒளி வீசும் இதய தெய்வத்தின் மூன்றாண்டுச் சாதனை முத்துக்கள் சில. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பர். வேளாண் துறை சமைத்த சோற்றை வெகுவாக பதம் பார்ப்போம் வாரீர். இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு பொறுப்பு ஏற்று நல்லாட்சி நடைபெற்றுவரும் மூன்று நிதி ஆண்டுகளில் அந்தந்த ஆண்டுகளுக்குரிய வேளாண் துறை மானியக் கோரிக்கையின் மீது இம்மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்பற்ற வழிகாட்டுதலுடன் பல்வேறு புதிய திட்டங்களை அறிவிக்கும் பேறு பெற்றேன். சொல்லிய வண்ணம் செயல் அரிது. ஆனாலும் சொன்னதைச் செய்தோம், செய்ததைச் சொல்லுவோம் என்ற தாரக மந்திரத்தை எங்களுக்கு அளித்துள்ள புரட்சித் தலைவி அவர்கள், இம்மாமன்றத்திலே அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் அனைத்தையும் விரைந்து செயல்படுத்த எங்களை நெறிப்படுத்தி உள்ளார்கள் என்பதையும் நிறை நன்றியோடு இம்மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விழைகிறேன். மாநில அளவில் அதிக விளைச்சல் எடுக்கும் விவசாயிக்கு வழங்கப்படும் உற்பத்தி ஊக்கப் பரிசு உயர்த்தப்படும் என்று சொன்னோம். சொன்னபடி உயர்த்தி, பரிசுத் தொகை ரூபாய் ஒரு லட்சமாக வழங்குகிறோம். இந்த ஆண்டுக்குரிய பரிசு புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் இங்கே

குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). வெற்றி வரலாற்றை சொந்தமாக்கிக் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் இயக்கத்தின் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தபடி தரிசு மற்றும் கைவிடப்பட்ட நில மேம்பாட்டிற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 24,814 ஏக்கர் நிலம் சாகுபடிக்குச் கொண்டு வரப்பட்டுள்ளது. எண்ணைப் பனை சாகுபடியைப் பொறுத்தவரையில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகை காயிதே மில்லத் ஆகிய மூன்று மாவட்டங்களில் 1.8 கோடி மதிப்பீட்டில் 5,000 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் விரிவுபடுத்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விளைச்சல் நிலத்தை வேளாண்மை அல்லாத காரணங்களுக்கு பயன்படுத்துவதை தடைசெய்து, வேளாண்மைத் துறையின் முன் அனுமதி பெற வேண்டிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் பயனுள்ள விளை நிலங்கள் தக்க வைக்கப்பட்டுள்ளன. புதிய ரக நறுமண உயர் விளைச்சல் ரகம் ஜே.ஜே.92 நெல் வெளியிடப்பட்டதோடு அல்லாமல், இந்த ரக நெல்லினை பரப்பும் நல்லெண்ணத்துடன் இதுவரை 25,000 சிறுதளைப் பைகள் வழங்கப்பட்டுள்ளன. 75 கிலோ ஜே.ஜே. 93 நெல் 500 ரூபாய் அளவிற்கு விலை போயிருக்கிறது. இவ்வுயரிய நெல் ரகத்தினை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. 1992 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புரட்சித் தலைவி மாணவர் தென்னை வளர்ப்புத் திட்டம் மிகச் சிறந்த முறையில் ஆர்வத்தோடு செயல் படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் 94 வரை 2,41,388 தென்னங்கன்றுகள் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக் கின்றன. தானுண்ட நீரைத் தலையாலேதான் தரும் தென்னை, இன்னும் இரண்டரை ஆண்டுக் காலத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டரைக் கோடி தேங்காய்களை இந்நாட்டிற்கு வழங்கிடுமன்றோ? 1994-95 ஆம் ஆண்டில் மட்டும் மேலும் 4,00,000 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் தென்னங்கன்றுகள் பெறுவார்கள். மிகச் சிறப்பாக விரிவாக்கப் பணிகளில் செயலாற்றும் வேளாண் அலுவலர்க்கு அறிவிக்கப்பட்டபடி புரட்சித் தலைவி விருது வழங்கப்பட ஆணைகள் பிறந்துள்ளன.

பிற்பகல் 7.40

இம்மாமன்றத்தில் அறிவித்தபடி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பதவி இடங்கள், முதல் முறையாக ஏற்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், வேளாண்மைத் துறையில் புதிய தொழில் நுட்பக் கருவிகள் அரசு ஆதரவுடன் பெருமளவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 3.3 கோடி ரூபாய் மானியத்தில் 1101 டிராக்டர்கள் 4.3 கோடி ரூபாய் மானியத்தில் 3448 பவர் டில்லர்கள் இரண்டு கோடி ரூபாய் மானியத்தில் தானிய உலர்த்தல் மற்றும் சேமிப்புக்குத் துத்தநாகக் குதிர்கள், தார்ப்பாய்கள்; ரூபாய் 50 லட்சம் மானியத்தில் 500 பவர் டில்லர் டிரெய்லர்கள்; உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றிச் செல்ல 3.4 கோடி ரூபாய் மானிய உதவியுடன், புரட்சித் தலைவி அவர்களது 45 வது பிறந்த நாளையொட்டி 4500 டயர் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அன்னையின் 46 வது பிறந்த நாளையொட்டி 46,000 ஆதரவற்ற மகளிருக்கு 1.3 கோடி மதிப்பில் வேளாண் பயன்பாட்டுக் கருவிகள், மற்றும் பல வேளாண் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடதக்கது.

இதுதவிர, 3 கோடி ரூபாய் மதிப்பில் 1,56,800 உழவர்களுக்கு உர மினிகிட்டுகளும், 54 கோடி ரூபாய் மதிப்புடைய 4,81,523 மெட்ரிக் டன் உரம் மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கிறது.

உரச் சலுகைத் திட்டத்தின் கீழ் 13 லட்சம் டன் பொட்டாஷ், பாஸ்பேட் மற்றும் கூட்டு உரங்களுக்காக உர நிறுவனங்களுக்கு 99.3 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டு இருக்கிறது.

பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் பற்றிய சிறு கையேடுகள் உழவருக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. அதன் படிகள் இப்பேரவையில் ஏழு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் உயிர் உரங்கள் பயன்படுத்தல், ஒருங்கிணைந்த பூச்சி பயிர் பாதுகாப்பு முதலியன மேற்கொள்ளப்பட்டு வேளாண்மை வளர்ச்சியும் இயற்கைப் பாதுகாப்பும் நிலவி வருகின்றன.

உர-தர ஆய்வகங்கள், மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் உர ஆய்வகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. விதைச் சான்று வழங்குவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. இந்தியா விடுதலை பெற்ற பின்பு, தமிழகத்திற்கு முதன் முறையாக புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தான் தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம் மாநில அரசின் முயற்சியில் மத்திய அரசு நிறுவியுள்ளது.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் பனை ஆராய்ச்சி நிலையமும், ஆடுதுறை எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி நிலையமும் செயல்படுகின்றன.

மலைகளின் ராணி உதகை. அதன் அழகு மகுடமான தாவர இயல் பூங்கா மேலும் அழகு பெற 83 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நந்தவனம் திட்டத்தின் கீழ் 66 ஆலயங்களில் சோலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஓய்வுக் கூடங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை உட்பட பொது வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

இது தவிர விளைபொருட்கள் மீது கடன் வாங்கும் வசதி கூடுதலாக 39 புதிய ஒழுங்குமுறைக் கூடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு உள்ளது.

மின்னணு எடை மேடைகள் விற்பனைக் கூடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. இதுபோன்று எண்ணற்ற அடிப்படை வசதிகள், உழவர்களுக்கு நேரடிப் பயன்கள், விளைச்சல் பெருக்க உத்திகள் என வேளாண் துறையில் தொகை தொகையாகச் சாதனைகள் பெருக விதையாகி, இம்மாநிலம் பயனுற மழையாகி, எங்கள் உயிராகி, உயர்ந்திருக்கும் ஒப்பாரில்லாப் புரட்சித் தலைவி அவர்கள் வழிகாட்டுதல் அமைந்திருப்பது இந்நாடு செய்த நற்பயன்! எங்கள் தவப் பலன்! என்பது உண்மை.

டங்கல் திட்டம் குறித்து தென்னகத்து மக்களை தன்னகத்தே கொண்டு தரணிதன்னில் தன்மான வாழ்வுதனை வாழ்தல் வேண்டி அயராது பாடுபடும் உயர் தலைவி; அரசியல் வரலாற்றில் பெரியார்-அண்ணா - எம்.ஜி.ஆர். அடிபதித்த பாசறையாம் திராவிடத்தின் தன்மானங்காக்க, தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்க, நாட்டிற்கு கேடுதரும் டங்கல் திட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருப்பதை இம்மாமன்றம் அறியும்.

பிற்பகல் 7.45

டங்கல் என்ற தடங்கல் தமிழ்நாட்டிற்கும் கேடு; இந்தியாவிற்கும் கேடு என்பதே தீர்க்கதரிசனத் தலைவியின் தெளிந்த நற்கருத்தாகும். வசதிபடைத்த வல்லரசு நாடுகளின் பொருளாதார நிர்ப்பந்தத்திற்கு இந்தியா பணியுமானால் நம் எதிர்காலம் என்னவாகும் என்பதே எங்கள் இயக்கத்திற்கும் இந்நாட்டிற்கும் முதன்மையாய் விளங்கும் புரட்சித் தலைவி அவர்களது பொருள் பொதிந்த கேள்வியாகும்.

'காட்' ஒப்பந்தத்தில் வேளாண்மை குறித்த சரத்துக்கள் புதிதாகத்தான் புகுத்தப்பட்டன. ஏன்? வர்த்தக ஒப்பந்தத்தில்

வேளாண்மை ஏன் புக வேண்டும்? வேளாண்மை குறித்து வகுக்கப்பட்டுள்ள 'காட்' விதிகள் எல்லாம் இந்திய விவசாயிகளுக்கு எதிராக இருப்பது ஏன்? புரியவில்லை? புரிந்துகொண்டும் வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்ட நமது பொருளாதாரத்தைப் பற்றி ஏன் மத்திய அரசு கவலை கொள்ளவில்லை? அதனால்தான் உருகுவே பேச்சின் முழு விவரங்களையும் மத்திய அரசு வெளியிடாமல் இருக்கிறதா? இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அட்டவணை 14, பட்டியல் 2 ல் 'வேளாண்மை' மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் இருந்தும் மாநில அரசின் கருத்தை மத்திய அரசு கேளாதது ஏன்? மெத்தனமா? இறுமாப்பா? கூட்டாட்சி முறைக்கு இது ஒரு முற்றுப்புள்ளியா? டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1993 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் வேளாண்மைக் கொள்கை குறித்து மத்திய அரசு முடிவெடுக்கும்போது அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி டங்கல் திட்டம் குறித்து விரிவான விவாதம் வேண்டும் என மாண்புமிகு முதல்வர் சார்பில், ஆணைப்படி நான் வலியுறுத்தியும் கடந்த ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியும் அரசியல் உறுதியே இல்லாததால்தான் பிரதமர் மௌனம் சாதிக்கிறாரா?

இந்தியாவைப் போன்ற வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்ட நாட்டிற்கு 'காட்' ஒப்பந்தம் கேட்டைத்தான் விளைவிக்கும் என்பதே எங்கள் நிலையாகும். இந்திய அரசியல் சட்டத்தின் பல பிரிவுகளைக் 'காட்' ஒப்பந்தம் துச்சமாகத்தான் மதிக்கிறது. காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன்மூலம் மத்திய அரசு இந்திய அரசியல் சட்டத்தையே 'காட்' டிடம் அடகு வைத்து விட்டது என்றுதான் அர்த்தம். 'காட்' ஒப்பந்தத்தின் ஒரு பிரிவின்படி ஒவ்வொரு நாடும் தனது நுகர்வு அளவிற்குத் தகுந்த இறக்குமதி விகிதத்தில் ஒப்பந்தம் செய்துள்ள பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்று வகுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை மிகுந்த நாடு நம் இந்தியா. ஆகவே மிக அதிக நுகர்வு, உணவுப் பொருள்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் நாம் வேளாண்மை விளைபொருட்களை மிக அதிக அளவில் பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவையற்ற நிர்ப்பந்தம் ஏற்படும். ஏற்கெனவே அந்நியச் செலாவணி இருப்பு நம்மிடம் அதிகம் இல்லை. இந்த நிலையில் கட்டாய இறக்குமதி என்பது கைகளைக் கட்டிப்போட்டுக் கடலில் நீந்து என்று இந்தியாவைப் பிடித்துத் தள்ளுவதைப் போலத்தான் இருக்கும். ஆக, நமது நாட்டில் அக,

புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நமது விவசாயிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நாம் அளித்த மானியம் 'காட்' ஒப்பந்தத்தின் மூலம் பன்னாட்டுத் தலையீட்டால் கட்டுப்படுத்தப்படும். உள்நாட்டில் இயங்குகிற, மக்கள் நலன் கருதி நமது அரசு தரும் உரிமைகளை, சலுகைகளை, மாநில அரசிடம் இருந்தும் ஏன் மத்திய அரசிடம் இருந்தும்கூட பறிக்கும் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஏன் இந்த வேகம்? இன்றைக்கு, 1982 முதல் 1987 வரை பிற நாடுகள் வழங்கிய மான்யங்களைப் பார்த்தால் ஜப்பானில் 72.5 சதவீத மான்யம்; தென்கொரியாவில் 60.7 சதவீத மான்யம்; மெக்ஸிகோவில் 48.3 சதவீத மான்யம்; யூகோஸ்லேவியாவில் 41 சதவீத மான்யம்; ஐரோப்பிய சமுதாயத்தில் 37 சதவிகித மான்யம் கனடாவில் 33.5 சதவீத மான்யம்; அமெரிக்காவில் 26.2 சதவீத மான்யம்; ரஷ்யாவில் 25.5 சதவீத மான்யம்; பிரேசிலில் 21.5 சதவீத மானியம்; ஆனால் இந்தியாவில் 3 சதவீத மானியம்தான் வழங்கப்பட்டு வருகிறது.

வளரும் நாடுகள் அதிகபட்சமாகவே 10 சதவீதம்தான் வேளாண் மான்யம் வழங்க காட் ஒப்பந்தம் கட்டாயப்படுத்துகிறது. இருந்தாலும், இதிலே, இங்கு ஒரு பிடியும் உள்ளது. மான்யம் என்பது வெளிப்படையாக தரும் உதவிகள் மட்டுமல்ல மறைமுகமாக-உதாரணத்திற்கு இலவச மின்சாரத்தால் அரசுக்கு ஏற்படும் செலவு, விவசாயம் செய்யப்படும் ஒவ்வொரு ஏக்கருக்கும் தேவையான நீர்வரத்துக்கு ஆகும் செலவு. இரசாயன உரக் கம்பெனிகளுக்கு அரசு தரும் மானியம் இதுபோன்று பற்பலவும் மானியக் கணக்கில் 'காட்' சேர்க்கும். ஆனால் வளர்ந்த நாடுகள் மானியம், இருக்கும் அளவிலேயிருந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு, வளர்ந்த நாடுகள் மானியத்தை இருக்கும் அளவிலேயிருந்து இருபது சதவீதமாகக் குறைத்துக் கொள்வதற்கு 6 ஆண்டுகால அவகாசம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வளரும் நாடுகளுக்கு இத்தகைய சலுகை இல்லை. நமது உரிமைகள் பாதிக்கப்படுவதை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழை உழவர்க்குச் சலுகை மறுக்கப்படுவதை தன்மான உணர்வோடு புரட்சித் தலைவி அவர்கள் எதிர்ப்பது சரிதானே?

பிற்பகல் 7.50

"காட்" ஒப்பந்தத்திற்கு வக்காலத்து வாங்கும் அந்நிய அடிவருடிகள் சொல்லுவது என்னவென்றால், இந்த ஒப்பந்தப்படி நமது ஏற்றுமதி வாய்ப்புக்கள் பெருகுமே என்பது தான். இந்திய அரசியல் சட்டத்தின் அடிநாதமான சமூக நீதிக் கோட்பாடும், காட் ஒப்பந்த லாபநோக்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்லவா? நமது நாட்டின் உணவுப் பழக்கவழக்கங்கள், நமது மண்வளம், பயிரிடும் முறைகள், நமது

தட்பவெட்பம், பொருளாதாரம் இவற்றிற்கு ஏற்ப நாம் வேளாண்மையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறோம், பயன்படுத்துகிறோம்.

லாபங்கருதி ஏற்றுமதிக்கான பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்வது, அதற்கேற்ப அணுகுமுறைகளை வகுத்துக்கொள்வது என்ற நிலை ஏற்பட்டு விடுமே. அதனால், உள்நாட்டு நுகர்வுக்கான பொருட்களில் பஞ்சம் ஏற்படுமே. அப்போது நம்நாட்டு மக்களுக்குத் தேவையான உணவைத் தருவதற்கு யார் பாதுகாப்பு தருவது? ஏற்றுமதி வாய்ப்புக்கள் என்ற அக்கரைப்பச்சையை நம்பி ஏற்கனவே காணா, மெக்ஸிகோ, பெரு போன்ற நாடுகள் ஏமாந்து தன் மக்களை பட்டினிப் போட்ட பரிதாபக் கதை உலகப் பொருளாதார நிலைகளை உன்னிப்பாய்ப் பார்த்து வருபவர்களுக்குப் புரிந்திருக்கும். இந்தியாவிற்கும் இத்தகைய நிலை வர வேண்டுமா என்பதுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களது கேள்வி.

காட் ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் எல்லா நாடுகளுக்கும் அகில உலக மார்க்கெட்டின் கதவுகள் திறந்து விடப்படுகின்றன என்ற பொருளற்ற செய்தியைப் புரியாமல் வக்காலத்து வாங்குவோர் பரப்புகின்றனர். ஆனால், உண்மையிலே நடக்க போவதென்ன? காட் ஒப்பந்தத்தின் மூலம் நாடுகளுக்கிடையே புற்றீசல்போலப் பொருளாதாரப் பிரச்சனைகள் கிளம்பும் என்பதுதான். இதை நான் சொல்லவில்லை, காட் அமைப்பின் பொதுச் செயலாளர் சுதர்லாண்ட் சொல்லியிருக்கிறார். எப்பொழுது? காட் ஒப்பந்தத்தில் இந்தியா உள்பட பல நாடுகள் ஏமாந்து கையெழுத்துப் போட்ட அடுத்தநாளிலே.

வெளிநாடுகளுக்கு வேளாண் பொருட்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய அடிப்படை வசதிகள் நம்மிடத்திலே இதுவரை உருவாக்கப்படவில்லையே! குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகள், ஏற்றுமதிக்குரிய தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதல் மற்றும் இவற்றைக் கொண்டு செல்லும் வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தவே இந்தியாவில் இன்னும் முடியவில்லை.

உதாரணத்திற்கு மதுரை மாவட்டத்திலே கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் எந்தப் பருவத்திலும் கிடைக்கக்கூடிய திராட்சைப் பழங்களும், கன்னியாகுமரி மாவட்டத்திலே மாரிக்காலத்திலும் கிடைக்கக்கூடிய மாம்பழங்களும் விளைந்திருந்தும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லும் வசதிகளை மத்திய அரசாங்கம் நமக்கு உருவாக்கித் தரமுடியாத நிலையில் நாம் அன்னியச் செலவாணியை ஈட்ட முடியாத நிலையில் இருக்கிறோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வளர்ந்த நாடுகளோடு வறட்சியும், ஏழ்மையும் வளங்குறைந்த நிலையும் உள்ள வளரும் நாடுகள் போட்டி போட்டு அகில உலகப் பொருளாதாரத்தில் எதுவும் செய்துவிட முடியாது. இது உண்மை, அதனால்தான் காட் வேண்டாம் என்கிறோம்.

டங்கல் திட்டத்தின்படி உணவு தானியங்கள் ஒப்பந்த நாடுகள் உள்நாட்டில் கொள் முதல் செய்யும்போது, நிலவும் மார்க்கெட் நிலவரப்படிதான் கொள்முதல் செய்ய வேண்டும். இது காட் ஒப்பந்த விதி. சரிபோலத் தோன்றும். உழவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பது போலத் தெரியும். ஆனால் சற்று ஆழ்ந்து பார்த்தோமேயானால் ஆபத்து காத்திருப்பது புரியும். இந்தியா போன்ற நாட்டில் பல்வேறு இயற்கைச் சூழல்கள். உற்பத்தி ஒரே அளவாய் இருப்பதில்லை, பயிர் செய்யும் பரப்பும் குறைந்து வருகிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே-நலமற்ற, ஆதரவுதர வேண்டிய சூழலில், கோடிக்கணக்கான மக்களுக்கு, பொதுவிநியோக முறை சலுகை விலையில் உணவுப் பொருட்கள் இன்னும் அவசியமாகவே இருப்பதால், வழங்குகிறோம்.

காட் ஒப்பந்தப்படி என்ன நேருமென்றால், பொது விநியோகத்திற்காகவும், பற்றாக்குறை ஏற்படும்போது சமாளிப்பதற்காகவும் 'கொள்முதல்'- 'உபரி கொள்முதல்' முதலிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது 'மார்க்கெட் விலைக்கு கொள்முதல்' செய்து இருப்பு வைக்க வேண்டும். இது முடியுமா? ஏற்கனவே மத்திய அரசிலும் பல மாநிலங்களிலும் பட்ஜெட், துண்டுவிழும் பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

இந்த நிலையில், அதிக அல்லது ஏற்ற இறக்கமுள்ள மார்க்கெட் விலை கொடுத்துக் கொள்முதல் எப்படிச் செய்ய முடியும்? முடியாது, என்னவாகும்?

உபரிக் கொள்முதல் செய்வது பாதிக்கப்படும். திடீரென்று ஏதாவது நேர்ந்தால் உணவுப் பற்றாக்குறையும், பஞ்சமும் ஏற்பட்டு விடுமேயானால் என்ன ஆகும்? எத்தியோப்பியா போன்று பல்லாயிரக்கணக்கில் பட்டினிச்சாவுகள் நிகழும். பிச்சைப் பாத்திரங்களைத் தூக்கிக்கொண்டு, அந்திய நாடுகளிடம் நாம் யாசகம் கேட்கும் அவலநிலை உருவாகும். அப்போது, அந்நிய ஆதிக்கம் எளிதாய் இன்னொருமுறை இந்தியாவை எட்டிவிட

முடியும். இந்த நிலை வேண்டுமா? ஆகவே, இந்தியாவின் இறையாண்மை காக்கப்பட, திராவிடத்துச் சுடர்விளக்காம் புரட்சித் தலைவி அவர்கள் நாட்டுப் பற்றோடு டங்கல் திட்டத்தை மறுக்கிறார்கள்; காட் ஒப்பந்தத்தை எதிர்க்கிறார்கள். மாநிலங்களுக்குள்ள உரிமைகள் மறுக்கப்படுவதால், காட் உடன்படிக்கையை, மாநில சுயாட்சிக் கொள்கையின் மகத்துவம் காக்கப்பட எதிர்க்கிறோம். ஏழை இந்திய விவசாயியின் நிலை மேலும் பாதிக்கப்படாமல் இருக்க, டங்கல் எதிர்ப்புச் செய்கிறோம்.

பிற்பகல் *7.55*

இந்திய வேளாண்மை மட்டுமல்ல; இந்நாட்டின் இறையாண்மையே காக்கப்பட 'காட்' ஒப்பந்தத்தை எதிர்க்கிறோம். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலப் பிரிவில் உள்ள பொருட்கள் குறித்து, மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமல், வல்லரசு நாடுகளின் பொருளாதார நிர்பந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் கையாலாகாத் தனத்தை நாங்கள் எதிர்க்கிறோம். வலிமையான காரணங்களால், வரலாற்றைத் திருத்தி எழுதும் திறமும், தீரமும் மிக்க எங்கள் தலைவி எடுத்ததெல்லாம் வெற்றியாய் முடிப்பார்; இக் 'காட்'டும் 'டங்க' லும் பொடிப்பொடியாய்ப் போகும். இந்தியா இவ்வலையிலிருந்து மீளும். இதற்குப் புரட்சித் தலைவி போர்ப்பரண் பாடிவிட்டார். முதற்கட்டமாக உச்சநீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வெற்றி நிச்சயம். விண்முட்டும் புகழ், புரட்சித் தலைவிக்கு நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

'டங்கல்', 'காட்' என்ற தடைக் கற்களைத் தாண்டி, தடந்தோள்கள் உண்டு என்று தமிழ்த் தலைவி வழிநின்று, வேளாண்மையில் புது உச்சங்களை எட்டுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களோடு முழுமையாக, திரு. தம்புசாமியும், திரு. பழனிசாமியும், அப்படியே ஒருங்கிணைந்து, தங்களுடைய உணர்வுகளை இணைத்துக் கொள்கிறார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: புரட்சித்தலைவி அவர்களின் புதுமைத் திட்டங்கள்.

தமிழ்நாட்டில் வேளாண் கொள்கை – இந்தியாவில், வேறெந்த மாநிலத்திலும் இதுவரை இல்லாத வகையில், தமிழ்நாட்டில் மாநில வேளாண் கொள்கை வகுக்கப்பட்டு, உரிய திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படும். உழுது,

அறுவடை செய்வது என்ற பாரம்பரிய முறைகளிலிருந்து இக்கொள்கை மாறுபட்டு, 'நீடித்த வளர்ச்சி' என்ற தொலைநோக்கு உணர்வுடன், வேளாண்மையில் எழும் சவால்களைச் சந்திக்க, நமது விரிவாக்கச் செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படும். விதைத்தல், அறுத்தல், உலர்த்தல், விற்று முதலாக்குதல் ஆகிய அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைந்த வணிக முனைப்பான கொள்கை வகுக்கப்படும். இக்கொள்கை உருவாக்கத்திற்கு உதவிட, புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் ஆர்வம் மிக்க உழவர் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்க, பகை முடித்து நகை முழக்கும் எம் பாட்டுடைத் தலைவி அவர்களின் அனுமதியோடு, இவ்வறிவிப்பினை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன்.

வேளாண்மையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு களைவோம். கடையேழு வள்ளல்களைக் கண்ட தமிழகம், வேளாண்மையைப் பொறுத்த வரையில், ஏழு தட்பவெப்ப மண்டலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் வேறுபட்ட வேளாண் பிரச்சினைகள் உள்ளன. ஆகவே, அதற்கேற்ப பயிர் மாற்று முறைகள், உற்பத்தித் திறன் அதிகரிப்பு, ஒரு விவசாயிக்கும் மற்றொரு விவசாயிக்கும் விளைச்சலில் ஏற்படும் வித்தியாசம் ஆகியவற்றைச் சமன் செய்ய வாய்ப்பான திட்டம், சென்ற ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டம் இவ்வாண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ள இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் இசைவு கிடைத்துள்ளது.

வேளாண்மைக் களத்தில் கணிப்பொறி. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களிலும் கணிப்பொறி வசதிகள் நிறுவப்பட்டு, வேளாண்மை விரிவாக்கத் தொடர்பான முழு விவரங்களுடன் மண் பரிசோதனை, உரப் பரிசோதனை நிலையங்கள் தரும் எல்லா விவரங்களையும், தொகுத்தும், பகுத்தும், எளிதில் பயன்படுத்தக் கிடைக்கும் வண்ணம் வகுக்கப்படும். தொன்மைத் தொழிலான வேளாண்மையும், அண்மைத் தொழில் நுட்பமான கணிப்பொறியும் இணைந்து வளர்ச்சிக்குதவப் புதிய யுகத்தின் புறப்பாட்டாய் விளங்கும் புரட்சித் தலைவி அவர்களின் ஆணை பிறந்துள்ளது.

விரைவான விரிவாக்கம். வேளாண்மை விரிவாக்கச் செயல்பாட்டு வீரியம் பெருக்கும் ஊக்க முனைப்பாகத் தமிழகத்தில் 800 வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கக் கடன்

முன்பணம் தரப்படும். கருணைத் திருவுருவாம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வேற்பாட்டிற்கு அனுமதி அளித்துள்ளார்கள். இதற்கென 2.4 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

அனைவர்க்கும் மண் நல அடங்கல். பச்சை மண்ணாம் குழந்தைகளின் நலங்காக்கப் பதினைந்து அம்சத் திட்டத்தைப் பாரதத் திருநாடே போற்றும் வண்ணம், உருவாக்கிச் சிறப்புப் பெற்றவர், நம் முதல்வர். அன்னை தெரசா அவர்களின் அன்பும் ஆசியும் நிறையப் பெற்றுள்ள நம் அன்னை, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆணைப்படி, 'பச்சைப் பயிர்களின் வயிறே மண்' என பெர்னாட்சா அவர்கள் புகழ்ந்த மண்ணின் 'நல விவரக் குறிப்பேடு' வழங்கப்படும்.

பிற்பகல் 8.00

முதற்கட்டமாக தருமபுரி, திருச்சி, செங்கை எம்.ஜி.ஆர். ஆகிய மூன்று மாவட்டங்களில், தேர்வு செய்யப்படும் மூன்று வட்டங்களில் 38,000 உழவர் பெருமக்களுக்கு இக்குறிப்பேடு வழங்கப்படும். இந்திய துணைக் கண்டத்தின் இம்முயற்சியே முதலானது என்ற பெருமை தமிழ் நிலத்தின் வள முகிலாய் விளங்கும் வாஞ்சைமிகு நம் முதல்வரையே சாரும்.

நகராட்சிகளுக்கு நாற்பது இலட்சம். மண்ணை வளப்படுத்த வேண்டும்; இம்மாநிலப் பயிர் வளர்ச்சி பெருக வேண்டும் என்ற நோக்கத்திற்கு ஊக்கமளித்துள்ள உன்னத முதல்வர் அவர்கள் ஆணைப்படி, மண் நலங்காக்க 250 மெட்ரிக் டன் தழை உர விதைகள் வழங்கப்படும். திரு. தம்புசாமி அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு முன்பே ஆணை வழங்கிவிட்டார்கள்.

தானியங்கிக் கழிவு உரத் தயாரிப்பு நிலையங்கள் துவங்க முன்வரும் இரண்டு நகராட்சிகளுக்கு ரூபாய் 40 இலட்சம் வழங்கப்படும். பண்ணைக் கழிவுகளை உயிரின உரமாக்கும் பயிற்சி, ரூபாய் 30 இலட்சம் செலவில் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும். திரு.பழனிசாமி அவர்கள் இயற்கை உரங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 70,000 சிறு குறு விவசாயிகளுக்கு 60,000 எக்டரில் ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்த 1.80 கோடி ரூபாய் வழங்கப்படும்.

ஊராட்சிக்கு ஒரு இலட்சம். இயற்கை உரத்தினை அதிக, மிக அதிக அளவில் பயன்படுத்தும் உழவர் வாழும் ஊராட்சி மன்றத்திற்கு தமிழகத்தில், முதல் முதலாக ரூபாய் ஒரு இலட்சம் முதல் பரிசாகவும், ரூபாய் *50,000* இரண்டாவது பரிசாகவும் ரொக்கமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உழவருக்கு பத்தாயிரம். இதேபோல, இயற்கை உரங்களை சிறந்த அளவில் பயன்படுத்தும் விவசாயிக்கும் முதற்பரிசாக ருபாய் *10,000*, இரண்டாவது பரிசாக ரூபாய் *5,000* வழங்கப்படும்.

எம்.ஜி.ஆருக்குப் புரட்சித் தலைவி பதக்கம். – மாரி போல வாரி வழங்கிய வள்ளல் பொன்மனச் செம்மல், எம்.ஜி.ஆர். அவர்கள், அவ்வள்ளலின் வாரிசு, தாயுள்ளம் கொண்டு தரணியாளும் நம் தங்கத் தலைவி அவர்கள், எம்.ஜி.ஆர்ஓ அவர்கள் புகழ் படர, வளர, தழைக்க, நிலைக்க, நாளும் உழைக்கும் நம் புரட்சித் தலைவி அவர்கள் மற்ற உயர் விளைச்சல் ரகங்களைவிட *25%* அதிக விளைச்சல் தரக்கூடிய ரகமான உயர் ரக வீரிய ஒட்டு நெல் வகைக்கு 'எம்.ஜி.ஆர்.நெல்' எனப் பெயரிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ரக விதை உற்பத்தியாளர்களுக்கு தக்க பயிற்சியைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அளித்து வருகிறது. முதற்கட்டமாக இந்த நெல் ரகம் *25,000* ஏக்கர் பரப்பில் பயிரிடப்படும். அதிக மகசூல் அள்ளித் தரும் எம்.ஜி.ஆர். நெல் ரகத்தில், மாநில அளவில் அதிக விளைச்சல் காணும் உழவர் உழைப்புக்கு பெருமை சேர்க்கும் வகையில் 'வள்ளல்-வாரிசு' புரட்சித் தலைவி பொற்பதக்கம் ரூபாய் *10,000* மதிப்பில் பரிசாக ஆண்டுதோரும் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இம்மாமன்றத்தில் அறிவிப்பது யான் பெற்ற பேறு.

ஆலயஸ்தல விருட்சம் ஆய்வகத்தில் உருவாக்கம். எழுத்துக்கு அகரம். நாங்கள் இழுத்துவிடும் மூச்சிக்கு புரட்சித் தலைவி. அதுபோலவே, கோவில்களுக்கு ஸ்தலவிருட்சம். காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் 'மாமரம்', மதுரை மீனாட்சி அம்மன் கோவில் 'மஞ்சக் கடம்பு', மருதமலை முருகன் கோவில் 'மருதம்' சிதம்பரத்திலே 'தில்லை', சுவாமி மலையிலே 'பெரிய நெல்லி', அவனாசியிலே 'பாதிரி' திருக்கழுக்குன்றத்தில் 'வாழை', திருப்பத்தூரில் 'பலா', திருவானைக்கோவிலில் 'வெண்நாவல்', திருச்செங்கோட்டில் 'இலுப்பை', ஸ்ரீரங்கத்தில் 'புன்னை', தேரெழுந்தூர் வேதபுரீஸ்வரருக்குச் 'சந்தனம்', நாச்சியார் கோவில் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு 'மகிழம்'. எட்டிக்குடி முருகனுக்கு 'எட்டி', கும்பகோணம் கும்பேஸ்வரருக்கு

'வள்ளி' என ஸ்தல விருட்சங்கள் வழிபாட்டின் உயிர்ப் பகுதியாய் விளங்குவதை தமிழ்ப் பண்பாடும், திருக்கோவில் வரலாறும் அறிந்தவர்கள் உணர்வார்கள். மருத்துவ குணங்கள் கொண்ட ஸ்தல விருட்ச இலைகள், பூக்கள் பிரசாதங்களாக வழங்கப்படுதல் மரபு. சில அபூர்வமான ஸ்தல விருட்சங்கள் அருகிப் போய்விடாமல் காக்கவும், ஆலயங்களுக்குரிய ஸ்தல விருட்சகங்கள் பராமரிக்கப்படவும், திசு கல்சர் உள்ளிட்ட புதிய வேளாண்மை அறிவியல் தொழில்நுட்பம் மூலமாக உருவாக்குவதற்கு 'ஆலயப் பணிகளில் ஆர்வம் காட்டிவரும் அறப்பணிகளின் கலங்கரை விளக்கம், எதிரிகளைப் புறங்காட்டி ஓட வைக்கும் புறநானூற்றுத் தீரம் புரட்சித் தலைவி' அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கந்தர்வக் கோட்டைக்கு முந்திரித் தோட்டம். இருக்கின்ற நிலம் யாவும் பயிர் விளைப்போம். இதுவே புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியாளர் களுக்குப் பணித்துள்ள வேதம். இதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் *2155* எக்டர் பரப்பளவில் ரூபாய் *377.8* இலட்சம் செலவில் முந்திரி சாகுபடி இவ்வாண்டு மே மாதம் முதல் ஐந்தாண்டுகளுக்குள் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *8.05*

முத்தமிழ்போல் மூன்று புது நீர்த்திட்டம். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். ஏற்கனவே சிறப்புறச் செயலாக்கம் பெற்றிருக்கிறது. *1994-95* ஆம் நிதியாண்டில் கூடுதலாகக் கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம். அமராவதி பாசனத் திட்டம், கோதையார்-சித்தார் பட்டணம் கால்வாய் பாசனத் திட்டம் என மூன்று புதிய திட்டங்கள் மூலம் *6250* ஏக்கரில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் *1.5* கோடி செலவில் மேற்கொள்ளப்பட எண்ணியதெல்லாம் எய்தும் ஏற்றமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

உழவர் குழுக்களுக்கு ஒரு கோடி மானியம். மாண்புமிகு திருமதி ஜி. மணிமேகலை வைத்த கோரிக்கைக்கு விடைகொடுக்கிற திட்டம். காவிரி கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம்-ஆழியாறு மற்றும் பெரியார்-வைகைத் திட்டங்களின் பாசனப் பகுதிகளைச் சார்ந்த *1954* சங்கங்களில் உள்ள *104* இலட்சம் விவசாயிகளைக் கொண்ட *5200* உழவர் குழுக்களுக்கு ரூபாய் *100* இலட்சம் மானியம் வழங்கிட மாண்புமிகு முதல்வர் இசைவு அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகையின் உதவியால் மேற்சொன்ன திட்டங்களின் பராமரிப்புரிமை இனி உழவர்களையே சாரும். அடுத்து பழனிசாமி

கேட்டது. நீர்ப்பயன் பெருகினால்தான் நில விளைச்சல் பெருகும் என்பர். தக்க முறையில் புதிய தொழில்நுட்பம். நுண்ணிய நீர்ப்பாசனக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தமிழகம் இந்திய அளவில் இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இந்த நீர்சேமிப்பு தொழில்நுட்பத்தை விவசாயிகள் உணர்ந்திடத் தக்க பயிற்சிகள் அளிக்கப்படும். 50 அரசுப் பண்ணைகளில் இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைய ரூபாய் 7.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்துள்ளார்கள்.

கரும்புப் பயிருக்கு இப்பாசன முறை இவ்வாண்டு முதல் தொடங்கப்படும். முதற்கட்டமாக 200 ஏக்கருக்கு ரூபாய் 10 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநில அரசும் சர்க்கரை ஆலைகளும் சம அளவில் இத்தொகையை வழங்கும்.

எண்ணைப் பனை சாகுபடி திட்டத்திற்கு இப்பாசன முறைக்கென ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத் தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க இதுவரை இல்லாத உயர் அளவாக ரூபாய் 6.75 கோடி மானியம் வழங்கப்படும்—தோட்டக்கலைத் துறைக்கு முன்னுரிமையை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்— என வள்ளல் பெரு மனத்தலைவி நம் முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஊற்றுக்கண் திறக்க உதவிகள் பலகோடியில் ஆழ்கடலாய்ப் பரந்திருக்கும் அன்பும் கருணையும் கொண்டிருக்கும் நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறு-குறு விவசாயிகள் ஆழமற்ற குழாய்க் கிணறுகள் அமைக்க, கிணறுகள் தோண்ட, மற்றும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவென, மொத்தம் 3.84 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மானியம் வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பாசன நீர்க்குழாய்க்கு பயனுள்ள திட்டம். பாசன நீர் வீணாவதைத் தடுக்கும் கருத்தில் வேளாண்மைக்குரிய பம்புசெட்டுகள் வைத்திருப்பவர்கள் தத்தமது நிலங்களுக்குக் குழாய் வழியாகத் தண்ணீர் எடுத்துச் செல்ல மானியமாக 1.45 கோடி ரூபாயை இவ்வாண்டு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். 4000 ரூபாய் மானியத்தில் 5,000 டீசல் இன்ஜின்கள். மின்சாரம் இல்லாவிட்டாலுங் கூடப் பாசன முனைப்புகள் தடைப்படக்கூடாது எனக் கருதி ரூபாய் 2 கோடி மானிய உதவியில் 5,000 டீசல் இன்ஜின்கள் ரூபாய் 4,000 மானியத்தில் வேளாண் பெருங்குடி மக்களுக்கு வழங்கிட வானளவு புகழ் மேவும் வளமனத் தலைவி நம் முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பயிர் இழப்பிற்கு காப்பீடு. திரு. தம்புசாமி கொடுத்த வெட்டுத் தீர்மானத்திற்குப் பதில் இது. வானம் பொய்த்தாலும் சரி, அளவுக்கதிகமாகப் பெய்தாலும் சரி, காற்றுக்கண் சற்று கூடினாலும் சரி, கடல் சற்று எழுந்தாலும் சரி, பாடுபட்டுப் பயிரான நெல், சோளம், கம்பு, கடலை முதலிய பயிர்களுக்கு இழப்பு ஏற்பட்டுவிடுகிறதல்லவா? இத்தகைய எதிர்பாராத இழப்புகளால் தஞ்சை மற்றும் காயிதே மில்லத் மாவட்ட விவசாயிகள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகி விடுவது வாடிக்கையாகிவிட்டது.

பிற்பகல் 8.10

பாதிப்புகளில் இருந்து உழவர்களை மீட்கக் காப்புறுதித் திட்டம் இவ்விரு மாவட்டங்களிலும் பாங்குறச் செயல்படுத்தப்பட்டு 1993-ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் அதாவது செப்டம்பர் 30 வரை புயல் வெள்ளத்தால் இழப்பக்குள்ளானவர்க்கு பயிர்ப் பாதுகாப்பு ஈட்டுத் தொகை, இதுவரை தமிழகத்தில் பெற்றுத் தராத உயர்ந்த அளவு ரூ. 5.78 கோடி உழவர்களுக்குக் கிடைக்கச் செய்திருக்கிறோம். தாளடி மற்றும் கோடைப் பருவத்தில் பயிர் செய்து பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை 1994-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிடைக்கும் என்று மகத்துவமாம் நம் முதல்வர் அவர்களது இசைவோடு அறிவிக்கிறேன். கதிரடிக்க களங்கள். பயிர் வளர்த்து, கதிர்முற்றி, அறுவடையாகி, களத்து மேடு சென்றடைந்தால் உழவனுக்கு நிம்மதி. மழைக்காலத்தில் சரியான களத்துமேடு கிடைக்காமல் சாலைகளிலும், சகதி பூமியிலும் உழவர் படும் அவதியைப் போக்க, கிராமங்களில் அனைவரும் பயன்படுத்தத் தக்க சமுதாயக் களங்கள் அமைக்கப்படும் என உழவர்களுக்கு உதவும் உன்னதமாய்ச் சிறந்திருக்கும் உத்தமத் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழகத்தில் சிறப்புடன் நடைபெற்று வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 120 சந்தைக் கூடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்த நிதியாண்டில் முதற் கட்டமாக 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு நிலம், கட்டிடம் அமைய மொத்தம் 1.5 கோடி செலவில் ஆவன செய்யப்படும்.

தமிழ்த் தரணியில் புகழ்ப் பரணி இயற்றிவரும் புதுமைச் சிற்பி புரட்சித் தலைவி அவர்களின் இசைவு இதற்கு கிடைத்திருக்கிறது. விளைபொருள் காக்க குளிர்பதன நிலையம். கனியிருப்பக் காய் கவர்தல் முறையல்ல. ஆனாலும் விளையும் கனிகளும், காய்கறிகளும் வீணாவதும் நல்லதல்ல. விளைச்சலைப் பெருக்கிய நாம் கனிகளையும் காய்களையும் வீணாக்கி விடலாமா? ஆகவே தக்க முறையில்

தானியங்கள், கனிகள், காய்களைச் சேமித்து உரிய நிலைக்கு உற்பத்தியாளர் விற்று லாபங்காணச் சரியான ஏற்பாடுகள் அவசியமாகின்றன. தமிழுலகாளும் நம் தலைவி இம்மாமன்றத்திற்கு உறுப்பினராக்கிப் பெருமை கொண்ட தருமபுரி மாவட்டத்திற்கு மாம்பழங்களுக்கென ஒன்றும், நீடு துயில் நீக்கப் பாடிவந்த பெருநிலவாம் பேரறிஞர் அண்ணாவின் பெயர் கொண்ட திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு காய்கறிகளுக்கென ஒன்றும், பட்டிதொட்டி எல்லாம் அலைந்து பகுத்தறிவு பரப்பினாலும், தமிழகத்தின் மையமெனத் தந்தை பெரியார் தேர்ந்தெடுத்துத் தங்கி பணி தொடர்ந்த திருச்சி மாவட்டத்திற்கு வாழைப்பழங்களுக்கென ஒன்றும் என மூன்று குளிர்பதனச் சேமிப்பு அமைய கொடுத்துச் சிவந்த செங்கை எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசு, எடுத்ததெல்லாம் வெற்றியாய் முடித்திடும் திருமகள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

உணவு பதப்படுத்த 'தாய்', உணவு பதப்படுத்தல், அதன் வழி ஏற்றுமதிக்கு உதவுதல் ஆகிய இரு முனைக் கொள்கையோடு தமிழகத்தில் 'தாய்' நிறுவனத்தை உணவு பதப்படுத்தும் துறைக்கான தொழில்கள், உதவிகள் வழங்கும் ஒருமுனை அமைப்பாக்க இவ்வரசு கருத்தில் கொண்டு, ஆரம்ப நடவடிக்கைகளுக்கு இந்நிதியாண்டில் ரூ. *3.5.* இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை உவப்புடன் மாண்புமிகு முதல்வர் அனுமதியோடு இதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிக்கும் தேனுக்கு இத்தாலிய தேனீ. நீருயர நெல்லுயரும் என அறிந்துள்ளோம். தேனீ பெருகச் சூரியகாந்தி, எள் மற்றும் பழமகசூல் *20%* கூடுகிறது என்பது இப்போது அறிவியல் உண்மை. பஞ்சாப் ஹரியானா மாநிலங்களில் இப்படிப் பயன்பெருக்கிச் சுவைத்தேனும் தேனடையும் அளித்து ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி அதிகம் அளிக்கும் இத்தாலிய வகை ஏபீஸ் மெல்பரா தேனீக்கள், நம் மாநிலத்தில் அறிமுகப்படுத்தவும், வேளாண் பல்கலைக் கழகம் மூலம் தேனீ வளர்ப்புக்கு உரிய பயிற்சி அளிக்கவும் இந்நிதியாண்டில் ரூபாய் *3* இலட்சம் ஒதுக்கீடு செய்யத் தேனீ போலத் தினமும் சுறுசுறுப்பாய் உழைத்துவரும் திராவிடத்துச் சுடரொளி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனிய ஆணையை வழங்கியிருக்கிறார்கள்.

மரவள்ளிக்கு அடிப்படை விலை. சேலம், திருச்சி, தென்னாற்காடு வள்ளலார் விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார், வடாற்காடு அம்பேத்கார், தருமபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மொத்தம் *87* ஆயிரத்து *500* ஹெக்டேர் பரப்பில் மரவள்ளிக் கிழங்கு

பயிரிடப்படுகிறது. அரும்பாடுபட்டு இப்பயிர் வளர்க்கும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில் ஏற்பட்டுள்ள இடர்களைக் களைய முதலில் மரவள்ளிக் கிழங்கினை வேளாண்மை விளைபொருளாக அறிவிப்பு செய்ததன் மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சரி விலைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். உற்பத்தியாளர், சாகோ தொழிலதிபர்கள், அரசு ஆகிய முத்தரப்பும் கலந்து ஒப்புக்கொள்ளக்கூடிய விலை நிர்ணயம் செய்வதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு விலை குறித்த நம்பிக்கையும், விலையில் ஏற்ற இறக்கம் இல்லாச் சமநிலையும் ஏற்படுத்தக் கருதியிருக்கிறோம்.

பிற்பகல் *8.15*

சிறப்பு வசதிகளுடன் கிராமச் சந்தைகள். கிராமப்புறச் சந்தைகள் பலவற்றில் விவசாயிகள் தங்கள் பொருட்களை நேரடியாகக் கொண்டு வந்து விற்பனை செய்யப்போதிய வசதிகளில்லை. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையே இடைத் தரகர்கள் புகுந்து லாபத்தைக் கவர்ந்து சென்றுவிடுகிறார்கள். விவசாயிகள் தமது விளைபொருட்களை கிராமச் சந்தைகளில் விற்பனை செய்ய ஏதுவாக அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர இவ்வரசு விழைந்துள்ளது. நிதியாதாரம் மிகுந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் இவ்வகையில் உதவிட ஏற்பாடு செய்யப்படும்.

கோவை, மதுரை, திருச்சி, தஞ்சை, செங்கை--எம்.ஜி.ஆர். ஆகிய ஐந்து மாவட்டங்களில் தொடக்கமாக இத்தகைய சந்தைகள் *1.25* கோடி ரூபாய் முதலீட்டில் விரிவு படுத்தப்படும் என்பதனை புதிய திட்டங்களாக இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கின்றேன்.

தமிழ்த் திருநாடு செய்த தவப்பயனாய் ஆண்டு வரும் புகழ்ச் சிகரமே! புரட்சித் தலைவியே!

உங்கள் பொற்கால ஆட்சியிலே, புவி குளிர நல் மழை பெருகிப் பயிர் வளர, உயர்ந்த நல்மகசூல் தட்டாமல் பல சலுகையால் விவசாயிகளுக்கு கிட்டாத நன்மை உண்டோ? என மகிழ்ந்து எக்காலமும் இதய தெய்வம் ஆள வேண்டி—உழவர் ஏர்க்காலில் எழுதுகிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் காலத்திலே அந்தகக் கவிராயர் என்று ஒருவர் உண்டு. அவர் விட்டால் பாடிக்கொண்டேதான் இருப்பார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: முடியப்போகுதுங்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது ஒருவர் போதும் நிறுத்துங்கள் என்று சொல்லவேண்டும், பாடலாம் என்று சொன்ன உடனே பாட ஆரம்பிக்கின்றவர்கள் யாராவது போதும் என்று சொல்கின்ற வரைக்கும் பாடிக்கொண்டே இருப்பாராம். அதுபோல உங்களுக்கு கவிதை வந்துகொண்டே இருக்கின்றது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லைக்கு வந்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: எல்லோரும் வாழ்த்துகிறார் எனக்கூறி வணக்கமுடன் என் உரை நிறைவு செய்கிறேன். வாழ்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வளர்க, தொடர்க அவர்கள் கொற்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறையின் மீது, இந்த வேளாண்மைத் தொழிலிலே ஈடுபடக் கூடிய உழவர் பெருமக்கள் மீது, அவர்கள் வாழ்வு வளம்பெறவேண்டும் என்ற உயரிய கருத்தோடு எண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர் எஸ். சண்முகநாதன், திரு. என். ஆர். சிவபதி, திரு.ஜி. பழனிசாமிதிரு. பி. சொக்கலிங்கம், திரு. வே. தம்புசாமி, திரு. இராம. இராமநாதன், டாக்டர் வெ. புருஷோத்தமன், திரு.கே.ஆர்.ராஜூ, திரு .ப. கலியபெருமாள், டாக்டர் சு.மணிமேகலை, திரு. நா. சா. பழனிசாமி, திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் இவர்கள் எல்லோரும் இந்தத் துறையைப் பற்றி அவர்களுடைய கருத்துக்களை இங்கே தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

இருப்பினும் அவர்களுடைய கருத்துக்கள் அவையினுடைய குறிப்பேட்டில் பதிவாகியிருக்கும். அவைகளை இந்தத் துறை பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கும். எனவே இந்தத் துறையின் மீதான வெட்டுத்தீர்மானங்களைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பழனிசாமி அவர்களும், திரு.தம்புசாமி அவர்களும் திரும்பப்பெற்று அரசு கோரிய தொகையை அனுமதிக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன எல்லோரும் கை தூக்கிவிட்டீர்கள். இன்னொரு அமைச்சர் பதிலுரையும் இருக்கிறது.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளவுக்கு, - அந்த அளவுக்கு - கவி பாடாவிட்டாலும், விஷயங்கள் நிறைய சொல்லக்கூடியவர்கள். அந்த அளவுக்கு விஷயங்களோடு தன்னுடைய பதிலுரையைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர் கோவிலாய் அடியேன் நெஞ்சில் இருளுக்கு ஞாயிறாய், எமது உயிர் நாடாம் பயிர்க்கு மழையாய் இங்கு பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப் பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்சுருளுக்கு நெருப்பாகி விளங்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவியைத் தொழுது நிற்பேன்.

மலையின் அடிவாரத்தில் நின்றுகொண்டிருந்த என்னை மலையுச்சியில் கொண்டுபோய் நிறுத்திய காவியத் தலைவி, எமது புரட்சித் தலைவி அவர்கள், என் வாழ்க்கை முழுவதும் அவருக்கே அர்ப்பணம். என் வாழ்நாள் அனைத்தும் அவருக்குச் சேவை செய்யவே பயன்படும். என்னை வாழ வைக்கும் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு என் நன்றியைத் தெரிவித்து பால்வளம் மற்றும் கால்நடைத் துறை மானியக் கோரிக்கை மீதான எனது உரையைத் துவக்குகிறேன்.

பிற்பகல் 8.20

தமிழ்நாட்டில் பால்வளத் துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதனுடைய நிர்வாக அமைப்பு, அடிப்படையில் கிராம அளவில் பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியமாகவும், மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின்கீழ் சுமார் பத்தாயிரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவைகளில் சுமார் 25.22 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1992 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 11.36 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்தோம். இன்றைய தினத்திலே, புரட்சித் தலைவியினுடைய மேற்பார்வையில் இந்தச் சங்கங்கள் 15.50 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியைக் கொள்முதல் செய்கிறது. புரட்சித் தலைவியுனுடைய ஆட்சியிலே—ஏற்கெனவே இருந்த ஆட்சிக்கும் தற்போது நம்முடைய ஆட்சியில் ஒரு நாளைக்கு 4.50 இலட்சம்

லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்குப் பொறுப்பு ஏற்ற பிறகு பால்வளத் துறை சாதனை படைத்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். 1991--92 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 11.36 இலட்சம் லிட்டர். இதில், ஆவின் நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட பால் 11.35 இலட்சம் லிட்டர். 1993-94 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 15.50 இலட்சம் லிட்டர். விற்பனை 13.37 இலட்சம் லிட்டர். விற்பனை ஆகாத பால், பவுடராக மாற்றப்பட்டுள்ளது. பாங்கதும் நிறைந்த வள்ளல் பெரும் பசுக்கள் என்று பாசுரத்தில் சொல்லி இருப்பது போல இன்றைக்கு தமிழகத்தில் பால் உற்பத்தி சாதனை படைத்து வருகிறது. குஜராத் பால் பண்ணையை மாதிரியாகக் கொண்டு இயங்கும் நம்முடைய பால்வளத் துறை புரட்சித் தலைவியினுடைய ஆலோசனைக்கு இணங்க இப்பொழுது குஜராத் ஆனந்த் பால் பண்ணையை மிஞ்சுகின்ற அளவுக்கு இப்போது பால்வளத்துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுகர்வோர்களுக்கு பால் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணையில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது 166 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டம் இந்த ஆண்டு முடிவில் 250 தானியங்கி நிலையங்களாக உயர்த்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சென்னையிலே 7.32 இலட்சம் லிட்டர் பால் சென்ற ஆண்டு விற்பனை செய்யப்பட்டது. இந்த வருடம் 7.80 இலட்சம் லிட்டராக அது உயர்ந்திருக்கிறது. அதாவது 50 ஆயிரம் லிட்டர் பால் விற்பனையை ஒரு நாளைக்கு அதிகரித்து இருக்கிறோம்.

பால் உற்பத்திக்கு ஆகும் செலவினை கருத்தில்கொண்டு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் பாலின் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 1992--ல் ஒரு லிட்டர் பாலின் கொள்முதல் விலை 4 ரூபாய் 70 காசு. பால் உற்பத்தி செலவை கருத்தில்கொண்டு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்

1.5.93 முதல் ஒரு லிட்டர் பாலின் கொள்முதல் விலையை 5 ரூபாய் 46 காசுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். எருமைப்பாலுக்கு ஏற்கெனவே ரூ.6.40 கொடுத்துக்கொண்டு இருந்தோம். இப்போது ரூ.6.76 கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் பால் உற்பத்தி செய்யும் சுமார் 25 லட்சம் விவசாயிகள் பலன் அடைந்ததோடு மட்டுமல்லாது பால் உற்பத்தியும் அதிகரித்து உள்ளது. இன்றையதினத்திலே, சென்னையிலே ஒரு லிட்டர் பால் பாலிதீன் உறையில் 7 ரூபாய்க்கும் தானியங்கி பால் விற்பனை நிலையத்தின் மூலம் 7 ரூபாய் 50 காசுக்கும் விற்கப்படுகிறது. இது மிக மிக குறைந்த விலை. அடுத்த மாநிலத்தில் பாலின் விலை அதிகமாக விற்கப்படுகிறது. தனியார் நிறுவனங்களில்கூட சென்னையிலே ஒரு லிட்டர் பால் 9 ரூபாயிலிருந்து 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. டெல்லியில் ஒரு லிட்டர் பாலின் விலை 10 ரூபாய். பம்பாயில் 9 ரூபாய். கல்கத்தாவில் 8 ரூபாய். பெங்களூரில் ரூ.8.50. ஹைதராபாத்தில் 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இன்றையதினத்திலே சென்னையிலேகூட ஒரு லிட்டர் சுத்தமான தண்ணீர் பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நம்முடைய அரசு ஆவின் பால் விலையை ஒப்புநோக்கும்போது ஆவின் பால் மிகவும் குறைவான விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் பச்சிளம் குழந்தைகளுக்கு பருகுவதற்கு பசும் பால், ஆவின் பால் தட்டுப்பாடு இன்றி கிடைக்கிறது. முந்தைய ஆட்சியில் பாலுக்கும் பற்றாக்குறை. சென்னை நகர மக்கள் பால் கார்டு வாங்குவதற்கு முந்தைய ஆட்சியில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இப்பொழுது அந்தக் கஷ்டங்கள் இல்லை. இன்றைக்கு நாள் முழுவதும் பால் கிடைக்கிற சாதனையைச் செய்திருக்கிறோம். சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவி அரசின் சாதனையை நல்ல உள்ளம் படைத்தோர் பாராட்டுகிறார்கள்.

பால் பதனிடும் தொழிற்சாலை, இன்றையதினத்திலே, மூன்றாம் பால் பெருக்கு திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 4.00 இலட்சம் கொள்திறன் கொண்ட புதிய பால் பண்ணை சோளிங்கநல்லூரில் ரூ.24.80 கோடி செலவில் கட்டப்பட்டிருக்கிறது. இது இன்னும் 3 மாதத்தில் செயல்படத் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் திறன் கொண்ட பால்பவுடர் ஆலை பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் ரூ.9.00 கோடி செலவில்

கட்டப்பட்டு, கடந்த ஜூலை மாதத்திலிருந்து இது செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலை—சம்புராயர் மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு தற்போது 30,000 லிட்டர் கொள்திறனிலிருந்து 1,00,000 லிட்டராக விரிவாக்கம் செய்யப்படுகிறது. வடஆற்காடு— அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள அனகாவூர் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி பால் பண்ணை நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறனிலிருந்து 1.50 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. திருச்சியில் புதிய பால் பண்ணை மற்றும் விழுப்புரத்தில் புதிய பால் பண்ணை கட்டுமானப் பணிகள் நடந்து வருகிறது.

பிற்பகல் 8.25

பால் பொருள்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் ஆவின் சமையல் வெண்ணெய் டில்லியில் விற்பனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் ஆவின் பால் பொருட்களை விற்பனை செய்வதற்காக அகமதாபாத், டெல்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், ஐதராபாத், ஜோத்பூர், போர்ட் ப்ளேயர் ஆகிய இடங்களில் முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்நாட்டிலுள்ள மாவட்டத் தலை நகரங்களிலும் ஆவின் பால் பொருட்களை விற்பனை செய்வதற்காக முகவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே நம்முடைய பால் விற்பனை அதிகரித்ததுபோல், பால் பொருட்கள் விற்பனையையும் ஆவின் நிறுவனம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் வெண்ணெய் 1160 மெட்ரிக் டன் விற்பனையானது, இந்த ஆண்டு 1418 மெட்ரிக் டன் விற்பனை செய்திருக்கிறது. நெல் கடந்த ஆண்டு 2317 மெட்ரிக் டன் விற்பனையானது, இந்த ஆண்டு 4284 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதைப்போல பால் பவுடர் கடந்த ஆண்டு 5.80 மெட்ரிக் டன்னும், இந்த ஆண்டு 82.06 மெட்ரிக் டன்னும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. எனவே விற்பனையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி மிகுந்த சாதனையை உருவாக்கி இருக்கிறது. இந்தச் சாதனையின் காரணமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனையைப் பெற்று சீரிய நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வந்த ஆவின் நிறுவனம் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு 6

கோடி ரூபாய் லாபத்தை ஈட்டி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடு வாங்க மத்திய அரசு சிறப்பு உதவியுடன் 'தாட்கோ' மூலம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டு வருகிறது. 1992-93 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 9033 விவசாயிகளுக்கு 18066 கறவை மாடுகள் வாங்க ரூ. 406.50 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. இதைப்போல 1993-94 ஆம் நிதியாண்டில் 9333 விவசாயிகளுக்கு 18666 கறவை மாடுகள் வாங்க ரூ.420 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு—1994-95ஆம் நிதியாண்டில் 10738 விவசாயிகளுக்கு 21476 கறவை மாடுகள் வாங்க ரூ.483.21 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன் கொடுப்பதே இல்லை, அதை நிறுத்திவிட்டார்கள்போல இருக்கிறது என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட எண்ணம், இந்த அறிவிப்பினால் அவருக்கு நீங்கி இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஏற்கெனவே துணைப் பதிவாளர் மூலமாக் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்கப்பட்டது. இப்போது மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தி கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் 31.3.92 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் திட்டத்தின் மூலமாக நல்ல பசுங்கன்றுகளை உருவாக்கி, அதன்மூலம் நல்ல பசுக்களை உருவாக்கிக்கொண்டிருந்தோம். ஆனால் மத்திய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இப்போது முன்வரவில்லை என்ற காரணத்தால், இதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துச் சொன்னதற்கிணங்க, இப்போது மாவட்ட ஒன்றியங்கள் மூலமாக, அந்த நிதியிலிருந்து. இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே மகளிர் மேம்பாட்டுக்காகப் பலவேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இன்றைய

தினம் ஒரு புதிய அறிவிப்பினைச் செய்ய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய சத்துணவுக்கூடங்களில் பொறுப்பாளர்களாகவும், அமைப்பாளர் களாகவும் மகளிர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதைப்போல கல்வித் துறையிலே ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை கல்வி போதிக்கும் பணியை பெண்கள்தான் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். இவைகள் எல்லாம் படித்த பெண்களுக்கு. கிராமப்புறங்களிலே இருக்கிற படிக்காத வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் ஓர் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி இனிமேல் கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என்று ஏற்கெனவே நாம் வைத்திருந்தோம். இப்போது விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், திருவண்ணாமலை–சம்புவராயர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற சில மாவட்டங்கள் உருவாகி இருக்கிற காரணத்தால், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதிய மாவட்டங்களில் எல்லாம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களை நிதியாதாரத்தின் அடிப்படையில் சாத்தியக்கூறுகள் இருப்பின் அமைக்க வேண்டுமென்று உத்திரவிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 8.30

உலகத் தமிழ் மக்களின் விடிவெள்ளி, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் நல்லாட்சியில் தமிழக முதல்வரின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி அதன்மூலம் கால்நடைகள் வளர்ப்போரின் வருமானத்தை அதிகரிக்கச்செய்யும்பொருட்டு, பற்பல வழிகளில் நல்லபல திட்டங்களைத் தீட்டி, கால்நடை பராமரிப்புத்துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

[திரு. தே. ஜனார்தனன்] [1994 ஏப்ரல் 20

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க, கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை அளித்தல், இனவிருத்தி மற்றும் தீவனப்பயிர் அபிவிருத்தி, கால்நடைப் பராமரிப்பில் நல்ல தொழில் நுட்ப முறைகள் கையாளப்பட, விரிவாக்கப்பணி போன்ற செயல்பாட்டினை ஆற்ற பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் *46* வது பிறந்த நாளை முன்னிட்டு, *46* ஆயிரம் கிடேரிக் கன்றுகளைத் தத்தெடுக்கும் திட்டத்தை இப்போது இத்துறை செயல்படுத்த உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அனாதைக் குழந்தைகளுக்குத் 'தொட்டில் குழந்தை திட்டம்' அறிவித்ததைப் போல, வறுமையின் காரணமாகக் கிடேரிக் கன்றுகளை சரிவர வளர்க்க இயலாமல் சிரமப்படும், நாடு முழுவதுமுள்ள கிராமப்புற ஏழை விவசாயிகளின் *46* ஆயிரம் கிடேரிக் கன்றுகளை, அரசே தத்தெடுத்து வளர்த்து, திடமான *46,000* பசுக்களாக அவற்றை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதைப்போலவே, கோவை கால்நடை பெருமருத்துவமனை இன்றைக்கு கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நவீன மருத்துவக் கருவிகளைக் கொண்டு *24* மணி நேரமும் இயங்கும் மருத்துவமனை மனிதர்களுக்கு இருப்பது போலவே, வாயில்லா ஜீவன்களுக்கும் இருக்கவேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து, கடந்த ஆண்டு சைதாப்பேட்டையிலே *24* மணி நேரமும் செயல்படுகின்ற வகையில் ரூ.*7.04* இலட்சம் நிதி ஒதுக்கி, தமிழகத்திலேயே முதன்முதலாக நவீன உபகரணங்கள் மற்றும் எக்ஸ்ரே போன்ற பிரிவுகளுடன் செயல்பட, அரசாணையை வழங்கினார்கள். அதேபோல, இன்றைய தினத்திலே, *4.83* இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கோவை நகரிலும் அப்படிப்பட்ட மருத்துவமனையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள, நாய் வளர்ப்புப் பிரிவு மேலும் விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறபோது, நன்றிக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ள செல்லப் பிராணி நாய் என்றாலும், காவலுக்கும் மிக ஏற்றதொரு வளர்ப்புப் பிராணி. செல்லப்

பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களுக்கு, பொது மக்களிடையே பெரும் தேவை ஏற்பட்டுள்ளது. சென்னை, சைதாபேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் பாரம்பரியம் மிக்க நாய்களான கோம்பை, இராஜபாளையம் போன்ற இன நாய்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கவும், அந்த இன நாய்களின் தனித் தன்மை, சிறப்புக்கள் ஆகிய குணங்களின் காரணமாக அந்த இன நாய்களை இத்துறையின் மூலம் வளர்க்க, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றையதினம் அரசாணை வழங்கினார்கள்.

அதன் அடிப்படையில் அந்த இன நாய்கள் இப்போது சைதாப்பேட்டையில் பராமரிக்கப்பட்டு, இனப்பெருக்கம் செய்து குட்டிகள் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. கோம்பை, இராஜபாளையம் இன நாய்க்குட்டிகளை சைதாப் பேட்டையிலிருந்து பெறுவதற்கு, அந்த குட்டிகள் பிறப்பதற்கு முன்னதாகவே, பதிவேட்டில் பதிவு செய்து இரண்டாண்டுகளுக்கு மேலாகக் காத்திருக்கக்கூடிய சூழ்நிலை தற்போது உள்ளது. பெரிதும் புதுமையை விரும்பும் மக்கள் தற்போது லேபர்டார், கூலி, மற்றும் டாபர்மேன் போன்ற இன நாய்களை வளர்க்க விரும்புகின்றனர். இதனையறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சைதாப்பேட்டை நாய் வளர்ப்புப் பிரிவில், லேபர்டார், கூலி, டாபர்மேன் போன்ற நாய் இனங்களைப் பராமரித்து, இனப்பெருக்கம் செய்து குட்டிகளைக் கோரும் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அளிக்க முடிவெடுத்து, மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதே மகேசன் சேவை என்று கருதும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ரூ.2.61 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டில் 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் கலப்பின, தரம் உயர்த்தப்பட்ட மாட்டு இனங்கள் நிறைய உள்ள முக்கிய நகரங்களில் செயல்பட்டு வருகின்ற கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி, சிகிச்சைக்கான மருந்துகள் வாங்க அதிக நிதி ஒதுக்கிடு செய்து, ரூ.40,000 மற்றும் வெளியூரிலிருந்து சிக்ச்சைக்காக கொண்டு வரப்படும் கால்நடைகளைத் தொடர் சிக்ச்சை பெற உள்நோயாளி இருப்பிட வசதி ஆகியவைகளை உருவாக்க, நடப்பாண்டில் ரூ.2.51 இலட்சம் நிதி ஒதுக்கி, 10 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தி புரட்சித்தலைவி அவர்கள் ஆணையளித்துள்ளார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தின்படி, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் குடியாத்தம், திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், பெரியார் மாவட்டத்தில் கவுந்தப்பாடி, கோவை மாவட்டத்தில் கோயில்பாளையம் மற்றும் மதுக்கரை, தஞ்சை மாவட்டத்தில் பாப்பாநாடு, நாகை காயிதேமில்லத் மாவட்டம் கொரடாச்சேரி, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரவநல்லூர் மற்றும் மதுரை மாவட்டம் மேலூர், ஆகிய ஊர்களில் உள்ள 10 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருந்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 8.35

கால்நடைப் பண்ணைகளிலிருந்து தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்தல்: வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களை பெற வேண்டுமானால் கால்நடைகளின் இனப் பெருக்கம் திட்டமிடப்பட்டு நடைபெற வேண்டும். தற்போது கால்நடை பராமரிப்புத் துறை மாநிலம் முழுவதும் 2770 செயற்கை முறை கரு ஊட்டல் நிலையங்கள் மூலம் பசு மற்றும் எருமை இனங்களுக்குத் தேவையான இனப் பெருக்க வசதிகளை அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் இனப்பெருக்கம் செய்யத் தகுதி வாய்ந்த 47 லட்சம் பசுக்களும் எருதுகளும் உள்ளன. கால்நடை நிலையங்களிலிருந்து தொலை தூரத்தில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தத்தம் கால்நடைகளை இனப் பெருக்கம் செய்ய, அவற்றை செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்ல இயலாத நிலையில், நாட்டு பொலி காளைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்து வருகின்றனர். இதனால் அந்தக் கால்நடைகளின் பால் உற்பத்தித் திறன் அதிகரிப்பது இல்லை. இந்த நிலை இந்த மாநில கால்நடைகளுக்கு வரக் கூடாது என்ற உயர்ந்த எண்ணம் கொண்டு இந்த விவசாயிகளும் பயனடையும் வகையில் எட்டாத் தொலைவிலுள்ள கிராம விவசாயிகளுக்குத் தரமான பொலி காளைகளை நியாய விலைக்கு அளித்து, அதனை அவர்கள் உள்ளூர் கால்நடைகளுக்கு இனப் பெருக்கம் செய்யப் பயன்படுத்த வகை செய்ய இப்போது அரசு உத்தரவிட்டுள்ளது. அதனால் நாட்டு மாடுகளை இந்த தரமான பொலி காளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து பால் உற்பத்தித் திறனை உயர்த்தவும் விவசாயிகளின் வருவாயை உயர்த்தவும் வழி ஏற்படும். இத்திட்டத்திற்கு 100 பொலி காளைகள் இத்துறையின் மாவட்ட கால்நடை

பண்ணைகளின் மூலம் வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலிருந்து ஏழை விவசாயிகளுக்கு பசுந்தீவனம் விநியோகம் செய்தல்: 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்பது மணிமேகலை காப்பியம். மனிதர்களுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் கால்நடைகளுக்குத் தீவனம். நம் நாட்டில் பசுந்தீவனம் என்று தனிப்பட்ட முறையில் அதிகம் இல்லை. மனிதர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதுபோல, வாய் பேச முடியாத கால்நடைகளுக்கும் தமக்குத் தேவையான பங்கீட்டினைப் பெற வேண்டும் என்ற நோக்குடன் பெரும் கருணை உள்ளம் கொண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'புரட்சித் திட்டம்' ஒன்றினை செயல்படுத்த உத்திரவிட்டு உள்ளார்கள். விவசாயிகளினால் வளர்க்கப்படும் கறவை மாடுகள் தேவையான தீவனமும், பசுந்தீவனமும் அளித்து வளர்க்கப்பட்டால்தான் பொருளாதார ரீதியில் லாபகரமாக இயங்க முடியும்; தேவையான அளவு பசுந்தீவனம் அளிப்பதன் மூலம் இப்போது விவசாயிகள் குறைந்த செலவில் அதிக பால் உற்பத்தி செய்ய முடியும். விவசாயிகளும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களும் தேவையான பசுந்தீவனங்களை உற்பத்தி செய்து நமது கால்நடைகளுக்குப் பயன்படுத்த இயலுவது இல்லை. அதனால் கால்நடை பராமரிப்புத் துறை முதல்கட்டமாக ஒசூர், ஈச்சங்கோடு, கொருக்கை மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலிருந்து ஏழை விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு பசுந்தீவனத்தை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது. இதன் மூலம் ஏராளமான ஏழை விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் செம்மறி பொலி கடா உற்பத்தி செய்வதற்காக 5 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு மாநில, மைய அரசு சம பங்கு நிதி ஒதுக்கி உள்ளது.

சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் முயல் பண்ணை—வளர்ப்புப் பண்ணை அமைக்கப்பட ரூபாய் 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலும் மைய மாநில அரசின் பங்கு, சம பங்காக இருக்கும்.

சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் வெள்ளாட்டுப் பண்ணை அமைத்தல். இதற்காக 5 இலட்சம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். இதிலும் மைய மாநில அரசின் சம பங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

உறைவிந்து வங்கிகள் உருவாக்குதல்: இந்த உறை விந்துகளின் குச்சிகளை பல ஆண்டுக்காலம் சேகரித்து வைக்க ஏதுவாக நமது மாநிலத்தில் ரூ. 74 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் சிவகங்கை, கடலூர், சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் அதற்கான கட்டிடங்களும் உபகரணங்களும் நிறுவப்பட்டு, 1994-95 ஆம் ஆண்டு செயல்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டேனிடா உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம்: புதுக்கோட்டையில் கால்நடை அபிவிருத்திக்காக 4.40 கோடியில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, அதில் இளம் தம்பதியர்களுக்கு பயிற்சி கொடுத்து, அந்தப் பயிற்சியின்போது அவர்களுக்கு இலவச தங்கும் இடம், இலவச உணவு கொடுத்து, அந்தப் பயிற்சி முடிந்த பிறகு அவர்களுக்கு ஒரு சைக்கிளும் கொடுத்து, அவர்கள் பெற்ற பயிற்சியின் மூலமாக கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு கால்நடை சம்பந்தமான நோய், அல்லது வளர்ப்பு சம்பந்தமான சந்தேகங்களை நீக்க, கால்நடையைப் பெருக்குகின்ற வகையிலே அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டம் கொளத்தூர் தாலுகாவில் அன்னவாசல், குன்னாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஆகிய 3 பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

ஐரோப்பிய பொருளாதார நித உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்: இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 1366 லட்சம் ஆகும். இதில் 931 லட்சம் ஐரோப்பிய பொருளாதார நிறுவனத்தின் முதலீடும் எஞ்சியுள்ள 437 லட்சம் மாநில அரசும் வழங்குகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டம் முடிவடையும் தருவாயில் இருந்தது. நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் முயற்சியின் காரணமாக மேலும் இத்திட்டம் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 8.40

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும்— இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். கால்நடை மருந்தகக் கட்டிடம் அமைத்தல். பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களாட்சி நடத்தி வரும் நமது தமிழக முதல்வர் அவர்களிடம் அன்றாடம் வேண்டுகோள் வைத்துக்கொண்டு உள்ளார்கள். அந்த வேண்டுகோளை நிறைவேற்றுகிற வகையில் நமது இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு கால்நடை மருந்தகக் கட்டிடம் வீதம் கட்டுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மனமுவந்து இசைவு அளித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு இதற்காக ரூ.231 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தமிழகத்தில் புதியதாக 386 கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டம் முதல் கட்டமாக நடப்பாண்டில் ஊராட்சி ஒன்றிய அளவில் கட்டப்படுகிறது. இரண்டாவது கட்டமாக ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கால்நடை மருத்தகக் கட்டிடம் என்ற முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டப்படும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள்.

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் தன்னுரிமையாட்சியுடன் செயல்பட வேண்டுமென்று இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவிட்டு இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. இராமநாதன் அவர்கள் பேசுகிற நேரத்தில் இராணிப்பேட்டையில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் தன்னுரிமையாட்சியுடன் செயல்பட்டால்தான் சிறந்த முறையில் செயல்பட முடியும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். இது குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டு இருக்கிறார்கள். இனி இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் தன்னுரிமையாட்சியுடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கால்நடை மருத்துவ் அறிவியல் பல்கலைக்கழகம். தமிழகத்தின் தங்கத்தலைவி, தரணி போற்றும் தமிழ்த்தாய், மங்கையருள்

மாணிக்கம், மாசில்லா ஞானதீபம், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி நடத்தும் நல்லாட்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சாதனைகள் பலப்பல. நேரங்கருதி சுருக்கமாகச் சிலவற்றை இம்மாமன்றத்தில் எங்கள் இதய தெய்வத்திற்கு காணிக்கையாக சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் எனும் முப்பணிகள் கொண்ட இத்தனியொரு பல்கலைக்கழகத்திற்கு தங்குதடையின்றி வாரி வழங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெருமுயற்சிகளின் காரணமாக 1993-94ஆம் ஆண்டில் கோழிகள் நகரம் என்று அழைக்கப்படும் நாமக்கல்லில் கோழிகள் சம்பந்தப்பட்ட எட்டு துறைகளில் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். புரட்சித்தலைவி அவர்களால் நாமக்கல் வாழும் மக்களுக்கு பரிசாக அளிக்கப்பட்ட நாமக்கல் கல்லூரி, நமது காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பேராதரவு காரணமாக பட்ட மேற்படிப்பு தொடங்கியுள்ளது என்பது ஒரு வரலாறு காணாத சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

பாரதத்தில் எந்த கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் இல்லாத உயிர்த் தொழில் நுட்பவியல் துறை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நிறுவியதோடல்லாமல் இத்துறையை பாரோர் போற்றும் துறையாக்கிய பெருமை நம்முடைய தன்னிகரற்ற தலைவியையே சாரும்.

மகளிருக்கு முன்னுரிமை கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும் மங்காத புகழ்கொண்ட மாமணி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவின்பேரில் 300-க்கும் மேல் கால்நடை மருத்துவம் பயிலும் மாணவிகள் நலன் கருதி அவர்கள் தங்க இன்னுமோர் விடுதி கட்ட ரூபாய் பத்து இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் மாமன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பல்கலைக்கழகத்தின் சேவைகளை மத்திய அரசு மிகவும் பாராட்டி நோய் ஆய்வு கையேடு ஒன்றை வெளியிடும் வாய்ப்பை இப்பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பல்கலைக்கழகம் மைய அரசின் உயிர்த்தொழில் நுட்பவியல் துறையிடமிருந்து ஆராய்ச்சித் திட்டங்களை பெற்று அதன்மூலம்

கோழிப் பண்ணையாளர்களின் துயர்துடைக்க, இராணிக்கெட் என்னும் கோழிக் கழிச்சல் நோயைத் தடுக்க பாரதத்திலேயே முதன்முதலாக பாலூட்டி செல் தொடர்களில் இரண்டு புதிய தடுப்பு மருந்துகளை உருவாக்கியுள்ளது என்பதை பேருவுகையுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே போல் மூன்று நோய் ஆய்வகப் பெட்டகங்களையும் வெளியிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம் பல்கலைக்கழக மத்திய ஆய்வுக் கூடத்தை தேசிய ஆய்வுக் கூடமாக மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் சுபிட்சத்தைத் தெரிவிக்க ஔவை பிராட்டியார் 'வரப்புயர' என்று கூறி விவசாயத்தின் பெருமையை அன்று எடுத்துக் கூறினார்கள். இன்று மாறிவரும் சூழ்நிலையில் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் கால்நடைகளின் முன்னேற்றத்தில் அடங்கியிருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இதை அறிந்துதான் நமது தானைத்தலைவி, தமிழகத்தின் நந்தா விளக்கு, தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழகத்தின் தன்னிகரற்ற முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு இப்பல்கலைக்கழகத்திற்காக ரூ. 317 இலட்சம் அளவில் 30-6-1993 அன்று பல கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைநோக்குடன் செயல்படும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1994-95-ல் இப்பல்கலைக்கழகத்தில் ரூ.30.5 இலட்சம் செலவில் 15 ஆராய்ச்சித் திட்டங்களைத் தெரிந்தெடுத்து செயல் படுத்த வேணடுமென ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 8.45

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பேராதரவைத் தொடர்ந்து பெற்றுவரும் இப்பல்கலைக்கழகம் எதிர்காலத்திலே பாரதத்திலே தனிச் சிறப்புடையதாக இருக்கும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தானைத்தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசைக் குறைகூறுபவர்கள் கூட, இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு, இதனை முன் மாதிரியாக வைத்துக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் ஓல்கலைக்கழகம் ஆசியாவிலேயே தனித்தன்மை வாய்ந்த ஒரே பல்கலைக்கழகமாகும். தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சிகளால், இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று தனிச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு மற்ற மாநிலங்கள், இதுபோன்ற கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வேண்டும் என்ற நோக்கத்துடன், தங்களுடைய அமைச்சர்களையும், அதிகாரிகளையும், இப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி, இதன் வளர்ச்சியைக் கண்கூடாகக் கண்டு புகழ்ந்து உள்ளார்கள். குஜராத், பீகார் மற்றும் ஆந்திர மாநில அமைச்சர்களும் அதிகாரிகளும் இப்பல்கலைக்கழகத்தைப் பார்த்து, தமிழக அரசின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும் புகழ்ந்துள்ளார்கள். இதைத் தவிர, கர்நாடகா, ஒரிசா, மேற்கு வங்காளம் மற்றும் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள உயர் அதிகாரிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து, இப்பல்கலைக்கழத்தின் வளர்ச்சியையும், பணிகளையும் ஆராய்ந்து சென்றிருக்கின்றனர். அண்டையிலே உள்ள பாண்டிச்சேரியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அங்கே இருக்கும் அமைச்சரும், கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநரும், ஏனையோரும் வந்து இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையும் பணிகளையும் பார்த்ததோடுமட்டுமல்லாமல், கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க இப்பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளையும் முன்மாதிரியாக வைத்துச் செயல்படுகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் உன்னதமான வளர்ச்சிக்குத் தாய் உள்ளம் கொண்ட இதய தெய்வம், தமிழகத்தின் கலங்கரை விளக்கம், தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நமது தன்னிகரற்றத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவிதான் காரணம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், கால்நடை மருந்தகங்களில் மருந்தே இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மருந்துகளுக்குக் குறைந்த அளவு பணம் ஒதுக்கப்பட்டு

இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே, கால்நடை மருந்தகங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைவிட, இப்போது புரட்சித் தலைவி அவர்கள் அதிகமாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத்துறையில் செயல்படும் கீழ்க்கண்ட சிகிச்சைப் பிரிவுகளுக்கு மருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு சமீபத்தில்தான் உயர்த்தி நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

கால்நடை பன்முக மருத்துவமனை, சைதாப்பேட்டைக்கும், கோவைக்கும் ஏற்கனவே 1 லட்சம் ஒதுக்கப்பட்டு இருந்தது, இப்போது 2 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். கால்நடை பெரும் மருத்துவமனைக்கு ஏற்கனவே 60 ஆயிரம் ரூபாய் மருந்து வாங்க கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். இப்போது 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கால்நடை மருத்துவமனைக்கு ஏற்கனவே 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது, இப்போது 40 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறோம். கால்நடை மருந்தகங்களுக்கு ஏற்கனவே 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம், மருந்து வாங்க. இப்போது 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கால்நடை கிளை நிலையங்களுக்கு ஏற்கனவே 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி இருந்தோம் மருந்து வாங்க. இப்போது ரூபாய் 5 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம், என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 4 ஆயிரம் நடமாடும் கால்நடை மருந்தகங்களை உருவாக்குவதற்கு, புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற, ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றுகிற கால்நடை மருத்துவர்களுக்கு கிராமப்புறங்களில் உள்ள பல பகுதிகளுக்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிள் வழங்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களுக்கு மருந்து வாங்குவதற்காக ரூபாய் 10 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் பலர் 400 டாக்டர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே வேலை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். திருவாளர்கள் ஆர்.பி. பரமசிவம் அவர்களும், இராம. இராமநாதன் அவர்களும், ஜி. பழனிசாமி அவர்களும், நா.சா. பழனிசாமி அவர்களும்,

டாக்டர் புருஷோத்தமன் அவர்களும், சொன்னார்கள். இதுசம்பந்தமாக அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

காட்டை அழிப்பதும் கூடும் அலை
கடலையும் தூர்ப்பது கூடும்
மேட்டை அகழ்வதும் கூடும் விரி
விண்ணை அளப்பதும் கூடும்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசின் சாதனைகளை யாரால் மறைக்கக் கூடும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளுக்கு மேல் சாதனைகளைச் செய்து வரும், இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி, பால்வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை அறிவிப்புகளை நான் தெரிவித்திருக்கிறேன். இந்த வகையில், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேறி இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளை இத்துறை கருத்தில் கொண்டு, விடுபட்டவைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

பிற்பகல் *8.50.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலுரையை ஏற்று வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவி பாடியே கருத்துக்கள் பல வேளாண்மைத்துறை அமைச்சர் சொன்னது போல, சுருங்கச் சொல்லி விளங்க வைத்து விட்டார். அதற்கு மேலே எதுவும் வேண்டாம். *(குறுக்கீடு)* நன்றி என்பது எல்லோரும் சொல்வதுதான். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 20, வேளாண்மை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறியவிரும்புகிறேன். திரு.ஜி. பழனிசாமி.

திரு. ஜி.பழனிசாமி: இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. இரா. அப்பு நடேசன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி

திரு. வே. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 665,81,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*
மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*
ஏற்போரே அதிகம் என்றுகருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) கோரிக்கை எண் 52 – வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 52, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு.இரா. அப்பு நடேசன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.13,80,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*
மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

(இ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 10 பால் வழங்கு திட்டங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு.ஜி. பழனிசாமி.

திரு. ஜி.பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. இரா. அப்பு நடேசன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீரிமானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாக கருதப்படுகிறது.

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.6,23,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*
மறுப்போர் 'இல்லை' என்க *(இல்லை)*
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

(ஈ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 22–கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. இரா. அப்பு நடேசன், உறுப்பினர் தன் இருக்கையில் இல்லை, வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"காலநடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.88,87,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (21.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8.53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் ஏதுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

94. மானியக் கோரிக்கை எண். 20 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (ஆங்கிலம்).

95. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

96. மானியக் கோரிக்கை எண். 10 - பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

97. மானியக் கோரிக்கை எண். 22- கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

98. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண்.20 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் ஏதுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

94. மானியக் கோரிக்கை எண். 20 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (ஆங்கிலம்).

95. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

96. மானியக் கோரிக்கை எண். 10 - பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

97. மானியக் கோரிக்கை எண். 22- கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

98. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண்.20 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(604 - ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

அத்தியாயம் — 1

முகவுரை

வான மழை பொழிந்தாலும்
வளம் படுவது எவராலே;
ஞான மறையவர் வேள்வி
நலம் பெறுவது எவராலே ;
சேனை கொடு பொரு மன்னர்
செருக் களத்தில் செருக்கும்
மதயானை வலி எவராலே;
உழவர் எருதின் வலியாலே.

இயற்கை வள ஆதாரங்களுக்கும், நிதி ஆதாரங்களுக்கும் அச்சுறுத்தலாகவுள்ள மக்கள் தொகை பெருக்கத்தினால், மிகக் குறைந்த அளவேயுள்ள இயற்கை ஆதாரங்களை அதாவது நிலம், நீர்வள ஆதாரங்களைப் பெருக்குவதற்கும் அவற்றை நீண்ட காலம் பயன்படுத்துவதற்கும் திறம்பட்ட நிருவாகத் திட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது நீடித்த மேம்பாட்டிற்கு வழி வகுக்கும்.

2. ஒன்று பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு போதிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது, இரண்டு சுற்றுச்சூழலின் தரம் குறைந்து விடாமல் பாதுகாப்பது ஆகிய இரண்டு சவால்களைச் சமாளிக்கும் நோக்குடன், கணிசமாகவும் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையிலும், உணவுப் பொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

3. உணவுப் பொருள், கால்நடைத்தீவனம், எரிபொருள், நூலிழை முதலியவற்றுக்குரிய அதிகரித்து வரும் தேவையை, மேம்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகளின் மூலம் நிறைவு செய்ய வேண்டியுள்ளது; மிகப்பழைய உற்பத்தி முறைகளிலிருந்து மட்டுமின்றி, இயற்கைவள ஆதாரங்கள் குறைவாகவுள்ள நிலைமை, உயிரின வாழ்க்கைச் சூழல் பின்னடைவு ஆகிய இடர்பாடினை மீட்டு அவற்றை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

மேம்பாட்டின் ஒருங்கிணைந்த அடிப்படையிலான நிலப் பயன்பாட்டு நிருவாகம், நீர்வரத்துப்பகுதி, பண்ணை நீர்நிருவாகம், பண்ணைக்காடுவளர்ப்பு, கால்நடைத் தீவன மேம்பாடு, பட்டுப்புழு வளர்ப்பு, மீன்வளர்ப்பு, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், விற்பனை ஏற்பாடுகள் ஆகிய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு வேளாண்மை விரிவாக்கப்பணிகளைத் தொழில்நுட்ப உத்தியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும்படி செய்யாமல், உழவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டும். எனவே, விரிவாக்கப்பணிகள் என்பது அனைத்து தொடர்புடைய துறையின் வசதிகளையும் உள்ளடக்கிய மிகப்பெரிய பணியாக அமைகிறது; தற்போது தனித்தனி வசதிகளாக இருக்கின்ற அணுகுமுறையிலிருந்து விலகி, தொடர்புடைய வசதிகளைத் தனித்தனியே கொண்டுள்ள துறைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பையும், ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தி தேவைக்கேற்ப வசதிகளைப் பெறுகின்ற அளவுக்கு விரிவாக்கப்பணிகள் அமைய வேண்டும். மேலும், பொருத்தமான வணிகம் மற்றும் விலை நடைமுறை ஆகியவற்றின் மூலம் உழவர்களுக்குச் சாதகமான பொருளாதாரச் சூழலை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. சமுதாயத்தில் பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினரின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தொடரும்; இயற்கை ஆதாரங்களின் வாயிலாகவும், கிராமப் பகுதி மகளிரின் திறமையை அதிகரிப்பதன் வாயிலாகவும், கிராமப் பகுதிகளிலுள்ள மகளிரின் நிலையை உயர்த்துவதற்கான நடவடிக்கை தீவிரமாக்கப்படும். வளர்ந்து வரும் தொழில் நுட்ப சவாலை எதிர்கொள்ளவும், உழவர் சமுதாயத்தினர் அத்தகைய தொழில் நுட்பங்களை அறியச்செய்து பயன்பெறவும் மேற்சொன்ன இரண்டு தொடர்புடைய துறைகளிலும் அதாவது

1994 ஏப்ரல் 20]

தொழில் நுட்பம், நிருவாகம் ஆகியவற்றில் விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

5. தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டுநீர்ப் பாசனம் போன்ற நுண்ணிய பாசனமுறைகளின் மூலம் நீர் ஆதாரங்களைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி நீர் ஆதாரங்களை நிருவகிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது இது முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உயிரினக் கழிவிலிருந்து தயாரிக்கப்பட்ட உரங்களையும் ஒருங்கிணைந்த பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தி சாகுபடி செய்வதும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நீடித்த உயிரின வாழ்க்கைச் சூழல் நிலை தனித்தியங்கவல்ல பொருளாதார நிலை, சமுதாய நடுநிலை, நேர்மை இலக்கு ஆகிய குறிக்களை எய்த, உற்பத்தித்திறன், ஆதாயம் தரத்தக்க நிலை, நீடித்து இருக்கக்கூடிய தன்மை ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும்.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

6) கீழ்க்கண்டவைகள் *1994—95* ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களில் சில வகையாகும்.

1. பருவமழையும் தட்பவெப்பநிலையும் சாதகமாக உள்ளதால், உணவுத் தானியங்களின் உற்பத்தி *100.00* இலட்சம் மெட்ரிக் டன்னை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி உற்பத்தி மட்டும் *1993— 94* ல் உயர் சாதனை அளவை எட்டியுள்ளது.

*2. 1994—95*லிருந்து தொடங்கும் 5 ஆண்டுக்கால அளவில், மாநிலத்திலுள்ள *71.84* இலட்சம் உழவர்களுக்கு மண்வளம் குறித்த விவர அட்டைகளை வழங்குவதன் மூலம் மண்வள ஆய்வுப் பணிகள் தீவிரமாக்கப்படும். இந்த அட்டைகள் நிலங்களின் மண் ஊட்டச்சத்து நிலை பற்றிய விவரங்களைக் கொண்டிருப்பதுடன், மண்ணின் வளத்தை அதிகரிக்க பரிந்துரைகளையும் அளிக்கும். விழுப்புரத்திலும், திண்டுக்கல்லிலும் மேலும் 2 மண்வள ஆய்வுக் கூடங்களைத் திறந்ததன் மூலம், மண்ணின் வளத்தை ஆய்வு செய்யும் திறன்

ஆண்டொன்றுக்கு 11,000 மாதிரிகள் என்கிற தற்போதைய திறனளவிலிருந்து 14,400 மாதிரிகள் என்கிற திறனளவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

3. தரிசு நிலங்களை, சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்ய அரசு முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் மொத்தத்தில் கிராம மக்கள் அனைவருக்கும் பயன் கிட்டியுள்ளது. இதுவரை (1991—92) 25,814 எக்டேர் தரிசு நிலம், சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டுள்ளது. 1994—95 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு மேலும் 10,000 எக்டேர் பரப்பளவு இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். தரிசு நில மேம்பாடு அரசின் மேலான கவனத்தில் இருக்கும்.

4. நிலங்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளில் களப்பணியாளர்கள் மிகுந்து கவனம் செலுத்த இயலும் வகையில், இடுபொருள் வணிக நடவடிக்கைகள் படிப்படியாக விட்டுவிடப்படும். அதன் தொடக்க நடவடிக்கையாக, நெல், சிறு தானியங்கள் ஆகியவற்றின் வணிகம், தேசியத் திட்டம் குறித்த் தேவைகள் நீங்கலாக நிறுத்தப்படும். இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மற்றும் தேசியத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் காலங்கள் தவிர, பிற நேரங்களில் பயிர்ப்பூச்சிக்கொல்லி வணிகமும் கூட்டுறவுச் சங்கங்களிடமும், கூட்டு முகவரமைப்புகளிடமும், ஒப்படைக் கப்படும்

5. உயிர்ப்பொருள் அடிப்படையிலான சாகுபடியை உயர்த்துகின்ற நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உயிரினக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற உர உற்பத்தி தற்போதைய அளவான ஆண்டொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் என்பதிலிருந்து 1994—95ல் 3000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

6. ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதனைப் பாராட்டும் வகையில் எப்.ஏ.ஓ. வல்லுநர்கள் அண்மையில் விரிவாக்கப்

பணியாளர்களுக்கு கள அளவிலான பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளனர். பயிர்ப்பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறித்த மேற்பார்வை, உயிரியல் முறையில் பயிர்ப்பூச்சிகளை கட்டுப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம், *1994—95*ல் நெல், பருத்தி மற்றும் கரும்பு முதலிய பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் தீவிர மாக்கப்படும். இம்மாநிலம் பயிர்ப்பாதுகாப்பில் ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதை பொதுவான கொள்கையாக மேற்கொள்ளும்.

7. எண்ணெய்ப்பனை சாகுபடியின் கீழ், கோஸ்டாரீ காவிலிருந்து *3.4* இலட்சம் முளைவிட்ட பனங்கொட்டைகளின் உத்தேச இறக்குமதி மூலம் மேலும் நாற்றங்கால்களை வளர்க்கவும், சாகுபடிப்பரப்பை அதிகரிக்கவும் எண்ணெயைச் செய்முறைப்படுத்தி, சுத்திகரிக்கும் பிரிவுகளை ஏற்படுத்தவும், *1994—95* ல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. *1994—95*ல் *14* மற்றும் *7* மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட முறையே *84* மற்றும் *43* நீர்வரத்துப் பகுதிகளில் தேசிய மானாவாரி நீர் பிரிமுகடு திட்டம் *(NWDPRA)* மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் *(DPAP)* ஆகியவற்றின் மூலம் நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். நீர்வள மேம்பாட்டில் அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

9. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மை விரிவாக்கப் பணிகளை மேலும் விரிவு படுத்த கிராம அணுகுமுறையின் மூலம் செயல்விளக்க மனைகள், அமைப்புப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், தோட்டக்கலை, பட்டுப்புழுவளர்ப்பு, பால்பண்ணை, கோழிப் பண்ணை, மீனளம் போன்ற வேளாண்மை மற்றும் வேளாண் மையை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், குறைவாக உள்ள வேளாண்மை

விரிவாக்கப் பண்ணை வருவாயை அதிகரிக்கவும், வேலை வாய்ப்பைப் பெருக்கவும் கருதப்பட்டுள்ளது. வேளாண்மை நடவடிக்கைகளில் இடையில் மாற்றங்களைச் செய்ய இந்த ஆண்டில் இடைக்கால ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

10. வேளாண்மைத் திட்டத்தில் தமிழ்நாட்டு மகளிர் பங்கேற்கும் திட்டத்தின் நிலை *2, 1994—95* ல் விரிவுப்படுத்தப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

11. நவ்லாக், குடுமியான்மலை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைப் பள்ளிகள் *1994—95* முதற்கொண்டு, பள்ளி ஒன்றில் ஆண்டொன்றுக்கு *40* மாணவர்களுக்கு *2* ஆண்டுகால பட்டயப்படிப்பை கற்பிக்கும் வகையில் நிலை உயர்த்தப்பட உள்ளன.

12. கூட்டுறவு இயக்கங்களின் மூலம் தோட்டக்கலை வளர்ச்சிக்கு முதன்மை கவனம் செலுத்தப்படும். தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம் (டான்கோப்) எனும் கூட்டுறவு நிறுவனம் மாநிலத்தில் பழங்கள், காய்கறிகள் மற்றும் பூக்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை மேம்படுத்தும்.

13. உணவுப் பொருட்கள் பதனிடுதல், வேளாண் பொருட்கள் பதனிடுதல், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தோட்டக்கலை மற்றும் மலர் சாகுபடி ஆகியவற்றுக்கு நிர்வாக தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி வழங்கப்படும்.

14. பாசனப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், நதிநீர் பள்ளத்தாக்குத் திட்டம் மற்றும் நீர்வள மேம்பாட்டுத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ்வரும் வேளாண்குழுக்களை மேம்படுத்துவது இந்த அரசின் கொள்கையாக இருக்கும்.

1994—95 ல் வேளாண்மைத் துறைக்குக் கீழ்க்கண்டவாறு வரவு—செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பகுதி—*2* திட்டங்கள் குறித்த தகவல், கொள்கை

1994 ஏப்ரல் 20]

விளக்கக் குறிப்பின் இந்த அத்தியாயத்தில் சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை துறைக்காக வரவு — செலவுத்திட்ட நிதியொதுக்கம் வருமாறு :

(ரூபாய் ஆயிரத்தில்)

	கணக்கு தலைப்பு	1993 —94 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	1993—94 திருத்திய மதிப்பீடு	1994—95 வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு
மானியக் கோரிக்கை எண் — 20				
2401	பயிர் வளர்ப்பு	5242616	5335138	5379781
2402	மண்வள— நீர்வள பாதுகாப்பு	263555	298146	315455
2415	வேளாண்மை ஆரய்ச்சி	256610	272926	272039
2435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	141592	128377	139991
2501	ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத்திட்டம்	65700	98550	98550
2551	மலைப்பகுதிகள்	83649	91992	93291
2702	சிறுபாசனம்	71807	79409	82623
2705	பாசனப்பகுதி மேம்பாடு	174119	172519	180248
3054	சாலைகள்—பாலங்கள்	68000	78000	92000
2059	பொதுப்பணிகள்	3069	4100	4192
3435	சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுப்புற சூழல்	1	1	1
துணை மொத்தம்		63,70,718	65,59,058	66,58,180

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மானியக் கோரிக்கை எண் — 52

4401	பயிர்வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு	50842	65812	65567
4402	மண்வள—நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு	1203	1220	3
4415	வேளாண்மை ஆராய்ச்சி கல்வி குறித்த மூலதனச் செலவு	2500	2500	2501
4435	ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதன செலவு	2	2	2
4551	மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு	2	2	2
	துணை மொத்தம்	54549	69536	68075
	பெரு மொத்தம்	6425266	6628160	6726245

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994-95ஆம் ஆண்டில் பின்வரும் பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1)	**வேளாண்மை**	
1.	*150* வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடங்கள் பழுது பார்த்தல்: தற்போதைய *880* வேளாண்மை விரிவாக்க மையங்களில் *600* வேளாண்மை விரிவாக்க மையங்கள் *20* வருடங்களுக்கு முன்பு அரசினால் கட்டப்பட்ட கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றது. ஆகையால், இக்கடட்டிடங்களுக்கு ஏற்படும் பழுதுகளை படிப்படியாக சீர் செய்ய திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *1994-95*ம் ஆண்டில் *150* வேளாண்மை விரிவாக்க மையங்களை பழுதுபார்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.	*15.00*
2.	இராமநாதபுரத்தில் உயிர் உர உற்பத்தி ஆய்வுக்கூடம் கட்டுதல். வாடகை கட்டிடத்தில் போதுமான இடமும் மற்ற அத்தியாவசிய தேவைகளும் இல்லாததால், உயிர் உர பொட்டல உற்பத்தி மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் வழங்குவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. உயர்தர உயிர் உர உற்பத்திக்கு மிகுந்த தூய்மையும் மற்றும் நுண்ணுயிர் பாதிப்பும் இல்லாத சூழ்நிலை தேவையாகிறது. இந்த சூழ்நிலை உயிர் உர உற்பத்திக்கும் மற்றும் தர நீட்டிப்புக்கும் அடிப்படை ஆகும். ஆய்வு நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.	*25.00*
3.	சமுதாய கதிர் அடிக்கும் களங்கள் அமைத்தல்	*5.00*

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	*1994-95*க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
	வெள்ளம், சூறாவளி மற்றும் மழை ஏற்படும் காலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் உணவு தானியங்களை கதிரடித்து உலர்த்த களங்கள் அமைப்பது அவசியமாகிறது. *1994-95* ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் ஆறும், திருச்சி மாவட்டத்தில் நான்கும், ஆக பத்து சமுதாய கதிர் அடிக்கும் களங்கள் கட்டப்படும். இத்திட்டத்தின் மூலம் 10 சமுதாய கதிர் அடிக்கும் களங்கள் ஒவ்வொன்றும் ரூ.50,000/- உத்தேச செலவில் கட்டப்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ.5.00 இலட்சமாகும். கதிர் அடிக்கும் களங்கள் உத்தேசமாக 17 மீட்டர் 10 மீட்டர் அளவில் அமைக்கப்படும்.	
4.	புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திண்டுக்கல் அண்ணா மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் அமைத்தல். புதியதாக தோற்றுவிக்கப்பட்ட திண்டுக்கல் அண்ணா மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தற்பொழுது அருகாமையில் உள்ள மாவட்ட மண் ஆய்வுக்கூடங்களை நம்பி இருக்க வேண்டியுள்ளதால், பல சிரமங்களுக்குள்ளாக்கப் படுகின்றனர். எனவே, இவ்விரு மாவட்டங்களிலும் மண் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்துதல் அவசியமாகிறது. மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு தேவைப்படும் ரூ. 6.20 இலட்சம் நிதி அத்தியவாசியமான ஆய்வுக்கூட உபகரணரங்கள், இரசாயன மருந்துகள், அலுவலக உபயோகத்திற்கான மரச்சாமான்கள் மற்றும் கட்டிட வாடகை போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும்.	6.20
5.	கரும்பு பயிருக்கு சொட்டுநீர்ப்பாசன செயல்விளக்கம் அமைத்தல்.	10.00

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
	சொட்டு நீர்ப்பாசன முறையில் மூலம் நீர்பாய்ச்சுவது தென்னை, வாழை மற்றும் தோட்டப்பயிர்களின் மகசூலை அதிகரிக்கின்றது என கண்டறியப்பட்டுள்ளது. கரும்பு அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையின் பயன்களை செயல்விளக்கங்களின் மூலமாக விவசாயிகளி டையே எடுத்துரைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.	
6.	மண்வள குறிப்பீட்டு அட்டை விவசாயிகளுக்கு வழங்குதல்.	13.58
	தமிழ்நாட்டில் 1956 முதல் மண்ஆய்வு பணிகள் செயல்பாட்டில் இருந்தபோதிலும், விவசாயிகளில் சிலர் இப்பணிகளை அறியாததுடன், பெரும்பான்மையான விவசாயிகள் தங்கள் நிலங்களின் மண்வளத்தைப் பற்றிய விவரங்களையும் பராமரிப்பதில்லை. எனவே, மண் ஆய்வு பணியைப் பற்றி விவசாயிகள் அறிய ஏதுவாக புதியதாக மண்வள குறிப்பீட்டு அட்டைகளை வழங்குவதற்கான புதிய திட்டம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களின் இரசாயன மற்றும் பௌதிக தன்மைகளையும் விளைச்சலை குறைக்கும் தடைகளையும் அறிந்து, தங்கள் நிலங்களில் விளைச்சலை பெருக்க தக்க முறைகளை கையாள வழி வகுக்கும்.	
2)	**தோட்டக்கலை**	
7.	திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வெங்காய சாகுபடியினை விரிவுபடுத்தும் திட்டம்.	10.00
	25 ஏக்கர் கூடுதல் பயிர் பரப்பில் சிறிய வெங்காயம் மற்றும் **475** ஏக்கர் கூடுதல் பரப்பில் பெல்லாரி வெங்காய இரகங்களும் பயிரிடப்படும். உயர் இரக	

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
	விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வெங்காய உற்பத்தி அதிகரிக்க வழி வகுக்கப்படும்.	
8.	தரமணி தோட்டக்கலை பயிற்சி மையத்தினை மாதவரத்திற்கு மாற்றி அமைத்தல் மற்றும் சென்னை தோட்டக்கலை இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலக கட்டிடங்கள் கட்டும் திட்டம்.	18.00
	மாதவரம் அரசு தோட்டக்கலைப்பண்ணையிலுள்ள நிலப்பகுதியில் தோட்டக்கலைப்பயிற்சி மைய அலுவலக மற்றும் பயிற்சி வகுப்புகள் அடங்கிய கட்டிடம் கட்டப்படும். தவிரவும் தற்போது தனியார் கட்டிடத்தில் சென்னை தோட்டக்கலை துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டிடமும் கட்டப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 18.00 இலட்சங்கள்.	
9.	தோட்டக்கலையில் தேனீ வளர்ப்பு கலையினை அறிமுகப்படுத்தும் திட்டம்.	3.00
	தோட்டக்கலை பயிர் சாகுபடியில் தேனீ வளர்ப்பு கலை அறிமுகப்படுத்துவதின் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் மகசூல் 20 சதம் அதிகரித்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 5 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பண்ணை ஒன்றிற்கு 5 குடில்கள் வீதம் சேலம், தருமபுரி, நெல்லை கட்டபொம்மன், திண்டுக்கல் அண்ணா மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தேனீ வளர்ப்பு குடில்கள் நிறுவப்படும். இவ்வரசு தோட்டக்கலைப் பண்ணைகள் தோட்டக்கலைப் பயிர் வளர்ப்புக் கலையினை அபிவிருத்தி செய்வதன் மூலம் கூடுதல் மகசூல் பெறும் விளக்க நிலையங்களாக செயல்படும்.	

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
10.	கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியிலுள்ள அரசு தோட்டக்கலைப்பண்ணையில் மாரிக்காய்ப்பு மா பழத்தோட்டத்தில் நீர்ப்பாசன வசதிகளை ஆழ்குழாய் கிணறு மற்றும் உபகரணங்கள் அமைக்கும் திட்டம்.	*2.00*
	பல அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் நீர்ப்பாசன அடிப்படை வசதிகள் இல்லை. சீரிய முறையில் பழம் மற்றும் செடிகள் உற்பத்தி செய்ய அடிப்படை நீர்ப்பாசன வசதிகள் மிகவும் அவசியம். கன்னியாகுமரி அரசு தோட்டக்கலைப் பண்ணை மாரி காய்ப்பு மா விளைச்சலுக்கு சிறப்பு வாய்ந்ததாகும். இச்சிறப்பு நிலை நிறுத்திட அடிப்படை நீர்ப்பாசன வசதிகள் அவசியம் தேவையாகும்.	
11.	அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைக்கும் திட்டம்.	*18.00*
	பெரும்பாலான அரசு தோட்டப்பண்ணைகள் செடிகள் உற்பத்திக்கென தனிப்பட்ட அடிப்படை நீர்ப்பாசன வசதிகள் கூட இல்லாமல் உள்ளது. அவையாவன, பெரும்பழப்பண்ணை, கருமந்துறை, பெரும்பழப்பண்ணை, வல்லத்திராக்கோட்டை பெரும்பழப்பண்ணை, திருவல்லிபுத்தூர் அரசு தோட்டப்பண்ணை நெய்வேலி, அரசு தோட்டப் பண்ணை, பெரியகுளம். இப்பண்ணைகளில் மா, கொய்யா, மற்றும் முந்திரி முதலிய பலவகை தோட்டக்கலைப் பயிர்களின் நாற்றுக்கள் உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள் பெருமளவில் உள்ளது. நீர்பாசன வசதிகள் அமைக்கப்படும் பட்சத்தில் இப்பண்ணைகளின் உற்பத்தியினை அதிக அளவில் பெருக்க முடியும்.	

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
3.	**வேளாண்மை பொறியியல் துறை**	
12.	வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பராமரிக்கபட்டு வரும் சுழல் வகை துளைக் கருவிகளுக்கென 100 புதிய துளையிட கம்பிகளை வாங்கும் திட்டம். வாடிக்கையாளர்களுக்கு வாடகை அடிப்படையில் குழாய்க் கிணறுகள் இறக்க, வேளாண்மை பொறியியல் துறை 59 சுழல் வகைத் துளையிடும் கருவிகளை வைத்திருக்கின்றது. குழாய்க் கிணறு இறக்க, 300 அடி ஆழம் முதல் 1200 அடி ஆழம் வரையிலும் துளையிடும் பணி நடைபெறுகிறது. சுமார் 200 துளையிடும் கம்பிகள், தேய்மானம் காரணமாக, வடிவத்தையும், வலுவையும் இழந்துள்ளதால், ஏற்கெனவே பயனற்றவை என அவை ஒதுக்கப்பட்டுள்ளது; மேலும், 500 துளையிடு கம்பிகள் பயன்படுத்த இயலாத நிலையை அடைந்து வருகின்றன.	15.00
13.	வேளாண்மைப் பொறியியல் துறை பராமரித்து வரும் சுழல்வகைத் துளையிடும் கருவிக்கான 10" அளவுள்ள 120 மீட்டர் புறக் குழாய்களை மாற்றி அமைப்பதற்கான திட்டம். வாடிக்கையாளர்களுக்கு வாடகை அடிப்படையில் குழாய் கிணறுகளை இறக்க வேளாண் பொறியியல் துறையிடம் 59 சுழல்வகை துளையிடும் கருவிகள் உள்ளன. இந்தச் சுழல்வகை துளையிடும் கருவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்த, ஒவ்வொரு துளையிடும் கருவிக்கும் குறைந்த அளவு 150 மீட்டர் புறக் குழாய்கள் தேவைப்படுகின்றன. இந்த புறக் குழாய்களை நீண்ட காலம் பயன்படுத்துவதால், அவை உடைந்துள்ளன. இவ்வாறு சுமார் 500 மீட்டர் புறக் குழாய்கள் ஏற்கெனவே பயனற்றதென ஒதுக்கப்பட்டுள்ளன. 1000 மீட்டர் புறக் குழாய்கள் பயனற்றதென ஒதுக்கவேண்டிய நிலையை அடைந்து வருகின்றன. 10" அளவுள்ள புறக்குழாய்களை மாற்றியமைக்க பிரேரிக்கப் படுகிறது.	6.50

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
14.	கட்டணம் பெற்று கருவிகளை வாடகைக்கு விடும் பணியின் கீழ், வேளாண் பொறியியல் துறை பராமரித்து வருகின்ற பக்கவாட்டில் துளையிடும் சாதனை இணைப்புகள் 10ஐ மாற்றுதல்.	6.00

தற்போதுள்ள திறந்த கிணறுகளில் நீர் ஊறச் செய்வதற்காக, வேளாண் பொறியியல் துறையில், பக்கவாட்டில் துளையிடும் சாதனைகள் 45 உள்ளன. இச்சாதனங்களை, கடினப்பாறை பகுதிகளில் உள்ள திறந்த கிணறுகளில், நீர் ஊறச் செய்வதற்காக வேளாண் பொறியியல் துறை பயன்படுத்துகின்றது. இச்சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான வாடகைக் கட்டணம் உழவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. பக்கவாட்டில் துளையிடும் சாதனங்களின் இணைப்புகள் 10ஐ மாற்றுவதற்கான செயற் குறிப்பு பரிந்துரைக்கப்படுகிறது.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

15.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்த நிதி உதவி.	22.20

தமிழ்நாட்டில் விளைநிலம் குறைந்து வந்த போதிலும் உணவு உற்பத்தி பெருக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுவரும் புதிய பயிர் இரகங்களும், புதிய பயிர் செய் நேர்த்தி முறைகளும் பெரிதும் உதவுகின்றன. மேலும் உற்பத்திப் பெருக்கம், உரவிலை உயர்வு, தரிசுநில மேம்பாடு, தரிசு நிலங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு **1994-95**ம் ஆண்டில் செயல்படுத்துவதற்கென பத்து புதிய திட்டங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தீட்டியுள்ளது. இவற்றில் திருச்சி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டமும் அடங்கும்.

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	*1994-95*க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)
5)	**தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்**	
16.	அம்பத்தூரில் அமைந்துள்ள பூச்சிக் கொல்லி மருந்து உற்பத்தி ஆலையை நவீனப்படுத்துதல். *1976*ல் ஆரம்பிக்கப்பட்ட அம்பத்தூர் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் ஆலையானது **22** விதமான பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பதற்கான அனுமதியை பெற்றுள்ளது. அவற்றில் ஏழு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதன் உற்பத்தியை பெருக்க *3* இலட்சம் லிட்டரில் இருந்து **6** இலட்சம் லிட்டராக அதிகப்படுத்த சில உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளது. **1994-95**ம் ஆண்டில் தேவையான அதிகமான சில உபகரணங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.	*10.00*
17.	தரமான தொழில்நுட்ப பொருட்கள் தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்துடன் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தமிழ்நாடு வேளாண் வேதியியல் நிறுவனம் என்ற பெயரில் பங்கேற்றல். அம்பத்தூர் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் ஆலையில், "மோனோகுரோடோ பாஸ்" என்ற தொழில்நுட்பப் பொருள் போதிய அளவு கிடைக்காமையால் ஒவ்வொரு ஆண்டும் நடைமுறைச் சிக்கல் ஏற்படுகின்றது. எனவே தொழில்நுட்ப பொருள் உற்பத்தி செய்ய சமபங்குகள் வெளியிடுவதன் மூலமும் தனியார் தொழில் நிறுவனங்கள் மூலமாகவும் 'டிட்கோ'வுடன் கூட்டு சேர்ந்து டேன்டெக் கெமிகல்ஸ் லிமிடெட் என்ற பெயரில் தயாரிக்கப்பட உள்ளது.	*11.00*
18.	தானிய சேமிப்பு பூச்சிகளை கட்டுப்படுத்தும் "மோகன் பூச்சி வலைப்பொறி" தயாரிப்பது மற்றும் விநியோகிப்பது.	*1.00*

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	1994-95க்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)

பூச்சிகள் மூலம் ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்காக கோயமுத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஒரு கருவியினை வடிவமைத்துள்ளது. இக்கருவியின் மூலம் வேதியியல் பொருள்களை பயன்படுத்தாமல் கிடங்குகளில் தானியங்களை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும். *1994-95*ஆம் ஆண்டில் ரூ.*1* இலட்சம் செலவில் மேற்படி பூச்சி வலைப் பொறியை கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உதவியுடன் மோகன் பூச்சிவலைப் பொறியைத் தயாரிக்கும் திட்டத்தை தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

6) வேளாண்மை விற்பனை

19. ஊரக கிட்டங்கி கட்டுதல். *8.00*

ஊரக கிட்டங்கிகள் கட்டி சேமித்து வைக்கும் வசதிகளை செய்வதன் மூலமாக வேளாண் விற்பனை இயக்கம் அதிகமான வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வர அதிக கவனம் செலுத்துகிறது. மேலும் வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு பொருளீட்டுக் கடன் வசதியை ஏற்படுத்தி பண உதவியையும் அளிப்பதன் மூலமாக இந்த இயக்ககம் சிறு/குறு விவசாயிகளின் துயரினை துடைக்கிறது. பொங்கலூர் மடுத்திக்குளம், மலையடிபாளையம் மற்றும் கொடுமுடி ஆகிய நான்கு இடங்களில் கிடங்குகள் கட்ட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவை மத்திய, மாநில அரசுகள் மற்றும் விற்பனைக்குழு ஆகியன முறையே ***25:25:50*** என்ற அளவில் ஏற்றுக்கொள்ளும். மாநில அரசின் பங்கான ரூ.*8.00* இலட்சம் ***1994-95***ஆம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படும்.

அத்தியாயம் 2

வேளாண்மை

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு தேவையான உணவு மற்றும் ஊட்டச் சத்தினை கூடிய வகையில் வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை பெருக்குவது ஒரு தொடர் தேவையாக இருக்கிறது. இத்தகைய உணவு உற்பத்தியை பெருக்கும் குறிக்கோளுக்கு ஆதாரமாக மண்வளம், நீர்வளம் ஆகியவற்றுடன் இணைந்த பயிர் உற்பத்தி மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகள் அமைகின்றன. இந்த இயற்கை வளங்களை சரியான முறையில் ஒருங்கிணைத்து பயன்படுத்துவதன் மூலம் பெருகிவரும் தேவைக்கேற்ப உணவு, உடை, தீவனம் மற்றும் எரிபொருள் ஆகிய வேளாண் பொருட்களை உற்பத்தி செய்வதோடு வேளாண்மையில் தொடர்ந்து முன்னேற்றம் அடைய வழிவகுக்கும். நீர் பிடிப்புப் பகுதி . மேலாண்மை, பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தி, கால் நடை மேலாண்மை பண்ணை மற்றும் நீர் மேலாண்மை, பண்ணைக்காடுகள், தீவன உற்பத்தி, பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, அறுவடைக்குப் பின்னர் தொழில் நுட்ப மேம்பாடு , வேளாண் விற்பனை ஆகிய இனங்களின் மூலமாக ஒட்டுமொத்த பராமரிப்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த குறிக்கோளை அடைவதற்கு பயிர் சாகுபடியிலிருந்து பல முனை விரிவாக்க திட்டத்திற்கு அணுகும் வகையில் விரிவாக்கச் செயல்பாடு முடுக்கி விடப்பட்டுள்ளது.

2 1993–94ம் ஆண்டு பெறப்பட்ட சாதகமான தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைகளினால் அரிசி உற்பத்தி 84.50 இலட்சம் மெ.டன் என்ற அளவினை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி, சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் உள்ளிட்ட மொத்த உணவு தானிய உற்பத்தி 103.27 இலட்சம் மெ.டன்னை அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1994–95ம் ஆண்டில் சாதகமான பருவ நிலை மற்றும் மழை பொழிவு ஆகியவற்றை எதிர்நோக்கி இயல்பான உணவு தானிய உற்பத்தி எதிர்ப்பார்க்கப்படுகிறது.

3. மானாவாரி நிலங்களில் உற்பத்தித்திறனை அதிகரிக்க இவ்வரசு தரிசுநில மேம்பாடு மற்றும் இதர வீணான நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவரும் திட்டத்தை மேற்கொள்ளும். இத்தகைய நிலங்களில், நீர்பிடிப்பு பகுதி அணுகுமுறைகளை கடைபிடித்து பயிர் சுழற்சி அபிவிருத்தி, பயிர் சாகுபடியுடன் இணைந்த இதர தொழில்கள் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம்

அளிக்கப்படும். மண்வளப்பரிசோதனைக்கான வசதிகள், விதைப்பரிசோதனை ஆய்வகங்கள், உரப்பரிசோதனை மற்றும் பூச்சி மருந்து ஆய்வகங்கள் ஆகிய உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் உழவர்களுக்குத் தேவையான இடுபொருள் தேவையை தொழில்நுட்ப ரீதியாக பூர்த்தி செய்யப்படும்.

4. தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில், வேளாண்மையில் உயிரியல் தொழில் நுட்பத்தை ஈடுபடுத்துவதோடு மரபியல் நுட்பத்துடன் இணைப்பதற்கான பணி மேற்கொள்ளப்படுகிறது. இம்மாநிலத்தில் பல்வேறு பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் உயிரியல் உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள், தாவர பூச்சிக்கொல்லிகள், ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்தல் மற்றும் திசு வளர்ப்பு ஆகிய இனங்களில் அபிவிருத்தி அடைவதற்கான ஆராய்ச்சிகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. நெல், பருத்தி மற்றும் கரும்பு ஆகிய மூன்று முக்கிய பயிர்களைத்தாக்கும் பூச்சி மற்றும் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்கையாக பின்பற்றப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேலும் பரவலாக்கும் நோக்கத்துடன் உழவர் வயல்வெளிப்பள்ளிகளை மாநில அரசின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

5. 1992–93ம் ஆண்டு இவ்வரசால் துவக்கப்பட்ட எண்ணை பனை சாகுபடியை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் 1000 எக்டரில் எண்ணை பனை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. *1994-95*ம் ஆண்டில் **2000** எக்டரில் இந்த எண்ணைப் பனைசாகுபடி மேற்கொள்ளப்படும். சூரியகாந்தி, சோயாமொச்சை மற்றும் மணிலா சாகுபடிக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கும்.

6. உணவுதானிய உற்பத்தியில் **20000** ஏக்கர்களில் "எம்.ஜி.ஆர்" வீரிய ஒட்டுரக நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுவதோடு ஏற்றுமதி வாய்ப்பினை பெற்றுள்ள ஜெ.ஜெ. **92** நெல் சாகுபடிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். சிறுதானியங்களைப் பொறுத்தவரை வீரிய ஒட்டுச்சோளம் பயிரிடுவது அதிகரிக்கப்படவுள்ளது. நெல் மற்றும் சிறுதானியங்கள் உற்பத்தியை சுற்றுப்புற சூழ்நிலை

[1994 ஏப்ரல் 20

மாசுப்டுத்தாமல் அதிகரிப்பதற்கு ஏற்றவாறு ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டம், சிறுதானியங்கள் மற்றும் மக்காச்சோளத்திற்கான சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம், ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

7. பயறுவகை பயிர்களின் உற்பத்தித்திறன் தமிழ்நாட்டில் குறைவாகவே உள்ளது. நெல் தரிசு மானாவாரி மற்றும் இதர பகுதிகளில் துவரை, உளுந்து மற்றும் பச்சைப்பயறு ஆகிய பயறுவகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பயறுவகை உற்பத்திக் கொள்கையை இவ்வரசு உருவாக்க உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கரை ஆலை பகுதிகளில் திசு வளர்ப்பு மூலம் பெறப்பட்ட கரும்பு இரகங்களை பயிரிடுவதோடு, பயறுவகை பயிர்களின் சாகுபடியை கரும்புக்கு அடுத்த தொடர் பயிராக பயிரிடும் திட்டத்தை இவ்வரசு மேற்கொள்ளும்.

வேளாண் கண்ணோட்டம் 1993–94

8. பருவநிலை *1993-94*ம் ஆண்டில் பருவ வாரியாகப் பெறப்பட்ட மழை அளவு பின்வருமாறு

அட்டவணை 2.1

பெறப்பட்ட மழையளவு

(மி.மீட்டரில்)

வரிசை எண்	பருவம்	இயல்பு மழை	பெறப்பட்ட மழை	குறை/அதிகம் (சதவிகிதம்)
1.	கோடை 1993 (மார்ச்-மே)	136.5	65.1	_52.3
2.	தென் மேற்கு பருவ மழை (ஜூன்-செப்டம்பர்)	307.6	299.1	_2.8
3.	வடகிழக்கு பருவ மழை (அக்டோபர்-டிசம்பர்)	438.7	697.2	+58.9
4.	குளிர் காலம் (பிப்ரவரி '94)	42.2	32.4	_23.2
	மொத்தம் :	925.0	1093.8	_18.2

9. நடப்பு ஆண்டில் சராசரி அளவைவிட மழை அதிகமாக பெய்துள்ளது. கோடை பருவத்தில் பெறப்பட்ட மழை (-)52.3 சதம் குறைவாக இருந்த போதிலும், பின்னர் இந்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. தென்மேற்கு பருவமழை காலத்தில் இயல்பான மழையளவிற்கு நெருங்கிய அளவில் (-)(2.8 சதம்)

1994 ஏப்ரல் 20]

குறைவாக பெறப்பட்டது. வட கிழக்கு பருவ மழை காலத்தில் +58.9 சதம் கூடுதல் மழை பெறப்பட்டது. 1993-94ஆம் ஆண்டு கோடை பருவம் முதல் அதாவது மார்ச் 1993 முதல் பிப்ரவரி 1994வரை இயல்பு மழையான 925.0மி.மீட்டருக்கு 1093.8மி.மீட்டர் மழை பெறப்பட்டது. இது இயல்பை விட 18.2% கூடுதல் ஆகும்.

வெள்ளம் மற்றும் புயல்: 1993

10. நவம்பர் 1993 ல் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் டிசம்பர் 1993ல் ஏற்பட்ட புயல் காரணமாக பெருவாரியான பகுதிகளில் பயிரிடப்பட்ட பயிர்களும், தோட்டக்கலைப்பயிர்களும் சேதமடைந்தன. மேலும், சாகுபடியிலிருந்த நிலங்கள் மண் மேடிட்ட தோடு, பாசனக் கிணறுகள் மற்றும் பம்புசெட்டுகள் சேதமடைந்தன. இவ்வரசு நிவராண நடவடிக்கையாக விதைகள், உரம், பூச்சி மருந்து மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட சிறு /குறு விவசாயிகளுக்கு வழங்கியது. பாதிக்கப்பட்ட பகுதிகளின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.2

வெள்ளம்/புயலால்பாதிக்கப்பட்ட பரப்பு

வ. எண்	விவரங்கள் (பயிர்கள்)	பாதிக்கப்பட்ட பரப்பளவு (எக்டரில்) வெள்ளம் நவம்பர்'93	புயல் டிசம்பர்'93	மொத்தம்
1.	நெல்	60115	76885	137000
2.	எண்ணெய்வித்துக்கள்	2530	5551	8081
3.	தென்னை (எண்கள்) (எக்டரில்)	– –	35750 179	35750 179
4.	சிறுதானியங்கள்	–	29452	29452
5.	பருத்தி	2150	4836	6986
6.	வாழை	2542	16232	18774
7.	காய்கறி மற்றும் மிளகாய்	749	5800	6549
8.	இதர தோட்டக்கலைப் பயிர்கள்	45	2735	2780
9.	மண்மேடிட்ட நிலங்கள்	179	1080	2849
10.	பாதிக்கப்பட்ட கிணறுகள் (எண்கள்)	1480	–	1480
11.	பம்பு செட்டுகள் முழுமையாக பாதிக்கப் பட்டவை (எண்கள்)	322	–	322
12.	பம்பு செட்டுகள் பகுதி பாதிப்பு (எண்கள்)	372	303	675
	மொத்தம்	69900	142750	212650

11. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் பின்வருமாறு:

அட்டவணை 2.3

புயல் நிவாரண நடவடிக்கைகள்

வ. எண்.	விவரங்கள்	நிவாரணம் அளிக்கப்பட்ட பரப்பு (எக்டரில்)	நிவாரணத் தொகை (ரூ.லட்சத்தில்)
1.	நெல்	119409	599.323
2.	எண்ணெய்வித்துக்கள்	8081	99.329
3.	தென்னை (எண்கள்)	20000	41.000
	(எக்டரில்)	100	–
4.	சிறுதானியங்கள்	10000	35.000
5.	பருத்தி	1900	22.800
6.	வாழை	10729	321.870
7.	காய்கறிகள் மற்றும் மிளகாய்	2900	87.020
8.	இதர தோட்டக்கலைப்பயிர்கள்	964	28.930
9.	மண் மேடிட்ட நிலங்கள்	650	32.500
10	பாதிக்கப்பட்ட கிணறுகள் (எண்கள்)	1100	15.00
11.	பம்பு செட்டுகள் முழுமையாக பாதிக்கப்படடவை (எண்கள்)	250	10.00
12.	பம்பு செட்டுகள் பகுதி பாதிப்பு	150	1.50
	மொத்தம்	124733	1294.272

1993-94 ப்யிர் நிலை

12. 1993-94ம் ஆண்டில் இதுவரையில் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு, அடையப்பெற்ற உற்பத்தி மற்றும் எதிர்நோக்கப்படும் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 2.4

1993-94ல் பயிர் நிலை

எண்.	பயிர்	பரப்பு (இல.எக்டர்)			உற்பத்தி (இலட்சம் மெ.டன்		
		இலக்கு	பிப்ரவரி '94 வரை	எதிர் நோக்கும் சாதனை	இலக்கு	பிப்ரவரி '94	எதிர் நோக்கும் சாதனை
1.	அரிசி	21.00	22.17	23.00*	64.25	67.99	84.50*
2.	சிறுதானியங்கள்	15.50	12.22	12.40	17.75	14.25	14.25
3.	பயறுவகைகள்	10.00	10.00	10.00	5.50	4.52	4.52
	மொத்த உணவு தானியங்கள்	46.50	44.39	45.40	87.50	86.76	103.27
4.	எண்ணெய்வித்து	12.95	12.46	14.20	14.25	14.08	17.00
5.	பருத்தி (லட்சம் பேல்கள்)	2.50	2.45	2.93	6.40	6.18	6.40
6.	கரும்பு (வெல்லம்)	2.00	2.22	2.35	25.11	25.48	25.48

* நவரைப் பட்டத்தில் எதிர் பார்க்கப்படும் உற்பத்தி உள்ளிட்டது.

13. கார், சொர்ணவாரி பருவ துவக்கத்தில் சாகுபடி பரப்பில் சற்று மந்த நிலை இருந்த போதிலும், பின்னர் இந்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. இருப்பினும், ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் மேட்டூர் நீர்தேக்கத்தில் நீர்வரத்து மற்றும் நீர் தேக்கநிலை திருப்திகரமாக இல்லை. ஜூலை முதல் அக்டோபர் 93 வரை குறைந்த அளவு நீர் பாசனத்திற்கு விடப்பட்டதால் காவிரி படுகை மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி பாதிக்கப்பட்டது. இதனால் கடந்த ஆண்டு 1.67 இலட்சம் எக்டர் பரப்பில் மேற் கொள்ளப்பட்ட குறுவை சாகுபடி நடப்பு ஆண்டில் 1.40 இலட்சம் எக்டரில் மட்டும் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் நெல் உற்பத்தி திறன் எக்டருக்கு 6.50 மெ.டன் என்ற அளவினை எட்டியது. இதற்கு சரியான தொழில் நுட்பம், காலத்தில் இடுபொருள்கள் விநியோகம், கூட்டங்கள், கருத்து அரங்குகள் நடத்தியது மற்றும் விரிவாக்க உறுதுணை ஆகியவை காவிரி பாசன பகுதியில் மேற்கொண்டதே முக்கிய காரணமாகும். சம்பா நெல் சாகுபடி முன்னேற்றம் ஏற்பட்டது. இதன்பின் பெய்த மழையினால் மேட்டூர் அணையைத் தவிர இதர மாவட்டங்களில் உள்ள பெரும்பான்மையான நீர்த்தேக்கங்களில் நீர் அளவு அதிகரித்தது. பிப்ரவரி 94 வரை மொத்த நெல் சாகுபடி பரப்பு 22.17 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு

ஆண்டு நெல் சாகுபடி பரப்பு குறியீடான 21 இலட்சம் எக்டரை கடந்து தீவிர பயிர் சாகுபடியின் காரணமாக 23 இலட்சம் எக்டேரை அடையும் எனவும், அரிசி உற்பத்தி இதுவரையில் இல்லாத உயர் அளவான 84.50 இலட்சம் மெ.டன் என்ற அளவினை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்த அதிக மழையினால் ஏரிகள் நிரம்பியதோடு கிணறுகளில் நீர்மட்டமும் அதிகரித்தது. ஏரிகளில் உள்ள நீரைக்கொண்டு செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், வடஆற்காடு அம்பேத்கார், விழுப்புரம் ராமசாமிபடையாச்சியார், சேலம், தர்மபுரி, பெரியார், திருச்சி, மதுரை, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்க்ளில் நவரை பருவத்தில் இயல்பாக பயிரிடக்ககூடிய 2.20 இலட்சம் எக்டர் பரப்பளவைவிட அதிகமான பரப்பான 3.21 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

14. சிறுதானியங்களை பொறுத்தவரை ஜூன்ஜூலை மாதங்களில் மழை பொழிவு சரியாக இல்லாத காரணத்தினால் சிறிதளவு குறைவு ஏற்பட்டுள்ளது. இதனை எண்ணைவித்து சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் கணிசமான அளவு ஈடு செய்யப்பட்டது. தற்போது மானாவாரி மணிலாவில் ஊடுபயிராக துவரை 0.78 இலட்சம் எக்டரில் பயிரிடப்படுகிறது. மானாவாரி மணிலாவில் மொத்த சாகுபடி பரப்பான 7 இலட்சம் எக்டேரிலும் துவரையை ஊடுபயிராக பயிரிடுவதற்க்கு வாய்ப்புள்ளன. ஆகவே 94-95ம் ஆண்டில் தேசிய பயறு பெருக்கு திட்டத்தின் உதவியோடு மானாவாரி மணிலாவில் துவரையை ஊடுபயிராக பயிரிடுவது மேற்கொள்ளப்படும். பயறுவகை பயிர்களில் கொள்ளு ஓர் சத்துள்ள பயறு. இப்பயிரில் 21 சதம் புரதச்சத்து உள்ளது. இப்பயிர் ஓர் நல்ல தீவன பயிர். மண் அரிமானத்தை இப்பயிர் கட்டுப்படுத்துகிறது.

15. எண்ணை வித்து உற்பத்தி இலக்கான 14.25 இலட்சம் மெ.டன் அதிகரிக்கப்பட்டு 17 இலட்சம் மெ.டன் அளவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சூரியகாந்தி பயரின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சிறப்பு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சாத்திய கூறுகள் உள்ள மாவட்டங்களான சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல் அண்ணா, காமராஜர் மற்றும் சிதம்பரனார்

ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீரிய ஒட்டுரக சூரிய காந்தி விதைகள் மற்றும் பிரபலமான மார்டன் ரகம் ஆகியவை விவசாயிகளிடையே சிறுதளை மூலம் வினியோகிக்கப்படுகிறது. இவ்வாறு சாகுபடி செய்யப்படும் சூரியகாந்தி விதைகளை தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் கொள்முதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சோயா மொச்சையில் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனை கரும்பு, பருத்தி மற்றும் மணிலா ஆகிய பயிர்களின் ஊடுபயிராக்வும், தனிப்பயிராகவும் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கையினால் சோயா மொச்சையை கூடுதலாக 10,000 எக்டேரில் பயிரிடப்பட்டது. இவ்வாறு சோயா மொச்சை பயிரிடுவதற்கு முக்கியத்துவம் கொடுத்ததால் 1993-94 ம் ஆண்டில் 0.26 இலட்சம் எக்டர் பரப்பளவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1994-95 ம் ஆண்டிற்க்கான உற்பத்தி இலக்குகள்

16. 1994-95 ம் ஆண்டு இயல்பான மழை, சரியான நேரத்தில் நீர்த்தேக்கங்களிலிருந்து பாசன நீர் விடுவிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மத்தியத் திட்டக்குழுவினால் கீழ் கண்ட சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட பரப்பளவு மற்றும் உற்பத்தி இலக்குகளை இம்மாநில அரசு அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

அட்டவணை 2.5

1994-95ம் ஆண்டிற்கான பயிர் உற்பத்தி குறியீடு

வ. எண்.	பயிர்	1994-95ம் ஆண்டுக்கான இலக்கு	
		பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இல.மெ.டன்)
1.	நெல்	21.00	65.50
2.	சிறுதானியங்கள்	15.50	18.50
3.	பயறு வகைகள்	10.00	6.00
	மொத்த உணவு தானியம்	46.50	90.00
4.	எண்ணெய் வித்துக்கள்	13.15	14.50
5.	கரும்பு (வெல்லம்)	2.35	25.59
6.	பருத்தி (இல.பேல்கள்)	2.50	6.60

[1994 ஏப்ரல் 20

இடுபொருள் திட்டங்கள்

விதைகள்

17. தமிழ் நாட்டில் விதை பெருக்குத்திட்ட நடவடிக்கைகள் மூன்று அடுக்கு முறைகளில் மிகவும் சீர்படுத்தப்பட்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரு விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, ஆதார விதைகள் தமிழக அரசின் 42 மாநில விதைப்பண்ணைகளில் விதைப்பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ஆதார விதைகளைக்கொண்டு பதிவு செய்யப்பட்ட விதைப்பண்ணைகள் மூலம் சான்றுபெற்ற விதைகள் மாநில விதைச்சான்று துறையினரால் சான்று அளிக்கப்பட்டு தரமான விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சான்று விதைகளை ஆண்டிற்கு 25,900 மெ.டன்கள் சுத்திகரிக்கும் திறனுடைய அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இந்த விதைகள் 16 பெரிய 3 நடுத்தர மற்றும் 37 சிறிய சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிக்கப்படுகின்றன. 1994-95 ஆண்டு மொத்த சுத்திகரிப்பு திறன் 26,000மெ.டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்திசெய்து சுத்திகரிக்கபட்ட சான்று விதைகள் வேளாண்மை துறையை சார்ந்த 880 வேளாண்மை விரிவாக்க மையங்களில் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இத்துறையின் விதைவிற்பனை நடவடிக்கைகளை விடுத்து, தனியார் விதை உற்பத்தியினை ஊக்கப்படுத்த வேண்டுமென ஏற்கெனவே அரசு கொள்கைமுடிவு எடுத்துள்ளது. இதற்கேற்ப நெல் மற்றும் சிறு தானிய உற்பத்தி மற்றும் விநியோகம், தேசிய திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம் போன்றவைகளின் தேவைக்கு மட்டும் மேற்கொள்ளப்படும். இருந்தபோதிலும் ஏற்றுமதி வாய்ப்பை பெற்றுள்ள புதிய ரகமான ஜெ.ஜெ 92 மற்றும் வீரிய ஒட்டு ரகமான எம்.ஜி.ஆர் நெல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

18. 1994-95 ஆண்டில் பயறு வகைகள், எண்ணைவித்துக்கள், பருத்தி ஆகிய பயிர்களுக்கான விதைக்கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை. தேசிய திட்டங்களின் தேவைக்கு ஏற்றவாறு நெல்,

சோளம் மற்றும் கேழ்வரகு விதைகளின் விநியோகம் மேற்கொள்ளப்படும். உச்சநீதி மன்றத்தின் சாதகமான முடிவிற்கு ஏற்றவாறு விதை தடுப்பு சட்டம் தீவிரமாக செயற்படுத்தப்படும். உழவர்களுக்கு தரமான விதைகளை விற்பனை செய்வதற்கு ஏற்றவாறு மாநில அரசு இச்சட்டத்தினை செயல்படுத்துவதில் தக்க உறுதுணையாக இருக்கும்.

அட்டவணை 2.6

தமிழ்நாட்டில் விதை மாற்று விகிதம்

வ. எண்.	பயிர்		மாநில அரசின் விதைமாற்ற சதவீதம்	மத்திய அரசின் சிபாரிசுபடி விதை மாற்ற சதவீதம்.
1.	பயறு வகைகள்		12.5	11
2.	பருத்தி	மானாவாரி	10.0	15
		இறவை	15.0	
3.	எண்ணெய்வித்துக்கள்	மணிலா	5.0	3
		எள்	15.0	10
		சூரியகாந்தி	50.0	50
		ஆமணக்கு	30.0	20

19 விதை விநியோகத்தின் கீழ் 1993-94ம் ஆண்டின் இலக்கு பிப்ரவரி 94 முடிய சாதனை மற்றும் 94-95ம் ஆண்டிற்கான இலக்குகள் பின்வருமாறு :

அட்டவணை 2.7

விதை விநியோக முன்னேற்றம்.

(டன்கள்)

வ.எண்.	பயிர்	93-94 இலக்கு	பிப்ரவரி94 வரை சாதனை	94-95 இலக்கு
1	நெல்	22050	21237	*
2	சிறுதானியங்கள்	1222	988	*
3	பயறுவகைகள்	2500	1584	2500
4	பருத்தி	375	333	375
5	எண்ணெய் வித்துக்கள்	11528	9294	11528
	மொத்தம்	37675	33436	14403

* ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உரங்கள்

20. வேளாண் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க, இரசாயன உரங்கள் வெவ்வேறு பயிர் நிலைகளில் சரியான அளவில் இடுவது மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இரசாயன உர விநியோகம் 93-94ம் ஆண்டு தமிழ் நாடு முழுவதும் விநியோகம் செய்ய 10.10 இலட்சம் மெ.டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1993-94ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட உரச்சத்துக்களின் அளவு மற்றும் 1994-95ம் ஆண்டிற்கான திட்டக்குறியீடுகள் பின்வருமாறு:

அட்டவணை 2.8

தமிழ் நாட்டில் இரசாயன உர உபயோகம்.

அலகு: இலட்சம் மெ.டன்களில்

வ. எண்.	இனம்	93-94 இலக்கு	பிப்ரவரி 94 வரை சாதனை	94-95 இலக்கு
1	தழைச்சத்து	5.60	3.82	6.16
2	மணிச்சத்து	2.30	1.88	2.53
3	சாம்பல் சத்து	2.20	2.17	2.42
	மொத்தம்	10.10	7.87	11.11

21. மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களின் மீதான கட்டுப்பாட்டை மத்திய அரசு நீக்கியதன் காரணமாக உரங்களின் விலை இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. மாநிலத்தில் பயிர் உற்பத்திக்கான இரசாயன உர உபயோகம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. 1992-93ம் ஆண்டில் ஏற்பட்ட குறைவான மொத்த உர வினியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இந்த உர விலையேற்றத்தை ஈடு செய்ய டை அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் முயூரியேட் ஆப் பொட்டாஷ் போன்ற உரங்களுக்கு டன்னுக்கு ரூ.1000/- வீதமும், கூட்டு உரங்களுக்கு டன்னுக்கு ரூ.435/- முதல் ரூ.990/- வரையிலும் சூப்பர் பாஸ்பேட் உரத்திற்கு டன்னுக்கு ரூ.340/- என்ற அளவிலும் சலுகை உர வினியோகம் மத்திய அரசால் 1993-94ம் ஆண்டு செயல் படுத்தப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டில் சலுகை விலை உர வினியோகத்திற்காக மத்திய அரசால் ரூ.54.07 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மேலும் கூடுதலாக ரூ.5.93 கோடி மத்திய அரசிடமிருந்து வர

வேண்டி உள்ளது. நிறுவனங்கள் வாரியான வினியோகம் பின்வருமாறு:

அட்டவணை 2.9

சலுகை விலை உர வினியோகம்.

(இலட்சம் ரூபாயில்)

பாண்பெட்	1037.30
என்.சி.எம்.எஸ	35.16
தாய்	186.92
டி.சி.எம்.எப்	245.45
என்கோஃபெட்	78.82
தாய்மூலமான தனியார் நிறுவனங்கள்	3727.26
மொத்தம்	5407.36

உயிர் உரங்களான நீலப்பச்சைப்பாசி, அசோலா, அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகிய தழைச்சத்தினை நிலை நிறுத்தும் நுண்ணுயிர்களும், மணிச்சத்தினை நிலை நிறுத்தும் பாஸ்போ பேக்டீரியா அதிகளவில் விவசாயிகளுக்கு கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22. பசுந்தாள் உரங்கள், கம்போஸ்ட் ஆகியவற்றை பயன் படுத்துவதின் மூலம் மண்வளத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிபாரிசு படி உரமிடுதல், உரங்களை பிரித்து இடுதல், வேம்பு கலந்த யூரியா இடுதல் போன்ற திருந்திய தொழில் நுட்பங்களை கையாளுவதன் மூலம் உர உபயோகத்திறன் அதிகரிக்கப்படும். அதிகரித்தும் வரும் உயிரின உரங்களின் தேவையை கருத்தில் கொண்டு, தரமுள்ள உயிரின உரங்களை விவசாயிகள் அதிக அளவில் பயன் படுத்துவதற்க்கு ஏற்றவாறு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகிறது. உயிரின உரங்களான அசோஸ் பைரில்லம், மற்றும் ரைசோபியம் ஆகியவை அரசு உற்பத்தி மையங்கள் மற்றும் தனியார் மையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது, கடலூர், இராமநாதபுரம், சேலம், மற்றும் குடுமியான்மலை உற்பத்தி மையங்களின் மூலம் வேளாண்துறையால் 1993-94 ஆம் ஆண்டு முதல், ஆண்டுக்கு 1000 மெ.டன் உயிரின உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மதராஸ் உர நிறுவனம், ஸ்பிக், சைமா மற்றும் ஸ்டேன்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்களுக்கு உயிரின உற்பத்தி மையம்

நிறுவுவதற்கு, மையத்திற்கு ரூ.13.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டு மொத்தமாக ஆண்டுக்கு 2000 டன் உயிரின உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆக மொத்தம் 1994-95 ஆம் ஆண்டிற்கு 3000 டன்கள் உயிரின உரங்கள் வினியோகம் செய்யப்படும். இந்த நடவடிக்கைகளினால் அதிகரித்து வரும் உயிரின உரங்களின் தேவையை பூர்த்தி செய்வதோடு உர விலை ஏற்றத்தினை ஈடு செய்வதற்கு உழவர்களுக்கு உதவியாகவும் அமையும். தற்போதுள்ள நான்கு உற்பத்தி மையங்களில் உயிரின உற்பத்தி பின் வருமாறு.

அட்டவணை 2.10

வேளாண்மைத் துறையின் உயிரின உற்பத்தி

அலகு: மொத்த பாக்கெட்டுகளின் எண்ணிக்கையில்

வ.எண்.	உற்பத்தி மையம்	சாதனை 1991-92	1993-94 ல் பிப்ரவரி 94 முடிய சாதனை
1.	கடலூர்	11,00,115	14,72,019
2.	சேலம்	–	10,19,625
3.	குடுமியான்மலை	–	8,29,091
4.	இராமநாதபுரம்	9,62,341	12,24,351
	மொத்த பாக்கெட்டுகளின் எண்ணிக்கை	20,62,456	45,,45,086
	உற்பத்தி (டன்னில்)	412.4	909.0

23. தற்சமயம் இத்துறையில் 200கிராம் கொண்ட உயிரின உரங்கள் உழவர்களுக்கு பாக்கெட் ஒன்றுக்கு ரூ.3/- என்ற விலையில் வினியோகம் செய்யப்படுகின்றது. அதே சமயம் தனியார் துறைகள் மூலம் தயாரித்து வினியோகிக்கப்பட்டு உயிரின உரங்கள் 200 கிராம் பாக்கெட் ஒன்றுக்கு ரூ.5/- முதல் ரூ.8.40 வரை விற்பனை செய்யப்படுகின்றது. மாநிலத்தில் செயல்படும் நான்கு உற்பத்தி மையங்களில் தானியங்கி பாக்கெட்டுகள் தயாரிக்கும் கருவி அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு பாக்கெட்டும் இரண்டு உறைகள் கொண்டதாகவும் மேல் உறையில் பல்வகை வண்ண அச்சுடனும் வினியோகிக்கப்பட உள்ளது. இத்தகைய ஏற்பாட்டினால் உயிரின உரங்களின் தரம் காக்கப்படுவதோடு உழவர்களை கவரும் வகையிலும் அமையும். சென்னையில் சமீபத்தில் முதல் தேசிய உயிரின உர மாநாடு நடத்தப்பட்டது.

24. உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகத்தில் தமிழ் நாடு ஒரு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது. எனவே உயிர் உர உபயோகம், நீலபச்சைப்பாசி ஆகியவற்றைஉபயோகித்து, மண் வளத்தைப்பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் 20 மையங்ககளில் நீலபச்சைப்பாசி உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 1993-94ம் ஆண்டில் உற்பத்தி மற்றும் விநியோகம் ஒவ்வொன்றுக்கும் 260 மெ.டன் இலக்கு பிப்ரவரி 94 வரை 247 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1994-95ம் ஆண்டிலும் 260 டன் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

25. நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டக்கலவை இடுவதன் மூலம் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க இயலும். நுண்ணூட்டங்கள் மற்றும் நுண்ணூட்டக் கலவை நடப்பு ஆண்டில் 3500 மெ.டன் இலக்கிற்கு பிப்ரவரி 94 வரை 3314 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

26. ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தில் இணைந்து அங்கமாக விளங்கும் பசுந்தாள் உர வினியோகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. கொளிஞ்சி, தக்கைப்பூண்டு, சணப்பு மற்றும் செஸ்பேனியா ஆகியவை முக்கியமான பசுந்தாள் உரங்களாக இம் மாநிலத்தில் பயிர் செய்யப்படுகின்றது. இப் பசுந்தாள் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தினை கிரகித்து மண்ணில் நிலை நிறுத்தும் தன்மை கொண்டவை. இவ்வகை நிலை நிறுத்தும் தழைச்சத்துக்கள் பசுந்தாள் உரங்களுக்கு அடுத்த படியாக பயிரிடும் பயிர்களுக்கு உபயோகம் ஆகின்றன. 1993-94 ஆம் ஆண்டில் 100 மெ.டன்கள் பசுந்தாள் உர விதைகள் உழவர்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் நோக்கத்துடன் ரூ.22.50 இலட்சம் செலவில் 250 மெ.டன்கள் பசுந்தாள் உர விதைகள் வினியோகிக்கும் திட்டம் செயலாக்கப்படுகின்றது. 1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் 350 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் வினியோகம் செய்யப்பட்டது. பசுந்தாள் உரங்கள் இடுவதால் மண் வளம் அதிகரிப்பதோடு மண்ணில் அங்ககப் பொருள்களின் சேர்க்கை கூடுதலாக்கப்படுகிறது. இதனால் பயிர்கள் அதன் வளர்ச்சிகேற்ற சத்துக்களை பயன்படுத்துவது மேம்படுத்தப்படுகிறது.

[1994 எப்ரல் 20

வேளாண்மைக்கு பண்ணைக் கருவிகள்.

27. வேளாண்மையில் உழுதல் மற்றும் இதர பண்ணை பணிகளை சீரிய முறையில் செய்து நிலத்தினை பண்படுத்துவதற்கும் மாடுகளின் வேலை பளுவை குறைக்கவும் பின் வரும் பண்ணைக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

* 18 குதிரை சக்தி கொண்ட 1101 சிறிய டிராக்டர்கள், டிராக்டர் ஒன்றுக்கு ரூ.30,000 மானியம் என்ற அளவில் 1101 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* 1000 பவர் டில்லர்கள், பவர் டில்லர் ஒன்றுக்கு ரூ.12,000/- மானியம் வீதம் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டத்தின் கீழ் 1000 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* உணவு தானியங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடதிற்கு எளிதாக கொண்டு செல்வதற்கு உழவர் சமுதாயத்திற்கு உதவிடும் நோக்கத்துடன் பவர் டில்லருக்கான 500 டிரெய்லர்கள் டிரெய்லர் ஒன்றுக்கு ரூ.10000/- மானியத்துடன் 500 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* இழுவை மாடுகளின் சுமை, மற்றும் அவற்றின் சிரமத்தை குறைக்கும் வகையில் 4500 நவீன இரப்பர் சக்கரம் பொருத்தப்பட்ட மாட்டு வண்டிகள், வண்டி ஒன்றுக்கு ரூ.7500/- மானியம் வீதம் 4500 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* 20000 தார்பாலின் மற்றும் விதை சேமிப்புக்கலம் ஒன்றுக்கு ரூ.1000/ மானியம் வீதம் 20000 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் மற்றும் சிறப்பு தானியத் திட்டத்தின் கீழ் 40100 நவீன வேளாண்மைக் கருவிகள், கருவி ஒன்றுக்கு ரூ.1500/- மானியத்துடன் 40100 உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 20]

சிறு/குறு விவசாயிகளுக்கான உதவித்திட்டங்கள்

28. இரசாயன உரங்களின் விலை ஏற்றத்தால் சிறு/குறு விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்க 1992-93ம் ஆண்டில் மத்திய அரசு சிறு/குறு விவசாயிகளுக்கு பல்வேறு உதவி திட்டங்களுக்காக ரூ.39.90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. 1992-93 ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் உர சிறு தளைகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படாத இதர பகுதிகளுக்கான பூச்சிமருந்து சிறு தளைகள், விசைத் தெளிப்பான்கள், இரப்பர் சக்கரம் பொருத்திய மாட்டுவண்டிகள், பவர் டில்லருக்கான இழுவைகள், டிராக்டர்கள், வேளாண் கருவிகள், தானிய சேமிப்புக் கலன்கள் / தார்பாய்கள், உயிர் உர பாக்கெட்டுகள் ஆகியவை வேளாண்மைத் துறை மூலம் வினியோகம் செய்தவகையிலும், களர் உவர் மற்றும் மண்மேடிட்ட நிலச்சீர்திருத்தத்திற்க்கும், கிணறுகள் சுத்தம் செய்வதற்க்கும், மின்சாரம் மற்றும் ஆயில் மோட்டார் பழுது பார்க்கவும், குழாய்கிணறுகள் மற்றும் ஆழ்கிணறுகள் அமைக்க வேளாண்மை பொறியியல் துறைக்கும் சேர்த்து மொத்தம் ரூபாய் 27.4311 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டதிற்கென அரசு ரூ 13.44 கோடி சிறு/குறு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் உதவிடும் பொருட்டு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் (அ) 20,000 எண்கள் பெட்ரோமாக்ஸ் விளக்கு விநியோகம் (ஆ) 500 இரப்பர் சக்கரம் பொருந்திய மாட்டு வண்டிகள் (இ) 250 மெ. டன்கள் பசுந்தாள் உர விதைகள் இலவச விநியோகம் (ஈ) எலி ஒழிப்பு மருந்து விநியோகம் (உ) பூச்சிமருந்து சிறுதளைக்கு கூடுதல் தொகை (ஊ) வெள்ளம் மற்றும் புயல் நிவாரண உதவிக்காக வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் சிறு மற்றும் குறு உழவர்களுக்கான புயல் மற்றும் வெள்ள நிவாரண உதவி (எ) சிறு/குறு விவசாயிகளின் பள்ளி மாணவர்களுக்கு 1.50 இலட்சம் தென்னங்கன்றுகள் இலவச விநியோகம் (ஏ) திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம் வட்டாரத்தில்

LEGISLATURE
TRUTH ALONE TRIUMPHS

மண்டலத்திட்டத்தின் கீழ் உவர் நிலங்களை சீர்திருத்தல் (ஐ) பண்ணை மகளிர்க்கு 46,000 வேளாண் உபகரணங்கள், உபகரணம் ஒன்றுக்கு ரூ 300/ வீதம் வழங்குதல். சமீபத்தில் மத்திய அரசு மீதமுள்ள தொகையை வழங்கியுள்ளது.

திருச்சிமாவட்டத்தில் மணிகண்டம் வட்டாரத்தில் வேளாண் பயிர்நிலைமண்டல திட்டமிடுதல்

29. திருச்சி மாவட்டத்தில் உவர் மற்றும் களர் நிலங்கள் 31640 எக்டரில் உள்ளன. ஆரம்பகட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகண்டம் வட்டாரத்தில் 1800 எக்டரில் உவர் நிலங்களின் சீர் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் அ) பாதிக்கப்பட்ட தொடர்ச்சியாக நிலங்களை கண்டறிந்து தேவையான இடுபொருட்களை குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் தயார் நிலையில் வைத்தல் ஆ) அறிவியல் அடிப்படையில் பிரச்சினைக்குரியவர் மண்ணை சீர்திருத்தம் செய்து திறமையோடு பயன் படுத்துதல். இ) ஒருங்கே அமைந்துள்ள பிரச்சினை பகுதிகளில் உழவர்களின் பங்கேற்போடு திட்டத்தை செயல் படுத்துதல் ஈ) இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஓர் திட்டக்குழுவினால் ஆய்வு மேற்கொள்ளுதல். இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ 6.05 கோடி. இந்த ஒதுக்கீட்டில் நிலஅபிவிருத்திக்கென ரூ 2.03 கோடியும் பயிர் சாகுபடி செலவிற்காக ரூ 4.02 கோடியும் உள்ளன. மாநில அரசு அதன் பங்கான ரூ 99 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டதிற்கான முதல் தவணைத் தொகையை மத்திய திட்டக்குழு வழங்கியுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

பயிர் பாதுகாப்பு

30 1993-94ம் ஆண்டில் உணவுப்பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த 47.00 இலட்சம் எக்டரிலும், உணவு அல்லாத பயிர்களின் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த 25.20 இலட்சம் எக்டரிலும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிப்ரவரி 1994 வரை உணவுப்பயிர்களில் 45.19 இலட்சம் எக்டரிலும், உணவு அல்லாத பயிர்களில் 25.83 இலட்சம் எக்டரிலும் பயிர்பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது. 1994-95ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களில் 49இலட்சம் எக்டரிலும், உணவு அல்லாத பயிர்களில்

1994 ஏப்ரல் 20]

27.20 எக்டரிலும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பூச்சி மற்றும் நோய் பாதிப்பு நிலைகளை முறையான ஆய்வுப் பணிகள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இந்த பூச்சி நோய் கணிப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு வாரமும் 7,356 இடங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. இதன் அடிப்படையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பற்றிய செய்திகளை உழவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு

31 சுற்றுப்புறச்சூழல்நிலை மாசுப்படுத்தல், நச்சுத்தன்மையின் எஞ்சிய நிலை மற்றும் பூச்சிகளின் எண்ணிக்கை பெருக்கமடைதல் போன்றவற்றிலிருந்து விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பினை தடுக்கும் நோக்கத்துடன் மாநிலத்தில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பங்களை மேற்கொள்வதில் மாநில அரசு முனைப்போடு செயல்படுத்த உள்ளது. இதனால் ஏற்படும் நன்மைகளை செயல் விளக்கமாக செய்துகாட்ட இறவை பயிரில் 20 எக்டரிலும், மானாவாரிபயிரில் 40 எக்டரிலும் நிரூபணத்திடல்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் நூறு விவசாயிகள் வீதம் மொத்தம் 31,600 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1994-95ஆம் ஆண்டிலும் 31,600 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் நிபுணர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து வேளாண்துறையைச்சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நெல்பயிரில் மூன்று மாத ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு நெற்பயிரில் காணப்படும் பூச்சி மற்றும் நோய்களை வேளாண் சூழ்நிலைக்கு ஏற்ப கட்டுப்படுத்துதலை கண்டறியவும், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்களைப் பற்றி ஆராயவும் பயிற்சி அளிக்கப்பட்டது. நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பருவகாலபயிற்சி அளிக்க, உணவு மற்றும் வேளாண்மை நிறுவன தொழில் நுட்ப வல்லுனர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட முதன்மை பயிற்சியாளர்களைக்கொண்டு, 106 உழவர்

வயல்வெளிப்பள்ளிகள் ஏழு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகத்தின் கீழ், நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை சிபாரிசு செய்யப்பட்டு, இயற்கை முறையிலான பூச்சிநோய் தடுப்பு கடைபிடிக்கப்படுகிறது. இது தவிர, விளக்குப் பொறி,. இனக்கவர்ச்சிப் பொறி, பொறிப்பயிர், சுத்தமான சாகுபடி முறைகள், நீர் மற்றும் சத்துக்கள் மேலாண்மை, சரியான பயிர் சுழற்சி போன்றவைகளிலும் விவசாயிகளுக்கு பயிற்சி மூலமாகவும்,அலுவலர்கள் பயிர்களை பார்வையிடும் பொழுதும் வலியுறுத்தி வருகின்றனர்.

32 இந்த உயிரியல் முறைகளைகடைபிடிப்பதற்கு வசதியாக கரும்பில் இடைக்கணுப்புழு, டிரைகோகிராமா என்ற ஒட்டுண்ணியை *21* ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களில் வளரச் செய்து ஆண்டு தோறும் *10,500* எக்டரில் விடப்படுகின்றன. இவ்வாண்டு பிப்ரவரி *94* வரை *9679* எக்டரில் இந்த ஒட்டுண்ணி விடப்பட்டுள்ளது. தென்னையில் கருந்தலைப்புழுவினை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் *10,250* எக்டரில் ஆண்டுதோறும் இடுவதற்கு வசதியாக *19* ஒட்டுண்ணிகள் வளர்ப்பு மையங்களில் வளர்க்கப்பட்டு பிப்ரவரி *94* வரை *6437* எக்டரில் விடப்பட்டுள்ளது. பருத்தியில் காய் புழுவை கட்டுப்படுத்த *1200* எக்டரில் விடுவதற்கு தேவையான நியுக்கிளியர் பாலி னஹட்ரோசிஸ் எனும் வைரஸ் கிருமிகளை மூன்று உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்து பிப்ரவரி *94* வரை *1,166* எக்டரில் விடப்பட்டுள்ளது. தென்னையில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த பச்சைக் காளான்கள் பூஞ்சாணம் வளர்ப்பு செய்து விடப்படுகிறது. இத்திட்டம் 1994-95ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

பூச்சி மருந்துகள் விற்பனை

33. தமிழக அரசு 9-3-93 தேதியிட்ட அரசாணை எண் *150,* வேளாண்மை துறையின்படி வேளாண்மைத் துறை இனி 1-4-94 முதல் பூச்சி மருந்து விற்பனையை மேற்கொள்ளக்கூடாது என ஆணையிட்டுள்ளது. எனினும், இயற்கைச்சீற்றங்கள், ஒட்டு மொத்த பூச்சி நோய் தாக்குதல் ஆகிய காலங்களில் தேவையான

பூச்சி மருந்துகளை உபயோகிக்கவும் ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட அரசு ஆணையின்படி, பூச்சி மருந்து விற்பனையை கூட்டுறவு நிறுவனங்களான டான்காப், என்கோபெட் மற்றும் வேளாண் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் ஆகியவை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளும். இந்த பூச்சி மருந்து விற்பனையை 1-4-94 முதல் மேற்கண்ட வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகங்களுக்கு ஒப்படைக்கப்படும்.

மத்திய அரசு சார்புத் திட்டம்

ஒருங்கிணைந்த தானியப் பயிர் அபிவிருத்தித்திட்டம்

34. அரிசி உற்பத்தியை அதிகரிக்க, புதிய தொழில் நுட்பங்களை கையாளுவதற்கு ஏதுவாக பல்வேறு மானியத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் முக்கிய இடுபொருள்களான விதைகள், நுண்ணூட்டங்கள், பூச்சிக்கொல்லிகள், பயிர் பாதுகாப்பு கருவிகள், மற்றும் வேளாண் கருவிகள், மான்ய விலையில் வழங்கப்பட்டு விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். மத்திய மாநில அரசுகள் இத்திட்டத்திற்கான செலவினை 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன. இத்திட்டம் அனைத்து நெல் சாகுபடி செய்யும் மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இனவாரியாக இத்திட்டத்தின் கீழ் 93-94ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி 94 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.11

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டத்தின் முன்னேற்ற விபரம்

வ. எண்.	திட்டம்	1993-94 செயல் ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை	199394 நிதி (ரூ. இலட்சம்) ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை
1	நெல் விதைகள் விநியோகம் (டன்) (அ) மண் பிரச்சனை யுள்ள பகுதிகளுக்கு 15 வருடங்களுக்குட்பட்ட இரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.250/- வீதம் (ஆ). வீரிய ஒட்டு இரகங்கள் 10 வருடங்களுக்குட்பட்டது. குவிண்டாலுக்கு ரூ.200/- வீதம் 1993க்கு பின் உள்ளவை (இ) 10 வருடம் முதல் 15 வருடங்கள் வரையுள்ள உயர் விளைச்சல் ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.100/_ வீதம்	18000	15343	70,40	251,71
2.	நுண்ணூட்ட சத்து 25 சத மான்யம் குவிண்டாலுக்கு ரூ.300/-க்கு மிகாமல்	2000	936.4	60.00	28.60
3.	களைக்கொல்லி விநியோகம் 50 சத மான்யம் எக்டருக்கு ரூ.100/-க்கு மிகாமல் (தெரிவு செய்யப்பட்ட மருந்து களுக்கு மட்டும்)	130000	44110	130.00	44.90
4.	பூச்சிக்கொல்லி விநியோகம் 25 சத மான்யம் எக்டருக்கு ரூ.100/-க்கு மிகாமல் (தெரிவு செய்யப்பட்ட மருந்துகளுக்கு மட்டும்)	107795	37569	107.795	31.40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	திட்டம்	1993-94 செயல் ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை	199394 நிதி (ரூ. இலட்சம்) ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை
5.	பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்கள்) 50 சத மான்யம் ரூ.600/-க்கு மிகாமல் (கையால் உபயோகிக்கும் கருவிகளுக்கு மட்டும்)	34250	2500	205.50	150.00
6.	பண்ணைக் கருவிகள் விநியோகம் எண்கள் 50 சத மான்யம் ரூ.150/-க்கு	13670	120	54,00	0.38
7.	விசை உழுவை விநியோகம் (எண்) 25 சத மான்யம் டில்லருக்கு ரூ.12,000/-க்கு மிகாமல் ரொடோ வேட்டருடன்	1000	1000	120.00	120.00
8.	செயல் விளக்கத் தளைகள் அமைத்தல் ஒரு எக்டருக்கு ரூ.600 வீதம்	30	30	0.18	0.18
9.	உழவர்களுக்கு பயிற்சி (எண்கள்) விவசாயிக்கு ரூ.50/- வீதம் (11 மாவட்டங்களில்)	1100	1100	0.55	0.55
10.	பிற செலவினங்கள் மாவட்டத்திற்கு ரூ.25000/- வீதம்	–	–	2.75	2.00
	மொத்தம்	–	–	960.175	630.47

1994-95ம் ஆண்டில் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த தானியங்கள் அபிவிருத்தி திட்டமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பத்துவருடத்திற்குள் வெளியிடப்பட்ட/அறிவிக்கப்பட்ட இரகங்களுக்கு விநியோகமான்யம் வழங்கப்படும். மத்திய அரசின் இந்த நிபந்தனையால் 1994-95ம் ஆண்டிற்கு குறுகியகால இரகங்களான ஐஆர் 50, ஐஆர் 64, அம்பை 16, அம்பை 17, அம்பை 18, ஆடுதுறை 37, புதுவை 2, திருப்பதிசாரம் 1, பரமகுடி 1, மற்றும் நடுத்திர இரங்களின் ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 40, மதுரை 2, 3, மற்றும் 4 பையூர் 1, கோ. 43, கோ. 44, 45 டிகேஎம் 10, திருப்பதிசாரம் 2, புதுவை 1, வெள்ளை, பொன்னி, மற்றும் சிவப்பு பொன்னி இரகங்கள் மானியத்திற்கு தகுதி பெறுகின்றன. ஐ.ஆர்.20, ஆடுதுறை 36, டிகேஎம் 9, ஐ.ஈ.டி 1444,

பவானி மற்றும் சாவித்திரி (சிஆர் 1009) ஆகியவை 10 ஆண்டுகளுக்குமுன் அறிவிக்கப்பட்டதால் மான்யம் பெற 1994-95ம் ஆண்டில் தகுதி பெறவில்லை. உழவர்கள் அதிகம் விரும்பும் ஐ.ஆர். 20க்கு மாற்று இரகமான நடுத்தர வயதுடைய ஆடுதுரை 39 நெல் மானியத்தில் 1994-95ல் வினியோகிக்கப்படும். இந்த ஒருங்கிணைந்த, தானியப் பயிர் அபிவிருத்தி திட்டம் அரிசி மற்றும் சிறுதானியங்கள் அதிகபரப்பில் பயிராகும், ஆனால் உற்பத்தித்திறன் தேசிய மற்றும் மாநில சாரசரி அளவிற்கு குறைவான தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். மேலும் 1994-95ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் விசை உழுவைகள் மற்றும் பூச்சி மருந்துகள் மான்யத்தில் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தானியபயிர்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1994-95 ஆண்டு கீழ்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

1) நிருபணதளை பயிர் திட்டங்கள் ஐந்து இடங்களில் ஒரு எக்டருக்கு ரூ.2000/- வீதம் உதவி அளிக்கப்படும்.

2) வீரிய ஒட்டு அரிசி உற்பத்தி செயல்விளக்கம் ஏக்கருக்கு ரூ.1000/- வீதம்

3) 40 எக்டர் பரப்பு கொண்ட ஐந்து ஒருங்கிணைந்த பாதுகாப்பு நிரூபணங்கள் அல்து கிராமம் முழுவதும் நிருபணத்திற்கு ரூ.6000.

4) விவசாயிகள் பயிற்சி மகளிர் உள்பட தொழில்நுட்ப முறைகளில் இரண்டு நாட்களுக்கு விவசாயிக்கு ரூ.50/- நாளொன்றுக்கு வீதம் இரண்டுபயிற்சிகள் வீதம்.

5) பசுந்தாள் உர விதை உற்பத்தியை ஊக்குவித்தல்

6) மண்ணின் களர் உவர் தன்மையை சீர்திருத்த பயன்படுத்தப்படும் ஜிப்சம் போன்ற உரங்களை எடுத்துச்செல்லும் செலவிற்கு ஊக்கத்தொகை வழங்குதல்.

7) உயர் இரக நெல் விதை மான்யம் குவிண்டாலுக்கு ரூ.200/- ஆகவும், சிறுதானியங்களுக்கு ரூ.400/-வீதமும் வீரிய ஒட்டு நெல் இரங்களுக்கு ரூ.500/- வீதமும்.

8) பிரச்சினை உள்ள பகுதிகளில் உற்பத்தியாகும் உயர்விளைச்சல் நெல் இரகங்களுக்கு அதிகப்படியான உற்பத்திக்கு சான்று பெற்ற விதைக்கு குவிணாடாலுக்கு ரூ.200 வீதம்

9) எருது மற்றும் மனித சக்தியினால் செயல்படுத்தப்படும் நவீன பண்ணைக் கருவிகளுக்கு 50%மான்யத்தில் ரூ.1500க்கு மிகைபடாமல் ஒரு விவசாயிக்கு வழங்குதல்.

10) ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் அதிகப்படியான உற்பத்தி செய்யும் கிராம பஞ்சாயத்திற்கு ரூ.50,000 பரிசுத் தொகையாக வழங்குதல்.

நெல், சிறுதளைகள் திட்டம் 1993-94

35. புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விரைவில் பரவுவதற்கும், வெளியிடப்படும் முன் இரகங்களை அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவையா என்பதை அறியும் நோக்கத்துடனும் இந்த சிறுதளைகள் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கான செலவினை முழுவதுமாக மத்திய அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின் கீழ் இன்னும் வெளியிடப்படாத இரகங்கள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., கோயம்பத்தூர், பெரியார், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்யாகுமாரி ஆகிய ஏழு மாவட்டங்களிலும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இரண்டு கிலோ சிறுதளைகளாக விநியோகிக்கப்படுகின்றது. இந்த இரண்டு கிலோ சிறுதளைபை ஒன்றின் விலை ரூ.20/-இந்த சிறுதளைபைகள் விவசாயிகளிடமிருந்து 10 சத தொகை பெற்றுக் கொண்டு விநியோகிக்கப்படுகின்றது. *1993-94* ஆம் ஆண்டில் **26445** ஜெ.ஜெ.**92** வகைசிறுதளைகள் **26445** விவசாயிகள் பயன் அடையும் வகையில் நெல் சிறுதளைகளாக வினியோகிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.**5.26** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் **1994-95** ஆம் ஆண்டில் மைய அரசு உத்தேசித்துள்ள சில மாற்றங்களுடன் செயல் படுத்தப்படும். 93-94 ஆண்டின் இலக்கு மற்றும் பிப்ரவரி 1994வரையிலான சாதனை விவரம் வருமாறு.

அட்டவணை 2.12

அரிசி சிறுதளைகள் விநியோக திட்டம்

வ. எண்.	இனம்	பொருள் (எண்) இலக்கு 93-94	சாதனை பிப்ரவரி 94 வரை	நிதி (ரூ. இலக்கு 93-94	இலட்சம்) சாதனை பிப்ரவரி 94 வரை
1	வெளியிடப் படாத இரக சிறுதளைகள் (2 கிலோ)	140	–	0.028	–
2	சமீபத்தில் வெளியிடப் பட்ட இரக சிறுதளைகள் (ஜே.ஜே. 92ம் உட்பட)	50000	14668	10.00	3,26

சிறுதானிய சிறுதளைகள் திட்டம்

36. வெளியிடப்பட்ட இரகங்களை விரைவில் பரப்பவும், வெளியிடப்படவுள்ள இரகங்கள் அந்தந்த பகுதிக்கு ஏற்றனவா என்று அறியவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் சிறுதளைகள் குறிப்பாக சிறு/குறு விவசாயிகளுக்கு 25 சத தொகையை விவசாயிகளின் பங்காக பெற்றுக் கொண்டு விநியோகிக்கப்படுகின்றன. பிப்ரவரி 94 முடிய குறியீடான 27000 சிறுதளைக்கு 6500 சிறுதளைகள் வினியோகிக்கப்பட்டுள்ளது. இச்சிறுகளைகளின் அளவு மற்றும் விலை விபரங்கள் பின்வருமாறு

அட்டவணை 2.13

சிறுதளை பைகளின் அளவு மற்றும் விலை விவரங்கள் வருமாறு:

பயிர்	சிறுதளை பை அளவு	விலை (ரூபாய்)
மக்காச் சோளம்	2.0 கிலோ	36.00
கம்பு	0.5 கிலோ	13.50
கேழ்வரகு	0.5 கிலோ	5.00

1994 ஏப்ரல் 20]

.ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பகுதியில் மக்காச்சோளம் மற்றும் சிறுதானியங்கள் தீவிர சாகுபடித்திட்டம்.

37. ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த விவசாயிகளுக்கு மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, ஆகிய பயிர்களின் தொழில் நுட்பங்களை அளிப்பதன் மூலம் உற்பத்தி திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்திருபணங்களுக்கு கீழ்கண்ட மான்யங்கள் வழங்கப்படுகின்றன.

அட்டவணை 2.14

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த விவசாயிகளுக்கு மக்காச்சோளம் மற்றும் சிறுதானியங்கள் தீவிர சாகுபடி திட்டம்.

(ரூ. பாயில்)

பயிர்	மக்காச்சோளம்		சோளம்	கம்பு/கேழ்வரகு
விதை	120.00	120.00	120.00	50.00
உரம்	750.00	350.00	350.00	300.00
பூச்சிமருந்து	130.00	130.00	130.00	50.00
மொத்தம்	900.00	600.00	600.00	400.00

1993-94ம் ஆண்டில் ரூ.1.78இலட்சம் செலவில் 265எக்டர் பரப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம்

38. சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம் 100 சத மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் சோளம் மற்றும் கேழ்வரகு பயிர்களை முக்கிய பயிர்களாக கொண்டு, அவற்றின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் சாத்தியக்கூறு உள்ள மாவட்டங்களை தேர்வு செய்து சில அத்தியாவசிய இடு பொருள்களுக்கு மானியம் அளித்து விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

அ. சோளம்

39. சோளப் பயிருக்கான சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம் தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார், வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோவை, பெரியார், திருச்சி புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல் அண்ணா, இராமநாதபுரம், காமராஜர்,

திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் ஆகிய 16 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993-94ம் ஆண்டிற்கான இனவாரியான இலக்கு மற்றும் பிப்ரவரி 94 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.15

சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம் (சோளம்) முன்னேற்றம்

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்.	திட்டம்	1993-94 செயல் ஆண்டு இலக்கு	1993-94 செயல் பிப்ரவரி வரை சாதனை	1993-94 நிதி (ரூ. இலட்சம்) ஆண்டு இலக்கு	நிதி (ரூ. இலட்சம்) பிப்ரவரி வரை சாதனை
1	விதை விநியோகம் (மெ.டன்) (10 ஆண்டு வரையிலான இரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.400 வீதம்)	125.0	105	5.00	4.19
2	களைக்கொல்லி விநியோகம் (ஹெக்) (50 சத மான்யம் எக்டருக்கு ரூ.100க்கு மிகாமல்)	10000	14287	15.00	13.65
3	பூச்சி கொல்லி வினியோகம் (எக்டருக்கு 25% மானியம் ரூ100 க்கு மிகாமல்)	15000	17428	15.00	10.24
4	பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்கள்)	2200	1014	15.00	8.02
5	ஆ. பண்ணைக் கருவிகள் விநியோகம் ஆய பலபயிர் விசை கதிரடிக்கும் இயந்திரம் 25 சத மான்யம் ரூ.1500க்கு மிகாமல்	2000	2150	22.05	16.90
6.	செயல் விளக்கத் தளைகள் ஒரு எக்டரில் அமைத்தல் 100 சத மான்யம்				
	1. மானாவாரி தொழில் நுட்பம்	59	69	0.590	0.590
	2. களைக்கொல்லி	6	7	0.015	0.015
7	விவசாயிகள் பயிற்சி	14	14	0.35	0.35
8	இதர செலவினம்	–	–	1.00	1.00
	மொத்தம்	–	–	74.005	54.955

ஆ. கேழ்வரகு

40. கேழ்வரகு பயிருக்கான சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார், வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், திருச்சி, பெரியார், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல்

அண்ணா, ராமநாதபுரம், பசும்பொன், காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய 18 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993-94ம் ஆண்டிற்கான இனவாரியான இலக்கு மற்றும் பிப்வரி 94 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.16

சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம் (கேழ்வரகு) முன்னேற்றம்

வ.எண்.	திட்டம்	1993-94 செயல்		1993-94 நிதி (ரூ. இலட்சம்)	
		ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை	ஆண்டு இலக்கு	பிப்ரவரி வரை சாதனை
1	விதை விநியோகம் (மெடன்)	75	147	3.00	5.25
2	களைக்கொல்லி விநியோகம் (எக்)	5000	4150	7.50	6.23
3	பூச்சிக்கொல்லி விநியோகம்	5000	6917	5.00	4.80
4	பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்கள்) ஐ.எஸ்.ஐ.முத்திரை கொண்டவை 50 சத மான்யத்தில்	1600	1200	10.50	7.50
5	வேளாண் கருவிகள் விநியோகம்	800	794	6.95	5.24
6.	செயல் விளக்க தளைகள் அமைத்தல் (எக்டர்)	15	15	0.15	0.15
7.	பயிற்சி	2	2	0.05	0.05
8	பிற செலவினங்கள்	–	–	0.25	0.25
	மொத்தம்	–	–	33.40	29.47

சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டங்கள் (சோளம் மற்றும் கேழ்வரகு) 94-95ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தானியங்கள் உற்பத்தி திட்டத்தில் சேர்த்து அமுலாக்கப்படும்.

தேசீய பயறு அபிவிருத்தி திட்டம்

41. பயறுவகை பயிர்களின் உற்பத்தியை திருந்திய தொழில் நுட்பங்களின் மூலம் அதிகரிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் மத்திய அரசு சார்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகும் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகித்தில் ஏற்கின்றன. இத்திட்டம் சென்னை மற்றும்

நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயலாக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் பயறு வகைகள் உற்பத்தியை பெருக்க பல்வேறு இடுபொருள்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. 1992-93 வரை தனியே செயல்படுத்தப்பட்டு வந்த பச்சை பயறு, உளுந்து பயிர்களின் பரப்பளவை அதிகரிக்க கோடை பயறுவகை சிறுதளைகள் விநியோகமும், துவரை பயிரில் பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள மானியமும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது, 1993-94ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி 94 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.17

தேசியபயறுவகை அபிவிருத்திதிட்ட முன்னேற்றம்

வ.எண்.	திட்டம்	அலகு	செயல் இலக்கு	சாதனை பிப்.94 வரை	நித (ரூ.இலட்சத்தில்) இலக்கு	சாதனை பிப்.94
1	விதை கிராமம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.200/- வீதம்.	எண்கள்	6000	5410	12.00	12.37
2	சான்றிதழ் விதை மானியம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.300/- வீதம்	எண்கள்	7692	5215	23.07	16.38
3	ஆதார விதை மான்யம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.400/- வீதம்	எண்கள்	2250	1316	9.00	5.26
4	சிறுதளைகள்	எண்கள்	24000	25642	18.00	19.23
5	10 எக்டர் நிருபண தளை ரூ.5125/- வீதம்	எண்கள்	580	506	29.725	26.37
6	ஒரு ஹெக்டேருக்கு 50 சத மான்யத்தில் ரூ.100/- வீதம் பயிர் பாதுகாப்பு மருந்து	ஹெக்	12000	11561	12.00	11.56
7	ஒரு கருவிக்கு ரூ.600/- வீதம் பயிர்பாதுகாப்பு கருவிகள் 50 சத மான்யத்தில்	எண்கள்	1300	699	7.80	4.11
8	இனக்கவர்ச்சிப் பொறி	எண்கள்	41	15	0.205	0.06

வ.எண்.	திட்டம்	அலகு	செயல் இலக்கு	சாதனை பிப்.94 வரை	நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு	சாதனை பிப்.94
9	ஒருங்கிணைந்த ப்யிர் பாதுகாப்பு செயல் விளக்கம்	எண்கள்	33	19	0.495	0.28
10	திருந்திய பண்ணைக் கருவிகள் ஒன்றுக்கு ரூ.1500/- வீதம் 50 சத மான்யத்தில்	எண்கள்	200	62	3.00	0.93
11	தெளிப்பு நீர்பாசனக் கருவி ஒன்றுக்கு ரூ.10,000 வீதம் 50 சத மான்யத்தில் சிறு குறு விவசாயிகளுக்கு	எண்கள்	192	100,	19.20	10.00
12	நுண்ணுயிர் பொட்டலங்கள் ஒரு எக்டருக்கு 50 சத மான்யத்தில் 15 எண்கள்	ல.எண்	2.00	1.92	3.00	2.58
13	நுண்ணூட்டச் சத்து	ஹெக்	1000	785	1.00	0.78
14	பயிற்சி ஒன்றுக்கு ரூ.10,000 வீதம்	எண்கள்	2	2	0.20	0.20
15	சம்பளம் மற்றும் இதர செலவினம்				8.00	3.10
	மொத்தம்	–	–	–	146.70	113.21

1994-95ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பபடும்.

தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டம்

42. பருத்திக்கான தேவை அதிகமாகி வருவதால் அரசு இதற்கு தனி கவனம் செலுத்தி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. பருத்தி சாகுபடி பரப்பினை மேலும் அதிகரிக்க சாத்தியக் கூறுகள் மிக குறைவாக உள்ளதால் உற்பத்தி திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளபடுகின்றன. மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற பங்கிட்டில் சென்னை மற்றும் நீலகிரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் **93-94**ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி **94** வரையிலான சாதனை பின்வருமாறு

அட்டவணை 2.18

தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டமுன்னேற்றம்

வ.எண்.	திட்டம்	அலகு	செயல் இலக்கு	சாதனை பிப்.94 வரை	நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு	சாதனை பிப்.94 வரை
1	விதை உற்பத்தி	குவிண்டால்	3.0	3.82	0.07	0.095
2	சான்றளிக்கப்பட்ட விதை விநியோகம்	குவிண்டால்	3253	2210	11.900	8.820
3	நிருபணங்கள் அ. அமில விதை நேர்த்தி	எக்டர்	60	50	0.240	0.200
	ஆ. இனக்கவர்ச்சி பொறி	எண்	70	64	0.175	0.160
	இ. உற்பத்தி தொழில் நுட்பம்	எண்	32	8	0.480	0.120
	ஈ. நியுக்ளியர் பாலி ஹைட்ரோசிஸ் வைரஸ்	எண்	784	650	5.880	4,550
4	பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம்	எக்.	23750	18800	95.000	75.000
5	பயிர் பாதுகாப்பு கருவிகள்	எண்	9750	8400	58.500	52.000
6	தெளிப்புநீர் பாசன கருவி விநியோகம்	எண்	1200	700	120.000	70.000
7	உழவர் பயிற்சி	எண்	2800	2800	1.400	1.400
8	இதர சில்லரை செலவினம்	ல.ரூ.	–	–	0.750	0.570
	மொத்தம்		–	–	294.400	212.915

இத்திட்டம் 1994-95ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

43. எண்ணைய் வித்து உற்பத்தி திட்டம்

மத்திய அரசு சார்பு திட்டமான எண்ணைய் வித்து உற்பத்தி திட்டம், சென்னை, நீலகிரி மற்றும் கன்யாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் எண்ணைய்வித்து உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களை கடைபிடிக்க ஆர்வத்தை தூண்டும் வகையில் பல்வேறு இடுபொருள்களுக்கான மானியத்துடன் இத்திட்டம் செயலாக்கப்பபடுகிறது. இத்திட்டத்திற்கான செலவினங்கள் 75:25 சதவிகிதத்தில் மத்திய மாநில அரசுகள் ஏற்கின்றன. 1993-94ம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் இனவாரியாக இலக்கு மற்றும் பிப்ரவரி 94 வரையிலான சாதனை பின்வருமாறு.

அட்டவணை 2.19

எண்ணைய் வித்து உற்பத்தி திட்ட முன்னேற்றம்

நிதி (ரூ லட்சம்)

வ.எண்.	திட்டம்	அலகு	இலக்கு	சாதனை பிப்.94 வரை	இலக்கு	சாதனை பிப்.94 வரை
1	வல்லூநர் விதை கொள்முதல்	குவிண்	1881	747	32.000	12.700
2	ஆதார விதை உற்பத்தி (குவிண்டாலுக்கு ரூ.200/- வீதம்)	குவிண்	7500	5318	15.000	14.580
3	சான்று பெற்ற விதை விநியோகம் வீரிய ஓட்டு தவிர (குவிண்டாலுக்கு ரூ.300/- வீதம்)	குவிண்	99975	62725	151.450	90.870
4	விதை கிராம திட்டம் (குவிண்டாலுக்கு ரூ.200/- வீதம்)	குவிண்	99975	57002	151.450	84.67
5	இடுபொருள் சிறு தளை விநியோகம் (சிறு/குறு விவசாயிகள் முக்கியமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக)	எண்	152012	106407	67.015	54.030
6	உள்ளிருப்பு வசதிகள்	-	–	–	48.382	50.00
7	டான்காப் விதை இனத்திற்காக	-	–	–	30.909	18.120
8	பயிர்பாதுகாப்பு மருந்துகள் 50 சத மான்ய விநியோகம் (எக்டருக்கு ரூ.100/- வீதம்)	எக்டர்	80000	72471	80.00	78.650
9	பயிர்பாதுகாப்பு கருவிகள் விநியோகம் 50 சத மான்யம் கைத்தெளிப்பான் ரூ.600/-க்கு மிகாமல் விசைத்தெளிப்பான் ரூ.1500/-க்கு மிகாமல்	எக்டர்	2766	743	30.096	11.260
10	வேர்புழு கட்டுப்படுத்துதல் (எக்டருக்கு ரூ.500/- வீதம்)	எக்டர்	1600	725	8.000	2.46
11	2 எக்டர் இனக்கவர்ச்சி பொறி நிருபணம் (எக்டருக்கு ரூ.500/- வீதம்)	எண்கள்	1900	1440	9.500	7.200
12	பெருவிளக்கத் தளை (50 சத மான்ய விலையில் இடுபொருள்கள்)	எக்டர்	15000	14350	150.00,	132.56

வ.எண்.	திட்டம்	அலகு	இலக்கு	சாதனை பிப்.94 வரை	இலக்கு	சாதனை பிப்.94 வரை
13	வேளாண் கருவிகள் விநியோகம் சிறு/குறு விவசாயிகளுக்கு 50 சத மான்யம் ரூ.1500/-க்கு மிகாமல்	எண்கள்	2020	1183	30.300	2.74
14	தெளிப்பு நீர்பாசன கருவி விநியோகம் (50 சத மான்யம் சிறு/குறு விவசாயிகளுக்கு மட்டும் ரூ.10,000க்கு மிகாமல்)	எண்கள்	1250	253	125.000	25.30
15	நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (50 சத மான்யம் எக்டருக்கு ரூ.15/- க்கு மிகாமல்) மணிலா மற்றும் சோயா மொச்சை	எண்	43000	38328	6.94	5.50
16	ஜிப்சம் விநியோகம் பைரைட்/சுண்ணாம்பு (எக்டருக்கு ரூ.200/-க்கு மிகாமல்)	மெ.டன்	48060	80953	96.120	113.98
17	நுண்ணூட்டக் கலவை விநியோகம் (எக்டருக்கு ரூ.100/- க்கு மிகாமல்)	எக்டர்	27560	16,536	27.560	16.54
18	விவசாயிகள் பயிற்சி மற்றும் கல்வி சுற்றுலா (100 விவசாயிகள் கொண்ட குழுவிற்கு ரூ.10000 வீதம்)		–	–	8.00	7.00
19	சம்பளம் மற்றும் இதர செலவினம்		–	–	32.273	29.58
	மொத்தம்		–	–	1100.00	757.82

இத்திட்டத்திற்காக மார்ச் **1994**ல், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் **94-95**ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

எண்ணைபனை சாகுபடி

***44. 1992-93**ம் ஆண்டில், காஸ்டாரிக்காவிலிருந்து **3.40** இலட்சம் முளைவிட்ட எண்ணை பனை விதைகளை இறக்குமதி செய்து, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இனுங்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சாக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசு விதைப் பண்ணைகளில் நாற்றங்கால் அமைக்கப்பட்டது. மத்திய மலைத் தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம்,*

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பாலோடு கேரளாவிலிருந்து 25,000 டெனிரா முளைவிட்ட எண்ணெபனை விதைகள் கொண்டு வரப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டையில் நாற்றங்கால் அமைக்கப்பட்டது. 1993-94ம் ஆண்டு எண்ணெபனை சாகுபடி செய்யும் பணி 31.10.93 அன்று பட்டுக்கோட்டையில் துவக்கிவைக்கப்பட்டது. 93-94ம் ஆண்டில், 2000ஹெக்டர் பரப்பில் எண்ணெ பனை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்ட திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களை சேர்ந்த தேர்நந்ததெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 150 கன்றுகள் வீதம் கன்று ஒன்றுக்கு ரூ.25 என்ற மானிய விலையில் பிப்ரவரி 94 வரை 1,50,450 நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சம் 6 ஹெக்டேர் நடவு செய்வதற்கு 900 கன்றுகள் வரை விநியோகம் செய்யப்படுகின்றன. 94-95 ஆண்டிலும், 3.40 இலட்சம் முளைவிட்ட எண்ணெபனை விதைகளை காஸ்டாரிக்காவிலிருந்து தருவித்து 2000 ஹெக்டேர் பரப்பில் எண்ணெபனை சாகுபடி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில், 1.26 இலட்சம் முளைவிட்ட எண்ணெபனை விதைகள் இதுவரை தருவிக்கப்பட்டுவிட்டன. இது தவிர கேரளா மாநிலத்தைச் சேர்ந்த பாலோடு என்ற மத்திய மலைத் தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 25,000 டனேரா எண்ணெ பனை விதைகள் தருவிக்கப்பட்டு, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இனுங்கூர் அரசு விதைப் பண்ணையில் நாற்று விடப்பட்டது. 1993–94ம் ஆண்டு, எண்ணெ பனை சாகுபடிக்கென மத்திய அரசு ரூ.90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைக் கொண்டு திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களை சேர்ந்த இனுங்கூர், சாக்கோட்டை, மருதாநல்லூர்,பட்டுக்கோட்டை, காஞ்சிக்குடிகாடு, நாகமங்கலம் மற்றும் ஒரத்தூர் ஆகிய அரசு விதைப் பண்ணைக்ளில் எண்ணெ பனை நாற்றங்கால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. பிப்ரவரி 94 வரை ரூ.80.26 லட்சம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு நடப்படும் எண்ணெ பனைகளிலிருந்து மகசூல் 3ம் ஆண்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாம் ஆண்டிலிருந்து மகசூல் 20 மெ.டன் ஒரு ஹெக்டேருக்கு என்ற அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடை செய்யப்படும் எண்ணெ

பனை பழங்களை, 24 மணி நேரத்திற்குள் சுத்திகரிப்பு செய்யப்பட வேண்டும். இதற்கென, சுத்தகரிப்பு நிலையங்களை மாவட்டத்திற்கு ஒன்று வீதம் அமைத்து, அறுவடை செய்தவுடன் எண்ணெய் பனை பழங்களை பதப்படுத்தி சுத்திகரிப்பு செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறது.

தேசீய நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

45. மானாவாரி பகுதிகளில் தேசீய நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழ் நாட்டில் 1990–91ம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 மாவட்டங்களை சேர்ந்த 84 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தென்னாற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், திருச்சி, பெரியார், கோயம்பத்தூர், புதுக்கோட்டை, தர்மபுரி, திண்டுக்கல் அண்ணா, மதுரை, பசும் பொன், காமராஜர் மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய 14 மாவட்டங்களில்30 சதவிகிதத்திற்கும் கீழ் நீர் ஆதாரம் உள்ள பகுதிகளை தேர்வு செய்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவில் 75%மத்திய அரசின் மானியாகவும், 25% மத்திய அரசின் கடனாகவும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1990–91 ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு செயல் படுத்தப்படும். திட்டத்தின் மொத்த மதிபப்பீடு ரூ41.51 கோடியாகும். இத்திட்டத்தினால் 89,0225 ஹெக்டேர் பயன் அடையும்,

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்.

1. இயற்கை வளங்களான நிலம், நீர், தாவரங்கள், கால்நடைகள் மற்றும் மனித வளம் ஆகியவற்றை செம்மைப்படுத்தி திருத்தி பயன்படுத்துதல்.

2. திட்ட காலத்தின் போதும், அதற்கு பிறகும், அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

3. சுற்றுப்புற சூழலை அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றறுப்புற சூழ சமநிலையை திரும்பச் செய்தல்.

4. இறவை மற்றும் மானாவாரி பகுதிகளுக்கு இடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.

1994 ஏப்ரல் 20]

5. மானாவாரி விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்கள் வருமானத்தை பெருக்குதல்.

46 இத்திட்டதில் தடுப்பு அணைகள் அமைத்தல் மற்றும் ஆழ் ஓடை தடுப்பு முறைகள் மூலம் நீர் வழிகளை சீர்படுத்துவது, மண் மற்றும் நீர் வளத்தை பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகள் பொது நிலங்கள், வனப்பகுதிகள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயிகளின் பட்டா நிலங்களில் சரிவுக்கு குறுக்கே நடவு செய்யும் நோக்கத்துடன் வெட்டி வேர் விநியோகம் செய்யப்படுகின்றன. மண் மற்றும் ஈரத் தன்மை பாதுகாக்கப்படுகிறது. மேலும் மரப் பயிர்களான பழங்கள், மர வகைகள், எரிபொருள்கள், தீவனம் மற்றும் நார் அளிக்கக்கூடிய மரக்கன்றுகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு நடவு மேற்கொள்ளப்படுகிறது. 1991–92ம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள ஐந்து வேளாண் பருவ நிலை மண்டலங்களுக்கும் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இதற்காக ரூ.80.05 லட்சம் செலவிடப்பட்டது.

1992–93ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென மத்திய அரசு ரூ.1129.553 லட்சம் அளித்துள்ளது. இதில் ரூ.700 லட்சம் வேளாண்மை துறைக்கு 14 மாவட்டங்களை சேர்ந்த 84 வட்டாரங்களில் இத்திட்டம் கீழ்கண்ட பணிகளை செயல்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அ. அடிப்படை நடவடிக்கைகள்

ஆ. சாகுபடிக்கு ஏற்ற நிலங்களில் மேம்பாட்டு பணிகள்

இ. சாகுபடிக்கு தகுதியற்ற நிலங்களில் மேம்பாட்டு பணிகள்.

ஈ. கால்நடை பராமரிப்பு பணிகள்; *1992-93* ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல் படுத்துவதற்கு வேளாண்மை துறையில் ரூ.**604.31** இலட்சம் செலவிடப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறைக்கு மண் வள பாதுகாப்பு பணிக்காக ரூ.429.553 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

47. ***1993-94*** ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கிசான் நாற்றங்கால் அமைத்தல், விவசாயிகளுக்கு பயிற்சி, கருத்தரங்கு, பரணிசேத்னா மையங்கள் கட்டுதல், ஒருங்கிணைந்த பண்ணை திட்டம், சரிவுக்கு குறுக்கே உயிர் வேலி அமைத்தல், பயிர் நிரூபணங்கள், மானாவாரி தோட்டக்கலை, இயற்கை உர வேளாண்மை, வீட்டுத் தோட்டம்

TRUTH ALONE TRIUMPHS

அமைத்தல், புல்வெளிகள் அமைத்தல், மரங்கள் மற்றும் செடிகள் நடவு செய்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.675.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி 94 வரை ரூ.585.49 இலட்சம் செலவிடப்பட்டது.

அயல்நாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்

தமிழ் நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

48. 1991-92 ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரூ.309.29 கோடி செலவில் தமிழ் நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டம் கீழ்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.

அ. அபிவிருத்தி தடைகளை கண்டறிந்து அதை களைவதற்கான வழிமுறைக்கு முன்னுரிமை அளித்து அரசின் செயல் திறனை மேம்படுத்துவது.

ஆ. விவசாயிகளுக்கு குறைந்த செலவில் பணி புரிவதற்கான நிறுவனங்களை மேம்படுத்துதல்.

இ. மாநில வேளாண்மை தொலை நோக்கு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி திட்டத்தில் முன்னுரிமை அளித்து உறுதுணை செய்தல்.

இத்திட்டம் எட்டு முக்கிய இனங்களோடு வேளாண் துறையால் செயல்படுத்தப்படுகிறது. இனங்கள் வாரியாக செயல்பாடு மற்றும் பிப்ரவரி 94 வரையிலான நிதிசாதனை பின் வருமாறு:

அட்டவணை 2.20

தமிழ் நாடு வேளாண்மை வளர்ச்சி திட்ட முன்னேற்றம்

வ.எண்	விவரங்கள்	செயல்படுத்தும் துறை	7 வருடத் திற்கான மொத்த ஒதுக்கீடு	31.3.93 வகையிலான சாதனை	1993–94 ஆண்டுக் கான ஒதுக்கீடு	1993–94 பிப்ரவரி வரை செலவு
1.	வேளாண்மை திட்டம்	மாநில திட்டக்குழு	535.06	7.77	16.47	10.32
		மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி துறை	–	13.41	–	2.04
		வான்முறை மற்றும் மதிப்பீட்டு பிரிவு	–	14.07	13.96	8.45
		வேளாண்துறை	–	38.95	24.14	18.54
2.	வேளாண்மை விரிவாக்கம்	வேளாண் துறை	5602.27	832.91	511.94	500.09
3.	விதை உற்பத்தி	வேளாண் பல்கலைக் கழகம்	955.85	34.82	7.00	13.45
		வேளாண்துறை		44.99	94.90	42.30
		விதைசான்றுத்துறை		82.99	66.84	45.86
4.	நீர் பிடிப்பு மேம்பாடு	வேளாண்துறை	4732.19	198.65	327.09	334.93
5.	கால்நடை மேம்பாடு	கால் நடை பராமரிப்பு துறை	4662.73	601.80	852.60	289.41
6.	காடு வகைப்பு	வனத்துறை	4219.52	519.77	457.67	627.41
7.	கிராம புற சாலைகள்	தலைமை பொறியாளர்	5453.51	163.16	639.00	466.67
8.	குடிநீர் வசதி	ஊரக வளர்ச்சித் துறை	4768.33	267.50	966.41	602.56
		மொத்தம்	30929.46	2800.00	3978.02	2962.03

தமிழ் நாடு பண்ணை மகளிர் திட்டம்

49. டானிடா நாட்டு நிதி உதவியுடன் தமிழ் நாடு பண்ணை மகளிர் திட்டம் 1986 முதல் ஏழு வருடங்களுக்கு ரூ.4.13 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் பண்ணை மகளிருக்கு நவீன தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்து பங்கேற்க செய்வதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதே நோக்கமாகும். இதனால்

சிறு/குறு விவசாய குடும்பத்தைச் சேர்ந்த பண்ணை மகளிரின் பொருளாதார நிலை மேம்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் பகுதி செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆறு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு ஏப்ரல் *93*ல் முடிவடைந்தது. மேலும் நடப்பு திட்டத்தை மேற்சொன்ன ஆறு மாவட்டங்களில் செப்டம்பர் *93* வரை தொடர்ந்து செயல்படுத்த ரூபாய் *25.00* இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டது. பிப்ரவரி 94 வரை இத்திட்டத்தின் கீழ் ரூ.32.21 இலட்சம் செலவிடப்பட்டது. டென்மார்க் அரசும், மத்திய அரசும் தமக்கிடையே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை தொடர்ந்து ரூ.28.735 கோடி செலவில் தமிழ் நாடு பண்ணை மகளிர் பகுதி 2 திட்டம் அக்டோபர் 93 முதல் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு செயல்பட துவங்கியுள்ளது திட்ட முன்னோடி நடவடிக்கைகளாக வேளாண்மை அலுவலர் (பண்ணை மகளிர்) 26 வட்டாரங்களில் நியமனம் செய்யப்பட்டு, புத்தூட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாடு பண்ணை மகளிர் பகுதி 2 திட்டம் ஏப்ரல் 94 முதல் செயல்பட உள்ளது. ஆரம்பகட்டமாக ஏப்ரல் *94* முதல் *15* மாவட்டங்களில் பயிற்சி மற்றும் பின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். *1993-94*ம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் *1994-95*ம் ஆண்டிற்கான செயல் திட்டம் பின்வருமாறு:

அட்டவணை 2.21

தமிழ் நாடு பண்ணை மகளிர் பகுதி II திட்டம்

வ.எண்.	நடவடிக்கை	செயல் இலக்கு (எண்)	பிப்ரவரி 94 முடிய சாதனை	நிதி (ரூ.லட்சத்தில்) இலக்கு	சாதனை	1994–95 ஆண்டு இல்க்கு
1.	(அ) கிராம நிலையயிற்சி	36	34			234
	(ஆ) பயிற்சி பெற்றவர்கள்	1080	1020			
2.	(அ) சிறப்புப்பயிற்சி	12	12			
	(ஆ) பயிற்சி பெற்றோர்	384	384	43.50	32.21	
3.	(அ) பண்ணை மகளிற் கருத்தரங்கு	6	6			52
	(ஆ) பங்கு பெற்றோர் எண்ணிக்கை	900	897			
4.	தொடர் நடவடிக்கை நிருபணங்கள்	144	136			1872

1994 ஏப்ரல் 20]

மானாவாரி நிலங்களில் வேளாண் காடுகள் (சிடா திட்டம்)

50. ஸ்வீடன் நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சமூக காடுகள் திட்டத்தின் பகுதி 2ல் ஒரு பகுதியாக மானாவாரி நிலங்களில் வேளாண் காடுகள் திட்டம் வேளாம் துறையினால் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தினால் உணவு, தீவனப் பொருள்கள், எரிபொருள் ஆகியவை மற்றும் இதர வனப் பொருள்கள், சிறு/குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1993–94ம் ஆண்டில் ரூ.144.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி தவிர இதர 19 மாவட்டங்களில் 9,150 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் சிறு/குறு விவசாயிகளுக்கு இலவசமாக 500 கன்றுகள் வரை விநியோகம் செய்யப்படுகின்றன. இவ்வாண்டு மரங்களின் பிழைப்பு சதவிகிதம் அதிகமாகும் பொருட்டு, தீவிர அபிவிருத்தி மையங்களில் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் ஒட்டு மொத்தமாக தேர்ந்தெடுத்து அவற்றில் நடவு மேற்கொள்ளப்படுகிறது. களப்பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் வேளாண் காடுகளின் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. 5 முதல் 6 நாட்களுக்கு நடைபெறும் இப்பயிற்சியில் பயிற்சி பெறுவோர், பல்வேறு இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு, பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தை செயல்படுத்தும் களப்பணியாளர்கள் தென்னிந்தியாவிலுள்ள வேளாண் காடுகள் மையங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு சில சிறப்பு அம்சங்களை தெரிந்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 94 வரை சாதனை விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 2.22

சிடா வேளான் காடுகள் திட்டம் (93-94)

இனம்	இலக்கு 1993–94	பிப்ரவரி 94 வரை சாதனை
மரக்கன்றுகள் (லட்சம் எண்கள்)	14.40	9.15
நிதி (ரூ.லட்சம்)	144.00	110.48

இத்திட்டம் 1994–95ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாநில அரசின் திட்டங்கள்

தரிசு நில மேம்பாட்டு திட்டம்

51. தமிழ் நாட்டிலுள்ள தரிசு நிலங்களை சாகுபடியின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு இத்திட்டத்தை பின்வருமாறு செயல்படுத்துகிறது.

1. மர வகைகளான தைல மரம், புளி, மா, அகேஷியா, சுபாபுல் சவுக்கு போன்றவை வளர்த்தல். 2. ஆண்டுப் பயிர்களான சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, மிளகாய், பயறுவகைகள் போன்றவை மரப்பயிர்களுக்கு இடையில் ஆரம்ப காலத்தில் ஊடுபயிராக பயிரிடுதல். இவ்வாறு செயல்படுத்துவதற்கு எக்டேருக்கு ரூ. 1500 வீதம் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. தரிசுநில சாகுபடிக்கான (ஒரு எக்டருக்கு ஆகும்) செலவினத்தில் அரசின் பங்கு மற்றும் விவசாயின் பங்கு விவரம் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.23

ஓர் எக்டருக்கான தரிசு நில மேம்பாடு செலவு

ரூபாயில்

வ.எண்.	விவரம்	அரசு பங்கு	விவசாயின் பங்கு	மொத்தம்
1.	புதர் அழித்தல்	—	200	200
2.	டிராக்டர் மூலம் ஆழ உழுதல்	400	—	400
3.	குழி எடுத்தல் உரமிட்டு நடவு செய்தல்	1000	500	1500
4.	விதை கிரயம், விதைப்பு மற்றும் அறுவடை	100	300	300
	மொத்தம்	1500	1000	2500

1991–92 முதல் 1993–94 வரை மாவட்ட வாரியாக அடைந்த முன்னேற்ற விவரம்

அட்டவணை 2.24

தரிசு நில மேம்பாடு முன்னேற்ற அறிக்கை

வ.எண்.	மாவட்டம்	1991–92		1992–93		1993–94	
		செயல் எக்டர்	நிதி ரூ.இலட்சம்	செயல் எக்டர்	நிதி ரூ.இலட்சம்	செயல் எக்டர்	நிதி ரூ.இலட்சம்
1.	செங்கை எம்.ஜி.ஆர்.	–	–	500	7.497	800	12.000
2.	தென்னாற்காடு வள்ளலார்	–	–	500	7.450	300	4.500
3.	விழுப்புரம் ராமசாமி	–	–	–	300	4.500	
4.	வட ஆற்காடு அம்பேத்கார்	–	–	294	4.077	150	2.243
5.	திருவண்ணாமலை சம்புவராயர்	–	–	500	7.500	150	2.249
6.	சேலம்	–	–	500	7.499	500	7.500
7.	தர்மபுரி	250	3.750	750	1.250	750	11.250
8.	கோயம்புத்தூர்	–	–	500	7.500	500	7.500
9.	பெரியார்	–	–	500	7.500	500	7.500
10.	திருச்சி	–	–	1000	15.000	750	11.252
11	புதுக்கோட்டை	–	–	500	7.500	500	7.500
12.	தஞ்சாவூர்	–	–	–	–	250	3.750
13.	நாகப்பட்டிணம்	–	–	–	–	150	2.250
14.	மதுரை	250	3.750	750	11.250	750	11.258
15.	திண்டுக்கல் அண்ணா	750	11.250	772	1.580	600	8.996
16.	ராமநாதபுரம்	250	3,750	500	7.449	500	7.500
17.	பசும் பொன்	1125	16.875	500	7.500	500	7.500
18.	காமராஜர்	750	11.250	750	11.250	724	10.860
19	நெல்லை கட்டபொம்மன்	1375	20.625	498	7.471	526	7.891
20.	வ.உ.சிதம்பரனார்	250	3.750	500	7.500	800	11.998
	மொத்தம்	5000	75.000	9814	146.773	10000	149.99

1993–94-ம் ஆண்டில் தரிசு நில மேம்பாட்டு இலக்கு 10,0000 எக்டேரும், முழுமையாக ரூ.150.00 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1994–95ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து. வீணான நில மேம்பாடு திட்டத்துடன் இணைந்து செயல் படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஒருங்கிணைந்த எண்ணை வித்து அபிவிருத்தி திட்டம்

52. மானாவாரி மணிலா சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் எக்டருக்கு ரூ.500/– விதைக்காவும், ரூ.150/– பூச்சி மருந்துக்காகவும், சிவப்பு கம்பளிப்புழுவைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 6000 எக்டர் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தித் திட்டம்

53. தமிழ் நாட்டில் விவசாயிகளுக்கு தரமான தென்னங்கன்றுகள் வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. 26 தென்னை நாற்றங்கால்கள் மூலம் நெட்டை × குட்டை கன்றுகளும், ஆறு தாய் நாற்றங்கால்களிலிருந்து நெட்டை ரக நெற்றுக்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. மேலும் தென்னையில் கருந்தலை புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள், 19 ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் மூலம் தயார் செய்து வினியோகிக்கப் படுகின்றன. மேலும் இரண்டு மையங்களில் பச்சைக் காளான்கள் வளர்க்கப்பட்டு தென்னையில் வரும் காண்டாமிருக வண்டினைக் கட்டுப்படுத்த விநியோகிக்கப்படுகிறது. **1993-94**ம் ஆண்டில் தென்னை விதை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் வினியோகம் பின்வருமாறு:

அட்டவணை 2.25

அலகு : லட்சம் எண்கள்

	இலக்கு 93–94	சாதனை பிப்ரவரி 94 வரை
1. நெற்றுகள் கொள்முதல்		
அ) நெட்டை	17.50	13.980
ஆ) நெட்டை குட்டை	10.05	5.460
இ) குட்டை நெட்டை	0.30	0.160
மொத்தம்	27.85	19.600
2.தென்னங்கன்றுகள் விநியோகம்		
அ) நெட்டை	14.00	10.240
ஆ) நெட்டை குட்டை	7.00	2.430
இ) குட்டை நெட்டை	0.18	0.015
மொத்தம்	21.18	12.685

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994–95 ஆண்டு செயல்திட்டம்

54. 7.00 இலட்சம் நெட்டை x குட்டை மற்றும் 0.18 இலட்சம் எண்கள் குட்டை xநெட்டை ரக தென்னங்கன்றுகள் வினியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 21 மாவட்டங்களில், வீரிய ஒட்டு தென்னங்கன்று நாற்றுகள் உற்பத்திக்காக தனியார் ஒட்டுச் சேர்க்கை மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி முன்னேற்றத்திலுள்ளது. தெரிவுச் செய்யப்பட்ட தனியார் தென்னை மையங்களிலிருந்து சுமார் 10 லட்சம் நெட்டை x குட்டை தென்னை நெற்றுக்கள் மேலும் 30000 எண்கள் குட்டை x நெட்டை நெற்றுகள் நவலக் தென்னை நாற்றங்ககாலிருந்தும் கொள்முதல் செய்யப்படும். இவ்வாறாக, மொத்தம் 10.30 இலட்சம் நெட்டை x குட்டை மற்றும் குட்டை x நெட்டை நெற்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 26 தென்னங் நாற்றங்களில், நடவு செய்து, வீரிய ஒட்டு தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து 1994–95 ஆண்டிற்கான தென்னங்கன்றுகளின் தேவை பூர்த்திச் செய்யப்படும்.

தென்னை வாடல் நோய் கணக்கெடுப்புத் திட்டம்

55. தென்னாற்காடு வள்ளலார், வடஆற்காடு அம்பேத்கார், திருச்சி, கோயம்புத்தூர், பெரியார், மதுரை, திண்டுக்கல் அண்ணா, காமராசர், கன்னியாகுமரி, நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பயிற்சி பெற்ற 380 ஆய்வாளர்களை கொண்டு தென்னை வாடல் நோய் தாக்கிய மரங்களை கண்டு பிடித்து, கணக்கெடுக்கும் பணி கேரள மாநிலம், காசர்கோட்டில் உள்ள மத்திய மலைத் தோட்ட பயிர்கள் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலைய வல்லுனர்கள், தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மைதுறை அலுவலர்கள் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் ரூ.3.10 லட்சம் செலவில் மேற்கொள்ளபபட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவில் மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இந்த கணக்கெடுப்பு பணி முடிவடைந்ததும் தென்னையில் தஞ்சாவூர் மற்றும் கேரளா வாடல் நோய் ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

புரட்சித் தலைவியின் பள்ளி மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம்

56. தென்னை வளர்பபதில் பள்ளி மாணவர்களுக்கு ஆர்வத்தை தூண்டவும், அதனை பற்றி அறிந்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கும் வகையில் ஆறாம் வகுப்பு படிக்கும் சிறு/குறு விவசாய குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு தென்னங்கன்று வீதம் வழங்கப்படுகின்றது. பிப்ரவரி 94 வரை 1.50 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த தென்னங்கன்றுகளுடன் சாகுபடி முறைகள் அடங்கிய கையேடு ஒன்றும் வழங்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 101,194 தென்னங்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வினியோகிக்கப்பட்டது. இவ்விதம் வினியோகிக்கப்பட்ட தென்னங்கன்றுகள் 1997–98 முதல் பலனளிக்க தொடங்கி 30.36 இலட்சம் தேங்காய்கள் கூடுதலாக உற்பத்தியாகும். 1993–94 ஆம் ஆண்டில் வினியோகிக்கப்பட்ட தென்னங்கன்றுகள் 4½ முதல் 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 45 இலட்சம் கூடுதல் மகசூல் கிடைக்கும். இத்திட்டம் 1994–95 ஆம் ஆண்டில் 4 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன் பெறும் வகையில் 4 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டம்

57. நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் திருந்திய தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதின் மூலம் விவசாயிகளுக்கு அதிகபடியான மகசூல் பெற வழிசெய்தல் ஆகும்.

பின்வரும் வழிமுறைகள் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அ.மேம்படுத்தப்பட்ட இரகங்களை அதிக பரப்பில் பயிரிட செய்தல். ஆ. பரிந்துரைப்படி உரமிடுதல் மற்றும் பயிர் பாதுகாப்பின் கீழ் மொத்த பரப்பினையும் கொண்டு வருதல். இ. இறவைக்கு 15 சதம், மானாவாரிக்கு 10 சதம் என்றளவில் சான்று பெற்ற மேம்படுத்தப்பட்ட வீரிய இரகங்கள் விநியோகம். ஈ. ப்ரொடினியாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு நிர்வாகத்தின் கீழ் நியூக்ளியர் பாலிஹெடிரோசிஸ் வைரஸ் உபயோகித்தல்.

அட்டவணை 2.26

இத்திட்டத்தின் கீழ் 1993-94 மற்றும் பிப்ரவரி 94 வரை சாதனை விவரம் பின் வருமாறு :

வ.எண்.	விவரம்	அலகு	1993-94 இலக்கு	1993-94 பிப்ரவரி 94 வரை சாதனை	ஆண்டு இலக்கு
1.	சாகுபடி பரப்பு	ல.எக்.	2.50	2.45	2.35
2.	பருத்தி உற்பத்தி	ல.பேல்	6.40	6.18	6.60
3.	சான்று வதை உற்பத்தி	குவிண்	3750	3325	3750
4.	சான்று விதை விநியோகம்	குவிண்	3750	3325	3750
5.	உரமிட்ட பரப்பு	ல.எக்.	2.50	2.45	2.35
6.	பயிர் பாதுகாப்பு செய்யப்பட்ட பரப்பு	ல.எக்.	2.50	2.45	2.36
7.	நியுக்ளியர் பாலி ஹெடிரோசிஸ் வைரஸ் உபயோகித்த பரப்பு	எக்	1200	1166	1200
8.	நிதி	ல.ரூ.	0.18	0.24	0.22
9.	சான்றுவிதை உற்பத்தி நிதி	ல.ரூ.	18.29	43.75	52.57

கரும்பு அபிவிருத்தி திட்டம்

பல்வேறு தொழில் நுட்பங்களை கையாண்டு கரும்பு உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் தமிழ் நாட்டில் சிதம்பரநார், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக அனைத்து மாவட்டகளிலும் கரும்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட முறைகளால் கரும்பு உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மொத்த கரும்பு சாகுபடி பரப்பிலும் பரிந்துரைப்படி உரமிடுதல், பயிர்பாதுகாப்பு மேற்கொள்ளுதல், நிரூபணங்கள் அமைத்தல், 10,500 எக்டர் பரப்பில் இடைக்கணு புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விடுதல்.

அட்டவணை 2.27

1993–94 ம் ஆண்டில் பிப்ரவரி 94 வரையிலான சாதனைகள் விவரம் பின்வருமாறு.

வ.எண்.	விவரம்	அலகு	1993–94 இலக்கு	பிப்ரவரி 94 வரை சாதனை	இலக்கு 1994–95ம் ஆண்டு
1.	சாகுபடி பரப்பு	ல.எக்.	2.00	2.22	2.00
2.	உற்பத்தி (கரும்பாக)	ல.மெடன்	251.10	254.80	251.10
3.	தேவையான அளவு உரமிடுதல்	ல.எக்.	2.00	2.22	2.00
4.	நிருபண தளை அமைத்தல்	எண்	575	431	575
5.	ஒட்டுண்ணி விடுதல்	எக்	10500	9679	10500

உழவர் பயிற்சி நிலையங்கள்

58. தமிழ்நாடு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல் அண்ணா மற்றும் உதகமண்டலம் நீங்கலாக மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் தேவையை பழைய பிரிக்கப்படாத மாவட்டத்திலிருக்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மேற்கொள்கின்றன. ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையமும் 22 கிராம நிலை பயிற்சி ஆண், பெண் உழவர்களுக்கும், 10 கிராம நிலைய பயிற்சி அமைப்பாளர்கள், மற்றும் உழவர் விவாத குழு உறுப்பினர்களுக்கும் மேலும் 110 சுழற் பயிற்சி மற்றும் நிருபணங்களும் நடத்தி வருகின்றன. இவை தவிர உழவர் பயிற்சி நிலையங்கள் செய்திக்கடிதம், செய்திப்பலகை, வானொலி, பண்ணை செய்திகள், உழவர் விழா, விவசாயிகள் சுற்றுலா மூலம் பயிற்சி அளித்து வருகின்றன. ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையத்திற்கும் தகவல் ஒலி, ஒளி சாதனங்கள் வழங்கப்பட்டு உழவர் பயிற்சியில் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1993–94ம் ஆண்டில் பிப்ரவரி 94 வரை சாதனை மற்றும் 94–95ன் உத்தேச இலக்குகள் வருமாறு.

அட்டவணை 2.28

உழவர்கள் பயிற்சி திட்டம்

வ.எண்.	விவரம்	பயிற்சிகள் (எண்)	இலக்கு 93–94	பிப்ரவரி வரை சாதனை
1.	கிராம நிலை பயிற்சி ஆண், பெண் உழவர்களுக்கு	264	220	264
2.	உழவர் மன்ற அமைப்பாளர் கிராம நிலை பயிற்சி	120	128	120
3.	சுழற் பயிற்சி மற்றும் நிரூபணம்	1320	1320	1320

வேளாண் பள்ளிகள் :

59. தமிழ் நாட்டில் 18 முதல் 30 வயது வரையுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க பன்னிரண்டு வேளாண் பள்ளிகள் ஒவ்வொன்றும் 25 நபருக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வந்தன. இவற்றில் நவீன தொழில் நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு விவசாய தொழிலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. நபருக்கு ரூ.100.00 ஊக்கத் தொகையும் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்பட்டன. 1992-93 ஆண்டில் அரசு எடுத்த முடிவின்படி வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தை சேர்ந்த நவ்லாக் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த குடுமியான்மலை ஆகிய இரண்டு இடங்கள் தவிர இதர பத்து பள்ளிகளும் மூடப்பட்டன. இவ்விரண்டு பள்ளிகளும் மேம்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டு பட்டைய படிப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 40 மாணவர்கள் வீதம் சேர்க்கப்படுவார்கள்.

மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் :

60. குடுமியான்மலையில் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில், தற்போது வேளாண்மை அலுவலர் (தொழில் நுட்பம்), வேளாண்மை அலுவலர், வேளாண் துணை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி பயிற்சி அளித்து வருகிறது. மேலும் புதிதாக பணியில் சேர்ந்த வேளாண்மை அலுவலர்களுக்கு அறிமுக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சிறப்பு பயிற்சிகள், மற்றும் பலமுனை விரிவாக்கம் போன்றவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மூத்த நடுநிலை அலுவலர்களான வேளாண்மை இணை இயக்குனர், வேளாண்மை துணை இயக்குனர், வேளாண்மை உதவி இயக்குனர்களுக்கு வேளாண்மை விரிவாக்க பயிற்சி அளிக்கும் வகையில் புதியதாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1993-94ம் ஆண்டு பிப்ரவரி வரை சாதனை மற்றும் 94-95க்கான இலக்கு விவரம் வருமாறு:

அட்டவணை 2.29

வேளாண் மேலாண்மை பயிற்சி திட்டங்கள்

வ.எண்.	விவரம்	உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்கள்	பயிற்சி அளிக்கப்பட்டோர் பிப்ரவரி 94 வரை	94-95ல் உத்தேச இலக்கு
அ)	**துறை பயிற்சிகள்**			
1.	மாநில பயற்சி நிலைய அலுவலர்களுக்கு ' பயிற்சி	50	23	25
2.	உயர், நடுநிலை அலுவலர்க்கு வேளாண விரிவாக்க பயிற்சி,	180	–	180
3.	புத்தூட்ட பயிற்சி வேளாண உதவி அலுவலர்	110	111	225
4.	அறிமுக பயிற்சி வேளாண் அலுவலர்	71	20	80
5.	கணிணி பயிற்சி	20	–	20
6.	கணிணி சிறப்பு பயிற்சி	60	–	60
ஆ)	**தொழில் நுட்ப பயிற்சிகள்**			
7.	பலமுனை விரிவாக்கத்தில் தெரிவு செய்த பகுதிகளுக்கான பயிற்சி			
அ)	ஒருங்கிணைந்த பண்ணை முறை வேளாண்மை அலுவலர்	350	221	350
	உதவி வேளாண்மை அலுவலர்	500	338	500
ஆ)	வேளாண்காடுகள்: வேளாண்மை அலுவலர்	350	223	350
	உதவி வேளாண்மை அலுவலர்கள்	500	391	500

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ.எண்.	விவரம்	உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்கள்	பயிற்சி அளிக்கப்பட்டோர் பிப்ரவரி 94 வரை	94-95ல் உத்தேச இலக்கு
இ)	தீவன அபிவிருத்தி மற்றும் கால்நடை சத்துக்கள்			
	வேளாண்மை அலுவலர் :	350	212	350
	உதவி வேளாண்மை அலுவலர்	500	380	500
ஈ)	மண்வள பாதுகாப்பு :			
	வேளாண்மை அலுவலர்	350	182	350
	உதவி வேளாண்மை அலுவலர்	500	336	500
8.	பலமுனை விரிவாக்கத்தில் உயர்,நடுநிலை அலுவலர்க்கான சிறப்பு பயிற்சி	360	–	360
9.	10 தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் வேளாண்மை அலுவலர் சிறப்பு பயிற்சி	180	–	180
10.	பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி	125	–	125
11.	தோட்டக்கலை	40	–	40
12.	மீன் வளர்ப்பு	250	–	250

மண் பரிசோதனை நிலையங்கள்

61. பதினான்கு மண் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பதினைந்து நடமாடும் மண் ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ் நாட்டில் தற்போது இயங்கி வருகின்றது. இவற்றில் விவசாயிகளின் மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு குறிப்பான உர பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன. இத்துடன் பிரச்சனை உள்ள மண்ணிற்கு சீர்திருத்த பரிந்துரைகளும் அளிக்கப்படுகின்றன. தற்போது பாசன நீர் ஆய்வு மற்றும் மண்வள வரைபடம் தயாரித்தல் போன்றவையும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டொன்டிற்கு மண் ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் 7.00 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. தற்போது மண்வள ஆய்வுகளும் இந்த மண் ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் செய்து வருகின்றது. இதனால் மண் ஆய்விற்கான நம்பகமான முறைகளை கண்டறியவும் அதன் அடிப்படையில் முக்கிய பயிர்களுக்கு பரிந்துரை வழங்க ஏதுவாகிறது. மண் ஆய்வு ஒன்றுக்கு ரூ.2/- வீதம் பெற்றுக் கொண்டு ஆய்வு அறிக்கை உர சிபாரிசுடன் அளிக்கப்படுகிறது. கிராம மண்வள நிலை கண்டறிய, மண் பரிசோதனை நிலைய்ங்களின் செயல் திட்டத்தில்

அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் இடத்திற்கும், சூழ்நிலைக்கு உகந்ததாயும் இருக்கும். 93-94 ம் ஆண்டில் பிப்ரவரி 94 வரை சாதனை மற்றும் 94-95ன் உத்தேச இலக்குகள் வருமாறு.

அட்டவணை 2.30

மண் ஆய்வு திட்டங்கள்

(இலட்சம் எண்கள்)

	1993-94 இலக்கு	பிப்ரவரி 94 வரை சாதனை	1994-95 இலக்கு
மண் ஆய்வு நிலையங்கள்	6.84	5.36	6.84
நடமாடும் மண் ஆய்வு நிலையங்கள்	2.70	2.40	2.70
மொத்தம்	9.54	7.76	9.54

மண்வள குறிப்பு அட்டைகள்

62. விவசாயிகளுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் உரப் பரிந்துரை அட்டைகளுக்கு பதிலாக மண்வளக் குறிப்பு அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மண் வள அட்டைகள், தற்போது வழங்கப்படும் சிபாரிசு அட்டைகளை போல் இல்லாமல் நிரந்தர அட்டைகளாக இருக்கும். இந்த அட்டையில் ஆய்வு செய்யப்பட்ட மண்ணின் பௌதீக இரசாயன மற்றும் உயிரியியல் தன்மைகள் பற்றியும் விவரங்கள் அடங்கி இருக்கும். மண்ணின் பல்வேறு சத்துக்களின் நிலை மற்றும் பிரச்சனை உள்ள பகுதிகளுக்கு சீர்திருத்த முறைகளும் இதில் அளிக்கப்படும். மண்ணின் சத்துக்களின் நிலையை பொறுத்து பல்வேறு பயிர்களுக்கான உர பரிந்துரைகள் இந்த அட்டைகளில் அளிக்கப்படும். தமிழ் நாட்டில் மொத்தமுள்ள 71.84 இலட்சம் பண்ணை குடும்பங்கள் உள்ளன. முதல் கட்டமாக இத்திட்டம் 37,995 பண்ணைக்குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 1994-95 ம் ஆண்டில் திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டாரம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை மற்றும், தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் வட்டாரம் ஆகிய மூன்று வட்டாரங்களில் ரூ.5.00 மட்டுமே விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்டு இவ்வட்டைகள் வினியோகிக்கப்படும்.

பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்

63. ஆண்டு ஒன்றுக்கு 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யக்கூடிய திறன் கொண்ட 9 பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1993-94 ம் ஆண்டு, பிப்ரவரி 94 வரை 14,629 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 2.31

பூச்சி மருந்துகள் ஆய்வு திட்டம்

வ.எண்	திட்டங்கள்	மாதிரிகள் (எண்கள்) 1993-94 இலக்கு	பிப்ரவரி 94 வரை சாதனை	1994-95 இலக்கு
1.	ஆய்வு செய்யப்பட்ட பூச்சி மருந்து மாதிரிகள்	16200	14629	16200

1994-95ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உரப்பரிசோதனை நிலையங்கள்

64. விவசாயிகளுக்கு தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரப்படி வழங்கும் நோக்கத்துடன் உரக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண் அலுவலர்களால் சில்லறை, மொத்த விற்பனை, உற்பத்தி கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள ஆறு உரப் பரிசோதனை நிலையங்கள் மூலம் 11,000 உரமாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டன. 1992-93ம் ஆண்டு வரை தமிழ் நாட்டில் ஆறு உரப் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1993-94 ஆண்டில் புதிதாக மேலும் இரண்டு உரப் பரிசோதனை நிலையங்கள் விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. பிப்ரவரி 94 வரை 10283 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1994-95ம் ஆண்டில் 14,400 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

இந்தியாவில் உள்ள 44 உர ஆய்வு நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் 96,560 உர மாதிரிகள் ஆய்வுசெய்யப்படுகின்றன. இதில் தமிழகத்தில் அமைந்துள்ள 6 உர ஆய்வு நிலையங்களில்

மட்டும் (11 சதம்) ஆண்டுக்கு 11,000 உர மாதிரிகள் ஆய்வுசெய்யப்படுகின்றன. தனியார் கூட்டுறவு மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து ஆண்டுதோறும் 20,007 உரமாதிரிகள் எடுத்து ஆய்வுசெய்யப்படுகின்றன. 1985 ஆம் ஆண்டு நடமுறைப்படுத்தப்பட்ட உரத் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் தரமான உரங்கள் விவசாயிகளிடையே கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.32

உரப்பரிசோதனை முடிவுகள்

		எண்கள்
1.	எடுக்கப்பட்ட உரமாதிரிகள்	10283
2.	ஆய்வுசெய்யப்பட்ட உரமாதிரிகள்	10115
3.	தரக்குறைவான உரமாதிரிகள்	414
4.	உரிமம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டவை	105
5.	ரத்து செய்யப்பட்ட உரிமங்கள்	6
6.	பறிமுதல் செய்யப்பட்டவை	2
7	எச்சரிக்கை கொடுக்கப்பட்டவை	194
8	தண்டனை வழங்கப்பட்டவை	5
9	நடைமுறையில் உள்ள குற்றாய்வு	102

அகில இந்திய அளவில் தரக்குறைவான உரமாதிரிகள் 6 சதமாக இருந்த போதிலும் தமிழகத்தை பொறுத்த வரை 4.09 சதம் மட்டுமே தரக்குறைவான உரமாதிரிகள் உள்ளன. 1994-95 ஆம் ஆண்டு 14400 உரமாதிரிகள் ஆய்வு செய்யப்பட இருக்கின்றன.

நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்

65. குடுமியான்மலையில் உள்ள நுண்ணூட்ட கலவை உற்பத்தி மையம் ஆண்டு ஒன்றுக்கு 1000 மெ.டன் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி 94 வரை 1153 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994-95ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு

66. மண்ணின் தன்மை மற்றும் அவற்றின் குணாதிசயங்கள் பௌதீக மற்றும் இராசாயன தன்மைகள் ஆகியவறவற்றை கள ஆய்வின் படியும், ஆய்வகங்களில் கண்டறிந்த சோதனை முடிவின் படியும்

கண்டறியப்படுகிறது. இதன் அடிப்படையில் மண்ணின் வகைகள் பிரிக்கப்பட்டு அவற்றினை வரைபடம் மூலம் வரைந்து பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 14.40 / எக்டேர் இலக்கிற்கு பிப்ரவரி 94 வரை 9.96 இலட்சம் எக்டேரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது 1994-95ம் ஆண்டிலும் இப்பணிகள் தொடர்ந்து நான்கு மையங்களான கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

களர் மற்றும் உவர் நில சீர்திருத்த திட்டம்.

67. சாகுபடிக்கு உபயோகப்படாத களர், உவர் மற்றும் அமிலத் தன்மையுடைய நிலங்களை சீர்திருத்தும் நோக்கத்துடனும், ஜிப்சம் இட்டு, மண்ணின் நிலையை உயர்த்த, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 800 எக்டேர் பரப்பினை சீர்திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிப்ரவரி 94 வரை 755 எக்டர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. 1994-95ம் ஆண்டிலும் 800 எக்டர் பரப்பில் இந்த சீர்த்திருத்த பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர் விளைச்சல் போட்டி

68. விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தி அதிகப்படுத்தவும், பயிர் விளைச்சல் போட்டிகளில் விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள வகை செய்யவும், இந்த பயிர் விளைச்சல் போட்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், நெல், இறவை, மணிலா, சோளம், கம்பு, பச்சைபயறு, உளுந்து மற்றும் காராமணி ஆகிய பயிர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. நெல் விளைச்சலுக்கான மாநில அளவு முதல் பரிசுத் தொகை ரூ.1,00,000 இரண்டாம் பரிசுத் தொகை ரூ.50,000 நிர்ணயிக்கப்பட்டது. பயிர்வாரியாக பரிசுத் தொகை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகிய விவரங்கள் பின்வருமாறு. 1993-94ம் ஆண்டு இத்திட்டம் 14.00 இலட்சம் ஒதுக்கீட்டுடன் செயல் படுத்தப்படுகிறது. 1994-95ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

அட்டவணை 2.33

பயிர் விளைச்சல் போட்டி பரிசுகள்

(ரூபாயில்)

வ. எண்.	பயிர்	பரிசுத்தொகை				பதிவுக்கட்டணம்	
		மாநில அளவு		மாவட்ட அளவு		மாநில அளவு	மாவட்ட அளவு
1.	நெல்	100000	50000	7000	3000	100	50
2.	மற்ற பயிர்கள் (சோளம், கம்பு, உளுந்து, பயறு, காராமணி மற்றும் மணிலா)	5000	3000	2000	1000	15	10

மாநில அரசு பரிந்துரை செய்த கரும்பு விலை

69. ***1993-94*** ஆம் ஆண்டிற்கான, குறைந்த விலையாக 8.5 சத சர்க்கரை சத்து மீட்பு ஒரு டன்னிற்கு ரூ.345/- என மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்பே தமிழ்நாடு அரசு, கரும்பு உற்பத்தியாளர்களையும், ஆலை நிர்வாகத்தினரையும் அழைத்து பேசி அவர்களது நிலையை அறிந்தது. வெளிச்சந்தையில் விற்கும் சர்க்கரையின் அளவை அதிகப்படுத்தியதாலும், மொலாசஸ் விற்பனை கட்டுப்பாட்டை தளர்த்தியதாலும் கரும்பு ஆலைகளின் இலாபம் கணிசமாக அதிகரித்தது. எனவே இவற்றினை கருத்திற்கொண்டு கரும்பு உற்பத்தியாளர்களின் நலனையும் கருதி வெல்ல உற்பத்திக்காக கரும்பினை ஒதுக்கும் போக்கினை தவிர்க்கும் பொருட்டு இந்த அரசு, 8.5 சத சர்க்கரை மீட்பிற்கு டன் ஒன்றிறகு ரூ.450/- என விலை நிர்ணயித்தது. இவ்விலை நிர்ணயம் மாநில அரசிற்கென பரிந்துரை செய்யப்பட்ட விலையினை விட டன்னிற்கு ரூ.105/- அதிகப்படுத்தி இதுவரை இல்லாத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்

70. இத்திட்டம் டன்னிற்கு ரூபாய் ஐந்து வீதம் வசூல் செய்த பணத்திலிருந்து செயலாக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிதாக சாலை அமைக்க கரும்பு ஆலை நிர்வாகத்தினரிடமிருந்து பிரேரனை கேட்கப்படுகிறது. 1989-90ம் ஆண்டிலிருந்து 1993-94ம்

ஆண்டு வரை (31.10.93 முடிய) ரூபாய் 3197.09 இலட்சங்கள் கரும்பு வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சாலை அமைக்கும் பணிக்கும் அதற்கான பராமரிப்பு செலவினங்களும் பின்வருமாறு.

அட்டவணை 2.34

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்

வ. எண்	ஆண்டு	புதிய சாலைகள் அமைத்தல் (கிமீட்டரில்)	சாலை நீளம்	பராமரிப்பு பணி	மொத்த செலவினம் (ரூ. இலட்சத்தில்)
1.	1989-90	150.03	37.985	50.00	200.03
2.	1990-91	150.06	32.495	150.13	300.19
3.	1991-92	162.00	35.778	500.00	662.00
4.	1992-93	375.00	12.000	98.17	473.17
5.	1993-94 (31.10.93 முடிய)	108.94	18.870	74.92	183.86

1994-95 ஆண்டிற்காக ரூபாய் 700 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து புதிய சாலை அமைக்கும் பணியையும், மேலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கரும்புச் சாலையினை பழுது பார்க்கும் பணியையும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டம்

71. இந்திய வேளாண் மக்களில் பெரும்பாலோர் ஏழ்மையானவர்கள். மேலும் புதிய வேளாண்மை தொழில் நுட்பங்களை கடைபிடிக்க தயக்கம் காட்டுபவர்கள். மூலதனப்பற்றாக்குறை, போதிய அளவு கடன் வசதியின்மை மற்றக் காரணங்களால் இந்திய விவசாயிகளுக்கு அதிக இடர்பாடுகள் உள்ளன. தற்பொழுது விவசாய கல்வி அவர்களுக்கு தேவையான பயிற்சி மற்றும் விவசாயத்திற்கான தொழில் நுட்பங்களை கொடுக்க வாய்ப்புள்ளது. இதனால் வேளாண்மையில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்கள் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இருப்பினும் படிக்கும் காலத்தில் அவர்கள் பெறும் பயிற்சி போதுமானதாக இல்லாததனால் சுயவேலை வாய்ப்பு அடைய முடியவதில்லை. அதனால் வேளாண் மனித வள மேம்பாடு திட்டத்தை செயலாக்கபட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 75.19 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் செயலாக்கப்பட உள்ளது. இத்திட்டதை அமுலாக்க உள்ள துறைகளில் பயிற்சியின் தேவையை அறிய ஒரு பிரிவு ஏற்படுத்தி துறையில் பணியாற்றும் பணியார்களுக்கு திறமையை அதிகரிக்க பயிற்சிகளும் தேவையான அளவு பயிற்சி பெற்ற பணியாளர்களை நியமிக்கவும் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சியாளரின் பயிற்சிக்கும், பயிற்சி நிலையங்களுக்கு தேவையான சாதனங்களை வாங்குவதற்கும் இத்திட்டத்தின் கீழ் நிதிவசதி செயயப்பட்டுள்ளது. மூன்று பல்கலை கழகங்களிலிருந்தும் மற்றும் ஆறு துறைகளிலிருந்தும் வரப்பெற்ற பிரேரனை அடிப்படையில் ரூபாய் 75.19 கோடி செலவில் உலக வங்கிக்கு அனுப்பும் பொருட்டு இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 1994-95ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர கம்போஸ்ட்

72. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் 101 நகராட்சிகளும், 7 நகரியங்களும் இயங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் 2,56,500 மெ.டன் கம்போஸ்ட் உற்பத்தி செய்ய நகராட்சி மற்றும் நகரியங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டன. மக்கள்தொகை அடிப்படையில் மூன்று சதவீத அளவிற்கு ஒவ்வொரு நகராட்சியும் கம்போஸட் உற்பத்தி திறன் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்த கம்போஸ்டினை விவசாயிகளுக்கு அவர்கள் வயல்களில் உபயோகிப்பதற்கு வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளின் கம்போஸ்ட் உற்பத்தி பின்வருமாறு.

அட்டவணை 2.35

ஆண்டு	உற்பத்தி (மெ.டன்)
1988-89	*256550*
1989-90	*258950*
1990-91	*283900*
1991-92	*257700*
1992-93	*240300*
1993-94	*256500* (இலக்கு)

3% மக்கள் தொகை அடிப்படையின் கீழ் 1994-95 ம் ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்படும். 44 நகராட்சிகள் 1993-94ம் ஆண்டு போட்டியில் பங்குபெற்றன. அதிக அளவு உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நகராட்சிகளுக்கு பரிசுத்தொகையும், சுழற்கோப்பையும் வழங்கப்பட உள்ளன. அதைப்போல 94-95 ம் ஆண்டும் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

கழிவுநீர்ப் பண்ணைகள்

22 உள்ளாட்சி அமைப்புகள், கழிவு நீரினைக் கொண்டு கழிவு நீர்ப் பண்ணைகளை பராமரித்து வருகின்றது. தீவனப்புல், தென்னை, சிறு தானியங்கள், கரும்பு, காய்கறிகள் மற்றும் இதர பயிர்கள் இலாபகரமாக இக்கழிவுநீர்ப்பண்ணைகளில் வளர்க்கப்படுகிறது. இப் பண்ணைகளது பராமரிப்புக்கும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும் தொழில் நுட்ப ஆலோசனை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 3

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்

குறிக்கோள்

தோட்டக்கலை இயக்ககம் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் (காய்கறிகள், பழங்கள், வாசனை திரவியப் பயிர்கள் மற்றும் மலர்கள்) உற்பத்தியினை பெருக்கும் நோக்கோடு செயல்பட்டு வருகிறது. இக்குறிக்கோளினை நிறைவேற்றிட தோட்டக்கலை பயிர்பரப்பினை அதிகரித்திடவும், ஓர் குறிப்பிட்ட அலகு பரப்பில் உற்பத்தியினை பெருக்கிடவும் தரமுள்ள நடவுப்பொருட்கள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகித்து திட்டங்களை செயலாற்றி வருகின்றது. இத்துறை 53 அரசு தோட்டக்கலை பண்ணைகளை நிர்வகிப்பதன் மூலம் மொத்தம் 235 இலட்சம் பழங்கள், மலர்வகைச் செடிகள் மற்றும் மலைப்பயிர்களின் (தேயிலைப் போன்றவை) நடவுப்பொருட்களை விவசாயிகளுக்கு உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது.

பல்வேறு தோட்டக்கலைப்பயிர்களின் கடந்த ஆண்டுகளில் உற்பத்தி அளவுகளும் 1994-95ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்குகளும் பின்வருமாறு.

அட்டவணை 3.1

தமிழ் நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தி

அலகு : பரப்பு இ.எக்டரில்
உற்பத்தி: இ. மெ. டன்னில்

வ. எண்	விவரம்	1991-92 பரப்பு	1991-92 உற்பத்தி	1992-93 பரப்பு	1992-93 உற்பத்தி	1993-94 பரப்பு	1993-94 உற்பத்தி பிப்ரவரி 94 வரை	1994-95 (இலக்கு) பரப்பு	1994-95 (இலக்கு) உற்பத்தி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1.	பழங்கள்	1.57	31.54	1.72	32.59	2.00	35.00	2.20	36.00
2.	காய்கறிகள்	1.65	37.46	1.72	38.00	2.00	36.20	2.30	37.00
3.	வாசனைத் திரவியம் மற்றும் துணை தானியப் பயிர்கள்	1.61	2.76	1.67	3.26	2.00	3.51	2.20	3.70
4.	மலைப் பயிர்கள்	1.85	2.03	1.92	2.15	2.25	2.48	2.47	2.50
5.	மலர்கள்	0.12	0.48	0.13	0.49	0.15	0.49	0.17	0.50
	மொத்தம்	6.80	74.27	7.16	76.49	8.40	77.68	9.34	79.70

தமிழ் நாட்டில் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு தோட்டக்கலை இயக்ககம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு

1. மைய அரசின் திட்டங்கள்

1.1 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

1.2 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

1.3 ஒருங்கிணைந்த ஆதிவாசிகளின் மேம்பாட்டுத் திட்டம்

2. மைய அரசின் உதவி பெறும் திட்டங்கள்

2.1 ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

2.2 ஒருங்கிணைந்த வாசனை திரவியப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

2.3 ஒருங்கிணைந்த வெப்ப பிராந்திய மித வெப்ப மற்றும் குளிர் பிரதேச பழங்கள் சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்

2.4 தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிலப்போர்வை அமைக்கும் திட்டம்

2.4 (அ) சொட்டு நீர் பாசனத் திட்டம்

2.4 (ஆ) தோட்டக்கலைப் பயிர்களுக்கு பாலித்தீன் பசுமை குடில்கள் நிறுவும் திட்டம்

2.5 காய்கறி சிறுதளைகள்

2.6 கோகோ அபிவிருத்தித் திட்டம்

2.7 காளான் வளர்ப்புத் திட்டம்

2.8 வெற்றிலைச் சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்

2.9 வணிக மலர்கள் சாகுபடி அபிவிருத்தித் திட்டம்

2.10 கிழங்கு வகைப்பயிர்கள் சாகுபடி அபிவிருத்தித் திட்டம்

2.11 வாசனை மற்றும் மூலிகைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2.12 தோட்டக்கலை பயிர் விளைச்சல் போட்டித் திட்டம்

3. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் திட்டங்கள்.

3.1. ஒருங்கிணைந்த அறுவடைக்குப்பின் தோட்டக்கலை விளைபொருள்களைக் கையாள கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் திட்டம்

3.2. ஊரகப் பகுதிகளில் பழத்தோட்டங்கள் அமைக்கும் திட்டம்.

3.3. சுற்றுலா மற்றும் பயிற்சி மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் தொழில் நுட்பங்கள் அறியும் திட்டம்.

4. மாநில திட்டங்கள்:

4.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

4.2. பயிற்சி வழி தொடர்பு விரிவாக்கத் திட்டம்

4.3. அரசு தோட்டக்கலை பண்ணைகள்

4.4. நீலகிரி தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம்

4.5. தோட்டக்கலை பயிற்சி மையம், மாதவரத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்.

4.6. தீவிர காய்கறி மேம்பாட்டுத் திட்டம்.

4.7. தோட்டக்கலைப் பயிர் நாற்றங்கால் ஒழுங்குமுறைச் சட்டம் அமுல்படுத்தும் திட்டம்.

4.8. தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (டான்ஹோப்) அமைக்கும் திட்டம்.

4.9. கோவில்களில் நந்தவனம் அமைக்கும் திட்டம்

5. புதிய திட்டங்கள் 1994-95.

5.1. வெங்காயச் சாகுபடி அபிவிருத்தித் திட்டம்

5.2. தோட்டக்கலையில் தேனீ வளர்ப்புத் திட்டம்.

1994 ஏப்ரல் 20]

1. மைய அரசு உதவி பெறும் திட்டம்

1.1 மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்:

இத்திட்டம் மேற்கு தொடர்ச்சிமலை மாவட்டங்களான கோவை, பெரியார், திண்டுக்கல் அண்ணா, மதுரை, காமராஜர், நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மண் அரிமானத்தினை தடுக்கவும் மலைச்சரிவு இயற்கை சூழல் நிலையினை மேம்படுத்திடவும் செயலாக்கப்படுகிறது. இப்பகுதி விவசாயிகளுக்கு தேவைப்படும் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களில் தரமான நடவுச் செடிகள் ஐம்பது சத மானிய விலையில் வழங்கப்படுகிறது. **1993-94** ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 2900 எக்டர் புதிய பரப்பில் நிரந்தர தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி இலக்கை ரூ.78.96 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும். 1994-95ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.79.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2

மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம்

தோட்டக்கலைப் பிரிவு

வ. எண்	பிரிவு	உட்பிரிவு திட்டம்	1989-90	90-91	91-92	92-93	93-94	94-95 (இலக்கு)
1.	2.	3.	4.	5.	6.	7.	8.	9
1.	மித வெப்ப மண்டலப் பழங்கள் அபிவிருத்தித் திட்டம் (நெல்லை கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்கள்)		4.32	4.39	4.44	6.50	6.00	6.50
2.	மதுரை மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் மலை யடிவாரங்கள் மற்றும் நீர்பிடிப்புப் பகுதிகளில் பழங்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான அபிவிருத்தி திட்டம்		16.47	20.70	21.34	26.16	27.85	25.94
3.	காமராஜர் மாவட்டத்திலுள்ள அர்சுனா நீர்ப்பிடிப்புப் பகுதி தோட்டக்கலைப் பயிர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள்		2.75	2.84	3.24	4.46	4.77	4.53

வ. எண்	பிரிவு	உட்பிரிவு திட்டம்	1989-90	90-91	91-92	92-93	93-94	94-95 (இலக்கு)
1.	2.	3.	4.	5.	6.	7.	8.	9
4.	கோவை மாவட்ட நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பழங்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள்		3.65	3.55	3.43	4.42	4.74	4.64
5.	திண்டுக்கல் அண்ணா மாவட்ட கொடைக்கானல் தாலுக்காவில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வாசனைப்பயிர்கள் மலை தோட்டப்பயிர்கள் பொருளாதார பயிர்களாகக் கொண்ட பல அடுக்கு சாகுபடி மற்றும் பழங்கள் அபிவிருத்திக்கான திட்டம்		7.11	7.21	8.30	10.58	10.74	10.21
6.	திண்டுக்கல் அண்ணா மாவட்ட சிறுமலைக் குன்றுகளில் தோட்டக்கலை அபிவிருத்திக்கான திட்டங்கள்			2.15	2.98	4.16	4.45	4.00
7.	திண்டுக்கல் அண்ணா மாவட்ட சமவெளிகளில் தோட்டக்கலை நாற்றங்கால் நிறுவும் திட்டம்			10.91	12.06	7.24	4.65	4.45
8.	மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகட்கு உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டம்			5.51	26.50	2.50	4.42	8.00
1.	பெரியகுளம் அரசு தோட்டக்கலைப் பண்ணைக்கு சொட்டு நீர்ப்பாசனம் ஏற்படுத்துதல்.							
2.	கொடைக்கானல் . அரசு தோட்டக்கலைப்பண்ணைக்கு வேலி அமைத்தல்							
3.	பணியாளர் குடியிருப்புகள் ஏற்படுத்துதல்.							
9.	பெரியார் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பணிகள் விரிவுபடுத்தும் திட்டம்					3.70	4.06	4.01

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	பிரிவு	உட்பிரிவு திட்டம்	1989-90	90-91	91-92	92-93	93-94	94-95 (இலக்கு)
1.	2.	3.	4.	5.	6.	7.	8.	9
10.	மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் தோட்டக்கலை நட-வடிக்கைகளின் விரிவாக்கம்					3.17	2.86	3.96
11.	மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மரம் நடும் திட்டம் செயல்படுத்துதல்					5.62	6.30	2.76
			34.30	57.26	82.29	78.51	80.84	79.00

1.2 மலைப்பகுதி மேம்பாடு திட்டம்:

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் களி மண் அரிமானத்தினால் ஏற்படும் சேதத்தினை தடுக்கும் பொருட்டு குறுகிய கால ஆண்டு பயிர்களின் சாகுபடியிலிருந்து நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான தேயிலை, பழங்கள் மற்றும் இதர பொருளாதார பயிர்கள் சாகுபடிக்கு மாற்றுவதன் மூலமும், மலைப் பகுதி சூழலினை பராமரிக்கவும் செயலாக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் தேயிலை, பழங்கள் மற்றும் பொருளாதார செடிகள் பொது விவசாயிகளுக்கு 75 சத மானிய விலையிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு இலவசமாகவும் வழங்கப்படுகின்றது. தவிரவும், சிறு, குறு மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடி விவசாயிகளுக்கு தேவைப்படும் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த திட்டத்திற்காக ரூ.1022.75 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1993-94 ஆண்டு ரூ.245.78 லட்சங்கள் செலவில் 500 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயலாக்கப்பட்டது. 1994-95 ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் முறையே 500 எக்டர் பரப்பில் தேயிலை மற்றும் இதரப் பழப் பயிர் சாகுபடி செய்ய ரூ.2.50 இலட்சங்கள் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தோட்டக்கலை

ரூபாய் இலட்சத்தில்

வரிசை எண்.	விபரங்கள்	*1991.92*	*1992.93*	*1993.94*	*1994.95* (இலக்கு)
1.	ஒருங்கிணைந்த நடவுத் திட்டம்	34.110	39.416	67.400	77.650
2.	உற்பத்தித் திட்டம்	191.290	141.744	138.400	94.280
3.	புதுத் திட்டங்கள்	—	25.453	24.650	—
அ.	நடவுத் திட்டம்	—	—	—	19.500
ஆ.	உற்பத்தித் திட்டம்	—	—	—	48.600
4.	இதர புதுத் திட்டங்கள்	—	—	—	—
அ.	காளான் வளர்ப்புத் திட்டம்	—	—	—	5.750
ஆ.	வைரஸ் நோய் தாக்காத உருளைக் கிழங்கு விதை உற்பத்தித் திட்டம்	—	—	—	3,000
	மொத்தம்	255.400	206.613	255.780	248.780

13 ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டு திட்டம்

இத்திட்டம் சேலம் மாவட்டம் கொல்லிமலை, சேர்வராயன் மலை, அறுநூற்று மலை மற்றும் பச்சமலைப் பகுதிகளிலும், தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலைப்பகுதிகளிலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைப் பகுதிகளிலும், திருச்சி மற்றும் தென்னாற்காடு மாவட்டம் பச்சமலைப்பகுதிகளிலும் வசிக்கும் ஆதிவாசிகளின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தும் முகமாக செயல் படுத்தப்படுகிறது. ஆதிவாசி விவசாயிகள் பழத் தோட்டங்கள் அமைக்க ஊக்குவிக்குமுகமாக தனி நபர் ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் பழச் செடிகளின் நடவுப் பொருட்கள் முழு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. **1993-94** ஆண்டில் இத்திட்டம் ரூ.**85.65** இலட்சம் செலவில் **2600** ஏக்கர் புதிய பரப்பில் செயலாக்கப்பட்டது. **1994-95** ஆம் ஆண்டில் இந்த திட்டம் ரூ.**94.88** இலட்சங்கள் செலவில் செயலாக்கப்படும்.

அட்டவணை 3.4

ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்ட செயல்பாடு

வ. எண்	விவரங்கள்	1991-92	1992-93	1993-94	1994-95 (இலக்கு)
1.(அ)	ஆதி வாசிகள் நிலங்களில் தனி நபர் பழத்தோட்டம் அபிவிருத்தி (ஏக்கரில்)	2600	2600	2600	2600
(ஆ)	இரண்டாம் அண்டு பழத் தோட்டங்களில் தொடர் நடவடிக்கைகள் (ஏக்கர்)	2600	2600	2600	2600
2.	விவசாயிகளுக்குத் தோட்டக் கலையில் பயிற்சி (எண்கள்)	1300	1300	1300	1300
3.	விவசாயிகளுக்கு தோட்டக் கலை சுற்றுலா	650	650	650	650
4.	விசைத் தெளிப்பான்கள் விநியோகம் (எண்கள்)	130	130	130	130
5.	நிதிக் குறியீடு (ரூ.லட்சத்தில்)	66.83	66.61	86.00	94.88

2. மைய அரசின் உதவி பெறும் திட்டங்கள்:

2.1. முந்திரி அபிவிருத்தித் திட்டம்:

தமிழ் நாட்டில் முந்திரி உற்பத்தியினை பெருக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உயர் விளைச்சல் அளிக்கவல்ல முந்திரி ஒட்டுச் செடிகள் மற்றும் பதியன்கள் 75 சத மானிய விலையிலும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாகவும் விநியோகிக்கப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.437.84 இலட்சங்கள் இந்த திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1993-94ம் ஆண்டில் ரூ84.615 இலட்சம் செலவில் 6055 எக்டேர் பரப்பில் செயலாக்கப்பட்டது. நடப்பு ஆண்டு முதல் விதைகள் மூலம் உற்பத்தி செய்த தரம் குறைந்த செடிகளை நடுவதற்கு தடை விதித்திடவும், முந்திரி ஒட்டுச் செடிகள் நட்டு அதிக விளைச்சல் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரவல்ல ஒட்டு செடிகளை உற்பத்தி செய்திட தோட்டக்கலைத்துறை தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் மற்றும் டாப்கான் நிறுவனம் ஆகியவைகளில் மூன்று நட்டு கன்றுகள் உற்பத்தி மையங்கள் ரூ.24.00 இலட்சம் செலவில் நிறுவப்படும். 1994-95ம் ஆண்டு இத்திட்டம் ரூ.84.97 இலட்சம் செலவில் 6055 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்படும்:

2.2 ஒருங்கிணைந்த வாசனைத்திரவியப்பயிர்கள் அபிவிருத்தி திட்டம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் வாசனைத் திரவியப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்தோடு நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம்

அ. 6.00 இலட்சம் மிளகு வேர்விட்ட பதியன்கள் உற்பத்தி செய்தல்.

ஆ. மிளகுப் பயிருக்கு தேவைப்படும் 8,000 சிறுதளைகள் வினியோகித்தல்.

இ. மிளகுப் பயிருக்கு 100 செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல்.

ஈ. 25,000 எண்கள் மரவகை வாசனை திரவியப் பயிர்கள் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

உ. 4000 கொத்துமல்லி சிறுதளைகள் வினியோகம் செய்தல்.

ஊ. மஞ்சள் பயிரில் 450 செயல்விளக்க திடல்கள் அமைத்தல்.

எ. மிளகாய் பயிரில் 500 எண்கள் பயிர் பாதுகாப்பு செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்.

ஏ மிளகாய் பயிரில் 4,000 எண்கள் பயிர்பாதுகாப்பு செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல்

ஐ. சிறு வாசனை சாகுபடி பயிர்களுக்கு 600 தெளிப்பான்கள் வழங்குதல்

ஒ. எட்டு நாற்றங்கால்கள் அமைத்தல்.

எட்டாவது ஐந்தாவது திட்ட காலத்தில் ரூ.538.56 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94ம் ஆண்டு ரூ.66.02 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. 1994.-95 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 119.67 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். மிளகாய்க்கும் மஞ்சளுக்கும் கருத்தரங்குகள் விருதுநகர் மற்றும் ஈரோட்டிலும் நடத்தப்படும்.

2.3.1 ஒருங்கிணைந்த வெப்பபிராந்திய, மிதவெப்ப மற்றும் குளிர் பிரதேச மேம்பாட்டுத் திட்டம்:

இந்த திட்டத்தின் வாயிலாக ஒரு பெரிய மற்றும் ஆறு சிறிய நாற்றங்கால்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அமைக்கவும் இரண்டு திசு கல்ச்சர் மையங்கள் அரசு தோட்டக்கலை பண்ணை மற்றும் தனியார் தோட்டங்களில் அமைக்கவும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் விளம்பரப்படுத்தவும் 368 எக்டேர் பரப்பிற்கு சாகுபடியை விரிவாக்கவும் 43 செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும் 1162.5 எக்டேர் பரப்பிற்கு நலிவடைந்த தோட்டங்களை புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் ரூ.82.19 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டது. 1994-95 ஆம் ஆண்டு ரூ. 81.23 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ரூ. 371.94 இலட்சம் இத்திட்டத்திற்கு செலவிடப்படும்.

2.3.2. தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிலப் போர்வை அமைத்தல்:

தோட்டக்கலைப் பயிர்களுக்கு பிளாஸ்டிக் பொருள்களை உபயோகப்படுத்தி அதிக உற்பத்தியை அடையும் நோக்கத்தோடு நிலப்போர்வை திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படுவதுடன் களை வளர்ச்சியும் 90% வரை கட்டுப்படுத்தப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ.55.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1993-94 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் 1994-95 ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

2.3.3. தோட்டக்கலைப் பயிர்களுக்கு பாலிதீன் பசுமை குடில்கள் அமைக்கும் திட்டம்

தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருள்களின் உபயோகத்தினை ஊக்குவிக்கும்முகமாக தமிழ் நாட்டில் பாலித்தீன் பசுமை குடில்கள் கட்டும் திட்டம் மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. பாலிதீன் பசுமை குடில்கள் அமைத்து தோட்டக்கலை பயிர் சாகுபடி மேற்கொள்ளும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கட்டுபடுத்திய முறைமையில் வெப்பம், ஈரப்பதம் மற்றும் காற்றழுத்தம் ஆகியவைகளை பராமரிப்பதால் மகசூல் அதிகரிக்க ஏதுவாகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒரு அலகுக்கு ரூ.62,500 வீதம் பாலித்தீன் பசுமை குடில்கள் அமைக்க 50 சதம் மானியம் வழங்கப்பட்டு 16 குடில்கள் அமைக்கப்படும். 40 சத மானியத்தின் இரண்டு குடில்கள் அமைக்க ரூ.1 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 10 சத மானியத்தின் ஒரு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அலகுக்கு ரூ.1 இலட்சத்துக்கு மிகாமல் 8 குடில்கள் அமைக்க ரூ.8 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

1994-95ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.24.00 இலட்சம் செலவில் அமைத்து செயலாக்கப்படும்.

2.4. காய்கறி சிறுதளைகள் விநியோக திட்டம்.

காய்கறிகள் உற்பத்தியினை அதிகரிக்கவும் புதிய உயர் ரக வீரிய ஒட்டு காய்கறிகளை அறிமுகம் செய்யும் முகமாகவும் வீரிய ஒட்டு தக்காளி, மற்றும் முட்டைகோசு பயிர்களில் சிறுதளைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 1993-94ம் ஆண்டில் 3500 எண்கள் சிறுதளைகள் ரூ.10.37 இலட்சம் செலவில் வினியோகிக்கப்பட்டது. 1994-95 ஆம் ஆண்டில் ரூ.10.59 இலட்சங்கள் செலவில் சிறுதளைகள் வினியோகிக்கப்படும்.

2.5. கோகோ அபிவிருத்தித் திட்டம்.

தமிழ் நாட்டில் கோகோ பயிர் உற்பத்தியினை பெருக்கவும் அலகு உற்பத்தியினை அதிகரிக்கவும் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் கோகோ தோட்டங்களில் மேம்பட்ட உரம் இடுமுறைமைகளினையும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளினையும் செயல்படுத்துமுகமாக நிறைவேற்றப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ.24.96 இலட்சங்கள் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1993-94ம் ஆண்டில் 10 புதிய கோகோ தோட்டங்கள் அமைக்கவும், 5 எக்டேர் பரப்பளவிற்கு நலிவடைந்த கோகோ தோட்டங்கள் சீராக்கவும், நீர்பாசன வசதியை அதிகரிக்கவும் ரூ.7.27 இலட்சங்கள் செலவில்செயலாக்கப்பட்டு வருகிறது. 1994-95ம் ஆண்டில் ரூ.5.31 லட்சங்கள் செலவில் இத்திட்டம் செயலாக்கப்படும்.

2.6. தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அளிக்கும் திட்டம்.

மைய அரசு தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அளிக்கும் முகமாக 1993-94ம் ஆண்டில் ரூ.195 இலட்சம் நிதி அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டம் வேளாண்மை பொறியல் துறையின் மூலம் நிறைவேற்றப்படும். இத்திட்டம் மூலம் பயனடையும் விவசாயிகள் தோட்டக்கலைத்துறை மூலம் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மை பொறியியல் துறைக்கு பரிந்துரைக்கப்படுகிறது, 1994-95ம் ஆண்டில் ரூ.675 இலட்சம் செலவில், இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2.7. காளான் வளர்ப்புத் திட்டம்:

இந்த திட்டம் காளான் உற்பத்தியை அதிகரிக்கவும், காளான் வளர்ப்பு மற்றும் அறுவடை செய்த காளானை பக்குவப்படுத்தும் முறையினை விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ.69.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இரண்டு விதைக் காளான் உற்பத்தி நிலையமும் இரண்டு கிருமி நாசினி செய்யப்பட்ட தொழு எரு உற்பத்தி நிலையம் அமைக்கவும், 2400 விவசாயிகளை காளான் உற்பத்தி செய்ய பயிற்றுவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.31.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1994-95ல் ரூ.31.50 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக செலவிடப்படும்.

2.8. வெற்றிலை சாகுபடி அபிவிருத்தித் திட்டம்:

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.17.825 இலட்சங்கள் வெற்றிலை சாகுபடி அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், வெற்றிலைகொடி தாங்கிகள் அமைக்கவும், செயல் விளக்கத் திடல்கள் அமைக்கவும், பயிர் பாதுகாப்பு முறைகளை பயிற்றுவிக்கவும், நீர் பாசன வசதிகளை மேம்படுத்தவும் ரூ.3.375 இலட்சங்கள் செலவில், 1993-94ல் செயல்படுத்தப்பட்டது. 1994-95ல் இந்த திட்டம் ரூ.3.725 இலட்சம் செலவில் தொடரப்படும்.

2.9. வணிக மலர்கள் சாகுபடித் திட்டம்:

மலர்கள் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், அறுவடை செய்த மலர்கள் கையாளும் முறைகள் மற்றும் ஏற்றுமதிக்கு தக்க வகையில் பெட்டிகளில் அடைக்கும் முறைகளை பயிற்றுவிக்கவும் 1994-95 ஆண்டு செயல்படுத்த ரூ.15.25 இலட்சங்கள் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக கோவை மாவட்டத்தில் மாதிரிநாற்றங்கால் 30 எக்டேர் பரப்பளவில் நிறுவப்படும்.

2.10. கிழங்கு வகைப்பயிர் சாகுபடி அபிவிருத்தி திட்டம்.

கிழங்கு வகைப்பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்கவும், சாகுபடி பரப்பை அதிகரிக்கவும் இந்த திட்டம் செயலாக்கப்படும். 1994-95ல் தரமான விதைப் பொருளை உற்பத்தி செய்ய துணை மையம் ஒன்று நிறுவவும், ஆறு செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும் 2600 சிறுதளைகள் வினியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு காலத்தில் ரூ.13.20 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.11. வாசனை மற்றும் பயிர்கள் அபிவிருத்தித்திட்டம்.

தமிழ்நாட்டில் வாசனை மற்றும் மூலிகைப் பயிர்கள் சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு எட்டாவது ஐந்தாண்டு காலத்தில் ரூ.10.75 இலட்சங்கள் செலவிடப்படும். முதற்கட்டமாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நாற்றங்கால் நிறுவப்பட்டு, முக்கிய வாசனை மற்றும் மூலிகைப்பயிர்கள் உற்பத்தி செய்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் மேலும் பெருக்குவதற்காக வினியோகிக்கப்படும். 1994-95ல் இத்திட்டம் ரூ.2.2 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

2.12. தோட்டக்கலை பயிர் விளைச்சல் போட்டிகள்:

வேளாண்மைத்துறையில் நெல்லுக்கு பயிர் விளைச்சல் போட்டி நடத்துவது போன்று தோட்டக்கலை பயிர்களான மா, திராட்சை, தக்காளி, மரவள்ளி, முட்டைகோஸ், காலிபிளவர், மிளகாய், மஞ்சள் மற்றும் வெங்காயம் போன்ற தோட்டக்கலைப் பயிர்களில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டு முதல், இரண்டு மற்றும் மூன்றாவது பரிசுகள் வழங்கப்படும். 1994-95 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சங்கள் செலவிடப்படும்.

3. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் திட்டங்கள்.

3,.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலைப் பயிர்கள் அறுவடைக்கு பின் நேர்த்திக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் திட்டம்.

தமிழ் நாடு அரசு தோட்டக்கலை பயிர்களுக்கு அறுவடைக்கு பின் நேர்த்திகளுக்கான கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் முகமாகப்பதிவு செய்த கூட்டுறவு சங்கங்களுக்கும் விவசாய அமைப்புகளுக்கும் வட்டியில்லா கடனுதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். தேசிய அளவில் இதற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.1000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2. ஊரகப்பகுதிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் நிறுவும் திட்டம்.

தேசிய தோட்டக்கலை வாரியம் ஊரகப் பகுதிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் நிறுவுமுகமாக 100 சத நிதியுதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி விவசாயிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.50 மதிப்புள்ள 10 பழச் செடிகள் இலவசமாக வழங்கப்படும். 1993-94ம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலமாக 30 இலட்சம் பழச்செடிகள் வினியோகிக்க இலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994-95ம் ஆண்டு தொடர்ந்து செயலாக்கப்படும்.

1994 ஏப்ரல் 20]

3.3. தோட்டக்கலை விவசாயிகளுக்கு கல்விச் சுற்றுலா மற்றும் பயிற்சி

தேசிய தோட்டக்கலை வாரியம் தோட்டக்கலை சாகுபடியாளர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை அளிக்கும் வகையில் அவர்களை இதர மாநிலங்களுக்கு கல்வி சுற்றுலா அமைத்து பயிற்சி அளிக்குமுகமாக 100 சதவீத நிதி உதவி அளிக்கிறது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 500 விவசாயிகளுகளை சுற்றுலா அழைத்துச்செல்ல ரூ. 5 இலட்சங்கள் செலவிடப்படும். 1994-95ம் ஆண்டு முதல் 100 நபர் கொண்ட குழுவிற்கு ரூ.1.00 செலவிட திட்டமிடப்பட்டுள்ளது

4. மாநிலத் திட்டங்கள்

4.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் மலைப்பயிர்களான காபி, முந்திரி ஆகிய பயிர்களில் சாகுபடியினை ஊக்குவிக்குமுகமாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தேவைப்படும் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களில் நடவுப் பொருட்கள் ஐம்பது சத மான்ய விலையில் வழங்கப்படுகிறது. தவிரவும் சான்று பெற்ற காய்கறி விதைகளும் கூட இத்திட்டத்தின் மூலம் வினியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1993-94ம் ஆண்டில் டிசம்பர் 93 முடிய நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களிலும், காய்கறிப்பயிர்களிலும் 9625 எக்டர் குறியீட்டிற்கு 7618 எக்டேர் பயிர் பரப்பு சாதனை அடையப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994-95ம் ஆண்டில் மேலும் 10,000 எக்டர் பரப்பில் முறையே நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களிலும் காய்கறிப் பயிர்களிலும் பரப்பு அடையுமுகமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.139.61 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.2. பயிற்சி வழித் தொடர்பு விரிவாக்கத்திட்டம்.

இத்திட்டம் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் கொடைக்கானல் வட்ட பகுதியிலும் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மலைச்சரிவு பகுதிகளில் தோட்டக்கலைப் பொருட்களில் உற்பத்தியளவினை பெருக்குவதேயாகும். இத்திட்டத்தினை நிறைவேற்றுமுகமாக களப்பணியாளர்கள் விவசாயிகளிடையே குறிப்பிட்ட தினங்களில் சந்தித்து பழங்கள் மற்றும் காய்கறிப் பயிர்களின் உற்பத்தியினை பெருக்குமுகமாக சீரான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்றனர். இத்திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு

மானிய விலையில் உரங்கள் வழங்க வழிவகுக்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் **1993-94**ம் ஆண்டில் **10000** பண்ணைக்குடும்பங்கள் பயனடையும் முகமாக ரூ.**102.84** இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்ந்து **1994-95**ம் ஆண்டில் **10000** பண்ணைக் குடும்பங்கள் பயனடையுமுகமாக ரூ.**98.28** இலட்சம் செலவில் செயலாக்கப்படும்.

4.3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்:

1993-94 ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து விவசாயிகள் பூர்த்தி செய்யுமுகமாக **235** இலட்சம் எண்கள் பழச்செடிகள், கன்றுகள் மற்றும் வேர்விட்ட பதியன்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும். டிசம்பர்'93 முடிய **49.164** இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. **1993-94**ம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.**105.73** இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து **1994-95**ம் ஆண்டில் ரூ.**106.87** இலட்சம் இலக்கில் செயலாக்கப்படும்.

4.4. நீலகிரி தோட்டக்கலை மேம்பாடு திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் பழத்தோட்டங்கள் நிறுவுமுகமாக புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் இதர இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படுகிறது. இத்திட்டத்தில் **93-94**ஆம் ஆண்டில் இலக்கு **4000** மணி நேரத்தில் **31-12-93** முடிய **3060** மணி நேரத்திற்கு பல்வேறு இயந்திரங்கள் வாடகைக்கு விடப்பட்டன. **1994-95** ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் **4100** மணி நேரத்திற்கு பண்ணை இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படும். இத்திட்டத்திற்காக ரூ.**6.73** இலட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.5. தோட்டக்கலை பயிற்சி மையம், மாதவரம்:

தரமணி தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் தோட்டக்கலை படிப்பில் ஈராண்டு பட்டயப்படிப்பு பயிற்சி **40** மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் **1994-95**ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மனித வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மாதவரத்தில் இப்பயிற்சி மையத்தின் கட்டமைப்புகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 20]

4.6. தீவிர காய்கறி சாகுபடித் திட்டம்:

இந்த திட்டம் செங்கை எம்.ஜி.ஆர், திண்டுக்கல் அண்ணா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 500 எக்டேர் கூடுதல் பரப்பின் பொருட்டு ரூ.15.345 இலட்சங்கள் செலவிட திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.7. தோட்டக்கலை நாற்றங்கால் ஒழுங்கு முறைச் சட்டம் அமுல் படுத்துதல்

தமிழ் நாட்டில் முதன் முறையாக பழங்கள், காய்கறி வாசனைத் திரவியங்கள், மலர்கள் மற்றும் மலைப்பயிர்கள் சாகுபடிக்கு தேவையான தரமான நடவுப்பொருள்கள் உற்பத்தியை உறுதி செய்யவும் தரமற்ற இரகங்கள் உற்பத்தியை கட்டுப்படுத்தவும், இந்த சட்டம் 1994-95 முதல் அமுலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.8. தமிழ்நாடு தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் (டான்ஹோப்) நிறுவுதல்

1994-95 ஆண்டு தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் 'டான்ஹோப்' என்ற அமைப்பு நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சங்கத்தின் மூலம் தரகர்களின் தலையீடு நீக்கப்படுவதுடன் குளிர்சாதன வசதியும் கூடிய போக்குவரத்து வாகனம், குளிர் கிடங்கு போன்ற வசதிகளையும் கையாளும் முறைகளும் கடைபிடிக்கப்படும்.

4.9. கோவில்களில் நந்தவனம் அமைக்கும் திட்டம்:

கோவில்களில் நந்தவனம் வழிபாட்டிற்கு தேவையான மலர்களும், பழங்கள், மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யும் முகமாக இந்த திட்டம் எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்தில் இரு கோவில்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு செயலாக்கப்படும்.

1992-93 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 21 கோவில்களில் நந்தவனம் அமைக்க தேர்வு செய்யப்பட்டதில், 14 கோவில்களில் இப்பணிமுடிக்கப்பட்டு விட்டது. இரண்டாவது கட்டமாக 1993-94 ஆம் ஆண்டிற்க்கு 45 கோவில்கள் தேர்வு செய்யப்பட்டதில் 9 கோவில்களில் பணி முடிக்கப்பட்டது. இதர கோவில்களில் பணி முன்னேற்றம் அடைந்து வருகிறது.

பணிகள் முடிக்கப்பட்ட கோவில்களின் விபரம் பின் வருமாறு

அட்டவணை *3.5*

முதல் கட்டம் (1992-93)

1.	அருள்மிகு வேதகிரிஸ்வரர் கோவில்	-	திருக்கழுக்குன்றம் செங்கை எம்.ஜி.ஆர்.
2.	அருள்மிகு பாடலீஸ்வரர் கோவில்	-	கடலூர் தென்னாற்காடு வள்ளலார்
3.	அருள்மிகு லஷ்மி நரசிம்ம சாமி கோவில்	-	சோளிங்கர்; வடஆற்காடு அம்பேத்கார்
4.	அருள்மிகு தீர்த்தகிரிஸ்வரர் கோவில்	-	தீர்த்த மலை தர்மபுரி
5.	அருள்மிகு சங்கமேஸ்வரர் கோவில்	-	பவானி; பெரியார்
6.	அருள்மிகு மாரியம்மன் கோவில்	-	சூலக்கல், கோயம்புத்தூர்
7.	அருள்மிகு பாலதண்டாயுதம் கோவில்	-	உதகமண்டலம், நீலகிரி
8.	அருள்மிகு பழனி ஆண்டவர் கோவில்	-	பழனி திண்டுகல் அண்ணா
9.	அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்	-	கொன்னையூர்; புதுக்கோட்டை
10.	அருள்மிகு சுவாமி நாத கோவில்	-	சுவாமிமலை; தஞ்சை
11.	அருள்மிகு ராஜகோபால் சுவாமி கோயில்	-	மன்னார்குடி; நாகை காயிதே மில்லத்
12.	அருள்மிகு சோமகாளீஸ்வரர் கோவில்	-	,காளையார் கோவில் பசும்பொன்முத்துராமலிங்க தேவர்
13.	அருள்மிகு ராமநாத சுவாமி கோவில்		ராமேஸ்வரம்; ராமநாதபுரம்
14.	அருள்மிகு ஆண்டாள் கோயில்		திருவில்விபுத்தூர்; காமராஜர்

இரண்டாவது கட்டம்: (1993-94)

1.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோயில்	-	கொல்லங்குடி
2.	அருள்மிகு சிலம்பனி விநாயகர்கோயில்	-	தேவகோட்டை
3.	அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில்	-	காரைக்குடி
4.	அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் கோயில்	-	தாடிக்கொம்பு
5.	அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில்	-	திருமலைக்கணி
6.	அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில்	-	விராலிமலை
7.	அருள்மிகு ஆதிநாதசாமி திருக்கோயில்	-	ஆவுடையார் கோயில்
8.	அருள்மிகு வைத்தியநாதர்கோயில்	-	மடவார்விளாகம், திருவல்விபுத்தூர்
9.	அருள்மிகு கிருஷ்ணன் கோயில்	-	திருவில்விபுத்தூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. புதிய திட்டங்கள் - 1994-95

5.1. வெங்காய சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்:

ஏற்றுமதிக்கேற்ற வெங்காய இரகங்கள் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு செயலாக்கப்படும். இப்பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் *1994-95*ஆம் ஆண்டில் *1500* எக்டேர் பரப்பில் ரூ.*10* இலட்சம் செலவில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

5.2. தோட்டக்கலையில் தேனீ வளர்ப்புத்திட்டம்:

தோட்டக்கலைப் பயிர்களின் விளை திறனை அதிகமாக்கும் நோக்கத்தோடு இந்த திட்டம் *1994-95* முதல் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக *1994-95* ஆம் ஆண்டு *15* அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் இத்திட்டம் ரூ.*3* இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். தேனீ வளர்ப்பு ஆராய்ச்சிக்காக மற்றொருதிட்டம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 4

வேளாண்மைப் பொறியியல்

இயற்கையின் சமநிலை குன்றாமல் தொடர்ச்சியான முறையில் வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்க நமது நிலம் மற்றும் நீர்வளங்களை சிறப்பாக திட்டமிட்டு நிர்வகிக்க வேண்டும். அளவால் அதிகரிக்காத நிலத்தின் தேவை, வேளாண்மைக்கும் வேளாண்மை அல்லாத பிற பணிகளுக்கும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. காற்று மற்றும் நீரால் ஏற்படும் மண்ணரிப்பு, முறையற்ற நில உபயோக முறைகள் இவற்றால் ஏற்படும் பாதிப்புகளில் நிலவளம் தொடர்ந்து குன்றி அதனால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இச்சூழலில் எய்தியிருக்கும் உற்பத்தி அளவினை தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளது. நமது நீர்வளத்தின் ஒரே மூலாதாரமான மழை அதன் ஒவ்வொரு சுழற்சி நிலையிலும் மண்ணுக்கு மேலோ அல்லது கீழோ சேமிக்கப்பட்டு அதன் உபயோகம் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

1. துறையின் பணிகள்

2. வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழகத்தின் நிலவளம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல் மேம்படுத்துதல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

வேளாண்மை பொறியியல் துறை கீழ்க்கண்ட பணிகளில் உழவர்களுக்கு உதவிடுகிறது.

அ. மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல்.

ஆ. பாசனவளங்களை உருவாக்குதல், நிலைப்படுத்துதல் மற்றும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் உகந்த நீர் சிக்கன முறையில் உபயோகத்திற்கு வழிவகுத்தல்.

இ. கிணறு, ஏரி, ஆற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.

ஈ. வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நிலத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பண்ணைக் கருவிகள் அளித்தல்.

1994 ஏப்ரல் 20]

உ. வளம் குன்றிய பாழடைந்த நிலையிலுள்ள நிலங்களை மேம்படுத்தி நிரந்தரமாக பயன்தரும் மாற்று நில உபயோக முறைகளை புகுத்துதல்.

2.1. இதோடு மட்டுமின்றி, கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை இத்துறை மேற்கொள்கிறது.

மண், நீர்வளப்பாதுகாப்பு, சிறுபாசனம், பாசனப்பகுதி மேம்பாடு, நில மேம்பாட்டுத்திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம் ஆகியவற்றினை செயல்படுத்துவதன் மூலம் மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

3. வெள்ள நிவாரணம்:

1993ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் குறிப்பாக தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் கடும் மழையுடன் கூடிய சுழற்காற்று வீசியது. இதனால் விளை நிலங்களில் மணல் மேடிட்டும், பாசனக் கிணறுகளில் மணல் நிரம்பியும், ஆயில் என்ஜின், பம்ப் செட்டுகள் சேதம் அடைந்தும் மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் உடனடி அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு ரூ.59.00 இலட்சம் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அரசு வழங்கியது. இதில் ரூ.32.50 இலட்சம் 650 ஹெக்டேர் பரப்பு உள்ள மணல் மேடிட்ட நிலங்களில் மணலை அகற்றுவதற்கும் 150 ஆயில் என்ஜின், பம்பு செட்டுகளை பழுது பார்ப்பதற்காகவும், ரூ.10.00 இலட்சம் முற்றிலும் சேதமடைந்த 250 பம்பு செட்டுகள், ஆயில் என்ஜின்களை புதிதாக வாங்குவதற்காகவும், ரூ.5.00 இலட்சம் முற்றிலும் தூர்ந்து போன 100 பாசனக் கிணறுகளில் மணலை அகற்றுவதற்கும், ரூ.10.00 இலட்சம் குறைந்த பாதிப்புக்குள்ளாகிய 1000 பாசனக் கிணறுகளில் மணலை அகற்றுவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் சீரிய முறையில் விரைவாக நடைபெற்று வருகின்றன.

4. புதிய முயற்சிகள்:

4.1. நுண்ணிய நீர்ப்பாசன முறைகள்

நீர் உபயோகத்தினை உகந்த அளவிற்கு உயர்த்திடவும் சிக்கனத்தைப் புகுத்திடவும், ஒரு புதிய உத்வேகத்தோடும்

அணுகுமுறையிலும் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மைய அரசு டிசம்பர் *93*ல், ரூ.*195* இலட்சத்தினை தமிழ்நாடு மாநில அரசுக்கு சொட்டு நீர்ப்பாசன முறைகளை அமைப்பதற்கென ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் *1200* எக்டேர் பரப்பு பயனடையும். ரூ.*195* இலட்சத்திற்கான அரசின் ஒப்புதல் *28.2.94*ல் பெறப்பட்டது. மார்ச் *'93* இறுதிக்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

1992-93 மற்றும் *1993-94*ல் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் பயன் விவரங்களும், *1994-95*ம் ஆண்டுக்கான இலக்கும் பின்வருமாறு:

அட்டவணை 4.1

நுண்ணிய நீர்பாசனத் திட்டம்

வ. எண்.	விபரம்	1992-93	1993-94	1994-95 இலக்கு.
1.	மத்திய மற்றும் மாநில அரசின் உதவி பெறும் திட்டம்			
	1) சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்			
	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை	1324	1993-94 முதல் பணிகள் இத்திட்டத்தின் கீழ் நடைபெறவில்லை.	
	செயல்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்டேரில்)	1837.475		
	உதவித்தொகை (ரூபாய் இலட்சங்களில்)	187.66		
2.	மத்திய அரசின் உதவி பெறும் திட்டம்			
	1. தோட்டக்கலை வளர்ச்சிக்கான சொட்டு நீர்ப்பாசன திட்டம்			
	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை	719	720	4500
	செயப்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்டேரில்)	1771.87	1325.00	4500
	உதவித் தொகை (ரூபாய் இலட்சங்களில்)	200.72	195.00	675.00

1994 ஏப்ரல் 20]

5. நிலவள நிர்வாகம்:

5.1. மண் நீர்வளப் பாதுகாப்பு:

மலைப் பகுதிகளில் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டை முறைப்படுத்துதல், இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் சீரமைத்தல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

5.1.1. மத்திய அரசு நிதியுதவி பெறும் குந்தா, கீழ்பவானி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பாதுகாப்பு:

நதிப் பள்ளத்தாக்கு திட்டம்:

மிகவும் பாதிப்புக்குள்ளானது என கண்டறியப்பட்டுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வண்டல் உற்பத்தியாவதை, கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். படி மட்டங்கள் அமைத்தல், சம உயர கற்சுவர், வண்டல் தடுப்பணைகள், தடுப்பணைகள், ஓடை ப்ராமரிப்பு போன்ற மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உழவர்களுக்கு பணிச் செலவில் 50 விழுக்காடு மான்யமாகவும், மீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது. கடன் தொகை இரண்டாண்டுகள் கழித்து 10 ஆண்டுகளில் சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது. 1992-93, 1993-94ம் ஆண்டுகளுக்குரிய இலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரமும் 1994-95ம் ஆண்டிற்கான செயற் திட்டம் குறித்த விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.2

மண், நீர்வளப் பாதுகாப்பு

செயல் திட்டம் எக்டேரில்
நிதி: ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95 (பிரேரிக்கப்பட்டது)	
	செயல் திட்டம்	நிதி	செயல் திட்டம்	நிதி	செயல் திட்டம் (இலக்கு)	நிதி (இலக்கு)
இலக்கு	11816	307.18	6720	407.91	6000	389.12
சாதனை	12178	385.66	5395*	246.31*	-	-

* ஜனவரி 94 முடிய சாதனை

5.1.2. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் நீர்வளப் பாதுகாப்பு:

ஒருங்கிணைந்த நுண்ணிய நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நுண்ணிய நீர்ப்பிடிப்புப்பகுதி வரைப்படங்களை மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் மாவட்டங்களுக்கும், ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டின் அடிப்படையில் ஒருங்கிணைந்த உப திட்டம் தயார் செய்வதிலும் வேளாண்மை பொறியியல் துறை செயல்பட்டு வருகிறது. காடு வளர்த்தல், சமஉயரக் கற்சுவர் அமைத்தல், வண்டல் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உழவர்களுக்கு பணிச்செலவில் 50 விழுக்காடு மான்யமாகவும் மீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது. கடன் தொகை இரண்டாண்டுகள் கழித்து 10 ஆண்டுகளில் சம தவணைகளில் திரும்ப பெறப்படுகிறது. 1992-93, 1993-94ம் ஆண்டுகளுக்குரிய இலக்கு மற்றும் சாதனை பற்றிய விபரமும் 1994-95ம் ஆண்டிற்கான செயற்திட்டம் குறித்த விபரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3

செயல் திட்டம் எக்டேரில்
நிதி: ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95 (பிரேரிக்கப்பட்டது)	
	செயல் திட்டம்	நிதி	செயல் திட்டம்	நிதி	செயல் திட்டம் (இலக்கு)	நிதி (இலக்கு)
இலக்கு	1300	227.85	1000	284.51	2180	274.59
சாதனை	1407	260.15	1031*	233.97*	-	-

*ஜனவரி 94 முடிய சாதனை.

5.1.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தினைப் போலவே மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமும் சுற்றுச்சூழலை சீர்கெடாமல் தக்கவைத்துக் கொள்வதிலும், மேலும் நிலச்சீர்கேடு ஏற்படாமல் தடுப்பதிலும் தற்போது உள்ள சுற்றுச்சூழல் அமைப்பினை பாதுகாப்பதிலும் முன்னின்று செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிகளும் நிலச்சரிவினைத் தடுக்கும் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

1994 ஏப்ரல் 20]

நிலச்சரிவினைத் தடுக்கும் பணிகள் அரசின் செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. மண்வளப்பாதுகாப்புப் பணிகளில் 50 விழுக்காடு மான்யமும் மீதம் 50 விழுக்காடு கடனாகவும் கருதப்பட்டு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. ஊட்டி ஏரியின் அழகினை மேம்படுத்த ரூ.70.00 இலட்சம் செலவில் பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும். நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்பு மேற்கொள்வதன் மூலம் மண் அரிமானம் தடுக்கப்பட்டு ஏரிக்குள் வண்டல் சேர்வது தடைப்படும். *1992-93, 1993-94*ம் ஆண்டுகளுக்கு உரியஇலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரமும், *1994-95*ம் ஆண்டிற்கான செயற் திட்டம் குறித்த விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.4

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகளின் சாதனை

செயல் திட்டம் : எக்டேரில்
நிதி : ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95	
	செயல்	நிதி	செயல்	நிதி	செயல் இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	933	223.29	958	262.61	962	299.34
சாதனை	942	189.63	967*	173.04*		

* ஜனவரி '94 முடிய சாதனை

5.2. மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் :

5.2.1. மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு :

நமது மாநிலத்தில் உள்ள நிலங்கள் மண் அரிப்பாலும் பல்வேறு காரணங்களாலும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதின் மூலம் இந்நிலை தடுக்கப்படுகிறது. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் மானாவாரி நிலப்பகுதிகளில் அதிக முக்கியத்துவத்தோடு செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பணிகள் மூலம் மண்ணின் ஈரத்தன்மை அதிகரிக்கப்படுகிறது.

பணிச் செலவில் சமவெளிப் பகுதியாயின் 25 விழுக்காடு மான்யமும், மலைப் பகுதியாயின் 40 விழுக்காடு மான்யமும் வழங்கப்படுகிறது. மீதம் கடனாக கருதப்பட்டு 2 ஆண்டுகள் கழித்து 10 ஆண்டு சம தவணைகளில் திரும்பப்பெறப்படுகிறது. இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50 விழுக்காடு மான்யம் வழங்கப்படுகிறது. *1992-93, 1993-94* ஆம் ஆண்டுகளுக்கு உரிய இலக்கு மற்றும்

சாதனை பற்றிய விவரமும் 1994-95ம் ஆண்டிற்கான செயல் திட்டம் குறித்த விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.5

மலை மற்றும் சமவெளிப்பகுதிகளில் மண்வளப்பாதுகாப்பு

செயல் திட்டம் : எக்டேரில்
நிதி : ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95	
	செயல்	நிதி	செயல்	நிதி	செயல் இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	75000	741.11	75000	840.94	75000	990.91
சாதனை	76887	810.27	75173*	730.37*		

* ஜனவரி '94 முடிய சாதனை

5.2.2. காற்றரிப்பினைக் கட்டுப்படுத்துதல்:

திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் காற்றரிப்பைக் கட்டுபடுத்தும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. அங்கு காற்றினால் ஏற்படும் மண் அரிப்பு பெரும் பிரச்சனையாக உள்ளது. காற்றரிப்பின் கடுமையிலிருந்து இப்பகுதியை பாதுகாப்பதற்கு அரசு செலவில், காற்று வீசும் திசைக்கு குறுக்கே 5 வரிசைகளில் மரங்கள் நட்டு பாதுகாப்பு தாவர அரண்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாவர அரண்கள், அமைக்கும் செலவு அவற்றை 5 ஆண்டுகள் பராமரிக்கும் செலவு முழுவதையும் அரசே ஏற்கிறது. 1992-93, 1993-94 ஆம் ஆண்டுகளுக்குரிய உரிய இலக்கு மற்றும் சாதனைபற்றிய விவரமும் 1994-95ம் ஆண்டிற்கான செயல் திட்டம் குறித்த விபரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.6

காற்றரிப்பினைக் கட்டுப்படுத்துதல்

செயல்: எக்டேரில்
நிதி: ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95
	செயல்	நிதி	செயல்	நிதி	செயல் இலக்கு நிதி இலக்கு
இலக்கு	1000	57.89	1000	60.94	காற்றரிப்பினை தடுக்கும் பணியானது 1994-95 முதல் ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்புப்பகுதி கட்டம் 2ன் கீழ் நிறை வேற்றப்படும்.
சாதனை,	1005	60.50	1011*	46.82*	

* ஜனவரி 94 முடிய

1994 ஏப்ரல் 20]

5.2.3 பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு:

பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், திருச்சி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இச்செலவு முழுவதையும் அரசே ஏற்கிறது. **1992-93, 1993-94** ஆம் ஆண்டுகளுக்கு உரிய இலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரமும் **1994-95**ம் ஆண்டிற்கான செயல் திட்டம் குறித்த விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.7

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்பு

செயல் திட்டம்: எக்டேரில்
நிதி: ரூபாய் இலட்சத்தில்

	1992-93		1993-94		1994-95	
	செயல்	நிதி	செயல்	நிதி	செயல் இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	356	33.97	348	36.87	369	41.79
சாதனை	382	35.51	355*	29.50*	-	-

* ஜனவரி '94 முடிய சாதனை

6. தொலை உணர்வு :

தொலை உணர்வுப் பிரிவின் ஆதாரங்களைக் கொண்டு மேற்கு மலைத்தொடர் நீர்பிடிப்புப் பகுதிகளின் தகுதி நிலை அறிக்கைகள் தயார் செய்யப்படுகின்றன.

கார்ட்டோகிராபிக் கம்ப்யூட்டர் மற்றும் தொலை உணர்வு தொழில் நுட்ப உத்திகள் ஆகியவற்றின் உதவியோடு வேளாண்மைப் பொறியியல் துறையில் மேற்கு மலைத்தொடர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கான மண் அரிமான முன்னுரிமை வரைபடங்களும் மண் அரிமான நீர்பிடிப்புப் பகுதிகளுக்கான வரைபடங்களும் தயாரிக்கப்படுகிறது.

6.1 மாநில நில உபயோக வாரியமும் தொலை உணர்வு தொழில்நுட்ப உத்திகள் உதவியோடு பெரிய அளவிலான வரைபடங்களை தயார் செய்திட வேளாண்மைப் பொறியியல் துறையிடம் ஒரு பயிற்சியை ஒப்படைத்து அப்பயிற்சி முழுமையான அளவில் முடிக்கப்பட்டது. **1994-95**ம் ஆண்டுக்காக வேளாண்மைப் பொறியியல்துறையிடம் தமிழ்நாடு மாநில அளவிலான நீர்பிடிப்பகுதிகளின் வரைபடங்களை **1:250000** அளவில் தயார் செய்யும்

பணியையும் மாவட்டத்திற்கு **1:50,000** அளவில் நீர்பிடிப்பகுதிகளின் வரைபடங்களை தயார் செய்யும் பணியையும் மாநில நில உபயோக வாரியம் ஒப்படைத்து உள்ளது. இப்பணியானது தற்போது இத்துறையின் தொலை உணர்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. நில மேம்பாடு:

வேளாண்மைப் பொறியல் துறை, நிலத்தைச் சமமாக்கவும், பண்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும் நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு புல்டோசர்களையும் டிராக்டர்களையும் வாடகை முறையில் வழங்கி உதவுகிறது.

7.1 தற்போது ***113*** புல்டோசர்களும், ***170*** டிராக்டர்களும் வேளாண்மை பொறியியல் துறையிடம் உள்ளன. துறையிடம் உள்ள ***170*** டிராக்டர்களில் ***16*** டிராக்டர்கள் இழுவைப் பணிக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு **50** விழுக்காடு மானிய வாடகையில் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ***1992-93*** மற்றும் ***1993-94***ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனைகள், ***1994-95***ம் ஆண்டிற்கான இலக்கு முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.8

நில மேம்பாடு

திட்டம்	அலகு	1992-93 இலக்கு	1992-93 சாதனை	1993-94 இலக்கு	1993-94 சாதனை	1994-95 ஆண்டு இலக்கு.
1. நிலத்தை சமன் செய்தல்	மணிகள்	154000	199771	148600	158389	145800
	எக்டேர்	6160	7991	5944	6366	5832
2. இயந்திர உழுவை	மணிகள்	93800	103600	90250	80181	85350
	எக்டேர்	26800	29600	25785	22909	24386

7.2 வேளாண்மைப் பொறியியல் துறையின் புல்டோசர்கள் ***1993-94***ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்து சீரமைக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றின. காவிரி, வெண்ணார், கல்லணைக் கால்வாய்ப் பகுதிகளில் உள்ள ஆற்று வழிகளிலும் கால்வாய்களிலும் தூர் எடுக்கப்பட்டது. **506.97** கிமீ. நீளத்திற்கு ஆற்று வழி மற்றும் கால்வாய்களிலும் **50** புல்டோசர்களைக் கொண்டு தூர் எடுக்கப்பட்டது.

1994 ஏப்ரல் 20]

8. நீர்வள நிர்வாகம்:

8.1 நிலத்தடி நீர்வள மேம்பாடு:

கிணற்றுப் பாசனத்தால் பயன்பெறும் நிலப்பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இச்சூழ்நிலையில் நிலத்தடி நீர்வள உபயோகம் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய கிணறுகள் அமைக்கும் இடத்தை புவியியல் ஆய்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கவும், குழாய் கிணறுகள் மற்றும் வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரவும், வறண்டு போன கிணறுகளில் துளையிட்டும் பாறைகளைத் தகர்த்தும் ஆழப்படுத்தி நீர்வளம் மீட்கவும், உழவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது. இதற்கென விசைத்துளைக் கருவிகளையும் காற்றமுத்தக் கருவிகளையும் துறை பராமரித்து வாடகைக்கு வழங்கி, பணிகளை நிறைவேற்றி வருகிறது.

இதற்கென

44 பெர்குஷன் துளைக்கருவிகளும்

59 ரோட்டரி துளைக்கருவிகளும்

1 காலக்ஸி துளைக் கருவியும்

6 ஹேமர் துளைக் கருவிகளும்

39 வாகன், இன்வெல் துளைக் கருவிகளும்

86 பாறை வெடிக் கருவிகளும்

45 நீள் துளைக் கருவிகளும்

16 காற்றமுத்தக் கருவிகளும்

3 மின்சார லாகிங் கருவிகளும்

378 கைத்துளைக் கருவிகளும்

22 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும் உள்ளன.

8.2. இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50 விழுக்காடு குறைவான வாடகையில் இக்கருவிகள் வழங்கப்படுகின்றன. மேலும் நிலத்தடி நீர்வள ஆய்வுச் செலவு, கருவிகளை எடுத்துச் செல்லும் செலவு, வேலையாட்களின் கூலி, கச்சாப் பொருட்கள், டீசல் பைப்புகள் மற்றும் வெடிமருந்து ஆகியவைகளின் செலவில் 50 விழுக்காடு மான்யமாக வழங்கப்படுகிறது. 1992-93, 1993-94 ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனைகள் மற்றும் 1994-95 ம் ஆண்டிற்கான இலக்கு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

அட்டவணை 4.9

குழாய்க்கிணறு, வடி முனைக்குழாய்கிணறு அமைத்தல் செயல்திட்டம்

			1992-93		1993-94		1994-95
	விபரம்	அலகு	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை	இலக்கு
1.	குழாய் கிணறுகள்	எண்கள்	5500	5862	5500	4665*	5500
2.	வடிமுனைக் குழாய் கிணறுகள்	எண்கள்	3300	3356	3300	2145*	3300
3.	கிணறுகளின் வளம் மீட்டல்	எண்கள்	6000	5240	5500	4833*	-

*ஜனவரி '94 முடிய

8.3 நீர் சேகரிப்பு:

நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்குதல்:

நிலத்திடி நீரை அதிக அளவு பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க்குட்டைகளைப் பெருமளவில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1992-93 ம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 7498 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குட்டைகள் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்குவதில் நல்ல பயன் அளித்துள்ளது. இதனால் கிணறுகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

8.4. பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்:

8.4.1. பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்:

காவிரி, பெரியார்வைகை, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிகுளம் ஆழியாறு திட்டப் பாசனப் பகுதிகளில் மத்திய அரசின் உதவி பெறும் பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1. வயல் வழிப் பாசனமளிக்கும் ஏற்பாடுகளை நீக்கவும்,
2. உரிய அளவுக்குப் பாசன வசதியை ஏற்படுத்தவும்,
3. பாசனத்திற்குச் சுழற்சி முறையில் நீர் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் உபரியாகவும், குறைவாகவும் நீர் கிடைக்கும் காலங்களில் கிடைக்கின்ற நீரைச் சமமாக வழங்குவதை உறுதி செய்யவும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

8.4.2. விவசாயிகள் பங்கேற்பு:

கீழ்பவானி பாசனப் பகுதியில் விவசாயிகளைப் பங்கேற்கச் செய்து, சோதனை அடிப்படையில் பாசனத்திற்குச் சுழற்சி முறையில் நீர் வழங்கும் ஏற்பாடானது முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. வேளாண் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்கான நீரைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதை உதவி செய்யவும், திட்டத்தை நன்முறையில் பொறுப்பேற்று நிர்வகிக்கவும் விவசாயிகள் சங்கங்கள் விவசாயிகளால் அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் சங்கங்கள் தற்போது அனைத்து பாசனப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருகிறது. நவம்பர் '93 முடிய உருவாக்கப்பட்டுள்ள விவசாயிகள் சங்கங்கள் பின்வருமாறு:

அட்டவணை 4.10

விவசாய சங்கங்களின் விவரம்

	பாசனப் பகுதியின் பெயர்	விவசாயி -களின் குழுக்கள் (எண்கள்)	விவசாயி -களின் சங்கங்கள் (எண்கள்)	பயனடைந்த விவசாயிகள் (எண்ணிக்கை)	பயனடைந்த பரப்பளவு (எக்டேர்)
1.	காவிரி	31	657	51707	62136
2.	கீழ்பவானி	17	1326	37435	37549
3.	சாத்தனூர்	9	121	4779	3443
4.	பரம்பிக்குளம் ஆழியாறு	11	187	10958	27825
5.	பெரியார்-வைகை	14	620	56703	41490
	மொத்தம்	82	2911	161582	172443

இவையன்றி நீர் நிர்வாகத்தை மேம்படுத்த பெண் விவசாயிகளுக்கென தனிச் சங்கங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

8.4.3. விவசாய சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகை:

வேளாண் நடவடிக்கைகளில் விவசாயிகள் பங்கேற்கின்ற புதிய திட்ட அணுகு முறையைப் பின்பற்றுவதில், விவசாய சங்கங்களை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். விவசாயிகளுக்கு முதல் இரண்டாண்டுகளுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.100/ வீதமும், மூன்றாவது ஆண்டிற்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.75/ வீதமும், நிர்வாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1992-93ம் ஆண்டு வரைக்குமான சாதனை, 1993-94 ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனை, 1994-95ம் ஆண்டிற்கான இலக்கு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 4.11

விவசாய சங்கங்களுக்கு நிர்வாக உதவி

செயல்: எக்டேரில்
நிதி: ரூபாய் இலட்சத்தில்

வ. எண்	திட்டப் பரப்பு	1992-93 வரைக்கு-மான சாதனை	1993-94 ஆண்டு இலக்கு	1993-94 ஜனவரி'94 முடிய சாதனை	1994-95ம் ஆண்டு இலக்கு
1.	பண்ணை மேம்பாடு				
1.	காவிரி பாசனப்பகுதி				
	திட்டம்	279096	23000	21560	24200
	நிதி	4146.58	794.58	526.18	795.51
2.	கீழ்பவானி பாசனப்பகுதி				
	திட்டம்	51656	5000	4743	5000
	நிதி	1696.94	291.46	215.68	291.83
3.	சாத்தனூர் பாசனப்பகுதி				
	திட்டம்	19509	2300	2246	_
	நிதி	491.20	39.41	34.23	_
4.	பரம்பிகுளம் ஆழியாறு பாசனப்பகுதி				
	திட்டம்	67040	9600	8881	5000
	நிதி	2347.45	466.06	400.02	478.48
5.	பெரியார் வைகை பாசனப்பகுதி				
	திட்டம்	64577	3400	2685	_
	நிதி	1798.62	137.84	138.25	_
2.	சுழற்சி முறைப் பாசனம் :				
1.	காவிரி பாசனப்பகுதி				
	திட்டம்	4015	18500	17950	25000
2.	கீழ்பவானி பாசனப்பகுதி				
	திட்டம்	18127	3500	3078	10000
3.	சாத்தனூர் அணை பாசனப்பகுதி திட்டம்	31447	15000	15561	15000
4.	பரம்பிக்குளம் ஆளியாறு பாசனப்பகுதி				
	திட்டம்	_	10000	7235	20000
	நிதி (1+2+3+4)	356.71	121.33	143.77	146.24

1994 ஏப்ரல் 20]

8.4.4 பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பாசனப் பகுதிகளில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. கம்பம் நதிப்பள்ளத்தாக்கு பாசனப்பகுதி

2. அமராவதி ஆற்றுப் பாசனப் பகுதி

3. கோதையாறு சித்தார் பாட்டினம்சால் பாசனப்பகுதி

*1994-95*ல் பெரியார்வைகை பாசனப்பகுதி திட்டத்தின்கீழ் இயங்கும் ஒரு கோட்டத்தினை மாற்றி கம்பம் நதிப் பள்ளத்தாக்கு பாசனப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்பட உள்ளது. திட்டங்களை செயல்படுத்திட மைய அரசு எட்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திற்கென ரூபாய் *300* இலட்சத்தினைஒதுக்கி உள்ளது.

9 சிறப்புத் திட்டங்கள் :

9.1 மானாவாரி விவசாயத்திற்கான தேசிய நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் (டானிடா) கட்டம் *1.*

வ.உ.சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் தரம் பாதிக்கப்பட்ட ***17800*** எக்டேர் நிலப்பரப்பை ரூ.***625*** இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான திட்டம் ***1990-91***ல் தொடங்கப்பட்டு இவ்வாண்டு முடிவடைய உள்ளது. டானிடா நிதி உதவியுடன் இத்திட்டம் ***3½*** ஆண்டு காலத்திற்கு செயற்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் அடங்கியுள்ள திட்டப்பகுதிகள் பின்வருமாறு:

1. நீர்வடிப்பகுதி மேம்பாடு :5000 எக்டேர்
2. காற்றரிப்புத் தடுத்தல் திட்டம் :3000 எக்டேர்
3. தேரிநில மேம்பாட்டுத் திட்டம் :6800 எக்டேர்
4. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் :3000 எக்டேர்

மார்ச்***'94*** ல் இத்திட்டம் முடிவடைய உள்ளது. ***1993-94***ல் ***6178*** எக்டேர் பரப்பில் மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பணிகளும் நிறைவேற்றப்படும்.

அட்டவணை 4.12

மானாவாரி விவசாயத்திற்கான தேசிய நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

	விவரம்	அலகு	1992-93		1993-94		1994-95
			ஆண்டு இலக்கு	சாதனை	ஆண்டு இலக்கு	ஜனவரி 1994 வரையிலான சாதனை	ஆண்டு இலக்கு
1.	நீர்வடிப்பகுதி மேம்பாடு	எக்டேர்	1650	1650	1700	1700	-
2.	காற்றரிப்பு தடுத்தல்	எக்டேர்	1000	1023	988	988	-
3.	தேரிநில மேம்பாடு	எக்டேர்	2150	2156	2495	2325	-
4.	தரிசு நில மேம்பாடு	எக்டேர்	1000	1000	995	995	-
	நிதி (1+2 +3+4) ரூபாய் இலட்சங்களில்		127.83	207.38	177.08	187.73-	-

9.2. காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்டங்களில் டானிடா நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மேற்கண்ட மாவட்டங்களிலுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் நிலங்களில் மேலும் மண்ணரிப்பு நிகழாமல் தடுக்கவும் நிரந்தரமாக சிக்கனமான எளிய நில உபயோக முறைகளை மேற்கொள்ளவும் வேலை வாய்ப்பினை உருவாக்கித்தரவும் 11,000 எக்டேர் பரப்பில் ரூ.13.56 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீர் வடிபகுதி மேம்பாட்டுத் திட்டம் டானிடா நிதி உதவியுடன் செயல்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் மத்திய அரசு மற்றும் "டானிடா" இடையே 12.11.93 அன்று கையெழுத்தானது. 1994-95ல் 2200 எக்டேரில் நீர் வடிபகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

9.3 திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் கட்டம்2.

தற்போது செயல்பட்டு வரும் முதற்கட்ட திட்ட முடிவுக்குப் பின் (மார்ச் '94) இரண்டாவது கட்ட திட்டமொன்று ஏழு ஆண்டு காலத்திற்கு 1994-95 முதல் செயல்படுத்தப்பட உள்ளது. 55000 எக்டேரில் ரூ. 4505.72 இலட்சம் செலவில் டானிடா நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். டானிடா திட்டக்குழு மே '93 திங்களில் திட்டப்பகுதியினை பார்வையிட்டு சென்றபின்னர் தனது அறிக்கையினை அனுப்பி உள்ளது. 1994-95ல், 840 எக்டேரில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

1994 ஏப்ரல் 20]

9.4 கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணியானது வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகின்றன. கசிவு நீர்க் குட்டைகள், நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்துவதிலும், வேலை வாய்ப்பினை வழங்குவதிலும் உறு துணை புரிந்து பல்வேறு நன்மைகள் தரும் சமுதாயச் சொத்துக்களாக விளங்குகின்றன. *1992-93*, மார்ச் *'93* முடிய *7498* கசிவு நீர்க் குட்டைகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மற்றும் பிற திட்டங்களினால் அமைக்கப்பட்டுள்ளன. *1993-94*ல் *295* கசிவு நீர்க்குட்டைகள் ரூ.*442.50* இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

9.5 கோவில் குளங்களைப் புதுப்பித்தல்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கோவில் குளங்களைப் புதுப்பிக்கும் பணியானது வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *1993-94*ல் *370* கோவில் குளங்கள் ரூ*400* இலட்சம் செலவில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டன.

இத்திட்டமானது கோவில் குளங்களை புதுப்பொலிவு ஆக்கவும் குளங்களின் அருகில் உள்ள கிணறுகளில் நீர் மட்டத்தினை அதிகரிக்கவும் சுற்றுச் சூழலை மேம்படுத்தவும் உறுதுணை புரிந்து வருகிறது.

9.6 சார்நிலைப் பணியாளர்களுக்கான பதவி உயர்வு வாய்ப்பு:

வேளாண் பொறியியல் துறையில் உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர் போன்ற சார்நிலைப் பதவிகளில் பணியாற்றுபவர்கள், பொறியியல் பட்டம் பெற்றும், மொத்தப் பணிக்காலம் பத்து ஆண்டுகளுக்குப்பின்னரும், உதவிப் பொறியாளர்களாக (வே.பொ) பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை. இவர்களது பணி அனுபவத்தைக் கருத்தில் கொண்டும், இவர்களது பணியினை ஊக்குவிக்கும் வகையிலும், உதவிப் பொறியாளர்களாக (வே.பொ) இவர்களை நியமிக்கும் வகையில் தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இரண்டு சதவிகிதத்தை ஐந்து சதவிகிதமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 5

விதை சான்றளிப்பு

*1966*ஆம் ஆண்டு மத்திய விதைச் சட்டத்தின் கீழ், விதைச்சான்றளிப்பு நிறுவனம் ஆற்றவேண்டிய பணிகளை விதைச் சான்றளிப்புத் துறை (வி.சா.து) நிறைவேற்றி வருகிறது. இத்துறையின் முக்கிய அலுவல்களாவன.

1. விதைச் சான்றளிப்பு
2. விதைச் சான்றளிப்புப் பயிற்சி
3. விதை ஆய்வு (விற்பனை செய்யப்படும் விதைகளை ஆய்வு செய்தல்)
4. விதை பரிசோதனை

1. (அ) விதைச் சான்றளிப்பு:

நல்ல தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்குவதே இத்துறையின் முக்கிய கடமையாகும். இனத்தூய்மை, புறத்தூய்மை (விதைகளின் தூய்மை) முளைப்புத்திறன் (முளைக்கும் தன்மை) மற்றும் விதைத்திறன் ஆகியன உள்ள தரமான விதைகளுக்குச் சான்றளிப்பதே இத்துறையின் முதன்மையான பணியாகும். விதைப்பண்ணைகள் பதிவு செய்வது, முக்கிய காலக்கட்டங்களில் வயல் ஆய்வு மேற்கொள்வது, சுத்திகரிப்பு செய்தல், இனத்தூய்மை மற்றும் இதர விதை தரங்களை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளில் தனிகவனம் செலுத்தப்பட்டு தரமான விதைகளை உற்பத்தி செய்வதில் விதைச் சான்றளிப்புத் துறை பெரும் பங்கு வகிக்கிறது. நெல் பயிரில் 20 வகைகளுக்கும், கம்பு பயிரில் 10 வகைகளுக்கும், சோளப்பயிரில் 7 வகைகளுக்கும், கேழ்வரகு பயிரில் 5 வகைகளுக்கும், மக்காச்சோளம் பயிரில் 5 வகைகளுக்கும், உளுந்து பயிரில் 10 வகைகளுக்கும், பச்சைப்பயிரில் 7 வகைகளுக்கும், தட்டைப் பயிரில் 5 வகைகளுக்கும், கொள்ளுப் பயிரில் 2 வகைகளுக்கும், துவரைப் பயிரில் 5 வகைகளுக்கும், பருத்தி பயிரில் 10 வகைகளுக்கும், நிலக்கடலை பயிரில் 10 வகைகளுக்கும், எள் பயிரில் 3 வகைகளுக்கும், ஆமணக்குப் பயிரில் 3 வகைகளுக்கும், சூரியகாந்தி பயிரில் 5 வகைகளுக்கும், பல்வேறு காய்கறி பயிர்களில் 15 வகைகளுக்கும் தற்போது சான்றளிக்கப்படுகிறது. விதைச் சான்றளிப்பதற்காக, உற்பத்தியாளர் குறித்த விவரங்களையும், எந்தெந்தப் பகுதிகளில் இந்த விதைகளை உற்பத்தி செய்யப்படுகிறது என்பதனையும் இத்துறை பதிவு

செய்து வருகிறது. விதைச் சான்றளிப்புத் துறையின் சாதனை குறித்த விவரங்கள் வருமாறு:

1993-94 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய *26207* எக்டர் விதைப் பண்ணைகள் பதிவுச் செய்யப்பட்டு *20039* மெ. டன் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. *1994-95*ஆம் ஆண்டில் *38,570* எக்டரில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1

விதைப்பண்ணைகள் பதிவுசெய்யப்பட்ட பரப்பும், சான்று விதை உற்பத்தியும்

வரிசை எண்	விவரங்கள்	சாதனைகள் 1991-92	1992-93	1993-94 இலக்கு	1993-94ல் பிப்ரவரி முடிய சாதனை	1994-95க்கு இலக்கு
1.	விதைச்சான்றளிப்புத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு (எக்டெரில்)	36338	29020	36500	26207	38570
2.	சான்றளிக்கப்பட்ட விதை அளவு (மெ.டன்னில்)	21983	23569	26000	20039	30000

அட்டவணை 5-2

சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு (மெட்ரிக் டன்னில்)

வ. எண்.	பயிர்	90-91	91-92	92-93	93-94 பிப்ரவரி 94 வரை	94-95
1.	நெல்	14427	15444	15783	15862	18975
2.	இரக சிறு தானியம்	658	761	833	720	1150
3.	வீரிய சிறு தானியம்	212	94	55	102	150
4.	இரகப்பருத்தி	3666	3167	4485	1212	4830
5.	வீரியப் பருத்தி	99	49	21	11	40
6.	பயறுவகைகள்	1617	1528	1377	1152	2009
7.	எண்ணெய் வித்துக்கள்	644	923	992	932	2800
8..	காய்கரி வகைகள் மற்றும் ஏனையவை	17	17	23	48	46
	மொத்தம்	21340	21983	23569	20039	30000

(ஆ) பயிற்சித் திட்டம்:

விதைச் சான்றளிப்புத் துறையால், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளில் பணிபுரியும் விரிவாக்க

பணியாளர்கள், விதைச்சான்று பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. விதை உற்பத்தி மற்றும் விதை வினியோகத்தில் ஈடுபட்டிருக்கும் விதை உற்பத்தி செய்து வழங்கும் தனியார்கள், உழவர்கள், வித்தை வணிகர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1993-94 ஆம் ஆண்டில் (பிப்ரவரி திங்கள்வரை) 14372 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் 15310 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5.3

பயிற்சி விவரங்கள்

வ. எண்	விவரங்கள்	பயிற்சி அளிக்கப்பட்ட நபர்கள் 1990-91	1991-92	1992-93	1993-94 ஆம் ஆண்டு இலக்கு	1993-94 சாதனை (பிப்ரவரி முடிய)	1994-95 ஆண்டு இலக்கு
1.	ஆற்றுப் படுத்தும் பயிற்சி	40	66	25	25	60	60
2.	புத்தூட்ட பயிற்சி	301	256	208	250	216	250
3.	விதைசான்றளிப்பில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி (அனைத்துத் துறைகளும்)	3588	4571	4455	4500	4693	5000
4.	தனியார் துறைமூலமாக சான்றுப்பணி தொடரும் நபர்கள்	5130	6941	7177	6820	7149	7000
5.	விதை வினியோகம் செய்பவர்களுக்கு தரமான விதை வினியோகம் பற்றிய பயிற்சி	2216	2045	2667	1900	2254	3000
	மொத்தம்	11275	13879	14532	13495	14372	15310

2. விதை ஆய்வு:

1966 ஆம் ஆண்டு மத்திய விதைச்சட்டத்தை முழுமையாக செயற்படுத்தும் பணியில் விதை ஆய்வு பிரிவைச் சேர்ந்த விதை ஆய்வு அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சான்றளிக்கப்பட்ட நல்ல தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, விதை விற்பனை நிலையங்களில் கால முறைப்படியான ஆய்வுகளையும் மற்றும் திடீர் ஆய்வுகளையும் விதை ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். விதை மாதிரிகள் விதை பரிசோதனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு, தரம் குறைந்தனவாக கண்டறியப்பட்டால் அத்தகைய தரம் குறைந்த விதைகள் விவசாயிகளுக்கு

வினியோகம் செய்யப்படுவது தடைசெய்யப்படுகிறது. விதைச் சட்டத்தை மீறுபவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. *1993-94* ஆம் ஆண்டில் (பிப்ரவரி திங்கள் முடிய) *11532* விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு, *11035* விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. விதைச்சட்டத்தை மீறிய **93** நபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. இதில் *84* இனங்களை பொறுத்த மட்டில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. *1870* தரம் குறைந்த விதை குவியல்கள் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படாமல் தடை செய்யப்பட்டுள்ளது. *1993-94* ஆம் ஆண்டில் **12500** விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும், *12500* விதை மாதிரிகளை சோதனைக்காக எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4

நடத்தப்பட்ட விதை ஆய்வு பற்றிய விவரங்கள்

வரிசை எண்.	விவரம்	*1990-91*	*1991-92*	*1992-93*	*1993-94* பிப்ரவரி முடிய	*1994-95* ஆண்டு இலக்கு
1.	விதை விற்பனை நிலைய ஆய்வு (எண்)	9184	10901	11812	11532	12500
2.	விதை மாதிரிகள் எடுத்தல் (எண்)	8651	9523	10393	11035	12500
3.	தடை விதிக்கப்பட்ட மாதிரிகள்(எண்)	1529	1683	2332	1870	–
4.	வழக்குகள் தொடரப்பட்டது (எண்)	90	102	109	93	–
5.	முடிவு பெற்ற வழக்குகள் (எண்)	64	81	82	84	–
6.	முடிவு பெறாத வழக்குகள் (எண்)	26	21	27	36	–

விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்து, விதை மாதிரிகள் எடுத்து விதைகள் சட்டத்தை செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு விதை சான்றுத்துறை சிறந்து விளங்குகிறது.

3.விதைப் பரிசோதனை:

தற்போது தமிழ்நாட்டில் கோவை, மதுரை, குடுமியான்மலை, தர்மபுரி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய **6** இடங்களில் விதைப் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. *1993-94* ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் ஒரு புதிய விதைப் பரிசோதனை நிலையம் துவங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களில் விதை பரிசோதனை நடை முறைகளின்படி, விதைகளின் தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிறரக கலப்பு விதைகள், ஏனைய பயிர் விதைகள், களை விதைகள் முதலியனவற்றை அறிய விதை பரிசோதனைகள் செய்யப்படுகின்றது.

1993-94 ஆம் ஆண்டில் (பிப்ரவரி திங்கள் முடிய) *30929* விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. *1994-95* ஆம் ஆண்டில் *42000* விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5.5

ஆய்வு செய்யப்பட்ட விதை மாதிரிகளின் எண்ணிக்கை

தொடர எண்.	விதை பரிசோதனை நிலையம்	*1990-91*	*1991-92*	*1992-93*	*1993-94* பிப்ரவரி முடிய	*1994-95* ஆம் ஆண்டு இலக்கு
1.	கோயம்புத்தூர்	14866	13511	11537	8039	10000
2.	மதுரை	8700	8824	8631	7129	10000
3.	குடுமியான்மலை	-8570	10372	10342	8237	6000
4.	தர்மபுரி	-	1671	6234	4048	4000
5.	தஞ்சாவூர் (*1991-92* ல் துவக்கப்பட்டது)	-	-	210	2843	4000
6.	திருநெல்வேலி (*1992-93* ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது)	-	-	-	633	4000
7.	காஞ்சிபுரம் (*1994* ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது)	-	-	-	-	4000
	மொத்தம்	32136	34378	36954	30929	42000

இவ்வாண்டில் ரூ.*9.00* லட்சம் செலவில் தர்மபுரியில் புதிய விதை பரிசோதனை நிலையம் கட்டப்பட்டுள்ளது. ரூ.*15.00* லட்சத்தில் மதுரை விதை பரிசோதனை நிலயம் "மேம்படுத்தப்பட்ட பரிசோதனை நிலையமாக" மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

4. இனத்தூய்மை:

பருத்தி மற்றும் ஆமணக்கு வீரிய ரகங்களும் அவைகளின் தாயாதி இரகங்களும் இனத்தூய்மை பரிசோதனை செய்தபின்னரே சான்றளிக்கப்படுகிறது. இந்த பரிசோதனைகள் கண்ணம்பாளையம் அரசு விதைபண்ணையிலும், விதைசான்று இயக்குனர் அலுவலக வளாகத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும் நடத்தப்படுகிறது. *1993-94* ல் பிப்ரவரி முடிய *61* மாதரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. விதை ஆய்வாளர்களால் எடுக்கப்படும் (சந்தேகத்திற்குரிய) மாதிரிகளின் இனத்தூய்மையும் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

5. வருவாய்:

1993-94 ஆம் ஆண்டில் (பிப்ரவரி திங்கள் முடிய) ரூ.*38.24* லட்சம் இத்துறைக்கு வருவாயாக கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த வருவாய் விதை பண்ணை பதிவு கட்டணம் விதை பரிசோதனை கட்டணம், சான்று,அட்டை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மூலம் கிடைக்கப்படுகிறது. *1993-94* ஆம் ஆண்டு முடிவிற்குள் ரூ.*50.00* லட்சம் வருவாய் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 5.6

வருவாய் பற்றிய விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

வரிசை எண்.	பயிர் வாரியாக கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்	பதிவுக் கட்டணம் (ஏக்கருக்கு) ரூபாய்	1990-91	1991-92	1992-93	1993-94 பிப்ரவரி முடிய	1994-95 இலக்கு
1.	நெல்	30	7.39	8.68	8.06	8.55	8.66
2.	வீரிய சிறுதானியம்	100	0.66	0.41	0.29	0.31	0.41
3.	ரக சிறுதானியம்	30	0.71	0.72	0.80	0.71	0.83
4.	வீரிய பருத்தி	300	0.73	0.35	0.31	0.51	0.16
5.	ரக பருத்தி	50	12.70	13.85	7.17	13.12	13.79
6.	பயறு வகைகள்	30	7.04	6.46	6.29	4.73	7.87
7.	எண்ணெய் வித்துக்கள்	30	2.07	2.73	1.95	1.95	2.89
8.	காய்கறிகள்	100	0.62	0.66	0.81	0.56	0.79
	மொத்த விதைபண்ணை பதிவு கட்டணம்	-	31.92	33.86	25.68	30.44	35.40
9.	விதை பரிசோதனை கட்டணம்,,மறு பரிசோதனை,திறன் ஆய்வு கட்டணம், சான்றட்டை கட்டணம்	-	7.89	28.17	25.26	7.79	18.86
	மொத்தம்		39.81	62.03	50.94	38.24	54.25

6. புதிய ஆய்வு மையங்கள்:

1993-94 ஆம் ஆண்டில் புதிதாக இரண்டு விதை ஆய்வு மையங்கள் சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களிலும், காஞ்சிபுரத்தில் ஒரு விதை பரிசோதனை நிலையமும் துவக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் — 6

வேளாண்மை விற்பனைத் துறை

வேளாண்மை விற்பனைத் துறையானது 1977— ஆம் ஆண்டு சென்னையில் வேளாண்மை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவப்பட்டு, இத்துறையானது 1979 முதல் தனித்துறையாக திருச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட துவங்கியது. 5.7.93 முதல் திருச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வந்த இவ்வியக்குநரகம் சென்னைக்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்துறையின் முக்கிய குறிக்கோள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளின் விலைப் பொருட்களுக்கு நியாயமான ஆதாயமுள்ள விலை கிடைக்க செய்வதும், வியாபாரிக்களுக்கு ஒரே இடத்தில் தேவையான விலை பொருள்களை வாங்க வசதி செய்து கொடுப்பதும் மற்றும் நுகர்வோருக்கு தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களை வழங்குவதே ஆகும்.

வேளாண்மை விற்பனை இயக்குநரகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :

1. விவசாயிகளின் நலனுக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.
2. விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதி செய்து கொடுத்தல்.
3. அக்மார்க் தரம் பிரிப்பு மூலம் நுகர்வோரின் நலம் காத்தல்.
4. வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள், புகையிலை தரம் பிரிப்பு மையங்கள் மூலம் விவசாயிகள் கொண்டுவரும் விலைப்பொருட்களை இலவசமாக தரம் பிரிக்கப்பட்டு தரத்திற்கு ஏற்ற அதிக விலை கிடைக்கச் செய்தல்.
5. பருத்தி சான்றளிப்புத் திட்டம் — செயல்படுத்துதல்.

1994 ஏப்ரல் 20]

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

விவசாயிகள் கொண்டு வரும் விளைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், விற்பனை முறைகளை ஒழுங்குப் படுத்தவும் தமிழ்நாட்டில் 14 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 15 துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன.

இவ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாய விளைப் பொருட்களை விற்பனைக்காக கொண்டு வரும் விவசாயிக்கும், வியாபாரிக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தி விவசாயிகளின் விளைப் பொருட்களுக்கு ஆதாயமான போட்டி விலை கிடைக்க மறைமுக ஏலத்தின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு நிதி ஆண்டுகளிலும் மற்றும் இவ்வாண்டு (பிப்ரவரி 94 முடிய) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வந்த விவசாய விளைப் பொருட்களின் வரத்து விவரம் பின்வருமாறு :

அட்டவணை 6.1

விற்பனைக் குழு வாரியாக விளைப்பொருட்களின் வரத்து விவரம் :

அளவு மெ. டன்னில்

வ. எண்	விற்பனைக் குழுக்களின் பெயர்	1991—92	1992—93	1993—94 இலக்கு	1993—94 பிப்ரவரி 94 முடிய சாதனை
1.	செங்கை எம்.ஜி.ஆர்	3,230	3,818	8,000	3823
2.	வட ஆற்காடு	65,407	92,284	1,20,000	83,292
3.	தென் ஆற்காடு	1,55,337	2,15,125	2,25,000	1,76,398

4.	சேலம்	*5,650*	*5,283*	*10,000*	*5,264*
5.	தர்மபுரி	*8,523*	*6,914*	*10,000*	*7,260*
6.	கோயம்புத்தூர்	*76,269*	*69,988*	*99,000*	*54,462*
7.	பெரியார்	*88,240*	*91,477*	*1,00,000*	*1,05,378*
8.	திருச்சி	*18,851*	*19,045*	*22,000*	*16,577*
9.	தஞ்சாவூர்	*7,787*	*11,620*	*16,500*	*17,863*
10.	புதுக்கோட்டை	*1,940*	*2,190*	*2,500*	*1,964*
11.	மதுரை	*8,104*	*10,328*	*11,000*	*8,878*
12.	இராமநாதபுரம்	*14,983*	*16,683*	*17,500*	*15,020*
13.	திருநெல்வேலி	*11,725*	*12,699*	*13,500*	*10,816*
14.	கன்னியாகுமரி	*2,257*	*1,795*	*3,000*	*2,603*
	கூடுதல்	*4,68,303*	*5,59,249*	*6,58,000*	*5,09,598*

அதேபோல் மேற்படி விலைப் பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செய்வதின் மூலம் கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் மற்றும் இவ்வாண்டு (பிப்ரவரி 94 முடிய) விற்பனைக் குழுக்கள் வாரியாக ஈட்டிய வருவாய் விவரம் பின்வருமாறு :

அட்டவணை 6.2

விற்பனைக் குழு வாரியாக வருவாய் விபரம்

(ரூபாய் லட்சத்தில்)

வ. எண்	விற்பனைக் குழுக்களின் பெயர்	1991—92	1992—93	1993—94 இலக்கு	1993—94 பிப்ரவரி 94 முடிய சாதனை
1.	செங்கை எம்.ஜி.ஆர்	40·49	49·88	55·00	23·52
2.	வட ஆற்காடு	103·50	136·28	150·00	128·01
3.	தென் ஆற்காடு	181·57	276·36	290·00	215·65
4.	சேலம்	107·84	116·46	130·00	43·60
5.	தர்மபுரி	70·50	75·96	90·00	68·38
6.	கோயம்புத்தூர்	165·45	191·38	205·00	201·77
7.	பெரியார்	86·55	115·17	125·00	126·32
8.	திருச்சி	73·55	76·31	90·00	73·27
9.	தஞ்சாவூர்	92·02	119·46	135·00	169·34
10.	புதுக்கோட்டை	14·79	31·56	35·00	23·64
11.	மதுரை	56·64	78·71	85·00	68·16
12.	இராமநாதபுரம்	75·90	100·87	110·00	80·56
13.	திருநெல்வேலி	66·83	71·01	85·00	64·69
14.	கன்னியாகுமரி	25·82	45·65	50·00	48·40
	கூடுதல்	1161·45	1485·06	1635·00	1385·31

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வழங்குதல் :

சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களுடைய விலைப் பொருட்களை அறுவடை காலங்களில் குறைந்த விலையில் விற்று நஷ்டமடைவதை தடுப்பதற்காக மத்தியமற்றும் மாநில அரசு உதவியுடன் 98 ஊரக கிடங்குகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டப்பட்டு, தங்களுடைய விளைப் பொருட்களை இருப்பு வைத்து அதன் மீது பொருளீட்டுக் கடன் பெற வழிவகுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் இந்த ஊரக கிடங்குகளில் தங்களுடைய விளைப் பொருட்களை இருப்பு வைத்து, அந்த விளைப் பொருட்களின் மதிப்பில் 75% சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், 50% இதர விவசாயிகளுக்கும், அதிகபட்ச தொகை ரூ. 10000/ வரை பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. மேலும் பொருளீட்டுக் கடனுக்கு முதல் 30 நாட்களுக்கு இலவசமாகவும், அடுத்து வரும் மாதங்களுக்கு 12% என்ற அளவில் தனிவட்டி வசூலிக்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுடைய விளைப் பொருட்களை ஊரக கிடங்குகளில் ஆறுமாதம் வரை இருப்பு வைத்து, தங்களுக்கு திருப்திகரமான விலை கிடைக்கும் பொழுது விற்பனை செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மற்றும் இவ்வாண்டு பிப்ரவரி 94 முடிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பொருள் அடமானக் கடன் பின்வருமாறு :

TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 6.3

விற்பனை குழுவாரியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பொருளீட்டு கடன் விவரம்.

அளவு ரூ. லட்சத்தில்

வ. எண்	விற்பனைக் குழுவின் பெயர்	ஊரகக் கிடங்குகளின் எண்ணிக்கை	1991–92	199293	1993–94	
					இலக்கு	பிப்ரவரி 94 முடிய வழங்கிய தொகை
1.	செங்கை எம்.ஜி.ஆர்	5	1·87	18·29	15·00	10·00
2.	வட ஆற்காடு	11	4·97	4·34	10·00	7·11
3.	தென் ஆற்காடு	12	12·28	40·24	40·00	20·82
4.	சேலம்	2	1·41	5·05	5·00	5·68
5.	தர்மபுரி	3	4·60	4·06	10·00	1·34
6.	கோயம்புத்தூர்	4	7·30	8·95	30·00	2·89
7.	பெரியார்	7	6·40	21·79	25·00	21·19
8.	திருச்சி	10	1·66	6·67	10·00	7·61
9.	தஞ்சாவூர்	7	6·47	6·38	10·00	8·13
10.	புதுக்கோட்டை	2	1·62	4·95	5·00	4·31
11.	மதுரை	8	20·09	13·88	25·00	4·54
12.	இராமநாதபுரம்	10	24·57	30·18	40·00	32·24
13.	திருநெல்வேலி	12	14·85	11·79	25·00	19·81

14.	கன்னியாகுமரி	5	6·94	9·00	15·00	6·73
	கூடுதல்	98	115·03	185·57	265·00	155·67

கூடுதலாக அரசு ஆணை எண். 483 வேளாண்மைத்துறை நாள் : 10.8.93 ன்படி கூடுதலாக அனுமதிக்கப்பட்ட 39 கிடங்குகள் மூலமாக வழங்கப்பட்ட பொருளீட்டு கடன்கள் (பிப்ரவரி 94 முடிய)

அட்டவணை 6.4

39 கூடுதல் ஒழுங்குமுறை கிட்டங்கிகளில் வழங்கப்பட்ட பொருளீட்டுக்கடன்

ரூபாய் லட்சத்தில்

வ. எண்	விற்பனைக் குழுக்களின் பெயர்	கிட்டங்கிகள் எண்ணிக்கை	பிப்ரவரி 94 முடிய வழங்கப்பட்ட கடன்
1.	செங்கை எம்.ஜி.ஆர்	5	
2.	தருமபுரி	3	0·50
3.	பெரியார்	4	3·57
4.	கோயம்புத்தூர்	10	15·29
5.	தஞ்சாவூர்	2	
6.	மதுரை	3	11·87
7.	இராமநாதபுரம்	8	1·00
8.	திருநெல்வேலி	3	0·65
9.	நாகர்கோயில்	1	1·25
	கூடுதல்	39	34·13

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

3. அக்மார்க் தரம் பிரிப்பு :

இத்திட்டத்தின் நோக்கம் நுகர்வோருக்கு நல்ல தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்க செய்வதே ஆகும். இத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் 34 அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் தரம் பிரிக்கப்படும் உணவுப்பொருட்கள் பின்வருமாறு :

அட்டவணை 6.5

அக்மார்க் தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் அளவு

வ.எண்.	மத்திய கட்டுப்பாட்டிற்கு கட்டுப்பட்டது (அக்மார்க் ஆய்வகங்கள் மூலம்)	மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்படாதது (வேளாண்மை அலுவலர், விற்பனை மூலம்)
1.	தாவர எண்ணெய்கள்	1. அரிசி
2.	நெய்	2. பருப்பு வகைகள்
3.	தேன்	3. வெல்லம்
4.	மசாலாப் பொடிகள்	4. மஞ்சள்
5.	கடலை மாவு	5. கொத்தமல்லி
6.	கோதுமை மாவு	6. உருளைக்கிழங்கு
7.	ரவை	7. முட்டை
8.	மைதா	8. ஏலக்காய்
9.	கொட்டையில்லாத புளி	9. பாக்கு
10.	ஜவ்வரிசி	

மேலும், வேளாண்மை விற்பனை இயக்குநரகத்தில் முதன்மை ஆய்வுக்கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக்மார்க்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்படும் மாதிரிகளில் மீண்டும் ஆய்வு செய்து தரம் பிரிப்பின் தரத்தை உறுதி செய்வதே இந்த முதன்மை ஆய்வகத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும் அக்மார்க் ஆய்வு கூடங்களில் பணியாற்றும் ஆய்வக உதவியாளர்களின் திறமை மேம்பாடு அடையும் வகையில் ஆய்வுக்கூடத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அக்மார்க் தரம் பிரிப்பின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் மற்றும் இவ்வாண்டு (டிசம்பர் 93 முடிய) தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் அளவு விவரம் பின்வருமாறு :

அட்டவணை 6.6

அக்மார்க் தரம்பிரிப்பு திட்டத்தின் கீழ் தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் அளவு

வ.எண்.	திட்டத்தின் பெயர்	1991–92	1992–93	1993–94 இலக்கு	1993–94 டிசம்பர் 93 முடிய சாதனை
1.	மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது	195976	194131	235200	153355
2.	மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்படாதது	167530	188806	340500	168663

4. வணிக முறை தரம் பிரிப்பு

இம்மையங்களின் மூலம் விவசாயிகள் கொண்டுவரும் விளைப்பொருட்கள் இத்துறையின் மூலம் பயிற்சிப் பெற்ற 200 பணியாளர்களைக் கொண்டு தரம் பிரிக்கப்பட்டு தரத்திற்கேற்ற அதிக விலை கிடைக்கச் செய்யப்படுகிறது.

1994 ஏப்ரல் 20]

தமிழ் நாட்டில் வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள் 96 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், புகையிலை தரம் பிரிப்பு மையம் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் உள்ளது.

மேற்படி மையங்களின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மற்றும் இவ்வாண்டு (டிசம்பர் 93 முடிய) தரம் பிரிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு :

அட்டவணை 6.7

வணிகமுறை தரம் பிரிப்பு பருத்தி தரம் பிரிப்பு மற்றும் புகையிலை தரம் பிரிப்பு தரம்பிரிக்கப்பட்ட அளவு

(அளவு குவின்டால்)

வ.எண்.	திட்டத்தின் பெயர்	1991–92	1992–93	1993–94	
				இலக்கு	டிசம்பர் 93 முடிய சாதனை
1.	வணிகமுறை தரம் பிரிப்பு	5135885	5947708	5712300	3640643
2.	பருத்தி தரம் பிரிப்பு	346161	379098	400000	268908
3.	புகையிலை தரம் பிரிப்பு	11527	12023	12000	10029

5. பருத்தி சான்றளிப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் நோக்கம் பருத்தி விதை நீக்கும் மற்றும் அழுத்தும் தொழிற்சாலைகளில் வேறுவகைப் பருத்திகளை கலப்படம் செய்யாமல் தடுப்பது, மாநிலத்தில் கிடைக்கும் பருத்தியின் அளவையும், வெளி மாநிலங்களிலிருந்து வரும் பருத்தியின் அளவையும் கணக்கிடுதல் மற்றும் பருத்தி எடுத்துச்

செல்வதற்கான சட்டம் மற்றும் விதிகளை செயல்படுத்துவதே ஆகும்.

மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகள் மற்றும் இவ்வாண்டு (டிசம்பர் 93 முடிய) வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் மற்றும் வருவாய் விவரம் பின்வருமாறு :

அட்டவணை 6.8

பருத்தி சான்றளிப்பு திட்டத்தில் வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் அதன் மூலம் கிடைத்த வருவாய் விபரம் :

வ.எண்.	திட்டத்தின் பெயர்	1991–92	1992–93	1993–94	
				இலக்கு	டிசம்பர் 93 முடிய சாதனை
1.	பருத்தியை எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட உரிமங்கள் (எண்களில்)	1,12,601	1,28,107	1,38,000	81,596
2.	உரிமங்கள் வழங்கியது மூலம் கிடைத்த வருமானம் (ரூபாய் இலட்சத்தில்)	9·17	9·50	10·20	7·70

அக்மார்க் தரம் பிரிப்பு, வணிக முறை தரம் பிரிப்பு மற்றும் பருத்தி சான்றளிப்பு சேவைகள் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படாமல் அளிக்கப்படுகிறது விவசாயிகள் மற்றும் வணிகர்கள் சமுகமான நட்பு உயிர்வு சூழ்நிலையில் அங்காடிகளில் உறவாடுவதை ஊக்குவிக்கும் முறையை 199394 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டன.

1994 ஏப்ரல் 20]

அ. கழிப்பிட வசதி செய்து தருதல் :

இந்நிதியாண்டில் 3 விற்பனைக் குழுக்களிலுள்ள 11 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூ. 5.50 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டப்பட உள்ளது. (ஒன்றின் மதிப்பு ரூ. 50,000/)

இதுவரை கீழ்க்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மேற்படி பணி முடிவடைந்துள்ளது.

1. விருது நகர்
2. பரமக்குடி
3. அருப்புக்கோட்டை
4. பொங்கலூர்.
5. மடத்துக்குளம்.

ஆ. குடிநீர் வசதி செய்து தருதல் :

11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்யப்பட உள்ளது. இதுவரை விக்ரவாண்டி, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மேற்படி பணி முடிவடைந்துள்ளது.

இ. ஓய்வு கூடங்கள் அமைத்து தருதல் :

12 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் ஒய்வுக்கூடங்கள் கட்டப்பட உள்ளது. தற்சமயம் 10 ஒழுங்குமுறை கூடங்களில் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் புஞ்சை புளியம்பட்டி, கொடுமுடி மற்றும் விக்ரவாண்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

இதர 7 ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் பணியினை மார்ச்சு 94 க்குள் எடுத்துக் கொள்ளப்பட்டு செப்டம்பர் 1994 க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈ. குளிர்ந்த குடிநீர் வசதி செய்து தருதல்

29 ஒழுங்குமுறை விற்பனைக் கடங்களில் ரூ. 5.80 லட்சம் மதிப்பீட்டில் 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்ந்த குடிநீர் பெட்டி வாங்க அரசு அனுமதியளித்ததை தொடர்ந்து,

அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் குளிர்ந்த குடிநீர் பெட்டி வாங்கப்பட்டுள்ளது.

உ. விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளித்தல் :

விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொண்டு வந்து விற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 10 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளுக்கு போக்குவரத்து மானியம் மற்றும் சிற்றுண்டி செலவினம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

இதுவரை வழங்கப்பட்ட மானியத் தொகை :

போக்குவரத்து மானியம்	—	ரூ. 1,230/
சிற்றுண்டி செலவினம்	—	ரூ. 643/

ஊ. வியாபாரிகளுக்கு விற்பனைக் கட்டணத்தில் மானியம் அளித்தல்:

வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருவதை ஊக்குவிக்கும் பொருட்டு விற்பனைக் கட்டணத்தில் 20% மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அமுல்படுத்தப்பட்டு, இது நாள் வரை ரூ. 1260/ வியாபாரிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

எ. பொருளீட்டுக் கடன் வசதியை விரிவுபடுத்துதல் :

மேற்படி திட்டம் தற்சமயம் 98 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 39 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விரிவுப் படுத்தப்பட உள்ளது. 1993—94 குறியீடு ரூ. 265 இலட்சம். சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு ரூ. 159.84 லட்சம் பொருளீட்டுக் கடனாக கொடுக்கப்பட்டுள்ளது.

ஏ. நவீன ஈரப்பதமானி :

நவீன ஈரப்பதமானி மூலம் விவசாயிகள் கொண்டு வரும் விதைப்பொருட்களில் ஈரப்பதத்தை துல்லியமாக கண்டறியும் பொருட்டு 17வணிகநிறைதரம்பிரிப்புமையங்களில்அமைக்கஅரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1994 மார்ச்சுக்குள் 17 மையங்களுக்கும் ஈரப்படிமானி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 20]

ஐ. எண்ணெய் சதம் கண்டறியும் கருவி :

எண்ணெய் வித்து பயிர்களில், எண்ணெய் சத்தை துல்லியமாக கண்டறியும் பொருட்டு விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரு எண்ணெய் சதம் கண்டறியும் கருவி பொருத்தப்பட உள்ளது.

ஒ. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தொலைபேசி வசதி செய்து தருதல் :

17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வசதியுடன் பேசக்கூடிய கட்டணத் தொலைபேசி அமைக்க தலைமை பொது மேலாளர் (Telecom) அவர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஓ. எலக்ட்ரானிக் எடைபோடும் கருவி அமைத்தல் :

20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 20 லட்சம் மதிப்பில் 1000 கிலோ எலக்ட்ரானிக் எடைபோடும் கருவிகள் ஆண்டு முடிவிற்குள் நிறுவப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 20

அத்தியாயம் — 7

மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம் (மா.வே.வி.வி.வா)

மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம், விற்பனைக் குழுக்களின் தலைமை அமைப்பாகும், இது அரசு, விற்பனைக் குழுக்கள், வேளாண் விளைபொருள் விற்பனை இயக்ககம் ஆகியவற்றிற்கிடையே ஒரு சிறந்த இணைப்பாகச் செயல்படுவதோடு, ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்களில் வேளாண் விளைபொருட்களின் விற்பனை தொடர்பாக ஒரே சீரான நடவடிக்கைகள், நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் உறுதி செய்கிறது. தமிழ்நாடு 1987 ம் ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் சட்டப்படிக்கான வாரியம் ஏற்படுத்துவது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளதால், சட்டப்படியான வாரியம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இவ்வாரியம் தற்போது சட்டப்படி அமைக்கப்படாத ஓர் அமைப்பாகவே இயங்கி வருகிறது.

1.0. செயற்பாடுகள் :

1.1. விளம்பரமும் பிரச்சாரமும் :

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்து நல்ல வருவாய் ஈட்டுவதை வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம், சென்னை, கோயம்பூத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள வாரியத்தின் மையங்கள் வாயிலாக விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணியினை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் பிரச்சார வாகனம், திரைப்படக் கருவி, ஒலிபெருக்கி வசதி முதலியவை உள்ளன. இப்பிரச்சார விளம்பர அமைப்பு, கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளின் கூட்டங்கள் நடத்துவது, சிறிய பொருட்காட்சிகள் அமைத்தல், விளைபொருள் விற்பனை வாரியத்தின் அனுகூலங்களை விளக்கும் திரைப்படங்கள்

காட்டுதல் ஆகிய பணிகள் நடத்தி வருகிறது. விளம்பர, பிரச்சாரக் காலங்களில் பயன்படுத்துவதற்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பயன் குறித்து மக்களிடையே பிரச்சாரம் செய்ய சுவரொட்டிகள், ஸ்டிக்கர்கள், சிறு வெளியீடுகள், துண்டுப் பிரச்சுரங்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து விற்பனைக் குழுக்களுக்கும் வழங்கப்படுகின்றன.

அட்டவணை — 7.1

விளம்பர பிரச்சார முன்னேற்ற பணிகள்

வ.எண்	விபரங்கள்	1992—93 இலக்கு	1993—1994 இலக்கு	1993—94 சாதனை (பிப்ரவரி 94 வரை)
1.	பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய கிராமங்கள்	*410*	*400*	*397*
2.	தீவிர பிரச்சாரம் மேற்கொள் ளப் படவேண்டிய கிராமங்கள் (விவசாயிகள் கூட்டங்கள், திரைப்பட காட்சி, சிறிய கண் காட்சிகள்) பிரச்சாரம்	*675*	*800*	*663*
3.	மேற்கொள்ளப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	*2094*	*2400*	*2050*
4.	கிராம விழாக்களில் பொருட் காட்சிகள் நடத்தியது	*25*	*48*	*23*
5.	அகில இந்திய வானொலி மூலம் செய்திகள் ஒலிபரப்பியது	*478*	*800*	*490*
6.	தொலைக்காட்சிகள் மூலம் செய் திகள் வழங்கியது	*48*	*50*	*44*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7.	தினசரிகள் மூலம் செய்திகள் வெளியிட்டது	64	96	68
8.	சிறு விளம்பரங்கள், துண்டுப் பிரச்சுரங்கள் துண்டறிக்கைகள் முதலியவை தயாரித்து வெளியிட்டது	13000	20000	15000
9.	சினிமா ஸ்லைடுகள் தயாரித்தது	—	200	25

2. அங்காடித் தகவல் விபரம் :

"அங்காடிச் செய்தி" என்ற பெயர் கொண்ட நாளிதழ் ஒன்று ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் முந்தைய இரண்டு நாட்களில் நிலவிய வேளாண் விளைபொருட்களின் விலை விபரம், விளைபொருள் வரத்து பற்றிய விபரங்கள், வாரியத்தின் தலைமையிடத்தில் இருந்து வெளியிடப்பட்டு, எல்லா விற்பனைக் குழுக்களுக்கும், விற்பனைக் கூடங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

தேசிய தகவல் மையத்தின் மூலமும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருள் வரத்து மற்றும் நிலவுகிற விலை விபரங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. சென்னைத் தொலைக்காட்சியில் வரும் 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில், ஒவ்வொரு திங்கட்கிழமையும், முதன்மை விற்பனைக்கூடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலைவீதங்கள் குறித்த தகவல் அளிக்கப்படுகிறது. அகில இந்திய வானொலி மூலமும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவும் குறிப்பிட்ட விளைபொருட்களின் விலை விபரங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

3. பயிற்சி :

இவ்வாரியத்தின் பயிற்சி மையம், வேளாண்மை உதவி இயக்குநர் ஒருவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் திருச்சியில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிப் பிரிவு, அங்காடிக்குழுப் பணியாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் பயிற்சித் தேவை

களை நிறைவு செய்கிறது. இந்த பயிற்சி மையத்தில் வணிகத் தரம்பிரித்தல், அக்மார்க் குறியீடு, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், சேமித்தல், வரவு செலவுத் திட்டமிடல், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டம், அதன் விதிகள் ஆகியவை போன்ற வேளாண் விளைபொருள் விற்பனை குறித்த பல்வேறு அமசங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(1) தரம் பிரிப்பாளர் பயிற்சி :

இப்பயிற்சியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பணிபுரியும் தரம் பிரிப்பாளர்களுக்கு வணிகத் தரம் பிரித்தல், அக்மார்க் குறியீடு, அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பவியல், சேமிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் போது, பயிற்சியாளர்களுக்கு வகுப்புப் பாடங்கள் மட்டுமல்லாமல், செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், அக்மார்க் பரிசோதனைக்கூடங்கள், மத்திய அரசின் விற்பனை ஆய்வு இயக்ககம் ஆகிய அலுவலகங்களுக்கும் பணியாளர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

(2) விற்பனைக் குழுப் பணியாளர்களுக்கான பயிற்சி :

விற்பனைக் குழு பணியாளர்களுக்கு ஒரு பாடமுறை மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம் விற்பனைக் குழுப் பணியாளர்களுக்கு வரவு செலவுக் கணக்கு, சட்டம் மற்றும் விதிகள், அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் ஆகியவை குறித்து புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது பயிற்ச்சியாளர்கள் மற்ற மாநிலங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் செயல்முறை மற்றும் வளர்ச்சிபற்றி விளக்கப்படுவார்கள்.

(3) நேரடித் தொடர்புத் திட்டம் :

இப்பயிற்சி விற்பனைக்குழுக்கள் பரிந்துரைக்கும் விவசாயிகளுக்கென்றே நடத்தப்படும் பயிற்சியாகும். இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், சேமிப்பு மற்றும் விளைபொருட்களை

[1994 ஏப்ரல் 20

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இப்பயிற்சியின் போது விவசாயிகள் பலதரப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். விவசாயிகளின் பயணச் செலவுகள் அனைத்தையும் வாரியம் ஏற்கிறது. விவசாயிகளுக்கு பயிற்சிக் காலத்தில் தினசரி படியாக ரூபாய் 15/ வழங்கப்படுகிறது.

அட்டவனை — 7.2

வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தால் நடத்தப்பட்ட பயிற்சி விவரங்கள்

வ.எண்	பயிற்சியின் பெயர்	பயிற்சிக்கால (நாட்களில்)	ஆண்டு ஒன்றுக்கு தொகுதிகளின் எண்ணிக்கை	1992–93	1993–94 ஒவ்வொரு தொகுதியிலும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	1993–94 மொத்தப் பயிற்சி பெற்றவர்களின் (பிப்ரவரி 1994 வரை)
1.	தரம் பிரிப்பாளர் பயிற்சி	90	2	26	20	14
2.	விற்பனைக்குழு பணியாளர்களுக்கான பயிற்சி	35	2	39	20	37
3.	நேரடி தொடர்புத் திட்டம்	5	4	58	20	58

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

(4) பொறியியல் பணிகள் :

தமிழ்நாட்டில் உள்ள அங்காடிக் குழுக்களின் விற்பனைக் கூடங்களில் கட்டுமானப் பணிகள் அனைத்தையும நிறைவேற்ற தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தில் கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரையும், இரண்டு செயற்பொறியாளருடன் 6 உதவி செயற் பொறியாளர்களையும் கொண்ட இரு கோட்டங்களுடன் கூடிய பொறியியல் பிரிவு ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. 1991ம் ஆண்டு முதல் பொறியியல் பிரிவு ஒரு கோட்டத்துடன் இயங்கி வருகிறது.

எட்டாம் ஐந்தாட்டுத் திட்டக் காலத்தில், மத்திய அரசு வழங்கும் ரூ. 20 இலட்சம் பங்குக் தொகையுடன், மொத்தம் ரூ. 81.00 இலட்சம் செலவில், 10 ஊரகக் கிடங்குகள் கட்டும் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. தவிரவும் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல், உலர்களங்கள், கிடங்குகள், ஏலக்கொட்டகைகள், கடைவளாகம், வேளாண் இடுபொருள் விற்பனை மற்றும் பணம் வழங்கும் இடங்கள், ஓய்வுக் கூடங்கள், பணம் வழங்கும் இடம் ஆகியவை அமைத்தல், குடிநீர் வழங்கல், கழிப்பறை வசதிகள், அங்காடி வளாகத்தினுள் சாலைகள் அமைத்தல், அலுவலகம் — கிடங்குகள், சுற்றுச்சுவர்கள் முதலியவை கட்டுதல் போன்ற அங்காடிக் குழுவின் கட்டுமானப் பணிகளையும் பொறியியல் பிரிவு நிறைவேற்றுகிறது.

1993—94 ஆம் ஆண்டில், பொறியியல் பிரிவு ரூ. 60 இலட்சம் செலவில், 12 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஓய்வுக் கூடங்கள் கட்டும் பணியை நிறைவேற்றியுள்ளது. ரூ. 40 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 5.50 இலட்சம் செலவில் 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் துப்புரவு வசதிகள் செய்து கொடுக்கும் பணியையும் பொறியியல் பிரிவு மேற்கொண்டுள்ளது. கட்டுமானப் பணியை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 11 கழிப்பறைகளில், 5 கழிப்பறைகள் கட்டும் பணி பின்னர் முடிவடைந்துள்ளது.

நடப்பாண்டில், மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தைச் சேர்ந்த பொறியியல் பிரிவு, விற்பனைக் குழுக்களுக்காக ரூ. *412.47* இலட்சம் செலவில் *201* பணிகளை நிறைவேற்றிவருகிறது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.3

மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தினால் மேற்கொள்ளப்பட வரும் பணிகள்

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்	பணிகளின் பெயர்	எண்ணிக்கை	பணிகளின் மதிப்பு (இப்பணிகளின் முந்தைய ஆண்டுகளின் எஞ்சியுள்ள பணிகளும் அடங்கும்)
1.	சுற்றுச்சுவர்	27	69·00
2.	பராமரிப்பு மற்றும் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்	23	9·37
3.	பணப்பட்டுவாடா செய்யுமிடம்	7	30·00
4.	அலுவலகக் கட்டிடங்கள்	12	35·23
5.	உலர்களம்	12	40·12
6.	அலுவலகத்துடன் இணைந்த கிடங்கு	3	11·00
7.	குடிநீர் வழங்கல்	15	10·94
8.	கால்நடைக்கொட்டகை	1	1·97

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9.	கழிப்பிட வசதி	17	8·85
10.	ஓய்வு அறை (ஓய்வுக்கூடம்)	12	43·44
11.	மிதிவண்டி நிறுத்தும் கொட்டகை	1	0·27
12.	சாலைகள்	10	8·06
13.	முற்றத்திற்கு மின் வசதி.	8	2·01
14.	கடைவளாகங்கள்	2	3·60
15.	எலிபுகா கிடங்கு	2	13·10
16.	ஓய்வுக்கூடங்கள் கட்டுதல்	12	60·00
17.	குடிநீர் வழங்கல் பணிகள்	12	40·00
18.	கழிப்பிட வசதி	11	5·50
19.	ஊரகக் கிடங்கு கட்டுதல்	4	20·00
	மொத்தம்	201	412·47

கடந்த பத்தாண்டுகளில் ரூ. 1429.06 இலட்சம் மதிப்புள்ள 766 பணிகள் முடிக்கப்பட்டு, விற்பனைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல், துப்பரவுப்பணிகள் ஆகியவற்றின் செலவு மட்டும் ரூ. 111.63 இலட்சமாகும். கடந்த 10 ஆண்டுகளில், பொறியியல் பிரிவு ரூ. 397.67 இலட்சம் செலவில், 97 ஊரகக் கிடங்குகளைக் கட்டி முடித்தது.

அட்டவணை 7.4

மாநில வேளாண் விளைபொருள் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள்

		1991—92		1992—93		1993—94		மொத்தம்	
வ. எண்	பணிகளின் பெயர்	எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு
1·	ஊரகக் கிடங்கு	*4*	*27·03*	*1*	*6·41*	—	—	*97*	*397·67*
2·	சுற்றுச் சுவர்	*3*	*2·38*	*19*	*33·45*	*9*	*11·09*	*61*	*98·45*
3·	ஊர்தி நிறுத்துமிடம்	—	—	—	—	*2*	*4·45*	—	—
4·	அலுவலகக் கட்டிடம்	*3*	*10·00*	*4*	*20·00*	*4*	*20·00*	*30*	*98·0*
5·	மின்பழுதுபார்க்கும் பணி	*27*	*6·71*	*5*	*0·50*	*15*	*2·41*	*51*	*10·62*
6·	விவசாயிகள் ஓய்வுக் கூடம்	—	—	*1*	*4·50*	*1*	*5·00*	*9*	*43·10*
7·	ஓய்வு அறை	—	—	—	—	—	—	*12*	*24·30*
8·	கடைகள்	—	—	—	—	*2*	*4·70*	*13*	*26·00*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9. தரம்பிரிப்பு ஆய்வகம்	—	—	—	—	—	—	1	4·00
10. அலுவலகம் விருந்தினர் மாளிகை	—	—	—	—	—	—	8	40·00
11. அலுவலகக்கிடங்கு	2	0·30	—	—	6	30·00	37	124·00
12. பணம் பட்டுவடா செய்யுமிடம்	8	1·71	5	24·00	8	40·00	72	142·00
13. துப்புரவு ஏற்பாடுகள்	—	—	5	3·50	7	3·63	64	30·63
14. ஏலமேடை	1	0·18	—	—	3	15·00	7	28·48
15. சாலை	2	0·41	17	14·70	7	6·58	47	130·58
16. உலர்களம்	5	1·41	9	9·00	9	18·00	42	110·0
17. சிறப்புப் பழுது பார்ப்பு பணிகள்	23	2·60	42	2·01	45	21·33	110	20·94
18. குடிநீர் வழங்கல்	—	—	1	5·00	1	5·00	2	10·00
19. பருத்தி விதை எடுக்கும் ஆலை		—	—	—	—	—	1	13·75

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

20.	விருந்தினர் மாளிகை	—	—	1	5·00	1	5·00	2	10·00
21.	காவலர் அறை	—	—	—	—	1	0·18	3	6·18
22.	மிதிவண்டி நிறுத்தும் கொட்டகை	—	—	—	—	—		3	9·00
23.	கால்நடைக்கொட்டகை	—	—	—	—	—	—	3	6·00
24.	பணம்பட்டுவாடா செய்யுமிடம்	—	—	—	—	—	—	22	38·06
	மொத்தம்	778	52·73	110	128·07	121	192·37	697	1421·76

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 8

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வ.இ.ப.தி) மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டம், இம்மாநிலத்தில் *1972-73*ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தபட்டு வருகிறது. இத்திட்டற்காகும் செலவை மத்திய, மாநில அரசுகள் 50:50 என்ற அடிப்படையில் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. தற்போது இத்திட்டம், இம்மாநிலத்தில் பின்வரும் ஏழு மாவட்டங்களில் *43* வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப் படுகின்றது.

அட்டவணை *8.1*

வ.இ.ப.திட்ட மாவட்டங்கள் மற்றும் வளர்ச்சி வட்டாரங்கள்

வ.எண்.	மாவட்டங்கள்	வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயற்படுத்தப்படும் வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை
1.	தருமபுரி	12
2.	சிதம்பரனார்	8
3.	இராமநாதபுரம்	7
4.	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	6
5.	காமராசர்	5
6.	புதுக்கோட்டை	4
7.	திருநெல்வேலி கட்டபொம்மன்	1
	மொத்தம்	43

2. உயிரின வாழ்க்கைச் சூழலின் ஏற்றத் தாழ்வை சீராக்கும் நோக்கமாக கொண்டு உரிய அளவுக்கு இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் ஒருங்கிணைந்த சிறிய நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நிலமேம்பாடு மண் ஈரத்தன்மையைப் பாதுகாத்தல், காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில மேம்பாடு, மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு ஆகியவை இத்திட்டத்தில் மூன்று முக்கிய பகுதிகளாக அடங்கும்.

3. வறட்சியை நீக்கும் பணியில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை மிகவும் இன்றியமையாததாக கருதப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இப்பணி முடிவினை அடையவும், இத்திட்டத்தினை பல்வேறு அனைத்து நிலைகளில் உள்ளவர்கள் அறியவும் அவ்வலுவலர்களில் தேவைக்கேற்ப சிறப்பு பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்துறை ஆகியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அறிவார்ந்த அலுவலர்கள் இங்கிலாந்திலுள்ள கவர்டேவிலும், இந்தியாவில் ஹைதராபாத்தில் உள்ள 'மேனேஜ்' என்ற நிறுவனத்திலும் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி திட்டங்களின் நன்மைகள் நல்கிடத்தக்க வகையில் திட்டமிடுதல், நிர்வாகத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். ஆகியவற்றை எய்த விழைகின்றன. அவைமட்டுமின்றி, தொழில்நுட்ப அறிவைக் கோட்பாட்டு நிலையில் நன்கு புரிந்து கொண்டு அவற்றை செயல்படுத்த வழி செய்வதற்கும் நிகரான முக்கித்துவம் அளிக்கிறது.

*4. 1993-94*ஆம் ஆண்டில் *28,689* எக்டேர் நிலப்பரப்பில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டங்களை செயல்படுத்த ரூ.*1385.50* இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் பிப்ரவரி *1994* வரையிலான செலவழிக்கப்பட்ட தொகை மற்றும் திட்ட சாதனைகளின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 8.2

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் திட்ட சாதனை

வ. எண்.	விவரம்	அலகு	1990-91	1991-92	1992-93	1993-94 குறியீடு	1993-94 பிப்ரவரி 94 வரை சாதனை	1994-95 குறியீடு
1.	நிலம் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு	எக்டேர்	16022,	14247	14150	18560	16002	20787
2.	காடுவளர்ப்பு மற்றும் மேச்சல் நில மேம்பாடு	எக்டேர்	5175	4310	4352	6812	6288	7625
3.	நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு	எக்டேர்	412	346	320	483	333	543
4.	மற்றவை	எக்டேர்	683	623	647	2834	1713	3174
	மொத்தம்		22,292	19,526	19469	28,689	24,336	32,129

1994 ஏப்ரல் 20]

அட்டவணை 8.3

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் நிதி சாதனை

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	விவரம்	1990-91	1991-92	1992-93	1993-94		1994-95
					குறியீடு	பிப்ரவரி 94 வரை சாதனை	குறியீடு
1.	நில மற்றும் நீர் வள பாதுகாப்பு	173.500	195.009	191.234	294.150	278.35	331.132
2.	காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில மேம்பாடு	168.390	167.763	162.635	250.160	222.51	275.940
3.	நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு	133.670	114.007,	126.413	208.600	167.62	220.748
4.	மற்றவை	38.630	74.085	70.384	133.373,	99.55	165.570
5.	திட்ட நிர்வாகம்	87.680	88.035	93.479	99.219	97.17	110.380
	மொத்தம்	601.870	638.899	644.125	985.502*	865.20	1103.770

* மாநில அரசின் சிறப்பான சாதனை மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீட்டை பெற்றுத் தந்து மாநில அரசின் பங்கினைச் சேர்த்து ரூ.4 கோடிகள் ஒப்பளிக்கப்பட்டு, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தினை செயல்படுத்தும் மாவட்டங்களுக்கு **30.3.94** அன்று இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

5. மாநில அரசின் கோரிக்கையான, ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்தவும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் கூடுதல் வளர்ச்சி வட்டாரங்களை சேர்த்திட ஆராயவும், மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. **1992-93**ம் ஆண்டில் ரூ.**657** இலட்சங்களாக இருந்த நிதி ஒதுக்கீடு, **1993-94**ம் ஆண்டில் ரூ.**985.50** இலட்சங்களாக வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் அதிகரித்துள்ளது. இந்த ஒதுக்கீடு **1994-95**ம் ஆண்டில் **12** சதவீத அளவிற்கு மேலும் உயர்ந்து ரூ.**1104** இலட்சங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 9

தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம்

விவசாயத்திற்கு இயந்திர சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்தை நவீனமயமாக்கவும் விவசாயத்திற்கு தேவையான தரமான உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்குவதுடன் விவசாய உற்பத்திப் பொருட்களை செய்முறைப்படுத்துவதற்கு உதவிடுதல் ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம் 1966-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.400/- இலட்சம் ஆகும். இதில் இந்திய அரசு ரூ.165/- இலட்சமும், தமிழ்நாடு அரசு ரூ.235/- இலட்சமும் தங்களின் பங்கு மூலதனமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

2. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ் வருமாறு:

i) வேளாண்மை வளர்ச்சி பெறச் செய்யவும், நவீன மயமாக்க உதவும் பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்தல், நிறுவதல், தானே நிறுவி நடத்துதல்.

ii) வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

iii) மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளை விரைவில் வளர்ச்சி பெற ஊக்குவித்தல்.

இந்நோக்கங்களைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தாய் நிறுவனம் கீழ்க்கண்ட இரண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அ. சூரிய காந்தி எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மீன்பிடி வலைகள் ஆகிய மூன்று பொருள்களை உற்பத்தி செய்து பெறுமளவில் விற்பனை செய்வது.

ஆ. உரம் மற்றும் விவசாயக் கருவிகளை பெருமளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வது.

1994 ஏப்ரல் 20]

அ. உற்பத்தி நடவடிக்கைகள்

i) பூச்சிக் கொல்லி மருந்து ஆலை, அம்பத்தூர்

இக்கழகம் 1976-ம் ஆண்டு அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்பு ஆலை உதவியுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்த ஆலையின் மூலதனம் ரூ.34/- இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 25 டன்கள் தூள் மருந்துகளையும் 1000 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரிக்கும் திறன் கொண்டது. இந்த ஆலை 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வியாபாரத்துக்கான விற்பனையை துவக்கியது. 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு "திரிரோலர் ரேமண்ட் மில்" ரூ.4 இலட்சம் செலவில் இத்தொழிற்கூடத்தில் இணைக்கப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ள தூள் மற்றும் திரவ பூச்சிக்கொல்லி மருந்துகளை இந்த ஆலை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. தூள் மருந்து (அ) பி.எச்.சி. 10 சதம் (ஆ) மாலத்தியான் 25 சதம் டபுள்யூ டி.பி. (இ) பி.எச்.சி. 50 சதம் டபுள்யூ டி.பி. மற்றும் திரவ மருந்து (ஈ) புட்டாகுளர் 50 சதம் இ.சி. (உ) பாஸ்போமிடாந் 86 சதம் எஸ்.எல். (ஊ) எண்டோசல்பான் 35 சதம் இ.சி. (எ) மாலத்தியான் 50சதம் இ.சி. (ஏ) மானோ குரோட்டோபாஸ் 36 சதம் எஸ்.எல். (ஐ) குயினால்பாஸ் 25 சதம் இ.சி.

இந்த ஆலையின் 1992-93 ம் ஆண்டின் விற்பனை ரூ.388.90 இலட்சமாகும். இதற்கு முந்தைய ஆண்டான 1991-92ம் ஆண்டில் இந்த ஆலையின் விற்பனை ரூ.500.68 இலட்சமாக இருந்தது. நடப்பு ஆண்டில் பிப்ரவரி '94 முடிய 466 டன்கள் தூள் மருந்துகளையும் 1,12,209 லிட்டர்கள் திரவ மருந்துகளும், தயாரிக்கப்பட்டு ரூ.227.57 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1993-94 ல் 466 டன்கள் தூள் மற்றும் 1,55,320 லிட்டர்கள் திரவ மருந்துகளையும் தயாரித்து இக்கழகம் விற்பனை செய்யும். **1994-95** ஆம் ஆண்டில் **500** டன் தூள் மருந்துகளையும் **3,50,000** லிட்டர் திரவமருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் தொடக்கத்திலிருந்து இதன் உற்பத்தி மற்றும் விற்பனை அளவு கீழ் வருமாறு:

அட்டவணை 9.1

தூள் மற்றும் திரவ மருந்துகள் விற்பனை

உற்பத்தி அளவு	1976-1977	1980-1981	1984-1985	1990-1991	1991-1992	1992-1993	1993-1994*	1994-1995**
திரவம் (லிட்டரில்)	46000	7113	43201	271816	284519	162237	155320	350000
தூள் (டன்களில்)	1962	1291	3947	2494	1814	1008	466	500
விற்பனை அளவு								
திரவம் (லீட்டரில்)	36949	7402	34597	261792	277385	179170	155320	350000
தூள் (டன்களில்)	1905	884	3791	2432	1870	1243	447	500
விற்பனைத் தொகை (லட்சத்தில்)	25.64	6.96	52.02	389.01	502.79	388.90	292.44	500.89

* தோராயமாக ** இலக்கு

தமிழக அரசு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அம்பத்தூரில் செயல்படும் இந்த பூச்சிக்கொல்லி மருந்து ஆலையை நவீனப்படுத்தவும், திறனளவை விரிவுபடுத்தவும் ரூ.25 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இந்த ரூ.25 இலட்சத்தில் ரூ.15 இலட்சம் 1993-94 ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் முழுவதும் மார்ச் '94க்கு முன்பாக அம்பத்தூர் பூச்சிக் கொல்லி மருந்து ஆலையை நவீனப்படுத்தும் வகையில் செலவிடப்படும், மீதமுள்ள ரூ.10 லட்சமும் 1994-95-ல் செலவிடப்படும்.

ii) மீன்பிடி வலை ஆலை, கிண்டி

மீன் பிடித்தலை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு இயந்திரங்களினால் பின்னப்பட்ட மீன்பிடி வலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த திட்டம் துவக்கப்பட்டது. இந்த மீன்பிடி வலை ஆலை, ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நான்கு இயந்திரங்களுடன், 1976ம் ஆண்டு நிறுவப்பட்டு, உற்பத்தியை துவக்கியது. 1978ம் ஆண்டு மற்றுமொரு இயந்திரம் இந்த ஆலையுடன் இணைக்கப்பட்டது. இந்த ஆலை வருடத்திற்கு 50 முதல் 60 டன்கள் வரை மீன் பிடி வலைகளை தயாரிக்கும் திறன் கொண்டது. இந்த ஆலையின் உற்பத்தித் திட்டம் மீன்பிடி வலைகளின் தேவைகளை சார்ந்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

தாய் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் மீன்வலைகள், தமிழ்நாடு மீனவர்களிடையே மிகவும் பிரசித்திபெற்று, இதன் தரத்தினால் மிகவும் விரும்பப்படுகிறது. நடப்பு ஆண்டான 1993-94ல், 70 டன்கள் மீன்பிடி வலைகளை தயாரித்து விற்பனை செய்யவும் 1994-95ம் ஆண்டு 75 டன்கள் மீன்பிடி வலைகளை தயாரித்து விற்பனை செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் செயல்பாடுகள் துவக்கத்திலிருந்து கீழ்வருமாறு:

அட்டவணை 9.2

மீன்பிடி வலை தயாரிப்பு ஆலையின் செயல்பாடு

	1976-1977	1981-1982	1985-1986	1990-1991	1991-1992	1992-1993	1993-1994*	1994-1995
						*(தோராயமாக)	(இலக்கு)	
உற்பத்தி அளவு (மெடன்களில்)	6.5	25	21	36	53	46	70	80
விற்பனை அளவு (மெடன்களில்)	6.2	27.4	19	38	58	46	70	75
விற்பனை தொகை (ரூ.லட்சத்தில்)	6.97	27.02	19.69	38.87	68.92	68.90	98.52	100.00

iii)சூரிய காந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை, போச்சம்பள்ளி

இக்கழகம் 1978ம் ஆண்டு, பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தர்மபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு முழுமையான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியுள்ளது. இந்த ஆலையின் மூலதன செலவு ரூ. 109.50 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 50 டன்கள் சூரியகாந்தி விதையை செய்முறை படுத்தவும், 40 டன்கள் சூரியகாந்தி பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கவும், 20 டன்கள் சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரிக்கவும் திறன் கொண்டது. இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் "சனோலா" என்ற விற்பனை பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 1992-93ம் ஆண்டில் இந்த பிரிவின் விற்பனை அளவு 2566 டன்களாகும். விற்பனைத் தொகை ரூ.11.16 கோடியாகும். நடப்பு ஆண்டில் பிப்ரவரி '94 முடிய, 2739 டன்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1993-94ம் ஆண்டில் 5400 டன்கள் சூரியகாந்தி விதையை செய்முறைப்படுத்தியும், 1310 டன்கள் கச்சா சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரித்தும் 3017 டன்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை தயாரித்து விற்பனை செய்யும். 1994-95ம் ஆண்டில் 8500 டன்கள் சூரியகாந்தி

எண்ணெயை சுத்திகரித்து 5500 டன்கள சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சூரியகாந்தி விதை உற்பத்தியை அதிகரிக்க தாய் நிறுவனம் சூரியகாந்தி விதையை முறையாக கொள்முதல் செய்வதுடன் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலையையும் கொடுத்து வருகிறது. போச்சம்பள்ளியில் உள்ள சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் ஆலையை நவீனமயமாக்குவதற்கு தமிழக அரசு 1992-93 ஆண்டு பகுதி 2 திட்டத்தில் நடைமுறையில் உள்ள திட்டத்தின்கீழ் ரூ.25 இலட்சம் வழங்கி உள்ளது. இந்த ஆலையின் துவக்கத்திலிருந்து இதன் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 9.3

சூரிய காந்தி அலையின் செயல்பாடுகள்

	1977-1978	1981-1982	1987-1988	1990-1991	1991-1992	1992-1993	1993-1994*	1994-1995
						*(தோராயமாக)		(இலக்கு)
உற்பத்தி அளவு								
பிழிதல் (டன்களில்)	_	3609	5845	3086	4131	4918	5400	8500
சுத்திகரித்தல் (டன்களில்)	_	1386	2394	5327	3094	2564	3240	5100
கரைத்து எண்ணெய் எடுத்தல் (டன்களில்)	_	1607	4196	_	3033	2951	3176	5789
விற்பனை அளவு								
எண்ணெய் (டன்களில்)	853	1607	2262	4788	4205	2566	3017	5500
இதர எண்ணெய் பொருட்கள் (டன்களில்)	60.39	1695.37	3775	2027	2429	2543	3494	5189
விற்பனை தொகை (ரூ. இலட்சத்தில்)	70.38	267.84	714.20	1812.89	1824.70	1116.34	1328.59	2487.74

(ஆ)வர்த்தக நடவடிக்கைகள்

i) விவசாய கருவிகள் விற்பனை

இக்கழகம் பிரசித்த பெற்ற உற்பத்தியாளர்களின் டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்களை விற்பனை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. இந்த பண்ணை இயந்திரங்கள் இதற்கு பொருத்தமான கேஜ்வீல்,

கல்டிவேட்டர், தரமான உதிரி பாகங்கள், டயர், டியூப், பாட்டரிகளுடன் அனைத்துக் கிளை மையங்கள் மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்கழகத்திற்கு தமிழகம் முழுவதிலும் 10கிளை மையங்களும் 18 விற்பனை கூடங்களும் உள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் பிப்ரவரி 94 முடிய 201 டிராக்டர்களும், 941 பவர்டில்லர்களும் மற்றும் உதிரி பாகங்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1993-94 ம் ஆண்டில் 753 டிராக்டர்களையும் 1331பவர்டில்லர்களையும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.483.00 இலட்சம் பெறுமானமுள்ள உதிரி பாகங்களையும் விற்பனை செய்ய உள்ளோம். 1994-95ம் ஆண்டு 279 டிராக்டர்களையும் 810 பவர் டில்லர்களையும் மற்றும் ரூ.496.00 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களையும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 44 சிறிய டிராக்டர்களையும் (18 பி.டி.ஓ.எச்.பி) அதற்கு பொருந்தமான உபகரணங்களையும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் உதவியுடன் செயல்படும் திட்டத்தின்கீழ் வழங்கிடும் பொறுப்பை இக்கழகத்திடம் தமிழக அரசு விவசாயத்துறை ஒப்படைத்துள்ளது. இதற்காக ரூ13.20 இலட்சம் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண்.595 வேளாண்மை, நாள் 14.10.93ன்படி 41 சிறிய டிராக்டர்களை (18 பி.டி.ஓ.எச்.பி.) ரூ.12.30 இலட்சம் செலவில் வழங்குவதற்கு தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த சிறிய டிராக்டர்கள் 30 சதம் மானிய விலையில் அதிகபட்சமாக ரூ.30,000/- மானியம் என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

விவசாயத்துறை அரசு ஆணை எண்.148, நாள் 16.3.93ன் படி தமிழக அரசு இக்கழகத்திடம் 900 (18 பி.டி.ஓ.எச்.பி.) சிறிய டிராக்டர்களையும் மற்றும் 500 பவர் டில்லருக்கான இழுவைகளையும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு டிராக்டர்களுக்கு ரூ.30,000/-மும், இழுவைகளுக்கு ரூ.10,000/- மும் மானியம் என்ற அடிப்படையில் வழங்கிடும் பொறுப்பை இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

மேலும், 23.9.93 தேதியிட்ட தமிழக அரசு, விவசாயத்துறை அரசு ஆணை எண்.448ன்படி 1000 பவர் டில்லர்களை 1993-94ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த அரிசி அபிவிருத்தி திட்டத்தின்கீழ், பவர் டில்லருக்கு ரூ.12000/- மானியம் என்ற அடிப்படையில் வழங்கிடும் பொறுப்பை இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. இவை அனைத்தும் குறிப்பிட்டுள்ள கால வரைக்குள் வழங்கப்பட்டு விடும்.

இந்த வணிக நடவடிக்கைகளின் விவரங்கள் தொடக்கத்திலிருந்து பின்வருமாறு.

அட்டவணை 9.4

டிராக்டர் பவர்டில்லர்களின் விற்பனை

	1969-1970	1974-1995	1980-1981	1986-1987	1990-1991	1991-1992	1992-1993	*1993-1994	1994-1995
								*தோராயமாக	இலக்கு
உற்பத்தி அளவு									
டிராக்டர் பவர் டில்லர்கள் (எண்ணிக்கையில்)	630	72	109	335	597	549	1958	2084	1089
மதிப்பு (ரூ. இலட்சத்தில்)	103.80	23.06	43.89	145.29	389.18	381.75	1157.35	1830.81	928.06

ii) உர விற்பனை

அநேக தலைசிறந்த உரஉற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உரங்களை பெருமளவில் இக்கழகம் விற்பனை செய்து வருகிறது. நடப்பு ஆண்டில் ஜனவரி '94 முடிய ரூ.471.60 இலட்சம் பெறுமானமுள்ள 8320டன் உரங்களை இக்கழகம் விற்பனை செய்துள்ளது.

1993-94ம் ஆண்டில் 21,000 டன்கள் உரங்களையும், 1994–95ம் ஆண்டில், 92600 டன் உரங்களையும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மானியத்தில் பாஸ்பாடிக், பொட்டாசிக் மற்றும் காம்ப்ளக்ஸ் உரச் சலுகைகளை வழங்கிட இக்கழகம் நியமிக்ககப் பட்டுள்ளது. ரூ.3727.26 இலட்சம் இதற்காக தாய் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. உரவிற்பனையில் இக்கழகத்தின் சாதனைகள் பின்வருமாறு:

அட்டவணை 9.5

தாய் நிறுவனத்தின் உர விற்பனை சாதனை

	1979-1980	1984-1985	1990-1991	1991-1992	1992-1993	*1993-1994	1994-1995
						*தோராயமாக	இலக்கு
விற்பனை அளவு (டன்களில்)	8039	54939	57677	28633	118331	21000	92600
விற்பனைத் தொகை (ரூ இலட்சத்தில்)	110.63	1176.04	1139.14	698.39	5252.25	1.056.20	3531.95

iii) உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

3. அரசாணை எண்.794 பொதுத்துறை நாள் 16.7.93ன்படி தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம் இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் உணவு பதப்படுத்தும் தொழில் சம்பந்தமாக கேடலிஸ்ட் ஏஜென்டாக செயல்பட ஆணை வழங்கப்பட்டது. இவ்வரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மைய அரசு இக்கழகத்திற்கு மானிய உதவியாக ரூ.3.50 இலட்சம் வழங்கியுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிலும் மைய அரசிடமிருந்து மானிய உதவி/கடன் வகையில் கூடுதல் தொகை கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iv) இக்கழகத்தின் தொடக்கத்திலிருந்து இதன் விற்பனை பின்வருமாறு:

அட்டவணை 9.6

தாய் நிறுவனத்தின் விற்பனை விவரங்கள்

வ.எண்	வருடம்	விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	1966-67	0.47
2.	1967-68	2.29
3.	1968-69	9.10
4.	1969-70	75.08
5.	1970-71	148.96
6.	1971-73	194.00
7.	1972-73	201.75
8.	1973-74	117.62
9.	1974-75	134.81
10.	1975-76	158.00
11.	1976-77	181.32
12.	1977-78	289.68
13.	1978-79	455.03
14.	1979-80	518.87
15.	1980-81	706.43
16.	1981-82	1157.65
17.	1982-83	1348.61
18.	1983-84	1375.12
19.	1984-85	1977.76
20.	1985-86	2448.21
21.	1986-87	2595.60
22.	1987-88	1767.79
23.	1988-89	1671.47
24.	1989-90	2430.44
25.	1990-91	4319.84
26.	1991-92	3911.38
27.	1992-93	8347.64
28.	1993-94	5092.78 (தோராயமாக)

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993-94ல் இக்கழகத்தின் விற்னை அளவு ரூ.5,092.78 இலட்சத்தை அடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1994-95ல் இக்கழகத்தின் விற்பனை ரூ.8,045.78 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் — 10

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் லிட்.,

(என்கோபெட்)

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோபெட்) 1972ல் நிறுவப்பட்டு ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் வேலையில்லா பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இவ்விணையம் கீழ்க்கண்ட முதன்மையான நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அ) வட்டார/மாவட்ட வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையம்/ சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் பணிகளை செய்வது.

ஆ) விவசாய இயந்திரங்கள் மற்றும் வேளாண்மை கருவிகள் மற்ற உபகரணங்கள் தார்பாலின், விசைத்தெளிப்பான்கள், ஆயில் இன்ஜின் போன்றவைகளை வாடகைக்குவிடுவது.

இ) விவசாய இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகளை பழுதுநீக்கம் செய்து விவசாயிகளுக்கும், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கும் அளித்து வருவது.

ஈ) வேளாண் இடுப்பொருட்களாகிய விதைகள், உரங்கள், பூச்சிமருந்துகள், பயிர்பாதுகாப்பு கருவிகள், மற்றும் ரசாயன பொருட்களை விநியோகம் செய்வது.

உ) தெளிப்பு நீர், சொட்டு நீர் போன்ற நீர்ப்பாசன வசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பது.

ஊ) மானிய திட்டத்தின்கீழ் டயர் வண்டி, ஜிப்ஸம், உரங்கள் விசை/கைத்தெளிப்பான்களை விவசாயிகளுக்கு வழங்குவது.

அமைப்பு :

தற்பொழுது 187 வட்டார அளவிலான வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்கள் மற்றும் 19 மாவட்ட அளவிலான வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்கள் இவ்வினைய மேற்பார்வையில் விவசாயிகளுக்கு அனைத்து பணியையும் செய்து வருகிறது.

செயல்பாடுகள் :

கீழ்கண்ட முதன்மையான பணிகளை இவ்வினையம் பல்வேறு திட்டங்களின் கீழ் நிறைவேற்றி வருகிறது.

1. கை மற்றும் விசைத் தெளிப்பான்கள் விநியோகம் — விலை நிர்ணயம் செய்தல்

தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை இயக்குனரகத்தின் மூலம் மானிய திட்டத்தின் கீழ் கை மற்றும் விசைத் தெளிப்பான்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

நல்ல தரமான தெளிப்பான்களை குறைந்த விலையில் விநியோகம் செய்யும் பொருட்டு எல்லாவிதமான தெளிப்பான் களுக்கும் இவ்வினையம் விலை நிர்ணயம் செய்கிறது.

2. வணிக நடவடிக்கைகள் :

பயிர் பாதுகாப்பு, கருவிகள், இடுபொருட்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றை ரூ. 659—00 லட்சங்களுக்கு 1992—93ம் ஆண்டில் இவ்வினையம் விநியோகம் செய்துள்ளது. 1990—91 விருந்து 1993—94ம் ஆண்டு வரையிலான செயல்முறை அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 10.1

பயிர் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் விவசாய இடு பொருட்கள் வழங்கல்

(ரூபாய் லட்சத்தில்)

வருடம்	பயிர் பாதுகாப்பு கருவிகள்	விவசாய இடு பொருட்கள்
1990—91	322·00	200·77
1991—92	371·87	96·70
1992—93	659·00	5345·27
1993—94 (பிப்ரவரி வரை)	300·00	253·24

3. உர விநியோகம் (மானிய விலையில்)

அரசு ஆணை எண் 519 வேளாண்மைத் துறை நாள் 14.8.92 ன் படி 1992—93ம் ஆண்டிற்கு இவ்விணையம் மானிய விலையில் உரங்களை விநியோகம் செய்ய ரூ. 13.992 கோடியை அரசிடமிருந்து பெற்றது. இணையத்தை சார்ந்துள்ள மையங்கள் மூலமாக 6,21,290 சிறு விவசாயிகளுக்கும் மற்றும் 1,88,783 குறு விவசாயிகளுக்கும் மானியத் தொகையான ரூ. 13.992 கோடி மதிப்பிற்கு உரங்களை விநியோகம் செய்துள்ளது.

அரசு ஆணை எண் 669 வேளாண்மை (டி.ஓ.1) துறை நாள் 30.10.92 மற்றும் அரசு ஆணை எண் 143 வேளாண்மை (டி.ஓ.1) நாள் 5.3.93 ன் படி அரசு ரூ. 344.86 லட்சங்களை டி.எ.பி., எம்.ஓ.பி., மற்றும் காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களை சலுகை விலையில் விநியோகிக்க 1992—93 ம் ஆண்டிற்கு அனுமதித்து அதே 1992—93 ம் ஆண்டில் முழுத் தொகைக்கான மானிய உரங்களையும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

1993—94ம் ஆண்டிற்கு அரசு ஆணை எண் 428 வேளாண்மை (டி.ஓ.1) துறை நாள் 12.7.93ன் படி ரூ. 39.41 லட்சங்களை சலுகை விலையில் உரங்கள் வழங்க அரசு அனுமதித்ததில் ரூ. 27.4 லட்சங்களுக்கான உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம்

செய்துள்ளது. மீதி உரங்களின் விநியோக பணி செவ்வனே நடைபெறுகிறது.

4. டயர் வண்டி வழங்குதல் (மானிய விலையில்)

அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் டயர் வண்டிகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய கோரியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 337.50 கோடியாகும். இணையம் இத்திட்டத்தினை செயல் படுத்தி கொண்டு வருகிறது. இவ்விணையம் 4312 டயர் வண்டிகளை மானிய விலையில் வண்டி ஒன்றிற்கு ரூ. 7,500/ மானிய அடிப்படையில் 30.11.93 வரை ரூ. 319.01 லட்சங்கள் மானியத் தொகைக்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இவ்விணையத் தின் சார்பு மையங்கள் மூலம் வழங்கியுள்ளது. மீதி டயர் வண்டிகளை அதிவிரைவில் விநியோகம் செய்து விரைவில் இப்பணி முடிவுறும்.

5. தானிய குதிர்கள்/ தார்பாய்கள் 50 சதவீத மானியத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்குதல் :

அரசு ஆணை எண் 89, வேளாண்மை (வே.உ.1), துறை நாள் 8.2.93 ன் படி 20,000 தானிய குதிர்கள்/ தார்பாய்களை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் அதிகப்பட்சமாக ரூ. 1000/ மதிப்புள்ள உலோக தானிய குதிர்/ தார்ப்பாய்கள் விநியோகம் செய்ய ரூ. 2.00 கோடியை 1993–94 ம் ஆண்டிற்கு அரசு இவ்விணையத்திற்கு அளித்தது. என்கோபெட் 19336 எண்ணிக்கையுள்ள தானியகுதிர்கள்/ தார்பாய்களை ரூ. 193.36 லட்சங்கள் மானிய மதிப்புத் தொகைக்கு 15.12.93 வரை வேளாண்மைத் துறை மூலம் பரிந்துரை செய்யப்படும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

6. மத்திய சார்பு திட்டத்தின் கீழ் விசைத் தெளிப்பான்கள் 50 சதவீத மானிய அடிப்படையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்குதல்:

அரசு 20,000 எண்ணிக்கையுள்ள விசைத் தெளிப்பான்களை விநியோகம் செய்ய 1993–94 ஆண்டிற்கு ரூ. 340.00 லட்சங்களை

1994 ஏப்ரல் 20]

மானிய தொகையாக வழங்கியது. இவ்விணையம் இதுவரை 16,800 எண்ணிக்கையுள்ள விசைத்தெளிப்பான்களை தமிழகத்தின் பல்வேறு இடங்களிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ. 340.00 லட்சங்களுக்கான மானிய தொகைக்கு வழங்கியுள்ளது. மீதி விநியோகப் பணியும் முன்னேற்றத்தில் இருக்கின்றன.

7. மத்திய சார்பு திட்டத்தின் கீழ் புதிய மாவட்ட அளவிலான வேளாண்மை பொறியியல் மற்றும் கூட்டுறவு சங்கங்களை நிறுவுதல்:

அரசு ரூ. 21.00 லட்சங்களை 7 புதிய மாவட்ட அளவிலான வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்களை புதியதாக துவங்கப்பட்ட மாவட்டங்களில் நிறுவவும் வாடகைப் பணியில் ஈடுபடுத்த இயந்திரங்கள் வாங்க ரூ. 3.00 லட்சம் வீதம் மையம் ஒன்றிற்கு வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட மாவட்ட அளவிலான சங்கங்களை இவ்வினையம் நிறுவியுள்ளது.

மாவட்ட வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கம்	
1. காமராஜர்	— விருதுநகர்
2. சிதம்பரனார்	— தூத்துக்குடி
3. கன்னியாகுமரி"	— நாகர்கோயில்
4. திண்டுக்கல் அண்ணா	— திண்டுக்கல்
5. நாகை காயிதே மில்லத் சம்புவராயர்	— நாகப்பட்டினம்
6. திருவண்ணாமலை	— திருவண்ணாமலை
7. பெரியார்	— ஈரோடு

இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட ஏழு புதிய மாவட்ட வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்களை நிறுவி அதற்கு மேலாளர்களை பணி நிர்ணயம் செய்து பணிகள் நடக்க துவங்கியுள்ளன. வாடகைப் பணியில் ஈடுபடுத்தும் பொருட்டு இயந்திரங்கள் வாங்க நிதி எல்லா சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது.

8. வாடகைப் பணி மற்றும் சேவைகள் :

அ) இணையத்தை சார்ந்துள்ள மையங்களில் 155 டிராக்டர்கள், 124 ட்ரெயிலர்கள், 119 ஆயில் என்ஜின்கள், 376 விசைத் தெளிப்பான்கள், 485 கைத் தெளிப்பான்கள், 10 பாறை உடைக்கும்

காற்றழுத்த கருவிகள், 1 கிணற்றுக்குள் ஆழ்துளை தோண்டும் கருவி மற்றும் 81 பவர் டில்லர்கள் மூலம் விவசாயிகளுக்கு வாடகைப்பணி செய்து வருகிறது. டிராக்டர் கள் மற்றும் டில்லர்கள் வாடகைப்பணி மூலம் இணையத்தை சார்ந்த மையங்கள் மூலம் 1992—93 ம் ஆண்டில் ரூ. 101.74 லட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. பிப்ரவரி 94 வரை ரூ.120.52 இலட்சம்.

ஆ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவ்விணையம் தனக்குள்ள 6 சாலை உருளைகளை சாலைகள் அமைக்கும் பணிக்காக வாடைகைக்கு தந்து உதவி செய்து வருகிறது. இதன்மூலம் 1992—93 ம் ஆண்டில் ரூ. 5.50 லட்சங்களை வருமானமாக இவ்விணையம் பெற்றுள்ளது. பிப்ரவரி 1994 வரை ரூ. 3.01 இலட்சங்களை பெற்றுள்ளது.

1990—91 ம் ஆண்டிலிருந்து 1993—94 ஆண்டு வரைக்கான என்கோபெட் மற்றும் சார்பு மையங்களின் முன்னேற்ற அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10.2

வாடகைப்பணி செயல்பாடுகள்

வருடம்	சார்பு மையங் களின் எண்ணி க்கை	சாதனை வாடகைப் பணி எண்ணி க்கை	ரூ.பை.	சாதனை விற்பனை எண்ணி க்கை	ரூ.பை.	சாதனை பழுது நீக்கம் எண்ணி க்கை	ரூ.பை
1990—91	194	237282	125·13	27774	522·03	—	796·58
1991—92	195	218028	90·60	38476	468·57	—	909·07
1992—93	199	364219	101·74	52405	6018·1	—	1516·47
1993—94 (பிப்ரவரி வரை)	206	209119	120·32	12237	1139·86	—	1524·87

TRUTH ALONE TRIUMPHS

9. இரும்பு கதவுகள் மற்றும் கான்கீரிட் வாசல்கால்கள் :

1991—92 மற்றும் 1992—93 ம் ஆண்டில் இவ்விணையமும் அதன் சார்பு மையங்களும் 50,000 எண்ணிக்கையுள்ள இரும்பு கதவுகள் மேலும் 2092 எண்ணிக்கையுள்ள கான்கிரிட் வாசல்கால்கள் அமைக்கும் பணியினை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடுகளுக்காக பல்வேறு மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து ரூ. 78.63 லட்சங்களுக்கு பெற்று பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

10. இரும்பு மேற்கூரைகள் செய்தல், வழங்குதல் மற்றும் நிறுவுதல் :

1992—93 ம் ஆண்டில் கைத்தறி துணிநூல் இயக்குனரகம் செங்கை எம்.ஜி.ஆர்., மதுரை, பெரியார் மாவட்டங்களில் நெசவு கூடங்களுக்கு மேற்கூரை அமைக்கும் பணியினை ஒப்படைத்தது. இதன் மொத்த மதிப்பு ரூ. 20.00 லட்சங்களாகும் இப்பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

11. நீலப்பச்சை பாசி தயாரிக்க உதவும் தொட்டிகள் கட்டிகொடுத்தல் பாலீதின் பசுமை குடில்கள், தென்னங்கன்று பாதுகாப்பு கொட்டகை :

அ) 1992—93 ம் ஆண்டில் வேளாண்மைத் துறை இவ்விணையத்திற்கு நீலப்பச்சை பாசி தயாரிக்க உதவும் தொட்டில்கள் தயாரிக்கும் பணிக்காக ரூ. 3.90 லட்சங்களை அரசு ஆணை எண் 165 வேளாண்மை (டி.ஒ.1) துறை, நாள் 28.1.93 பெற்று பணிமுடியும் தருவாயில் உள்ளது.

ஆ) 1992—93 ம் ஆண்டில் தோட்டக்கலை துறை பாலிதின் பசுமை குடில்கள் அமைக்கும்பணிக்காக ரூ. 9.30 லட்சங்கள் வழங்கியதின் மூலம் பணி நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இ) 1992—93 ம் ஆண்டிற்கு அரசு ஆணை எண் (3டி) எண் 31 வேளாண்மைத் (எண்ணெய் வித்து) துறை நாள் 11.5.93 ன் படி வேளாண்மைத் துறை ரூ. 18.45 லட்சம் மதிப்புள்ள தென்னக்கன்று சேமிப்பு கிடங்குடன் கூடிய விற்பனைமையங்கள் 45 ஐ தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய விரிவாக்க மையங்

களில் கட்டும் பணியை ஒப்படைத்ததின் கீழ்ப்பணி வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

12. இணையத்திடம் ஒரு டி.டி.எச்., ஆழ்துளையிடும் கருவி உள்ளது. இதுவரை 14920 மீட்டர்களுக்கும் அதிகமாக துளையிட்டு ரூ. 25.93 லட்சங்களை 1988 லிருந்து வருமானமாக ஈட்டியுள்ளது.

மற்ற திட்டங்கள் :

அ. இவ்விணையம் ஆழ்குழாய் கிணறு திட்டத்தின்கீழ் 45 பம்பு செட்டுகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ. 7.70 லட்சங்களுக்கு வழங்க வேண்டியதில் இதுவரை ரூ. 1.38 லட்சங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது என்கோபெட் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

ஆ. இவ்விணையம் ரூ. 5.00 லட்சம் 1993—94ம் ஆண்டிற்க்கு பெற்று பத்து மையங்களுக்கு பணிமனை இயந்திரங்கள் வழங்க மையம் ஒன்றிற்கு ரூ. 50,000/ வீதம் மையங்களை மேன்மைபடுத்தும்பொருட்டு பணிமனை இயந்திரங்களை தெரிவு செய்து வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் குறுகிய காலத்தில் முடிவுறும் நிலையில் உள்ளது.

இ. வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் பெட்ரோமாக்ஸ் லைட் டிராப் பணியை 50 சதவீத மானிய அடிப்படையில் ரூ. 100.00 லட்சங்களுக்கான மதிப்பீட்டில் பெற்று 20,000 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பணி செய்ய உள்ளது. இதற்கான விலை நிர்ணயிக்கப்பட்டு வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களிடமிருந்து தேவைக்கான பட்டியலுக்கு எதிர்பார்த்துள்ளது.

ஈ. மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளான கோடாரி, மண்வெட்டி, கடப்பாறை, இரும்புச் சட்டிகள் போன்றவைகளை வழங்கி விவசாயிகள் பயன்பெற பிரேரணை ஒன்று அரசிற்கு இவ்விணையம் அனுப்ப இருக்கிறது.

என்கோபெட் நிறுவனத்தின் மொத்த விற்பனை:

இவ்விணையம் ரூ. 93.53 லட்சங்களை (உத்தேசமாக) லாபமாக 31.3.93 வரை பெற்று செயல்படுகிறது. 1993—94 ம் ஆண்டில் இவ்விணையம் ரூ. 50.00 லட்சங்களை நிகர லாபமாக ஈட்டக்கூடும்.

அட்டவணை — 10.3

என்கோபெட் நிறுவனத்தின் மொத்த விற்பனை

வ.எண்	ஆண்டு	விற்பனை	இலாபம் (+)	நட்டம் (—)
1.	1972—73	—		(—) 0·05
2.	1975—76	18·51	(+) 0·89	
3.	1980—81	17·65		(—) 27·54
4.	1985—86	109·77		(—) 8·50
5.	1990—91	650·80	(+) 49·58	
6.	1991—92	639·39	(+) 24·99	
7.	1992—93	6119·91	(+) 94·54	
8.	1993—94 (பிப்ரவரி 94 வரை)	2116·58	(+) 42·74	

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 11

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்

1. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் தேசீய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் தாவர எண்ணெய் திட்டத்தை தமிழ்நாட்டில் செயற்படுத்தும் அமைப்பாக 1.1.1981 அன்று பதிவு செய்யப்பட்டது.

2. நோக்கம் :
எண்ணெய் மற்றும் அதன் துணைப்பொருட்களை உற்பத்தி செய்தல், கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல், ஆகியவை போன்ற பணிகளைத் திறம்பட ஒருங்கிணைப்பதன் வாயிலாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உகந்த பணிகளை மேற்கொள்வதே இந்த இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

3. பங்கு மூலதனம் :
இந்த இணையத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஐந்து கோடி ரூபாயாகும். இணையத்தின் திட்டப்பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், தேசீய பால்வள மேம்பாட்டு வாரியமும் இந்த இணையத்தின் உறுப்பினர்களாவர். இந்த இணையத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 159.76 லட்சம் ஆகும். இதில் ரூ. 98.88 லட்சம் ரூபாயை தேசீய பால்வள மேம்பாட்டு வாரியம் தனது பங்கு மூலதனமாக கொடுத்துள்ளது. எஞ்சிய தொகையான 60.88 லட்சம் ரூபாயை எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் பங்கு மூலதனமாக கொடுத்துள்ளன.

தாவர எண்ணெய் திட்டம் :

(அ) திட்ட நிதி :

4. இரு நிலைகளில், அதாவது கிராமங்கள் அளவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழும் மாநில அளவில் தலைமை இணையத்தின் கீழும், அமெரிக்க நாட்டு கூட்டுறவு அமைப்பால் (CLUSA) இத்திட்டத்திற்கு 15.61 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கப்படுகிறது. இதில் தேசீய பால்வள மேம்பாட்டு வாரியத்திடமிருந்து 8.42 கோடி ரூபாய் கடனாகவும் 7.19 கோடி ரூபாய் மான்யமாகவும் (முறையே கடன் 54 சதவீதமும் மான்யம் 46 சதவீதமும்) தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு வழங்கப்பட்டது. எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் செய்வதற்காக இந்த இணையத்திற்கு தேசீய பால்வள மேம்பாட்டு வாரியம் திட்ட ஒதுக்கீட்டுத் தொகை மட்டுமல்லாமல் நியாயமான வட்டி வீதத்தில் குறைந்த காலக் கடனாக நிதியுதவியை வழங்கியுள்ளது. இதுவரை சுமார் 10.21 கோடி ரூபாய் இந்த இணையம் தனது வளர்ச்சிப் பணிக்காக பெற்றுள்ளது.

ஆ) திட்டப்பகுதி :

5. இணையத்தின் திட்டப்பகுதி 20 வட்டங்களில் அதாவது திருவண்ணாமலை — சம்புவராயர், வடாற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாச்சி மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் செயல்படுகிறது.

இந்த இணையம் 335 எண்ணெய்வித்துக்களின் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து, 86,198 உறுப்பினர்களை பதிவு செய்து 1492 கிராமங்களை உள்ளடக்கி 1.37 லட்சம் ஹெக்டேர் எண்ணெய்வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பை கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வந்துள்ளது.

(இ) உற்பத்தி பெருக்கம் :

6. இணையத்தின் வளர்ச்சிப் பணிகள், எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதன் மூலமும்,

மற்றும் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதன் மூலமும் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க முனைகின்றது. இவற்றை அடைய இணையம் தீவிரமாக தன்னுடைய விரிவாக்க பணியாளர்களின் மூலம் நல்ல தரமான எண்ணெய்வித்துக்கள், செயல்முறை விளக்கம் அளித்தல், பயிற்சிகளை கொடுத்து இடுபொருள்களை வழங்குதல் போன்ற விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

(ஈ) வட்டார உழவியல் மையம் மற்றும் பயிற்சி மையம் :

7. இவ்விணையம் ரூ. 130 லம்சம் செலவில் வட்டார உழவியல் மையம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றை நெய்வேலியில் அமைத்துள்ளது. வட்டார உழவியல் மையம் 102 ஹெக்டேர் பரப்பளவை கொண்டு கருவித்து, ஆதார விதை மற்றும் சான்று விதைகளை உற்பத்தி செய்து வளர்ந்து வரும் தரமான விதைத் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. இம்மையத்தை "கருவித்து விதை உற்பத்தி மையமாக" மத்திய அரசு (இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழு) அங்கீகரித்து உள்ளது. இம்மையம் 1993–94 ம் ஆண்டில் ஜனவரி 94 வரை 3.5 டன் கருவித்து விதைகளையும் 17 டன் ஆதார வித்துக்களையும் உற்பத்தி செய்துள்ளது.

8. பயிற்சி மையம், விவசாய உறுப்பினர்கள் மற்றும் இணைய பணியாளர்களின் பயிற்சி தேவையை பூர்த்தி செய்கின்றது. இம் மையத்தில் பயிற்சியின் போது கலந்து கொள்கின்ற 35 விவசாயிகள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான உணவு, உறங்கும் இடம் போன்ற வசதிகளும் மற்றும் நிரந்தர பொருட்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி மையத்தின் பல்வேறு பணிகளுக்கு உறுதுணையாக சொகுசு வசதியுடன் கூடிய பேருந்து மற்றும் நடமாடும் விரிவாக்க வண்டியும் உள்ளன.

இம்மையத்தில் மூன்று விதமான பயிற்சிகள் நடைபெற்று வருகிறது.

1. விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.

2. சங்கச் செயலர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல்.

3. களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

இப்பயிற்சி மையம் 2,436 விவசாய உறுப்பினர்கள், சங்க செயலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளது. இது தவிர திட்டப்பகுதிக்கு தேவையான நீர்பிடிப்பு, சூரியகாந்தி சாகுபடி, விதை உற்பத்தியாளர் மற்றும் கிடங்கு பராமரித்தல் போன்றவற்றிற்குரிய சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்துப் பெருக்குத்திட்டம் :

9. இவ்விணையம் அரசாங்கத்தின் பல்வேறு வகையான அபிவிருத்தி திட்டங்களை திட்டப்பகுதியில் செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசு எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் இவ்விணையத்திற்கு சுமார் ரூ. 83.0 லட்சங்களை பல்வேறு இடுபொருட்கள் வழங்கவும் தேவையான பயிற்சி அளிக்கவும் ஒதுக்கியுள்ளது.

சிறு தளைகள் விநியோகம் :

10. மாநிலங்கள் முழுவதும் எண்ணெய்வித்து சிறுதளைகளை விநியோகம் செய்யும் பொறுப்பை தமிழக அரசு இவ்விணையத்திற்கு வழங்கியுள்ளது. இதன்படி சிறு தளைகள் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் வேளாண்மைத் துறைக்கு சுமார் 24.5 மெ.டன் வீரிய சூரியகாந்தி விதைகளை வினியோகம் செய்ய இருக்கின்றது. மற்ற சிறு தளைகளின் விபரங்கள் பின்வருமாறு.

அட்டவணை 11.1

சிறுதளைப் பைகள் விநியோகத்திட்டம்

வ.எண்.	எண்ணெய் வித்து	சிறு தளைகளின் எண்ணிக்கை	தொகை (லட்சத்தில்)
1.	சூரியகாந்தி (ரகம்)	53,000	40,000
2.	மணிலா	10,000	30,000
3.	சோயாமொச்சை	80,000	20,000
4.	எள்	10,000	10,000
	கூடுதல்	1,53,000	100·000

வட்டார உழவியல் மையத்தின் அடிப்படை வசதி

11. எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின் கீழ் வட்டார உழவியல் மையத்தில் நீர்ப்பாசன வசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில் தமிழக அரசு சுமார் ரூ. 61 லட்சங்களை ஒதுக்கியுள்ளது.

கொள்முதல் :

12. இணையம் கடந்த சில வருடங்களாக நிதி மற்றும் நிர்வாக இடர்ப்பாடுகள் காரணமக கொள்முதல் செய்யவில்லை. நலிந்த நிலையிலிருந்த இவ்விணையத்தை மீட்டு ரபி 94 கொள்முதல் துவக்க, தமிழக அரசு ரூ. 1.80 கோடியை நிதியுதவியாக அளித்துள்ளது. விவசாயிகள் தங்கள் உற்பத்தி பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். நிலக்கடலை உடைப்புத் திறன் ஈரப்பதம் மற்றும் அயல்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் இதன் தரம் நிர்ணயிக்கப்படுகிறது

நடப்பு இறவைப் பருவம் 1993—94 கொள்முதலின் சிறப்பு அம்சங்களாவன.

1. விவசாயிகளிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் மட்டுமே கொள்முதல் செய்யப்பட உள்ளது.
2. கொள்முதலின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு தரங்களின் அடிப்படையில் (தரம் — 1, தரம் — 2 மற்றும் தரம் — 3) கொள்முதலை துவக்க உள்ளது.
3. ஆலையளவில் மணிலாவை தரும் பொருட்டு கொள்முதல் விலையை அறிவித்துள்ளது. 1.4.93 லிருந்து 31.3.94 வரையிலான கால அளவில் இந்த இணையம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களிமிருந்து 680 டன் நிலக்கடலை காய்களையும் 433 டன் நிலக்கடலை வித்துக்களையும் கொள்முதல் செய்துள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் கொள்முதல் செய்யப்படும் நிலக்கடலையின் மொத்த மதிப்பில் 1.0 விழுக்காடு பணிக்கட்டணமாக சங்கத்திற்கு அளிக்கப்படுகிறது.

1994—95 ம் ஆண்டில் 15,000 டன் மணிலா கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பதப்படுத்துதல் :

13. இவ்விணையத்தில் கீழ்க்கண்ட திறன் கொண்ட இரு எண்ணெய் பிழியும் ஆலைகள் உள்ளன.

அட்டவணை 11.2

இணையத்தின் சமையல் எண்ணெய் பதப்படுத்தும் திறன்

வ.எண்.	பொருள்	அளவு	தி.மலை	விருத்தாசலம்	கூடுதல்
1.	மணிலா உடைப்பு	டன்/நாள்	150	150	300
2.	எண்ணெய் பிழிதல்	,,	125	100	225
3.	சுத்திகரித்தல்	,,	10	—	10
4.	கரைசல் பிரிப்பு முறை	,,	40	40	80
5.	மணிலாக்காய் மற்றும் பிண்ணாக்கு இருப்பு வைத்தல்	டன்	7000	5000	12000
6.	எண்ணெய் இருப்பு வைத்தல்	,,	1000	1500	2500

இந்த இணையம் மூன்று எண்ணெய் நிரப்பும் பிரிவுகளையும் ஒரு எண்ணெய் சேமிக்கும் திறன் கொண்ட தொட்டியையும் அமைத்துள்ளது. இந்த இணையம் "பியூர் நட்" (ஆலைகளின் பிழியப்பட்ட மணிலா எண்ணெய்) "வின்னர்" (சுத்திகரிக்கப்பட்ட மணிலா எண்ணெய்) என்ற பெயர்களில் எண்ணெய்களை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது)

அட்டவணை — 11.3

இணையத்தின் எண்ணெய் இருப்பு வைத்தல் மற்றும் நிரப்பும் திறன்

		நிரப்பும் திறன்	எண்ணெய் சேமிக்கும் தொட்டியின் திறன்
1.	கிண்டி (சென்னை)	45 டன்/நாள்	5000 டன்கள்
2.	திருவண்ணாமலை	30 டன்/நாள்	1000 டன்கள்
3.	கப்பலூர் (மதுரை)	30 டன்/நாள்	1500 டன்கள்
	கூடுதல்	105 டன்	7500 டன்கள்

14. இந்த இணையம் 1988 ஜூன் திங்களிலிருந்து தமிழ்நாட்டில் பொது வினியோக முறையின் கீழ் மத்திய அரசு வழங்கும் இறக்குமதி செய்யப்பட்ட ஆர்.பி.டி. பாமாலின் எண்ணெய்யை நுகர்வோருக்கு வழங்க பாலிதீன் பைகளில் நிரப்பும் பணியை (சிப்பமிடல்) மேற்கொண்டுள்ளது. இவ்வசதிகளை இணையம் குறைந்த அளவே பயன்படுத்தியிருப்பதால், இந்நிலையை மாற்ற, இவ்வசதிகளை நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட்டு போதுமான வருவாயை உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணையத்தின் மறுமலர்ச்சி :

15. இவ்விணையம் நிர்வாகம் மற்றும் இதர செலவினங்கள் காரணமாக நெருக்கடியான நிதிநிலைமையை எதிர்நோக்கி இருந்தது. இவ்விணையத்தில் 31.3.93 வரை தோராயமாக சுமார் 16.14 கோடி ரூபாய் வரை நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தவிர தேசீய பால்வள வாரியத்திற்கும் ரூ. 5.84 கோடி கடனை திருப்பி கொடுக்க வேண்டி உள்ளது. எனவே, இவ்விணையத்தை இந்த நிலையிலிருந்து மீட்கும் பொருட்டு, தமிழக புரட்சித் தலைவி அரசு கீழ்காணும் உதவிகளை அளித்துள்ளது.

1. இவ்விணையம் தமிழ்நாடு தலைமை மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து காசுக்கடன் மூலம் ரூபாய் 8 கோடியை பெறுவதற்கு ரூ. 80 லட்சத்தை வழங்கியுள்ளது.
2. மேலும், இவ்விணையத்தின் நிர்வாகம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ. 1 கோடியை எவ்வித வட்டியும் இல்லாமல் தமிழக அரசு கடனாக அளித்துள்ளது.
3. செஸ் கட்டணம் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட உள்ளது.
4. மேலும், இவ்விணையம் செலுத்தியுள்ள விற்பனை வரித் தொகையை 1.12.93 முதல் ஒவ்வொரு மாதமும் மான்யமாக திரும்பப்பெற வழி செய்யப்பட்டுள்ளது.
5. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மதிய திட்டத்திற்கு தேவையான சமையல் எண்ணெய் முழுவதினையும் இவ்விணையத்தின் மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வினியோகம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.
6. இணையத்தை சீரமைக்கத் தேவையான நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற தேசீய பால்வள மேம்பாட்டு வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

16. தமிழக அரசு தாவர எண்ணெய்வித்து திட்டத்தை விரிவாக்கும் நோக்கத்தோடு, தருமபுரி, சேலம், திருச்சி, தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் தேசீய பால்வள வாரியத்தின் உதவியோடு சுமார் 29.14 கோடி ரூபாய் அளவில் இரண்டாவது கட்டமாக விரிவாக்கம் செய்ய உள்ளது. இவ்விரிவாக்கம் மூன்று அடுக்கு முறையில் செயல்பட உள்ளது. அதாவது (அ) கிராமங்கள் அளவில் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாகவும் (ஆ) மாவட்ட அளவில் கூட்டுறவு ஒன்றியங்கள் வாயிலாகவும் (இ) மாநில அளவில் இணையத்தின் வாயிலாகவும் செயல்படுத்த உள்ளது. கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்கள் நடைபெற்றவுடன் மேற்கூறிய விரிவாக்கத்திற்கு ஒப்புதல் அளிக்க தேசீய பால்வள வாரியம் முன் வந்துள்ளது.

அத்தியாயம் — 12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

1971 ம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் மக்களுக்கு வேளாண்மைகல்வி ஆராய்ச்சி மற்றும் வேளாண்மை விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து சேவை புரிந்து வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1993—94 ஆம் ஆண்டில் வேளாண்மைகல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வியில் பெற்றுள்ள சாதனைகள் பற்றியும் அடுத்து மேற்கொள்ளவிருக்கும் பெரு முயற்சிகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளன.

அ. வேளாண் கல்வி :

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றிமூன்றாம் ஆண்டில் 346 மாணவ மாணவியர்கள் பி.எஸ்.ஸி. (விவ), பி.எஸ்.ஸி. (தோட்டக்கலை), பிஈ (வேளாண் பொறியியல்) ,பி.எ.ஸ்ஸி, (வனவியல்) மற்றும் பிஎஸ்ஸி(மனையியல்) பட்டப்படிப்பிற்காக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆறு கல்லூரி வளாகங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். முதுநிலைப் பட்டப்படிப்பிற்காக (எம்எஸ்ஸி) (பிஎச்டி மற்றும் பிஜி டிப்ளமோ) 402 மாணவ மாணவியர்கள் 4 கல்லூரி வளாகங்களிலும் சேர்க்கப்பட்டனர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பக் கழகதத்தாரால் நடத்தப்பட்ட தேர்வுகளில் முறையே 6 மற்றும் 9 மாணவர்கள் முனைவர் பட்டப் படிப்பிற்கு ஊக்கத்தொகை பெற தகுதிபெற்றவர்கள். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அனைத்திந்திய அளவில் நடத்திய தேர்வுகளில் முதுநிலைப் பட்ப்படிப்பிற்காக ஊக்சத் தொகை பெற 58 மாணவர்கள் தேர்வு பெற்றார்கள்.

* தனியார் நிறுவனங்கள் நல்கும் தகுதிகாண் ஊக்கத் தொகையை 35 முதுநிலை மாணவர்கள் வென்றனர்.
* தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் ரூ. 5,000 மதிப்புள்ள இரு பட்டப்படிப்பிற்கான திட்டங்களை செயலாக்க நிதி வழங்கியது.
* உயிர்பொறியியல், கணிப்பொறிமூலம் திட்டமிடல் மற்றும் செயலாக்கம், கருவிகளை உருவாக்குவதற்கான விலையை நிர்ணயித்தல் மற்றும் பாதை பொறியியல் போன்ற புதிய பாடத்திட்டங்களை பி.ஈ. (வேளாண் பொறியியல்) பட்டப் படிப்பிற்கு இந்த ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

ஆ. ஆராய்ச்சி :

வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முக்கிய ஆராய்ச்சி முடிவுகள் முறையே பயிர் மேம்பாடு, பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, தோட்டக்கலை, நீர்நுட்பம், விதை நுட்பம், வேளாண் பொறியியல், வேளாண் உயிர் நுட்பவியல், உளவியல், வேளாண்மைப் பொருளாதாரம் மற்றும் விரிவாக்கம் ஆகிய துறை வாரியாக தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

புதிய பயிர் வகைகள் :

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த ஆண்டு 16 புதிய பயிர் இரகங்களை வேளாண் பொதுமக்களுக்குத் தந்துள்ளது.

அகில இந்திய அளவில் முதல் முறையாக 'எம்.ஜி.ஆர்.' ஒட்டு இரக நெல்லை தமிழ் நாட்டில் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

1. எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் :

தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல் வீரிய ஒட்டு நெல் இரகமாகும். இது 110—115 நாட்கள் வயதுடையது. அதிக தூர்கள் கட்டும் தன்மை கொண்டது. ஒரு ஹெக்டேருக்கு 6323 கிலோ நெல் மகசூல் தரவல்லது.

2. ஏடிடி 42 நெல் :

இது ஒரு உயர் விளைச்சல் (6000 கிலோ எக்டருக்கு) தரும் குறுகிய வயதுடைய (110– 115 நாட்கள்) இரகம். இது நீண்ட சன்ன இரக அரிசி கொண்டது. தமிழ்நாட்டில் கார்/குறுவை/சொர்ணவாரி பருவங்களில் இறைவைப் பயிராக பயிர் செய்ய உகந்தது.

3. பி.எம்.கே. 2 நெல் :

இந்த இரகம் இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கனார் மாவட்டங்களில் மானாவாரியில் பயிரிட உகந்தது. இது ஒரு குறுகிய வயதுடைய (110–115 நாட்கள்) இரகம். மிதமான பருமன் கொண்ட வெள்ளை அரிசி உடையது.

4. பி.எஸ்.ஆர். 1 சோளம் :

தமிழகத்தில் பெரியார், கோவை மாவட்டங்களில் பயிரிட உகந்தது. இது இறவை மற்றும் மானாவாரியாக பயிரிட உகந்த உயர் விளைச்சல் இரகம். இது சாயாத தன்மையுடையது

5. கோ. 6 தினை :

இது ஒரு சாயாத, அதிக தூர்கள் கட்டும் தன்மையுடைய, எக்டருக்கு 3850 கிலோ தரும் உயர் விளச்சல் இரகம். ஊட்டச்சத்து மிகுதியான பருமனான தானிய மணிகள் கொண்டது.

6. கோ எச் 1 வீரிய ஒட்டு துவரை :

இது ஒரு அதிக மகசூல் (936 கிலோ எக்டருக்கு) தரவல்ல குறுகிய கால (115–120 நாட்கள்) புரதச் சத்து மிகுதியான (22.3 சதம்) வீரிய ஒட்டு துவரை இரகமாகும். இந்த இரகத்தை ஆடி, புரட்டாசிப் பட்டங்களில் மானாவாரியாகவும், தைப்பட்டத்தில் இறைவையிலும் பயிரிடலாம்.

7. கே. 1 உளுந்து :

செப்டம்பர் – அக்டோபர் மாதங்களில் தனிப்பயிராகவோ அல்லது பருத்தியில் ஊடுபயிராகவோ சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்க் தேவர் மாவட்டங்களில் பயிரிட

உகந்தது. இது ஒரு உயர் விளைச்சலும் (707 கிலோ எக்டருக்கு) குறுகிய வயதும் (70—75 நாட்கள்) மிகுந்த புரதச் சத்தும் (24.2 சதம்) உடைய இரகம்.

8. ஏ. எல். ஆர் 2 நிலக்கடலை :

கோவை மாவட்ட பொள்ளாச்சி பகுதியில் ஏற்ற உயர் விளைச்சல் (1740 கிலோ/எக்டருக்கு) மற்றும் அதிக எண்ணெய் சத்து (52%) கொண்ட குத்துக்கடலை இரகம்.

9. பி. எஸ்.ஆர். 1 நிலக்கடலை :

மேற்கு பகுதியில் பயிரிட உகந்தது. உயர் விளைச்சல் (2845 கிலோ/எக்டருக்கு) இரகம். இதன் வயது 101 நாட்கள். இது 21 நாட்கள் விதை உறக்கம் உடையது.

10. வி.பி.எம். 3 தென்னை :

உயர் விளைச்சல் மற்றும் அதிக கொப்பரை அளவு கொண்ட நெட்டை இரகம். ஒரு மரத்தில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 92 காய்கள் மற்றும் 15 கிலோ கொப்பரை பெறலாம். அதிக எண்ணெய் சத்து (70%) கொண்ட இந்த இரகத்தை தமிழகமெங்கும் பயிரிடலாம்.

11. கோ கு 94077 கரும்பு :

இது உயர் விளைச்சல் தரவல்ல, விரைவில் சாயாத, பூக்காத மறுதாம்புக்கு ஏற்ற வெல்லம் தயாரிக்க சிறந்த இரகம். இது எக்டருக்கு 133.2 டன் கரும்பும், 14.5 டன் வெல்லமும், மற்றும் 17.9 டன் சர்க்கரையும் தரவல்லது.

12. பி.கே.எம். 3 வீரிய ஒட்டு சப்போட்டா :

பெரிய நீள வடிவ பழங்களை கொத்து கொத்தாய்க் காய்க்கும் உயர் விளைச்சல் (13842 ஒரு பழத்தின் எடை 91.3 கிராம்). மற்ற இரகங்களைக் காட்டிலும் பருவத்தில் ஆரம்பத்திலேயே இந்த இரகத்தின் பழங்கள் கிடைப்பதால் சந்தையில் கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இது தமிழகத்திலுள்ள சமவெளிப் பகுதிகளில் இறவை மற்றும் மானாவாரியாக பயிரிட உகந்தது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

13. ஏற்காடு 1 (ஒய்சிடி) பிரெஞ்சு அவரை

சேலம் மற்றும் திண்டுக்கல் – அண்ணா மாவட்டங்களில் பயிரிட உகந்தது. இது சமையலுக்கு உகந்த காய்களையும் பருப்பையும் தரக்கூடிய குறுகிய வயதுடைய (105 நாட்கள்) ஆகும் காய்கள் மற்றும் விதைகள் அதிக சத்துக்கள் கொண்டது.

14. பி. எல்.ஆர் 1 :

உயர் விளைச்சல் (1 8 4 டன்/எக்டருக்கு) தரும் அந்தப் பருமனான (72.2 கிராம்/காய்) அதிக அளவு (190 காய்கள்/ஒரு செடிக்கு) காய்களை கொண்ட இரகம். இதன் காய்கள் மோர் மிளகாய் மற்றும் ஊறுகாய் தயாரிக்க உகந்தது.

15. பி.எஸ்.ஆர் 2 மஞ்சள் :

நடுத்தர உயரமும் குறுகிய வயதும் (240–250 நாட்கள்) கொண்ட உயர் விளைச்சல் (32696 கிலோ /எக்டருக்கு) இரகம், மே ஜூன் மாதங்களில் பெரியார், கோயமுத்தூர், சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்கலில் பயிரிட ஏற்றது.

16. எஸ்.ஜி.எச். 1 வெற்றிலை :

தென் மாநிலங்களில் முதல் முறையாக வெளியிடப் படும் வெற்றிலை இரகம். ஒரு எக்டரில் 109.54 இலட்சம் இலைகளைத் தரவல்ல இரகம். இது பூச்சி, பூசனம் மற்றும் நூற்புழுவுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட இரகம். இந்த இரகம் வெற்றிலை பயிரிடப்படும் அனைத்து மவட்டங்களுக்கும் ஏற்றது.

புதிய வேளாண் கருவிகள் வெளியீடு

வேளாண் பெருமக்களின் வேலைத்திறனை உயர்த்தவும் வணிகம் சார்ந்த வேளாண்மைக்குப் உகந்த 4 புதிய வேளாண் கருவிகள்/ கண்டுபிடிப்புகள் சனவரி 1994 ஆம் ஆண்டு தமிழக வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. பழத்தோட்டங்களுக்கு உகந்த தெளிப்பானுக்கு ஏற்ற பீச்சுக்குழாய்

தோட்டம் மற்றும் பழ மரங்களுக்கான பூச்சி மருந்து தெளிப்பான் ஒன்று பையூர் ஆராய்ச்சி நிலையத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக்கருவி சுமார் 3 கிலோ

எடையே உள்ளதால், எளிதாக உபயோகிக்க முடியும். இக்கருவியின் முனையில் உள்ள இரண்டு துவாரங்கள் பூச்சி மருந்தை சுமார் 50மைக்ரான் அளவுள்ள துளிகளாக ஒரே சீராக தெளிக்க உதவுகிறது. சுமார் 125 ரூபாய் மதிப்புள்ள இக்கருவியை உபயோகிப்பதால், 40 சதவிகித நேரமும் சுமார் 50 சதவிகித மருந்துக் கரைசலும் மனித சக்தியும் மிச்சப்படுத்தலாம்.

2. பயிறு மற்றும் ராகி விதைகளை சுத்தப்படுத்தி தரப் பிரிக்கும் கருவி

பருப்பு மற்றும் கேழ்வரகு போன்றவற்றை சுத்தப்படுத்தி, தரம் பிரிப்பதற்காக உருவாக்கப்பட்ட இக்கருவியின் விலை ரூபய் 2500 ஆகும். இதன் மூலம் மணிக்கு சுமார் 225 கிலோ பச்சைப் பயிறு, உளுந்து அல்லது கேழ்வரகு கையினால் சுத்தப்படுத்தலாம். ஒரு குவிண்டால் கேழ்வரகு சுத்தப்படுத்தி, தரம் பிரிப்பதற்காக ஆகும் செலவு ரூபாய் 2/ ஆகும்.

3. புதர் நீக்கும் கருவி

இக்கருவி பார்த்தீலியம் போன்ற நச்சுக்களைகளை விளைநிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்காக கோவை இயந்திர மண்டல ஆரய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பவர்டில்லரில் இந்த இணைப்பானைப் பொருத்தி இந்தக் கருவியை ஒரு ஆள் எளிதாக இயக்கமுடியும். இக்கருவியின் இணைப்பானின் விலை ரூபாய் 7,000 ஆகிறது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 4. எக்டேர் நிலத்தில் உள்ள பாத்திதீனியக் களையை ரூபாய் 140 செலவில் அப்புறப்படுத்த இயலும்.

4. கொசுப்பொறி

இக்கருவி கொசுக்களை சேகரிப்பதற்காக கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி பூச்சியில் துறையில் உருவாக்கப் பட்டுள்ளது. இது 6 வோல்ட் பேட்டரியால் இயக்கப்படுகிறது. இதன் விலை ரூ. 100/

இ. விரிவாக்கம்

புயர், தொடர் மழை மற்றும் வெள்லம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் 1993 ம் ஆண்டு நவம்பர் — டிசம்பர் மாதங்களில் தஞ்சாவூர், நாகப்பட்டினம்—காயிதேமில்லத், திருச்சி, தென்னாற்

காடு மதுரை, திண்டுக்கல்—அண்ணா, சேலம், பெரியார், நெல்லை—கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கலில் நெல், கருப்பு வாழை பயறு மற்றும் காய்கறி பயிர்களுக்கு பெருந்த அளவில் சேதம் ஏற்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வேளாண் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து வெள்ளம் மற்றும் புயல் தாக்கிய பகுதிகளுக்கு கூட்டாகச் சென்று வெள்ளதால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பதற்கான வழிமுறைகளையும் உத்திகளையும் தெகுத்து அவற்றை நேரடியாகவும், செய்தி ஏடுகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் தெரியப்படுத்தி பாதிப்பைக் குறைக்க தீவிரமாக பெருமுயற்சி மேற்கொண்டனர்.

அட்டவணை 12.1

கருவிதை உற்பத்தி

1992—93 மற்றும் *1993—94*ம் ஆண்டுகளில் கீழ்க்கண்ட அளவு கருவிதை உற்பத்தி செய்து வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்டது (பிப்ரவரி மாதம் வரை)

வ.எண்.	பயிர்	1992—93 குவிண்டால் (பிப்ரவரி 93 வரை)	1993—94 குவிண்டால் (பிப்ரவரி 94 வரை)
1.	நெல்	*114·97*	*245·80*
2.	சிறு தானியங்கள்	*0·67*	*1·59*
3.	பயறு வகைகள்	*101·58*	*131·81*
4.	பருத்தி	*0·15*	*0·81*
5.	காய்கறிகள்	*0·02*	*0·92*
6.	எண்ணெய் வித்துக்கள்	*350·83*	*489·23*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை— 12.2

வேளான் மக்களுக்கு 1992— 93 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவை கள் விநியோகிக்கப்பட்டன (பிப்ரவரி மாதம் வரை)

வகைகள்	1992 93		1993 94	
பழமரக் கன்றுகள்	34,000	எண்ணிக்கை	7644	எண்ணிக்கை
காளான் வித்துக் குடுவைகள்	1,211	”	1561	”
பசுந்தாள் உரச்செடி விதைகள்	3,420	கிலோ	3675	கிலோ
நுண்ணியிர் உரங்கள்				
அ. அசோஸ்பைரில்லம்	4,419	பைகள்	9566	பைகள்
ஆ. ரைசோபியம்	14,483	”	5240	”
இ. பாஸ்போ பாக்டீரியம்	6,695	”	4101	”
ஈ. விஏஎம் நுண்ணுயிர்	638	”	2034	”
உ. அசடோ பேக்டர்	74	”	”	
உயிரியல் முறை பூச்சி பூஞ்சாணக் கொல்லிகள்				
அ. வேர் அழுகல் உயிரியல் பூஞ்சாணக் கொல்லி (டிரைகோடர்மா)	318	கிலோ	1116	கிலோ
ஆ. கரும்பு தண்டு துளைப்பான் ஒட்டுன்னி (டிரைகோ கிராம்)	1222	”	6667	”
இ. பயறு பச்சைப்புழு நச்சுயிரி	106925	புழுக்கள்	191500	புழுக்கள்
ஈ. வெட்டுப் புழு நச்சுயிரி	28000	”	58700	”
உ. கரும்பு தண்டு துளைப்பான் நச்சுயிரி	7750	”	11150	”
ஊ. கிரைசோப்பர்	—	”	9640000	முட்டைகள்

4. ஆராய்ச்சி முடிவுகள் :

(அ) பயிர் வேளாண்மை

* நிலக்கடலை—நெல்—எள் என்ற பலபயிர் திட்டம் தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிநீர் குழாய்க்கிணறுகளுள்ள புது பாசனப் பகுதிகளுக்கு ஏற்றது. இதன் மூலம் எக்டருக்கு ரூ. 29,248/ நிகர வருமானம் பெறலாம்.
* எக்டருக்கு 25 கிலோ முசோரி பாஸ்போ பேக்டீரியம் நுண்ணுயிரை பச்சைப் பயறுக்கு இடுவதன் மூலம் 50 கிலோ மற்றும் 25 கிலோ மணிச்சத்தை சாதாரண சூப்பர்பாஸ்பேட்டாக இடுவதைக் காட்டிலும் முறையே 375 மற்றும் 410 கிலோ அதிக மகசூல் பெறலாம்.
* திருவில்லிப்புத்தூர் பகுதியில் நெல் அறுவடைக்குப்பின் விதை வரிசைகளில் உழுது பருத்தியை விதைப்பதன் மூலம் நடைமுறையில் உள்ள உழவே செய்யாத நெல்தரிசுப் பருத்தியைப் பயிரிடுவதைக் காட்டிலும் 15, 8 விழுக்காடு கூடுதல் மகசூல் பெறலாம்.
* கடலூர் மணல்சாரியான மண் வகையில் நான்கு வித நேரங்களில் தழைசத்து இட்டு ஆய்வு செய்வுதில் கரும்பின் மகசூலுக்கு, தழைச்சத்து இடுதல் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் செய்வது அறியப்பட்டது. கரும்பின் மகசூலும் சர்க்கரை மகசூலும் மறுதாம்புபயிரில் உரமிடும் நேரத்தைப் பொறுத்து மாறுவதில்லை எனக்கண்டறியப்பட்டது. 135 நாட்களுக்கு பிறகு தழைச்சத்து உரமிடுவதால் கரும்பின் மகசூல் மற்றும் சி.சி.எஸ், சதவிகிதம் குறைவுபட்டது, தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடுவதால் அதாவது 45, 90 மற்றும் 135 நாட்களில் ஒரு ஹெக்டேருக்கு 11.4 டன்கள் கரும்பு உற்பத்தி அதிகரித்து மற்றும் சர்க்கரை மகசூல் ஒரு ஹெக்டேருக்கு 1.27 டன்கள் அதிகரித்தது. இது தற்போதயை சிபாரிசான 30, 60 மற்றும் 90 நாட்களில் தழையுரம்

இடுவதோடு ஒப்பிடப்பட்டது. நடவுப் பயிருக்கு நட்ட பின் 45,90 மற்றும் 135 நாட்களில் தழையுரம் இடுவதை சிபாரிசு செய்யலாம் அவ்வாறே மறுதாம்பு பயிருக்கு தற்போதுள்ள சிபாரிசையே அதிக மகசூல்பெற பின் பற்றலாம்.

(ஆ) பயிர் பாதுகாப்பு :

* ஒரு கிலோ நெல் விதைக்கு 10 மி.லி. ரூடோமானால் பிளாசசென்ஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியா கலவையுடன் கலந்து நாற்றங்கால் அணைத்ததில் குலைநோய் தாக்குதல் அறவே காணப்படவில்லை. இந்த முறை பின்பற்றாத வயலில் 66.7 % குலைநோய் தாக்குதலும் கார்பன்டைசிம் எனும் பூசனக்கொல்லி பயன்படுத்திய வயலில் 39% தாக்குதலும் காணப்பட்டது.
* பைரோகிலோபாஸ் என்ற புதிய பூச்சிக் கொல்லி பருத்தியில் இலைப்பேன், இலைதத்துப்பூச்சி மற்றும் காய்புழுவைக் கட்டுப்படுத்த உதவுகிறது. எக்டருக்கு 1.5. லிட்டர் பைரோகிலோபாஸ் தெளிப்பது ஏற்கெனவே பயன்படுத்திவரும் பூச்சிக்கொல்லிகளான மானோகுரோட்டோபாஸ், கார்பைரில் மற்றும் பென்வேலரேட்க்கு இணையாக உள்ளது.

3. தோட்டக்கலை :

வாழைக்கன்றின் கிழங்கை 1 செ.மீ. சீவியபின் நடுவதற்கு 15 நிமிடங்களுக்கு முன் மானோகுரோட்டோபாஸ் (லிட்டருக்கு 20 மில்லி) கலவையில் நனைத்து நடுவது நூற்புழுவை நல்லமுறையில் கட்டுப்படுத்த உதவுகிறது. இதனால் 49 விழுக்காடு கூடுதல் மகசூல் கிடைக்கிறது. இதுவரை பரிந்துரை செய்யப்பட்ட கார்போபியோரானுக்கு இணையாக மானோகுரோட்டாபாஸ் உள்ளது.

கோவையில் வீரியஒட்டுத் தக்காளி கோடி எச் 2 என்ற வளர்ப்பு எக்டருக்கு அதிகபட்ச மகசூலாக 69.8 டன்கள் தந்தது. செடி ஒன்றுக்கு 5 முதல் 7 கொத்துக்கள் கொண்ட பழங்கள் காணப்பட்டன. பழத்தில் 6 லிருந்து 7 வரிகள் உண்டு. எடை 150

கிராம். பழுத்தப் பழங்கள் அடர் ஆரஞ்சு நிறமாக இருக்கும். இனிப்பு அளவு 3.4 பிரிக்காக இருந்தது.

பெகோனியா பூச்செடிக்குகந்த தொட்டிக் கலவையாக மக்கிய நார்க்கழிவு, மலைவனக்காடு இலைமக்கு மற்றும் மணல் 3 : 1 : 1 என்ற விகிதம் ஏற்புடையது என கண்டறியப்பட்டது. இது இலைமக்கு மணல் மற்றும் இரும்பொறை மண் ஆகியவற்றைக் (1 : 1 : 1) காட்டிலும் சிறந்ததாக உள்ளது.

4. நீர்நுட்பவியல் :

மஞ்சள் சார்ந்த பயிர் திட்டத்தின் பாசனத்தேவையை அறிய பாவானிசாகரில் பல பயிர்களைக்கொண்டு சோதனை செய்ததில் நீர் / நீராவிப்போக்கு விகிதம் 1.05 எனக் கண்டறியப்பட்டது. இந்த விகிதத்தில் உயர் விளைச்சலாக எக்டருக்கு 16 டன்கள் மஞ்சள் விரலிகள் கிடைத்தன.

5. வேளாண் பொருளாதாரம் :

தனிப்பயிராக சோயா மொச்சை, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு மற்றும் வெங்காயத்துடன் போட்டி போட முடிகிறதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்காச் சோளமும் (ரூ. 15627) வெங்காயமும் (ரூ. 9654) அதிக நிகர இலாபம் தந்தன. உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு மற்றும் சோயா மொச்சை நிகர இலாபமாக முறையே ரூ. 5291, ரூ. 3369, ரூ. 3308, மற்றும் ரூ. 2464 நல்கியது. மேலும், சோயா கரும்பில் சிறந்த ஊடுபயிராக பயிரிடப்பட்டு நிகரலாபமாக ரூ. 9778 ஈட்டித் தருகிறது.

6. எதிர்காலமுனைப்புத்திட்டங்கள் :

ஒருங்கிணைந்த பயிர் ஊட்டக மேலாண்மையை பலபயிர் திட்டங்களுக்கு உருவாக்குதல். அதே சமயம் இடுபொருட்களின் செலவைக் குறைப்பதுடன் சுற்றுப்புறச்சூழல் பாதிக்காத உத்திகளை உருவாக்குதல்.

விவசாயம் மற்று விவசாய தொழில் கூடங்களால் ஏற்படும் நச்சு மற்றும் பாதிப்பிலிருந்து சுற்றுப்புற சூழலைக் காப்பதற்கான மேலாண்மை உத்திகளைக் கண்டறிதல்.

வேளாண்மையில் அதிக வருவாய் தரும் பயிர்களின் விதைகளின் தரத்தை நிர்ணயித்தல்.

மாற்றுப்பயிர் திட்டத்திற்கு உகந்த அதிகவிளைச்சலும் மிகக்குறுகிய வயதுடைய (85 நாட்கள்) நெற்பயிர் இரகத்தை உருவாக்குதல்.

வாழை முடிக்கொத்து, வாழை வாடல்நோய், தக்காளி வாடல்புள்ளி நச்சுயிரி, இலைசுருட்டு நச்சுயிரி, மரவள்ளி — தேமல் நச்சுயிரி பயிர் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியைத் தரவல்ல சோமாகுளோனீஸ் உருவாக்குதல்.

நெல்லில் குலைநோய், துங்ரோ நச்சுயிரி, உருளைக்கிழங்கில் பின்கருகல் மற்றும் நிலக்கடலையில் துருநோய் போன்ற நோய் பரவுவது பற்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாதிரி கண்டறிதல்.

வேளாண் பயிர்கள் மற்றும் வனமர எண்ணெய்களைப் பதப்படுத்தி வருவாயை அதிகப்படுத்துதல்.

ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள பயிர்களில் ஆராய்ச்சியை விரிவுப்படுத்துதல்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 12.3
புதிய திட்டங்கள் பட்டியல் 1994—95

வ.எண்	திட்டத்தின் பெயர்	தொடராச் இனச் செலவு 1994—95 ரூபாய் இலட்சத்தில்
1.	நுண்ணுயிர் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் அமைத்தல் மதுரை	5·55
2.	பலாவில் புதிய தேர்வு மற்றும் பயிர் நிர்வாகம் முறை ஆய்வு விருதாசலம்.	0·86
3.	சம்பா மிளகாய் உற்பத்தி மற்றும் தர உயர்வு ஆய்வு கோவில்பட்டி	1·04
4.	தரமான இளநீர் உற்பத்திக்கான தென்னை இரகத்தேர்வு, வேப்பன்குளம்	0·98
5.	கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் மணற்பாங்கான நில மேம்பாட்டுத் திட்டம், கிள்ளிகுளம்	1·05
6.	காவிரிப் பாசனப் பகுதியில் பயிர் செய்யப்படும் தென்னை வாழை மற்றும் கரும்பு பயிர் செய்முறை மற்றும் விற்பனையில் ஏற்படும் சிக்கலைத் தீர்க்கும் ஆய்வு தஞ்சாவூர்	0·50
7.	இரும்பொறை மண்ணில் மரம் வளர்க்க இடப்படும் வி.ஏ.எம். பூஞ்சாளம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா பற்றிய ஆய்வு, விஜயநகரம், உதகை	1·28
8.	பயிர் உற்பத்தியில் தேனீக்களின் பங்கு பற்றிய ஆய்வு பவானிசாகர்	0·94
9.	வலை ஆய்வுக்கூடம், கொடைக்கானல் மேலாலத்தூர் பரமக்குடி, வில்லிப்புத்தூர் மற்றும் தருப்பதிசாரம் ஆராய்ச்சி நிலையங்களில் பாசன வசதி, நிலம் சீர் படுத்துதல் மற்றும் வேலி அமைப்பதற்கான நிதி உதவி	5·00
10.	திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல், திருச்சி நிலத்தின் செலவு மட்டும்.	5·00
		22·20

TRUTH ALONE TRIUMPHS

நிதி உதவி (தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்) 1993—94

1. அரசின் நிதி உதவி (திட்ட உதவி 11.12 கோடி + திட்டத்தில் சேராத உதவி 11.05 கோடி) 22.17 கோடி
2. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவி 3.67 கோடி

அட்டவணை 12.4

திட்ட மதிப்பீடு 1994—95

(ரூபாய் கோடியில்)

வ.எண்.	விவரம்	வருவாய்	வரவு செலவு திட்ட மதிப்பீடு
1.	ஆரம்ப நலுவை	1·30	–
2.	மாநில உதவி (திட்டத்தில் சேராதது)	11·25	14·11
3.	மாநில உதவி (திட்டம்)	12·36	12·81
4.	பல்கலைக்கழக வருவாய்	3·31	—
5.	இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக உதவி	4·57	4·89
6.	மத்திய அரசு உதவி	1·28	1·41
7.	இதர நிதி உதவி	0·85	0·75
8.	கடன் மற்றும் முன் பணம்	35·47	34·57
	மொத்தம்	34·17	34·5

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

[607 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1994-95 ஆம் ஆண்டிற்கான பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்

கோரிக்கை எண் 10

பால்பெருக்குத் துறை

முன்னுரை :

பால்வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலாக நவீன பால்பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குக் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமாகவும் மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும், இயங்கி வருகின்றது.

குறிக்கோள் :

பால்வளத்துறையின் முக்கியமான குறிக்கோள்கள் :

(அ) நிலையாக, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்கு படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள் : [*1994 ஏப்ரல் 20*

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு பின்வரும் பெரும்பான்மையான நடவடிக்கைகள் பால் வளத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

(அ) பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு உரித்தான கால் நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவவசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடை தீவனம் அளித்தல் மற்றம் அங்கத்தினர்களுக்கு நவீன கால் நடை பராமரிப்புப் பயிற்சி அளித்தல் இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பாலை விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் (Infrastructure facilities) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், நுகர்வோர் நலனுக்காக பால் துகள் (பால் பவுடர்) உற்பத்தி ஆலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனை முறை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

வணிக சம்பந்தமான பால் கொள்முதல் பக்குவப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்விணையம் பால்வளத் திட்டங்களை, தேசீய பால்பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 17 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றது :

சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல்--அண்ணா, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டிணம்-காயிதே மில்லத் மற்றும் புதுக்கோட்டை.

பால்வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியர்குமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மாநிலத் திட்ட நிதியிலிருந்து நிறைவேற்றப்படுகின்றன.

1994 ஏப்ரல் 20]

சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்,. ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலிய சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 பால் பத துணைப்பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கை முறை கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால் நடை மருந்தகங்களும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-Operation Flood) காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால்வளத் துறை தற்போது முக்கியமாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள் 1988 ஆகிய விதிகளை நடைமுறைபடுத்துதல் ஆகிய பணிகளை பால் பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து. அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில், பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவ வசதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால், பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. இச்சங்கத்தின் செயலாளர்கள் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும், தங்கள் சொந்த செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளது. இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும்

பாலில், உள்ளூர் உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக்கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

பால்வளத்துறையின் முன்னேற்றம்:

அரசு திட்ட நிதி உதவியுடனும், மற்றும் பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும், கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால் வளத்துறை அடைந்துள்ளது :-

வ. எண். (1)	இனம். (2)	31-12-1992 வரை செயலாக்கம். (3)	31-1-1994 வரை செயலாக்கம். (4)
1.	முதன்மை சங்கங்களின் எண்ணிக்கை (எண்.)	9,613	10,047
2.	மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை.	17	17
3.	உறுப்பினர்களின் எண்ணிக்கை.	25.12 லட்சம்.	25.20 லட்சம்.
4.	பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்)	14.65 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.	16.00 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.
5.	பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்)	11.67 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.	14.11 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.
6.	சென்னை நகரத்தில் பால் விற்பனை.	7.32 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.	7.54 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.
7.	பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை.	17	17
	திறன்.	17.04 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.	17:54 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
8.	குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை.	43	43
	திறன்.	7.51 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.	8.61 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு.
9.	தானியங்கி பால் நிலையம்.	150	161

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி :

1992-93-ல் புதியதாக 490 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1993-94-ல் 560 கூடுதல் சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31.1.94 வரை 355 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 31-1-1994 வரை 71 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும் :

தமிழகத்தில் உள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கள்/ஒன்றியங்கள்:

(அ)	பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ...	9,983
(ஆ)	பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ...	9
(இ)	கூட்டுறவு பால் பண்ணைகள் ...	2
(ஈ)	பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் ...	52
(உ)	கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் ...	1
(ஊ)	மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் ...	17
(எ)	தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்) ...	1

[1994 ஏப்ரல் 20

பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்ட பணிகள்

தொடர் திட்டப் பணிகள்

I. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால்பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்தப்படுவதற்கென ரூ.7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தினை தேசீய கூட்டுறவு வளர்ச்சிக்கழகம், புது டில்லி ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் கடனாக வழங்கும். மீதம் 30 சதவிகிதத்தை மாநில அரசு மானியமாகவும், பங்கீட்டு தொகையாகவும் வழங்கும். இத்திட்டம் 1987–88ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

2) மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளை கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

3) 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

5) தற்போதுள்ள திருநெல்வேலி பால் பண்ணையின் கொள் திறனான நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

6) நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல், இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

அரசு தன் பங்குத் தொகையான ரூ. 211.50 லட்சத்தில் ரூ. 165.875 லட்சங்கள் 31-3-1993 வரை ஒப்பளிப்பு செய்துள்ளது. தேசீய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன பங்குத் தொகையான ரூ. 493.50 லட்சத்தில் ரூ. 281.00 லட்சம் அந்நிறுவனத்தாரால் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 20]

II. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பால்பண்ணை அமைப்பதற்கு ரூ. 465.50 லட்சம் திட்ட மதிப்புடன் திட்டமொன்று தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்ட மதிப்பீட்டில் 70 சதவீதம் ரூ. 325.85 லட்சங்கள் தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும் 30 சதவீதம் ரூ. 139.65 லட்சங்கள் அரசு மான்யமாகவும் / பங்குத்தொகையாகவும் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பங்குத் தொகையான ரூ. 34.91 லட்சங்கள் அரசு விடுவித்துள்ளது. தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனமும் ரூ. 81.46 லட்சம் நிதியினை விடுவித்துள்ளது. ஆகமொத்தம் இத் திட்டத்திற்கு ரூ. 116.37 லட்சங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்ட காலம் 1992 முதல் 1997 வரை ஐந்தாண்டுகள் ஆகும்.

III. ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்

தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தினை அமுல்படுத்த ரூ. 103 லட்சம் திட்ட மதிப்பீட்டில் திட்டம் ஒன்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

IV. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன உதவியுடன் செயல்படுத்த ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்திற்கு மாறாக தற்போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் உதவி பெற்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் கொள்முதல் விலை உயர்வு :

மாநிலத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக் கிணங்க, 1-5-1993 முதல் பசுவின் பாலின் கொள்முதல் விலை (திடப்பொருள்) கிலோ ஒன்றுக்கு ரூ. 42 எனவும், எருமையின் பாலின் கொள்முதல் விலை கிலோ கிராம் (கொழுப்பு) ஒன்றுக்கு ரூ. 96 எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல் விலை பசுவின் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4.70-லிருந்து ரூ. 5.46 எனவும், எருமையின் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 6.30-லிருந்து ரூ. 6.74 என உயர்ந்துள்ளது.

[1994 ஏப்ரல் 20

கறவை மாடுகள் மான்யத் திட்டம் :

ஆதிதிராவிட பழங்குடியினருக்காக ஆதிதிராவிடர் நலம், ஆதிதிராவிடர்கள் கிறிஸ்துவர்கள் மதம் மாறிய மற்றும் சிறப்பு மத்திய உதவியுடன் செயல்படும் இத்திட்டத்தின் கீழ் ஒரு கறவை மாட்டின் விலை ரூ. 3,200/- லிருந்து ரூ. 4,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போது ஒரு கறவை மாடு வாங்க வழங்கப்பட்ட மான்யத் தொகை ரூ. 1,600-லிருந்து ரூ. 2,250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, இத்திட்டங்கள் அரசு உதவியுடனும் தாட்கோ நிறுவனம் அளிக்கும் சலுகைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் Nodal Agencies-ஆக இருந்து செயல்படுத்தி வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் (1993-94) இத் திட்டங்களில் கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது :-

திட்டத்தின் பெயர்.	இலக்கு எண்ணிக்கை. (கறவை மாடுகள்)	நிதி ஒதுக்கீடு.
1. ஆதிதிராவிடர் நலத்திட்டம்.	8,600	ரூ. 193.50 லட்சம்
2. ஆதிதிராவிட இனத்திலிருந்து கிறிஸ்துவர்களாக மதம் மாறியவர்கள்.	66	ரூ. 1.50 லட்சம்
3. தாட்கோ.	10,000	ரூ. 225.00 லட்சம்

பால் கூட்டுறவுகளில் சிறப்பு அலுவலர்களை நியமித்தல்:

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (சிறப்பு அலுவலரின் நியமனம்) சட்டம் 1991 (தமிழ்நாடு சட்டம் 30/1991)-ன் கீழ் 5,991 ஆதார பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் பொது நலன் கருதி கலைக்கப்பட்டு சிறப்பு அலுவலர்கள் 28.7.91 அன்று நியமிக்கப்பட்டு அவர்களின் பதவிக்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வருகிறது. அரசு, சமீபத்தில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (சிறப்பு அலுவலர்களின் நியமனம்) திருத்தம் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 5/1994)-ன் கீழ் ஆதார பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அலுவலர்களின் பதவிக்காலத்தினை 28-1-1994 முதல் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்

பால் பெருக்குத் திட்டத்தை மூன்று அடுக்கு 'ஆனந்த்' பாணியில் செயல்படுத்துவதற்காக, கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதும், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான (கட்டுப்படியான) விலையை அளிப்பதும் நகரங்களில் வாழ்கிற மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் விற்பதும் கொள்கையாகும்.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் தமது ஒன்றியங்களுக்காகத் தேவையான உறைவிந்து நிலையம், பொலிகாளை பேணல் ஆகிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின் கீழ், அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய மூன்று இடங்களில் பால்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் கொள்திறனுடன் அம்பத்தூரிலும், நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் கொள்திறனுடன் மாதவரத்திலும், பால் பொருட்களான கோவா, ஐஸ்கீரீம், யோகர்ட் போன்றவைத் தயாரிக்க 12,000 லிட்டர் கொள்திறனுடன் அயனாவரத்திலும் இப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணையில் பால் துணைப் பொருட்களாகிய ஐஸ்கீரீம், யோகர்ட் மற்றும் கோவா உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும், பால்தூள், நெய், வெண்ணெய், பாலாடை போன்ற பால்பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது. ஒன்றியங்களை ஒருங்கிணைத்து வழி நடத்தி அவற்றிற்கு தொழில் நுட்ப உதவிகளையும் இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக, திட்டமிடல், பண்ணைகள் நிறுவுதல், பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளையும் இணையம் Turn Key அடிப்படையில் மேற்கொள்ளுகிறது.

[1994 ஏப்ரல் 20

மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால் :-

வரிசை எண்.	மாவட்டம்.	1991–92	1992–93	1993–94 (ஜனவரி' 94 முடிய)
		(நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் லிட்டர்களில்)		
(1)	(2)	(3)	(4)	(5)
1.	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	54	52	68
2.	தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார்	83	74	97
3.	வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர்	243	236	307
4.	தர்மபுரி	76	81	91
5.	சேலம்	182	209	254
6.	பெரியார்	102	130	134
7.	கோயம்புத்தூர்	85	86	104
8.	நீலகிரி	26	25	25
9.	திருச்சிராப்பள்ளி	73	78	101
10.	தஞ்சாவூர்	12	10	11
11.	புதுக்கோட்டை	2	1	2
12.	திண்டுக்கல்-அண்ணா	41	44	44
13.	மதுரை	80	68	87
14.	இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	14	13	14
15.	காமராஜர்	10	11	12
16.	திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார்	43	55	58
17.	கன்னியாகுமரி	11	10	9
	மொத்தம்	**1,137**	**1,183**	**1,418**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 20]

பால் விலை:

(அ) கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான விலை):

பால் உற்பத்தி மற்றும் கால் நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும், கொள்முதல் விலை பால் உற்பத்தியாளர்களுக்கு அவ்வப்போது கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது:-

காலம். (1)	எருமைப்பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு. (2)	பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு. (3)
	ரூ. பை.	ரூ. பை
1-11-1987 முதல் 31-3-1988 வரை	48-00	23-00
1-4-1988 முதல் 2-11-1988 வரை	50-00	24-00
3-11-1988 முதல் 30-11-1990 வரை	58-00	28-00
1-12-1990 முதல் 14-5-1991 வரை	64-25	30-75
15-5-1991 முதல் 22-2-1992 வரை	67-15	32-30
23-2-1992 முதல் 30-4-1992 வரை	90-00	32-30
1-5-1992 முதல் 30-4-1993 வரை	90-00	36-15
1-5-1993 முதல் இன்று வரை	96-00	42-00

(ஆ) விற்பனை விலை:

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும் பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதீன் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும், பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும் விற்பனை விலையைக் கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டது:-

	1-11-1987	16-11-1988	25-1-1992 முதல்		1-7-1993 முதல்	
			பாலிதீன் பைகளில்.	தானியங்கி நிலையங்களில்.	பாலிதீன் பைகளில்.	தானியங்கி நிலையங்களில்.
	ரூ.பை	ரூ.பை	ரூ.பை	ரூ.பை	ரூ.பை	ரூ.பை
பால் அட்டை	4-50	5-00	5-90	6-00	7-00	7-50
ரொக்கத்திற்கு	4-60	5-20	6-10 (தரம் உயர் பால்)	6-00 (நிலை படுத்திய பால்)	7-50 (தரம் உயர் பால்)	7-50 (நிலை படுத்திய பால்)

[1994 ஏப்ரல் 20

கால் நடைத் தீவன ஆலை:

கால் நடைத் தீவன உற்பத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன:-

1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஒன்றியம் .. மாதவரம்
2. பெரியார் ஒன்றியம் .. ஈரோடு
3. மதுரை ஒன்றியம் .. கப்பலூர்.

மேற்குறிப்பிட்டுள்ள ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறனும் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் ' பெல்லட்' (pellet) மற்றும் 'மேஷ்' (Mash) வகைகள் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு, ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் இத்தீவனம் கால் நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால் நடைப் பண்ணைகளுக்கும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேற்சொன்ன கால் நடைத் தீவன ஆலைகளில் 1993-94 ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் வருமாறு:-

இருப்பிடம்	1993-94 ஜனவரி முடிய உற்பத்தி (டன்)	விற்பனை (டன்)	
(1)	(2)	(3)	
சென்னை-மாதவரம்	6515	6492	(தொடக்க இருப்பு உள்பட)
ஈரோடு	13048	13364	
கப்பலூர்	8182	7828	
மொத்தம்	**27745**	**27684**	

பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை:

1993-94 ஆம் ஆண்டில் சென்னையில் நாளொன்றுக்கு 7-55 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 1992-93 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 7-35 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. 500 பால் விற்பனை நிலையங்கள், 50 பாலகங்கள், 161 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 83 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி.டேங்க்) இவைகளின்

1994 ஏப்ரல் 20]

மூலமாக வாடிக்கை நிறுவனங்களுக்கு மொத்த விற்பனையாகவும், தனிவாடிக்கையாளர்களுக்கு ½ லிட்டர் 1 லிட்டர் பாலிதின் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் பால் விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பால் பொருட்கள் விற்பனை விபரம் பின்வருமாறு :-

இனங்கள்.	1991-92.	1992-93.	1993-94 ஜனவரி '94 முடிய.
(1)	(2)	(3)	(4)
பால் நாளொன்றுக்கு சராசரி (லட்சம் லிட்டர்)	6.82	7.35	7.55
வெண்ணெய் (டன்னில்)	1132	1088	975
நெய் (டன்னில்)	226	248	219
பால்பொடி (டன்னில்)	46	6	14

. . . இணையத்தின் மொத்த விற்பனை 1992-93-ல் ரூ. 176.05 கோடியாகும். இவ்வருடம் (1993-94) மொத்த விற்பனை ஜனவரி 1994 முடிய ரூ. 170.56 கோடியாகும். இவ்வருட முடிவில் மொத்த விற்பனை ரூ. 204.55 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம்:

1972-ல் பால் பெருக்குத் திட்டம் துவக்கப்பட்டு, முதலாவது பால்பெருக்குத் திட்டம் 9 மாவட்டங்களில் ரூ.15.48 கோடி செலவில் முதலீடு செய்யப்பட்டது.

முதல் பால் பெருக்குத் திட்டத்தினை தொடர்ந்து இரண்டாவது பால்பெருக்குத் திட்டம் 12 மாவட்டங்களில் ரூ.35.66 கோடி செலவில் முதலீடு செய்யப்பட்டது.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 16 மாவட்டங்களில் உலக வங்கி நிதி உதவியுடன் தேசீய பால்வள வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1994 ஆம் வருடத்துடன் முடிவடைகிறது.

ரூபாய் 88.23 கோடி செலவில் செயல்படும் இத்திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. அவற்றின் பல திட்ட வேலைகள் இவ்வருடம் ஜூன் 1994 க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1994 ஏப்ரல் 20

புதிய விவசாய உறுப்பினர்கள் சேர ஊக்குவித்தல், கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல், பால் பதனிடும் மற்றும் பால் குளிரூட்டும் திறனை அதிகப்படுத்துதல், மாவட்ட அளவில் பால் விற்பனை மற்றும் சென்னை நகரில் பாலின் விற்பனை முன்னேற்றம் அடைய செய்தல் போன்றவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணை சோளிங்கநல்லூரில் ரூ.24.80 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. இப்பால் பண்ணை இவ்வருடம் செப்டம்பர் '94ல் செயல்பட துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளொன்றுக்கு 30 மெ.டன் திறன் கொண்ட பால்தூள் ஆலை பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் ரூ.9.00 கோடி செலவில் கட்டப்பட்டு, இப்பால் பவுடர் ஆலை 1993 ஜூலை மாதம் முதல் பால் தூள் உற்பத்தி நடைபெற்றுவருகிறது.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்திறனிலிருந்து 1,00,000 லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள அனகாவூர் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி பால்பண்ணை நாளொன்றுக்கு 1.00 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறனிலிருந்து 1.50 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் புதிய பால்பண்ணை (நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்டது.) மற்றும் விழுப்புரத்தில் புதிய பால் பண்ணையின் (நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்திறன் கொண்டது.) கட்டுமானப்பணிகள் நடந்து வருகிறது.

இரண்டு புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அவற்றில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள சானூரிலும் மற்றொன்று நாளொன்றுக்கு 30,000 லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள கொடக்கல்லிலும் கட்டப்பட்டு வருகிறது.

இது தவிர, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், வடஆற்காடு-அம்பேத்கார், தென்னாற்காடு-வள்ளலார், சேலம், மதுரை திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பதனிடும் பண்ணைகளின் விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது.

1994 ஏப்ரல் 20]

இத்திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்படும் பால் பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் கட்டுமான பணிகள் இவ்வருட இறுதியில் (1994) முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளது. பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் தற்போது நாளொன்றுக்கு 16.88 லட்சம் லிட்டர் கொண்ட பால் பதனிடும் பண்ணைகள் கொள்திறன் நாளொன்றுக்கு 26.87 இலட்சமாகவும், தற்போது நாளொன்றுக்கு 7.34 இலட்சம் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையங்கள் நாளொன்றுக்கு 11.06 இலட்சம் குளிரூட்டும் திறனாக உயர்த்தப்படவுள்ளது.

தற்போது இயங்கி வரும் 161 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இத்திட்ட முடிவில் 250 தானியங்கி பால் வழங்கு நிலையங்களாக உயர்த்தப்படவுள்ளது.

சென்னையில் சோளிங்கநல்லூரில் கட்டப்பட்டு வரும் மூன்றாவது பால் பண்ணை செயல்படும் போதும் மற்றும் நாளொன்றுக்கு 3.00 லட்சம் லிட்டரிலிருந்து 4.00 லட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டு. அம்பத்தூரில் உள்ள பால்பண்ணை செயல்படும் போதும் சென்னையில் பால் விற்பனை நாளொன்றுக்கு 9.30 இலட்சம் லிட்டராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமுல்படுத்தவில்லை. மற்றும் திண்டுக்கல்-அண்ணா. தஞ்சாவூர் மாவட்டத்தில் பால்பண்ணை திட்டங்களுக்கு தேசீய பால்வள வாரியம் ஒப்புதல் அளிக்கவில்லை.

உள்ளீட்டுப் பணி:

பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்:

1993-94 ஆம் ஆண்டு (ஜனவரி' 1994 முடிய) இவ்விணையத்தில் நாளொன்றுக்கு 14.18 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. இதுவே, மேற்படி காலத்திற்கு கடந்த ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 11.71 லட்சம் லிட்டர் மட்டுமே பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியை பெருக்குவதற்காக 1993-94 ஆம் ஆண்டு (ஜனவரி 1994 முடிய) 242 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் துவக்கப்பட்டு, 13.46 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் செயற்கை இனவிருத்தி செய்வதற்கு தேவையான உறைவிந்து குச்சிகள், கால் நடை தீவனங்கள், பசும்புல் உற்பத்திக்கான மானியம், வெக்கை

மற்றும் கோமாரி நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டன. செயற்கை கருவூட்டலில் கிராம அளவிலான தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் கால் நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டு (ஜனவரி 1994 முடிய) 6,87,080 கறவை இனங்களுக்கு உறைவிந்து செலுத்தப்பட்டது.

1993-94 ஆம் ஆண்டு (ஜனவரி 1994 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நல்ல தேர்ச்சி பெற்ற கால் நடைமருத்துவர்கள் மூலம் 5,49,313 கால் நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால் நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர நேர அழைப்பிற்காக அவசரகால சிகிச்சை வழித்தடங்கள் செயல்படுத்தப் பட்டன. 1993-94 ஆம் ஆண்டு 79 நடமாடும் கால் நடை சிகிச்சை தடங்களும், 32 அவசர கால சிகிச்சை தடங்களும் செயல்முறைப்படுத்தப்பட்டன.

உள் நாட்டுக் கால் நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி:

செயற்கை கருவூட்டலின் பயனாக 1993-94 ஆம் ஆண்டு (ஜனவரி'94 முடிய) 79,530 அதிக வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உறைவிந்து குச்சிகள் உதகமண்டலத்திலுள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையிலும் மற்றும் ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை நிலையத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ் வருடம் 1993-94 (ஜனவரி 1994 முடிய) உதகமண்டலத்தில் உள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையில் 7.20 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன பொலிகாளை நிலையத்தில் 3.00 இலட்சம் முர்ரா இன எருமை இன உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

மரபு வழி வம்சத்திட்டம்:

பால் உற்பத்தியை மேம்படுத்த -நல்ல தரமான பொலிகாளைகள் தேர்ந்தெடுப்பதற்காக 1986ம் ஆண்டு மரபுவழி வம்சத்திட்டம் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில், தாய் பசுவின் பால் உற்பத்தித் திறனுடன், மரபு வழி வம்சத்திட்டத்தின் கீழ் உள்ள பொலிகாளைகள் மூலம் பிறந்த கிடாரிக் கன்றுகளின் பால் உற்பத்தித் திறன் ஒப்பிட்டுப்பார்க்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 20]

தற்போது இத்திட்டம் தென் ஆற்காடு-வள்ளலார், சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் எருமை இனக் காளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது. 1990 ஆம் ஆண்டு முதல் மதுரை, திண்டுக்கல்-அண்ணா, தஞ்சாவூர், வடஆற்காடு-அம்பேத்கார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கலப்பினங்களுக்கான வம்சாவழித் திட்டம் விரிவு படுத்தப்பட்டு உள்ளது.

சிறப்பு கால் நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம்:

மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் தென்னாற்காடு-வள்ளலார், வடஆற்காடு-அம்பேத்கார், மதுரை, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் திண்டுக்கல்-அண்ணா ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இனணயத்தினால் 1991-92 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்டது.

நான்கு முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் இத்திட்டத்தில் பயனாளிகளாக சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு பயனாளியும் ஒரு கன்று வீதம் வளர்க்க திட்டத்தில் மானியம் தீவனமாக (தமிழ்நாடு பால் உற்ப்த்தியாளர்கள் கூட்டுறவு இனணயத்தினால் தயாரிக்கப்பட்ட தீவனம்) அளிக்கப்படுகிறது.

1987-88 ஆம் ஆண்டு முதல் 1991-92 ஆம் ஆண்டு முடிய கன்று வளர்ப்பு திட்டத்தின் மூலமாக 59,660 கன்றுகள் சேர்க்கப்பட்டு, 43,425 விவசாய கூலி மக்களும், 10,938 குறு விவசாயிகள் மற்றும் 5,837 சிறு விவசாயிகளும் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்திறகு ரூ. 11.12 கோடி முதலீடு அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1992-93 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திட்டத்தை செயல்படுத்தவில்லை. கன்று வளர்ப்புத் திட்டம் எதிர்கால பால் உற்பத்திக்கு உறுதுணையாக உள்ள காரணத்தினால் மாவட்ட ஒன்றியங்கள் தங்களுடைய நிதியிலிருந்தும் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்ட மூலமாகவும் உதவிகளைப் பெற்று இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

[1994 ஏப்ரல் 20

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, பால் கூட்டுறவுகளின் தணிக்கை வாரியம் நீக்கப்பட்டபின், தமிழ் நாட்டிலுள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை தேசிய பால் பெருக்கு வாரியம் (முந்தைய தேசிய பால் பண்ணைக் கழகம்) அளித்த ஆலோசனையின் பேரில் மேற்கொண்டு 1-10-1987 முதல் இயங்கி வருகிறது. இத்துறையானது,பால் வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தின் அனைத்து ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் ஒரு தலைமை இணையமான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகிறது.

2. தணிக்கை முன்னேற்றம்:

(அ) பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை:

1. 1992-93 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை

மொத்தமுள்ள 9590 சங்கங்களில், கணக்குப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்ற 8969 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள 621 சங்கங்களின் புத்தகங்கள் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக விசாரணை அலுவலர், காவல்துறை மற்றும் நீதி மன்றங்களில் உள்ளதால் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளது.

2. 1993-94 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை

1992-93 ஆம் ஆண்டுக்கு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்ட அனைத்து சங்கங்களிலும் 1993-94 ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை:

1. 1992-93 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை

1992-93 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை அனைத்து 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் முடிக்கப்பட்டு விட்டது.

1994 ஏப்ரல் 20]

2. 1993-94 ஆம் ஆண்டிற்கான இறுதித் தணிக்கை

அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் 1993-94 ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது. தேசிய பால் வள வாரியம் விரும்பியதைபோல் இறுதித்தணிக்கை முடிக்கப்பட்டு தொடர் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1988–89ஆம் ஆண்டு வரைக்கான இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1989-90 மற்றும் 1990-91 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கையினை பட்டய கணக்கர்களைக் கொண்டு முடிக்க அரசுஆணை பிறப்பித்துள்ளது. இணையத்தின் இறுதித்தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது. 1991-92 ஆம் ஆண்டு மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளுக்கான தணிக்கை, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் பால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. அரசு வருவாய் வசூல்

தணிக்கை மேற்கொள்ளப்படும் அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு அரசு வருவாய் கணக்கில் சேர்க்கப்பட்டு வருகிறது. 1993-94 ஆம் ஆண்டுக்கு நிதி நிலை அறிக்கையில் இவ்வினத்தில் வசூலிக்க மதிப்பிடப்பட்ட ரூ. 79.45 இலட்சத்தில் 31.01.1994 முடிய ரூ. 64.05 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(607 – ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கொள்கை விளக்கம் 1994-95
கோரிக்கை எண் 22
கால்நடை பராமரிப்புத் துறை

பாகம்-1

பொது விவரம்

முன்னுரை

நம்முடைய நாட்டின் பொருளாதாரம் பெருமளவு விவசாயத்தை அடிப்படையாக கொண்டது தமிழ்நாடு அதற்கு விதிவிலக்கல்ல.

பெரும்பான்மையான கிராம மக்கள் சிறு, குறு அல்லது நிலமற்ற விவசாயத்தொழிலாளர்களாக உள்ளனர். இந்த ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் கால்நடை வளர்ப்பு முக்கிய அங்கம் வகிக்கின்றன. ஒரு உப தொழிலாக இது வரை இருந்து வந்த கால்நடை வளர்ப்பு தற்பொழுது பல ஏழை மக்களுக்கு வருவாயைக் கொடுக்கும் முக்கிய தொழிலாக மாறியுள்ளது. தரம் உயர்த்தப்பட்ட கால்நடைகள் மற்றும் கோழிகளின் காரணமாக கால்நடை வளர்ப்பு அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் லாபகரமானதாகவும் வருமானம் உள்ளதாகவும் அமைந்துள்ளது. வரையறுக்கப்பட்ட இனவிருத்தி கொள்கைகள் மூலம் தோற்றுவிக்கப்படும் உயரின கால்நடைகளினாலும், தீவன வசதி பெருக்கத்தினாலும் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை மூலம் கால்நடைகளின் உடல் நலம் காக்கப்படுவதினாலும், இந்நிலை எய்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க கால்நடை பராமரிப்புத்துறை அயராது பாடுபடுகிறது. கால்நடைப் பராமரிப்புத்துறையின் அயராத மற்றும் தீவிர திட்டத்தின் செயல்பாடுகளினால் புரத சத்துமிக்க பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. பால், முட்டை, மற்றும் இறைச்சி உற்பத்தி ஆகியவைகள் அளவீடுகள் செய்ததில் 1992-93ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 3.47 மில்லியன் டன்னாகவும், முட்டை உற்பத்தி 2844.60 மில்லியன் ஆகவும், இறைச்சி உற்பத்தி 40.94 மில்லியன் கிலோவாகவும் அதிகரித்து உள்ளது. இது 1982-83ஆம் ஆண்டு பால் உற்பத்தி 1.79 மில்லியன் டன்னாகவும், முட்டை உற்பத்தி 898 மில்லியன் ஆகவும், இறைச்சி உற்பத்தி 31.72 மில்லியன் கிலோவாகவும் இருந்தது.

மாநில அளவில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு கிடைக்கும் பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளின் அளவும் அதிகரித்துள்ளது. இவை முறையே 1982-83-ஆம் ஆண்டில் 101 கிராம்களில் இருந்து 169 கிராமாக பாலின் அளவும் 19 எண்ணிக்கை முட்டையிலிருந்து 51 எண்ணிக்கை முட்டைகளாகவும் 1992-93ல் அதிகரித்துள்ளது.

பாகம்-2

ஆவின அபிவிருத்தி

1982-ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படியும் 1993-ஆம் ஆண்டு விஞ்ஞான முறையில் ஏற்கப்பட்ட ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் உத்தேச மதிப்பிடும் பின் வருமாறு.

	மொத்த கால்நடைகள் (மில்லியன்கள்)		இனவிருத்திக்கு தகுதியான கால்நடைகள் (மில்லியன்கள்)	
	1982	1993	1982	1993
ஆவினம்	10.36	8.82	3.48	2.97
எருமையினம்	3.21	3.08	1.72	1.56

1982-ஆம் வருட கால்நடை கணக்கெடுப்பின்படி இருந்த இனவிருத்திக்கான பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை 1993-ஆம் வருட கால்நடை கணக்கெடுப்பின்படி, பசுக்கள் 14.7 சதவீதம், எருமைகள் 9.3 சதவீதம், குறைந்திருந்தும் 1993-ல் பால் உற்பத்தியின் மதிப்பீடு 1.79 மில்லியன் டன்னிலிருந்து 3.47 மில்லியன் டன்னாக அதிகரித்து உள்ளது இது 93.9 சதவீதம் உயர்வாகும். மேற்படி உயர்வு நவீன செயல்முறைகளினால் பசு மற்றும் எருமைகளின் உற்பத்தி திறன் அதிகரிப்பை தெளிவுப்படுத்துகிறது.

2. ஆவின எருமைகள் இனவிருத்தி கொள்கை

மாநில அரசின் இனவிருத்தி கொள்கை பின்வருமாறு.

(1) உள்நாட்டின பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாடுகளை அவை அதிகமாக காணப்படும் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட முறையில் இனவிருத்தி செய்தல்.

(2) நாட்டின பசுக்களை அதிக அளவில் பால் கொடுக்கக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் பிரிசியன் பொலிக்காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

(3) கிராமப்புறங்களில் உள்ள எருமைகளை, முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(4) கலப்பின பசுக்களை, கலப்பினக் காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர, பொதுக் கொள்கையாக, இனவிருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லாச் சமவெளிப் பகுதிகளுக்கு ஜெர்சி இனப் பொலி காளைகளும், எல்லா மலைப் பகுதிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பிரிசியன் காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

சமீப காலங்களில் நகர் பகுதிகளில் பசுக்களுக்கு நல்ல ஊட்டமான தீவனம் கொடுத்து வளர்க்கும் காரணத்தால் தற்போது நகர்புறங்களிலும் பிரிசியன் விந்து வழங்கப்படுகிறது.

3. கால்நடை அபிவிருத்தி திட்டங்கள்.-

தீவிர கால்நடை அபிவிருத்தியானது இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டங்களில் முக்கிய திட்டமாக கருதி செயற்கைமுறை இனவிருத்தி தொழில் நுட்பத்தைக் கொண்டு, கால்நடைகளை பெருக்கி வந்தது. பசுக்கள் மற்றும் எருமைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக கால்நடைப் பராமரிப்புத்துறை தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்களையும் கேந்திர கிராமத் திட்டங்களையும் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் கடந்த காலங்களில் செயல்படுத்தி வந்தது.

இதுவரை கால்நடை பெருக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினை நிலைப்படுத்தவும், பால் உற்பத்தி திறனை, அதிகரிக்க செய்யவும் ஏற்கனவே, இயங்கி வந்த தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைத்து கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டது.

தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத்துறையின் மூலம் பசுக்கள்/ எருமைகளுக்கு இனவிருத்திப் பணியை விஞ்ஞானமுறையில் உறைவிந்து மூலமாக

[1994 ஏப்ரல் 20

கருவூட்டல் பணி மாநிலம் முழுவதிலும் உள்ள 2770 செயற்கைமுறை இனவிருத்தி நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

உலக வங்கித் திட்ட நிதி உதவியுடன் செயற்கைமுறை கருவூட்டல் பணி உறைவிந்து தொழில் நுட்பத்தினை கையாண்டு, தமிழகம் முழுமையும் உள்ள அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

4. உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்.

தரமிக்க வம்சாவழியைத் தோற்றுவிக்க கால்நடைப் பராமரிப்புத்துறை 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவையாவன.-

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)
3. ஓசூர் (தர்மபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

உறைவிந்து உற்பத்திக்காகத் தரம் மிக்க உயரின மேனாட்டு ஜெர்சி, பிரிசியன் மற்றும் காங்கேயம், முர்ரா பொலிகாளைகள் இந்நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து செயற்கைமுறை கருவூட்டல் நடைபெறும் நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. உறைவிந்து குழல்களை பாதுகாக்க தேவையான திரவ நைட்ரஜனும் இந்நான்கு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையங்களில் தயாரிக்கப்பட்ட உறைவிந்தும் திரவ நைட்ரஜனும் 10 உறை விந்து வங்கிகளில் சேகரிப்பட்டு அதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து கருவூட்டல் நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. 1993-94-ஆம் வருடம் (31.1.94 வரை) 23.92 இலட்சம் டோஸஸ் உறைவிந்து குச்சிகள் மற்றும் 1.44 லட்சம் லிட்டர் திரவ நைட்ரஜன் மேற்படி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

5. கால்நடைப் பண்ணைகள்

மாநிலத்தின் தற்போது 7 கால்நடை பண்ணைகளும் ஒரு உயரின கால்நடை பெருக்குப் பண்ணையும் உள்ளன. இங்கு கால்நடை இனவிருத்திப் பணிகள் விஞ்ஞான முறையில் நடந்து வருகின்றன. ஈச்சங்கோட்டை பண்ணையில் ஒரு உட்கரு மாற்றம் பிரிவும் இயங்கி வருகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள 8 இடங்களில் கால்நடைப் பண்ணைகள் செயல்படுகின்றன. ஓசூர் (தர்மபுரி மாவட்டம்), புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), ஈச்சங்கோட்டை மற்றும் ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்), கொருக்கை (நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்), அபிசேகப்பட்டி (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்), செட்டிநாடு (பசும்பொன் முத்து இராமலிங்க தேவர் மாவட்டம்) மற்றும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்).

ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் எருமையின வளர்ப்பும் மற்ற பண்ணைகளில் பசுவின வளர்ப்பும், கொருக்கை பண்ணையில் உம்பளாச்சேரி வகைப்பசுவும் உதகமண்டல பண்ணையில் பிரிசியன் பசு வகையும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி இனப்பசுக்களின் வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகின்றன. சிந்தி இன வம்சாவழி ஆய்வு, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் முர்ரா எருமைஇன வம்சாவழி ஆய்வு, ஒரத்தநாடு பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் சிறந்த கலப்பின காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

6. உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத்திட்டம்

இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டு முதல் ரூ.46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்.

(அ) தமிழகத்திற்கு எற்ற கால்நடை உற்பத்தி முறைகளை தோற்றுவித்தல்.

(ஆ) சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு பால் உற்பத்தியைக் கூட்டுதல்.

(இ) கிராமப்புற கால்நடை வளர்ப்போரின் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும்

(ஈ) பால் உற்பத்தி தொழிலை அரசு தகுந்த முறையில் மேற்பார்வையிடவும் உதவி அளிக்கவும் ஏற்பாடு செய்தல்.

இக்குறிக்கோள்கள் கீழ்கண்ட செயல்முறைகளின் மூலம் நிறைவேற்றப்பட உள்ளது.

(அ) உறைவிந்து உற்பத்தியைப் பெருக்க ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர் பண்ணைகளின் உள்ளீட்டு வசதிகளை வலுப்படுத்துதல்.

(ஆ) பொலிக்காளை உற்பத்தியைப் பெருக்க ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் ஒரத்தநாடு பண்ணைகளின் உள்ளீட்டு வசதிகளை வலுப்படுத்துதல்.

(இ) கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி, கடலூர், சிவகங்கை மற்றும் சென்னை (சைதாப்பேட்டை) ஆகிய 10 இடங்களில் உறைவிந்து வங்கிகளை நிறுவி, உறைவிந்து குச்சிகள் தருவிக்கவும், சேமிக்கவும், விநியோகிக்கவும் தகுந்த வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

(ஈ) 20 மாவட்டங்களில் மாவட்ட தீவன வளர்ப்புக் குழுவினை நிறுவி இலவசமாக தீவன இடு பொருட்களை வழங்கி தீவன வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

(உ) ஒலி ஒளி சாதனங்களின் மூலம் துறையின் விரிவாக்கப் பிரிவை வலுப்படுத்துதல்.

(ஊ) நோய் ஆய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி இயல்பான வளர்ச்சியின் காரணமாக 2000-ஆம் ஆண்டுடன் 4.80 மில்லியன் டன்னாக உயரும். மேலும் இந்த திட்டத்தின் செயல்பாட்டினால் பால் உற்பத்தி 2001 ஆம் ஆண்டில் 5.80 மில்லியன் டன்னாக உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அ.1991-92 முதல் 1993-94 ஆம் ஆண்டிற்கான சிறப்பு அம்சங்கள்.

(அ) உறைவிந்து, திரவ நைட்ரஜன் ஆகியவைகளை அனைத்து கருவூட்டல் நிலையங்களுக்கும் வழங்குவதைக் கண்காணிக்கக் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) மதுரை, கோவை, வேலூர், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கடலூர், சிவகங்கை மற்றும் சென்னை (சைதாப்பேட்டை) ஆகிய இடங்களில் உறைவிந்து வங்கிகள் நிறுவப்பட்டு உறைவிந்து குச்சிகள் தருவிக்கப்பட்டும் சேமித்துவைத்தும் பிற மையங்களுக்கு வழங்கப்படுகிறது.

(இ) உறைவிந்து மூலம் கருவூட்டல் பணி அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

(ஈ) 20 மாவட்ட தீவன அபிவிருத்திப்பணிகுழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தீவிர தீவன அபிவிருத்திப்பணி மேற்கொள்ளப்பட்டு, இடுபொருட்கள் இலவசமாக கால்நடை வளர்ப்போர்க்கு அளித்தும், தொழில் நுட்ப ரீதியான ஆலோசனையும் வழங்கப்படுகிறது. தவிர புதிய ரக அதிக விளைச்சலைத்தரக்கூடியதும், சத்து மிக்கதுமான புல்வகைகள் மற்றும் லெகும்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய திட்டத்தில் தீவன அபிவிருத்தி செயல்படுவதை தவிர இத்துறையில் மேலும் பல தீவன அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி பிரிவு, தீவன அபிவிருத்தி பணியையும் மேற்கொண்டு வருகிறது. இத்துறையில் இயங்கிவரும் ஏழு தீவன விதை உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்திச் செய்யப்படும் பசுந்தீவன புல்நறுக்குகள், விதைகள் மற்றும் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு இதன் மூலம் தீவன உற்பத்தி அதிகரிக்க அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

1993-94-ஆம் ஆண்டில் 31.1.94-ன்படி 197 இலட்சம் புல் நறுக்குகளும், 2.85 இலட்சம் தீவன மரக்கன்றுகளும், 31.26 மெட்ரிக் டன் தீவன விதைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

துறையின் விரிவாக்கப் பிரிவு ஒலி, ஒளி திரைப்படக் கருவிகள் கொண்டும் விவசாயிகள் கால்நடைப் பராமரிப்பு துறையின் செயல்பாடுகள் குறித்தும் சிறப்பான முறையில் அறியும் வண்ணம் நன்கு வலுப்படுத்தப்பட்டுள்ளது. நடிகர்களை கொண்டு இத்துறையின் பல்வகை பணிகளை விவசாயிகள் நன்கு அறியும் வண்ணம் 6 வண்ணத் திரைப்படங்கள் தயாரித்து விவசாயிகளுக்கு காண்பிக்கப்படுகிறது.

கால்நடைகளை தாக்கும் பல்வேறு நோய்களைப் பற்றிய காரணங்கள் கண்டறியும் பொருட்டு வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு நிறுவப்பட்டு நோய் கண்டறிந்து துறை அலுவலர்களுக்கு நோய் நீக்க பணிக்கு உதவி வருகிறது.

(ஆ) 1994-95-ஆம் ஆண்டிற்கான செயலாக்கத் திட்டம்.

ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு மற்றும் ஒசூர் ஆகிய பண்ணைகளில் கால்நடைகளின் இனவிருத்தி பணியினை விரிவுப்படுத்திட கூடுதலாக தேவையான கால்நடைகளை வாங்குதல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இதனையொட்டி, 6 ஆஸ்திரேலிய தொழில் நுட்ப வல்லுநர்கள் இங்கு வருகை தந்து முறையே 1) கால்நடை இனவிருத்தி, 2) கருமாற்றல் தொழில் நுணுக்கம், 3) தீவன அபிவிருத்தி, 4) தீவன விதை அபிவிருத்தி, 5) நோய் கண்டறிதல், 6) கால்நடை நலப்பணி ஆகிய பிரிவுகளின் திட்ட செயலாக்கத்தை வெற்றிப்பாதையில் நடத்திச் செல்லவும், அதற்கான உரிய பயிற்சி அலுவலர்களுக்கு அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. கிராமங்களிலுள்ள செயற்கைமுறை கருத்தரிப்பு நிலையங்களுக்கு "கிட்டிகள்" வழங்கப்படும். உறைவிந்து சேமிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட பழைய குளிர்சாதன குடுவைகளுக்கு பதிலாக புதிய குடுவைகள் வழங்கப்படும். தீவன அபிவிருத்தி பணிகள் புதிய வீரிய வகை தீவன பொருட்கள் மற்றும் பயறு வகை தீவனங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி தீவிரப்படுத்தப்படும்.

விரிவாக்க பிரிவிற்கு கால்நடை பராமரிப்புப் பணிகள் பற்றிய மூன்று 16 எம்.எம் திரைப்படங்கள் வழங்கப்படும்.

7. டானிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டம்.

புதுக்கோட்டையில் கால்நடை அபிவிருத்திக்காக ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி அதில் இளம் தம்பதிகள் தொடர் பணியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, தோழமை கிராமவாசிகளுக்கு தீவன அபிவிருத்தி மற்றும் கால்நடை பராமரிப்பு நடைமுறை பற்றிய விவரங்கள் அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. இத்திட்டம் குளத்தூர் தாலுகாவில் அன்னவாசல், குன்னாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஆகிய 3 பகுதிகளை உள்ளடக்கியது. இப்பகுதிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இத்திட்டம் 5 ஆண்டுகளுக்கு ரூ.4.40 கோடி செலவில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களுக்கு கூடுதலான வேலை வாய்ப்பை பெருக்கி அதன் மூலம் கூடுதலான வருமானத்தை உயர்த்தவும், மற்றும் தற்போதைய நவீன கால்நடை பராமரிப்பு தொழில் நுட்ப யுக்திகளை கையாள்வதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கச் செய்வதும் ஆகும். ஐந்தாண்டுகளில் செயல்படுத்தக்கூடிய இத்திட்டம், ஆகஸ்ட் 90 முதல் துவங்கி நான்காவது ஆண்டாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் சிறப்பு அம்சமானது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொடர்பு தம்பதியர்களுக்கு, கால்நடை பராமரிப்பு, தீவன அபிவிருத்தி தீவன சேமிப்பு ஆகியவற்றில் தகுந்த தொழில் நுட்ப விரிவாக்க பயிற்சியினை அளிப்பதாகும். பயிற்சி முடிந்த பின்னர் மேற்படி தொடர்பு தம்பதியர்கள் கிராம மக்களை கால்நடை வளர்ப்பில் தக்க முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றிட முன்மாதிரியாகவும் இருப்பார்கள். இதற்கென தகுந்த உதவிகளை, தமிழக மனிதவள மேம்பாட்டுத் துறையின் மூலம் அவர்கள் பெறுவார்கள்.

44 தொடர் பணியாளர்களுக்கும் 2500 விவசாயிகளுக்கும் இதுவரை தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம மக்களிடையே விழிப்புணர்வை வளர்க்கும் வகையில் 503 கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் 31.1.94 வரை நடத்தப்பட்டுள்ளது. 69,500 தீவன கன்றுகளும், கோ 1 ரக தீவன புல் நறுக்குகளும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான பயிற்சி நிலைய கட்டிடம் புதுக்கோட்டையில் ரூ. 155.80 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

8. செம்மறி ஆடு அபிவிருத்தி.

செம்மறி ஆட்டு வளர்ப்பு இம்மாநிலத்தில் ஏழை விவசாயிகளிடம் மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. இது அதிக விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தை அளிக்கிறது. கிராமப்புற பொருளாதாரத்தில் ஆட்டு வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஏழை விவசாயிகள் ஆடுகளை வாங்கி வளர்க்க கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு செம்மறி ஆட்டு வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(அ) ஆட்டுப்பண்ணைகள்.

கால்நடை பராமரிப்புத்துறை சின்னசேலம் (இராமசாமி படையாச்சியார் மாவட்டம்), சாத்தூர் (காமராஜர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 2 ஆட்டுப் பண்ணைகளையும், ஓசூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள 4 மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 4 ஆட்டு வளர்ப்புப் பிரிவுகளையும் பராமரித்து வருகிறது. இங்கு உள்நாட்டினங்களான மேச்சேரி, இராமநாதபுரம்வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு தேர்ந்த இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டு கிடாக்களும்,

பெட்டைகளும், தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு நாட்டின ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

(ஆ) செம்மறி ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்குத் தக்க சமயத்தில், இடுபொருட்கள் கிடைப்பதற்கும் விற்பனை உதவிக்கும் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள 1693 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களில், 1419 சங்கங்கள் பணியாற்றி வருகின்றன.

(இ) ஐரோப்பிய பொருளாதார நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்.

ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் கூடிய ஆடுவளர்ப்புத் திட்டத்தை தமிழகத்திலுள்ள ஆறு மாவட்டங்களில் கீழ்க்கண்ட குறிக்கோளுடன் 19.5.89 முதல் செயல்பட்டு வருகிறது.

1) இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல்

2) ஆடுவளர்ப்போரின் வருவாயை உயர்த்துதல்

3) சமூக மேய்ச்சல் நிலங்கள் மேலும் தரிசு ஆகாமல் தவிர்த்தல்.

4) இந்த திட்டத்தில் சேர்ந்த ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கங்களின் ஆடுகளுக்கு பசுந்தீவனம் அளிப்பதற்கு, பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்.

இத்திட்டம் தமிழகத்தின் வடபகுதியில் கீழ்க்கண்ட ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1) செங்கை எம்.ஜி.ஆர்.

2) வட ஆற்காடு அம்பேத்கார்.

3) திருவண்ணாமலை சம்புவராயர்.

4) தென்னாற்காடு வள்ளலார்.

5) சேலம் மற்றும்

6) தர்மபுரி

இத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகள் பின்வருமாறு.

1) புல் மற்றும் தீவன அபிவிருத்தி

2) நோய் தடுப்பு / உடல் நலம்

3) இனவிருத்திக்குத் தேவையான இருப்பை பன்மடங்கு பெருக்கி விநியோகித்தல்.

4) வளர்ச்சிப்பணி

5) நடமாடும் பயிற்சி பிரிவுகள் மற்றும்

6) திட்ட நிர்வாக அலுவல்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.1366 இலட்சம் ஆகும். அதில் ரூ.931 இலட்சம் ஐரோப்பிய பொருளாதார வர்த்தக நிறுவ முதலீட்டிலும், எஞ்சியுள்ள ரூ. 435 இலட்சம் செயலாக்கச் செலவாக மாநில அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

ஜனவரி 94 முடிய, இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அ) சூபாபுல் மரக்கன்றுகள் விநியோகம் 2.74 இலட்சம்

ஆ) ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் 42.18 இலட்சம்

இ) ஆடுகளுக்குப் போட்ட தடுப்பூசி எண்ணிக்கை 1.04 இலட்சம்

ஈ) சிகிச்சை அளிக்கப்பட்ட எண்ணிக்கை 1.48 இலட்சம்

உ) நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் 1195

ஊ) பயிற்சி பெற்ற குடியானவர்கள் எண்ணிக்கை 12366

எ) உண்ணி நீக்கம் செய்யப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை 4.57 இலட்சம்

ஏ) உண்ணி நீக்கப்பட்ட ஆட்டுக் கொட்டகைகளின் எண்ணிக்கை 7460

ஐ) இனப்பெருக்கத்திற்கு ஏற்ற கிடா வழங்கப்பட்ட எண்ணிக்கை 160

இத்திட்டம் 1993 ஏப்ரலில் முடிவுக்கு வந்தது. மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்ய ஐரோப்பிய பொருளாதார நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9. வெள்ளாட்டுப் பெருக்கம்

தமிழ்நாட்டில் வெள்ளாட்டு வளர்ப்பு விவசாயிகளிடையே பிரபலம் அடைந்து வருகிறது. சில விவசாயிகள் வெள்ளாட்டுகளை கொட்டில் முறையில் தீவிரமாக வளர்த்து வருகின்றனர் இறைச்சி மற்றும் பால் உற்பத்தித் திறன் உள் நாட்டு வெள்ளாடுகளில் குறைவாக இருப்பதால் கால்நடைப் பராமரிப்புத்துறை ஜமுனாபாரி வெள்ளாட்டு இனங்களை சின்னசேலம் ஆட்டுப்பண்ணையிலும், செட்டிநாடு மற்றும் கொருக்கை கால்நடைப் பண்ணையிலும் இனப் பெருக்கத்திற்காக வளர்த்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. வம்சாவழிமுறையில் பெறப்படும் வெள்ளாடுகள் உள்நாட்டின வெள்ளாடுகளின் தரம் உயர்த்த அவை தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

10. கோழி இனப் பெருக்கம்.

கால்நடைப் பராமரிப்புத்துறை 26 கோழி விரிவாக்க நிலையங்களையும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களையும், வெள்ளை லெக்கார்ன் மற்றும் ரோடு ஐலெண்ரெட் கோழிகளின் உற்பத்திக்காகவும், வளர்ப்பிற்காகவும் பராமரித்து வருகிறது. விவசாயிகளுக்கு விநியோகிக்க குஞ்சு வளர்ப்பு நிலையங்களாகவும் செயல்முறை விளக்க நிலையங்களாகவும் இக்கோழி விரிவாக்க நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஈரோட்டில் கோழிநோயைக் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக்கூடம் இப்பகுதியில் கோழி நோய்களைக் கண்டறிந்து கோழிநோய்கள் பரவாமல் தடுக்க எடுக்கவேண்டிய முன் அறிவிப்பு நடவடிக்கைப் பற்றி விவசாயிகளுக்கு விவரித்து உதவி வருகிறது, 1993-94-ஆம் ஆண்டில் 31.1.94 வரை 291 கிராமங்களுக்கும் 521 கோழிப் பண்ணைகளுக்கும் அதிகாரிகள் சென்று நோயைக் கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

1993-94ல் மற்றும் ஒரு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் சேலம் மாவட்டத்திலுள்ள ஆண்டலூர்கேட்டில் துவக்கப்பட்டு நாமக்கல் பகுதியிலுள்ள கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பயனடைய வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 31.1.94 வரை 352 கிராமங்களுக்கும் 499 கோழிப்பண்ணைகளுக்கும் அதிகாரிகள் சென்று நோயைக் கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அசில் இனக் கோழிகளை தருவித்து காட்டுப்பாக்கம் மற்றும் ஓசூர் பண்ணைகளில் தரமான கோழிகளை பெருக்கவும், உட்கொள்ளும் முட்டையின் அளவை உள்நாட்டினங்களில் அதிகப்படுத்தவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. பன்றிப் பெருக்கம்.

பன்றி வளர்ப்பு கூட கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழைக்குடும்பங்களுக்கு உபரி வருமானத்தை அளிக்கிறது. நாட்டுப்பன்றிகளின் இறைச்சி உற்பத்தி திறன் குறைவாக உள்ளதால் கால்நடைப்பராமரிப்புத் துறை சென்னை சைதாப்பேட்டையிலும், ஓசூர் மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளிலும், லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் இனப்பன்றிகளை இனப் பெருக்கம் செய்து வருகிறது. உள்நாட்டின பன்றிகளின் தரத்தை உயர்த்த விவசாயிகளுக்கு இப்பிரிவுகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன.

12. சிறப்புத் திட்டங்கள்.

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்

1975-ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் நீலகிரிமலைப்பகுதியில் கால்நடை அபிவிருத்தி பணிகளையும் உடல்நலம் பேணும் பணிகளையும் தீவிரப்படுத்த திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கன்று மற்றும் ஆடு வளர்ப்பு பயனீட்டார்களை தயார் படுத்துவதே நோக்கம் ஆகும்.

பின்னர் இத்திட்டம், பெரிய அளவில் உறைவிந்து சேமிப்பு நிலையத்தினை தோற்றுவிக்கவும், தீவன வளர்ச்சி உள்ளிருப்பு வசதிகளை அதிகமாக்கவும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில், விரிவாக்கப்பட்டுள்ளது. மேலும் கால்நடை நலம் பேணும் பணிகளை செயல்படுத்த ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும், கால்நடை மருந்தகமும், கிளை நிலையமும், நடமாடும் கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம் 1993-94-ல் செயல்படுத்த ரூ.12.50 இலட்சங்கள் வழங்கப்பட்டு அப்பண்ணையின் கால்நடை நலப்பிரிவுகளும் கட்டிட உள்ளிருப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத்திட்டம்

1981-ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திண்டுக்கல் அண்ணா, மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி மற்றும் காமராஜர் மாவட்டங்களிலுள்ள 24-தாலுக்காக்களில், கால்நடைகளின் நுண்ணுயிர் சக்தியினை சமன் செய்யும் பொருட்டு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பசுந்தீவன புல் நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள் மற்றும் பசுந்தீவன விதைகள் ஆகியவைகளை வழங்குதல், கால்நடை மருந்து நிலையங்களை ஒட்டிய காலியான நிலங்களில் தீவன வளர்ச்சியைப் பெருக்குதல். மேலே குறிப்பிட்ட 24 தாலுக்காக்களை உள்ளடங்கிய கால்நடை மற்றும் ஆட்டினப்பண்ணைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தி தீவனப் பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். உரிய நிதி உதவி செய்வதன் மூலம் பண்ணையின் அடிப்படை இருப்பை வலுப்படுத்தி கொள்வதும் குறிக்கோளாகும்.

இத்திட்டத்திற்கென, 1993-94-ஆம் ஆண்டில் ரூ.21.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள், ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நிறுவுவதிலும், இராமநாதபுரம் வெள்ளை மற்றும் வேம்பூர் ஆகிய ஆட்டினங்களை வழங்குதலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(இ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்.

இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் சேலம், தர்மபுரி, வடஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்படுகிறது.

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. 1993-94-ஆம் ஆண்டில் 100 கறவை மாட்டு அலகுகளும், 100 ஆட்டு அலகுகளும், 200 மலைவாழ் பழங்குடியினர் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளன. இது தவிர 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் மருத்துவ பிரிவுகள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள்

மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியும் இலவசமாக செய்யப்படுகின்றன.

(ஈ) சிறப்பு மத்திய உதவித்திட்டம்.

1983-ஆம் ஆண்டு முதல், இந்து ஆதி திராவிட சமுகத்தினருக்கென, குறிப்பாக மத்திய அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இத்திட்டத்தில் பயன் பெறும் ஏழை எளிய மக்களுக்கு 20 பெட்டை செம்மறி ஆடுகளும் 1 கிடாவும் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படுகிறது. கால்நடைகளின் நலப்பணியின் அங்கங்களான தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் குறித்த காலத்தில் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 21077 - ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. அவற்றில் 50 சதவிகிதம் பெண்கள் ஆவார்கள். 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.47.25 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டு 1000-ஆட்டு அலகுகள் தோற்றுவிக்கப்பட உள்ளன.

13. புள்ளி விவரம்

கால்நடை பராமரிப்புத் துறையில் பல்வேறு திட்டங்களின் உரிய செயலாக்கப்பணிக்கும், சரியான கால்நடை முன்னேற்றத் திட்டங்களை தீட்டவும் காலத்திற்கேற்ற நம்பிக்கைக்குரிய புள்ளி விவரம் அவசியமாகும்.

மாநில மாதிரி அளவீட்டு திட்டத்தின் மூலம் எல்லா மாவட்டங்களிலும் பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை பருவ காலங்களில் மதிப்பீடு செய்யும் திட்டத்தை கால்நடைப் பராமரிப்புத்துறை செயல்படுத்தி வருகின்றது. அதேபோல் மாவட்ட அளவிலான மாதிரி அளவீட்டு திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான தென்னாற்காடு வள்ளலார், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய 4 மாவட்டங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவை அதிக மாதிரி அளவில் மத்திய அரசின் உதவியுடன் செய்து வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் 1993-94 முதல் இவ்விரண்டு திட்டங்களும் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த மாதிரி அளவீட்டு திட்டமாக செயல்பட்டுவருகிறது.

கால்நடை கணக்கெடுப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்பு திட்டம் ஒன்று இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது.

1993-94-ஆம் ஆண்டில் இரண்டு கால கட்டங்களில் எடுக்கப்பட்ட அளவீடுகளின் முடிவுகள் பின்வருமாறு.

		கோடை காலம்	மழை காலம்	மொத்தம்
1.	பால் உற்பத்தி மதிப்பீடு (000 டன்கள்)	1171.932	1177.111	2349.043
2.	முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் எண்கள்)	927.009	949.347	1876.356
3.	இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ)	14.46	14.40	28.86

குறிப்பு மேற்கண்ட விவரங்களில் குளிர்கால மதிப்பீடு சேர்க்கப்படவில்லை.

14. கால்நடை மருத்துவ நலப்பணிகள்

(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 881 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2226 கிளை நிலையங்கள் மூலமாக கால்நடைகளின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது. சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடுவதின் மூலம் கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி சம்பந்தப்பட்ட பணிகள் இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன.

கால்நடை மருத்துவ நிலையங்களின் விவரங்கள்

1.	பல்முக மருத்துவமனை -	1
2.	பெரு மருத்துவமனை -	20
3.	கால்நடை மருத்துவமனை -	77
4.	கால்நடை மருந்தகங்கள் -	783
	மொத்தம் -	881

காலமுறைப்படி தடுப்பூசி போடுவதன் மூலம் கால்நடை நலப்பணி மற்றும் மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன், மலட்டுத்தன்மையுள்ள கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய பிரிச்சனைகளும் இந்நிலையங்கள் மூலம் சரிசெய்யப்படுகின்றன. உள்ளிருப்பு வசதிகள் கொண்ட பெரு மருத்துவமனைகளில் பெரிய அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய பெரு மருத்துவமனைகளில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன. இது தவிர சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் கால்நடைகளுக்கு 24 மணி நேரமும் மருத்துவ வசதி அளிக்கக் கூடிய பல்முக மருத்துவமனை (பாலிகிளினிக்) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1993-94 ஆம் ஆண்டில் 31.1.94 வரை 122.53 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 4.84 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது. 158.10 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. 20.40 இலட்சம் செயற்கைமுறை இனவிருத்தி கருவூட்டல் பணி செய்யப்பட்டது.

(ஆ) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு தடுப்பூசி போடுவது தான் கால்நடை மருத்துவத்துறையின் தலையாய நோக்கமாகும். இதன் அடிப்படையில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 1977-78ல் வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு இடங்களில் இப்பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் அது படிப்படியாக கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சிவகங்கை, காஞ்சிபுரம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி ஆகிய பத்து இடங்களில் தோற்றுவிக்கப்பட்டது.

இப்பிரிவின் முக்கிய பணியாவன.

அ) தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதை தவிர்க்கும் தடுப்பு வழிமுறைகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.

ஆ) இராணிப்பேட்டை கால்நடைநோய் தடுப்பு மருந்து நிலைய உதவியுடன் கோமாரி நோயின் அறிகுறிகளை கண்டறிந்து, நோய் கிளர்ச்சியின் தன்மையை அறிந்து கொள்ளுதல்.

அப்பகுதியினை ஆய்வு செய்து, நோய் கிளர்ச்சியின் தன்மையை வரைப்படம் மூலம் விளக்குதல்.

உடனடியாக நோயின் தன்மையை கண்டறிந்து, அதற்கு சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல்.

காச நோய், ஜோன்ஸ் நோய், கருச்சிதைவு மற்றும் மடி வீக்க நோய் ஆகியவைகளை காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

தாதுப்பொருட்களின் பற்றாக்குறை கண்டறிதல்.

(இ) நடமாடும் கால்நடை மருந்தகப்பிரிவுகள்.

நம்மாநிலத்தில் 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் பணியாற்றி வருகின்றன. அவைகளின் முக்கிய பணி தொலைதூரத்தில் உள்ள பட்டி தொட்டிகளில் உள்ள கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கின்றன.

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களை கண்டறிந்து உரிய முறையில் தடுப்பூசி போடுதல்.

தொற்று நோய் தாக்கி ஏற்படும் நோய் கிளர்ச்சியினை தடுத்து நிறுத்துதல்.

விவசாயிகளுக்கு ஆய்வுக் கூட்டங்கள் மூலமாக அறியப்படும் தொழில் நுட்ப விவரங்களை தெரிவித்தல்.

தொலை தூரத்தில் உள்ள கிராம மக்களின் பசு, எருமை ஆகியவை களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்தல்.

(ஈ). வெக்கை நோய் விழிப்புத்திட்டம்.

கால்நடைப் பராமரிப்புத்துறை, இம்மாநிலத்தில் வெக்கை நோய்த் தடுப்பிற்கான 26 மாவட்ட வெக்கை நோய்க் குழுக்கள், 10 கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 10 சோதனை சாவடிகள் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் கூடிய திட்டத்தில் சிறப்பு அம்சமாக தற்பொழுது அனைத்து கால்நடைகளுக்கும் நூறு . விழுக்காடு, வெக்கை நோய் தடுப்பூசி போடும் பணி செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். தர்மபுரி,

வடஆற்காடு அம்பேத்கார், மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

அ) வெக்கை நோய் மாவட்ட குழுக்கள்

இக்குழுக்கள் மாவட்டங்களில் உள்ள பசு, எருமை இனங்கள் மற்றும் ஆடுகளுக்கு முறையாக வெக்கை நோய் தடுப்பூசி போட்டு வருகின்றன. இம்முறையினால் இவைகளின் நோய்த் தடுப்பு சக்தி அதிகரிக்கப்படுகிறது. இப்பணி தக்க முறையில் திட்டமிடப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் உள்ள கால்நடைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தடுப்பூசி போட ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

ஆ) வெக்கை நோய் கண்காணிப்புக்குழுக்கள்

மாநில எல்லைக்குள் 15 கி.மீ. உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குக் காலமுறைப்படி தடுப்பூசி போடுவதன் மூலம் மாநில எல்லைப்பகுதிகளில் நோயற்ற நிலையை உருவாக்கவும் வெளியில் இருந்து வரும் கால்நடைகள் மூலம் நோய் தோன்றாமல் இருக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

இ) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள்

மாநில எல்லையில் உள்ள சோதனைக் சாவடிகளில் மாநில எல்லைக்குள் வரும் மற்றும் வெளியில் செல்லும் கால்நடைகளை வெக்கை நோயிலிருந்து தடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

1993-94 ஆம் ஆண்டில் **31.1.94** வரை வெக்கைநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் **52.33** இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

உ) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் அமைந்துள்ள முன்னோடி நிலையமான கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு தேவையான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளையும் தயாரித்தும் விநியோகித்தும் வருகிறது.

இந்நிலையத்தின் செயல்முறைகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

அ) கால்நடை மற்றும் கோழியின தடுப்பு மருந்துகள், உயிர் மருந்துகள், ஊநீர் மற்றும் மருந்துகள் தயாரித்தலும், விநியோகித்தலும்.

ஆ) கால்நடை நோய் புலனாய்வு மற்றும் நோய் கண்டறிதலும் ஆகும். இந்நிலையம் 8 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும் 11 வைரஸ் தடுப்பு மருந்துகளும் நோய் கண்டறியும் சாதனங்களையும், மருந்து வகைகளையும் ஊநீர்களையும் தயாரித்து வருகிறது. அவை பின் வருமாறு.

நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்

1) தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆலம் பிர்சிபிடேட்)

2) தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆயில் அட்ஜுவண்ட்)

3) மாட்டின நினநீர் சுரப்பி நோய் தடுப்பு மருந்து

4) கோழியின காலரா தடுப்பு மருந்து

5) சப்பை நோய் தடுப்பு மருந்து

6) துள்ளுமாரி நோய் தடுப்பு மருந்து

7) அடைப்பான் ஸ்போர் தடுப்பு மருந்து

8) கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து

வைரஸ் நோய் தடுப்பு மருந்துகள்

1) திசுவளர் வெக்கை நோய் தடுப்புமருந்து

2) ஆட்டம்மை தடுப்பு மருந்து

3) இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (கே.)

4) இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (லசோட்டா)

5) இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (எப்)

6) திசு வளர் கோழியின அம்மை நோய் தடுப்பு மருந்து

7) வாத்துக்கழிச்சல் நோய் தடுப்பு மருந்து

8) மேரக்ஸ் நோய் தடுப்பு மருந்து

9) வெறி நாய் கடி நோய் தடுப்பு மருந்து

10) நாய் டிஸ்டெம்பர் நோய் தடுப்பு மருந்து

11) கோமாரி நோய் தடுப்பு மருந்து (மோனோ வெலண்ட்)

இந்நிலையம் கோழிகளை பாதுகாக்க (கம்போரா) செயலிழக்கப்பட்ட முறையில் தயாரித்த தடுப்பு மருந்தை வெற்றிகரமாக தயாரித்துள்ளது. இத்தடுப்பு மருந்து கால்நடைகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

களப்பணிக்கு விநியோகிக்கும் முன் தடுப்பு மருந்துகளின் தரத்தை பரிசோதனை செய்ய சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவு ஒன்று இந்நிலையத்தில் இயங்கி வருகிறது.

துறையின் நோய் புலனாய்வுப் பிரிவு களப்பணியாளர்களுக்கு கால்நடை மற்றும் கோழியினங்களின் நோய் கண்டறிந்து உறுதி செய்வதற்கு ஏற்றவாறு ஆதார ஆய்வுக்கூடமாக ஒன்று இந்நிலையத்தில் செயல்பட்டு வருகிறது.

வெறி நாய்கடி நோய் தடுப்பு மருந்து டிஸ்டெம்பர் மற்றும் வாத்துக்கழிச்சல் தடுப்பு மருந்துகளை தவிர மற்றவை களப்பணியாளர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. கோழியின நோய் தடுப்பு மருந்துகள் தனியார் கோழி வளர்பாளர்களுக்கு விலைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

கோழியின நோய் தடுப்பு மருந்துகள் நாமக்கல், ஈரோடு, ஆண்டலூர் (சேலம் மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விற்பனை கூடங்களில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ஊ). நோயற்ற பகுதித் திட்டம்

கால்நடை மற்றும் கால்நடை பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென் பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கால்நடைகளை பெரிதும் தாக்கக்கூடிய நோய்களான வெக்கை மற்றும் கோமாரி நோய் தாக்கா வண்ணம் நோயற்ற பகுதித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு எல்லாவித நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதும் மற்றும் தேசீய அளவில் முக்கியத்துவம் தரக்கூடிய

நோய்களான வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய்களிலிருந்து முழு அளவு பாதுகாப்பும் அளிப்பதுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்

இத்திட்டதின்படி திட்டப்பகுதியில் மற்றும் அதனைச்சார்ந்த திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் வரையிலான பகுதியில் முறையான தீவிர நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோர பகுதியில் ஒரு நோய்த்தடுப்புச் சாவடி அமைத்து திட்டப்பகுதியில் நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டம் துவக்கப்பட்ட 1984-85ம் ஆண்டு முதற்கொண்டு இதுநாள் வரை எவ்விதமான நோய்க்கிளர்ச்சியும், ஏற்படவில்லை.

(எ). கால்நடை நோய் கடுங்கண்காணிப்புத்திட்டம்

கால்நடை நோய் கடுங்கண்காணிப்புத்திட்டம் 1983-84 முதற்கொண்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது, பால், இறைச்சி, முட்டை உற்பத்தி மூலம் விவசாயிகளின் வருமான பெருக்கை பாதிக்கக்கூடிய புதுவிதமான நோய்களிலிருந்து, கால்நடை மற்றும் கோழி இனங்களைகாப்பாற்ற இத்திட்டத்தில் முன்னுரிமைதரப்படுகிறது. இந்நோய் கடுங்கண்காணிப்பின் பலனாக நுண்தொற்றுநோய் புலனாய்வு மதிப்பீடு செய்து, குறிப்பிட்ட நோய்கள் பற்றிய திறனாய்வு மேற்கொள்ளப்படுகிறது. கால்நடைகளின் நோய்களைப்பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிப்பின் தொகுப்பு மூலம், ஆராய்ந்து மாநில அளவிலான கால்நடை நோய்களைப்பற்றிய நிலைமையை அறிந்து கொள்ள முடிகிறது. நோய்கிளாச்சி வரைப்படங்கள் வரையப்பட்டு, நோய்கள், எந்த எந்த காலங்களில் கால்நடைகளை எந்தெந்த பகுதிகளில் தாக்கக்கூடும் என்பதை முன்கூட்டியே அறிந்து, துறை அலுவலர்களால், தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டும் தடுப்பூசி போடப்பட்டும், நோய்களால் கால்நடைகள் தாக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.

அ) இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு ஏற்படும் தொற்று நோய்களைக் கண்காணித்து, நோய் பற்றிய விவரங்களை சேகரித்து, அவற்றை ஆராய்தல்.

ஆ) கால்நடைகளில் வயது, பாலினம், மற்றும் இனம், இடத்தின் சுற்றுப்புற சூழல் மற்றும் சீதோஷ்ணநிலை முதலியவைகளையும், கருத்தில் கொண்டு கால்நடைகளின் இறப்பு பற்றிய விவரங்களை மதிப்பீடு செய்தல்.

இ) பலதரப்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாகவும், இயற்கை சீற்றத்தின் காரணமாக ஏற்படக்கூடிய தொற்று நோய் வகையைப்பற்றியும் ஆராய்தல்.

ஈ) ஒருபகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு பரவக்கூடிய தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தியும், நம்மாநிலத்திலிருந்து வெளிமாநிலத்திற்கும், வெளி மாநிலத்திலிருந்து, நம்மாநிலத்திற்கும் கால்நடை நடமாட்ட வழிகளை வரை படத்தில் குறித்தல்.

உ) தாதுஉப்பு சத்துக்கள் குறைவான இடங்களை கண்டறிதல், மற்றும் தூய்மை மாசுபடுத்தலினாலும், மற்றும் இதர காரணங்களினாலும், கால்நடைகளுக்கு விஷத்தன்மை ஏற்படும் பகுதிகளை கண்டறிதல்.

ஊ) கால்நடை இனப்பெருக்கத்திற்கு தடையாக உள்ள கூறுகளையும், பெருமளவு கன்று மடிவதற்கும் உண்டான, காரணங்களையும் ஆராய்தல்.

எ) பல்வகை நோய்களினால் உண்டாகும் பொருளாதார இழப்பையும், மற்றும் நோய் தடுப்பு முறைகளினால் உண்டாகும் பலன்களை கணக்கிடுதல்.

ஏ) மேற்கூறப்பட்ட விவரங்களை சேகரித்து, அவைகளை ஆராய்ந்து பின்பு கடுங்கண்காணிப்பு குறித்து வரைப்படம் தயார் செய்தல்.

ஐ) களப்பணியாளர்களுக்கு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட நோய்களுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்வது பற்றி அறிவுரை வழங்குதல்.

(ஏ). வெறி நாய்க்கடி நோய்த்தடுப்புத் திட்டம்.

நாய்களில் வெறி நோய் ஏற்படாமல் தடுப்பதின் மூலம், அது மனிதர்களுக்கு பரவாமல் தடுக்க ஒரு வெறி நோய்த்தடுப்புத் திட்டம் கோயம்புத்தூர் மாநகரில் மத்திய அரசு நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டது. பின்பு இத்திட்டமானது, சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கு மத்திய அரசு நிதிஉதவியுடனும் பின்னர் திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய இடங்களுக்கு மாநில அரசு நிதியுதவியுடன் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் எல்லா வளர்ப்பு நாய்களுக்கும், முறையே வெறிநோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டது தவிரவும், உள்ளாட்சி நிறுவனங்களின் உதவியுடன், தெருநாய்கள் பிடிக்கப்பட்டு கருணை முறையில் அழிக்கப்படுகிறது.

வெறிநோய் தடுப்பு திட்ட பணிகளின் முக்கிய நோக்கங்கள்

அ) கட்டாய நோய்த்தடுப்பு முறையைக்கையாள வீடுவீடாக சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநோய்த்தடுப்பு ஊசிப்பணி மேற் கொள்ள ரூபாய் 25/- வசூலிக்கப்படுகிறது.

ஆ) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

இ) பொதுமக்களிடையே இந்நோய் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில், துண்டு பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் செய்தல் மற்றும் நாய் கண்காட்சி நடத்துதல்.

ஈ) உள்ளாட்சி நிறுவனங்களின் உதவியுடன், தெருவில் திரியும் நாய்களை பிடித்து அவைகளுக்கு அதிக துன்பத்தை கொடுக்காது அழிக்கப்படுதல்.

உ) வெறிநாய்க்கடி நோய்ப்பற்றி நிகழ்வை சுகாதார துறையினர் மூலம் விவரங்களை கண்டறிதல்.

(ஐ). கோமாரி நோய் தடுப்பூசி பணி.

கால்நடை பராமரிப்புத்துறையினரால், ஏழைவிவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் கோமாரி நோய் தடுப்பூசித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 50 விழுக்காடு விலையை மாநில மற்றும் மத்திய அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றது.

1993-94ல் (31.1.94) வரை, 3.42 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டது இதைதவிர தேசிய பால்வள கழகமும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கோமாரி நோய்த் தடுப்பு திட்டம் ஒன்றினை செயல்படுத்தி வருகிறது.

15. மக்கள் தொடர்பு முகாம்.

கால்நடை உரிமையாளர்கள் தற்போதைய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ரீதியில் கால்நடை மற்றும் கோழிகளை பேணி காக்க இத்துறை மக்கள் தொடர்பு முகாம்களை கிராமங்களில் நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இம்முகாம்களில், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளுதல், பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணி செய்தல், தடுப்பூசி பணி மேற் கொள்ளுதல், இனவிருத்திக்கு ஒவ்வாத காளைகளை ஆண்மை நீக்கம் செய்தல் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம்

செய்தல், போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. விரிவாக்கப்பணியான, யூரியாவைக் கொண்டு வைக்கோலின் தன்மையை, சத்துமிக்கதாக்கும், செயல்விளக்கப்பணி, பசுந்தீவன உற்பத்தி மற்றும் மரக்கன்றுகள் உற்பத்தி பற்றி நவீன கால்நடைப் பராமரிப்பு பணிகள் பற்றிய திரைப்படங்களை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திரையிட்டு காண்பிக்கப்படுகிறது 1993-94 (31-1-94 முடிய) 14773 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

16. செம்மறி ஆடுகளுக்கு தீவிர நலப்பாதுகாப்புப்பணி.

மாடுகளில் இறைச்சி உற்பத்தித் திறன் அதனுடைய உடல்நலத்தை பொருத்தே அமைந்துள்ளது. ஆடுகளின் உடல் நலம் வயிற்றில்உள்ள குடற்புழுக்களினால், பாதிப்பு ஏற்பட்டு அவைகளின் உடல் எடையும் குறைந்து, ஏழை விவசாயிகளின் வருமானம் வெகுவாக குறைந்துள்ளது. தவிரவும் அதன் பொருட்டு ஆட்டுக்குட்டிகளின் இறப்பு விழுக்காடும் அதிகமாகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு ஏழை விவசாயிகளின் ஆடுகளுக்கு முறையாக குறிப்பிட்டக் காலக்கெடுவில் குடற்புழு நீக்கமும் உடல்நலம் பேணுதலும் இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது. இம்முறைகளினால் ஏழைவிவசாயிகளின் வருமானம் அதிகரிக்கிறது. இத்திட்டம் 1993-94ஆம் ஆண்டு ரூபாய் 50 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

17. கால்நடை பராமரிப்புத்துறை நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் அகில இந்திய கால்நடை மற்றும் கோழியின கண் காட்சி 93

1892ம் ஆண்டில் எளிய முறையில் கால்நடை துறையாக தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை 1993ம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியது. இத்துடன் இணைந்து 21-9-93 முதல் 27-9-93 முடிய அகில இந்திய கால்நடை மற்றும் கோழியின கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டது. இந்த விழாவினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவர், மற்றும் மாண்புமிகு பால் மற்றும் பால்வளத்துறை அமைச்சர், குஜராத் மற்றும் உறரியானா மாநில மாண்புமிகு கால்நடை பராமரிப்பத்துறை அமைச்சர்கள், இந்திய அரசு

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் தமிழ்நாடு மற்றும் பிற மாநில கால்நடை வளர்ப்போர் பங்கேற்ற பால்வளம், ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு தொடர்பான கருத்தரங்குகள் நடைபெற்றன. நாய் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. துறை சார்ந்த சான்றோர் தினமும், மாணவர் தினமும் கொண்டாடப்பட்டன. இந்தியா முழுவதிலும் இருந்து தரத்தில் சிறந்த கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் இந்த கண்காட்சியில் பங்கேற்று அவற்றில் சிறந்தவைகள் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் தயாரித்த ஐ.பி.டி. நோய்க்கு எதிரான புதிய தடுப்பூசி மருந்தினை வெளியிட்டார்கள் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட அசில் இனக் கோழிக்குஞ்சுகளையும், தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப் பண்ணையிலிருந்து சேகரிக்கப்பட்ட கரு மாற்றல் தொழில் நுணுக்கத்திற்கான உட்கருக்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

18. 1994-95-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்.

1. 1994-95-ஆம் ஆண்டில் ரூ.4.83 இலட்சம் செலவில் கோவை, கால்நடை பெருமருத்துவமனையினை பல்முக மருத்துவமனையாக தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ரூ.2.51 இலட்சம் செலவில் 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட உள்ளது.

3. தற்போது சைதாப்பேட்டையில் இயங்கிவரும் நாய்கள் இனப் பெருக்க பிரிவில் நாட்டினங்களான கோம்பை, இராஜபாளையம் போன்ற இனங்கள் வளர்க்கப்படுகின்றன. 1994-95ல் லப்பரடார், கூலி மற்றும் டாபர்மேன் இன நாய்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டு, ரூபாய் 2.61 இலட்சம் செலவிடப்பட உள்ளது. இந்த இனங்களுக்கு பொதுமக்களிடையே பெரும் தேவை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில் ஓர் பயிற்சி மையம் அமைத்து கால்நடை வளர்ப்போர்க்கு தொழில்

நுணுக்க முறைகளையும், அறிவுரைகளையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ரூ.6 லட்சமாகும்.

5. இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தடுப்பூசி மருந்து ஆய்வுக்கு என்றும் தரக்கட்டுப்பாட்டுக்கு என்றும் ஒரு பகுதி மட்டுமே உள்ளது. தடுப்பூசி மருந்து தரக்கட்டுப்பாட்டு செயல்திறனை அதிகரிக்க பாக்டீரியா தடுப்பு மருந்துகளுக்கும் வைரஸ் தடுப்பு மருந்துகளுக்கும் தனித்தனியாக ஆய்வு மேற்கொள்ளுமாறு தனி பகுதி ஒன்று ரூபாய் 0.23 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது.

6. தற்போது இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள தண்ணீர் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் அதிக அளவு தண்ணீர் வீணாக்கப்படுகிறது. எனவே, ரூ. 2 லட்சம் செலவில் புதிய குழாய்கள் போடப்பட உள்ளன.

7. இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள மருந்துகள் பிரிவில் மருந்துகள் குளிர்ச்சியான மற்றும் தூசிகள் அற்ற சூழ்நிலையில் தயாரிக்கப்படுதல் அவசியம் இதற்காக ரூ.4.00 லட்சங்கள் செலவில் ஊசி மருந்துகள் தயாரிப்பு பிரிவு குளிர்சாதன வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

8. தடுப்பூசி மருந்துகள் தயாரிக்க நோயற்ற கோழிகளின் முட்டைகள் தேவைப்படுகின்றன. தற்போது இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் நோயற்ற கோழிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தடுப்பூசி மருந்து தயாரிக்க தேவையான கருத்தரித்த முட்டைகள் கிடைப்பதில்லை. இதற்காக ரூபாய் 2.00 லட்சங்கள் செலவில் மீதமுள்ள நோயற்ற கோழிகளை வளர்க்க கூடுதல் கொட்டகைகள் அமைக்கப்படும்.

9. இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள "ஈ" பிரிவு குடியிருப்புகள் ரூ. 0.80 லட்சம் செலவில் பழுதுபார்க்கப்படும்.

10. இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் நிர்வாகப் பிரிவு கட்டிடத்தில் மின் கம்பிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் உடனடியாக புதுப்பிக்க வேண்டி உள்ளது. அதனால், ரூ.0.50 லட்சம் செலவில் மின் கம்பிகள் மற்றும் இணைப்புகளை புதுப்பிக்கவும், தற்போதுள்ள சாதாரண மின் குமிழ்களுக்கு பதிலாக குழல் விளக்குகள் அமைக்கப்பட உள்ளது.

11. தடுப்பூசி மருந்துகளை ஆய்வு செய்யவும், நோய்களை கண்டறியும் ஆய்வக பிராணிகள் தேவைப்படுகின்றது. தற்போது இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் ஆய்வக பிராணிகள் வளர்க்க இருப்பிட பற்றாக்குறை உள்ளதால் தடுப்பூசி உற்பத்தி மற்றும் நோய் புலனாய்வு பணிகள் தாமதப்படுகின்றன.

இதற்காக ரூ.5.65 லட்சம் செலவில் ஆய்வக பிராணிகளுக்கு கூடுதலான இருப்பிட வசதி அமைத்து ஆய்வக பிரிவு வலுப்படுத்தப்பட உள்ளது.

12. கால்நடை பராமரிப்புத்துறை, ஏழை விவசாயிகளின் 46000 கலப்பின கிடேரி கன்றுகளை தத்து எடுத்து அந்த விவசாயிகள் அக்கிடேரி கன்றுகளை நல்ல தரம் வாய்ந்த பசுக்களாக வளர்க்க உதவி புரிய உத்தேசித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்.

1) தமிழ் நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் 1973 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 12-ஆம் நாள் மாநிலத்தில் கோழியின வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு ரூ.100.00 இலட்சங்கள் முதலீட்டில் ஒரு அரசுத்துறை நிறுவனமாக துவக்கப்பட்டது.

1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 200.00 இலட்சங்களுக்கு உயர்த்தப்பட்டது. தற்போது இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.109.81 இலட்சங்களாகும்

2) டாப்கோவின் முக்கிய நோக்கங்கள் வருமாறு.

1. கோழியினப் பொருட்கள், கோழித்தீவனம், பண்ணை உபகரணங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், சேர்த்தல் மற்றும் விற்பனை செய்தல்.

2. மேற்சொன்னவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அறிவுரைகள் மற்றும் உதவிகள் கோழிப்பண்ணையாளர்களுக்கு வழங்குதல்.

3. கோழியினப் பொருட்களின் உற்பத்தி, விற்பனை, இறக்குமதி ஏற்றுமதி ஆகியவற்றை முறைப்படுத்துதல்.

4. முட்டைக் கோழிக் குஞ்சுகள், கறிக்கோழிக் குஞ்சுகள், காடைக்குஞ்சுகள், தரமான கோழித்தீவனம் ஆகியவற்றை உற்பத்தி செய்வது, முட்டைகள், காடை முட்டைகள், கோழிக்குஞ்சுகள், உயிர்க்கோழிகள், கோழியிறைச்சி, காடைக்குஞ்சுகள் ஆகியவற்றை விற்பனை செய்வது ஆகிய நடவடிக்கைகளில் டாப்கோ ஈடுபட்டுவருகிறது.

5. டாப்கோவின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. இந்நிறுவனத்தின் குஞ்சு பொரிப்பகங்கள், அரசூர், கப்பலூர், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும், காடைக்குஞ்சு பொரிப்பகங்கள் செங்கல்பட்டு மற்றும் தெக்குப் பாளையம் ஆகிய இடங்களிலும் தீவனக் கலவை நிலையங்கள் நந்தனம், கப்பலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களிலும், விற்பனை நிலையங்கள் சென்னை, செங்கல்பட்டு, வேலூர், சேலம் நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

அ) டாப்கோவின் குஞ்சு பொரிப்பகங்கள் கோயம்புத்தூர் மாவட்ட- த்தில் உள்ள அரசூரிலும், மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கொட்டப்பட்டியிலும் அமைந்துள்ளன. இக்குஞ்சு பொரிப்பகங்கள் வணிகத்தன்மையிலான வீரிய இனக்குஞ்சுகள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றன. வணிகத்தன்மையிலான வீரிய இனக்குஞ்சுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இம்மாநிலத்தில் கோழிப்பண்ணைகளின் வளர்ச்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது. டாப்கோவின் முட்டையிடும் கோழிக்குஞ்சுகளுக்கு நல்ல தேவையிருக்கிறது. டாப்கோவும் இத்தேவையை பூர்த்தி செய்ய முயற்சித்து வருகிறது.

ஆ) மேற்குத் தொடர்ச்சி மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக் திட்டத்தின்கீழ் காமராஜர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையத்தில் புதியதாக ரூ.30.95 இலட்சங்கள் முதலீட்டில் (50% பங்கு மூலதனம் 50% கடன்) ஒரு குஞ்சு பொரிப்பகம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பொரிப்பகம் காமராஜர் மாவட்டத்திலுள்ள அனுப்பன்குளம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. தற்போது தாய்க்கோழிகள் வாங்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. மிக விரைவில் இப்பொரிப்பகம் செயல்படத்துவங்கும்.

இ) மேற்குத் தொடாச்சி மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.32.45 இலட்சங்கள் முதலீட்டில் (50% பங்கு மூலதனம் 50% கடன்) மற்றொரு குஞ்சு பொரிப்பகம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டிட வேலைகள் விரைவில் தொடங்கப்படஉள்ளது.

ஈ) ஜப்பானியக் காடைகள் விற்பனைக்கு நல்ல வாய்ப்புள்ளதால் செங்கல்பட்டில் ஒரு காடைக்குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட்டு 1989-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் இயங்கிவருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தெக்குப்பாளையத்தில் (கோயம்புத்தூர் மாவட்டம்) மற்றொரு காடைக்குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட்டு 1991-ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் இயங்கிவருகிறது.

5. குஞ்சு பொரிப்பகங்களின் செயலாக்கம்.

வருடம்	குறியீடு எண்கள் இலட்சங்களில்	உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகள் எண்கள் இலட்சங்களில்		இலாபம்/நட்டம் ரூ.இலட்சங்களில்
1991-92	35.00	26.27	(+)	7.33
1992-93	35.00	22.63	(-)	10.66
1993-94 (ஜனவரி 94 வரை)	22.50	20.74	(-)	8.88
ஜப்பானிய காடைக்குஞ்சுகள்				
1991-92	1.75	1.02	(-)	3.52
1992-93	2.00	0.66	(-)	6.17
1993-94 (ஜனவரி 94 வரை)	1.41	0.60	(-)	4.99

குஞ்சுபொரிப்பகங்கள் அக்டோபர் 93 வரை இலாபத்தில் இயங்கி வந்துள்ளன (ரூ.0.68 இலட்சம்) நவம்பர் 93 முதல் ஜனவரி 94 வரை முட்டை உற்பத்தி மற்றும் குஞ்சு பொரிக்கும் தன்மை ஆகியவற்றில் திடீரென ஏற்பட்ட குறைவால், குஞ்சு பொரித்தல் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு நட்டம் ஏற்பட ஏதுவாகியது. தட்ப வெப்ப சூழ்நிலையினால் தீவனத்தில் அப்ளாடாக்ஸின் ஏற்பட்டதால் முட்டை உற்பத்தி மற்றும் குஞ்சு பொரிக்கும் தன்மை குறைய நேரிட்டது.

6. டாப்கோவின் தீவனக்கலவை நிலையங்கள் சென்னையிலுள்ள நந்தனத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூரிலும் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரிலும் அமைந்துள்ளன. மத்திய அரசு செயல்படுத்தும் திட்டத்தின்கீழ் 8 மணி நேரம் கொண்ட ஒரு ஷிப்டுக்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் வகையில் காட்டுபாக்கத்தில் ரூ.21.00 இலட்சங்கள் முதலீட்டில் (50% இந்திய அரசு 50% டாப்கோ) ஒரு நவீன தீவன கலவை நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப்பணிகள் நடந்து வருகின்றன. இக்கலவை நிலையத்திற்குத் தேவையான அலுவலகக் கட்டிடம், சோதனைச்சாலை,

சேமிப்புக்கிடங்கு ஆகியவை கட்டுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட உள்ளது.

தீவனக் கலவை நிலையங்களின் செயல்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

வருடம்	குறியீடு (மெ.ட)	உற்பத்தி (மெ.ட)	இலாபம்/நட்டம் (ரூ.இலட்சங்களில்)
1991-92	6000	4293	(+) 4.35
1992-93	6200	3474	(+) 11.18
1993-94 (ஜனவரி 94 வரை)	5650	2045	(−) 14.31

தீவனத்திற்கு நிரந்தரமான தேவை இல்லாததால் மாதம் 500 மெ.டன் உற்பத்தி திறன் கொண்ட தீவனக் கலவை நிலையங்கள் மாதம் சுமார் 175 மெ.டன் முதல் 200 மெ.டன் வரைதான் உற்பத்தி செய்கின்றன. உற்பத்திக் குறியீட்டில் உண்மையான உற்பத்தி 35% முதல் 40% ஆகும். தீவனக்கலவை நிலையங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாததால் நட்டத்திற்கு வழி வகுக்கின்றன.

தரமான தாது உப்பு உற்பத்தி செய்வதற்காக டாப்கோ ரூ.1.78 இலட்சங்கள் தனது சொந்த முதலீடாகக் கொண்டு சேசன் சாவடியில் ஒரு தாது உப்புக் கலவை நிலையம் அமைத்துள்ளது. இந்நிலையம் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தனது உற்பத்தியை துவக்கியுள்ளது. இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் தாது உப்புகள் அனைத்தும் டாப்கோவின் கோழித்தீவனம் தயார் செய்வதற்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையத்தின் செயல்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

வருடம்	குறியீடு (மெ.ட)	உற்பத்தி (மெ.ட)	இலாபம்/நட்டம் (ரூ.இலட்சங்கள்)
1991-92	240	113	(-) 0.89
1992-93	240	91	(-) 1.07
1993-94 (ஜனவரி 94 வரை)	125	44	(-) 0.16

1994 *ஏப்ரல்* 20]

8. டாப்கோ தனது விற்பனை நிலையங்களை சென்னை, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், மதுரை நாமக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், உடல் ஊனமுற்றோர் மற்றும் வேலையில்லாதோர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தவும், சில்லறை விற்பனை மையங்களை ஏற்படுத்த விற்பனை முகமைகளை வழங்கியுள்ளது. இதனால் 96 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இவ்விற்பனை நிலையங்கள் பண்ணையாளர்களுக்கு கறிக்கோழிக்குஞ்சுகள், முட்டையிடும் கோழிக்குஞ்சுகள், கோழித்தீவனம், காடைக்குஞ்சுகள் ஆகியவற்றை வழங்குவதுடன், நுகர்வோருக்கு முட்டைகள், இறைச்சி, உயிர்க்கோழிகள், காடைமுட்டைகள் மற்றும் காடை இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்தும் வருகிறது. விற்பனை நிலையங்களின் செயல்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

	வருடம்					
	1991-92		1992-93		1993-94 ஜனவரி 94 வரை	
	குறியீடு	விற்பனை	குறியீடு	விற்பனை	குறியீடு	விற்பனை
1. முட்டைகள் (எண்கள் இலட்சங்களில்)	1046	687	234	180	175	120
2. கோழிகள் (எண்கள் இலட்சங்களில்)	1.10	1.45	1.49	1.94	1.41	0.99
3. கோழிக்குஞ்சுகள் (எண்கள் இலட்சங்களில்)	31.94	14.82	24.50	14.42	15.70	12.39
4. இறைச்சி (மெ.ட.)	119	113	108	84	58	73
5. தீவனம் (மெ.ட.)	2580	1901	2880	1231	2267	429
6. இலாபம், நட்டம் (ரூ.இலட்சங்களில்)	(-)1.11		(-)14.01		(-)6.65	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சத்துணவு மையங்களுக்கு முட்டை வழங்குவது 1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டதால் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தில் முட்டை விற்பனை வெகுவாகக் குறைந்து விட்டது.

9. இக்குறைவினை சரிக்கட்ட முகவர்கள் மூலம் அயல் நாடுகளுக்கு முட்டைகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முகவர்கள் மூலமாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

வ.எண்	நாடுகளின் பெயர்கள்	மாதம் மற்றும் வருடம்	ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகள் (எண்கள்)	தொகை ரூ. பை.
1.	பகரின்	மே 92	287280	11491.20
2.	துாவா	ஜுலை 92	287280	11491.20
3.	துபாய்	டிசம்பர் 91	574560	22982.40
		ஜனவரி 92	574560	22982.40
		பிப்ரவரி 92	574560	22982.40
		ஏப்ரல் 92	345600	13824.00
		ஜுன் 92	287280	11491.20
4.	குவைத்	மார்ச் 92	287280	11491.20
			32,184.00	1,28,736.00

இது டாப்கோவின் ஏற்றுமதி விற்பனை நிலையங்களின் சரித்திரத்தில் முதல் சாதனையாகும்

10. தரமான கோழித்தீவனத்தை தயாரிக்கும் பொருட்டு, தீவன மூலப் பொருட்களின் தரத்தை சோதனை செய்தவதற்காக டாப்கோ தனது தீவன ஆய்வுக் கூடங்களை நந்தனம் (சென்னை) மற்றும் திருப்பூர் (கோவை மாவட்டம்) ஆகிய மற்ற இடங்களில் நிறுவியுள்ளது.

11. மேற்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தின் கீழ் 1989 முதல் 1991 வரை கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ.எண்	திட்டத்தின் பெயர்	அனுமதி அளிக்கப்பட்ட தொகை ரூ.(இலட்சங்களில்)
1.	காடைக்குஞ்சு பொரிப்பகம் தெக்குப் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் (அரசு ஆணை எண் 84 பி & டி, நாள் 27.5.87)	3.00
2.	கோழி இறைச்சிக்கூடம் தெக்குபாளயம், கோயம்புத்தூர் மாவட்டம் (அரசு ஆணை எண்.58 பி & டி, நாள் 2.5.88)	4.50
3.	அரசூரிலுள்ள குஞ்சு பொரிப்பகத்தை விரிவாக்குதல் (கோயம்புத்தூர் மாவட்டம்) (அரசு ஆணை எண். 134 பி & டி, நாள் 12.7.89)	18.95
4.	அனுப்பன்குளம் (காமராஜர் மாவட்டம்) குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் (அரசு ஆணை எண்.240, பி & டி, நாள் 28.12.89)	30.95
5.	கன்னியாகுமரி மாவட்டத்தில் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் (அரசு ஆணை எண் 105, பி & டி, நாள் 1.8.90)	32.45

12. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 1992-93-ம் ஆண்டு காடை வளர்ப்பில் பண்ணையாளர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக ஆண்டுக்கு ரூ.60,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.1,000 உதவித் தொகை என்ற விகிதத்தில் 60 பண்ணையாளர்கள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பயன் பெறுவர்.

டாப்கோவின் காடைக்குஞ்சு பொரிப்பகங்களான செங்கற்பட்டு மற்றும் தெக்குப்பாளையம் ஆகிய இடங்களில் 1992ம் ஆண்டு ஜுலை முதல் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

13. அரசு தனது ஆணை எண்.554 (கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை) நாள் 22.11.1989-ன் படி தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தை தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்துடன் இணைக்கும்படி உத்தரவிட்டது. நிறுவனச் சட்டங்களின் நடைமுறைக்குட்பட்டு மத்திய அரசு தனது ஆணை

எண். 24.6.91 சிஎல்.3, நாள் 18.11.93ல் இணைப்பு அறிக்கையை ஏற்று 1.4.92 முதல் பொதுவான கணக்குகள் வைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பெரம்பூர், சைதாப்பேட்டை மற்றும் வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் இறைச்சிக் கூடங்களை குத்தகை அடிப்படையில் இந்நிறுவனமே ஏற்று நடத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கூறிய இறைச்சிக் கூடங்களில் வெட்டப்பட்ட ஆடுகள் மற்றும் மாடுகளின் எண்ணிக்கை, கிடைத்த வருவாய் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	ஆடுகளின் எண்ணிக்கை	மாடுகளின் எண்ணிக்கை	வருவாய் (ரூ.இலட்சங்களில்)	இலாபம்/நட்டம் (ரூ.இலட்சங்களில்)
1991-92	6,36,159	45,104	29.065	(-) 3.11
1992-93	8,12,629	51,827	29.32	(+) 0.41
1993-94 -(ஜனவரி 94 வரை)	7,52,534	47,640	22.30	-

அரசு ஆணை எண்.376 (கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை) நாள் 19.11.91-ன்படி, கைவிடப்பட்ட கொடுவள்ளித் திட்டத்திற்கு செலவான தொகை மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.102.73 இலட்சங்களும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாகியுள்ளது.

14. மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் தற்சமயம் பெரம்பூரில் இயங்கி வரும் இறைச்சி கூடத்தினை ரூ.560/இலட்சங்கள் மதிப்பீட்டில் நவீனப்படுத்த இந்நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது. இது குறித்த திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

15. இக்கழகத்தின் செயல்பாட்டினை நோக்கும்போது அது மிகவும் நலிந்த நிலையில் காணப்பட்டு முன்னேற்றம் அடையாத நிலையில் உள்ளது. அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகைக்கு உண்டான வட்டியைக்கூட கழகத்தால் செலுத்த இயலவில்லை. தலைமைச் செயலாளர் தலைமையில் தோற்றுவிக்கப்பட்ட பொது நிறுவன செயலாளர்களின் குழு மேற்படி கழகத்தின்

செயல்முறையை தீவிர ஆய்வு செய்ததில் டாப்கோ நிறுவனம் உடனடியாக மூடப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. மேலும் தனியார் நிறுவனங்கள் மூலம் மிகப் பெரிய அளவில் கோழி இன அபிவிருத்தி திட்டங்கள் செயல்பட்டு வருவதால் டாப்கோ நிறுவனத்தை மூடலாமா என்று அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

[1994 ஏப்ரல் 20

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்

தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவத்திற்காக 20.9.89 ஆம் நாளன்று உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கீழ்கண்ட செயல்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவம். விலங்கறிவியல் மற்றும் மீன்வளத்திலுள்ள பல்வேறு கிளைகளில் சிறந்த கல்வியை அளித்திடுவதும்,

கால்நடை மருத்துவம், விலங்கறிவியல் மற்றும் மீன்வளத்தில் ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் சத்துள்ள உணவை மக்களுக்கு அளிப்பதும் மற்றும் கால்நடை கோழிவளர்ப்பு மூலம் விவசாயிகள் வருமானத்தை பெருக்குவதன் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை பெருக்குவதாகும்.

மேற்கண்ட செயல்களை நிறைவேற்றுவதற்காக மூன்று கல்லூரிகள் முறையே சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல், மீன் வளக் கலலூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மற்றும் ஐந்து ஆராய்ச்சி நிலையங்கள் முறையே கோழியின ஆராய்ச்சி நிலையம், நந்தனம், கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், மேச்சேரி ஆட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி, ஆட்டின அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம், பல்கலைக்கழக பால் பண்ணை, மாதவரம் மற்றும் ஒரு கோழியின நோய்காண் நிலையம், நாமக்கல் மற்றும் பதினைந்து பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் முறையே கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி, புதுக்கோட்டை மதுரை, இராஜபாளயம், அருப்புக்கோட்டை, நாகர்கோயில், தர்மபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர், ஈரோடு(2 எண்கள்), தென் ஆற்காடு மற்றும் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் முறையே காஞ்சிபுரம், ஒசூர், குன்றக்குடியிலும் மற்றும் காட்டுப்பாக்கத்திலும் ஒரு வாத்தின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையமும், மீன் இன ஆராய்ச்சி நிலையங்கள் தஞ்சாவூர், பவானிசாகர், காட்டுப்பாக்கம் மற்றும் மாதவரத்திலும் உள்ளன. பால் பொருட்கள் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக தனியாக ஒரு நிலையம் சென்ற ஆண்டு 93-94ல் கொடுவள்ளி என்ற கிராமப்பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையமானது இறைச்சிக் கூடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டு பின் கைவிடப்பட்ட இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(அ) கல்வி

இப்பல்கலைகழகத்தைச் சேர்ந்த மூன்று கல்லூரிகளில் முறையே 2 பட்டப்படிப்புகளும் 28 பட்ட மேற்படிப்புகளும் 21 முனைவர் பட்டப் படிப்புகளும் அளிக்கப்படுகின்றன. இந்தக் கல்லூரிகளில் 1570 மாணவ/ மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். 600 க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்-பட்டோர்களில் 98 சதவீதம் மாணவ/மாணவியர்கள் உதவித் தொகையை தமிழ்நாடு அரசு, இந்திய அரசு மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து பெறுகின்றனர்.

கற்போர் சேர்க்கைப் பட்டியல்

படிப்பு	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி	நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி	தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி	மொத்தம்
பி விஎஸ்.சி	146	80	-	226
பிஎப்.எஸ்சி	-	-	25	25
எம்.விஎஸ்.சி	80	50	-	130
எம்.எப்.எஸ்.சி	-	-	15	15
பிஎச்.டி.(கால் நடைமருத்துவம்)	100	-	-	100
பிஎச்.டி.(மீன்வளம்)	-	-	10	10

புதிய பட்டப்படிப்புகள்

1993-94 ஆம் ஆண்டில் முதன் முதலாக நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக எட்டு துறைகளில் பட்டமேற்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உயிர்தொழில் நுட்பத்துறையில் பட்ட மேற்படிப்பும், மீன் வளப் பொருளாதாரத்தில் முனைவர் பட்டப் படிப்பும் முதன் முறையாக

தொடங்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உயிர்தொழில் நுட்பத்துறையில் பட்ட மேற்படிப்பும், முனைவர் பட்டப் படிப்பும் கால்நடை பொருளாதாரத்தில் முனைவர் பட்டப்படிப்பும் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த கல்லூரிகளில் 20% முதல் 25%வரை மகளிர் கல்வி பயில்கின்றனர். 309 க்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயில்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும் இந்த மாணவியர்களுக்கு தங்குவதற்கான விடுதி வசதி செய்துதர தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.10,00,000 அளித்துள்ளார்கள். இதன் மூலம் தற்பொழுது உள்ள சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி பெண்கள் விடுதியின் மேல் ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட உள்ளது.

(ஆ) ஆராய்ச்சி

இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு நிலைகளில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பல்வேறு ஆராய்ச்சி கழகங்கள், பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் மாநில திட்டக்குழு இதற்கான நிதியுதவியை அளிக்கின்றன. இந்த ஆராய்ச்சிகள் மூலம் உயர்தர கால்நடைகள், சத்துள்ள கால்நடைத் தீவனங்கள், தடுப்பூசிகள் போன்றவையும் மற்றும் கால்நடைகளில் கழிவுப்பொருட்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம் உபயோகமான பொருட்களும் கிடைக்கின்றன.

இந்தப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சிக்காக இந்திய அரசின் பல்வேறு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் துறைகள், ஆராய்ச்சி கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியை பெருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும் இவ்வாறு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சித் திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(I) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி: (ரூ.195.24 இலட்சம்)

இந்த ஆராய்ச்சிக் கழகம் ரூ.195.24 இலட்சத்திற்கு கீழ்குறிப்பிட்டுள்ள 7 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

1. கால்நடைகளுக்கு மரங்களின் இலைகளை பல்வேறு அளவுகளில் அளித்து ஒரு சரியான அளவை கண்டுபிடித்து அதை விவசாயிகளுக்கு அளிப்பது.

2. பன்றி இறைச்சியின் தரத்தை அதிலுள்ள நுண்ணுயிரிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் உயர்த்தி நுகர்வோரின் விருப்பத்திற்கும், நம்பிக்கைக்கும் உரிய முறையில் அளிப்பது.

3.உயர்தர மற்றும் அரிய செம்மறியாட்டு இனங்களை கண்டுபிடித்து அவைகளை பாதுகாத்து பெருக்குவது.

4. அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய பன்றிகளின் இறைச்சி உற்பத்தியை அவைகளுக்கு தகுந்த வீடு அமைப்பு, தீவனம் மற்றும் இனச்சேர்க்கையின் மூலம் பெருக்குவது.

5. இந்திய விஞ்ஞான அறிவியல் நிலையத் திட்டத்தின் கீழ் பண்ணையாளர்களுக்கு தொழில் நுட்பங்களை அளித்தல்.

6 மற்றும் 7. காங்கேயம் மாடுகள் மற்றும் தோடா இன எருமைகளை பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சி.

(II) உயிர் தொழில்நுட்பத்துறை, புதுதில்லி: (ரூ.142.14 இலட்சம்)

இந்த விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறை கீழ் குறிப்பிட்டுள்ள 6 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.142.14 இலட்சத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.

1. அறிவியல் கருத்துக்களை ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள அறிவியல் கருத்து வங்கிகள் மூலம் பல்வேறு இடங்களிலிருந்து பெறுவதற்கான தேசிய இணைப்பு மையம் அமைப்பதற்காக.

2. கோழிப் பண்ணையாளர்களை புதிய தொழில் நுட்பங்களை கையாளச் செய்வதன் மூலம் தீவன மாற்று விகிதத்தை 2:1:1 இருந்து 1:8:1- க்கு மாற்றி கறிக்கோழிகளின் 7 வார எடையை 1.8 கிலோவிலிருந்து 2.0 கிலோவாக உயர்த்துதல், பெண் கோழிப்பண்ணையாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க மற்றும் விற்பனைகளில் உதவி செய்தல்.

3. மாட்டின் அசையூண் வயிற்றில் உள்ள நுண்ணுயிரிகளை பற்றிய உயிர் பௌதிக மற்றும் உயிர் வேதியியல் ஆராய்ச்சிகளின் மூலம் நுண்ணுயிர்களுக்கும் அவைகளுக்கு அளிக்கப்படும் தீவனங்களுக்கும் இடையேயான செயல்களின் மாறுதலை வேறுபடும் தட்ப வெப்பநிலைகளுக்கு ஏற்ப அறிதல்.

4. கோழிகளில் இராணிக்கெட் மற்றும் சுவாச நோய்களை மோனோக்ளோனல் ஆன்டிபாடி மூலம் கண்டுபிடித்து அந்நோய்களுக்கு செல்தொடர் தடுப்பூசிகளை கண்டுபிடிப்பது.

5. சிங்கி இறால்களுக்கான திடமாக்கப்பட்ட உணவை பல்வேறு மீன் கழிவுகள் மற்றும் மற்ற புரத உணவுகளான இரத்த உணவு சோயா மீன் உணவிலிருந்து தயாரிப்பது.

6. நாய்களில் காணப்படும் நோய்களை கண்டறிய எதிர் காரணி நோய் கண்டறியும் சாதனம் தயாரித்தல்.

(III) தேசிய தரிசுநில அபிவிருத்தி வாரியம், புதுதில்லி: (ரூ.40.78 இலட்சம்)

இந்த வாரியம் 2 ஆராய்ச்சி திட்டங்களுக்கு ரூ.40.78 இலட்சத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் உழவர்களுக்கும் அலுவலர்களுக்கும் வேளாண் காடு வளர்ப்பு பயிர் மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை உற்பத்தியில் வேளாண்காடுகளின் பங்கு பற்றி முறையாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(IV) பெருங்கடல் வள மேம்பாட்டு நிறுவனம், புதுதில்லி: (ரூ.7.39 இலட்சம்)

இந்த நிறுவனம் ரூ.7.39 இலட்சத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் தெற்கு கடற்கரையோர பகுதிகளில் லாப்ஸ்டர் வளர்ப்பு பற்றி ஆராயப்படுகின்றது.

(V) இந்திய அரசு அணு எரி சக்தி துறை, பம்பாய்: (ரூ.2.56 இலட்சம்)

இந்த துறை ரூ.2.56 இலட்சத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் பரிசோதனைகளில் உபயோகப்படுத்துவதற்காக மாடுகளின் வளர்ச்சி உறார்மோன் மற்றும் புரொஜெஸ்டிரானுக்கு மோனோக்குளோனல் ஆன்டிபாடி தயாரிக்கப்படுகிறது.

(VI) தேசிய பால்வள அபிவிருத்தி வாரியம், ஆனந்த்: (ரூ.6.83 இலட்சம்)

இந்த வாரியம் பாலில் அப்லோடாக்சின் M1 நஞ்சை கண்டுபிடிப்பதற்காக ரூ.6.83 இலட்சத்தை இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவியாக அளிக்கின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

(VII) இந்திய அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம், புதுதில்லி: (ரூ.1.00 இலட்சம்)

இந்த துறை விவசாயிகளுக்காக தேசிய தட்ப வெட்பநிலை முன் அறிவிப்பு மையம் அமைப்பதற்காக வருடத்திற்கு ரூ.1 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(VIII) தேசிய பட்டு வாரியம், பெங்களூர்: (ரூ.8.91 இலட்சம்)

பட்டுப்பூச்சிக் கூடுகளை கோழிகளுக்குத் தீவனமாக அளிப்பதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிவதற்காக ரூ.8.91 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(IX) பல்கலைக் கழக மானியக் குழு, புதுதில்லி: (ரூ.0.12 இலட்சம்)

பால், குழந்தைகளுக்கான பால் உணவு மற்றும் தாய்ப் பாலில் ஈயத்தைக் கண்டறிவதற்காக ரூ.0.12 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(X) மாநில திட்டக் குழு, சென்னை: (ரூ.1.83 இலட்சம்)

மாநில திட்டக்குழுவிற்காக இப்பலகலைக்கழகம் கால்நடை வளர்ப்பு செயல் திட்டத்திற்காக ரூபாய் 1.83 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(XI) தமிழக அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகம், சென்னை: (ரூ.32.86 இலட்சம்)

தமிழ்நாடு அரசின் ஒரு அங்கமான இக் கழகம் கீழ்க் குறிப்பிட்டுள்ள 5 திட்டங்களுக்காக இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ.32.86 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது. இத்திட்டங்களாவன.

1) பின் அறுவடை தொழில் நுட்பத்தின் மூலம் பயிர் கழிவுகள் தரங்குறைந்த செல்லுலோஸை உபயோகப்படுத்தி தீவனப்பொருட்களை தயாரித்தல்.

2) சாதாகெண்டை உற்பத்தியில் நாளமில்லா சுரப்புகளைத் தவிர மற்ற காரணிகளின் பங்கு.

3) ஆடுகள் இனப்பெருக்கத்தில் செயல்பாட்டு ஆராய்ச்சி திட்டம்.

4) தகுந்த தயாரிப்பு மற்றும் பதப்படுத்தும் முறைகள் மூலம் விலைக் குறைந்த சத்துள்ள பால் தயாரிப்பு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5) மீன்களில் காணப்படும் எப்பிசோடீக் அல்சரேட்டிவ் சின்ட்ரோம் எனப்படும் நோயை ஏற்படுத்தும் காரணியைக் கண்டுபிடித்து இந்த நோயைக் கட்டுப்படுத்துவது.

(XII) கிராமத்து இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பிற்கு பயிற்சி அளிக்கும் திட்டம்: (ரூ.57.50 இலட்சம்)

இத்திட்டத்தின் கீழ் நவீன மீன் வளர்ப்பு முறை மற்றும் கடல் மீன் வளர்ப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மீனவ மகளிருக்கு மீன் பொருள்கள் தயாரிப்பில் பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் அவர்கள் ஓய்வு நேரத்தில் பணம் சம்பாதிப்பதற்கு வழி செய்யப்படுகின்றது. இத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.57.50 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(XIII) மீன் வளத்துறை, சென்னை: (ரூ.5.00 இலட்சம்)

தமிழ்நாடு மீன் வளத்துறையும், தமிழ்நாடு மீன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகமும் கோயம்பேடு கழிவுநீரகற்று நிலயத்தில் கழிவுநீர் மீன் வளர்ப்பிற்காக ரூ.5.00 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(XIV) பன்னாட்டு நிறுவனங்கள்: (ரூபாய்.8.65 இலட்சம்)

பல பன்னாட்டு நிறுவனங்கள் இப்பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு ஆராய்ச்சி திட்டத்திற்காக நிதியுதவி அளிக்கின்றன. மணிலாவில் உள்ள ஆசிய மீன் வளச் சங்கம் இறால் மீன்களில் நோய்களை உண்டாக்கும் விப்ரியோவைக் கண்டுபிடிப்பதற்காக 10,000 அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்கின்றது. உலக நல வாழ்வு நிறுவனம் உணவு மூலம் கொடுக்கக் கூடிய வெறிநோய் தடுப்புமருந்திற்காக தகுந்த நச்சுயிரியையும் உணவுப் பொருளையும் கண்டுபிடிப்பதற்காக 15,000 அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்கின்றது. வங்காள விரிகுடா திட்டத்தின் கீழ் உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் கட்டுமரங்களில் எடுத்துச் செல்லச் கூடிய தகுதியான பதப்படுத்தப்பட்ட பெட்டிகளைக் கண்டுபிடிப்பதற்காக ரூ.65,000 நிதியுதவி அளிக்கின்றது.

(XV) வெளிநாடுகள்: (ரூ.19.71 இலட்சம்)

அமெரிக்க அரசின் வேளாண்மைத் துறை கோழிகளில் "டப்ட்சின்" மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிப்பதற்கான ஆராய்ச்சித் திட்டத்திற்கு ரூ.19.71 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(XVI)அரசு சார்பற்ற நிறுவனங்கள்: (ரூ.2.82 இலட்சம்)

கிருஷ்ணமூர்த்தி பன்னாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிறுவனம் கால்நடைத் தீவனங்களில் மரங்களின் இலைகளை சேர்ப்பதற்கும் மற்றும் ஒரு முழு திட உணவை கண்டுபிடிப்பதற்கு ரூ.2.47 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது. ASSEFA - திட்ட பன்னாட்டு நிறுவனம், உத்திரமேரூர். கால்நடை பராமரிப்புத் திட்டங்களின் பயன்களைக் கண்டறிவதற்காக ரூ.35 ஆயிரம் அளிக்கின்றது.

(XVII) தனியார் நிறுவனங்கள்:

ஸ்பிக் நிறுவனம் தூத்துக்குடியில் அந்நிறுவனத்தின் தொழிற்சாலையிலிருந்து கடலில் விடப்படும் கழிவுக் பொருட்கள் மூலம் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதற்காக ரூ.0.91 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது. ஹெறக்ச்ட் நிறுவனம் தங்களுடைய பணகூர் எனப்படும் மருந்தின் மீது ஆய்விற்காக ரூ.15 ஆயிரம் நிதியுதவி அளிக்கின்றது. இந்தியன் வங்கி தாங்கள் தத்து எடுத்துள்ள கிராமங்களில் கால்நடைகள் இன அபிவிருத்திக்காக ரூ. 0.73 இலட்சம் நிதியுதவி அளிக்கின்றது.

(XVIII) பல்கலைக்கழக திட்டமிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள்:

மேற்கூறிய திட்டங்களைத் தவிர, 60க்கும் மேற்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களை கால்நடை மற்றும் மீன் புலத்தில் இப்பல்கலைக்கழகம் நடத்தி வருகின்றது. அவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

(I) சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

காளைகளில் ஆண்மைக் குறைவு, கதிரியக்க ஐசோடோப்புகள், எலெக்ட்ரான் நுண்ணோக்கி மூலம் ஆராய்ச்சி, ஆடு மற்றும் மாடுகளில் மரபியல் கூறு கருமாற்றம், மாடு மற்றும் எருமைகளின் செல்லில் மரபியல் கூறு பற்றிய ஆராய்ச்சி, சைனஸ், புற்றுநோய், மாடுகளில் தைலேரியா நோய், ஒட்டுண்ணி நோய்கள், ஜோன்ஸ் நோய், கோழிகளில் இரத்தக் கழிச்சல் நோய், செம்மறியாட்டு உயிர் அணுக்களை ஆய்வகத்தில் கருத்தரிக்க வைத்தல்,

மாடுகளில் அசையூண் வயிறு மருத்துவம், நஞ்சுக் காளான் நோய்கள் மற்றும் அவைகளை கண்டுபிடித்தல், பொருளாதாரத்தில் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, போன்றவையாகும். நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை மருந்தகம் ஒன்று இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(II) ஆராய்ச்சி நிலையங்கள்

இப்பல்கலைக் கழகத்தின் 5 ஆராய்ச்சி நிலையங்களில் பெரும்பான்மையான கால்நடை மற்றும் பறவையினங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கால்நடைத் தீவனங்களில் தரக்கட்டுப்பாடு, கால்நடைத் தீவனங்களில் செல்லுலோஸ், கால் நடைத் தீவன மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி பட்டிகளில் ஆடு வளர்ப்பு, தெள்ளிச்சேரி ஆடுகளில் ஆராய்ச்சி, கம்போரா நோய்க் கண்டுபிடிப்பு, லெப்டோஸ்பைரா தடுப்பூசி தயாரிப்பு மற்றும் தடுப்பூசியின் திறனைக் கண்டறிதல், ஆட்டு அம்மைநோய் நச்சு உயிரியை கண்டறிந்து தரப்படுத்துதல் மற்றும் மூன்று முக்கிய கோழிநோய்களை கண்டறிதல் ஆகும். ஒரு மையப் பல்கலைக் கழக ஆய்வகம் மாதவரத்தில் இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) விரிவாக்கம்

15 பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும், மூன்று உழவர் பயிற்சி நிலையங்களும், நான்கு மீன் வள மையங்களும் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டுவருகின்றன. இவை கால்நடை மற்றும் மீன் பண்ணையாளர்களுக்கு புதிய தொழில் நுட்பங்களை அளிக்கின்றன. இப்பல்கலைக்கழக மையங்களில் ஆய்வகங்கள் நோய்களைக் கண்டறிவதற்கும் தகுதியான தீவனங்களை கண்டறிவதற்கும் அமைக்கப்பட்டுள்ளன. வேலையில் உள்ளவர்களுக்கும், மற்றும் வேலையற்றவர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன

256.12 ஏக்கர் தனியார் மற்றும் பொது நிலங்களில் வேளாண்காடுகள் படுத்தப்பட்டன. 2,068 மனித நாட்கள் பயிற்சி விவசாயிகளுக்கும் 578 மனித நாட்கள் பயிற்சி அலுவலர்களுக்கும் அக்டோபர் 1993 வரை வேளாண்காடுகள் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டது.

தொலைக்காட்சிவானொலி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் புதிய தொழில் நுட்பங்கள் வெளியிடப்பட்டன. வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் பண்ணைப் பள்ளிகள் விவசாயிகளுக்காக நடத்தப்பட்டது.

கால்நடைக் கதிர் மற்றும் செய்தி மடல்கள் விவசாயிகளின் உபயோகத்திற்காக வெளியிடப்படுகின்றன. சேரான் எனப்படும் ஒரு ஆராய்ச்சி இதழும் வெளியிடப்படுகின்றது.

(ஈ) திட்டம் மற்றும் வளர்ச்சி

8வது ஐந்தாண்டு திட்டத்தில் (1992-97) இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ.2945 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் ரூ.1,663.14 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.984.41 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது இதைத் தவிர பகுதி இரண்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்காக ரூ.40.51 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட 15 புது ஆராய்ச்சி திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவையாவன, கால்நடைகளில் ஊன்ம ஆக்க சிதைவு, டி.என்.ஏ. பெருக்கம் மூலம் பார்வோ நச்சுயிரியை கண்டுபிடித்தல், எலேக்ட்ரான் மைக்ராஸ்கோப்பின் மூலம் கோழிநோய்களைக் கண்டறிதல், கோழிக் குஞ்சு இரத்தச் சோகை நோய் நச்சுக் கிருமி பற்றிய ஆராய்ச்சி, ஆடுகளுக்கான நீல நாக்கு நோய் தடுப்பூசி, வெளிப்புறமற்ற உறாம்ஸ்டர் முட்டையில் ஆராய்ச்சி, ஆய்வகத்தில் கருத்தரிப்பில் ஆராய்ச்சி, பாலில் பூச்சிக் கொல்லி மருந்துகள், கால்நடைகளில் மரபியல் ஆராய்ச்சி, வளர்ச்சி செல்களில் ஜீன் குறிப்பு பற்றி மாடுகளில் ஆராய்ச்சி, எர்லிசியா கேனிஸ் பரவும் முறைப் பற்றிய ஆராய்ச்சி, மற்றும் சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி மகளிர் விடுதியின் மேல் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பல்கலைக்கழக நிர்வாக அலுவலகக்கட்டிடங்களுக்கும், மையப் பல்கலைக் கழக ஆய்வகத்திற்கும் விவகாயிகள் தங்கும் விடுதிக்கும் மற்றும் பல கட்டிடங்களுக்கும் 30.6.93 அன்று அடிக்கல் நாட்டினார். இக்கட்டிடங்களின் மதிப்பு ரூ.3.17 கோடியாகும்.

(உ)சாதனைகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வு முடிவுகள்

கருமாற்ற தொழில் நுட்பவியல் மூலம் 7 உயர்ரககன்றுகள் 12 சினைப் பருவங்களில் பிறந்துள்ளன. 54 கருக்கள் உறைய வைக்கும் சாதனம் மூலம் உறைய வைக்கப்பட்டுள்ளன. கிராமப்புறத்தில் உள்ள காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சிப்பண்ணையில் இத் திட்டம் வெற்றிகரமாக நடை முறைபடுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் மூலம் வெள்ளாடுகளில் 4 குட்டிகள் பெறப்பட்டுள்ளன.

வெள்ளாட்டுக் கிடாவில் விந்துவை உறையவைத்து, வீரிய இன வெள்ளாடுகளை உருவாக்கும் ஆராய்ச்சி வெற்றியடைந்துள்ளது. இப்பொழுது வெள்ளாடுகளில் செயற்கை முறை கருவூட்டல் முறை நன்றாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோழிகளில் இரத்தச் சோகையையும், நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கக் கூடிய நச்சுக் கிருமிகளை இந்தியாவிலேயே முதன் முதலாக கண்டறியப்பட்டது.

நாமக்கல்லிலுள்ள கோழிப்பண்ணையாளர்களுக்கு தகுதியான சமயத்தில் நோய்காண் ஆய்வகம் நாமக்கல்லிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகத்தின் சேவைகளை மத்திய அரசு மிகவும் பாராட்டி நோய் ஆய்வு கையேடு ஒன்றை வெளியிடும் நல்ல வாய்ப்பை இப்பல்கலைக்கழகத்துக்கு அளித்துள்ளது.

கோழிகளில் இராணிக்கெட் நோய் நச்சுக் கிருமியின் வீரியத்தை செல்தொடரில் வளரசெய்வதன் மூலம் செயல் இழக்கச் செய்து ஒரு தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. 6000 டோஸ்கள் நாமக்கல் பகுதியில் ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளன. உயிருள்ள மற்றும் உயிரற்ற நச்சுயிர் மூலம் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டு அதில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

கால்நடைகளில் வெக்கை நோயை எளிதாகவும், விரைவாகவும் கண்டறிய எலிசா, எச்.ஏ. மற்றும் எச்.ஐ. என்ற இருவகை நோய் ஆய்வு பெட்டகம் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளை கால்நடை மருந்தகங்களிலேயே பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நன்னீர் இறால்கள் வெற்றிகரமாக வளர்க்கப்பட்டு மீன் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. முதல் நன்னீர் இறால் குஞ்சுகள் மாண்புமிகு முதலமைச்சரால் 30.6.93 அன்று மீனவ மகளிர்க்கு வழங்கப்பட்டது.

நந்தனம் இறைச்சிக் கோழிவகை.2. என்ற புதிய ரக இறைச்சிக் கோழி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை தொழில் நுட்ப பரிமாற்ற திட்டத்தின் கீழ் உள்ள மகளிர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இவை 1.5 கிலோ கிராம். எடையை 8 வாரத்தில் அடைவதுடன் வாழும் திறன் இவைகளுக்கு 97 சதவீதம் உயர்த்தப்படும்.

நவீன மருத்துவ வசதி கொண்ட நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று கால்நடை மற்றும் செல்லப் பிராணி வளர்ப்போரின் வசதிக்காக சென்னையில் இயங்கிவருகிறது.

ஜப்பான் காடை முட்டை ஊறுகாய், மீன் நூடுல்ஸ், மீன் பிஸ்கட், இறைச்சி பிஸ்கட் ஆகிய நான்கு உணவு வகை உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

கீழே குறிப்பிட்டுள்ள மூன்று கையேடு புத்தகங்கள், மீன் மற்றும் கோழி வளர்ப்போரின் நன்மைக்காக வெளியிடப்பட்டன.

நன்னீர் மீன் வளர்ப்பு தொழில்நுட்பம்

கால்நடை நோய் ஆய்வுக்கூட கையேடு

கோழி நோய்கள் - 1993 ஓர் கண்ணோட்டம்

கால்நடை வளர்ப்பு முறைகளைக் கொண்ட படக்காட்சி ஒன்று தயார் செய்து விவசாயிகளின் நன்மைக்காக வெளியிடப்பட்டுள்ளது.

குளிர் பிரதேசங்களுக்கு உகந்த பனியைத் தாங்கி வளரக் கூடிய டுபேர் என்ற புல்ரகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த புல் ஆண்டு முழுவதும் வளரச்கூடியதும் மற்றும் அதிக மகசூல் தரக்கூடியதும் ஆகும். இதில் 83 சதவீதம் ஈரப்பதம், 9 சதவீதம் புரதம், 21.5 சதவீதம் நார் சத்து, 1.8 சதவீதம் கொழுப்பு, 18 சதவீதம் சாம்பல் சத்து மற்றும் 49 சதவீதம் புரதமற்ற நைட்ரஜன் சத்தும் உள்ளது.

சிறப்பு மருத்துவப்பிரிவில் உள்நோக்குக்கருவி இரத்தம் சுத்திகரிப்பு கருவி, இதயத்துடிப்பை கணக்கிடும் இ.சி.ஜி மூளை இயக்கத்தை கண்டறிய இ.இ.ஜி போன்ற நவின கருவிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கால்நடை மருந்து பதிவேடுகளை சேகரித்து வைக்க கணி பொறி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுநோய்க்கென்று தனியாக ஒரு மருத்துவப்பிரிவு சிறிய பிராணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மத்திய ஆய்வுக்கூடத்தை தேசிய ஆய்வுக்கூடமாக மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ஊ) எதிர்காலத் திட்டங்கள்

அ.கல்வி

கால்நடை வணிகம் மற்றும் மேலாண்மையியலில் டிப்ளாமா படிப்பு தொடங்க உள்ளது.

கால்நடை வணிகம் மற்றும் மேலாண்மையியலில் பட்ட மேற்படிப்பு தொடங்கப்படஉள்ளது.

பால் உணவு பொருள்கள் உற்பத்தி தொழில் நுட்பத்தில் டிப்ளாமா படிப்பு தொடங்கப்பட உள்ளது.

கால்நடை மருந்தியலில் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட உள்ளது. இது கால்நடை மருத்துவ பட்டதாரிகளுக்கும், கால்நடை மருந்து தயாரிக்கும் தொழில் முனைவோருக்கு உதவும்வகையில் எதிர்காலத்திட்டங்களாக தீட்டப்பட்டுள்ளது.

ஆ.ஆராய்ச்சி

கீழ்கண்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

முக்கிய கால்நடை மற்றும் கோழி நோய்களுக்கு மோனேகுளோனல் நோய் எதிர்ப்பு பொருளை உருவாக்குதல்.

நாய்களில் நச்சுக் கிருமிகளின் நோய்களை கண்டறிய ஒரு பெட்டகம் உருவாக்குதல்.

பூஞ்சங்காளான் மூலமாக வரும் எம்-1 நஞ்சை கண்டறிதல்.

டப்டிசின் மூலமாக இறைச்சிக் கோழிகளில் நோய் எதிர்ப்பு சக்தியை அளவிடுதல்.

கன்றுகளுக்கு காச நோய் தடுப்பு ஊசி முறை.

லாப்ஸ்டர் மீன் வளர்ப்பு தொழில் நுட்பம். மற்றும்

விதை மீன் உற்பத்தி

இ.விரிவாக்கம்.

கீழ்கண்ட விரிவாக்கப்பணிகள் முனைப்பாக மேற்கொள்ளப்படும்

படக்காட்சி, ஆய்வுக்கூடம் நிறுவுதல்.

தனி பதிப்பக பிரிவு ஒன்றை உருவாக்குதல்.

தென் ஆற்காடு வள்ளலார், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் உழவர் பயிற்சி மையங்களை நிறுவுதல் மற்றும் வேலூர், தூத்துக்குடி, குன்றக்குடி, நாமக்கல் மற்றும் உளுந்தூர்பேட்டையில் கால்நடை அறிவியல் பயிற்சி நிலையங்களை நிறுவுதல்.

(எ) உலக வங்கி உதவி

உலக வங்கியின் நிதி உதவியுடன் மனித வள மேம்பாட்டிற்கான ஒரு [redacted]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS